ஸ்ரீ:



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

ஆழ்வார்கள் அருளிச்செய்த

திவ்ய ப்ரபந்தங்களிலிருந்து முன்னோர்கள் தொகுத்த

நித்யானுஸந்தானம்






ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
இயற்றிய திவ்யார்த்த தீபிகையுரையின்
ஸாரமான வியாக்கியானம் கொண்டது.



Released by Maran's Dog Toronto , Canada

ஸ்ரீ:



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் அருளிச்செய்த
திவ்ய ப்ரபந்தங்களிலிருந்து முன்னோர்கள் தொகுத்த

நித்யாநுஸந்தானம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
இயற்றிய திவ்யார்த்த தீபிகையுரையின்
ஸாரமான வியாக்கியானம் கொண்டது.

வெளியீடு :
Vedics Foundation
http:// www.vedics.net
in association with
Grantha Mala Office
40/29, South Mada Street,
Little Kanchipuram - 631501.




ஸ்ரீ ரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீ அழகிய மணவாளன் - ஸ்ரீரங்கம்




பெரியாழ்வார்

மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள்*
தங்களார்வத்தளவு தானன்றி -* பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்*
பெரியாழ்வாரென்னும்பெயர்.




திருமழிசையாழ்வார்

தையில்மகமின்று தாரணியீர்ஏற்றம்*இந்தத்
தையில்மகத்துக்குச் சாற்றுகின்றேன்*துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான் பிறந்த நாளென்று*
நற்றவர்கள்கொண்டாடும் நாள்.



பேயாழ்வார்

மன்னியபேரிருள் மாண்டபின்*கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும்* தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்று மிராமாநுசற்கன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடும்*திருவுடையாரென்னும் சீரியரே.



பூதத்தாழ்வார்

இறைவனைக்காணு மிதயத்திருள் கெட*ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள்*நெஞ்சத்
துறையவைத்தாளுமிராமாநுசன் புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து*இந்த மண்ணகத்தேமன்னவைப்பவரே



பொய்கையாழ்வார்

வருத்தும் புறவிருள் மாற்ற*எம் பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி*ஒன்றத்
திரித்தன்றெரித்த திருவிளக்கைத்தன்திருவுள்ளத்தே
யிருத்தும் பரமன்*இராமாநுசனெம்மிறையவனே.



ஸ்ரீ பெருந்தேவித் தாயார் ஸமேத பேருளாளன் - காஞ்சிபுரம்



ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் - திருவேங்கடம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே பாலதன்வி மஹாகுரவே நம:

ஸ்ரீமத் வரவரமுனயே நம:

''எமக்காக வன்றோ அண்ணா அவதரித்தார்''

ஸ்ரீ உ.வே. வித்வான் இளையவல்லி ஸ்ரீநிவாச பூவராஹசார்யர் ஸ்வாமி
M.A. (Retd. Prof. of Sanskrit, Alwar Thirunagari)

ஸ்ரீ உ.வே. காஞ்சி மஹாவித்வான், பத்ம விபூஷண, மஹாமஹிமோபாத்யாய, ஜகதாசார்ய சிம்மாசனாதிபதி தொடக்கமான பல விருதுகளுக்கு புகர் ஊட்டின புனிதன், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி என்பதை அறியும் உலகெல்லாம், இம்மஹான் இந்நிலவுலகில் 93 ஸம்வத்ஸரங்களுக்கு மேல் எழுந்தருளியிருந்து செய்தருளிய அதிமானுஷ செயல்களை சொலப்புகில் வாயமுதம் பரக்கும், இருவினை பத்தற ஓடும், அறம் சீறும் கலியை துறக்கும் பெருமை இதற்கு உண்டு என்று கூறினால் அது அத்யுக்தியல்ல, அதிவாதமல்ல, அர்த்தவாதமல்ல, மெய்மையே ஆகும்.

ஸ்வாமி அவதரித்த திருவம்சம் பிள்ளை லோகாசார்யருடைய தனிச்சிறப்புப் பெற்ற முடும்பை திருவம்சம் ஆகும். ஸ்வாமி ''தானே எழுதிய தன் சரிதையில்'' இவ்வம்சாவளியை அழகுற நயம்பட நவின்றிருப்பதை நாட்டில் உள்ளார் அனைவரும் நன்கு அறிவர்.

நம்பிள்ளையின் மிகச் சிறந்த சீடர் வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆவர். அவருடைய திருத்தம்பியாரின் திருப்பேரனார் ஸ்ரீ முடும்பை நம்பி, என்னும் திருநாமத்துடன் திகழ்ந்தவர் ஆவர். அந்த வம்சத்தில் ஞானம் அனுட்டானம் இவை நன்றாக உடைய பல ஆசார்ய ரத்னங்கள் அவதரித்தனர். அதில் ஒருவர்தாம் ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் அண்ணா ரங்கசார்யர் ஸ்வாமி ஆவர். அந்த ஸ்வாமிக்கும் இவருடைய தேவியாரான அலர்மேல் மங்கை அம்மாவுக்கும் திருக்குமாரராய் அவதரித்தவரே நம் ஸ்வாமி. பிரதிவாதி பயங்கரர்'' என்று தம்மைத் தாமே கூறிக்கொண்ட மாமுனிகளின் அஷ்டதிக் கஜ ஆசார்யர்களின் ஸ்ரீபாஷ்ய பீடத்தை அலங்கரித்தவரான பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமியினுடைய திருநாமமே இவர்க்கும் திருநாமமாக இடப்பெற்றது. அத்திருநாமத்திற்கு சிறிதும் வாட்டம் வராமல் இவர் தம் வாழ்நாள் முழுவதும் பிரதிவாதிகளுக்கு பயங்கரராகவும், ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிக்கு தாசராகவம் விளங்கி தம் குலப்பெருமையை உலகெங்கும் நாட்டினார்.

சக்கரவர்த்தி திருமகனைப் பற்றி கொண்டும் ஸ்ரீவால்மீகி பகவான் ''பஹுச்ருதாநாம் வ்ருத்தாநாம் ப்ராஹ்மணாநாம் உபாஸதா'' என்று கூறுகிறார்.

ஸ்ரீராமன் கல்வி கேள்விகளால் நிறைவாளர்களாக விளங்கிய அனேகம் அந்தணர்களை அணுகி அவர்கள் அடிபணிந்து எல்லா சாத்திரங்களையும் கற்றறிந்தான் என்று கூறுகிறார். அதே போன்று நம் ஸ்வாமியும் பலபல விசேஷஜ்ஞர்கள் பக்கலில் துவண்டு தம் இளமைப் பருவம் முழுவதும் கல்வியை வரியடைவே கற்றும் உணர்ந்த பெரியோராய் திகழ்ந்தார். ஒரு நொடிப் பொழுதும் வீணாக்காமல் சகல ஸம்பிரதாய ஸாரார்த்தங்களையும் ஐயும் திரிபு அறக்கற்று இளமைப் பருவத்தில் இருந்தே தாம் பரமபதிப்பதற்கு முதல் நாள் வரை அவ்வர்த்தங்களை எல்லாம் வைணவ உலகிற்கு வாரி வழங்கிய வள்ளல். பலபல காலக்ஷேபங்கள், உபன்யாசங்கள் முதலியவைகளில் தாம் கடல் மடை திறந்தார்ப்போல அருளிச்செய்த வேத வேதாந்தார்த்தங்களும், அருளிச் செயல், ரஹஸ்யார்த்தங்களும் சுவரிப் போகாமல் பார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், இவ்வையத்தில் வாழ்ந்திருக்கும்படி ஏற்படுத்திவந்த உபகாரம் ஆயிரம் நாவு படைத்த ஆதி சேஷனாலும் அவன் தனக்குத் தலைவனான ஆயிரம் வதனங்கள் உடைய ஆதி புருஷனாலும் சொல்லித் தலைகாட்ட முடியாது என்று குடப்பாம்பில் கையிட்டு உரைப்பேன். வடமொழியிலும், தென்மொழியிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் தெலுங்கில் மாதம் தோறும் 4 பத்திரிக்கைகளை தாம் ஒருவரே அசகாய சூரராய் இருந்து நடத்திய விந்தை நெஞ்சால் நினைப்பரிது. இதனிடையே பலபல திவ்யதேச யாத்ரைகள், பலபல ஸ்ரீவைஷ்ணவர்களுடன் செய்து, ஆங்காங்கு அத்திவ்யதேச வைபவத்தையும், எம்பெருமானின் கல்யா குண அம்ருத அனுபவத்தையும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அனுபவித்த வழியில் எல்லோரையும் அனுபவிக்கச் செய்து, கோஷ்டியாரை குமிழ் நீர் உண்ணச் செய்த வைபவம் நெஞ்சில் எப்பொழுதும் ஊற்று மாறாது இருக்கிறது அடியேனுக்கு.

இவ்வளவு காரியங்களுக்கு இடையில் காஞ்சி ஸ்ரீ தேவப் பெருமாள் அருளிச் செயல் கோஷ்டியை நிர்வகித்து வந்ததோடு அல்லாமல், ஒரு நாளும் அந்த கோஷ்டியை தவற விட்டவர் அல்லர் நம் ஸ்வாமி. ஒரு தடவை சிற்றறிவினனான அடியேன் ஸ்வாமியைப் பற்றி உண்மை உரைகள் பலவற்றை எழுதி வரும்போது "நம் ஸ்வாமி காஞ்சி தேவப்பெருமாள் அருளிச் செய்ய கோஷ்டியை கீழே விழுந்து தண்டன் இட்டு அறியாதவர்" என்று எழுதி இருந்தேன். அது அனேகருக்கு புரியாமல் குழப்பத்தை உண்டாக்கியது. ஆனால் கூர்மதியாளரான ஸ்வாமி இதன் உட்கருத்தை உணர்ந்து அடியேனை கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க அன்புடன் தழுவிக் கொண்ட அந்நாளின் நினைவு என்றும் என் மனத்தை விட்டு நீங்காது. (இதன் கருத்தாவது அருளிச் செயல் கோஷ்டிக்கு தாமதமாக வந்தால் அல்லவா கோஷ்டியை சேவிக்க வேண்டும். தேவப் பெருமாள் புறப்பாட்டை எதிர்நோக்கி இருந்து கோஷ்டியை அதிகம்பீரமான, பிரதிவாத பயங்கர சிம்ம நாதத்துடன், "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்.." என்று தொடங்கும் அவரே நம் ஸ்வாமிதானே)

1) 1000க்கு மேலாக பலபல புத்தகங்களை எழுதியவர்.

2) ஸம்ஸக்ருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களை இன்புறும் வண்ணம் எழுதியவர்.

3) வாதகிரந்தங்கள் பலவும் எழுதி சுடங்கர்வாய் அடங்கும்படி வெற்றிக்கொடி நாட்டியவர்.

4) பலபல வினோத பக்தி கதைகளையும், ஹாஸ்ய கதைகளையும் பண்டித, பாமர விபாகமற வியந்து உகக்கும் வண்ணம் வரைந்தவர்.

5) பூர்வாசார்ய கிரந்தங்கள் பலவற்றையும் பிழையற பதிப்பித்தவர்.

6) 4000 திவ்யபிரபந்தத்தை நல்ல முறையில் பிழையற பதிப்பித்தவர்.

7) ஸ்ரீபாஷ்யம், ஈடு முதலிய பல காலக்ஷேபங்களை தம் சீடர்களுக்கு மறக்க ஒண்ணாதபடி மனத்தில் பதிப்பித்தவர்.

8) ஸ்ரீ காஞ்சிபுரத்தில் தேவப்பெருமாள் சன்னதிக்கு அருகில் நம்பிள்ளைக்கும், அவருடைய அந்தரங்க, அபிமான சீடர்களான இரு கண்ணர்களுக்கும் (வடக்குத் திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவருக்குமே கண்ணன் என்றே திருநாமம் ஆகும்) திவ்யமங்கள விக்கிரகங்கள் எழுந்தருளப் பண்ணி, கோயில் கட்டி திருபிரதிஷ்டை பண்ணி நம்பிள்ளை சன்னதி என்று இன்றைக்கும் வழங்கும்படியாகவும், விளங்கும்படியாகவும் செய்த செயற்கரிய செயல் விண்ணாடும், மண்ணாடும் மகிழ்ந்து போற்றும் செயல் ஆகும்.

9) சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தினம் காலை 4 மணியளவில் தொடங்கி 6 மணி பரியந்தமாக வேத பாராயண வீதி ப்ரதக்ஷிணம் 50 மேலான ஸ்வாமிகளுடன் நடத்திய பெருமை.

10) வேத வேதாந்த அருளிச்செயல் ரஹஸ்யாதிகளுக்கு விரோதமான அர்த்தங் களைக் கூறும் மற்ற சமயத்தினரும் வாயடங்கி கொண்டாடும்படி எழுதி அருளிய பலபல வாத கிரந்தங்கள் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

தற்சமயம் நம் ஸ்வாமியின் நித்யானுசந்தான புத்தகம் பதிப்பிக்கப்படுகிறது. இதுதான் பிழையற்ற பூர்வாசார்ய வியாக்யானங்களுக்கு பொருத்தமான அருளிச் செயல் ஸந்தையாகும். ஸ்வாமியின் பெருமையை அவர் எழுதி அருளிய ''தானே எழுதிய தன் சரிதையில்'' காண்க. அந்த புத்தகமும், இந்த நித்யானுசந்தான ஸ்ரீகோசமும், ஒவ்வொரு ஸ்ரீவைஷ்வனுடைய அனுபவத்துக்கு இலக்கானால் ஒழிய, ஸ்ரீவைஷ்ணவனாகி இருக்கும் இருப்பு ஒருக்காலும் தேறாது என்பது அடியேனுடைய தாழ்ந்த விண்ணப்பம்.

இத்தகைய பெருமைகளையுடைய ஸ்ரீ உ.வே. அண்ணா ஸ்வாமி நம் போன்ற மானிடர்கள் உஜ்ஜீவனம் அடைவதற்காகவே இந்நிலவுலகில் வந்தவதரித்தார். ஆகையால் ''எமக்காகவன்றோ இங்கு அவதரித்தார்'' என்று ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் அனுஸந்திக்கப் ப்ராப்தம்

ஸ்ரீவத்ஸ வம்ஸாம்புதி பூர்ண சந்த்ரம்
ஸ்ரீரங்க நாதார்ய தநூஜ ரத்னம்
தத்பாத யுக்மாம்புஜ ப்ருங்க ராஜம்
அண்ணங்கராசார்யம் அஹம் பிரபத்யே



ஸ்ரீ பெருந்தேவித் தாயார் ஸமேத பேரருளாளன் - காஞ்சிபுரம்

ஸ்ரீ:

ஸ்ரீ ஹஸ்திஸைல ஸிகரோஜ்வல பாரிஜாதாய நம: ஸ்ரீமேத ராமானுஜய நம : ஸ்ரீமத் வரவரமுநயே நம :

ஸ்ரீ வாதி பீகர மஹா குரவே நம :

(ஸ்ரீ உவே. ப்ர.ப ராஜஹம்ஸம் ஸ்வாமி)

வேத வேதாந்தங்களின் ஸாரமாக ஆழ்வார்கள் அருளிய திவ்ய ப்ரபந்தங்களும், அதனால் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற 108 திவ்ய தேசங்களும், அவைகளுக்கு உரை நல்கிய பூர்வாசார்யர்களும் என்றென்னும் வாழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதே பெரியோர்களின் ஆவா. இதையே ''ப்ரமாணஞ்ச ப்ரமேயஞ்ச ப்ரமாதாஸ்ச்ச ஸாத்விக: ஜயந்து ஷபிதாரிஷ்டம் ஸ: ஸர்வாத்ர ஸர்வதா'' என்கிற ஸ்லோகம் நினைவுறுத்துகிறது. இக்ரமத்தில் மாமுனிகளும் உபதேசரத்தினமாலையில்'' ஆழ்வார்கள் வாழி. அருளிச்செயல்வாழி, தாழ்வாதுமில்குரவர் தாம் வாழி ஏழ்பாரும் உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி செய்ய மறை தன்னுடனே சேர்ந்து'' என்று போற்றுகின்றார். இம்முறையில் ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும் அதற்கு உரை தந்த ஆசார்யர்களையும் நாம் என்றும் போற்றுவது தலையாய கடமை. அவ்வழியிலே ''ஸகல பூர்வாசார்ய அவதார ஸமுதாய ஸோபையோடு கூடியவர் என்று போற்றப் பெறும் ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியை தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. 1927 ஆம் ஆண்டு முதற்கொண்டு நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுக்கு ''திவ்யார்த்த தீபிகை'' என்கிற பெயரோடு ஆழ்வார்களின் ஏற்றத்தையும் அருளிச் செயலின் ஏற்றத்தையும் உரையருளிய ஆசார்யர்களின் ஏற்றத்தையும் பெண்ணுக்கும் பேதைக்கும் அறியலாம்படி எல்லோரும் திவ்யப்ரபந்தத்தின் உரைகளை அறிய ஆரம்பிக்கப் பெற்றது.

''திவ்யார்த்த தீபிகை'' என்பதற்கு இருளிலுள்ள பொருளை காண்பதற்கு விளக்கு தேவைப்படுவதுபோலே அறிவின்மையாகிய இருளைப் போக்கி ஞானமாகிய ஒளியைக் கண்டு களிப்பதற்கு தீபிகை என்னும் விளக்கு தேவைப்படுகிறது. அவ்விளக்கைக் கொண்டு ஆழ்வார்களின் சொற்களையும் அதற்கு ஆசார்யர்கள் வழங்கும் பொருள்களின் தொடர்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளதே ''அர்த்த தீபிகை'' எனப்படுகிறது. இவைகளெல்லாம் இறைவனது பெருமையை பேசும் நூலாக உள்ள காரணத்தினால் ''திவ்யார்த்த தீபிகை'' எனப்பெயர் சூட்டிப் பெற்றது ஸ்வாமியினால்.

உண்மையான அறிவை அளிக்கும் ப்ரமாணங்களில் தலைசிறந்துது அருளிச் செயலாகையாகலே அவை திவ்யப்ரபந்தங்கள் என வழங்கப்பெற்றது. அவைகளினால் இறைவனது இயல்பு, வடிவு, குணம், செல்வங்கள், திருவிளையாடல்கள், திவ்யதேசங்களின் இயற்கை அமைப்பு ஆகிய பெருமைகள் பேசப்பெறுவது பற்றியே திவ்யார்த்த தீபிகை என பெயர் சூட்டினது மிகப்

பொருத்தமாக தெரிகின்றது. இவைகளுள் எல்லாக் காலத்திலேயும் நாலாயிரம் பாசுரங்களையும் அனுபவிப்பது என்பது இயலாத காரியமாகையினால் அவைகளில் முக்கியமான பகுதிகளை சேர்த்து நித்யானுஸந்தானம் என்கிற பெயரில் நம் பூர்வர்கள் தொகுத்த விதத்திலே ஸ்ரீ ஸ்வாமிகளும் அவைகளுக்கு உரை எழுதி பன்னெடுங்காலத்திற்கு முன்பே வெளியிட்டு அருளினார் அப்பதிப்பு மூன்ற, நான்கு தடவை மறுபதிப்பு செய்யப் பெற்றும் இப்பொழுது கிடைப்பதற்கு அரிதாக உள்ள காரணத்தினால் வேதிக்ஸ் நிறுவனத்தின் மூலமாக மறுபதிப்பு செய்யப் பெறுகின்றது. இதைத்தொடர்ந்து மற்ற தீபிகை உரைகளும் ஸ்தோத்ர பாட வ்யாக்யானங்களும் இதேபோல் வெளிவரவேண்டும் என அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதனான பெருந்தேவி பேரருளாளன் துயரறு சுடரடியில் ப்ரார்த்தித்து நிற்கிறேன்.

ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஒரு விண்ணப்பம்

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்ட நிவாஸியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினால் இம்மண்ணுலகோர் உய்ய, வேதங்களையும், ஸாஸ்த்ரங்களையும், இதிஹாஸங்களையும், புராணங்களையும், மற்றும் திவ்ய ஸூரிகளான மயர்வற மதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் மூலமாக நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களையும் அருளி உள்ளான். இந்த இருள் தருமா ஞாலத்தின் பயனாக, எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்களாக நிற்கின்றோம். அபார கருணாம்புதே என்னும்படியே நமக்கு மேலும் கருணை மழையாக மேலே கூறியவற்றுக்கு உரை எழுத ஆசாரிய ஸார்வபௌமர்களை தந்தான். அவனுடைய நிர்ஹேதுக க்ருபையினால் வேதிக்ஸ் (VEDICS) என்கிற இயக்கம் நம்முடைய இந்த ஸநாதன ஸம்பிரதாயத்திற்கு சலமிலா அணிலும் போல் புதிய ஊக்கத்தைத் தரவும், மற்றும் ஆசையுடையோர்கள் உத்ஸாகங்கள் அனைத்தையும் நம்முடைய ஸம்பிரதாயத்தின் முக்கிய தூண்களின் பக்கல் ஒன்று திரட்டவும் துவங்கப்பட்டுள்ளது. தூண்கள் யாவென்னில் ஞானம், ஞானத்தை பரப்பும் இடம், ஞானத்தை உபதேசிக்கும் ஆசாரியர்கள், மற்றும் அனுஷ்டிப்பு.

1.1 ஞானம்: மேற்கூறிய வேதங்கள் முதலிய அனைத்தின் கூட்டே ஞானம். நம்முடைய நற்றவங்களின் பயனாக ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் தோன்றப் பெற்ற நம்முடைய முக்கிய கடமை யாதென்னில், இந்த ஞானத்தைக் கற்க வேண்டும், இதைப் பாதுகாக்க வேண்டும், இதை ஆசையுடையோர்க்கெல்லாம் பரப்ப வேண்டும். இதில் தலையாய வேலையகிறது நம்முடைய எதிர்காலத்தவர்கள் யாவருக்கும் இந்த ஞானமானது கிடைக்கப் பண்ணுகை. பூருவர்கள் அருளிய பல நூல்கள் இன்று நமக்கு கிடைக்கப் பெறாமை ஒரு எடுத்துக்காட்டு. இன்று எது இருக்கின்றதோ அதை காக்காமல் இருந்தோமாயின் அது எதிர்காலத்தவர்க்கு விளைவிக்கக் கூடாததை விளைவிக்கும் என்பது தெளிவு. வேற்று மொழி ஸ்ரீவைஷ்ணவர்கள் அறிந்து கொள்ள இந்த நூல்களை மொழி பெயர்ப்பு செய்தல், இன்னொரு முக்கிய கைங்கர்யமாகிறது. உபந்யாசங்கள், நூலாலயங்கள், world wide web, மற்றும் இந்நாள் தொழில்நுட்பங்கள் மூலம் காப்பது, மற்றும் பரப்புவது இன்னொரு கைங்கர்யமாகிறது. சிறார்களுக்கு மிகவும் இலகுவாக, கதைகள், படங்கள் மூலம் சொல்வது இன்னொரு முறையாகிறது.

1.2 ஞானத்தை பரப்பும் இடம்: இதில் திவ்யதேசங்கள், அங்கே உள்ள ஜீயர் மடங்கள், ஆசாரிய திருமாளிகைகள் அடங்கும். திவ்யதேசங்களில் உள்ள கோவில்கள் சீர் பெற்று, நல்ல நிலையில் இருக்க வேண்டும். அங்கே நித்யோத்ஸவ, மாசோத்ஸவ, [illegible]மோத்ஸவாதிகள், குறைவர நடக்க வேண்டும். இக்காலத்தில் பல கோவில்களில்,

ஸம்ப்ரோக்ஷணமானது ப்ரசித்தியாக நடைபெருவதை காண்கின்றோம். அதன் பின்னர் கோவிலையும், அதில் சாந்நித்யம் கொண்டுள்ள எம்பெருமானையும், சேவிக்கவும் வழிபடவும் வசதிகள் செய்வது, ஒரு மலரோடு கூடிய முள்ளாகவே உள்ளது. திவ்யதேசங்களின் எம்பெருமானின் சரணாரவிந்தங்களில் தங்கியுள்ளவர்களின் ஆதரவோடு இதை செய்வது முற்றிலும் கூடிய காரியமே. அங்கே எம்பெருமானின் தொண்டுக்கே கோலம் பூண்டுள்ள அர்ச்சகர்களுக்கும், பரிசாரகர்களுக்கும், வேத-அத்யாபக ஸ்வாமிகளுக்கும், ஜீவிதத்திற்க்கு நம்மாலான கைங்கர்யங்களை செய்ய வேண்டும்.

1.3 ஞானச் சுடர் விளக்கேற்றும் ஆசாரியர்கள்: இதுவே மற்ற தூண்களில் முக்கியமான தூணாகும். ஒரு சிறந்த ஆசாரியரே மற்ற தூண்களைச் சிறப்பாகக் கொணர முடியும். கலியின் பிடியினால் இந்த தூணிற்கு இன்று நாம் உரம் போடவேண்டியது கட்டாயமாகின்றது. இன்று நாம் நம்மை "ஆசையுடையோர்க்கு ராமாநுச ஸம்பிரதாயம் கற்றுக் கொடுக்க இடங்கள் உள்ளனவா? வேத-இதிஹாச-வேதாந்த-திவ்ய ப்ரபந்த பாடசாலைகள் உள்ளனவா? எதிர்காலத்திற்கு ஆசாரியர்கள் உருவாக சரியான நிலை உள்ளனவா?" என்ற கேள்விகள் கேட்போமாயின், அதற்கு "உள்ளன, ஆனால் போதவில்லை" என்ற பதில் வருவது சோகமான உண்மை. நம்முடைய உத்ஸாகங்கள் அனைத்தயும் திரட்டி இப்போதுள்ள ஆசாரியர்கள், ராமாநுச ஸம்பிரதாயத்தை ரதத்தின் ஸாரதியாக வழிநடத்தி செல்ல ஹேதுவான கைங்கர்யங்கள் செய்ய வேண்டும்.

1.4 அனுஷ்டிக்கும் பாகவதர்கள்: இது சிஷ்யர்களாகிற நம்முடைய தூண். ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் தோன்றப் பெற்ற நாம், நம்முடைய இந்த மஹோந்நதமான சச்சம்பிரதாயத்தைக் கற்க வேண்டும். நித்தமும் என்ன கற்கப்போகிறோம், கற்றதை எப்படி அனுசந்திக்க போகிறோம் முதலிய கேள்விகளை நாமே நமக்கு கேட்க வேண்டும். உளியைக் கொண்டு சிற்பம் செதுக்குமாப் போலே, மண்வெட்டியை கொண்டு நீர்க்கு பாத்தி செய்யுமாப் போலே, நாம் நம்முடைய உத்ஸாகத்தை நெறிப்படுத்தி நம்முடைய சம்பிரதாயத்திற்கு எவ்வகையில் தொண்டு செய்யப் போகிறோம் என்பது தான் முக்கிய கேள்வியாய் அமைகிறது. ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுடைய நிர்ஹேதுக க்ருபையாலே வேதிக்ஸ் (VEDICS) இதற்காகப் பல சேவைகளைத் துவக்கியுள்ளது.

அ. ஆசையுடையோர்க்கெலாம் ஆரியர்காள் கூறும்: பாரதத்திற்குப் பல பல கல் தொலைவில் உள்ள அமேரிக்கக் கண்டத்தில் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இந்த இயக்கம் உபந்யாஸங்கள், கற்கும் கூடங்கள், பாரதத்தில் உள்ள பலப் பல ஸதாசாரியர்களை கொண்டு நடத்தி வருகின்றது. முக்கியமாக **ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி வானமாமலை கலியன் ராமாநுஜ ஜீயர்** ஸ்வாமிகள், **ஸ்ரீ** உ.வே. **இளையவல்லி பூவராஹாச்சாரியர்** ஸ்வாமி, **ஸ்ரீ வேள்விக்குடி (வேளுக்குடி) க்ருஷ்ணன்** ஸ்வாமி முதலியோர்களின் சொற்பொழிவுகள் இண்டு இடுக்குகளுக்கும் நுழைந்து ஸ்ரீவைஷ்ணவ நெறிகளைப் பரப்புவது முக்கிய சேவையாகும்.

ஆ. திவ்யதேச கைங்கர்யங்கள்: ஆஸ்திகர்களின் உபயங்களைக் கொண்டு பாரதத்தில் பல கோவில்களில் நித்யோத்சவங்கள், **மாஸோத்சவங்கள்,** ஆழ்வார்-ஆசாரியர் திருநக்ஷத்ரங்கள், முதலியன நடத்தி **வருகின்றோம். மேலும் திவ்யதேச** மற்றும் அபிமான

ஸ்தல கோவில்களில் புனர் நிர்மாண கைங்கர்யங்கள் பல நடத்தி வருகின்றோம். திவ்யதேசங்களின் எம்பெருமானின் சரணாரவிந்தங்களில் தங்கியுள்ளவர்களின் ஈடுபாட்டைக் கூட்டும் வகையில் பல ஆசாரிய திருநக்ஷத்திரங்கள் நடத்தியது பெருத்த வரவேற்ப்பைப் பெற்றிருக்கின்றது.

இ. கூடியிருந்து கற்று, தெளிந்து, குளிர்ந்து: எம்பெருமானாரின் கொள்கைகளைக் கற்று, தெளிந்து கொள்கைக்காக ஒரு மின்வலைக் கூடம் (Yahoo Group, ramanuja@yahoogroups.com) அமைத்துள்ளோம். இதிலே கேள்வி-பதில், கருத்தரங்கு முதலியன பல ஆசாரிய ஸார்வபௌமர்களின் தலைமையில் நடைபெருதலால், சம்பிரதாய ஞானமானது அனைவரையும் சென்றடைய ஹேதுவாக உள்ளது. பல நாடுகளிலிருந்து 1300க்கும் மேற்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த கூடத்தில் உறுப்பினராக உள்ளது இந்த கைங்கர்யத்திற்க்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக கருதுகின்றோம்.

ஈ. கால் வருட இதழ்: நம்முடைய இராமநுச தரிசனத்தைப் பரப்பும் பொருட்டு "Ramanuja Darsanam" என்கிற ஆங்கில இதழை நான்கு மாதத்திற்கு ஒரு முறை ப்ரசுரிக்கின்றோம். இதில் பேதையர்க்கும், பெரியவர்க்கும் பேதமின்றி சம்பிரதாய விஷயங்கள் தொகுத்து வழங்குகின்ரோம். இவ்விதழில், ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி வானமாமலை கலியன் ராமனுஜ ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீ உ.வே. இளையவில்லி பூவராஹாச்சாரியர் ஸ்வாமி, ஸ்ரீ Dr. எம்பார் ரங்காச்சார் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே.ப்ரதிவாதி பயங்கரம் ராஜஹம்ஸம் ஸ்வாமி, ஸ்ரீ BSS ஐயங்கார் ஸ்வாமி, முதலியோர் எழுதும் கட்டுரைகள் எல்லோர்க்கும் புரியும் எளிய ஆங்கிலத்தில் வெளிவருவது சிறப்பாகும். சிறார்களுக்கு இலகுவாக, கதைகள், படங்கள், வினாடி வினா மூலம் சம்பிரதாயம் சென்றடைகின்றது.

உ. கல்விக்கூடங்கள்: அமேரிக்க கண்டத்திலும் ஆசாரியர்கள் அருளிய கடினமான ரஹஸ்யங்களை, மிகவும் இலகுவாக கற்க கூடங்கள் அமைத்துள்ளோம். த்வயம், சரம ஸ்லோகம், திருமந்த்ரம் முதலிய கூடங்கள் ஸ்ரீ வேள்விக்குடி (வேளுக்குடி) க்ருஷ்ணன் ஸ்வாமி உபந்யாஸங்களை கொண்டு நடத்தி வருகின்றோம். வேத பாராயண முறை, திவ்ய ப்ரபந்த கோஷ்டி முறை, ஸ்ரீவைஷ்ணவ ஸந்த்யாவந்தனம் முதலியன நடத்தி வருகின்றோம். மயர்வற மதிநலம் அருளபெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களை மனதிலே நிறுத்த சந்தை சொல்லும் முறையை ஸ்ரீ ஊ.வே. பராஸர பத்ரிநாராயண பட்டர் ஸ்வாமி தலைமையில் CD பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது அனைவரும் நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களை கற்கவும், அதன் பொருளை உணரவும் பேறுதவியாக இருக்கும் என்பது எங்கள் எண்ணம். மேலும் அனைத்து உபந்யாஸங்களும், CD, மற்றும் ஒலி நாடாக்களாக வழங்குகின்றோம்.

ஊ. முன்னோர் மொழிந்த முறை: தப்பாமல் நமக்கு, கணக்கிட முடியாத பல பல ஸ்ரீகோசங்கள் மூலம் எழுதிக்கொடுத்தவர் நம் **ஸ்ரீ காஞ்சி மஹாமஹிமோபாத்யாய உ.வே.ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் (அண்ணா) ஸ்வாமி.** அண்ணல் பிறந்திலனேல் ஆற்றில் கரைத்த உப்பன்றோ நாம். பூருவர்கள் அளித்த சீர்த்த நெறிகளை வழுவாமல், சிந்தாமல், சிதறாமல் நமக்குத் தந்த பிரான் **அண்ணா**. இக்காலத்தில் வேதாந்தங்களிலும், ப்ரபந்தங்களிலும், ஆசாரியர்கள் அருளிய ஸ்தோத்திரங்களிலும் பிழையாகவும், தமக்கு ஸாதகமாக அர்த்தம் வரும்படி மாற்றியும், பதிப்பு செய்வதை

சிலர் தொழிலாகவே கொண்டுள்ளார்கள். மத யானைகளுக்கு அங்குசமாக அண்ணாவின் பதிப்புகளில் அனைத்து புத்தகங்களையும் அப்படியே நம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மறுபதிப்பாகத் தருவது தான் இந்த கைங்கர்யத்தின் முக்கிய அம்சம். இந்த கைங்கர்யத்தில் முக்கிய நபராகவும், தூண்டுகோலாகவும், இந்த பதிப்புக்களை பதிக்க உறுதுணையாகவும், அண்ணலின் குலத்தில் தோன்றிய அவரது திருப்பேரனாரான **ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் ஸம்பத்குமராசார்ய** ஸ்வாமிக்கு இந்த இயக்கதின் நன்றியை உரித்தாக்குகின்ரோம். இந்த கைங்கர்யம், எதிர்காலத்தவர்கள் நமது சச்சம்பிரதாயத்தை உள்ளது உள்ளபடியே கற்க ஹேதுவாக இருக்கும் என்பது திண்ணம். இத்தகைய முக்கியம் வாய்ந்த நூல்கள் வெளிவரவேணும், என்று வேதிக்ஸ் (VEDICS) என்கிற இந்த அறக்கட்டளை எண்ணியதின் பயன்தான் முதலாக வெளிவரும் நித்யாநுஸந்தான திருப்புத்தகம். அமேரிக்க கண்டத்திலே இருந்து. இந்த புத்தகம் வெளிவர ஒருங்கிணைப்பு பணி செய்த **ஸ்ரீ திருமலை அனந்தாண்பிள்ளை வரதன்** ஸ்வாமிக்கும், **ஸ்ரீ வங்கிபுரம் பத்தங்கி முகுந்தன்** ஸ்வாமிக்கும், **ஸ்ரீ நல்லான் சக்ரவர்த்தி நரஸிம்ஹன்** ஸ்வாமிக்கும், எங்களது நன்றி. சிறப்புடன் ஸ்கேன் (scan) செய்து, அச்சிட்டு கொடுத்த RNR Printersகளுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

முன்னமே சொன்னபடி நம்முடைய உத்ஸாகத்தை நெறிப்படுத்தி நம்முடைய சம்பிரதாயத்திற்க்கு எவ்வகையில் தொண்டு செய்யபோகிறோம் என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொண்டு, மேலே சொன்ன நாங்கள் செய்யும் எந்த ஒரு கைங்கர்யத்திலாவது ஊற்று பிறந்ததென்னில் எங்களுக்கு vedics@yahoogroups.com என்ற முகவரிக்கு எழுதுங்கள். எங்களை ஆதரித்து ஊக்கமளித்து, எங்களது இயக்கத்திற்கு பலமாக இருந்து மேற்சொன்ன கைங்கர்யங்கள் செவ்வனே நடக்க, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார், அவரடி பணிந்துய்ந்த ராமாநுசன், மற்றும் அவரின் புநராவதாரரான ஜீயரின் திருவடிகளின் அருளைப் பெற இறைஞ்சுகிறோம்.


ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

இராமநுச அடியார்கள்,
வேதிக்ஸ் (VEDICS)

VEDICS Board USA
தலைவர்: ஸ்ரீ **திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடேசன்,** Rochester Hills, Michigan
உப-தலைவர்: ஸ்ரீ **ஸுந்தர் ஸாரநாதன்,** Framingham, Massachusetts
கார்யதரிசி: ஸ்ரீ **வங்கிபுரம் பத்தங்கி முகுந்தன்,** Chicago Illinois
அங்கத்தினர்: ஸ்ரீ **திருமலை அனந்தாண்பிள்ளை வரதன்,** Bellevue, Washington
அங்கத்தினர்: ஸ்ரீ **வேதாராமன் ஸ்ரீராமன்,** San Antonio, Texas

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்ஸ்வாமி அருளிய
திவ்யார்த்த தீபிகையுரையின் ஸங்க்ரஹத்தோடு கூடின

நித்யாநுஸந்தானம்

பொதுத்தனியன்கள்

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்:
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் யதீந்த்ர ப்ரவணம் ரம்ய ஜாமாதரம் முநிம் வந்தே.

திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப் பிள்ளையின் திருவருளுக்குப் பாத்ரபூதரும் ஞானம் பக்தி முதலிய நற்குணங்களுக்குக் கடல் போன்றவரும் எம்பெருமானார் பக்கலிலே ப்ராவண்ய முடையவருமான மணவாள மாமுனிகளை வணங்கா நின்றேன்.

"இப்புவியிலரங்கேசற்கு ஈடளித்தான்வாழியே" என்று வாழ்த்தப்படாநின்ற மணவாளமாமுனிகள் திருவரங்கம் பெரியகோயிலில் ஸ்ரீரங்கநாதன் திருமுன்பே, திருவாய்மொழியின் சிறந்த வியாக்கியான மாகிய ஈடுமுப்பத்தாறாயிரப் படியைக் காலக்ஷேபம் ப்ரஸாதித்துவருகிற அடைவிலே காலக்ஷேபசாத்துமுறையன்று ஸ்ரீரங்கநாதன் தானே ஒரு சிறுபிள்ளை வடிவுடன் திருவோலக்கத்தினிடையே ஓடிவந்து கைகூப்பி நின்று ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்று தொடங்கி இந்தத் தனியனை வெளியிட்டுச் சென்றது மன்றியில், வடமொழிவேதத்தின் ஆதியிலும் அந்தத்திலும் ப்ரணவோச்சாரணம் பண்ணுவது நியதமாயிருப்பதுபோலத் தமிழ் வேத பாராயணத்தின் ஆதியிலும் அந்தத்திலும் இந்தத்தனியனை ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரும் நியதமாக அநுஸந்திக்கக் கடவர்களென்று நியமனமு மருளினன்.

மணவாளமாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஸ்ரீசைலேசர் என்றும் ஸ்ரீசைலநாதர் என்றும் திருநாமம். *

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது

லக்ஷ்மீ நாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ;
. அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம் அஸ்மதா சார்ய பர்யந்தாம் குருபரம் பராம் வந்தே.

எம்பெருமானைத் தொடக்கத்திலே உடைத்தாய் ஸ்ரீமந் நாதமுனிகளையும், ஆளவந்தாரையும் இடையிலே உடைத்தாய் எமக்கு ஆசார்யரான எம்பெருமானாரை முடிவிலே உடைத்தான ஆசார்ய பரம்பரையை வணங்காநின்றேன்.

இதுவும் ஆழ்வானருளிச் செய்தது

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே.
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

ய: நித்யம் அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத: தத் இதராணி த்ருணாய மேநே, அஸ்மத் குரோ: பகவத: தயா ஏக ஸிந்தோ: அஸ்ய ராமாநு ஜஸ்ய சரணௌ சரணம் ப்ர பத்யே.

யாவரொரு எம்பெருமானார் எக்காலும் எம்பெருமானது திருவடித்தாமரை யிணைகளாகிற ஸுவர்ணத்திலுள்ள மிகுந்த விருப்பத்தினாலே அத்திருவடிகளுக்குப் புறம்பாயுள்ள விஷயங்களைத் துரும்பாக நினைத்துத் தள்ளி விட்டாரோ எமக்கு ஆசார்யராய் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணராய் திருவருட்கடலான இந்த எம்பெருமானாருடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்.

ஆளவந்தார் அருளிச் செய்தது

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா,

மத் அந்வயாநாம் நியமேந மாதா பிதா யுவதய: தநயா: விபூதி: ஸர்வம் யத் ஏவ, ந: ஆத்யஸ்ய குலபதே: வகுள அபிராமம் ஸ்ரீமத் தத் அங்க்ரி யுகளம் மூர்த்நா ப்ரணமாமி.

என்னைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் தாய், தந்தை, மாதர், மக்கள், செல்வம் (மற்றுமுள்ள) எல்லாமும் யாதொரு ஆழ்வார் திருவடியேயோ, நமக்குக் குலகூடஸ்தராகிய ஆழ்வாருடைய மகிழ மலர்களினால் அழகாயும் நித்யோஜ்வலமாயு மிருக்கிற அந்தத் திருவடியிணையைத் தலையால் வணங்குகிறேன்.

ஸ்ரீபராசரபட்ட ரருளிச்செய்தது

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

பூதம் ஸரச் ச மஹத் ஆஹ்வய பட்டநாத ஸ்ரீ பக்திஸார குல சேகர யோகி வாஹாந், பக்தாங் க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந் ஸ்ரீமத் பராங்குசமுநிம் நித்யம் ப்ரணத: அஸ்மி.

பூதத்தாழ்வாரையும் பொய்கை யாழ்வாரையும் பேயாழ்வார் பெரியாழ்வார் திருமழிசை யாழ்வார் குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் இவர்களையும் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் எம்பெருமானார் இவர்களையும் நம்மாழ்வாரையும் நாள் தோறும் ஸேவிக்கிறேன்.

பொதுத்தனியன்கள்

ஆழ்வார்கள் பதின்மரையும் ஆசாரியர்களில் முக்கியரான எம்பெருமானாரையும் சேர்த்து அநுஸந்திக்கும் ச்லோகமாமிது. இதில், பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற முறைமைப்படியே திருநாமங்களைப் பதியாமல் பூதத்தாழ்வாரை முன்னே பதிந்தும் நம்மாழ்வாரை முடிவிற் பதிந்துமிருப்பது ச்லோகம் கூடினவகையிலே அமைந்த அமைப்பு என்று நினைத்திடுவர் சிலர். அங்ஙனன்று; "**பூதம் ஸரஸ்ச மஹ தாஹ்வய பட்டநாத ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந், பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந் ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்**" என்று அடைவுபடக் கவி சொல்லுவதில் அருமையொன்றுமில்லை: ஆயினும், பூதத்தாழ்வார் தொடங்கி நம்மாழ்வார் முடிவாக அமைக்கப்பட்ட இந்த ப்ரக்ரியைக்கு நல்ல நியாமகம் ஒன்றுண்டு கேண்மின்—

ஆழ்வார்களுள் முக்கியரான நம்மாழ்வாரை அவயவியாகவைத்து மற்றுள்ள ஆழ்வார்களை அவர்க்குத் திருமுடி திருக்கண் முதலிய அவயவங்களாக வைத்துப் பூருவாசாரியர்கள் ச்லோகங்களருளிச் செய்துள்ளார்கள். அவற்றில், பூதத்தாழ்வாரைத் திருமுடியாகவும், பொய்கை பேயாழ்வார்களைத் திருக்கண்களாகவும், பட்டர்பிரானைத் திருமுகமாகவும், திருமழிசைப்பிரானைத் திருக்கழுத்தாகவும் குலசேகரப் பெருமாளையும் திருப்பாண்பெருமாளையும் திருக்கைகளாகவும், தொண்டரடிப்பொடிகளைத் திருமார்பாகவும், கலியனைத் திருநாபியாகவும், எதிராசனைத் திருவடியாகவும் உருவகப்படுத்தியிருத்தலால் அந்தப்ரக்ரியைக்கு ஏற்ப இந்தத்தனியன் திருவவதரித்ததென்று பெரியார் கூறுவர். அவயவபூதர்களை முன்னுற வரிசையாகச் சொல்லி, அவயவியான ப்ரபந்நஜநகூடஸ்தரை முடிவில் சொல்லியிருப்பது இவ்வகையிலே நன்கு பொருந்துமென்றுணர்க. பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கும்போது நஞ்சீயருடைய பிரார்த்தனையினால் அருளிச்செய்த ச்லோகமிது. *

பொதுத்தனியன்களின் உரை முற்றிற்று.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழிகளின்

த னி ய ன் க ள்

(ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்தது)

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:,
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி.

ய: நரபதி பரிக்லுப்தம் சுல்கம் ஆதாது காம: குருமுகம் அநதீத்ய அசேஷாந் வேதாந் ப்ராஹ, அமர வந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத் ச்வசுரம் த்விஜகுல திலகம் தம் விஷ்ணு சித்தம் நமாமி.

யாவரொரு பெரியாழ்வார் வல்லபதேவனென்கிற அரசனால் ஏற்படுத்தப்பட்ட பந்தயப் பொருளாகிய பொற்கிழியை கிரஹிக்க எண்ணமுடையவராய் ஆசார்ய முகமாக ஒரு கல்வியும் கற்காமலே (பரதத்துவ நிரணயத்திற்கு வேண்டிய) வேதங்களெல்லாவற்றையும் (பகவத் கிருபையினால்) எடுத்துரைத்தாரோ, தேவர்களினால் ஸேவிக்கத்தகுந்தவரும் ஸ்ரீரங்கநாதனுக்கு நேராக மாமனாரும் பிராமண குலத்திற்குத் திலகம் போன்றவருமான அப்பெரியாழ்வாரை வணங்குகிறேன்.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

மின் ஆர் தட மதிள் சூழ் வில்லி புத்தூர் என்று ஒருகால் சொன்னார் கழல் கமலம் சூடினோம், முன் நாள் கிழி அறுத்தான் என்று உரைத்தோம், நெஞ்சமே வந்து கீழ்மையினில் சேரும்வழி அறுத்தோம்.

"ஒளி நிறைந்த பெரிய திருமதிலாலே சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர்" என்று ஒரு தரம் உச்சரித்தவருடைய திருவடித் தாமரைகளை சிரமேற் கொண்டோம்; "புருஷார்த்தம் வெளியாகாத காலத்தில் (பரதத்துவ நிர்ணயம் பண்ணி) பொருள் முடிப்பை அறுத்தருளினார்" என்று சொல்லப் பெற்றோம்; ஓ! நெஞ்சே! நீ அநுகூலமாய் வரப்பெற்று அதோகதியாகிற நரகத்தில் சேருகைக்குடலான வழியை அறப்பண்ணினோம்.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பாண்டியன் கொண்டாட பட்டர் பிரான் வந்தான் என்று ஈண்டிய சங்கம் எடுத்து ஊத, வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழி அறுத்தான் பாதங்கள் யாமுடைய பற்று.

வல்லபதேவ னென்கிற பாண்டிய ராஜன் ப்ரசம்ஸிக்க, "ப்ராஹ்மணர்களுக்கு உபகாரகரான பெரியாழ்வார் எழுந்தருளினார்" என்று திரள் திரளான சங்குகளைக் கையில் கொண்டு (பலர்) ஊத, (விஷ்ணு பாரம்யஸ்தாபநத்துக்கு) ஆவச்யகங்களான வேத வாக்கியங்களை உபந்யஸித்து விளம்பியாமல் [த்வரித்து] வித்யாசுல்கமாக வைத்த பொருள் முடிப்பை அறுத்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளானவை நமக்குப் புகலிடம்.

தனியன் உரை முற்றிற்று.

பெரியாழ்வார் வைபவச்சுருக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தணர்குலத்திலே ஆனிமாதத்து ஸ்வாதிநக்ஷத்திரத்தில் அவதரித்து விஷ்ணுசித்தரென்னுந் திருநாமமுடையராயிருந்த இவ்வாழ்வார் அவ்வூர்ப்பெருமாளுக்கு நந்தவனமமைத்துத் திருமாலைகட்டிச் சாத்துபவராயிருந்தார். அக்காலத்து, தென்மதுரையரசனான வல்லபதேவன் நற்கதி நண்ணும் வழியைச் சிந்தித்துத் தன் புரோஹிதனான செல்வநம்பியின் உபதேசத்தினால் பல வித்வான்களையும் திரட்டிப் பரதத்துவநிர்ணயம் பண்ணுவிக்க விரும்பி, மதுரையில் ஒரு பெரிய ஸ்தலத்தில் அபாரமான பணத்தை வித்யாசுல்கமாகக் கிழிச்சீரையில் வைத்துப் பல விடங்களிலுமுள்ள பண்டிதர்களுக்கு அழைப்புப்பத்திரிகை யனுப்பினான். இவ்வாழ்வாரைக்கொண்டு பரதத்துவநிர்ணயம் செய்விக்கவிரும்பிய ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பெருமாள் கனவிலே இவர்க்கு நியமனம் தந்தருளி, இவர் ஸர்வஜ்ஞராம்படியான விசேஷகடாக்ஷமும் செய்தருளி மதுரை வித்வத்ஸபைக்கு இவரையனுப்ப, இவரும் கம்பீரமாய் எழுந்தருளி ஸ்ரீமந்நாராயணனே பரமபுருஷனென்று சுருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளைக்கொண்டு பலவாறாக உபந்யஸித்து அக்கிழியை

அறுத்துக்கொண்டார். இங்ஙனம் பரதத்துவநிர்ணயஞ் செய்தருளின இவ்வாழ்வார்க்கு அரசன் யானையின்மீது மஹோத்ஸவம் செய்விக்க, பரமபதநாதனை எம்பெருமான் இந்த மஹோத்ஸவத்தைத் தானுங்கண்டு களிக்க விரும்பிப் பரிஜந பரிவாரங்களோடு கருடன்மீது எழுந்தருளி நெருங்கிநிற்க, ஆழ்வார் ஸேவித்து வியந்து யானைமணிகளைத் தாளமாகக் கொண்டு பல்வகையாலும் திருப்பல்லாண்டு பாடினர். பிறகு விசேஷ பஹுமானம் பெற்று ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு எழுந்தருளி மதுரையிற் கிடைத்த பொருள்களையெல்லாம் பகவானுக்கே ஸமர்ப்பித்துப் 'பெரியாழ்வார் திருமொழி' என்னும் திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து முன்போலவே நந்தவனத் திருப்பணியில் நிரதராயிருந்து வாழ்ந்து விளங்கினர். *

பெரியாழ்வார் வைபவச்சுருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ:

திருப்பல்லாண்டு முன்னுரை

இப்பிரபந்தத்திற்குத் திருப்பல்லாண்டென்று திருநாமம் வழங்குதற்குக் காரணம் யாதெனில்; ஒவ்வொரு பாசுரத்திலும் **பல்லாண்டு பல்லாண்டு** என்றுசொல்லி மங்களாசாஸநம் செய்திருப்பதனால் அதனையே நிரூபகமாக்கிப் **பல்லாண்டு** என்று திருநாமம் சாத்தினர். **திரு** என்பது வடமொழியில் ஸ்ரீசப்தம்போல் மேன்மையை யுணர்த்தும்; மேன்மைதங்கிய மங்களாசாஸந ப்ரபந்தம் என்றபடி. இப்பிரபந்தம் பல்லாண்டென்று தொடங்கப்படுவதால் முதற்குறிப்பு என்னுமிலக்கணத்தால் திருப் பல்லாண்டெனத் திருநாமம் பெற்றதென்னவுமாம்.

அவாப்த ஸமஸ்தகாமனென்றும் ஸர்வரக்ஷகனென்றும் ப்ரஸித்தனை ஈச்வரனைக் கண்டால் தமக்கு வேண்டிய மங்களங்களை அவனிடத்தில் பிரார்த்தித்துப் பெறவேண்டியிருக்க, தாம் அவனுக்கு மங்களமுண்டாகுமாறு ஆசாஸிப்பது தகுதியோவென்னில்; பகவத்கிருபையினால் கிடைத்த பக்தியினால் அந்த பகவானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலான குணங்களை அடியோடு மறந்து 'பகவானுக்குக் குறையொன்றுமில்லாமலிருப்பதே நமக்கு மங்களம்' என்று இவ்வாழ்வார் நினைத்து மங்களாசாஸநம் பண்ணுகிறார் என்றுணர்க.

மற்றுள்ள ஆழ்வார்களுக்கும் மங்களாசாஸநத்தில் ஊற்றமிருந்தாலும் அவர்களுக்கு அது எப்போதோ ஒருகாலுள்ளதேயன்றி இப்பெரியாழ்வார்க்குப்போலே நித்யமாயும் முக்கியமாயுமிராது. அவர்கள் எம்பெருமானை ரக்ஷகனாகப்பற்றி அவனிடத்தில் தங்களுடைய வாழ்ச்சியைப்பெறுவதற்கு விரும்புவர்கள். இவ்வாழ்வார் அப்படியல்லாமல் எம்பெருமானுடைய வாழ்வையே தமக்கு வாழ்வாக நினைத்துப் பெருமாளுக்கு என்ன தீங்கு வருகிறதோவென்று பயப்பட்டுக் காப்பிடத்தேடுகிற பரமபக்தராவர். ஆனதுபற்றியே மற்றுள்ள ஆழ்வார்களைவிட மிக்க பெருமையை யுடையவரானது காரணமாகவே இவர்க்குப் **பெரியாழ்வா**ரென்று ப்ரஸித்தியுண்டாயிற்று;

"மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள்
தங்க ளார்வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வா ரென்னும் பெயர்."

என்று உபதேசரத்தினமாலையிலே இவ்வர்த்தத்தை மணவாளமாமுனிகள் அருளிச் செய்தார். *

ஸ்ரீ:

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு

(ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி யருளிச்செய்த உரையோடு கூடியது.)

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்*
சேவடி செவ்விதிருக் காப்பு. (1)

மல் ஆண்ட திண் தோள் மணி வண்ணா பல் ஆண்டு பல் ஆண்டு பல் ஆயிரம் ஆண்டு பலகோடி நூறு ஆயிரம் உன் சே அடி செவ்வி திருக் காப்பு.

மல்லர்களை நிரஸித்த திண்ணிய தோள்களை யுடையனாய் நீலமணி போன்ற திருநிறத்தை யுடையனானவனே! பல பல வருஷங்களிலும் அநேக ப்ரஹ்மகல்பங்களிலும் இப்படி உண்டான காலமெல்லாம் உன்னுடைய சிவந்த திருவடிகளினுடைய அழகுக்குக் குறைவற்ற ரக்ஷை உண்டாயிடுக.

** * *—பாண்டியராஜனுடைய பண்டிதஸபையிலேவந்து பரதத்வநிர்ணயம் பண்ணின பெரியாழ்வார்க்கு அவ்வரசன் யானையின்மேலே மஹோத்ஸவம் செய்வித்தபோது அந்த உத்ஸவத்தைக்கண்டு ஆநந்திப்பதற்காக ஸ்ரீவைகுண்டநாதன் ஸபரிவாரனாய் எழுந்தருளி எதிரே ஸேவைஸாதிக்க, ஆழ்வார் ஸேவித்து இந்த அருமருந்தன்ன எம்பெருமானுக்கு எழும்பூண்டெல்லாம் அஸுரராக்ஷஸமயமாயிருக்கிற இந்நிலத்திலே யாராலே என்ன தீங்கு விளைகிறதோவென்று அதிசங்கைப்பட்டு 'ஒரு அமங்களமும் நேரிடாதபடி மங்களமே யாயிருக்கவேணும்' என்று பல்லாண்டு பாடுகிறார். அதாவது—ஜயவிஜயீபவ என்கிறார் என்றபடி.**

ஆழ்வார் இப்படி அதிசங்கையாலே மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்று தெரிந்துகொண்ட எம்பெருமான் 'ஐயோ! ஏன் இவர் இப்படி பயப்படுகிறார். எப்படிப்பட்ட எதிரிகளையும் ஒரு விரல் நுனியாலே வென்றொழிக்கவல்ல தேஹவலிவு நமக்கு உண்டென்பது இவர்க்குத் தெரியவில்லை போலும்; அந்த வலிவைக் காட்டினோமாகில் இவருடைய அச்சம் அடங்கிவிடும்' என்று நினைத்து, முன்னே க்ருஷ்ணவதாரகாலத்தில் தன்னைக் கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்டுவந்த சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களை நுறுக்கித்தள்ளின தன்னுடைய புஜபலத்தைக் காட்டினான்; ஆழ்வாருடைய அச்சம் தணிவதற்காகக் காட்டின அந்த வலிவு ஆழ்வாருடைய பயம் அதிகரிப்பதற்கே காரணமாயிற்று. புத்திரன் சூரனாயிருந்தால் அவனுடைய தாயானவள் 'இவன் ஒருவரையும் லக்ஷியம் பண்ணாமல் யுத்தம் செய்யப்போய்விடுவனே! யாராலே என்ன கெடுதி நேர்ந்துவிடுமோ' என்று பயப்படுவதுபோல் இவரும் அந்த மல்லாண்ட திண்டோள் வலிமைக்குப் பயப்பட்டு மீண்டும் மங்களாசாஸநம் பண்ணுகிறார். (1)

*அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு**
*வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு**
*வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு**
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (2)

அடியோமோடும் நின்னோடும் பிரிவு இன்றி ஆயிரம் பல்லாண்டு; வடிவு ஆய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு; வடிவு ஆர் சோதி வலத்து உறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு; படை போர் புக்கு முழங்கும் அ பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு.

தாஸபூதர்களாய் அடியேன் தொடக்கமாயுள்ள சேதநர்களோடும் ஸ்வாமியான தேவரீரோடும் பிரிவில்லாமல் (இந்த ஸம்பந்தம்) நித்யமாய்ச் செல்லவேணும்; (உனக்கு) நிரூபக பூதையாய் உன்னுடைய திருமார்பின் வலது பக்கத்தில் பொருந்தியிரா நின்றுள்ள நித்யயௌவந சாலிநியான பெரிய பிராட்டியார் தொடக்கமான நாய்ச்சிமார்களும் பல்லாண்டு; (உன்) திருமேனியை வ்யாபித்திருக்கிற ஜ்யோதிஸ்ஸையுடையனாய் வலத்திருக்கையிலே நித்யவாஸம் பண்ணுமவனாய்ப் பகைவரை எரிக்குமவனான திருவாழியாழ்வானும் பல்லாண்டு—; சேனைகளையுடைய யுத்தங்களில் புகுந்து கோஷிக்கின்ற அளவற்ற பெருமையையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும் பல்லாண்டு. [ஏ—ஈற்றசை.]

** * *—சேஷபூதர்களான அடியோங்களும் ஸர்வசேஷியான தேவரீரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாமல் நெடுகாலளவும் மங்கலமாக வாழவேணும்; பெரியபிராட்டியாரும் தேவரீருமான சேர்த்தி எப்போதும் மாறாமல் நித்தியவாழ்ச்சியாகச் செல்லவேணும்; திருவாழியாழ்வானும் திருச்சங்காழ்வானும் குறையொன்றுமின்றி வாழவேணும் என்று இப்பாட்டால் உபய விபூதிகளோடுங் கூடின நிலைமைக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறார். "**அடியோமோடும்**" என்று இந்த லீலா விபூதியிலிருக்கிற தங்களையும், மற்ற மூன்றடிகளாலே பரமபதமாகிய நித்ய விபூதியிலுள்ள பெரியபிராட்டியார் முதலானவர்களையும் இப்பாட்டில் கூறியிருப்பதனால் உபய விபூதியுக்தனான எம்பெருமானுக்கு இப்பாசுரத்தால் பல்லாண்டுபாடினாராயிற்று. முதலிரண்டு பாட்டுக்களையும் சேர்த்தே அநுஸந்திப்பர். (2)*

*வாழாட்பட்டுநின் றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமும்கொண்மின் **
*கூழாட்பட்டுநின் றீர்களை யெங்கள்குழுவினில்புகுதலொட்டோம்**
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் இலங்கை*
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (3)

வாழ் ஆள் பட்டு நின்றீர் உள்ளீர் ஏல் வந்து மண் கொள்மின் மணமும் கொள்மின்; கூழ் ஆள் பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்; நாங்கள் ஏழ் ஆள் காலும் பழிப்பு இலோம்; இராக்கதர் வாழ் இலங்கை பாழ் ஆள் ஆக படை பொருதானுக்கு பல்லாண்டு கூறுதும்.

உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பான (எம்பெருமானுடைய) அடிமைத் தொழிலில் ஈடுபட்டு நிலைத்து நின்றவர்கள் இருப்பீர்களாகில் (நீங்கள் எங்களோடே) வந்து சேர்ந்து (எம்பெருமானுடைய உத்ஸவார்த்தமான திருமுளைத் திருநாளுக்குப்) புழுதிமண் சுமவுங்கள்; (அந்த உத்ஸவத்துக்கு) அபிமானிகளாகவும் இருங்கள்; சோற்றுக்காக(ப்பிறரிடத்தில்) அடிமைப் பட்டிருப்பவர்களை எங்களுடைய கோஷ்டியிலே அங்கீகரிக்கமாட்டோம்; (எங்களுக்குள்ள சிறப்பு என்னவென்கிறீர்களோ,) நாங்களோ வென்றால் ஏழு தலைமுறையாக ஒருவகைக் குற்றமும் இல்லாதவர்கள்; (எங்களுடைய தொழிலோவென்னில்) ராக்ஷஸர் வஸிக்கிற லங்கையிலிருந்த ஆண் புலிகள் யாவரும் வேரோடே அழிந்துபோம்படி (வாநர) சேனையைக் கொண்டு போர்செய்த பெருமாளுக்குப் பல்லாண்டு பாடுகிறவர்களாயிருக்கின்றோம்.

** * *—இவ்வாழ்வார் தனியாயிருந்து மங்களாசாஸநம் பண்ணுவதில் த்ருப்தி பெறாமலும், 'போக்யமான வஸ்துவைத் தனியே அநுபவிப்பது தகாது'. என்கிற நியாயத்தைக் கொண்டும் இன்னும் பலபேர்களையும் மங்களாசாஸநத்திற்குத் துணை கூட்டிக்கொள்ள வேணுமென்று நினைத்தார்; உலகத்தில் எத்தனைவகையான*

அதிகாரிகள் இருக்கிறார்களென்று ஆராய்ந்து பார்த்தார்; செல்வத்தை விரும்புமவர்கள், ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தை விரும்புமவர்கள், எம்பெருமானுடைய அநுபவத்தை அபேக்ஷிப்பவர்கள் என்றிப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பதைக் கண்டார்; இம்மூவகை யதிகாரிகளில் செல்வத்தை விரும்புமவர்களும் கைவல்யத்தை விரும்புமவர்களும் ப்ரயோஜநாந்தரபரர்களா யிருந்தாலும் அந்த அற்பபலனுக்காக வாவது எம்பெருமானைப் பணிந்து பிரார்த்திக்கின்றார்களாகையால் அவர்களையும் திருத்திப் பணிகொள்ளலாமென்று ஆழ்வார் நிச்சயித்து மேற்சொன்ன மூவகை யதிகாரிகளையும் மங்களாசாஸநத்துக்கு அழைக்க விரும்பி, முதல்முதலாக எம்பெருமானுடைய அநுபவத்தையே விரும்புமவர்களான ஜ்ஞாநிகளை அழைக்கிறார்.

[மண்ணும்மணமும் கொண்மின்] மண் கொள்ளுகையாவது—மஹோத்ஸவத்தில் அங்குரார்ப்பணத்திற்குப் புழுதிமண் சுமப்பது. மணங்கொள்ளுகையாவது—அந்த மஹோத்ஸவத்தினிடத்தில் அபிமானங்கொண்டிருப்பது. முற்காலத்தில் அடிமை யோலை யெழுதும் போது "மண்ணுக்கும் மணத்துக்கும் உரியேனாகக் கடவேன்" என்றெழுதுவது வழக்கமாம். (3)

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து*
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ*
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று*
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் வந்துபல்லாண்டுகூறுமினே. (4)

வந்து எங்கள் குழாம் புகுந்து கூடும் மனம் உடையீர்கள் ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வரம்பு ஒழி வந்து ஒல்லை கூடுமின்; நாடும் நகரமும் நன்கு அறிய நமோ நாராயணாய என்று பாடும் மனம் உடை பத்தர் உள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமின்.

(கைவல்யாநுபவத்தை விரும்பி உபாஸனை செய்பவர்களே! நீங்கள்) (கைவல்யத்தில் ஆசையைவிட்டு) வந்து (அநந்யப்ரயோஜனரான) எங்களுடைய கோஷ்டியிலே அந்வயித்து ஒன்றாய்ச் சேர்ந்துவிடவேணுமென்கிற விருப்பமுடையவர்களாயிருந்தால் பொல்லாத ஸ்தானமாகிய கைவல்யத்திலே உங்களைக்கொண்டு தள்ளுவதற்கு முன்னே (ஆத்மாநுபவம் மாத்திரம் செய்வோமென்று நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிற) வரம்பை ஒழித்துக்கொண்டு (இனி பூர்ணாநுபவம் பண்ணுவோமென்று) வந்து சீக்கிரமாக எங்களோடு சேர்ந்து விடுங்கள்; (அப்படிச் சேர்ந்தபின்பு) நாட்டிலுள்ளவர்களும் நகரத்திலுள்ளவர்களும் (உங்களுடைய) நன்மையை அறிந்துகொள்ளும்படி திருமந்திரத்தைச் சொல்லிப் பாடவேணுமென்கிற எண்ணத்தையுடைய பக்தர்களுக்குள் சேர்ந்தவர்களா யிருந்து (எம்பெருமானுக்கு) மங்களா சாஸநம் பண்ணுங்கள்.

ஏடுநிலம் என்று கைவல்யஸ்தாநத்தை எங்ஙனே சொல்லுமென்னில்; பிரகரணபலத்தினால் சொல்லும்; பொல்லாத ஸ்தானமென்று பதப்பொருள். அன்றியே, ஏடு—ஸூக்ஷ்மசரீரமானது நிலத்தில்—தனக்குக் காரணமான மூலப்ரக்ருதியிலே, இடுவதன்முன்னம்—லயிப்பதற்கு முன்னமே. என்றும் பொருள் கொள்ளலாம்.

"வரம்பொழிய" என்பது வரம்பொழி என்று கடைக்குறையாயிருக்கிறது. வரம்பொழியவந்து என்றபடி. இவ்விடத்தில் வரம்பாவது—அவரவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு எல்லை; ஆத்மாநுபவத்தோடு நாம் நின்றுவிட வேண்டியது; பகவானை யநுபவிக்கப் போகக்கூடாது என்று நீங்கள் வைத்துக் கொண்ட வரம்பை ஒழித்து விட்டு உடனே வந்து சேருங்கள் என்று அழைக்கிறார்.

திருப்பல்லாண்டு

* * * —"ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந்" என்கிற சாஸ்திரப்படி தங்கள் கோரிக்கை நிறைவேறுதற்காகப் பிரணவத்தை மாத்திரம் உச்சரிப்பார்கள்; இனி அப்படியல்லாமல் திருவஷ்டாக்ஷரத்தையும் பூர்த்தியாகக் கோஷித்துக்கொண்டு வரவேணுமென்று பின்னடிகளால் அழைக்கின்றார். பத்தர்—பக்தர். (4)

*அண்டக் குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை**
*இண்டைக் குலத்தை யெடுத்துக்களைந்த இருடீ கேசன் றனக்கு**
*தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி தொழுது ஆயிரநாமஞ் சொல்லி**
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே. (5)

அண்டம் குலத்துக்கு அதிபதி ஆகி அசுரர் இராக்கதரை இண்டை குலத்தை எடுத்து களைந்த இருடிகேசன் தனக்கு தொண்டர் குலத்தில் உள்ளீர் பண்டைக் குலத்தை தவிர்ந்து வந்து அடி தொழுது ஆயிரம் நாமம் சொல்லி பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மின்.

அண்ட ஸமூஹங்களுக்கெல்லாம் நியாமகனாய் அஸுர ராக்ஷஸர்களுடைய நெருக்கமான கூட்டத்தை நிர்மூலமாக்கின ஹ்ருஷீகேசனை பகவானுக்கு அடியவராயிருப்பவர்களுடைய கோஷ்டியில் சேர்ந்தவர்களே! [ஐச்வர்யார்த்திகளே!] (நீங்கள்) (பிரயோஜநாந்தரத்தை விரும்பிக் கிடந்தமையாகிற) பழைய தன்மையை நீக்கிக்கொண்டு எங்களோடு சேர்ந்து பகவானுடைய திருவடிகளை ஸேவித்து எல்லாத் திருநாமங்களையும் அநுஸந்தித்து எப்போதும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருங்கள்.

* * *—இப்பாட்டில் ஐச்வர்யார்த்திகளை அழைக்கிறார். அவர்கள் இருவகைப்படுவர்;—நெடுநாளாக இருந்து கைதப்பிப்போன செல்வத்தை மறுபடியும் அடைய விரும்புகிறவர்கள் ஒரு வகுப்பு; நெடுநாள் தரித்ரராகவேயிருந்து புதிதாகச் செல்வமடைய விரும்புகிறவர்கள் மற்றொருவகுப்பு. (முதல்வகுப்பினர்-ப்ரஷ்டைச்வர்யகாமர்களென்றும் இரண்டாம் வகுப்பினர் அபூர்வைச்வர்யகாமர்களென்றும் சொல்லப்படுவர்.) இவ்விருவகுப்பினரையும் இப்பாட்டில் அழைக்கிறார். இவ்வர்த்தம் இப்பாட்டில் எங்ஙனே தெரிகின்றதென்றால்; கேண்மின்;—"அண்ட குலத்துக்கதிபதியான இருடீகேசனுக்குத் தொண்டகுலத்திலுள்ளீர்!" என்றும் 'அசுரரிராக்கதரை இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த இருடீகேசனுக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர்!' என்றும் விளியை இரண்டாகப் பகுத்துக்கொள்க. அண்டங்களுக்கு அதிபதியாயிருக்கை ஐச்வரியத்துக்கு முடிவெல்லையாயிருப்பதால், புதிதான ஐச்வரியத்தைப் பெற விரும்புகிற அதிகாரிகள் அப்படிப்பட்ட அண்டாதிபதித்வத்தைப் பெறவிரும்பி அந்தவிருப்பம் வெளிப்படும்படி "அண்டாதிபதயே நம:, "அண்டாதிபதயே நம:" என்று எப்போதும் உருப்போடுவர்கள்; அந்த அதிகாரிகளை யழைக்கிறாரென்பது முதல் விளியால் விளங்கும்; ஏற்கெனவேயிருந்த செல்வத்தை அஸுரராக்ஷஸாதிகள் போன்ற சத்துருக்கள் அபஹரித்துக் கொண்டதனால் அச்செல்வத்தை மறுபடியும் ஸம்பாதித்துக்கொள்ள விரும்புமவர்கள் அந்தவிருப்பம் வெளிப்படும்படி "அஸுரசத்ரவே நம:, அஸுரசத்ரவே நம:" என்று உருப்போடுவர்கள்; அந்த அதிகாரிகளை அழைக்கிறாரென்பது இரண்டாம் விளியால் விளங்கும்.

அண்டமாவது—உலகவுருண்டை; அது அளவற்றதாகையாலே 'அண்டக்குல'மென்கிறது. அதுக்கு அதிபதியென்று எம்பெருமானைச் சொல்வது கருத்துடன் கூடியதாகும்; உன்னைப் போலே நாங்களும் அண்டாதிபதியாக வேணுமென்று தெரிவித்துக்கொண்டபடி.

இண்டைக்குலம்—நெருக்கமான கூட்டம் என்றபடி. 'இண்டக்குலம்' என்று பாடமாகில், "இண்டர்—குலம்" என்று பிரியும்; அஸுரராக்ஷஸர்களாகிற சண்டாளருடைய கூட்டத்தை என்றபடி. இருடீகேசன்—ஹ்ருஷீகேசன்; இந்திரியங்களை அடக்கியாள்பவன் என்கை, தொண்டர் = குலம்; தொண்டக்குலம். (5)

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்துவழிவழியாட்செய்கின்றோம் திருவோணத் திருவிழவில்*
*அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை**
பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (6)

எந்தைதந்தை தந்தைதந்தைதம் மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி வந்து வழி வழி ஆள் செய்கின்றோம்; திரு ஓணம் திரு விழவில் அந்தி அம் போதில் அரி உரு ஆகி அரியை அழித்தவனை பந்தனை தீர பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாடுதும்.

(அநந்யப்ரயோஜநரான நாங்கள்)
என் பிதாவும் அவருடைய பிதாவும் அவருடைய பிதாவும் அவருடைய பிதாவும் அவருடைய பாட்டனுமாகிய ஏழு தலைமுறையாக (உரிய காலங்களில்) வந்து முறை தப்பாமல் கைங்கரியம் பண்ணுகிறோம்; ச்ரவண நக்ஷத்ரமென்கிற திருநாளிலே அழகிய ஸாயம் ஸந்தியா காலத்தில் நரஸிம்ஹ மூர்த்தியாய்த் தோன்றி ஆச்ரிதனான ப்ரஹ்லாதனுக்குப் பகைவனான இரணியனைக் கொன்றொழித்த பெருமானுக்கு (அன்றைய) அனுக்கம் தீரும்படியாக மங்களாசாஸநம் செய்வோம்.

*** —"வாழாட்பட்டு" என்கின்ற பாசுரத்தில் அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களை யழைத்தாரன்றே; அழைக்கும்போது "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்" என்று தம்முடைய பெருமையைச் சொல்லி யழைத்தார். அப்படி அழைக்கப்பட்ட அநந்யப்ரயோஜநர்கள் 'நாங்களும் உம்மைப் போலவே ஏழுதலைமுறையாக அடிமை செய்கிறவர்கள்' என்று தங்களுடைய பெருமையையும் எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறவர்களென்கிற தங்களுடைய தினசரியையும் சொல்லிக் கொண்டு வந்து சேர்ந்ததாக இப்பாசுரம் அருளிச் செய்யப்படுகிறது. ... (6)

*தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின்**
*கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று குடிகுடியாட்செய்கின்றோம்**
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
*பாய*சுழற்றியவாழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே* (7)

தீயின் பொலிகின்ற செம் சுடர் திகழ் திரு சக்கரத்தின் கோயில் ஆழி பொறியாலே ஒற்றுண்டு நின்று குடி குடி ஆள் செய்கின்றோம்; மாயம் பொரு படை வாணனை ஆயிரம் தோளும் பொழி குருதி பாய சுழற்றிய ஆழி வல்லானுக்கு பல்லாண்டு கூறுதும்.

(சந்திரன் ஸூர்யன் அக்நி முதலிய) சுடர்ப்பொருள்களெல்லாவற்றையும்விட பிரபலமாகப் பிரகாசிப்பதும் சிவந்த ஒளியோடு கூடி விளங்குவதுமான திருவாழியாழ்வான் எழுந்தருளியிருக்கிற ஸ்தானமாகிய வட்டவடிவமான அடையாளத்தினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாயிருந்து அநாதிஸந்தானமாக (எம்பெருமானுக்குக்) கைங்கரியம்செய்து வருகின்றோம்; (அதுவும் தவிர) க்ருத்ரிம யுத்தம் செய்பவனும் சேனைகளையுடையவனுமான பாணாஸுரனுடைய ஆயிரந் தோள்களினின்றும் வெளிக்கிளம்புகிற ரக்தமானது வெள்ளமாகப் பாய்ந்தோடும்படி திருக்கையிலே சுழலச்செய்த சக்ராயுதத்தை ஆளவல்ல எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்வோம்.

*** —"ஏடு நிலத்தில்" என்னும் பாசுரத்தில் கைவல்யார்த்திகளை அழைத்தாரன்றே! அழைக்கும் போது "கூடுமனமுடையீர்கள்" ... "நாடுநகரமும் நன்கறிய" என்று உங்களுடைய நன்மையை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி நீங்கள் வரவேணுமென்று ஒரு வார்த்தை சொன்னார்; அவர்களும் அப்படியே வரவேணுமென்று நிச்சயித்து 'சங்கு சக்க்ரங்களாலே திருவிலச்சினை செய்துகொள்வது நல்ல உபாயம்' என்று அதைச் செய்துகொண்டு அடிமை செய்பவர்களாய் பாணாஸுரயுத்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அடிமைசெய்த திருவாழியாழ்வானுக்கும் அடிமைகொண்ட ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் அக்காலத்தில் மங்களாசாஸநம் செய்யப்பெறாத குறைதீர மங்களாசாஸநம் செய்பவர்களாக ஆய்விட்டோம் என்று தாங்கள் குடும்பமாகத் திருந்தினபடியைச் சொல்லிக் கொண்டு வந்தார்களாக அருளிச் செய்யும் பாசுரம் இது. (7)

*நெய்யெடைநல்லதோர்சோறும் நியதமுமத்தாணிச்சேவகமும்**
*கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும்**
*மெய்யிடநல்லதோர்சாந்தமுந்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல**
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (8)

நெய் எடை நல்லது ஓர் சோறும் நியதமும் அத்தாணி சேவகமும் கை அடைக்காயும் கழுத்துக்கு பூணொடு காதுக்கு குண்டலமும் மெய் இட நல்லது ஓர் சாந்தமும் தந்து என்னை வெள் உயிர் ஆக்க வல்ல பை உடை நாகம் பகை கொடியானுக்கு பல்லாண்டு கூறுவன்.

நெய்யோடு ஸமமான நிறையையுடையதாய் போக்யமாய் விலக்ஷணமான ப்ரஸாதத்தையும் எப்போதும் பிரியாமல் கூடவேயிருந்து செய்கிற ஸேவக வ்ருத்தியையும் திருக்கையால் ப்ரஸாதிக்கும் தாம்பூலத்தையும் கழுத்தில் தரித்துக் கொள்ளவேண்டிய ஆபரணத்தையும் காதில் இட்டுக்கொள்ள வேண்டிய குண்டலத்தையும் உடம்பில் பூசிக்கொள்ளும்படி சிறந்த சந்தனத்தையும் (ரஜஸ்தமோ குணங்களால் ஐச்வரியத்தை விரும்பின என்னுடைய விருப்பத்தின்படியே) கொடுத்து இப்படி ஸம்ஸாரியாய்க் கிடந்த என்னை சுத்தஸாத்விகனாகச் செய்தருளினவனும் படத்தையுடைய பாம்புக்கு விரோதியான கருடனைக் கொடியாக வுடையனுன எம்பெருமானுக்கும் மங்களாசாஸநம் பண்ணுவேன்.

* * *—"அண்டக்குலத்துக்கதிபதியாகி" என்னும் பாசுரத்தில் ஐச்வர்யார்த்திகளை அழைத்தாரே; அவர்கள்தாம் எம்பெருமானிடத்தில் சில ஐச்வர்யங்களைப் பெற்றுக்கொண்டு திருந்தி மங்களாசாஸநத்துக்கு ஸித்தராக வந்தபடியைச் சொல்லிக் கொள்ளுகிறார்களாக அருளிச் செய்வது இந்தப்பாசுரம். கீழ்ப்பாசுரங்களிற்போல இதில் பன்மையின்றியே "பல்லாண்டு கூறுவன்" என்று ஒருமையாகப் பிரயோகமிருப்பதற்குக் காரணம் கேண்மின்;—உலகத்தில் அநந்ய ப்ரயோஜநர்களுடைய கூட்டமும் கைவல்யார்த்திகளுடைய கூட்டமும் மிகவும் ஸ்வல்பமாயிருக்குமாகையாலே அந்தக் கூட்டங்களிலுள்ள நாலைந்து பேர்கள் பேசினதாகக்கொண்டு அவர்களது பாசுரங்களில் "பல்லாண்டு பாடுதுமே" என்றும் "பல்லாண்டு கூறுதுமே" என்றும் பஹுவசந ப்ரயோகம் பண்ணப்பட்டது. ஐச்வர்யார்த்திகளான இவர்களுடைய கூட்டம் அப்படி ஸ்வல்பமாயிராமல், அளவற்றிருக்குமாகையால், ஒரு பெரிய கூட்டத்துக்கெல்லாம் ஒருவன் பிரதானனாய் நின்று பேசுவது வழக்கமாகையால் அப்படியே இங்கும் ஒருவன் பேசுவதாக வைக்கப்பட்டது. மேல் "அல்வழக்கொன்றுமில்லா" என்கிற பாட்டிலுள்ள ஏகவசநத்துக்கும் இதுவே ஸமாதாநம்.

உலகத்தார்க்கு வேண்டிய பதார்த்தங்கள் மூன்று விதம்—தாரகம், போஷகம், போக்யம் என. அன்னம் தாரகம்; நெய் பால் தயிர் முதலானவை போஷகம்; சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியவை போக்யம். ஆக இந்தப்பதார்த்தங்கள் ஒருவனுக்குப் போதுமானவை கிடைத்தால் அவ்வளவில் த்ருப்தி பெற ப்ராப்தம். ஊர்ப்பட்ட அண்டாதிபத்தியமெல்லாம் வேணுமென்று விரும்புவது பகவத் விபூதியை யெல்லாம் தன்னதாக்கிக்கொண்டு அநர்த்தப் படுவதற்கே காரணமாகும். ஆகையால் ஸ்வரூபஜ்ஞாநமில்லாமல் அண்டாதிபத்யம் அளிக்கவேணுமென்று நாங்கள் எம்பெருமானைப் பிரார்த்தித்தாலும் அவன் பரமக்ருபாளுவாய் எங்களை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் பற்றி எங்களுக்கு உசிதமாய் வேண்டியவளவு தாரக-போஷக-போக்ய வஸ்துக்களைக் கொடுத்து இனிமேலாவது எங்களுக்கு நல்லபுத்தி யுண்டாகும்படி குளிரக் கடாக்ஷித்து "ஐச்வரியம் த்யாஜ்யம், பகவத்கைங்கர்யமே புருஷார்த்தம்" என்னும் அத்யவஸாயத்தைப் பிறப்பித்து எங்களை சுத்தஸ்வரூபராக ஆக்கினான். அப்படிப்பட்ட எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுவோம் நாங்கள்—என்று ஐச்வர்யார்த்திகள் சொல்லுவதாக இந்தப் பாசுரம் உள்ளது.

"நெய் எடை" என்றும் "நெய் இடை" என்றும் பாடபேதமுண்டு; முந்தின பாடத்தில், நெய் பாதி சோறு பாதியாய் இரண்டும் அளவொத்திருக்கு மென்கை,

ஒரு வீசைச் சோற்றுக்கு ஒரு வீசை நெய் சேர்ப்பதென்றால் இதனில் விஞ்சிய நல்ல சோறு இல்லையன்றோ, “நெய்யிடை” என்ற பாட்டில், நெய்யின் நடுவே உள்ள சோறு என்ற பொருளாய் நெய்யின் அளவு அதிகமாயும் ப்ரஸாதத்தினளவு அல்பமாயுமிருக்கு மென்கை.

அத்தாணிச் சேவகமாவது—ஆஸ்தாநஸேவகம்; எம்பெருமானிருக்கு மிடத்தில் கூடவேயிருந்து கொண்டு பிரியாமல் நின்று செய்கிற கைங்கரியம். ஐச்வர்யார்த்தியானவன் சொல்லுகிற இந்தப்பாசுரத்தில் “அத்தாணிச் சேவகமும் தந்து” என்று எங்ஙனே சொல்லலாம்? அநந்யப்ரயோஜநனுக்கன்றோ அத்தாணிச் சேவகமுள்ளது; சோறு அடைக்காய் பூண் குண்டலம் ஆகிய இவற்றைத்தந்து என்பது சேருமேயொழிய அத்தாணிச் சேவகமும் தந்ததாகச் சொல்லுகிறது சேராதே யென்னில்; ஐச்வர்யார்த்தியா யிருந்தாலும் பகவத் க்ருபையாலேதிருந்தி அநந்யப்ரயோஜநனாய் வந்தமை தோற்றும்படியாகச் சொல்லுகிற பாசுரமாகையாலே சேருமென்க. நான் அபேக்ஷித்த ஜீவநத்தை மாத்திரம் கொடுத்து விடாமல் உஜ்ஜீவநத்தையுமுண்டாக்கி என்னைப் பரிசுத்தாத்மாவாகச் செய்தானே! என்று ஸந்தோஷித்துச் சொல்லுகிற பேச்சு. (8)

உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு*
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்*
விடுத்ததிசைக்கருமந்திருத்தித் திருவோணத்திருவிழவில்*
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (9)

உடுத்து களைந்த நின் பீதகவாடை உடுத்து கலத்தது உண்டு, சூடி களைந்தன தொடுத்த துழாய்மலர் சூடும் இத்தொண்டர்களோம்; விடுத்த திசை கருமம் திருத்தி, படுத்த பை நாகம் அணை பள்ளி கொண்டானுக்கு திரு ஓணம் திரு விழவில் பல்லாண்டு கூறுதும்.

(எம்பெருமானே!) தேவரீர் அரையில் சாத்திக்கொண்டு கழித்துவிட்ட தேவரீருடைய பீதாம்பரத்தை உடுத்துக் கொண்டும், தேவர் அமுதுசெய்த பாத்திரத்தில் மிகுந்திருப்பதை புஜித்தும், தேவர் சாத்திக்கொண்டு களைந்தவைகளான தொடுக்கப்பட்டுள்ள திருத்துழாய் மலர் மாலைகளைச் சூட்டிக் கொள்ளுகிறவர்களாய் இப்படிப்பட்ட தாஸர்களான நாங்கள்,—தேவரீர் ஏவியனுப்பிய திக்கிலே ஆகவேண்டிய காரியங்களை ஒழுங்காகச்செய்து, கீழே பரப்பிய படத்தையுடைய பாம்பாகிற படுக்கையில் சயனித்திருக்கிற தேவரீருக்குத் திருவோணத் திருநாளிலே மங்களாசாஸநம் செய்வோம்.

* * * “வாழாட்பட்டு” என்னும் பாசுரத்தில் அழைக்கப்பட்டு “எந்தை தந்தை தந்தை” என்னும் பாசுரத்தால் தங்கள் வ்ருத்தியைச் சொல்லிக்கொண்டு வந்துசேர்ந்த அநந்யப்ரயோஜநர்கள் தாம் எம்பெருமானை நோக்கிப் பல்லாண்டு பாடும்படியை அருளிச்செய்வது இப்பாட்டு. “நின் பீதகவாடை” என்று முன்னிலையாகச் சொல்லியிருப்பதால் இந்தப்பாசுரம் எம்பெருமானையே நோக்கி அவர்கள் சொல்லுவதாக நன்கு விளங்கும். கீழே ஆழ்வாரால் அழைக்கப்பட்ட மூவகை அதிகாரிகளும் வரிசையாக ‘எந்தை தந்தை’ ‘தீயிற்பொலிகின்ற’ ‘நெய்யெடை நல்லது’ என்னும் பாசுரங்கள் சொன்னது ஆழ்வாரை நோக்கிச் சொன்னதாம். இனி, ‘உடுத்துக்களைந்த’ ‘எந்நாளெம்பெருமான்’ ‘அல்வழக்கொன்று மில்லா’ என்கிற மூன்று பாசுரங்களும்—அவர்கள் எம்பெருமானையே ஸாக்ஷாத்தாக நோக்கிச் சொல்வதாம். மேலிரண்டு பாசுரங்களில் எம்பெருமானுடைய விளி வ்யக்தமாகவுள்ளது; இப்பாசுரத்தில் அப்படி வ்யக்தமாக இல்லாவிடினும் “நின் பீதகவாடை” என்கிற சொல்லாற்றலால் வ்யக்தமாகிறது. (9)

எந்நாளெம்பெருமான் உன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
*வந்நாளே * அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுய்ந்ததுகாண் **
*செந்நாள்தோற்றித் திருமதுரையுட்சிலைகுனித்து * ஐந்தலைய*
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (10)

எம்பெருமான் உன்தனக்கு அடியோம் என்று எழுத்து பட்ட நாள் எந்நாள் அந்நாளே அடியோங்கள் அடி குடில் வீடு பெற்று உய்ந்தது காண்; செம் நாள் தோற்றி திரு மதுரையுள் சிலை குனித்து ஐந் தலைய பை நாகம் தலை பாய்ந்தவனே உன்னை பல்லாண்டு கூறுதும்.

ஸ்வாமிந் ! தேவரீர்க்கு நாங்கள் அடிமைப்பட்டவர்களென்ற சொல்லானது எங்களுடைய வாயில் உண்டாகப்பெற்ற நாள் எந்த தினமோ, அந்ததினம் முதலாகவே அடியோங்களுடைய அடிமைப்பட்ட ஸந்தானமெல்லாம் நல்ல கதியை யடைந்து உஜ்ஜீவித்து விட்டது ; நல்ல நக்ஷத்திரத்திலே திருவவதரித்து அழகிய வடமதுரையிலே (கம்ஸனுடைய ஆயுத சாலையில் புகுந்து) வில்லை வளைத்து முறித்து ஐந்து தலைகளையுடைய படத்தோடு கூடின காளிய நாகத்தினுடைய தலைமேலே குதித்தவனே ! தேவரீருக்கு மங்களாசாஸநம் செய்வோம்.

* * *—"ஏடு நிலத்தில்" என்கிற பாசுரத்தில் அழைக்கப்பட்டு "தீயிற் பொலிகின்ற" என்னும் பாசுரத்தால் தாம் திருந்தினபடியைச் சொல்லிக்கொண்டு வந்து சேர்ந்த கைவல்யார்த்திகள் எம்பெருமானை நோக்கி மங்களாசாஸநம் பண்ணுகிறபடியைச் சொல்வது இந்தப் பாசுரம்.

எம்பெருமானே ! நாங்கள் கைவல்ய புருஷார்த்த ப்ராப்திக்கு ஸாதகமாக "ஓம், நம:" முதலிய சொற்களைச் சொல்லிக்கொண்டு தேவரீரை பஜநம் பண்ணினோம் ; தேவரீர் எங்களைக் கடாக்ஷித்து நாங்கள் மீட்சியற்ற கைவல்யத்தை யடைந்து கெட்டுப் போகாதபடி அருள்புரிந்து நல்லபுத்தியை யுண்டாக்கினபடியால் அடியோங்கள் இப்போது திருந்தி தேவரீருக்குப் பல்லாண்டு பாடுகிறவர்களாக ஆய் விட்டோ மென்கிறார்கள். (10)

*அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்*
*செல்வனைப்போலத் திருமாலேநானுமுனக்குப்பழவடியேன் **
*நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி **
பல்வகையாலும்பவித்திரனே உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (11)

திருமாலே அல்வழக்கு ஒன்றும் இல்லா அணி கோட்டியர் கோன் அபிமானம் துங்கன் செல்வனை போல நானும் உனக்கு பழ அடியேன்; பல் வகையாலும் பவித்திரனே நல்வகையால் நமோ நாராயணா என்று பல நாமம் பரவி உன்னை பல்லாண்டு கூறுவன்.

ச்ரியப்பதியே ! அநீதிகள் ஒன்றுமில்லாமலிருக்கிற அழகிய திருக்கோட்டியூரிலுள்ளவர்களுக்குத் தலைவரும் ஸ்ரீவைஷ்ணவாபிமாநத்தால் சிறந்தவருமான செல்வநம்பியைப் போலவே நானும் தேவரீருக்குப் பழமையான தாஸனாய் விட்டேன் ; எல்லாவிதங்களாலும் பரிசுத்தனான பெருமானே ! அடியேனுக்கு நன்மையுண்டாகும்படி திருமந்திரத்தை அநுஸந்தித்து (தேவரீருடைய) அனேக திருநாமங்களைச் சொல்லி யேத்தி தேவரீருக்கு மங்களாசாஸநம் பண்ணுவேன்.

* * *—"அண்டக்குலத்துக்கு" என்னும் பாசுரத்தாலே அழைக்கப்பட்டு "நெய்யிடை" என்னும் பாசுரத்தால் தாங்கள் திருந்தினபடியைச் சொல்லிக் கொண்டுவந்த ஐச்வர்யார்த்திகள் எம்பெருமானை நோக்கி மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள் இதில. ஐச்வர்யார்த்திகள் எண்ணிறந்தவர்களாகையாலே அவர்களுள் ஒருவன் சொல்லுகிறானென்று "நெய்யிடை" என்கிற பாசுரத்தில் "கூறுவனே" என்று ஏகவசநப்ரயோகம் பண்ணினதுபோலவே இதிலும் கொள்வது. (11)

*பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்*
*வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் **
*நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று **
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (12)

பவித்திரனை பரமேட்டியை சார்ங்கம் என்னும் வில் ஆண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் பல்லாண்டு என்று விரும்பிய சொல் நல் ஆண்டு என்று நவின்று உரைப்பார் பரமாத்மனை சூழ்ந்து இருந்து நமோநாராயணாய என்று பல் ஆண்டும் பல்லாண்டு ஏத்துவர்.

பரிசுத்தனும் பரமபத நிலயனும் ஸ்ரீசார்ங்கமென்கிற தநுஸ்ஸை அடக்கி ஆள்பவனுமான எம்பெருமானை ஸ்ரீ வில்லிபுத்தூரிற் பிறந்த பெரியாழ்வார் ஆதரத்தோடு சொன்ன சொல்லாகிய இப்பிரபந்தத்தை, நமக்கு நல்ல காலம் வாய்த்ததென்று (மகிழ்ந்து) ஸர்வதா அநுஸந்திப்பவர்கள் ஸ்ரீமந் நாராயணனை சுற்றும் சூழ்ந்துகொண்டு நமோ நாராயணாய என்று; எப்போதும் மங்களாசாஸநம் பண்ணப் பெறுவர்கள்.

** * *—பரமபதத்திலெழுந்தருளியிருப்பவனாய் நித்யபரிசுத்தனாய்ப் பஞ்சாயுதங்களைத் தரித்துக்கொண்டிருப்பவனான ஸர்வேச்வரன் விஷயத்தில் பெரியாழ்வார் பொங்கும் பரிவாலேபாடின இத்திருப்பல்லாண்டு திவ்ய ப்ரபந்தத்தை, நமக்கு நல்ல காலம் வந்துவிட்டதென்கிற கொண்டாட்டத்துடன் இவ்விபூதியில் எஞ்ஞான்றும் பாடுகிறவர்கள் மறுமையில் மோக்ஷலோகத்தையடைந்து அங்கும் எம்பெருமானுடைய முகோல்லாஸத்தையே புருஷார்த்தமாக நினைத்து அநேக தேஹங்களை எடுத்துக்கொண்டு அப்பெருமானுடைய நான்கு பக்கங்களிலும் இருந்துகொண்டு மங்களாசாஸநம் பண்ணப் பெறுவர்களென்று இதனால் பலன்சொல்லித் தலைகட்டிற்றாயிற்று.* (12)

அடிவரவு :—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[*ஆதி கூறுதும், அநந்தரம் கூறுமின், அண்டம் என்மின், எந்தை பாடுதும், தீ உடுத்து எந்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.*]

பெரியாழ்வார் திருவடிகளேசரணம்
திருப்பல்லாண்டு முற்றிற்று.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

தனியன் உரை

(திருமாலையாண்டான் அருளிச்செய்தது.)

தமேவ மத்வா பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்:
ப்ராபோதிகீம் யோக்ருத ஸூக்திமாலாம் பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

ய: பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவத் அர்ஹணீயமேவ மத்வா ப்ராபோதிகீம் ஸூக்திமாலாம் அக்ருத, தம் பகவந்தம் பக்தாங்க்ரி ரேணும் ஈடே.

யாவரொரு ஆழ்வார் பரவாஸுதேவ மூர்த்தியான பெரிய பெருமாளை ராஜோபசார யோக்யராக நினைத்து திருப்பள்ளியுணர்த்துமதான திவ்யப்ரபந்தத்தை அருளிச் செய்தாரோ (அப்படிப்பட்ட) ஞானம் முதலிய குணங்கள் அமைந்த தொண்டரடிப் பொடியாழ்வாரைத் துதிக்கின்றேன்.

திருப்பள்ளியெழுச்சி

(திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.)

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயல்தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்த வூர்.

வண்டு திணர்த்த வயல் தென் அரங்கத்து அம்மானை பள்ளி உணர்த்தும் பிரான் தொண்டரடிப் பொடி உதித்த ஊர் மா மறையோர் மன்னிய சீர் மண்டங்குடி தொல் நகரம் என்பர்

வண்டுகளானவை நெருங்கிப் படிந்திருக்கப்பெற்ற கழனிகள் சூழ்ந்த அழகிய திருவரங்கத்தில் (கண்வளர்ந்தருள்கிற) பெரிய பெருமாளைத் திருப்பள்ளியுணர்த்துமவராய்ப் பரமோபகாரகராய் "தொண்டரடிப்பொடி" என்னும் திருநாமமுடையரான ஆழ்வார் திருவவதரித்த திவ்ய தேசமாவது—, சிறந்த வைதிகர்கள் பொருந்தி வாழ்தற்கிடமான சீர்மையையுடைய 'திருமண்டங்குடி' என்கிற அநாதியான நகரமாகும் என்று பெரியோர் கூறுவர்.

தனியனுரை முற்றிற்று.

*கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான் கனவிருளகன்றதுகாலையம்பொழுதாய் **
*மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம் வானவரரசர்கள்வந்துவந்தீண்டி **
*எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும் **
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும் அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (1)

அரங்கத்து அம்மா கதிரவன் குண திசை சிகரம் வந்து அணைந்தான்; கனம் இருள் அகன்றது; அம் காலை பொழுது ஆய் மாமலர் எல்லாம் விரிந்து மது ஒழுகின; வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி எதிர் திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த இரு களிறு ஈட்டமும் பிடியொடு முரசும் அதிர்தலில் எங்கும் அலை கடல் போன்று உளது; பள்ளி எழுந்தருளாய்,

திருவரங்கத்தில் பள்ளிகொண்டருளும் ஸ்வாமியே! ஸூர்யனவன் கிழக்குத் திக்கிலே (உதயகிரியின்) கொடுமுடியிலே வந்து கூடினன்; (இரவில்) அடர்ந்திருந்த இருளானது நீங்கியொழிந்தது; அழகிய காலைப் பொழுதுவர, சிறந்த புஷ்பங்களெல்லாம் விகாஸமடைய தேன் வெள்ள மிடா நின்றன; தேவர்களும் ராஜாக்களும் ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து திரண்டு திருக்கண்ணோக்கான தெற்கு திக்கிலே நிறைந்துநின்றார்கள்; இவர்களோடு கூடவந்த (இவர்களது வாஹநமாகிய) பெரிய ஆண்யானைத் திரள்களும் பெண் யானைத் திரள்களும் பேரிவாத்யங்களும் சப்திக்கும்போது எத்திசையும் அலையெறியாநின்ற ஸமுத்ர கோஷத்தையொத்திருந்தது; (ஆதலால்) திருப்பள்ளியைவிட்டு எழுந்திருக்கவேணும்.

*கொழுங்கொடிமுல்லையின்கொழுமலரணவிக் கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ **
*எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம் ஈன்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி **
*விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய் வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி **
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (2)

குணதிசை மாருதம் கொழு கொடி முல்லையின் கொழுமலர் அணவி இதுவோ கூர்ந்தது; மலர் அணை பள்ளிகொள் அன்னம் ஈன் பனி நனைந்த தம் இரு சிறகு உதறி எழுந்தன; விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ் வாய் வெள் எயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி அழுங்கிய ஆனையின் அரு துயர் கெடுத்த அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்.

கீழ் காற்றானது செழுமை தங்கிய கொடியையுடைத்தான முல்லைச் செடியிலுண்டான அழகிய மலர்களை அணைந்துகொண்டு இதோ வீசாநின்றது; புஷ்பசயநத்திலே உறங்குகின்ற ஹம்ஸங்களானவை, (மழைபோல்) சொரிகிற பனியாலே நனைந்த தங்களுடைய அழகிய சிறகுகளை உதறிக்கொண்டு உறக்கம் விட்டெழுந்தன; (தன்காலை) விழுங்கின முதலையினுடைய பாழிபோன்ற பெரிய வாயிலுள்ள வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற அம்முதலையினுடைய பல்விஷத்திற்கு மிகவும் நோவுபட்ட கஜேந்திராழ்வானுடைய பெரிய துக்கத்தைப் போக்கியருளின அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்.

*சுடரொளிபரந்தனசூழ்திசையெல்லாம் துன்னியதாரகைமின்னொளிசுருங்கி **
*படரொளிபசுத்தனன்பனிமதியிவனோ பாயிருளகன்றதுபைம்பொழிற்கமுகின் **
*மடலிடைக்கீறிவண்பாளைகள்நாற வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ **
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (3)

சூழ்திசை எல்லாம் சுடர் ஒளி பரந்தன; துன்னிய தாரகை மின் ஒளி சுருங்கி படர் ஒளி பனி மதி இவன் பசுத்தனன்; பாய் இருள் அகன்றது; வைகறை மாருதம் இது பைம் பொழில் கமுகின் மடலிடை கீறி வண் பாளைகள் நாற கூர்ந்தது; அடல் ஒளி திகழ்தரு திகிரி அம் தடகை அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

கண்டவிடமெங்கும் ஸூர்ய கிரணங்களானவை பரவிவிட்டன; (ஆகாசத்தில்) நெருங்கிய நக்ஷத்திரங்களினுடைய மிக்க தேஜஸ்ஸானது குறைவுப்பட்டது மன்றி மிக்க ஒளியையுடைய இக்குளிர்ந்த சந்திரனும் ஒளிமழுங்கினான்; பரந்த இருட்டானது நீங்கிற்று; இந்த விடியற்காற்றானது பசுமை தங்கிய சோலைகளிலுள்ள பாக்குமரங்களினுடைய மடலைக்கீற (அத்தாலே) அழகிய பாளைகளானவை பரிமளிக்க (அப்பரிமளத்தை முகந்துகொண்டு) வீசாநின்றது; பெருத்த மிடுக்கையுடைத்தாய் தேஜஸ்ஸு விளங்கா நின்றுள்ள திருவாழியாழ்வானை அழகிய பெரிய திருக்கையிலேயுடைய அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்.

*மேட்டிளமேதிகள்தளைவிடுமாயர்கள் வேய்ங்குழலோசையும்விடைமணிக்குரலும் **
*ஈட்டியவிசைதிசைபரந்தனவயலுள் இரிந்தனசுரும்பினமிலங்கையர்குலத்தை **
*வாட்டியவரிசிலைவானவரேறே! மாமுனிவேள்வியைக்காத்து * அவபிரதம்*
ஆட்டியவடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. (4)

மேடு இள மேதிகள் தலை விடும் ஆயர்கள் வேய்ங்குழல் ஓசையும் விடை மணி குரலும் ஈட்டிய இசை திசை பரந்தன; வயலுள் சுரும்பு இனம் இரிந்தன; இலங்கையர் குலத்தை வாட்டிய வரி சிலை வானவர் ஏறே மாமுனி வேள்வியை காத்து அவபிரதம் ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே அரங்—அருளாயே.

உயர்த்தியும் இளமையும் தங்கிய எருமைகளை (மேய்கைக்குக்) கட்டவிழ்த்து விடுகிற இடையர் (ஊதுகிற) புல்லாங்குழலின் நாதமும் எருதுகளின் (கழுத்திற்கட்டியுள்ள) மணிகளினுடைய ஓசையும் (ஆகிய) இவ்விரண்டும் கூடின த்வநியானது திக்குகளெங்கும் பரவி விட்டது; கழனிகளிலுள்ள வண்டுகளின் திரள் ஆரவாரித்துக்கொண்டு கிளம்பின; ராக்ஷசவர்க்கத்தை உருவழித்த அழகிய சார்ங்கத்தையுடைய தேவாதிதேவனே! விச்வாமித்ர மஹர்ஷியினுடைய யாகத்தை நிறைவேற்றுவித்து அவப்ருதஸ்நாநம் செய்வித்தருளின (விரோதிகளை) ஒழிக்க வல்ல மிடுக்கையுடையனாய் அயோத்தியாபுரியை ஆளுகையாலே எங்களுக்கு ஸ்வாமியானவனே! அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்.

*புலம்பினபுட்களும்பூம்பொழில்களின்வாய் போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி **
*கலந்ததுகுணதிசைக்கனைகடலரவம் களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த **
*அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவான் அமரர்கள்புகுந்தனராதலிலம்மா! **
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில் எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. (5)

பூ பொழில்களின் வாய் புட்களும் புலம்பின கங்குல் போயிற்று புலரி புகுந்தது குணதிசை கனை கடல் அரவம் கலந்தது களி வண்டு மிழற்றிய கலம்பகன் புனைந்த அம் அலங்கல் தொடையல் கொண்டு அமரர்கள் அடி இணை பணிவான் புகுந்தனர் ஆதலில் அம்மா இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்...

பூத்திராநின்றுள்ள சோலைகளிலுள்ள பறவைகளும் (உணர்ந்து) அரவாரஞ்செய்யாநின்றன; இரவானது கழிந்தது; ப்ராத: காலமானது வந்தது; கீழ்த்திசையிலே கோஷஞ்செய்கிற கடலினுடைய ஓசையானது வியாபித்தது: தேனைப்பருகிக் களிக்கின்ற வண்டுகளானவை சப்தியாநிற்கிற பலவகைப் பூக்களாலே தொடுக்கப்பட்ட அழகிய அலங்கல்மாலைகளை ஏந்திக்கொண்டு தேவர்கள் (தேவரீருடைய) திருவடியிணைகளில் பணிமாறுகைக்காக வந்து நின்றனர்; ஆகையாலே, ஸர்வஸ்வாமிந்! லங்கேச்வரனான வீபீஷணாழ்வான் தாஸ்வ்ருத்தி பண்ணப்பெற்ற கோயிலிலே (கண்வளர்ந்தருளுகிற) எம்பெருமான்! அஸ்மத்ஸ்வாமியே! பள்ளி எழுந்தருளாயே—.



தொண்டரடிப்பொடியாழ்வார்

மன்னியசீர்மார்கழியில் கேட்டையின்றுமாநிலத்தீர்*
என்னிதனுக்கேற்றமெனிலுரைக்கேன் -* துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார்பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடும் நாள்.

திருப்பள்ளியெழுச்சி

*இரவியர்மணிநெடுந்தேரொடுமிவரோ இறையவர்பதினொருவிடையருமிவரோ **
*மருவியமயிலினனறுமுகனிவனே மருதரும்வசுக்களும்வந்துவந்தீண்டி **
*புரவியோடாடலும்பாடலும்தேரும் குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம் **
அருவரையனையநின்கோயில்முன்னிவரோ அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

மணி நெடு தேரொடும் இரவியர் இறையவர் பதினொரு விடையரும் மருவிய மயிலினன் அறுமுகன் மருதரும் வசுக்களும் வந்து வந்து ஈண்டி புரவியோடு தேரும் பாடலும் ஆடலும் குமரதண்டம் புகுந்து ஈண்டியவெள்ளம் அரு வரை அனைய கோயில் நின் முன்...

விலக்ஷணமாய் பெரிதான தேரோடுகூட பன்னிரண்டுஆதித்தர்களும் ஜகத்துக்கு நிர்வாஹகர்களான ஏகாதச ருத்ரர்களும் பொருந்திய மயில்வாகனத்தையுடைய ஸுப்ரஹ்மண்யனும் மருத்கணங்களான ஒன்பதின்மரும் அஷ்டவசுக்களும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு வந்து நெருங்கி நிற்க (இவர்களுடைய வாஹநமான) குதிரைகள் பூண்ட ரதங்களும் பாட்டும் கூத்துமாய் தேவஸேநா ஸமூகங்கள் வந்து புகுந்து நெருங்கியிருக்கிற திரளானது பெரிய மலைபோன்ற கோயிலில் தேவரீர் திருக்கண்ணோக்கத்திலே (நிற்கின்றது;) அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே—.

*அந்தரத்தமரர்கள்கூட்டங்களிவையோ அருந்தவமுனிவரும்மருதருமிவரோ **
*இந்திரனானையும்தானும்வந்திவனே எம்பெருமானுனகோயிலின்வாசல் **
*சுந்தரர்நெருக்கவிச்சாதரர்நூக்க இயக்கரும்மயங்கினர்திருவடிதொழுவான் **
அந்தரம்பாரிடமில்லைமற்றிதுவோ அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (7)

எம்பெருமான் உன கோயிலின் வாசல் இந்திரன் தானும் ஆனையும் வந்து அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் அரு தவம் முனிவரும் மருதரும் இயக்கரும் சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க திருவடி தொழுவான் மயங்கினர் அந்தரம் பார் இடம் இல்லை...

எமக்கு ஸ்வாமியான தேவரீருடைய திருக்கோயிலின் வாசலிலே தேவேந்திரனும் (அவனது வாஹனமான) ஐராவத யானையும் வந்திருப்பதுமன்றி, அண்டத்துக்குள் இராநின்ற தேவர்களும் இவர்களுடைய பரிவாரங்களும் மஹாதபஸ்விகளான ஸநகாதி மஹர்ஷிகளும், மருக்கணங்களும், யக்ஷர்களும், கந்தர்வர் நெருக்கவும் வித்யாதரர்கள் தள்ளவும்(தேவரீருடைய) திருவடிகளைத் தொழுவதற்காக வந்து மயங்கி நின்றனர்; ஆகாசமும் பூமியும் அவகாசமற்றிரா நின்றது; அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாய்—.

*வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா**
*எம்பெருமான்படிமைக்கலங்காண்டற்கு ஏற்பனவாயினகொண்டுநன்முனிவர்**
*தும்புருநாரதர்புகுந்தனரிவரோ தோன்றினனிரவியும்துலங்கொளிபரப்பி**
அம்பரதலத்தில்நின்றகல்கின்றதிருள்போய் அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

வழங்க வம்பு அவிழ் வாயுறை மா நிதி வானவர் கபிலை ஒண் கண்ணாடி முதலா எம்பெருமான் காண்டற்கு ஏற்பன ஆயின படிமைக் கலம் கொண்டு நல் முனிவர் தும்புரு நாரதர் புகுந்தனர் இரவியும் துலங்கு ஒளி பரப்பி தோன்றினன் இருள் அம்பரதலத்தில் நின்று போய் அகல்கின்றது...

(தேவரீருக்கு) ஸமர்ப்பிப்பதற்காக பரிமளம் மிகுந்த அறுகம்புல்லும் சிறந்த சங்கநிதி பத்மநிதிகளும் (கையிலேயுடையராய்க் கொண்டு) தேவர்களும், காமதேநுவும் ஒளிபொருந்திய கண்ணாடி முதலாக, ஸ்வாமியான தேவரீர் கண்டருளுகைக்கு தகுதியாயுள்ளவையான உபகரணங்களெல்லாவற்றையுங் கொண்டு மஹர்ஷிகளும் தும்புரு நாரதர்களும் வந்து நின்றார்கள்; (இதுவுமன்றி) சூரியனும் (தனது) மிக்க தேஜஸ்ஸை எங்கும் பரவச்செய்து கொண்டு உதயமானான்; இருளானது ஆகாசத்தினின்றும் நீங்கிப்போயிற்று; அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாய்—,

*ஏதமில்தண்ணுமையெக்கம்மத்தளி யாழ்குழல்முழவமோடிசைதிசைகெழுமி**
*கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்கள் கெந்தருவருமிவர்கங்குலுமெல்லாம்**
*மாதவர்வானவர்சாரணரியக்கர் சித்தரும்மயங்கினர்திருவடித்தொழுவான்**
ஆதலிலவர்க்குநாளோலக்கமருள அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே. (9)

ஏதம் இல் தண்ணுமை எக்கம் மத்தளியாழ் குழல் திசை முழவமோடு இசை கெழுமி கீதங்கள் பாடினர் கின்னரர் கருடர்கள் கெந்தருவரும் இவர் மாதவர் வானவர் சாரணர் இயக்கர் சித்தரும் திருவடி தொழுவான் கங்குலும் எல்லாம் மயங்கினர் ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள...

குற்றமற்ற சிறுபறையும் ஒற்றைத் தந்தியையுடைய வாத்யமும் மத்தளமும் வீணையும் புல்லாங்குழல்களுமாய் திக்குக்களெங்கும் இவற்றின் முழக்கத்தோடு இசைமாட்டிப் பாட்டு பாடக் கடவரான கின்னரர்களும் கருடர்களும் கந்தர்வர்களும் இதோ மற்றுள்ளவர்களும் மஹர்ஷிகளும் தேவர்களும் சாரணர்களும் யக்ஷர்களும் ஸித்தர்களும் (தேவரீருடைய) திருவடிகளில் வணங்குகைக்காக இரவெல்லாம் (நெருக்கத்தில் வருந்தி) மோஹமுற்றனர்; ஆகையாலே அவர்களுக்கு பகலோலக்கமருளுகைக்காக அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்—.

*கடிமலர்க்கமலங்கள்மலர்ந்தனவிவையோ கதிரவன்கனைகடல்முளைத்தனனிவனோ**
*துடியிடையார்சுரிகுழல்பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கா **
தொடையொத்ததுளவமும் கூடையும்பொலிந்து தோன்றியதோள்தொண்டரடிப்பொடியென்னு
*மடியனை * அளியனென்றருளியுன்னடியார்க்காட்படுத்தாய்* **பள்ளியெழுந்தருளாயே.** (10)

புனல் சூழ் அரங்கா! கடி கமலம் மலர்கள் மலர்ந்தன; கதிரவன் கனை கடல் முளைத்தனன்; துடி இடையார் சுரி குழல் பிழிந்து உதறி துகில் உடுத்து ஏறினர்; தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடி யென்னும் அடியனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு ஆள் படுத்தாய் பள்ளி எழுந்தருளாய்.

திருக்காவேரித் தீர்த்தத்தாலே சூழப்பட்ட அரங்கத்தில் கண் வளர்ந்தருளுமவனே; பரிமளமுடைய தாமரைப்பூக்களானவை (நன்றாக) மலர்ந்து விட்டன; (தாமரையை மலர்த்தவல்ல) ஸூர்யனானவன் கோஷஞ் செய்கையையே இயல்வாகவுடைய கடலிலே உதயகிரியிலே வந்து தோன்றினான்; உடுக்கை போன்ற (சூக்ஷ்மமான) இடையையுடைய மாதர் (தமது) சுருண்ட மயிர்முடியை நீர்ப்பசையறப் பிழிந்து உதறி விட்டு (தம்தம்) ஆடைகளை உடுத்துக் கொண்டு கரையேறிவிட்டார்கள்; ஒழுங்காகத் தொடுக்கப் பெற்ற திருத்துழாய் மாலையும் பூக்குடலையும் விளங்கா நிற்கப்பெற்ற தோளையுடைய 'தொண்டரடிப்பொடி' என்ற பெயருடைய தாஸனை 'கிருபை பண்ணுகைக்கு உரிய பாத்திரம்' என்று திருவுள்ளம்பற்றி அங்கீகரித்தருளி தேவரீருடைய நித்யகிங்கரர்களான பாகவதர்களுக்கு ஆளாக்கவேணும்; (அதற்காக) திருப்பள்ளியை விட்டு எழுந்தருளவேணும்.

அடிவரவு :—கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பு ஏதம் கடி அமலன்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

திருப்பாவையின் தனியன்கள்

நீளா துங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ,
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நமஇதமிதம் பூயஏவாஸ்து பூய:.

நீளாதுங்கஸ் தநகிரிதடீஸுப்தம் ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் க்ருஷ்ணம் உத்போத்ய ச்ருதி சத சிரஸ் ஸித்தம் ஸ்வம் பாரார்த்யம் அத்யாபயந்தீ பலாத் க்ருத்ய யா கோதா புங்க்தே தஸ்யை பூயோ பூய ஏவ இதமிதம் நம: அஸ்து.

நப்பின்னைப் பிராட்டியினது உயர்ந்த திருமுலைத் தடங்களாகிற மலைச் சாரலில் கண் வளர்ந்தருளுமவனும், தன்னால் சூடிக் களையப்பட்ட மாலையிலே விலங்கிடப்பட்டவனுமான கண்ண பிரானை திருப்பள்ளி யுணர்த்தி பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலேதேறின [வேதாந்த ஸித்தமான] தன்னுடைய தான பாரதந்திரியத்தை அறிவியா நின்றவளாய் பலாத்காரம் செய்து யாவளொரு ஆண்டாள் (அக்கண்ணபிரானை) அநுப விக்கிருளோ அப்படிப்பட்ட பெருமையை யுடையவளான ஆண்டாளின் பொருட்டு காலதத்துவ முள்ளதனையும் இந்த இந்த நமஸ்காரமானது ஆயிடுக.

** * *—நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத்தடங்களில் தலைசாய்த்துக் கண் வளர்ந்தருளா நின்ற கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தி, அடிமை செய்யும் விஷயத்தில் தனக்குள்ள ஆவலை அறிவித்துத் தன் குழலிற் சூட்டிய பூமாலையாலே அப்பிரானை விலங்கிட்டு அநுபவித்த ஆண்டாளைத் திருவடி தொழுகின்றேன் என்றவாறு.* *

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையாற்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

அன்னம் வயல்புதுவை ஆண்டாள் பன்னு திருப்பாவை பல்பதியம் இன் இசையால் பாடி அரங்கற்கு நல் பா மாலை கொடுத்தாள் பூ மாலை சூடி கொடுத்தாளை சொல்.

ஹம்ஸங்கள் (உலாவுகின்ற) வயல்களை யுடைய ஸ்ரீவில்லிபுத் தூரில் (திருவவதரித்த) 'ஆண்டாள்' என்னுந் திருநாமத்தை யுடையவளும் ஆராய்ந்து அருளிச் செய்யப்பட்ட திருப்பாவை யென்னும் பல பாசுரங்களை இனிய இசையுடன் பாடி (அவற்றை ஸ்ரீரங்கநாதனுக்கு விலக்ஷணமான பாமாலையாக ஸமர்ப்பித்தவளும், (செண்பகம் முதலிய) பூக்களினாலாகிய மாலையை (தான் முந்துறக் குழலிற்) சூடி (பிறகு ரங்காநாத னுக்கு) ஸமர்ப்பித்தவளுமான கோதையை அநுஸந்திக்கக் கடவை.

** * * —ஆண்டாள் அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களை ஓதுவதிற் காட்டிலும் அவ்வாண்டாள் தன்னுடைய திருநாம ஸங்கீர்த்தனமே முக்கியமென்பது இப் பாட்டின் கருத்தாம்.*



ஆண்டாள்

இன்றோதிருவாடிப்பூரம்*எமக்காக
வன்றே இங்காண்டாளவதரித்தாள் -* குன்றாத
வாழ்வான வைகுந்தவான்போகந்தன்னையிகழ்ந்து*
ஆழ்வார்திருமகளாராய்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

சூடிக்கொடுத்த சுடர் கொடியே தொல்பாவை பாடி அருள வல்ல பல் வளையாய்! நீ நாடி என்னை வேங்கடவற்கு விதி என்ற இம் மாற்றம் நாம் கடவா வண்ணம் நல்கு.

பூமாலையைத் திருக் குழலிற் சூடி, (அதனை எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்த தேஜோமயமான கொடி போன்றவளே! அநாதி ஆசாரஸித்தமான நோன்பை (திருப்பாவை முகமாகக்) கூறி (அடியார் திறத்துக்) கருணைபுரிய வல்லவளும் பல வளைகளை அணிந்துள்ளவளுமான கோதாய்! நீ (மன்மதனை) நாடி ("காம தேவா; நீ என்னைத் திருவேங்கட முடையானுக்கு வாழ்க்கைப் படுத்தவேணும்") என்று காமனைக் குறித்துக் கூறிய கூற்றை யாம் மீருதொழியுமாறு அருள்புரிவாயாக.

* * *—இப்பாட்டால், நாச்சியார் திருமொழியில் மிக்க அன்பு எமக்குப் பிறக்கவேணுமெனப் பிரார்த்தித்தவாறு. அதில் முதற்றிருப்பதிகத்தில் "அனங்க தேவா!, உய்யவுமாங்கொலோ வென்றுசொல்லி யுன்னையு மும்பியையுந் தொழுதேன், வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" இத்தியாதி பாசுரங்களினால், ஆண்டாள் காமனை வணங்கி, "வேங்கடவாணனுக்கு நான் வாழ்க்கைப்படுமாறு நீ விதிக்கவேணும்" என வேண்டினமை அறிக. ... *

தனியன் உரை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

திருப்பாவையின் உரை அவதாரிகை

ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறங்காநிற்க, எம்பெருமான் தானுகவந்து அவர்களை உணர்த்த, பிறகு உணர்ந்தனர் அவர்கள். ஆண்டாள் அங்ஙனன்றி மணத்துடன் முளைக்கும் திருத்துழாய்போன்று எம்பெருமான் திறத்து ஆராதகாதலுடன் அவதரித்து இவள்தானே அவ்வெம்பெருமான் ஸந்நிதியிற் சென்று "உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்" என்று அவனை உணர்த்தினளாதலால் ஆழ்வார்களினும் ஆண்டாளுக்குள்ள வைலக்ஷண்யம் சொல்லாற்கூறும் பரமன்று. அன்றியும், ஆடவரை ஆடவர்கண்டு காமுறுவதிற் காட்டிலும் பெண்டிற் கண்டு காமுறுதல் பள்ளமடையா யிருக்குமென்பது உலகத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால், பகவத் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம்போல் மேட்டுமடையா யிருக்கையன்றியே இவ்வாண்டாளுடைய காமம் பள்ளமடையா யிருக்கையாகிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்று நோக்கத்தக்கது. ஆழ்வார்கள், காமத்தின் மெய்ப்பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்துப் பேசினார்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக் கொள்ளவேண்டிய ஆகாரமொன்று மில்லையே.

இங்ஙன் அமைந்த அதிசய விசேஷங்களுடன் வளர்ந்தருளாநின்ற சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஒருகொள்கொம்புடன் கூடவேண்டும் பருவமாய், அதற்குரிய ஞானபக்திகள் மீதூர்ந்து செல்லப்பெற்று "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மாநுஷ நாற்றத்தைப் பொறுக்கமாட்டாதே *அங்கைத் தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியாதாளாய், ஸ்ரீ வில்லிபுத்தூரில் எழுந்தருளியிராநின்ற வடபெருங் கோயிலுடையானுடனே தழுவி முழுசிப் பரிமாறப் பெறவேணுமென்னு விரும்பிச்செல்ல, அவ்விருப்பத்திற்கீடாக வடதளசாயி முகன்

காட்டாமையாலே மிகவும் மனம் நொந்து "இவ்வெம்பெருமானோடு கலவிபெற்றுக் களித்தார் ஆரேனுமுண்டோ?" என்று ஆராய்ந்தவிடத்து, "திருவாய்ப்பாடியிலுள்ள அஞ்சுலக்ஷங்குடி ஆயர்மங்கைகள் இவனுடன் கலந்து களிக்கப் பெற்றார்கள்" என்றுணர்ந்து, "அக்கலவி காலாந்தரத்தில் நடந்ததொன்றாகையாலே அதில் நமக்கு அந்வயமின்றியொழிந்தது. இனி, அவன் உலாவிப்போன அடிச்சுவடும் அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுநாநதியும், அவன் கோநிரைகாக்க எடுத்த கோவர்த்தன கிரியும் கிடந்தனவாகில், அவற்றைக் கொண்டாகிலும் தரிப்போம்" என்று அங்குச் செல்ல நினைக்க, பகவத் விரஹத்தாலே உடல் மெலிவுற்ற இவ்வாண்டாள் அவ்வளவு செல்லமாட்டாதாளாய், "ஜநகராஜன் தன் மகளான சீதைக்கு வில்முறி என்று ஒரு அவதி வைத்தாப்போலவும், கும்பர் தம் மகளான நப்பின்னைப்பிராட்டிக்கு ஏறு தழுவுதல் என்று ஒரு அவதிவைத்தாப்போலவும், நம் தந்தை நமக்கு ஓர் அவதியும் கற்பிக்கவில்லையே! இனி நாம் வாழ்வது எங்ஙனேயோ?" என்று சிந்தித்துத் தளர்ந்திருக்க; அவ்வளவில் சில தார்மிகர்கள்—"திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் ஆயர்மங்கைகளுடன் [1]குரவைகோத்து விளையாடும்போது ஆநந்தரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டு செல்ல, 'இனி நற்கேடு கெடலாகாது' என்று அந்த ரஸம் மாறுகைக்காக கண்ணபிரான் பெண்களைப் பிரிந்து மறைந்திருக்க, அப்போது அப் பெண்பிள்ளைகள் தங்கள் ஆற்றாமையாலே, 'இனி எவ்வகையாலாயினும் நாம் தரிக்கவேணும்' என்று ஓர் ஆய்ச்சி 'நான் காளியநாகத்தின் வலியை அடக்குகிறேன் காண்' என்பது. மற்றொருத்தி 'நான் தேநுகாஸுரனைத் தொலைத்தொழிக்கிறேன் காண்' என்பது, வேறொருத்தி நான் 'பூதனை முலையைச் சுவைத்துண்ணுகிறேன் காண்' என்பதாய் இப்படி அனைவரும் தாங்கள் கண்ணபிரான்போல அநுகாரஞ்செய்து ஒருவாறு துயர் தீர்ந்து தரித்தார்கள்" என்று[2] சொல்லக்கேட்ட ஆண்டாள் தானும் அவ்வாய்ச்சிகளைப்போல் அநுகரித்துத் தரிக்கும்படியைக் கூறுவது திருப்பாவை என்கிற இத் திவ்வியப் பிரபந்தம். *

அவதாரிகை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

திருப்பாவை

மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால் *
நீராடப்போதுவீர் போதுமினோநேரிழையீர் *
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் *
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் *
ஏரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம் *
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான் *
நாராயணனே நமக்கேபறைதருவான் *
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (1)

1. இக்குரவைக்கூத்து வடமொழியில் ராஸக்ரீடை என வழங்கும். அஃதாவது கண்ணபிரான் பல திருவுருக்கொண்டு ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாக நின்று ஆடுவதொரு கூத்து.

2. ஸ்ரீவிஷ்ணுபுராணம்—ஐந்தாவது அம்சத்தில் பதின்மூன்றாமத்தியாயத்தில் இது கூறப்பட்டுள்ளமை காண்க.

சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வம் சிறுமீர்காள் நேர் இழையீர்! மார்கழி திங்கள் மதி நிறைந்த நல் நாள்; கூர்வேல் கொடு தொழிலன் நந்தகோபன் குமரன் ஏர் ஆர்ந்த கண்ணி அசோதை இள சிங்கம் கார்மேனி செம் கண் கதிர் மதியம் போல் முகத்தான் நாராயணனே நமக்கே பறை தருவான்; ஆல், பாரோர் புகழ படிந்து நீர் ஆட போது வீர் போதுமின்.

செல்வம் நிறைந்துள்ள திருவாய்ப்பாடியில் கைங்கர்ய ஸம்பத்தையும் இளம் பருவத்தையுமுடைய பெண்காள்! விலக்ஷணமான பூஷணங்களை அணிந்துள்ளவர்களே! (மாதங்களிற் சிறந்த) மார்கழி மாஸமும் பூர்ணசந்திரோதயத்தையுடைய (சுக்கிலபக்ஷத்திய) நல்லநாளும் (நமக்கு வாய்த்திராநின்றன.) கூர்மைபொருந்திய வேலாயுதத்தை யுடையவனும் (கண்ணபிரானுக்குத் தீங்கு செய்யவரும் க்ஷுத்ர ஜந்துக்கள் பக்கலிலுஞ் சீறிக்) கொடுமைத் தொழிலைப் புரியுமவனுமான நந்த கோபனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவனும், அழகு நிறைந்த கண்களையுடையளான யசோதைப்பிராட்டிக்கு சிங்கக்குட்டி போலிருப்பவனும், காளமேகத்தோடொத்த திருமேனியையும் செந்தாமரைப்பூப்போன்ற திருக்கண்களையும் ஸூர்யனையும் சந்திரனையும்போன்ற திருமுகத்தையுமுடையனுமான ஸ்ரீமந்நாராயணன் தானே (அவனால் பேறு என்றிருக்கிற) நமக்கே பறையைக் கொடுக்குமவனாயிராநின்றான். ஆதலால், இவ்வுலகத்தவர்கள் கொண்டாடும்படி (இந்நோன்பிலே ஊன்றி) நீராட வர விருப்பமுடையீர்களே! வாருங்கள்; ஏல் ஓர் எம்பாவாய்—.

** * *—ஆயர் சிறுமிகள் "நாம் நோன்பு நோற்பதற்கீடாக நமக்கு இங்ஙனே விலக்ஷணமானதொரு காலம் நேர்பட்டபடி என்!" என்று காலத்தைக் கொண்டாடி, மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களை விளிக்குமாறு கூறுவது இப்பாட்டு.* ***ஏலோரெம்பாவாய்=நோன்பு நோற்பதில் அவகாஹித்தமையைக் காட்டுகின்ற ஓர் சொற்றொடர்.*** (1)

*வையத்துவாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்கு **
*செய்யுங்கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்*
*பையத்துயின்ற பரமனடிபாடி **
*நெய்யுண்ணோம்பாலுண்ணோம் நாட்காலேநீராடி **
*மையிட்டெழுதோம் மலரிட்டுநாமுடியோம் **
*செய்யாதனசெய்யோம் தீக்குறளைசென்றோதோம் **
*ஐயமும்பிச்சையு மாந்தனையுங்கைகாட்டி **
உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய். (2)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் உய்யும் ஆறு எண்ணி பால் கடலுள் பைய துயின்ற பரமன் அடி பாடி ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி உகந்து நம் பாவைக்கு செய்யும் கிரிசைகள் கேளீர்; நாம் நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீர் ஆடி மை இட்டு எழுதோம் மலர் இட்டு முடியோம் செய்யாதன செய்யோம் தீ குறளை சென்று ஓதோம்.

இப்பூமண்டலத்தில் வாழ்ந்திரா நின்றுள்ளவர்களே! (எம்பெருமானாலேயே பேறு என்ற அத்யவஸாயமுடைய) நாமும் உஜ்ஜீவிக்கும் வழியை ஆராய்ந்து, திருப்பாற்கடலில் அவதானத்துடன் கண்வளர்ந்தருளா நின்ற பரமபுருஷனுடைய திருவடிகட்கு மங்களாசாஸனம் பண்ணி (ஆசார்யாதிகளுக்கு இடுகையாகிற) ஐயத்தையும், (ஆர்த்தர்கட்கு இடுகையாகிற) பிக்ஷையையும் சக்தியுள்ள வளவும் இட்டு மகிழ்ந்து நமது நோன்புக்கு (அங்கமாகச்) செய்யவேண்டிய க்ரியைகளை காதுகொடுத்துக் கேளுங்கள். நோன்பு நோற்கத் தொடங்கின நாம் நெய் உண்ணக் கடவோமல்லோம்; பால் உண்ணக் கடவோமல்லோம்; விடியற்காலத்திலேயே ஸ்நாநஞ் செய்துவிட்டு (கண்ணில்) மையிட்டு அலங்காரம் பண்ணக்கடவோமல்லோம்; (குழலிற்) பூ வைத்துமுடிக்கக் கடவோமல்லோம்; (மேலைத் தலைவர்கள்) செய்யாதவற்றை செய்யக் கடவோமல்லோம்; கொடியகோட்சொற்களை (எம்பெருமானிடத்துச்) சென்று கூறக்கடவோமல்லோம்; ஏல் ஓர் எம்பாவாய்—.

****—ஒரு விசேஷகாரியத்தில் ஒருப்பட்டவர்கள் அக்காரியம் தலைக்கட்டுமளவும் சிலவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்றும் சிலவற்றைப் பற்றவேண்டுமென்றும் விடுபற்றுக்களை முதலில் ஸங்கல்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளதனால், அதற்கேற்ப, நோன்பு ஆகிற விசேஷ காரியத்தில் ஒருப்பட்ட இவ்வாயர்மங்கைகள் தாங்கள் விடுமவற்றையும் பற்றுமவற்றையும் ஸங்கல்பிக்கிறார்கள், இப்பாட்டில்:* (2)

*ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி **
*நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினால் **
*தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும்மாரிபெய்து **
*ஓங்குபெருஞ்செந்நெ லூடுகயலுகள **
*பூங்குவளைப்போதிற் பொறிவண்டுகண்படுப்ப **
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள் **
நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் நாங்கள் பாடி நம் பாவைக்கு சாற்றி நீர் ஆடினால் நாடு எல்லாம் தீங்கு இன்றி திங்கள் மும் மாரி பெய்து ஓங்கு பெரு செந்நெல் ஊடு கயல் உகள பூ குவளை போதில் பொறி வண்டு கண் படுப்ப புக்கு தேங்காதே இருந்து சீர்த்த முலை பற்றி வாங்க வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்து குடம் நிறைக்கும்.

மஹாபலி வார்த்த நீர் (கையில் விழுந்தவாறே) ஆகாசத்தளவும் வளர்ந்து (மூன்று) லோகங்களையும் (திருவடிகளாலே) தாவி அளந்து கொண்ட புருஷோத்தமனுடைய திருநாமங்களை (பிரயோஜநாந்தரத்தை விரும்பாத) நாங்கள் (ப்ரீதிக்குப் போக்கு வீடாகப்) பாடி நம் நோன்புக்கென்று சங்கற்பித்துக் கொண்டு நீராடினால் தேச மெங்கும் (அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி ஆகிற) தீங்கு ஒன்றுமில்லாமல் மாதந்தோறும் மூன்று தரம் மழை பெய்ய (அதனால்,) ஆகாசத்தளவும் வளர்ந்து பெருத்துள்ள செந்நெற் பயிர்களின் நடுவே மீன்கள் துள்ள அழகிய நெய்தல்மலரில் மிக்க புகரையுடைய வண்டுகளானவை உறங்க, (மாட்டுத் தொழுவிற்) புகுந்து சலியாமல் பொருந்தியிருந்து (பசுக்களின்) பருத்த முலைகளை (இரு கையாலும்) பிடித்து வலிக்க (எல்லார்க்கும் கட்டி அடிக்கலாம்படி விதேயமாயிருக்கையாகிற) உதாரஸ்வபாவ முடைய பெரிய பசுக்களானவை நீங்காதஸம்பத்து நிறையும்படி (பால் வெள்ளத்தாலே) குடங்களை நிறைக்கும், ஏல் ஓர் எம்பாவாய்—.

****—உலகத்தில் சுவர்க்கத்தை முக்கியமான பேறாகக்கொண்டு ஜ்யோதிஷ்டோமயாகஞ் செய்வதற்கு, ஆயுஸ்ஸு, ஸந்தானம் என்று சில அவாந்தர பலன்களும் உடன்கூடும்; இவ்வாய்ச்சியர் எம்பெருமானையே எல்லாவகைப் பயனாகவும் உள்ளத்துக்கொண்டவர்களாதலால் அவ்வெம்பெருமானொழிய வேறொரு பயனையும் விரும்பமாட்டார்கள்; ஆயினும் இவர்கள் விரும்ப வேண்டுவதொன்றுண்டு; அதாவது தாங்கள் நோன்பு நோற்குமாறு அநுமதி அளித்தவர்கட்குச் சில ஸம்ருத்திகளை ஆசாஸிக்கை. அஃது இப்பாட்டிற் சொல்லும். [யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே—ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்ப்பிக்ஷ தஸ்கரா:] என்று திருவெட்டெழுத்து வல்லானொருவனிருந்த நாடு ஸம்ருத்தமாயிருக்குமென்னாநின்றால் இத்தனை மஹாநுபாவைகள் இருக்கும் நாடு ஸம்ருத்தமாகச் சொல்லவேண்டாவே.* (3)

*ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல் **
*ஆழியுள் புக்கு முகந்துகொடார்த்தேறி **
*ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்து **
*பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் **

*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து *
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் *
வாழ வுலகினிற் பெய்திடாய் * நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.* (4)

ஆழி மழைகண்ணா நீ கை ஒன்றும் கரவேல் ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து பாழி அம் தோள் உடை பற்பநாபன் கையில் ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து சார்ங்கம் உதைத்த சரம் மழைபோல் வாழ நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட உலகினில் தாழாதே பெய்திடாய்.

மண்டல வர்ஷத்துக்குத் தலைவனான பர்ஜந்யனே! நீ (உன்னுடைய) கொடையில் ஒன்றையும் ஒளியா தொழியவேணும்; (நீ செய்ய வேண்டிய பணி என்னவென்றால்) கடலினுட் புகுந்து (அங்குள்ள நீரை) மொண்டு கொண்டு கர்ஜனை பண்ணி (பேரொலி செய்து) (ஆகாயத்தே) ஏறி காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்குங் காரணபூதனான, எம்பெருமானுடைய திருமேனி போல் (உனது) உடம்பிற் கருமைபெற்று பெருமையும் அழகும் பொருந்திய தோள்களையுடையவனும், நாபிக்கமல முடையனுமான எம்பெருமானுடைய கையில் (வலப்பக்கத்திலுள்ள) திருவாழி யாழ்வானைப்போல் ஒளி மல்கி, (இடப்பக்கத்திலுள்ள) பாஞ்சஜந்யாழ்வானைப்போல் நிலை நின்று முழங்கி, ஸ்ரீசார்ங்கத்தாலே தள்ளப்பட்ட பாணவர்ஷம்போல், (உலகத்தாரனைவரும்) வாழும் படியாகவும் (கண்ணபிரானோட்டைக் கலவிக்கு நோன்பு நோற்கிற) நாங்களும் ஸந்தோஷித்து மார்கழி நீராட்டம் செய்யும்படியாகவும் இவ்வுலகத்தில் தாமதம் செய்யாமல் (சடக்கென) மழைபொழியக் கடவை. ஏல் ஓர் எம் பாவாய்—.

*மாயனை மன்னு வடமதுரை மைந்தனை *
தூய பெருநீர் யமுனைத் துறைவனை *
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை *
தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனை *
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க *
போய பிழையும் புகுதருவா னின்றனவும் *
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.* (5)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை தூயபெருநீர் யமுனை துறைவனை ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரனை நாம் தூயோம் ஆய் வந்து தூ மலர்கள் தூய் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசு ஆகும் செப்பு.

மாயச் செயல்களை யுடையவனும், (பகவத் ஸம்பந்தம்) நித்யமாகப் பெற்றுள்ள வடமதுரைக்குத் தலைவனும், பரிசுத்தமாய் ஆழம்மிக்கிருக்கிற தீர்த்தத்தை யுடைய யமுனை யாற்றங்கரையை நிரூபகமாக வுடையவனும், இடைக்குலத்தில் விளங்கா நின்றுள்ள மங்கள தீபம் போன்றவனும், தாயாகிய தேவகிப் பிராட்டியின் வயிற்றை விளங்கச் செய்தவனுமான கண்ணபிரானை, (அடிச்சியோமாகிய) நாம் பரிசுத்தியுள்ளவர்களாய்க்கிட்டி நல்ல மலர்களைத் தூவி வணங்கி வாயாரப் பாடி நெஞ்சார தியானம் பண்ண (அதன் பிறகு) சேஷ சேஷிபாவ ஜ்ஞான முண்டாவதற்கு) முன்பு கழிந்த பாவங்களும் பின்பு (தன்னை யறியாமல்) வரக்கூடிய பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சு போலே உருமாய்ந்து போம்; (ஆன பின்பு) அவ்வெம்பெருமான் திருநாமங்களைச் சொல்; ஏல் ஓர் எம் பாவாய்—.

*புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில் *
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ *
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு *
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி **

*வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை **
*உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும் **
*மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம் **
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

புள்ளும் சிலம்பினகாண் புள்அரையன்கோ இல்லில் வெள்ளை விளி சங்கின் பேர் அரவம் கேட்டிலையோ? பிள்ளாய் எழுந்திராய்; பேய் முலை நஞ்சு உண்டு கள்ளம் சகடம் கலக்கு அழிய கால் ஓச்சி வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்த வித்தினை முனிவர்களும் யோகிகளும் உள்ளத்து கொண்டு மெள்ளஎழுந்து அரி என்ற பேர் அரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்து.

பறவைகளும் (இரை தேடுகைக்காக எழுந்து) ஆரவாரங்கள் செய்யா நின்றனகாண்; பறவைத் தலைவனான பெரிய திருவடிக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய ஸந்நிதியிலே வெண்மை நிற முடையதும் (அனைவரையும்) அழையா நிற்பதுமான சங்கினுடைய பேரொலியையும் செவிப்படுத்துகின்றிலையோ? (பகவத் விஷயரஸ மறியப்பெறாத) பெண்ணே! (சடக்கென) எழுந்திரு; பூதனையின் முலையில் (தடவிக்கிடந்த) விஷத்தை (அவளது ஆவியுடன்) அமுது செய்து, வஞ்சனை பொருந்திய (அஸுரா விஷ்டமான) சகடமானது கட்டுக் குலையும்படி திருவடியை ஓங்கச்செய்தவனும் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண்வளர்ந்தருளின ஜகத்காரண பூதனுமான எம்பெருமானை மநநசீலரான ரிஷிகளும் யோகப் பயிற்சியில் ஊன்றினவர்களும் (தமது) ஹ்ருதயத்தில் அமர்த்திக்கொண்டு (ஹ்ருதயஸ்தனான) அவ்வெம்பெருமான் (அசையாதபடி) ஸாவதாநமாக எழுந்து ஹரிர் ஹரி:, என்ற பேரொலியானது (எமது) நெஞ்சிற் புகுந்து குளிர்ந்தது; ஏல் ஓர் எம் பாவாய்—.

(இனியாகிலும் எழுந்திரு என்று ஒருத்தியை உணர்த்துகிறபடி.)

இப்பாட்டு முதல், மேல் "எல்லேயிளங்கிளியே" என்ற பாட்டளவாகப் பத்துப் பாசுரங்களிலே அநுபோக்தாக்களைக் குறித்துத் திருப்பள்ளியெழுச்சி பாடப் படுகின்றது. (6)

*கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன் கலந்து**
*பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே**
*காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து**
*வாச நறுங்குழலாய்ச்சியர்*மத்தினால்*
*ஓசைபடுத்த தயிரரவங் கேட்டிலையோ**
*நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி**
*கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ**
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய். (7)

பேய் பெண்ணே எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து கீசுகீசு என்று பேசின பேச்சு அரவம் கேட்டிலையோ வாசம் நறு குழல் ஆச்சியர் காசும் பிறப்பும் கலகலப்ப கை பேர்த்து மத்தினால் ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி கேசவனை பாடவும் நீ கேட்டே கிடத்தியோ தேசம் உடையாய் திற.

மதிகெட்ட பெண்ணே! எல்லாவிடங்களிலும் பரத்வாஜபக்ஷிகளானவை (ஒன்றோடொன்று) ஸம்ச்லேஷித்து கீச்சுகீச் சென்று பேசிய பேச்சினுடைய ஆரவாரத்தை (இன்னும்நீ) கேட்க வில்லையோ? பரிமள வஸ்துக்களினால் மணம்கமழ நின்றுள்ள கூந்தலையுடைய இடைப்பெண்கள் (கழுத்தில் அணிந்துள்ள) அச்சுத் தாலியும் ஆமைத்தாலியும் கலகல வென்று சப்திக்கும்படியாக கைகளை அசைத்து மத்தாலே ஓசைபடுத்தின தயிரின் ஒலியையும் கேட்கவில்லையோ? பெண்களுக்கெல்லாம் தலைமையா யிருப்பவளே! ஸ்ரீமந்நாராயணாவதாரமான கண்ணபிரானை (நாங்கள்) பாடா நிற்கச்செய்தேயும் நீ (அப்பாட்டைக்) கேட்டு வைத்தும் (இங்ஙனே) உறங்குவாயோ? மிக்க தேஜஸ்ஸையுடையவளே. (நீயே எழுந்து வந்து) கதவைத் திற; ஏல் ஓர் எம் பாவாய்—.

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமற்காத்து உன்னைக்*
*கூவுவான் வந்துநின்றோம்*கோதுகலமுடைய*
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாஞ் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

கோதுகலம் உடைய பாவாய் கீழ் வானம் வெள்ளென்று எருமை மேய்வான் சிறுவீடு பரந்தன போவான் போகின்றார் மிக்குள்ள பிள்ளைகளும் போகாமல் காத்து உன்னை கூவுவான் வந்து நின்றோம் எழுந்திராய் பாடி பறை கொண்டு மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதி தேவனை நாம் சென்று சேவித்தால் ஆராய்ந்து ஆ ஆ என்று அருளும்.

கிருஷ்ணனாலே மிகவும் விரும்பத்தக்க பதுமைபோன்றவளே! கீழ்த்திசைப்பக்கத்து ஆகாசமானது வெளுத்தது; (அன்றியும்,) எருமைகளானவை (பனிப்புல்) மேய்கைக்காக சிறு தோட்டங்களில் சென்று புக்கன; (திருவேங்கட யாத்திரை போலே) போகையையே பிரயோஜனமாகக் கொண்டு போகின்ற மற்றுள்ள எல்லாப் பெண் பிள்ளைகளையும் போக ஒட்டாமல் தடுத்து உன்னை அழைத்தற் பொருட்டு (உன் மாளிகை வாசலில்) வந்திரா நின்றோம்; (எங்களுடன் கூடுவதற்காக) எழுந்திரு; (கண்ணபிரானுடைய குணங்களைப்) பாடி (அவனிடத்துப்) பறையைப் பெற்று, குதிரையுருவமெடுத்து வந்த கேசி யென்னுமசுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவனும் மல்லர்களை மாளச் செய்தவனுமான அத் தேவ தேவனை நாம் அணுகி அடி பணிந்தால் (அவன்) நமது குறைகளை ஆராய்ந்து ஐயோ! என்று இரங்கியருள்வன் ஏல் ஓர் எம் பாவாய்—.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய்
*மாமீ ரவளை யெழுப்பீரோ*உன்மகள்தான்*
ஊமையோ அன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

தூ மணி மாடத்து சுற்றும் விளக்கு எரிய தூபம் கமழ துயில் அணை மேல் கண் வளரும் மாமான் மகளே மணி கதவம் தாள் திறவாய் மாமீர் அவளை எழுப்பீரோ உன் மகள் ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ பெரு துயில் ஏமப்பட்டாளோ மந்திரப் பட்டாளோ மா மாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று நாமம் பலவும் நவின்று.

பரிசுத்தமான மாணிக்கங்களழுத்திச் சமைத்த மாளிகையில் நாற்புறமும் விளக்குகள் எரியவும் (அகில் முதலியவற்றின்) வாசனைப்புகைகள் மணம் வீசவும், மென்மையான படுக்கையின் மீது நித்திரை செய்யா நின்ற, அம்மான் பெண்ணே; மாணிக்கக் கதவினுடைய தாழ்ப்பாளை திறந்திடுவாயாக; அம்மாமீ! (உள்ளே உறங்குகிற) உன் மகளை எழுப்ப மாட்டீரோ? உன் மகளானவள் வாய்ப்புலன் இல்லாதவளோ? அல்லாமற் போனால் செவிப்புலன் இல்லாதவளோ? (அன்றி) பேருறக்கமுடையவளா யிருக்கின்றாளோ? (அன்றி) பெரிய படுக்கையில் காவலிடப்பட்டாளோ? (அன்றி) மந்திர வாதத்தினால் கட்டுப் படுத்தப்பட்டாளோ? அளவிறந்த ஆச்சரியச் செய்கைகளை யுடையவனே! 'திருமகள் கேள்வனே!' 'ஸ்ரீ வைகுண்ட நாதனே!' என்று பலகால் சொல்லி (எம்பெருமானுடைய) திருநாமங்கள் பலவற்றையும் (வாயாரக் கற்றோம்; (இனியாகிலும் உன் மகள் உணரலாகாதா? ஏல் ஓர் எம்பாவாய்—.

*நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்!**
*மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்**
*நாற்றத் துழாய்முடி நாராயணன்*நம்மால்*
*போற்றப் பறைதரும் புண்ணியனால்*பண்டொருநாள்*
*கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்**
*தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ**
*ஆற்றவனந்த லுடையா யருங்கலமே**
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

நோற்று சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் வாசல் திறவாதார் மாற்றமும் தாராரோ நாற்றம் துழாய் முடி நாராயணன் நம் மால் போற்ற பறை தரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும் தோற்று பெருந்துயில் உனக்கேதான் தந்தானோ ஆற்ற அனந்தல் உடையாய் அரு கலமே தேற்றம் ஆய்வந்து திற.

நோன்பு நோற்று ஸுகாநுபவம் பண்ணுகின்ற அம்மே! வாசற் கதவைத் திறவாதவர்கள் ஒரு வாய்ச்சொல்லுங் கொடுக்க மாட்டாரோ? நறு நாற்றம் வீசாநின்றுள்ள திருத்துழாய் மாலையை அணிந்துள்ள திருமுடியை யுடைய நாராயணனும், நம்மால் மங்களா சாஸனம் பண்ணப் பெற்றுப் புருஷார்த் தங்களைத் தந்தருள்பவனும் தர்மமே வடிவுகொண்டு வந்தாற் போன்றவனுமான இராமபிரானால் முன் ஒரு காலத்திலே யமன் வாயில் (இரையாக) விழுந்தொழிந்த கும்பகர்ணனும் தோல்வியடைந்து (தனது) பேருறக்கத்தை உனக்கேதான் கொடுத்துவிட்டானோ? மிகவும் உறக்கமுடையவளே! பெறுதற்கரிய ஆபரணம் போன்றவளே! தெளிந்து வந்து (கதவைத்) திறந்திடு; ஏல் ஓர் எம்பாவாய்—.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
*செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்**
*குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே**
*புற்றர வல்குற் புனமயிலே போதராய்**
*சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து*நின்*
*முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட**
*சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி*நீ*
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

கன்று கறவை பல கணங்கள் கறந்து செற்றார் திறல் அழிய சென்று செரு செய்யும் குற்றம் ஒன்று இல்லாத கோவலர் தம் பொன் கொடியே புற்று அரவு அல்குல் புனம் மயிலே செல்வம் பெண்டாட்டி போதராய் வந்து நின் முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட நீ சிற்றாது பேசாது உறங்கும் பொருள் எற்றுக்கு.

கன்றாகிய பசுக்களினுடைய பல திரள்களை கறப்பவர்களும் சத்துருக்களினுடைய வலி அழியும்படி (தாமே படையெடுத்துச்) சென்று போர் செய்யுமவர்களும் ஒருவகைக் குற்றமும் அற்றவர்களுமான கோபாலர்களுடைய (குடியிற் பிறந்த) பொன்கொடி போன்றவளே! புற்றிலிருக்கிற பாம்பின் படம் போன்ற அல்குலையும், காட்டில் (இஷ்டப்படி திரிகிற) மயில் போன்ற சாயலையுமுடையவளே! செல்வமுள்ள பெண் பிள்ளாய்! (எழுந்து) வருவாயாக. நாங்கள் (திரண்டு) வந்து உனது (திருமாளிகையின்) முற்றத் தேறப் புகுந்து கார்மேக வண்ணனான கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடச் செய்தேயும் (பேருறக்கமுடைய) நீ சலியாமலும் (ஒன்று) பேசாமலும் உறங்குவது என்ன பிரயோஜனத்திற்காகவோ? (அறியோம்) ஏல் ஓர் எம்பாவாய்—.

*கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி**
*நினைத்து முலைவழியே நின்று பால்சோர**
*நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்**
*பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி**

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (12)

இள கன்று எருமை கனைத்து கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்று பால் சோர இல்லம் நனைத்து சேறு ஆக்கும் நல் செல்வன் தங்காய் பனி தலை வீழ நின் வாசல் கடை பற்றி சினத்தினால் தென் இலங்கை கோமானை செற்ற மனத்துக்கு இனியானை பாடவும் நீ வாய் திறவாய் இனித் தான் எழுந்திராய் ஈது என்ன பேர் உறக்கம் அனைத்து இல்லத் தாரும் அறிந்து.

இளங்கன்றுகளையுடைய எருமைகளானவை (பால் கறப்பார் இல்லாமையாலே) கதறிக்கொண்டு (தன்) கன்றின்மீது இரக்கமுற்று (கன்று ஊட்டுவதாக) நினைத்து (அந்நினைவினால்) முலை வழியால் இடைவிடாமல் பால் பெருக, (அப் பெருக்கினால்) வீட்டை (முழுதும்) ஈரமாக்கி சேறாகப் பண்ணுகையாகிற சிறந்த செல்வத்தை யுடையவனுடைய தங்கையானவளே! பனியானது எங்கள் தலையிலே விழும்படி உனது மாளிகையின் வாசற்கடையை அவலம்பித்துக் கொண்டு, (பிராட்டியைப் பிரித்தான் என்னுஞ்) சீற்றத்தினால் தென்திசையிலுள்ள லங்காபுரிக்கு அரசனான இராவணனை கொன்றொழித்தவனும் சிந்தனைக்கு இனியனுமான இராமபிரானை (நாங்கள்) பாடா நிற்கச் செய்தேயும் நீ வாய்திறந்து பேசுகிறா யில்லை. எங்களாற்றாமையை அறிந்து கொண்டபின்பாகிலும் எழுந்திரு; இஃது என்ன ஓயாத தூக்கம்? (இச்சேரியிலுள்ள) எல்லா விட்டுக்காரர்களாலும் (நாங்கள் உன் மாளிகை வாசலில் திரண்டு நிற்கிறவிது) அறியப்பட்டதாயிற்று. ஏல் ஓர் எம் பாவாய்—.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

புள்ளின் வாய் கீண்டானை பொல்லா அரக்கனை கிள்ளி களைந்தானை கீர்த்திமை பாடி போய் பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார் வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று புள்ளும் சிலம்பின போது அரி கண்ணினாய் பாவாய் நீ நல் நாள் கள்ளம் தவிர்ந்து கலந்து குள்ளக் குளிர குடைந்து நீர் ஆடாதே பள்ளி கிடத்தியோ ஆல்.

பறவையுருவம் பூண்டுவந்த பகாசுரனுடைய வாயைக்கீண்டெறிந்தவனும், கொடியனான இராவணனை முடித்து (அரக்கர் குலத்தை வேரோடு) களைந்தொழித்தவனுமான எம்பெருமானுடைய வீர சரிதங்களைப் பாடிக் கொண்டு சென்று எல்லாப் பெண்பிள்ளைகளும் நோன்பு நோற்பதற்காகக் குறிக்கப்பட்ட இடத்திற் புகுந்தனர்; சுக்ரோதயமாகி ப்ருஹஸ்பதி அஸ்தமித்தான். (அன்றியும்) பறவைகளும் (இரை தேடப் போன இடங்களில்) ஆரவாரஞ் செய்தன; புஷ்பத்தின் அழகைக் கொள்ளை கொள்ளாநின்ற கண்ணையுடையவளே! பதுமை போன்றவளே! நீ கிருஷ்ணனும் நாமும் கூடுகைக்கு வாய்த்த காலமாகிய இந்த நல்ல நாளில் (கிருஷ்ணனுடைய குண சேஷ்டிதங்களைத் தனியே நினைத்துக் கிடக்கையாகிற) கபடத்தை விட்டு எங்களுடன் கூடி உடம்பு வவ்வலிடும்படி குளத்திற்படிந்து ஸ்நானம் பண்ணாமல் படுக்கையிற் கிடந்துறங்கா நின்றாயோ! ஆச்சரியம்! ஏல் ஓர் எம் பாவாய்—.

*உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்**
*செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்**
*செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்**
*தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்**
*எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்**
*நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்**
*சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன்**
பங்கயக்கண்ணானைப் பாடலோ ரெம்பாவாய். (14)

உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின செங்கல் பொடி கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கு இடுவான் போகின்றார் எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய் நாணாதாய் நா உடையாய் சங்கொடு சக்கரம் ஏந்தும் தட கையன் பங்கயம் கண்ணானை பாட எழுந்திராய்.

உங்கள் (வீட்டுப்) புழக்கடைத் தோட்டத்திலிருக்கிற தடாகத்திலுள்ள செங்கழுநீர்ப் பூக்களானவை விகஸிக்க, ஆம்பல் மலர்களின் வாய் மூடிப்போயின; (அன்றியும்,) காவிப் பொடியில் (தோய்த்த) வஸ்திரங்களையும் வெளுத்த பற்களையுமுடையராய் தபஸ்விகளா யிருந்துள்ள ஸந்நியாஸிகள், தமது திருக்கோயில்களைத் திறவுகோலிட்டுத் திறக்கைக்காக போகாநின்றனர். முந்தி வந்து எழுப்புவதாகச் சொல்லிப்போன நங்கையே! ('சொன்னபடி எழுப்பவில்லையே!' என்னும்) வெட்கமுமில்லாதவளே! (இனிய பேச்சுப் பேசவல்ல) நாவைப் படைத்தவளே! சங்கையும் சக்கரத்தையும் தரியாநின்றுள்ள விசாலமான திருக்கைகளை யுடையவனும் தாமரை போற் கண்ணனுமான கண்ணபிரானை பாடுகைக்கு எழுந்திரு; ஏல் ஓர் எம் பாவாய்—.

*எல்லே யிளங்கிளியே யின்னமுறங்குதியோ**
*சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்**
*வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்**
*வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக**
*ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை**
*எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்**
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
*வல்லானை*மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.* (15)

இள கிளியே எல்லே இன்னம் உறங்குதியோ, நங்கைமீர் போதர்கின்றேன் சில் என்று அழையேல்மின், வல்லை உன் கட்டுரைகள் உன்வாய் பண்டே அறிதும், நீங்களே வல்லீர்கள் நானேதான் ஆயிடுக. நீ ஒல்லை போதாய், உனக்கு வேறு என்ன உடையை, எல்லாரும் போந்தாரோ, போந்தார்

இளமைதங்கிய கிளி போன்றுள்ளவளே! (இஃது) என்னே! இத்தனை பெண்பிள்ளைகள் திரண்டுவந்த பின்பும் தூங்குகின்றாயே? (என்று உணர்த்த வந்தவர்கள் கேட்க;) பெண்காள்! (இதோ) புறப்பட்டு வருகிறேன்; சிலுகு சிலுகென்று அழையாதேயுங்கள்; (என்று உறங்குகிறவர்கள் விடைசொல்ல, இளங்கிளியே!) (நீ வார்த்தை சொல்லுவதில்) வல்லமையுடையவள்; உனது கடுமையான சொற்களையும் உன் வாயையும் நெடுநாளாகவே நாங்கள் அறிவோம் (என்று உணர்த்தவந்தவர்கள் சொல்ல.) (இப்படிச்சொல்லுகிற) நீங்கள்தான் (பேச்சில்) வல்லமை யுடையீர் (அன்றேல்) (நீங்கள் சொல்லுகிறபடி) நான்தான் (வல்லவளாய்) ஆகக்கடவேன்; (உங்களுக்கு நான் செய்யவேண்டுவதென்? என்று உள்ளுறங்குமவள் கேட்க;) நீ சீக்கிரமாக எழுந்துவா; (தனியே) உனக்குமட்டும் (நீ) வேறு என்ன (அதிசயத்தை) உடையையாயிரா நின்றாய்? (என்று உணர்த்தவந்தவர்கள் கேட்க;) (வரவேண்டியவர்கள்) எல்லாரும் வந்தனரோ? (என்று உறங்குமவள் கேட்க;) (எல்லோரும்) வந்தனர்; நீ எழுந்துவந்து எண்ணிப் பார்த்துக் கொள்; (என்று உணர்த்தவந்தவர்கள் கூற,) (என்னை எதுக்

போந்து எண்ணிக் கொள், வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை மாயனை பாட.

காக வரச் சொல்லுகிறீர்களென்று உறங்குமவள் கேட்க;) (குவலயாபீட மென்னும்) வலிய யானையை கொன்றொழித்தவனும் சத்துருக்களான கம்ஸாதிகளை மிடுக்கு அழிந்தவர்களாகச் செய்தருள வல்லவனும் அற்புதனுமான கண்ணபிரானை பாடுகைக்காக (ஒல்லை நீ போதாய், என்றழைக்கிறார்கள்) ஏல் ஓர் எம் பாவாய்—.

* * *—எல்லாப் பெண்களுடைய திரட்சியையுங் காணக்கருதிக் கிடப்பாளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

கீழ்ப் பத்துப் பாட்டிலும் நிகழ்ந்த வினாவிடைகள் இப்பாட்டில் வெளிப்படையாகக் காணப்படும். "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற பாட்டுத் தொடங்கிக் கீழ்ப் பாட்டளவுமுள்ள ஒன்பது பாட்டுக்களிலும் உணர்த்துமவர்களுடைய பாசுரமொன்றே யன்றி உறங்குமவளுடைய ஆக்ஷேபாதிருபமான பாசுரமொன்றும் வ்யக்தமாகக் காணப்படவில்லை; அது சொற்றொடை நோக்கி அவதாரிகையாக எடுத்துரைக்கத்தக்கது; இப்பாட்டிலோ வென்னில்;

முதலடி உணர்த்துமவர்களின் பாசுரம்;
இரண்டாமடி-உறங்குமவளின் பாசுரம்;
மூன்றாமடி-உணர்த்துமவர்களின் பாசுரம்;
நான்காமடி-உறங்குமவள் பாசுரம்;
ஐந்தாமடி—உணர்த்துமவர்களின் பாசுரம்;
ஆறாமடியில், முற்கூறு-உறங்குமவள் பாசுரம்;
மேல் முழுதும்-உணர்த்துமவர்கள் பாசுரம். (15)

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே*கொடித்தோன்றுந் தோரண
வாசல் காப்பானே*மணிக்கதவந் தாள் திறவாய்*
ஆயர் சிறுமியரோமுக்கு* அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்*
தூயோமாய் வந்தோந் துயிலெழப் பாடுவான்*
வாயால் முன்ன முன்னம் மாற்றாதே யம்மா*நீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

நாயகன் ஆய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே கொடி தோன்றும் தோரணம் வாசல் காப்பானே மணி கதவம் தாள் திறவாய் ஆயர் சிறுமியரோமுக்கு மாயன் மணி வண்ணன் நென்னலே அறை பறை வாய் நேர்ந்தான் துயில் எழ பாடுவான் தூயோம் ஆய் வந்தோம் அம்மா முன்னம் முன்னம் வாயால் மாற்றாதே நேசம் நிலை கதவம் நீ நீக்கு.

(எமக்கு) ஸ்வாமியாயிருக்கிற நந்தகோபருடைய திருமாளிகையை காக்குமவனே த்வஜபடங்கள் விளங்காநிற்கப்பெற்ற தோரணவாசலை காக்குமவனே! அழகிய கதவினுடைய தாழ்ப்பாளை திறக்கவேணும்; இளமை தங்கிய இடைப்பெண்களாகிய எமக்கு ஆச்சரியச் செயல்களையுடையவனும் நீலமணி போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான் நேற்றே ஒலி செய்யும் பறையைத் தருவதாக வாக்கு அளித்தான்; (அவ்வெம்பெருமான்) துயிலினின்றும் எழுந்திருக்கும்படி பாடுகைக்காக பரிசுத்தைகளாய் (அடியோம்) வந்திருக்கின்றோம்; ஸ்வாமி! முதல் முதலிலே (உமது) வாயினால் மறுக்காதொழிய வேணும்; (அன்றியும்) (கண்ணபிரான் பக்கலில்) பரிவுற்றிருக்கும் நிலைமையையுடைய கதவை நீயே நீக்கவேணும், ஏல் ஓர் எம் பாவாய்—.

"துயிலெழை பாடுவான்" "துயிலெடை பாடுவான்" என்பன பாடபேதங்கள்.

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்*
எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய்*
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே*
எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய்*

அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்*
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா*
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்.* (17)

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய் கொம்பு அனார்க்கு எல்லாம் கொழுந்தே குலம் விளக்கே எம் பெருமாட்டி அசோதாய் அறிவுறாய் அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய் செம் பொன் கழல் அடி செல்வா பல தேவா உம்பியும் நீயும் உறங்கேல்.

வஸ்த்ரங்களையே தீர்த்தத்தையே சோற்றையே தருமமாக அளிக்கின்ற எமக்கு ஸ்வாமியான நந்தகோபரே! எழுந்திருக்க வேணும்; வஞ்சிக்கொம்பு போன்ற மாதர்க்கெல்லாம் முதன்மையானவளே! (இக்) குலத்திற்கு (மங்கள) தீபமாயிருப்பவளே! எமக்குத் தலைவியானவளே! யசோதைப் பிராட்டியே! உணர்ந்தெழு; ஆகாசத்தை இடைவெளியாக்கிக் கொண்டு உயரவளர்ந்து (எல்லா) உலகங்களையும் அளந்தருளின தேவாதி தேவனே! (இனிக்) கண்வளர்ந்தருளாமல் எழுந்திருக்கவேணும்! சிவந்த பொன்னாற் செய்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடியை யுடைய சீமானே! பலதேவனே! உன் தம்பியாகிய கண்ணனும் நீயும் உறங்காதொழியவேணும். ஓர் எம் பாவாய்—.

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்*
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்*
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண்*மாதவிப்
பந்தல் மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண்*
பந்தார்விரலி யுன் மைத்துனன் பேர்பாட*
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.* (18)

உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன் நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய் கந்தம் கமழும் குழலீ கடை திறவாய் கோழி எங்கும் வந்து அழைத்தன காண் மாதவி பந்தல் மேல் குயில் இனங்கள் பல்கால் கூவின காண் பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாட சீர் ஆர் வளை ஒலிப்ப வந்து செம் தாமரை கையால் மகிழ்ந்து திறவாய்.

(தன்னால் வென்று) தள்ளப்படுகிற மதயானைகளையுடையவனும் (போர்க்களத்தில் முதுகு காட்டி) ஓடாத புஜபலத்தை யுடையவனுமான நந்தகோபனுக்கு மருமகளானவளே! ஓ! நப்பின்னைப் பிராட்டியே! பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலை யுடையவளே! தாழ்ப்பாளைத் திறந்திடு; கோழிகளானவை எல்லாவிடங்களிலும் பரவி கூவாநின்றனகாண்; (அன்றியும்), குருக்கத்திக் கொடிகளாலாகிய பந்தலின் மேல் (உறங்குகிற) குயிற் கூட்டங்கள் பல தடவை கூவாநின்றனகாண்; (க்ருஷ்ணனோடு விளையாடுகைக்கு உபகரணமான) பந்து பொருந்திய விரலையுடையவளே! உனது கணவனான கண்ணபிரானுடைய திருநாமங்களை (நாங்கள்) பாடும்படியாக சீர்மை பொருந்திய (உன்) கைவளைகள் ஒலிக்கும்படி (நடந்து) வந்து செந்தாமரை பூப்போன்ற (உன்) கையினால் (எங்கள் மீது) மகிழ்ச்சி கொண்டு (தாழ்ப்பாளைத்) திறந்திடு; ஏல் ஓர் எம் பாவாய்—.

குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்*
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்*
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை*
எத்தனைபோதுந் துயிலெழ வொட்டாய்காண்*
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்*
தத்துவமன் று தகவேலோ ரெம்பாவாய்.* (19)

குத்து விளக்கு எரிய கோடு கால் கட்டில் மேல் மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறி கொத்து அலர் பூ குழல் நப்பின்னை கொங்கை மேல் வைத்து கிடந்த மலர் மார்பா வாய் திறவாய் மை தட கண்ணினாய் நீ உன் மணாளனை எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் எத்தனையேலும் பிரிவு ஆற்ற கில்லாய் ஆல் தகவு அன்று தத்துவம்.

நிலைவிளக்குகளானவை (நாற்புறமும்) எரியா நிற்க, யானைத் தந்தங்களினாற் செய்த கால்களையுடைய கட்டிலிலே மெத் தென்றிருக்குமதாயும் அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்னும் ஐந்து குணங்களையுடையதுமான படுக் கையின் மீதேறி, கொத்துக் கொத்தாக அலர்கின்ற பூக்களை யணிந்த கூந்தலை யுடையவளான நப்பின்னைப் பிராட்டியி னுடைய திருமுலைத் தடங்களை தன்மேல் வைத்துக்கொண்டு பள்ளிகொள்கின்ற அகன்ற திருமார்பையுடைய பிரானே! வாய் திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும், மையிட்டு அலங்கரிக்கப்பெற்றதும் விசாலமுமான கண்ணை யுடைய நப்பின்னாய்! நீ உனக்குக் கணவனான கண்ணபிரானை ஒரு நொடிப்பொழுதும் படுக்கையை விட்டு எழுந்திருக்க ஒட்டுகிறாயில்லை; க்ஷணகாலமும் (அவனைப்) பிரிந்து தரித் திருக்க மாட்டுகிறாயில்லை; ஆ! ஆ!! (நீ இப்படி இருப்பது உனக்குத்) தகுதியன்று; (இஃது) உண்மை; ஏல் ஓர் எம் பாவாய்—.

*முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று**
*கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்**
*செப்பமுடையாய் திறலுடையாய்*செற்றார்க்கு*
*வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய்**
*செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்**
*நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்**
*உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை**
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய் செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய் செப்பு அன்ன மென் முலை செம்வாய் சிறு மருங்குல் நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய் உக்கமும் தட்டொளியும் உன் மணாளனை தந்து எம்மை இப்போதே நீராட்டு.

முப்பத்து முக்கோடி தேவர்கட்கு (துன்பம் வருவதற்கு) முன்னமே எழுந்தருளி (அவர்களுடைய) நடுக்கத்தை நீக்கி யருளவல்ல மிடுக்கையுடைய கண்ணபிரானே! படுக்கை யினின்றும் எழுந்தருள்; (ஆச்ரித ரக்ஷணத்தில்) ருஜுவா யிருக்குந் தன்மையை யுடையவனே; (பகைவர் மண்ணுண் ணும்படியான) வலிமை யுடையவனே! சத்துருக்களுக்கு (பயமாகிற) ஜ்வரத்தை கொடுக்கவல்ல பரிசுத்தஸ்வபாவனே! துயில் எழாய்—; பொற்கலசம் போன்ற விரஹம் பொறாத முலைகளையும் சிவந்த வாயையும் நுண்ணிதான இடையையு முடைய நப்பின்னைப் பிராட்டியே! ஸ்ரீமஹாலக்ஷ்மியே! துயில் எழாய்—; (துயிலெழுந்த பின்பு,) (நோன்புக்கு உபகரணமான) ஆலவட்டத்தையும் [விசிறியையும்] கண்ணாடியையும் உனக்கு வல்லபனான கண்ணபிரானையும் கொடுத்து (விரஹத்தால் மெலிந்த) எங்களை இந்த க்ஷணத்திலேயே நீராட்டக் கடவாய்; ஏல் ஓர் எம் பாவாய்—.

*ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப**
*மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்**
*ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய்**
*ஊற்றமுடையாய் பெரியாய்*உலகினில்*
*தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்**
*மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்**
*ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே**
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீது அளிப்ப மாற்ருதே பால் சொரியும் வள்ளல் பெரு பசுக்கள் ஆற்ற படைத்தான் மகனே அறிவுருய் ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில் தோற்றம் ஆய் நின்ற சுடரே துயில் எழாய் மாற்ருர் உனக்கு வலி தொலைந்து உன் வாசல் கண் ஆற்ருது வந்து உன் அடி பணியும் ஆ போல யாம் புகழ்ந்து போற்றி வந்தோம்.

(சுரந்தபாலை) ஏற்றுக்கொண்ட கலங்களானவை எதிரே பொங்கி மேலே வழியும்படியாக இடைவிடாமல் பாலைச் சுரக்கின்ற (பெண்களும் பேதைகளும் அணைத்துக் கொள்ளும் படி) நற்சீலத்தை யுடைய பெரிய பசுக்களை விசேஷமாகப் படைத்துள்ள நந்தகோபர்க்குப் பிள்ளையானவனே! திருப் பள்ளி யுணரவேணும்; (அடியாரைக் காப்பதில்) ச்ரத்தை யுடையவனே! பெருமை பொருந்தியவனே! (இவ்) வுலகத் திலே ஆவிர்ப்பவித்த தேஜோரூபியானவனே! துயில் எழாய்—; சத்துருக்கள் உன் விஷயத்தில் (தங்களுடைய) வலிமாண்டு [உபயோக மற்ற வலிவை யுடையவராய்.] உன் மாளிகை வாசலில் கதியற்று வந்து உன் திருவடிகளில் சரணாகதி பண்ணிக் கிடப்பதுபோல் நாங்கள் (உன்னைத்) துதித்து (உனக்கு) மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு (உன் திருமாளிகை வாசலில்) வந்து சேர்ந்தோம்; ஏல் ஓர் எம் பாவாய்—.

*அங்கண்மா ஞாலத் தரசர் * அபிமான*
*பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே **
*சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம் **
*கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே **
*செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ **
*திங்களு மாதித்தியனு மெழுந்தாற்போல் **
*அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல் **
எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய். (22)

அம் கண் மாஞாலத்து அரசர் அபிமான பங்கம் ஆய் வந்து நின் பள்ளி கட்டில் கீழே சங்கம் இருப் பார் போல் வந்து தலைப்பெய்தோம் கிங்கிணி வாய்ச் செய்த தாமரைபூ போலே செம் கண் சிறுச் சிறிது எம் மேல் விழியாவோ திங்களும் ஆதித்தியனும் எழுந்தால் போல் அம் கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதி ஏல் எங் கள் மேல் சாபம் இழிந்து.

அழகியதாய் விசாலமாய்ப் பெரிதாயுள்ள பூமியில் (அரசாட்சி செய்த ராஜாக்கள் (தங்களுடைய) அஹங்கார மடங்கி வந்து உன் சிங்காசனத்தின் கீழ் திரள்திரளாக இருப்பது போலே (நாங்களும் உன் இருப்பிடத் தேற) விடைகொண்டு கிட்டி னோம்; கிண்கிணியின் வாய்போலிரா நின்ற (பாதி விகஸித மான) செந்தாமரைப் பூப்போன்ற சிவந்த திருக்கண்கள் கொஞ்சங் கொஞ்சமாக எங்கள் மேலே விழிக்கமாட்டாவோ? சந்திரனும் ஸூர்யனும் உதித்தாற்போல அழகிய திருக்கண் களிரண்டினாலும் எங்களைக் கடாக்ஷித்தருள்வாயாகில் எங்கள் பக்கலிலுள்ள பாபம் கழிந்து விடும்; ஏல் ஓர் எம்பாவாய்—.

*மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் **
*சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து **
*வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி **
*மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு **
*† போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா * உன்*
கோயில்நின் றிங்ஙனே போந்தருளி கோப்புடைய*
*சீரிய சிங்கா சனத்திருந்து*யாம் வந்த*
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய் (23)

† "போருமாபோலே" என்ற பாடம் எதுகையின்பத்திற்கு இயைந்திருக்கு மென்பர் சிலர்; அது பொருத்தமுடைய பாடமேயாயினும் எங்கும் வழங்காத பாடமாதலாலும், "போதருமாபோலே" என்ற பாடத்தில் விசேஷ விரோதமில்லாமையாலும் முன்னோர்மொழிந்த முறையே கொண்டோம்

மாரி மலைமுழஞ்சில் மன்னிகிடந்து உறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்று தீ விழித்து வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டு போதரும் ஆ போலே பூவை பூ வண்ணா நீ உன் கோயில் நின்று இங்ஙனே போந்தருளி கோப்பு உடைய சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள்.

மழை காலத்தில் மலையிலுள்ள குஹைகளில் (பேடையும் தானும் ஒரு வஸ்து என்னலாம்படி) ஒட்டிக்கொண்டு கிடந்து உறங்காநின்ற (வீர்யமாகிய) சீர்மையுடைய சிங்கமானது உணர்ந்தெழுந்து நெருப்புப்பொறி பறக்கும்படி கண்களை விழித்து (ஜாதிக்கு உரிய) பரிமளமுள்ள உளைமயிர்களானவை சிலும்பும்படி நாற்புறங்களிலும் புடைபெயர்ந்து [அசைந்து] (சரீரத்தை) உதறி சோம்பல் முறித்து கர்ஜனை பண்ணி வெளிப் புறப்பட்டு வருவது போல, காயாம் பூப்போன்ற நிறத்தை யுடைய பிரானே! நீ உன்னுடைய திருக்கோயிலினின்றும் இவ்விடத்தேற (ஆஸ்தாநத்தில்) எழுந்தருளி அழகிய ஸந்நிவேசத்தையுடைய லோகோத்தரமான ஸிம்ஹாஸநத்தின் மீது எழுந்தருளியிருந்து நாங்கள் (மநோரதித்துக் கொண்டு) வந்த காரியத்தை விசாரித்து கிருபை செய்ய வேணும். ஏல் ஓர் எம் பாவாய்—.

*அன்றிவ் வுலகை மளந்தா யடிபோற்றி **
*சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி **
*பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி **
*கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி **
*குன்று குடையா வெடுத்தாய் குணம் போற்றி **
*வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி **
*என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான் **
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். **(24)**

அன்று இ உலகம் அளந்தாய் அடி போற்றி அங்கு சென்று தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி சகடம் பொன்ற உதைத்தாய் புகழ் போற்றி கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி என்று என்று உன் சேவகமே ஏத்தி யாம் இன்று பறை கொள்வான் வந்தோம் இரங்கு.

(இந்திரன் முதலானவர்கள் மஹாபலியால் நலிவுபட்ட) அக்காலத்தில், இந்த லோகங்களை (இரண்டடியால்) அளந்தருளினவனே! (உன்னுடைய அத்) திருவடிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க; பிராட்டியைக் களவு கண்ட இராவணனிருக்குமிடத்தில் எழுந்தருளி (அவனுடைய பட்டணமாகிய அழகிய) லங்காபுரியை அழித்தருளினவனே! (உன்னுடைய) மிடுக்கு பல்லாண்டு வாழ்க; சகடாஸுரன் முடியும்படி (அச்சகடத்தை) உதைத்தருளினவனே (உன்னுடைய) கீர்த்தியானது போற்றி—; கன்றாய் நின்ற அஸுரனை [வத்ஸாஸுரனை,] எறிதடியாகக் (கொண்டு) (கபித்தாஸுரன் மீது) எறிந்தருளினவனே! (உன்னுடைய) திருவடிகள் போற்றி—; கோவர்த்தனகிரியை குடையாக தூக்கினவனே! (உன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி, குணங்கள் போற்றி;–(பகைவரை) ஜயித்து த்வேஷத்தை அழிக்கின்ற உனது திருக்கையிலுள்ள வேல் வாழ்க; என்றிப்படிப் பலவாறாக மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு உன்னுடைய வீர்யங்களையே புகழ்ந்து கொண்டு அடியோம் இப்போது பறைகொள்வதற்காக உன்னிடம் விடை கொண்டோம்; கிருபை பண்ணியருள்; ஏல் ஓர் எம் பாவாய்—.

இன்று + யாம், இன்றியாம்; " யவ்வரினிய்யாம் " என்பது நன்னூல். **(24)**

*ஒருத்தி மகனாய்ப் பிறந்து * ஓரிரவில்*
*ஒருத்தி மகனா யொளித்து வளர **
*தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த **
*கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் **

நெருப்பென்ன நின்ற நெடுமாலே* உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில் *
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி *
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

ஒருத்தி மகன் ஆய் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகன் ஆய் ஒளித்து வளர தான் தரிக்கிலான் ஆகி தீங்கு நினைந்த கஞ்சன் கருத்தை பிழைப்பித்து வயிற்றில் நெருப்பு என்ன நின்ற நெடுமாலே உன்னை அருத்தித்து வந்தோம் பறை தருதி ஆகில் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து.

தேவகிப் பிராட்டியாகிற ஒருத்திக்கு பிள்ளையாய் அவதரித்து (அவதார காலமாகிய அந்த) ஒரு ராத்திரியில் (திருவாய்ப் பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் வந்து சேர்ந்து) யசோதைப் பிராட்டியாகிற ஒருத்தியினுடைய பிள்ளையாக ஏகாந்தமாக வளருங் காலத்தில் தான் [கம்ஸன்] (அங்ஙனம் வளர்வதைப்) பொறுதவனாய் (இவனை எப்படியாகிலும் கொல்லவேணும் என்று) தீங்கை நினைத்த கம்ஸனுடைய எண்ணத்தை வீணாக்கி (அக்கஞ்சனுடைய) வயிற்றில் 'நெருப்பு' என்னும்படி நின்ற ஸர்வாதிகனான எம்பெருமானே! உன்னிடத்தில் (புருஷார்த்தத்தை) யாசியா நின்று கொண்டு வந்தோம்; எங்களுடைய மநோரதத்தை நிறைவேற்றித் தருவாயாகில் பிராட்டி விரும்பத்தக்க ஸம்பத்தையும் வீர்யத்தையும் நாங்கள் பாடி (உன்னைப்பிரிந்து படுகிற) துயரம் நீங்கி மகிழ்ந்திடுவோம்; ஏல் ஓர் எம்பாவாய்—.

மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் *
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் *
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன *
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே *
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே *
கோல விளக்கே கொடியே விதானமே *
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய். (26)

மாலே மணி வண்ணா ஆலின் இலையாய் மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டி ஏல் ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே போல்வன சங்கங்கள் போய் பாடு உடையன சால பெரு பறை பல்லாண்டு இசைப்பார் கோலம் விளக்கு கொடி விதானம் அருள்.

(அடியார் பக்கலில்) வியாமோஹமுடையவனே! நீலமணி போன்ற வடிவை உடையவனே! (ப்ரளயகாலத்தில்) ஆலந்தளிரில் பள்ளிகொள்பவனே! மார்கழி நீராட்டத்திற்காக உத்தம புருஷர்கள் அனுட்டிக்கும் முறைமைகளில் வேண்டியவற்றை கேட்கிறாயாகில்; (அவற்றைச் சொல்லுகிறோம்;) பூமியடங்கலும் நடுங்கும்படி ஒலிசெய்யக் கடவனவும் பால் போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை ஒத்திருப்பனவுமான சங்கங்களையும் மிகவும் இடமுடயனவும் மிகவும் பெரியனவுமான பறைகளையும் திருப்பல்லாண்டு பாடுமவர்களையும் மங்கள தீபங்களையும் த்வஜங்களையும் மேற்கட்டிகளையும் ப்ரஸாதித்தருளவேணும்; ஏல் ஓர் எம் பாவாய்—.

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா *உன் றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாக *
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே *
பாடகமே யென் றனைய பல்கலனும் யாமணிவோம் *
ஆடையுடுப்போம தன்பின்னே பாற்சோறு *
மூடநெய் பெய்து முழங்கை வழிவார*
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உன் தன்னை பாடி பறை கொண்டு யாம் பெறு சம்மானம் நாடு புகழும் பரிசினல் சூடகம் தோள் வளை தோடு செவிப் பூ பாடகம் என்ற னைய பல்கலனும் யாம் நன்ருக அணிவோம்; ஆடை உடுப்போம் அதன் பின்னே பால் சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார கூடி இருந்து குளிர்ந்து.

தன் அடிபணியாதவர்களை வெல்லுகின்ற குணங்களையுடைய கண்ணபிரானே! உன்னை (வாயாரப்) பாடி (உன்னிடத்து யாம் வேண்டுகின்ற) பறையைப் பெற்று (பின்னும்) நாங்கள் பெறும் படியான ஸம்மாநமாவது;—நாட்டார் புகழும்படியாக (கையிலணியும் ஆபரணமான) சூடகங்களும் தோள்வளைகளும் (காதுக்கிடும் ஆபரணமான) தோடும் கர்ணப்பூவும் பாதகடகமும் என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள் போன்ற மற்றும் பல ஆபரணங்களும் (உன்னுலும் நப்பின்னைப் பிராட்டியினுலும் பூட்டப்பட,) யாம் நன்ருக அணிவோம்—, சேலைகளை (நீ உடுத்த) உடுத்துக்கொள்வோம்; அதற்குப் பின்பு பாற் சோருனது [க்ஷீராந்நம்] மறையும் படியாக நெய் பரிமாறி முழங்கையால் வழியும்படியாக (உண்டு) (நீயும் நாங்களுமாகக்) கூடியிருந்து குளிரவேணும்; ஏல் ஓர் எம் பாவாய்—.

*கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம் **
*அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து*உன்றன்னைப்*
*பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம் **
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னே*
*டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது **
*அறியாத பிள்ளைகளோ மன்பினல் * உன்றன்னைச்*
*சிறுபே ரழைத்தனவுஞ் சீறியருளாதே **
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

யாம் கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்து உண்போம் அறிவு ஒன்றும் இல்லாத ஆய் குலத்து உன் தன்னை பிறவி பெறும் தனை புண்ணியம் உடையோம் இறைவா உன் தன்னேடு உறவு இங்கு நமக்கு ஒழிக்க ஒழியாது அறியாத பிள்ளைகளோம் உன் தன்னை அன்பினல் சிறு பேர் அழைத்தனவும் நீ சீறி அருளாதே பறை தாராய்.

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா:— நாங்கள் பசுக்களின் பின்னேபோய் காடு சேர்ந்து சரீரபோஷணமே பண்ணித் திரியு மவர்களாயும், சிறிதளவும் அறிவில்லாத இடைக்குலத்தில் உன்னை (ஸஜாதீயனுகப்) பெறுவதற்குத் தக்க புண்ணிய முடையவர்களாயுமிராநின்ரும் ; ஸ்வாமியான கண்ண பிரானே! உன்ஞேடு (எங்களுக்குண்டான) உறவானது இங்கு உன்னுலும் எம்மாலும் ஒழிக்க ஒழியமாட்டாது. (லோகமரியாதை ஒன்றும்) அறியாத சிறு பெண்களான நாங்கள் உன்னை ப்ரீதியினுலே சிறிய பேராலே (நாங்கள்) அழைத்ததைக் குறித்தும் (ஆச்ரிதவத்ஸலனுன) நீ கோபித்தருளாமல் பறை தந்தருளவேணும்; ஏல் ஓர் எம்பாவாய்—.

*சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து * உன்*
*பொற்ருமரையடியே போற்றும்பொருள்கேளாய்**
*பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்(து)த நீ**
*குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது **
*இற்றைப்பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா **
*எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் * உன்றன்னேடு*
*உற்ருேமேயாவோ முனக்கே நாமாட்செய்வோம் **
மற்றைநங்காமங்கள் மாற்றலோ ரெம்பாவாய். (29)

கோவிந்தா சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னை சேவித்து உன் பொன் தாமரை அடி போற்றும் பொருள் கேளாய் பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்த நீ எங்களை குற்றேவல்

கண்ணபிரானே! விடிகாலத்திலே (இவ்விடத்தேற) வந்து உன்னைத் தெண்டனிட்டு உனது அழகிய திருவடித் தாமரைகளை மங்களாசாஸநம் பண்ணுவதற்குப் பிரயோஜனத்தை கேட்டருளவேணும்; பசுக்களை மேய்த்து உண்ணும் இடைக்குலத்தில் பிறந்த நீ எங்களிடத்தில் அந்தரங்க கைங்கரியத்தை திருவுள்ளம் பற்ருதொழிய வொண்ணுது; இன்று (கொடுக்கப்

கொள்ளாமல் போகாது இற்றை பறை கொள்வான் அன்று காண் எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆள் செய்வோம் நம் மற்றை காமங்கள் மாற்று.

படுகிறஇப்) பறையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம்; காலமுள்ளவளவும் (உன்னுடைய) எவ்வவதாரங்களிலும் உன்னோடு உறவு உடையவர்களாகக் கடவோம்; உனக்கு மாத்திரமே நாங்கள் அடிமை செய்யக் கடவோம்; எங்களுடைய இதர விஷய விருப்பங்களை தவிர்த்தருளவேணும் ஏல் ஓர் எம்பாவாய்—.

*வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை **
*திங்கள் திருமுகத்துச் சேயிழையார்சென் றிறைஞ்சி **
*அங்கப்பறைகொண்டவாற்றை * அணிபுதுவைப்*
*பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான்கோதைசொன்ன **
*சங்கத்தமிழ்மாலை முப்பதுந்தப்பாமே **
*இங்கிப்பரிசுரைப்பா ரீரிரண்டுமால்வரைத்தோள் **
*செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் **
எங்குந் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். (30)

வங்கம்கடல் கடைந்த மாதவனை கேசவனை திங்கள் திருமுகத்து சேஇழையார் சென்று இறைஞ்சி அங்கு பறைகொண்ட அ ஆற்றை அணி புதுவை பை கமலம் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன சங்கம் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே இங்கு இ பரிசு உரைப்பார் ஈர் இரண்டுமால் வரை தோள் செம்கண் திரு முகத்து செல்வம் திரு மாலால் எங்கும் திரு அருள்பெற்று இன்புறுவர்.

கப்பல்களையுடைய திருப்பாற்கடலை (தேவர்களுக்காகக்) கடைந்த ச்ரிய:பதியான கண்ணபிரானை சந்திரன் போன்ற அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களையுமுடைய ஆய்ச்சிகள் அடைந்து வணங்கி அத்திருவாய்ப்பாடியில் (தங்கள்) புருஷார்த்தத்தைப் பெற்ற அந்த வ்ருத்தாந்தத்தை, அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் (திருவவதரித்த) பசுமை பொருந்திய தாமரை மலர்களினுலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வாருடைய (திருமகளான) ஆண்டாள் அருளிச்செய்த திரள் திரளாக அநுபவிக்க வேண்டிய தமிழ்மாலையாகிய இம் முப்பது பாசுரங்களையும் தப்பாமல் இங்நிலத்தில் இவ்வண்ணமாக ஓதுமவர்கள் பெரிய மலைபோன்ற நான்கு திருத்தோள்களையுடையனும் சிவந்த திருக்கண்களையுடைய திருமுகத்தையுடையனும், ஐச்வர்யத்தையுடையனும் ச்ரிய:பதியுமான எம்பெருமானாலே எவ்விடத்தும் (அவனுடைய) க்ருபையைப் பெற்று ப்ரஹ்மாநந்தசாலிகளாவர். எம்பாவாய்—.

அடிவரவு:—மார்கழி, வையம், ஓங்கி, ஆழி, மாயன். புள்ளும், கீசு, கீழ்வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பது, ஏற்ற, அங்கண், மாரி, அன்றி, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவை, சிற்றம், வங்கம், தை.

திருப்பாவையில் ஆறு முதல் பதினைந்து வரையிலுள்ள பாசுரங்களின்

ஸ்வாபதேசார்த்த ஸங்க்ரஹம்

திருப்பாவையில் ஆறாவது பாசுரந் தொடங்கிப் பதினைந்தாவது பாசுரத்தளவும் பத்துப் பாசுரங்களினால் ஆண்டாள் தன்னுடைய திருத்தகப்பன்மார்களான ஆழ்வார்கள் பதின்மரையும் திருப்பள்ளி யுணர்த்துகிறாளென்பது பெரியார் நிர்வஹித்துப் போரும் ஒரு பரம ரஸ்ய ரஹஸ்ய விசேஷார்த்தம். ஆழ்வார்களை எந்த அடைவில் ஆண்டாள் பேசியிருக்கின்றாளென்னில், தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த பெரியாழ்வார் தொடங்கி அவரோஹணக் கிரமமாகப் பொய்கை யாழ்வாரளவுஞ் சென்று, அவ்வேழு திருநாமங்களையும் ஏழு பாசுரங்களினு லுணர்த்தி, பிறகு தன் காலத்திற்குப் பின்பு திருவவதரிக்கப் போகின்ற அன்பர்தாள்தூளி, நற்பாணன், நன்கலியன்

என்ற மூன்று ஆழ்வார்களையும் அகக் கண்ணினலுணர்ந்து அவர்களை மூன்று பாசுரங்களிலே அடைவே உணர்த்தித் தலைக்கட்டுகிருள்.

ஆகவே ஆழ்வார்கள் திருப்பள்ளியெழுச்சியான இப்பத்துப் பாசுரங்களில் ஒவ்வொரு பாசுரத்தில் ஒவ்வொரு ஆழ்வார்க்குண்டான சொற் பொருத்தம், பொருட் பொருத்தம் முதலியன ஈண்டுச்சுருக்கமாக நிரூபிக்கப்படுகின்றன.

1. புள்ளுஞ் சிலம்பினகாண்—இது பெரியாழ்வாரைத் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரம். பிள்ளாய்! என்பது இதில் விளி. அறிவில்லாதவனைப் பிள்ளை யென்பது. எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலிய திருக்குணங்களை மறந்த இவ்வாழ்வார் மங்களாசாஸநத்தில் ஒருப்பட்டாராதலால் பிள்ளை யென்னத் தகுதிபடையாராயினர். "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவை யெல்லாம் அடிக் கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீ வசநபூஷண திவ்ய ஸூக்தியும் மங்களாசாஸநத்திற்கு அஜ்ஞானத்தையே மூலமாகக் காட்டிற்று. இவ்வாழ்வார் பெரும்பாலும் நந்தவனத்திலேயே போது போக்குவராதலால் அவ்விடத்து அடையாளமாகிய 'புட்களின் சிலம்புதல்' முன்னே கூறப்பட்டது. புள்ளரையன் என்று பெரிய திருவடியின் ப்ரஸ்தாவம் செய்திருப்பதில் இப்பெரியாழ்வார் பெரியதிருவடியின் அம்சமாகத் திருவவதரித்தவர் என்று குருபரம்பரா ப்ரபாவாதிகளிற் கூறியுள்ள விஷயம் ஸூத்ராலங்காரரீதியில் ஸூசிதமாகிறது.

'வெள்ளை விளிசங்கு' என்கிற சொற்றொடர் முதன் முதலாகப் பெரியாழ்வாருடைய திருவாக்கில் தோன்றியது. (பெரியாழ்வார் திருமொழி [illegible]) அதனை இங்கு அநுவதித்துக் காட்டுவது ஒரு வகையான [illegible] [illegible] பெரியாழ்வார் திருமொழியில் (சிதக்கடலை, கண்ணபிரானுடைய சரித்திரங்களில் பேய்முலை நஞ்சுண்ட கதை முதன் முதலாக அநுஸந்திக்கப்பட்டது "பிள்ளைப் பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு" என்றது காண்க. மறுபடியும் அந்தச் சரித்திரத்தை அநுஸந்திக்கையில் சகடாஸுரபங்கத்தையும் கூட்டியநுஸந்தித்தார். "[illegible] சகடோர் காலலைந்து" என்ற பாசுரங் காண்க. அதற்குப் பொருந்த இங்கு "பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி" என்றது. "வெள்ளத்தரவில்" என்று தொடங்கிப் பெரியாழ்வார்க்குள்ள 'விஷ்ணுசித்தர்' என்னுந் திருநாமமும் அதற்கு விவரணமான "அரவத்தமளியினோடும்" "பணிக்கடலில் பள்ளிகோளை" என்ற பாசுரங்களின் தாற்பரியமும் நன்கு ஸூசிதம்.

2. கீசுகீசென்றெங்கும்.—இது, பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான குலசேகராழ்வாரை யுணர்த்தும் பாசுரம், பேய்ப்பெண்ணே! நாயகப் பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்!, என்ற மூன்று விளிகளும் குலசேகராழ்வாரை வற்புறுத்துவன. பெருமாள் திருமொழியில் *மெய்யில் வாழ்க்கையை* என்ற வொரு பதிகத்தினல் தம்மைப் பெரும்பேயராகச் சொல்லிக்கொண்டவர் இவ்வாழ்வார். *ஏர் மலர்ப் பூங்குழல், ஆலைநீள் கரும்பு, மன்னுபுகழ்க் கௌசலைதன்* என்ற பதிகங்களில் பல பெண்களின் தன்மையை யடைந்து பேசினருமிவர். "கொல்லி காவலன் கூடல் நாயகன்" என்று அரசரான தன்மை தோற்றப் பேசினராதலால் நாயகப் பெண் பிள்ளாய் என்றது. அன்றியும் ஒரு ஹாரத்தில் நட்ட நடுவிலுள்ள மணியை; நாயகக் கல் என்பதுண்டு. குரு பரம்பரையில் எம்பெருமானரை நடுநாயகமென்று யதிராஜ ஸப்ததியில் தேசிகன் கூறினர்; "யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீ: மஹதீ குருபங்க்தி ஹார யஷ்டி:" என்றார். அதுபோலவே ஆழ்வார்களுள் குலசேகரர் நடுநாயகமாகவுள்ளவர். பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர் மாறன் என முன்னே ஐவர்; பட்டநாதன் கோதை தொண்டரடிப் பொடிகள் பாண்பெருமாள் கலியன் எனப் பின்னே ஐவர்; நடுவே குலசேகரர். ஆகவே இதுபற்றியும் நாயகப் பெண்பிள்ளாய் என்ற விளி நன்கு பொருந்தும். [தேசமுடையாய்!]பகவத்கீதையில் [18—43.] சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம்—க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்,] என்று தேஜஸ்ஸு

க்ஷத்ரிய தர்மமாகச் சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க இந்த விளி இவ்வாழ்வாருடைய க்ஷத்ரியத்வத்தை தெரிவிக்கும். அன்றியும், சௌர்யம் "தேவத்வமும் நிந்தையான வனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலேப்ரஹ்ம ஜன்மமும் இழுக்கென்பார்க்குப்பண்டை நாளில் பிறவி உண்ணூட்டுத்தேசிறே" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியின் படியும் அதற்கும் மூலமான "மண்ணூட்டிலாராகியெவ்விழிவிற்றுணு லும், ஆழியங்கைப் பேராயற்கு ஆளாம்பிறப்பு—உண்ணூட்டுத் தேசன்றே" என்ற பெரியதிருவந்தாதிப் 79 பாசுரத்தின்படியும் பகவத் சேஷத்வத்திற்கு அநுகூலமான பிறப்பே தேஜஸ் ஸென்று நிர்ணயிக்கப்படுகிறது; அப்படிப்பட்ட பிறப்பை *ஊனேறு செல்வத்து* என்ற பதிகத்தில் பாசுரந்தோறும் ஓரோவிதமாக விரும்பினவர் இவ்வாழ்வாரேயாத லால் தேச முடையார் இவரேயாகத்தகும். இப்பாட்டில் "ஆனைச்சாத்தன்" என்ற பதப்பிரயோகம் கவனிக்கத்தக்கது. இச்சொல் மலையாள பாஷையிலிருந்து திசைச் சொல்லாகத் தமிழில் வழங்குவதென்பர். (ஆனசாதம்) என்று மலைநாடர் வலிய னென்னும் பறவையை வழங்குவராம். இவ்வாழ்வார் மலைநாட்டில் திருவவதரித்தவ ராதலால் அத்திசைச்சொல் இங்குப் பரவசமாகவே அமைந்தது போலும். காசும் பிறப்பும் என்று ஆபரண விசேஷங்களைப் பற்றின ப்ரஸ்தாவமிருப்பது இவ்வாழ்வா ருடைய சரிதையில் ஆபரண ப்ரஸ்தாவமுள்ளவாற்றை ஒருவாறு நினைப்பூட்டும். "ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம் பில் கையிட்டவன்" என்ற தனியனும்ஸ்மரிப்பது. "வாசநறுங் குழலாச்சியர் மத்தின லோசைபடுத்த தயிரரவம்" என்றது பெருமாள் திருமொழியில் "கெண்டையொண் கண் மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர் கடையக் கண்டு வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ........தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்" என்ற பாசுரத்துச் சொற் சுவைகளை நன்கு நினைப்பூட்டும். [நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்] கிருஷ் ணவதாரத்தில் குதிரை வடிவாக வந்த கேசியென்னு மஸுரனை வதஞ் செய்ததனால் கேசவனென்றது. இவ்வாழ்வார் தமது திருமொழியில் முதன் முதலாக இந்த வர லாற்றையே பேசி யநுபவித்தார். *மாவினை வாய்பிளந்துகந்தமாலை* என்று. ஸ்வ ப்ரபந்தத்தை "நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடித் தலைக் கட்டினர். [கேட்டே கிடத்தியோ] இவ்வாழ்வார் நாடோறும் அந்தணர் களைக் கொண்டு ஸ்ரீ ராமாயணபாராயணஞ் செய்வித்துத் தாம் கேட்டவர். கேட்டு, இருந்த விடத்தி லிராமல் படையெடுத்துஞ் சென்றவர்.

3. கீழ்வானம் வெள்ளென்று—குலசேகரர்க்கு அடுத்த முந்தினவரான நம்மாழ் வாரை யுணர்த்தும் பாசுரமிது. (கோதுகலமுடைய பாவாய்)! என்றவிளி நம்மாழ் வாரை வற்புறுத்தும். ['கோது குலமுடைய' என்று வழங்கிவரும் பாடம் பரமக்ருபை யுடன் மறக்கத்தக்கது. அப்பாடம் நெடுநாளாகவே நாடெங்கும் பரவியதனாலாய அநர்த்தம் பெரிதுமுண்டு. ஸ்ரீபரகாலஸ்வாமி வியாக்கியானம் செய்தருளுமிடத்து "குலம் குலமாக வுனக்குப் பரிசர்யை பண்ணும்படி..........." என்றுரைத்திட்டார். அது, கோது குலமுடைய' என்கிற (தவறுதலான) பாடத்தில் அபிநிவேசத்தினால்போலும்.] வஸ்துதஸ்து, வடமொழியில் கௌதூஹலம் என்ற சொல் தமிழில் கோதுகலமெனத் திரிந்தது. இதில் குகரம் நுழைய ப்ரஸக்தியில்லை. "கோதுகலமுடைக் குட்ட னேயோ" என்றார் பெரியாழ்வாரும். கோதுகலமாவது ஆசை. ஆசையையுடைய என்றது எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய, அல்லது எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்திலே கொண்டுள்ள என்று இருவகையாகவும் பொருள்படும். [illegible]ர் நம்மாழ்வாரைப் பற்றிப் பேசும்போது "ஸிஷம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத் [illegible]த்தும்" என்று க்ருஷ்ண குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றார். [illegible], த்ருஷ்ணை என்றதும் க்ருஷ்ணனிடத்தில் த்ருஷ்ணை, க்ருஷ்ணனுடைய [illegible]ன இருவகையாகவும் விரியும். இதனால் தேறின பொருளை "கைம்மா [illegible]வென்று கைதலை பூசலிட்டே, மெய்மாலா யொழிந்தேன் எம்பிரானு

மென்மேலானே" என்ற பாசுரத்தினுள் நம்மாழ்வார்தாமே வெளியிட்டருளினர். "ப்ரியோஹி ஜ்ஞாநி நோத்யர்த்தம் அஹம் ஸச மம ப்ரிய:" என்றபடி. நானும் எம்பெருமானிடத்துக் குதூகலங் கொண்டேன், அவனும் என்னிடத்துக் குதூஹலங் கொண்டான் என்றருளிச் செய்தவர் நம்மாழ்வார். பாவாய்! என்ற விளியும் இவர்க்குப் பொருந்தும். திருவாய்மொழியில் "சூழ்வினை யாட்டியேன் பாவையே" என்றும் "என்பாவை போயினித்தண்பழனத்திருக்கோளூர்க்கே" என்றும் பலவிடங்களில் தம்மைப்பாவையாகச் சொல்லிக் கொண்டவர் இவ்வாழ்வார். 'எழுந்திராய்' என்ற சொல்லாற்றல் நன்கு நோக்கத்தக்கது; உட்கார்ந்திருப்பவரையன்றோ எழுந்திராயென்பது. மற்றையாழ்வார்களெல்லாரும் அர்ச்சையில்நின்ற திருக்கோலமாகவேயுள்ளார்; நம்மாழ்வாரொருவரே வீற்றிருந்ததிருக்கோலம். 'பத்மாஸநோபவிஷ்டம்" என்கிறபூர்வாசார்யச்லோக ரத்னமும் இங்கு அநுஸந்தேயம். [கீழ்வானம் வெள்ளென்று.] உதயகாலத்தில் கிழக்கு வெளுக்கும். இங்கும் வகுள பூஷண பாஸ்கரோதயமாதலாலும், அது தானும் கலியுகத்தின் உதய காலத்திலாதலாலும் கிழக்கு வெளுத்ததாகச் சொல்லிற்று. கீழ்வானமென்றபோதே மேல்வானம் நினைவுக்கு வரும். நித்தியவிபூதி மேல்வானமாகும். லீலா விபூதியானது நம்மாழ்வாருடைய திருவாய்மொழி யவதாரத்தாலே "ஓராயிரத்துளிப் பத்து உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" இத்யாதிப்படியே தானே பரமபதமாயிற்று. ஆகவே கீழ்வானமான இவ்விபூதி வெள்ளென்றது. [எருமை சிறுவீடு மேய்வான்] வீடு என்று மோக்ஷம்; சிறு வீடு என்று கைவல்ய மோக்ஷம். இந்த ஸங்கேதமிட்டருளினவர் நம்மாழ்வார். திருவாய்மொழியில் (4—1—10) "குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி" என்றபாசுரத்தின் பொருள் கொண்டு இஃது அறியத்தக்கது. எருமை என்பது தாமஸப்ரக்ருதிகளை. நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருள்வதற்கு முன்னே பலரும் தாமஸப்க்ருதிகளாய் நல்வீடு செல்லாது சிறுவீடு முதலியவற்றிற் சென்று பாழாயினர் என்பது இங்கு ஸூசிதம். [மிக்குள்ள பிள்ளைகளுமித்யாதி.] மற்றைப் பிள்ளைகளையும் போகவொட்டாமல் தடுத்து இப்பிள்ளைவாசலில் வந்து நிற்பதனால் இவளுக்குண்டான விலக்ஷணமான ஏற்றம் தோற்றுவது போல, மற்றையாழ்வார்களிற் காட்டில் நம்மாழ்வார்க்குண்டான ப்ரபந்நஜந கூடஸ்தத்வ மாகிற ஏற்றம் தோற்றுவிக்கப்பட்டது. "போவான் போகின்றாரை" என்ற பிரயோகம் வெகு ஆச்சரியமானது. 'போவதற்காகப் போகிறவர்கள்' என்று சொல்வதுண்டோ? இல்லை. அப்படியிருக்க ஏன் சொல்லிற்று? போவதுதானே ஸ்வயம்ப்ரயோஜனமென்று காட்டுவதற்காகவே சொல்லிற்று. இத்தகைய பிரயோகம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் வந்தது; திருவிருத்தத்தில் போவான் வழிக்கொண்ட மேகங்களே!" என்றார். [உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்.] "கூவிக்கொள்ளும் காலமின்னங்குறுகாதோ" "என்னைக் கூவியருளாய் கண்ணனே" "கூவிக்கொள்ளாய் வந்தந்தோ" என்று பலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்துநின்றோமென்கிறாள். [மாவாய் பிளந்த தேவாதி தேவனை] இப்போது ஆண்டாள் நோற்பது போல நம்மாழ்வாரும் ஒரு திருவாய்மொழியில் நோன்பு நோற்றார்; "வீற்றிருந்தேழுலகும்" என்ற திருவாய்மொழியில் "ஏற்றநோற்றேற்கு" என்று முதலிலும் "வண்டமிழ் நூற்க நோற்றேன்" என்று முடிவிலும் வருவதுகாண்க. அங்ஙனம் நோற்ற திருவாய்மொழியில் தேவாதிதேவனை அநுபவிக்கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற்பாட்டில் இட்டருளினர்; "வெம்மாபிளந்தான் தன்னை" என்றதுகாண்க. ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா!" என்றும், சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் தேவாதி தேவனையே முந்துற முன்னம் சேவித்தாராழ்வார். [சென்று நாம் சேவித்தால்] "வானநாயகனே! அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதி தேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்; அங்ஙனமல்லாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிறாள்

போனும். [ஆவாவென்று] "ஆவாவென விரங்கார் அந்தோவலிதே கொல், மாவாய் பிளந்தார் மனம்" என்றும், "அடியேற்கு ஆவாவென்னாயே" என்றும் நீர் விரும்பின படியே மாவாய் பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி. [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் என்று காட்டியபடி.

4. தூமணிமாடத்து. நம்மாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான திருமழிசைப் பிரானை யுணர்த்தும் பாசுரமிது. இதில் **மாமான் மகளே!** என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது. ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒருவகையான தேஹஸம்பந்தமுண்டு. அதாவது—ஸ்ரீதேசிகன் கோதாஸ்துதியில் "கமலாமிவாந்யாம் கோதாம்" என்றும் "ஸந்த: பயோதி துஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ் த்வாம்" என்றும் அருளிச் செய்தபடியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியாவள்.—"பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா" என்ற அமரகோசத்தின் படியும் இதிஹாஸபுராண வரலாற்றின் படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில் தோன்றியவள். திருமழிசைப்பிரானும் ப்ருகுகுலத்தில் தோன்றியவரென்பது சரித்திர ஸித்தம். இத்தகைய ஸமாந குலஸம்பந்தம் இங்கு நோக்கத் தக்கது. ரிஷிகுலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலேயானார் அவர். ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயானாள் இவள். இதுவும் ஒற்றுமை நயம். [தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் நிழலிட்டுத் தோன்றும். திருமழிசைப்பிரான் "உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக் கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சி தந்தமையால் இவர் தூமணிமாடமென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக்கெரிய] விளக்காவது ஞானவொளி. "சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோம் சங்கரனாக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் ஸகல மதங்களிலும் புக்கு ஸர்வதோ முகமான ஞானவிளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம். "யானறிந்த வாறு—ஆரறிவார்" என்றும் "என் மதிக்கு விண்ணெல்லா முண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினாலும் இது ஸித்தம். [தூபம் கமழ] சிறந்த ஞானமிருத்தல் மாத்திரம் பயன்படாது; அது நன்கு பரிமளிக்க வேண்டும். எம்பெருமானையன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம். "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்பது இவ்வாழ்வாருடைய திருவாக்காகும். [துயிலணை மேல் கண்வளரும்] இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோலமான எம்பெருமான்களின் மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும்பாலும் இவர் காலம் கழித்தது. சயன திருப்பதிகளையே ஒரு கோர்வையாக வெடுத்துப் பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; "நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள் நாகத்தணையரங்கம் பேர் அன்பில்—நாகத்தணைப் பாற்கடல் கிடக்கு மாதிநெடுமால், அணைப்பார் கருத்தனாவான்" என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமானுடைய மகளே!] மகள் என்றதனால் விதேயத்வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் வழக்கம். மாமான் என்றது மஹா மஹான் என்றபடி. துயிலணை மேல் கண்வளரும் மாமான் யதோக்தகாரி யெம்பெருமான்; அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர்; "கணிகண்ணன் போகின்றான்—நீயுமுன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்" என்றபோது அப்படியே சுருட்டிக்கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள்" என்றபோதும் அப்படியே. இனி, துயிலணைமேற் கண்வளரும் மாமான்—ஆராவமுதன்; அப்பெருமாளும் 'எழுந்திருந்து பேசு வாழிகேசனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது ப்ரஸித்தம். [உன் மகள் தான் ஊமையோ] வாய்திறவாமலே ஹஸ்தசேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின் பணி. இவ்வாழ்வாரும் யாத்திரை யடைவில்

பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒரு வேதியன் வீட்டுவாசல் திண்ணையில் சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக் கொண்டிருந்த அந்தணர்கள் நீறு பூத்த நெருப்புப்போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதியராக வெண்ணி வேதாத்யயநம் அவருடைய காதிற் படலாகாது என்று கருதி ஓத்துத் தவிர்ந்திருக்க, அக்குறிப்பையறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற் சென்று வேறோரகத்து மேடையில் வீற்றிருக்கையில் அந்த வேதியர்கள் மீண்டும் வேதமோதத் தொடங்கி, விட்டவாக்கியம் தோன்றாது மயங்கி நிற்க, ஆழ்வார் அதுகண்டு கறுப்பு நெற்களைக் கையுகிராலே இடந்துபோட, அப்பொருளுள்ள வேத வாக்கியம் அவர்கட்குத் தோன்றிற்று; அதாவது "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்நம்" என்பது. உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளால் இவரை உபசரித்து க்ருதார்த்த ராயினர் என்பது சரித்திரவரலாறு. இங்ஙனமாக, வாய்திறவாமலே இங்கிதத்தினால் காட்டினது பற்றி ஊமையோ என்றது. சொன்ன சொற்களைச் செவியேற்காதவர் செவிடர்; அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்: முன் சொன்ன பெரும்புலியூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்து கொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருள்வித்துக் கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அக்ரபூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசைமொழிகளை வர்ஷிக்க, அவற்றை இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க. [அனந்தலோ] தூக்கமோ என்றபடி. பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்ய விஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லா திருக்கப் பெறுதலே. "உன்னைத் தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றும் "தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னை மேத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்று மருவிச்செய்யு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும். [ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ] மற்றை யாழ்வார்களிற் காட்டிலும் இவ்வாழ்வாருடைய பரமைகாந்தித்வம் மிக விலக்ஷணம் என்பது இங்கு அறியத்தக்கது. "திரு மனமிலேன் பின்னுகன்றன்னே டெதிர்வன், அவனெனக்கு நேரான்" என்னும்படியான திருவாக்கு இவர்க்கே அஸாதாரணமன்றோ! இதுதான் பெருந்துயில்: எம்பெருமானை யொழிந்த மற்றை யோரைக் கண்கொண்டு பாராமையிற் பெருமை.

[மாமாயன்] "மாயமென்ன மாயமே" என்றும், "மாயமாய மாக்கினாய் உன் மாயமுற்று மாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசுகிறவர் இவ்வாழ்வார். [மாதவன்] "மாதவனை ஏத்தாதார் ஈனவரே" என்றவரும் இவ்வாழ்வாரே. "திருவில்லாத்தேவரைத்தேறேன்மின்தேவு" என்றதுங் காணலாம். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு" என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடிமேல் தாம் பாசுரம் பாடினவராகச் சொல்லிக் கொண்டார். ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்த னென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸூசிதம்.

5. நோற்றுச் சுவர்க்கம்—திருமழிசை யாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. ஓடித்திரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் இம்மூவரையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் திருக்கோவலிடைகழியில் நெருக்கி யநுபவித்தானென்பது வரலாற்றின் சுருக்கம். இப்பேயாழ்வாரைப் பற்றித் திருவரங்கத் தமுதனார் நூற்றந்தாதியில் அருளிச் செய்யுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்" என்றார். பொய்கையாரும் பூதத்தாரும் இருவிளக்கேற்றியிருளையகற்ற, இவ்வாழ்வார் "திருக்கண்டேன் பொன்

மேனி கண்டேன் " என்று தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினர் என்பர் ஆன்றோர். அவ்வர்த்தமே யிங்கு முதலடியிற் பொலியும். நோற்று—மற்றை யிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டானஞ் செய்யவே என்றபடி. சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ்த்வயாஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயாவிநா" என்று ஸ்ரீ ராமாயணத்தில் பிராட்டி அருளிச் செய்ததுங் காண்க. "வாசல் திறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான லிங்கம். திருக்கோவலிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார் வாசல் திறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத்தார் வாசல் திறந்தார். இப் பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினல் வாசல் திறக்க வேண்டிற்றிலே. ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்தமாக அமைந்த குறிப்பு. [நாற்றத்துழாய்முடி நாராயணன்] இவ்வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய்மயமாகவே யிருக்கும். *திருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய் வரை மார்பில் பூந்துழாய்" என்பது. அதற்கடுத்த பாசுரம் "மலராள் தனத்துள்ளான் தண்டுழாய்மார்வன்" என்பது. முடிவுபாசுரத்திலும் "தண்டுழாய்த்தார் வாழ்வரை மார்பன்" என்ரூர். இடையிலும் பல பாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில் [நாமம் பல சொல்லி யென்பதில்] நாராயணனையும் திருத்துழாயையும் கண்ணனையும் சேர்த்துப்பாடினர் பேயார். இதுவும் ஒரு சிறந்த பொருத்தம். "காண்காணென — விரும்புங்கண்கள்" என்று ஒரு நொடிப்பொழுதும் கண்மூடி யிருக்க மாட்டாமையைச் சொல்லிக் கொண்ட நீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிருள் பண்டொருநாளென்று தொடங்கி. இப்பாட்டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்ய சரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்ட நடுவில் "அவனே — இலங்காபுரமெரித்தானெய்து" என்றும் "எய்ததுவும் தென்னிலங்கைக் கோன்வீழ" என்றும் அருளிச்செய்தமைக்கு நன்கு ஒக்கும். திருமழிசையாழ்வாரை யுணர்த்தின கீழ்ப்பாட்டில் அனந்தலோ என்று வெறும் அனந்தலே சொல்லிற்று. இப்பாட்டில் ஆற்றவனந்தலுடையாய்! என்கிறது. மழிசையர் கோனுக்கும் இவ்வாழ்வார் ஆசாரியராதலால் விசேஷணமிட்டபடி. அனந்தல் என்று ஹேயமான உறக்கமன்று சொல்லுகிறது. "உரோவிங்யஸ்த ஹஸ்தாஸ்தே நித்ராயந்தே ஸூரிப்பரா:—" என்று பகவச் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட 'அனந்தல்' பரமைகாந்தித்வ ஸீமா பூமியைக் காட்டுமது. [அருங்கலமே!] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரம் தொடங்கும்போதே "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று ஆனந்த மாகத் தொடங்கப் பெற்ற பகவத் பரமக்ருபா பாத்ரபூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்து திற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறிவந்து திறவும் என்கிருள்.

6. கற்றுக்கறவை. பேயார்க்கு அடுத்த முந்தினவரான பூதத்தாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில், "குற்ற மொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!" என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களை யுடையதான கோ என்னும் சொல் கோதா என்ற விடத்திற்போல ஸ்ரீ ஸூக்தியைச் சொல்லுகிறதிங்கு. கோவலர்—ஸ்ரீஸூக்திகளை யருளவல்லவர்களான ஆழ்வார்கள். "குற்றமொன்றில்லாத" என்ற விசேடணம் முதலாழ்வார்கள் மூவர்க்கே பொருந்தும்; யோகிஜத்வமாகிற வொரு குற்றம் மற்றை யாழ்வார்களுக்குண்டு. அக்குற்ற மொன்றும் இல்லாத கோவலர்—முதலாழ்வார்கள்; அவர்களுள் பொற்கொடியே! — "கோல்தேடியோடும் கொழுந்ததே போன்றதே மால்தேடி யோடும் மனம்" என்கிற பாசுரத்தினல் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக் கொண்டவர் பூதத்தாழ்வாரே

யாவர். எம்பெருமானுகிற உபக்நத்தைத் தேடிச் செல்லுகின்ற கொடிபோல் வேன் நான் என்றவர் இவரேயிறே. "கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து" என்றது முதலாழ்வார் மூவர்க்கும் பொதுவான வாசகம். கற்றுக் கறவை—கன்றாகிய கறவை. (கறவை யென்பதனுல் ஸ்ரீ ஸ்த்ரீ விவக்ஷிதம்.) மற்றை யாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களை யளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களை யளித்தார்கள். பொய்கை யாழ்வாரருளிய திருவந்தாதி கறவைக் கணம்; பூதத்தாழ்வார் திருவந் தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக்கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின அழகு காண்க. [செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்] தேசமெங்கும் திரிந்து பகவத் விரோதிகளை நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை "எண்டிசை யும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து" என்ற பாசுரத்தினுல் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே. "புற்றரவல்குல்" என்பது இடையழகை வருணிப்பதாகும். ஸ்வரூபதேசத்தில் இடையழகாவது பக்தி யின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப்பட்ட தாதலால் இடையழகென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை முடிக்குமிடத்து "என்றனளவன்றால் யானுடைய வன்பு" என்றே முடித்தார். இதனுல் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக் கட்டினுர். புனமயிலே! என்ற விளியும் இவர்க்கு அழ காகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை; அதனைப் பாடின கலியன் "கடி பொழில் சூழ்கடல் மல்லை" என்றே பன்முறையும் பாடினர். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால், மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்ற விடமும் கடற்கரையிலே யிறே. [சுற்றத்துத் தோழி மாரித்யாதி.] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ் வார்கள் தோழிமார். [முகில் வண்ணன் பேர் பாட.] முந்துற முன்னம் முகில் வண் ணன் பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர்; "உலகேழும் முற்றும் விழுங்கும் முகில்வண்ணன்—ஏத்துமென்னெஞ்சு" என்ற இவர் பாசுரம் காண்க. புனமயில் முகில் வண்ணனைத் தானே பாடும்.

7. கனைத்திளங் கற்றெருமை. பூதத்தாழ்வார்க்கு அடுத்து முந்தினவரான பொய்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. தங்காய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். உலகில், தங்கையென்று ஸ்ரீ மஹா லக்ஷ்மியையும் தமக்கை யென்று மூதேவியையும் வழங்குவர்கள். 'சேட்டை தம் மடியகத்து' என்ற திரு மாலைப் பாசுரத்தில் தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் மூதேவி யைக் குறித்தமை காண்க. ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரை மலரிற் பிறந்தவள். 'வனச மலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே' என்கிறபடியே பொய்கை யாழ்வாரும் தாமரைப்பூவில் தோன்றியவர். இந்த வொற்றுமைநயம் பற்றித் தங்காய்! என விளிக்கத் தகுதியுடையாரிவ் வாழ்வார். 'நனைத்தில்லஞ் சேறாக்கும்' என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளாநின்ற பெருமாளை நோக்கி பரத்வாஜ மஹர்ஷி "பங்க திக்தஸ்து ஜடிலோ பரதஸ்த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார். இங்கு பரதாழ்வான் சேறுபூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்து யாது? இரவும் பகலும் நிச்சலும் அழுதழுது நனைத்தில்லம் சேறாக்கினன் என்றபடி. "வண் பொன்னிப் பேராறுபோல் வருங்கண்ண நீர்கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்" என்றார் குலசேகரப் பெருமாளும். அவ் வண்ணமாகவே பொய்கை யாழ்வாரும் "பழுதே பலபகலும் போயினவென்று

அஞ்சி யழுதேன்" என்று தாமே பேசினபடியே, அழுதவராதலால் நனைத்தில்லஞ் சேறுக்கின ரென்க.

[கனைத்து] முதன் முதலாகப் பேசத்தொடங்கும்போது கனைப்பது இயல்பு. பொய்கையார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவரென்பது இவ்வினையெச்சத்தினால் தோற்றுவிக்கப்படும். [இளங் கற்றெருமை] எருமை யென்றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணாக்ரமத்தால் தேவ தேவ திவ்ய மஹிஷீ என்றவாறு. எம்பெருமானுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியை யொப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை. "இளங் கன்றுகளையுடைய" என்று விசேஷண மிட்டதனால், மற்றை யாழ்வார்களுள் முதல்வரிறே யிவர். [கன்றுக் கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தியருளிச் செய்யத்தொடங்கினது கன்றுகளான நம்போல்வார் பக்க லிலுள்ள பரம க்ருபையா லென்கை.

[நினைத்து முலைவழியே நின்று பால்சோர.] பத்வத் குணங்களை நினைத்த வாறே அந்த நினைவு தானே ஊற்றாகப் பால் போன்ற ஸ்ரீஸூக்திகள் பெருகப் புக்கன என்றபடி. [பனித் தலைவீழ நின்வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால் இவரது வாசற் கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலை வீழ ப்ராப்தமே யாகுமிறே. [சினத்தினா லித்யாதி] இது ஸ்ரீராம குண கீர்த்தனம். மஹர் ஷிகளின் ஞானக் கண்ணுக்கும் இலக்காகாத வொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ் வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண்முடியைப், பாதமத்தா லெண்ணினான் பண்பு." என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!" என்றதற்குப் பொருந்த "மனத்துக் கினியானை" என்றாள். [இனித்தானெழுந்திராய்] "பழுதே பல பகலும்" என்கிற பாசுரம் பேசின பிறகுங்கூட உறங்கலாமோ! என்கை. முமுக்ஷுப் படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இறந்த நாளைக்குக் கூப் பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை" என்ற ஸ்ரீ ஸூக்தியும் இங்கு அநுஸந் தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வாரது பாசுரத்தை அழகாக நினைப்பூட்டுகிறபடி காண்மின்.

இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முந்தின ஆழ்வார்களை யெல்லாம் உணர்த் திற்றாயிற்று. "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றுமுள்ள ஸம்ப்ரதாயப்படிக்கு ஸ்ரீ மதுரகவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்ந்தவர்களாதலால் இவ்விரு வரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக் கிடக்கிறது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங்கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவனே! என்றபடியாகும். இங்கு நற் செல்வனென்பது நம்மாழ்வாரை, அவர் திருவாய்மொழி அருளிச்செய்கையில் மதுர கவிகள் அவருடைய கையின் ஸ்தாநீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இந்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானுரைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்ற ஞானத் திருப் பாவை பாடிய பாவை தங்கை" என்றும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று முள்ளவை காண்க. ஆண்டாள் தன்னைத் தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோவென்று விரஸமாக வினவுவார்க்கு நாம் விடை யளிக்க வல்லோமல்லோம். சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போரு கிறோ மத்தனை.

இனி மேல் மூன்று பாசுரங்கள் ஆண்டாளுக்குப் பிறகு தோன்றிய மூன்று ஆழ்வார்களை அடைவே உணர்த்துவன. பிந்திய ஆழ்வார்களின் படிகள், முந்தியே

ஆண்டாளுக்கு எங்ஙனே தெரியுமென்று சிலர் சங்கிப்பரேல், "விதயச்ச வைதி காஸ்த்வதீய கம்பீரமனோநு ஸாரிண:" என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியையும் "ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநுதாவதி" என்ற பவபூதி பாஷிதத்தையும் அன்னவர்கட்கு நினைப்பூட்டுவோம்.

8. **புள்ளின்வாய் கீண்டானை.**—இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப் பொடி யாழ்வாரை யுணர்த்தும் பாசுரம். [**போதுஅரிக் கண்ணினாய்!**] புஷ்பங்களை ஹரிப் பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்துபவரே! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரிறே இவ்வாழ்வார். "துளபத் தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி" "தொடை யொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி" என்றவை காண்க. **பாவாய்!** என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். பதிவ்ரதா சிரோமணியைப் பாவை யென்பர். இவ்வாழ்வார் அரங்கனொருவனுக்கே வாழ்க் கைப்பட்டு வேறொரு திருப்பதி யெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவராதலால் இவ்வகையான கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையா னெதிரே ஒருவர் "பதின்மர் பாடும் பெருமாள்!" என்று ஏத்த, அதைக் கேட்ட பெரிய கேள்விஜீயர், 'சோழியன் கெடுத்தான் காணும்; அந்த ஏற்றம் நம் பெரு மாளுக்கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்றார் என்ற ஐதிஹ்யமும் இங்கு நினைக்கத் தக்கது.

[நன்னாளால்] 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்' என்ற திருவாக் கிலேயே இச்சொல்லும் வருகின்றது. தொண்டரடிப்பொடிகள் திருவவதரித்தது மார்கழித்திங்களே யாதலால் நன்னாளென்னத் தட்டுண்டோ? [கள்ளந் தவிர்ந்து] 'சூதனாய்க் கள்வனாகி' என்றும் 'கள்ளமேகாதல் செய்து கள்ளத்தேனானுந் தொண் டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத்தைப் பேசிக்கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன்வட்டில் விஷயமான கள்ளம் அடிபட்டுக்கிடக்கிறது. அதுதவிர்ந்து பகவத் பாகவதகோஷ்டியில் கலந்தபடியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில் வாஸமுடையவராதலால் அவ் விடத்து அடையாளமாகப் **புள்ளுஞ் சிலம்பினகாண்** என்பது இப்பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி.] நீராட்டம் முதலிய நித்யகர்மாநுஷ்டானங்களையும் தவிர்ந்து சிலகாலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரதுசரிதையிற் காணத்தக்கது. புள்ளின்வாய் கீண்டானையென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது. இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வள வெழுந்தவளமாட மதுரைமா நகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ணபிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளி யெழுச்சி யில் 'மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா!' என்று இராமபிரானுடைய கீர்த்தியையும் பாடினமை யுணர்க. 'பிள்ளைகளெல்லாரும்' என்றது ஆண்டாள் தனக்கு முந்தின ஆழ்வார்களெல்லாரை யும் சொன்னபடி.

9. **உங்கள் புழைக்கடை.**—தொண்டரடிப் பொடிகளுக்கு அடுத்த திருப்பாணாழ் வாரையுணர்த்தும் பாசுரமிது. இதில், **நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்!** என்ற மூன்றுவிளிகளும் பாண்பெருமாளுக்கு நன்கு பொருந்தும். நங்கை யென்பது குண பூர்த்தியைச் சொல்லுகிறது. லோக ஸாரங்கமஹா முனிகள் வந்து என் தோளின் மீது ஏறிக்கொள்ளுமென்ன, அத்யந்த பாரதந்த்ர்யஸ்வரூபத்தை நினைத்து அதற்கு உடன்பட்டமை குணபூர்த்தி, அங்ஙனம் அந்தணர் தலைவரது தோளின்மீது ஏறி யிருக்கச்செய்தேயும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் 'அடியார்க்கென்னை யாட் படுத்த விமலன்' என்றே பேசினவராதலால் நாணாதவர். (நாண்—அஹங்காரம்.) 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவு

மின்கள்' என்று தேசிகன் பணித்தபடி ஸகல வேதார்த்தங்களையும் பத்து பாசுரத்திலே அடக்கிப் பேசின பரம சதுரராதலால் நாவுடையார். "கையினர் சுரிசங்கன லாழியர்" என்று சங்கொடு சக்கரமேந்தின வழகை யநுபவித்தமை பற்றியும் "கரிய வாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்" என்று கண்ணழகில் ஈடுபட்டுப் பேசினமைனமை பற்றியும் "சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் பங்கயக் கண்ணனைப் பாட" என்றாள். இவ்வாழ்வார் தமது சாதி நிலைமைக்கு ஏற்ப வாழ்ந்த விடத்தைக்கருதி உங்கள் புழைக்கடை யித்யாதி அருளிச் செய்யப்பட்டது. இவரது சரிதையில் ஸம்பந்தப்பட்ட லோகஸாரங்க மஹாமுனிகளின் தன்மையைக் காட்டுவது போலுள்ளது செங்கற் பொடிக் கூறை யித்யாதி. 'எங்களை முன்னமெழுப்புவான் வாய் பேசும் நங்காய்' என்பதில் ஒரு அழகிய பொருள் தொனிக்கும். (அதாவது—) எழுப்புவதாவது—தூக்கிக்கொள்வது. எங்களை என்றது பாகவதர்களை யென்றபடி. பாண்பெருமாளே! உம்முடைய முதற் பாசுரத்தில் "அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்" என்றசொல் நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத் தெரிகின்றது. உமது கதையோ அப்படியில்லை. மஹாபாகவதரான லோகஸாரங்க மஹா முனியின் தோளின் மீதேறி நீர் இருந்ததாகவுள்ளது. ஆகவே, முந்துறமுன்னம் பாகவத சேஷத்வத்தை நீர் சொல்லிக் கொண்டது வாய்பேசு மத்தனையே போலும் என்று விநோதமாகக் கூறுகிறபடி.

10. எல்லேயிளங்கிளியே.—பாண் பெருமாளுக்கு அடுத்தவரும் ஸர்வகநிஷ்டருமான திருமங்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இவ்வாழ்வார் இரண்டு ஆய்ச்சிகளுக்குப் பரஸ்பர ஸம்வாதமாக *மானமரு மென்னோக்கி* என்றொருபதிகம் அருளிச் செய்தவராதலால் இவரை யுணர்த்தும் பாசுரம் பரஸ்பர ஸம்வாதரூபமாகவே அமைக்கப்பட்டது. 'கிளிபோல் மிழற்றி நடந்து' 'மென்கிளிபோல் மிக மிழற்றுமென் பேதையே' என்று பல பாசுரங்களில் இவர் தம்மைக் கிளியாகச் சொல்லிக்கொண்டவராதலால் கிளியே! என்ற விளி இவர்க்குப் பொருந்தும். அன்றியும், சொல்லிற்றையே சொல்லுவது கிளியின் இயல்பு. அதுபோல இவர் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற' என்றபடி நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை யநுசரித்தே அருளிச் செய்தவராதலாலும் கிளியென்றது. இரண்டாமடி திருமங்கை யாழ்வாருடைய விடையளிப்பு. [வல்லையுன் கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்.] இது கலியனை நோக்கி ஆண்டாள் கூறுமது. 'வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே' என்று நீர் மிகக் கடினமாகப் பேச வல்லீரென்பது எனக்கு, [பண்டே—நீர் அவதரித்துப் பாசுரம் பேசுவதற்கு முன்னமே] தெரியுங்காணும் என்றாள். அது கேட்ட கலியன் வல்லீர்கள் நீங்களே='கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டவன்மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே' என்று அற வெட்டிதாகச் சொன்ன உன் பேச்சு கடினமா? என் பேச்சு கடினமா? நீயே பார்க்கலாம்—என்றார். என்றவுடனே *நண்ணாதவாளவுணர்* *கண்சோர வெங்குருதி* முதலிய திருமொழிகளில் தாம் அநுஸந்தித்த பாகவத சேஷத்வ காஷ்டையை நினைத்து *நானே தானாயிடுக* என்றார். "உனக்கென்ன வேறுடையை" என்றது திருமங்கை யாழ்வார்க்கு அஸாதாரணமான திருமடல் திவ்ய ப்ரபந்த வக்த்ருத்வத்தை யுளப்படுத்தியதாகும். [எல்லாரும் போந்தாரோ இத்யாதி.] கலியனுக்கு முன்னமே மற்றுள்ள ஆழ்வார்கள் அவதரித்து, பன்னிருவர் என்கிற ஸங்கியை இவரோடு நிரம்பிற்று என்று தெரிவிக்கப்பட்டது.

[வல் ஆனை கொன்றானை—மாயனைப் பாட.] ஆனையைக் கொன்ற விஷயத்தை ஒரு ஆச்சரியமாக எடுத்துப் பேசினவர் கலியன். "ஆவரிவை செய்தறிவார் அஞ்சன [illegible] போலே" என்ற பெரிய திருமொழி காண்க. அடிக்கடி கலியன் வாய்வெருவு

வதும் வல்லானை கொன்ற வரலாற்றையே; "கவள யானைகொம் பொசித்த கண்ண னென்னும்" இத்யாதிகள் காண்க. [மாற்ருரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட] எம்பெருமான் தன் திறத்தில் மாறு செய்பவர்களது செருக்கை வெகு ஆச்சரிய மாக அடக்குபவன் என்பதைக் காட்டுகின்ற சரிதைகளுள் கோவர்த்தநோத்தரண கதை மிகச் சிறந்தது. மாறுசெய்த இந்திரனுக்கு ஒரு தீங்கு மிழைக்காமலே கண்ணன் அவனது கொழுப்பை யடக்கினனிறே. இக்கதையிலே கலியன் மிக்க வூற்றமுடையவர்; பெரிய திருமொழியை முடிக்கும்போதும் "குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை" என்ருர்; சரமப் பிரபந்தமாகிய திருநெடுந் தாண்டகத்தை முடிக்கும்போதும் "குன்றெடுத்த தோளினனை" என்றே தலைக்கட்டினர்.

ஆக விங்ஙனேயுள்ள பல்வகைப் பொருத்தங்களினல் ஆண்டாள் ஒவ்வொரு பாசுரத்தாலும் ஒவ்வொரு திருத் தகப்பனுரை யுணர்த்தினளென்று நிர்வஹிக்கும் படி. இப்பொருத்தங்களை இன்னமும் விவரிக்கப் புகுந்தால் "பன்னி யுரைக்குங்கால் பாரதமாம்" என்ற கணக்கிலே விரிவு பெரிதுடையதாகுமென்று ஸம்க்ஷிப்தமாயிற்று.

காஞ்சீவாதிபயங்கரவம்சியாண்ணங்கரார்ய ஸங்கலிதா |
கோதாஸூக்திரஹஸ்ய ப்ரகாசிகைஷா ஸதாம்முதே பூயாத் ||

திருப்பாவை உரை முற்றிற்று.

நீராட்டம்—வெண்ணெயளைந்த

[பெரியாழ்வார் திருமொழி—2-4]

அவதாரிகை:—யசோதைப்பிராட்டி கண்ணபிரானை நீராட்டவேணு மென்ரு சைப்பட்டு அதற்குவேண்டிய உபகரணங்களையெல்லாம் ஸித்தப்படுத்தி அப்பிரானைப் பலபடியாக நல்வார்த்தை சொல்லிப் புகழ்ந்தழைத்து மஞ்சனமாட்டியதை அருளிச் செய்வது.

*வெண்ணெயளைந்த குணுங்கும் விளையாடுபுழுதியுங்கொண்டு**
*திண்ணெனவிவ்விராவுன்னைத் தேய்த்துக்கிடக்கநானொட்டேன்**
*எண்ணெய்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதுமிருந்தேன்**
நண்ணலரியபிரானே நாரணநீராடவாராய். (1)

வெண்ணெய் அளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு இ இரா தேய்த்து கிடக்க உன்னை திண்ணென நான் ஒட்டேன் எண்ணெய் புளி பழம் கொண்டு இங்கு எத்தனை போதும் இருந் தேன் கண்ணல் அரிய பிரானே நாரண நீராட வாராய்.

வெண்ணெயளைந்ததனுலான மொச்சை நாற்றத்தையும் விளை யாடுவதினுற் படிந்த புழுதியையும் (உடம்பிற்) கொண்டிருந்து, (அதனுல்,) இன்றை இரவில் (உடம்பைப் படுக்கையிலே) தேய்த்துக்கொண்டு படுத்திருக்கும்படி (விட) உன்னை நிச்சய மாக நான் ஸம்மதிக்கமாட்டேன்; (தேய்த்துக் கொள்வதற்கு வேண்டிய) எண்ணெயையும் புளிப்பழத்தையும் ஸித்தமாக வைத்துக்கொண்டு இங்கே எவ்வளவுகாலமாக [வெகு கால மாக] (உன் வரவை யெதிர்பார்த்து) இராநின்றேன்; (ஒருவராலும் ஸ்வயத்நத்தால்) கிட்டக்கூடாத ஸ்வாமியே! நாராயணனே! நீராடுவதற்கு வரவேணும்.

*கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால்**
*தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டி விழுங்குமாகாண்பன்**
*நின்றமராமரஞ்சாய்த்தாய் நீபிறந்ததிருவோணம்**
இன்றுநீராடவேண்டு மெம்பிரானேடாதேவாராய். (2)

நின்ற மராமரம் சாய்த்தாய் கன்று கள் ஓட செவியில் கட்டெறும்பு பிடித்திட்டால் தென்றி கெடும் ஆகில் வெண்ணெய் திரட்டி விழுங்கும் ஆ காண்பன் இன்று நீ பிறந்த திரு ஓணம் நீ. நீர் ஆட வேண்டும் ; எம்பிரான் ஓடாதே வாராய்.

நிலையாய் நின்ற ஸப்தஸாலவ்ருக்ஷங்களை (ஊடுருவ அம்பெய்து) சாய்த்தவனே ! பசுவின் கன்றுகள் வெருண்டோடும்படி (அக்கன்றுகளின் காதில் கட்டெறும்பைப் பிடித்துப் போகட்டால் (அதனால் அக்கன்றுகள் வெருண்டு) சிதறிப் போய் (கண்டுபிடிக்க முடியாதபடி ஓடிப்போய்விட்டால்) (பின்பு நீ,) வெண்ணெயை திரட்டி விழுங்கும்படியை பார்ப்பேன், [வெண்ணெயே உனக்கு உண்ணக் கிடைக்காதென்றபடி ;] இந்த நாள் நீ அவதரித்த ச்ரவணநக்ஷத்ரமாகும் ; (ஆகையால்) நீ நீர் ஆடவேண்டும்—, எம்பிரான் ! ஓடாதே வாராய்—.

*பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதென்னெஞ்சம்**
*ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன்**
*காய்ச்சினநீரொடுநெல்லி கடாரத்திற்பூரித்துவைத்தேன்**
வாய்த்தபுகழ்மணிவண்ணா மஞ்சனமாடநீவாராய். (3)

பேய்ச்சி முலை உண்ண கண்டு பின்னையும் என் நெஞ்சம் நில்லாது ஆய்ச்சியர் எல்லாரும் கூடி அழைக்கவும் நான் முலை தந்தேன் நெல்லியொடு காய்ச்சின நீர் கடாரத்தில் பூரித்து வைத்தேன் வாய்த்த புகழ் மணிவண்ணா மஞ்சனம் ஆட நீ வாராய்.

பூதனையினுடைய முலையை (அவளுடைய உயிரோடும்) (நீ) உண்டுவிட (அதைப்) பார்த்தும் (நான் அஞ்சி ஓடவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல்) பின்பும் என் மனங் கேளாமல் இடைச்சிகளெல்லாரும் ஒன்று கூடி கூப்பாடுபோட்டுக் கதறவும் (உன்மேல் அன்புகொண்ட) நான் முலை (உண்ணக்) கொடுத்தேன். நெல்லியையிட்டு காய்ச்சின வெந்நீரை சருவத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன். பொருந்திய யசஸ்ஸையுடைய நீலமணிபோன்ற நிறத்தனான கண்ணனே ! நீராட நீ வாராய்—.

*கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து**
*வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே**
*மஞ்சளுஞ்செங்கழுநீரின் வாசிகையும்நாறுசாந்தும்**
அஞ்சனமுங்கொண்டுவைத்தேன் அழகனேநீராடவாராய். (4)

கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து வஞ்சகம் பேய் மகள் துஞ்ச முலைவாய் வைத்த பிரானே மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறு சாந்தும் அஞ்சனமும் கொண்டுவைத்தேன் அழகனே நீராட வாராய்.

கம்ஸனுடைய கபடமான ஆலோசனையினாலே (நலிவதாக) வந்த (அஸுராவேசத்தாலே) க்ரூரமான சகடத்தை (திருவடிகளால்) உதைத்து முறித்துவிட்டு, வஞ்சனையுள்ள பூதனையானவள் முடியும்படி (அவளுடைய) முலையிலே வாயை வைத்த பிரபுவே ! (உன் மேனி நிறம் பெறும்படி சாத்துவதற்குஉரிய) மஞ்சளையும் (நீராடிய பிறகு சாத்திக்கொள்ள வேண்டிய) செங்கழுநீர் மாலையையும் பரிமளிதமான சந்தனத்தையும் (கண்களிலிடும்) மையையும் கொண்டு வைத்தேன்—; அழகனே ! நீராட வாராய்—.

*அப்பங்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலிற்கலந்து**
*சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி**
*செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர்**
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரானிங்கேவாராய். (5)

நம்பி செப்பு இள மெல் முலையார்கள் சிறு புறம் பேசி சிரிப்பர். பாலில் அக்காரம் கலந்து அப்பம் கலந்த சிற்றுண்டி சொப்பட தின்னல் உறுதி ஏல் சொப்பட

(பாலசாபலத்தால்) பூர்ணனே ! (நீ நீராடாதிருந்தால்) பொற்கலசம் போன்ற இளமையான மெல்லிய முலையையுடைய மாதர்கள் (உன் மேலே) அற்பமான குற்றங்களை மறைவிற் சொல்லி பரிஹஸிப்பார்கள். (அன்றியும்) பாலிலே வெல்லக் கட்டியை சேர்த்து (பிசைந்து) அப்பத்தையும் (அப்படியே)

நீராடவேண்டும் பிரான் சோத்தம் இங்கே வாராய்.	சேர்ந்த சிற்றுண்டியையும் நன்றாக நான் சுட்டுவைத்தேன்—; (நீ அவற்றை) தின்னவிரும்பினாயாகில் நன்றாக நீராடவேண்டும்; ஸ்வாமியே! உனக்கு ஓரஞ்ஜலி; இங்கே வாராய்.—

*எண்ணெய்க்குடத்தையுருட்டி யிளம்பிள்ளைகிள்ளியெழுப்பி**
*கண்ணைப்புரட்டிவிழித்துக் கழைகண்டுசெய்யும் பிரானே**
*உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே**
வண்ணமழகிய நம்பீ மஞ்சனமாடநீவாராய். (6)

எண்ணெய் குடத்தை உருட்டி இள பிள்ளை கிள்ளி எழுப்பி கண்ணை புரட்டி விழித்து கழை கண்டு செய்யும் பிரானே கனிகள் உண்ண தருவன் ஒலி கடல் ஓதம் நீர் போலே வண்ணம் அழகிய நம்பீ—	எண்ணெய் நிறைந்த குடத்தை உருட்டி விட்டு (உறங்குகிற) சிறு குழந்தைகளை கையால் வெடுக்கெனக் கிள்ளி (தூக்கம் விட்டு) எழுந்திருக்கச் செய்து கண் இமையை தலை கீழாக மாற்றி (அப்பூச்சி காட்டி) விழித்து பொறுக்க முடியாத தீம்புகளை செய்து வருகிற ஸ்வதந்த்ரனே! (நல்ல) பழங்களை (நீ) உண்ணும்படி (உனக்குக்) கொடுப்பேன்; கோஷியா நின்ற கடலினுடைய அலைகளையுடைய ஜலம் போலே திரு மேனியின் நிறம் அழகாயிருக்கப் பெற்ற உத்தம புருஷனே! மஞ்சனம் ஆட நீ வாராய்—.

*கறந்தநற்பாலுந்தயிருங் கடைந்துறிமேல்வைத்த வெண்ணெய் **
*பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேனெம்பிரானே**
*சிறந்தநற்றாயலர்தூற்றும் என்பதனாற்பிறர்முன்னே**
மறந்துமுரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (7)

கறந்த நல் பாலும் தயிரும் கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய் பிறந்ததுவே முதல் ஆக பெற்று அறியேன் சிறந்த நல் தாய் அலர் தூற்றும் என்பதனால் பிறர் முன்னே மறந்தும் உரை ஆட மாட்டேன்—	எம்பிரானே—! (அந்தந்த காலங்களில்) கறக்கப்பட்ட நல்ல பாலையும் தயிரையும் (தயிரைக் கடைந்து) உறியில் வைத் திருக்கிற வெண்ணெயையும், (நீ) பிறந்தவன்று தொடங்கி கண்டறியேன்; (எல்லாரினுங் குழந்தைக்குச்) சிறக்கின்ற பெற்ற தாயும் பழி சொல்லுகின்றாளே! என்று சொல்லுவார் களே என்ற அச்சத்தினால் அயலாரெதிரில் ஞாபகந்தவறியும் (உனக்குக் குறைவைத்தருகின்ற) சொல்லைச் சொல்ல மாட் டேன்; மஞ்சனம் ஆட நீ வாராய்—.

*கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து**
*பின்றொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய்போலும்**
*நின்திறத்தேனல்லேன்நம்பீ நீபிறந்ததிருநன்னாள்**
நன்றுநீநீராடவேண்டும் நாரணாவோடாதேவாராய். (8)

கன்றினை வால் ஓலை கட்டி (கன்றினை) கனிகள் உதிர எறிந்து பின் ஓடி தொடர்ந்து ஓர் பாம்பை பிடித்துக் கொண்டு ஆட்டினாய் போலும் நம்பி நின் திறத்தேன் அல்லேன் நீ பிறந்த நல் திரு நாள்—	கன்றினுடைய வாலிலே ஒரு ஓலையைக் கட்டி (அஸுரத் தன்மையினால் உன்னைக் கொல்லவந்த அந்த) கன்றை (எறி குணிலாக்கொண்டு அஸுராவேசமுள்ள விளாமரத்தின்) பழங்கள் (கீழே) உதிர்ந்து விழும்படி வீசி பின்பு ஓடிப்போய் (காளியனென்ற) ஒரு ஸர்ப்பத்தை பிடித்துக்கொண்டு ஆட்டின வனேதான் (நீ); ஒன்றிலும் குறைவில்லாதவனே! (நான்) உன் விஷய மொன்றையும் அறியாதவளா யிராநின்றேன்; (அது கிடக்கட்டும்;) நீ அவதரித்த திருநக்ஷத்திரமாகும் (இந்நாள்); (ஆகையால்) நீ நன்று நீர் ஆடவேண்டும்—; நாரணா ஓடாதே வாராய்—.

*பூணித்தொழுவினிற்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி**
*காணப்பெரிதுமுகப்பன் ஆகிலுங்கண்டார்பழிப்பர்**
*நாணெத்தனையுமிலாதாய் நப்பின்னைகாணிற்சிரிக்கும்**
மாணிக்கமேயென்மணியே மஞ்சனமாடநீவாராய். (9)

பூணி தொழுவினில் புக்கு புழுதி அளைந்த பொன் மேனி காண பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பர் எத்தனையும் நாண் இலாதாய் நப்பின்னை காணில் சிரிக்கும்—

பசுக்கள் கட்டிய கொட்டகையிலே நுழைந்து புழுதி மண்ணில் அளைந்(து அதனால் மாசு படிந்)த (உனது) அழகிய உடம்பைப் பார்ப்பதற்கு மிகவும் (நான்) விரும்புவேன்; ஆனாலும் (உன்னைப்) பார்ப்பவர்கள் ('இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கின்றது' என்று என்னை) ஏசுவார்கள்; (அன்றியும்,) சிறிதும் லஜ்ஜை யென்பது இல்லாதவனே! நப்பின்னையானவள் நீ இப்படி யிருப்பதைக் கண்டால் சிரிப்பள்; என் மாணிக்கமே! (என்) மணியே! மஞ்சனம் ஆட நீ வாராய்—.

*கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானையுகந்து**
*வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை**
*பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல்**
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. (10)

கார் மலி மேனி நிறத்து கண்ண பிரானை வார் மலி கொங்கை அசோதை உகந்து மஞ்சனம் ஆட்டிய ஆற்றை பார் மலி தொல் புதுவை கோன் பட்டர் பிரான் சொன்ன சீர் மலி செந் தமிழ் பாடல் வல்லார் யாதும் தீ வினை இலர்.

காளமேகத்திற் காட்டிலும் சிறந்த திருமேனி நிறத்தையுடைய கண்ணபிரானை கச்சுக்கு அடங்காமல் விம்முகின்ற ஸ்தனங்களையுடைய யசோதைப்பிராட்டி விரும்பி நீராட்டின ப்ரகாரத்தை—, பூமியிலே சிறந்த பழமையான ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் அருளிச்செய்த அழகு நிறைந்த செந்தமிழாலாகிய (இப்) பாசுரங்களை ஓத வல்லவர்கள் சிறிதும் பாவமில்லாதவராவர்.

அடிவரவு:—வெண்ணெய், கன்று, பேய்ச்சி, கஞ்சன், அப்பம், எண்ணெய், கறந்த, கன்றினை, பூணி, கார், பின்னை.

பூச்சூடல்—ஆநிரை மேய்க்க

[பெரியாழ்வார் திருமொழி 2—7.]

[கண்ணபிரானை நீராட்டினபின் பூச்சூடவாவென்று யசோதைப் பிராட்டி அழைத்தமை கூறுவது.]

*ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய்**
*கானகமெல்லாந்திரிந்து உன்கரியதிருமேனிவாட**
*பானையிற்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாஞ்சிரிப்ப**
தேனிலினியபிரானே செண்பகப்பூச்சூட்டவாராய். (1)

தேனில் இனிய பிரானே பற்றாதார் எல்லாம் சிரிப்ப பானையில் பாலை பருகி உன் கரிய திருமேனி வாட கானகம் எல்லாம் திரிந்து ஆ நிரை மேய்க்க நீ போதி அரு மருந்து ஆவது அறியாய் செண்பகம் பூ சூட்ட வாராய்.

தேனைக்காட்டிலும் போக்கியனாயிருக்கிற ப்ரபுவே! பகைவரெல்லாரும் பரிஹஸிக்கும்படி (கறந்த) பானையிலே யுள்ள பச்சைப் பாலைக்குடித்து (பின்பு) உன்னுடைய ச்யாமமான அழகிய திருமேனி வாடும்படி காட்டிடம் முழுதும் திரிந்துகொண்டு பசுக்களின் திரளை மேய்ப்பதற்கு நீ போகிறாய்; (நீ உன்னை) பெறுதற்கரிய தேவாம்ருதம் போன்றவனாதலை அறிகிறாயில்லை; (இனி நீ கன்று மேய்ப்பதை விட்டிட்டு) செண்பகப்பூவை (நான்) சூட்டும்படி வருவாயாக.

*கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்குங்கண்கள்**
*உருவுடையாயுலகேழும் உண்டாகவந்துபிறந்தாய்**
*திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய்**
மருவிமணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (2)

கண்கள் உன்னை கண்டால் கரு உடை மேகங்கள் கண்டால் ஒக்கும் உரு உடையாய் உலகு ஏழும் உண்டாக வந்து பிறந்தாய் திரு உடையாள் மணவாளா திரு அரங்கத்தே கிடந்தாய் மணம் மருவி கமழ்கின்ற மல்லிகைப்பூ—

கண்களானவை உன்னைப் பார்த்தால் கர்ப்பத்தை யுடைய (நீர் கொண்ட) மேகங்களைப் பார்த்தால் (அதை) ஒத்துக் குளிர்கின்ற வடிவையுடையவனே! ஏழுலகங்களும் ஸத்தை பெறும்படி திருவவதரித்தவனே! (உன்னை) ஸம்பத்தாகவுடைய பிராட்டிக்கு நாயகனே! கோயிலிலே பள்ளிகொண்டிருப்பவனே! வாஸனை நீங்காமலிருந்து பரிமளிக்கிற மல்லிகைப்பூவை சூட்ட வாராய்—.

*மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு**
*கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி**
*நிச்சலுந்தீமைகள்செய்வாய் நீள்திருவேங்கடத்தெந்தாய்**
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (3)

மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம் இடம் புக்கு கச்சொடு பட்டை கிழித்து காம்பு துகில் அவை கீறி நிச்சலும் தீமைகள் செய்வாய் நீள் திருவேங்கடத்து எந்தாய் பச்சை தமனகத்தோடு பாதிரிப்பூ—

நடுநிலையிலும் மேல் நிலையிலும் ஏறிப்போய் பெண்களிருக்கிற இடத்திலே புகுந்து (அவர்களுடைய முலைகளின் மேலிருந்த) கச்சுக்களையும் பட்டாடைகளையும் கிழித்துவிட்டு (மற்றும் அப்பெண்கள் உடுத்துள்ள) கரைக்கட்டின சேலையையும் கிழித்துப்போட்டு (இப்படியே) ப்ரதிநித்யம் துஷ்ட சேஷ்டைகளை செய்பவனே! உயர்ந்த திருமலையிலெழுந்தருளியிருக்கிற ஸ்வாமியே! பசு நிறமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரிப்பூவையும் சூட்ட வாராய்—.

*தெருவின்கண்நின்றிளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே**
*மருவுந்தமனகமுஞ்சீர் மாலைமணங்கமழ்கின்ற**
*புருவங்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே**
உருவமழகியநம்பி உகந்திவைசூட்டநீவாராய். (4)

புருவம் கருங்குழல் நெற்றி பொலிந்த முகில் கன்று போலே உருவம் அழகிய நம்பி தெருவின் கண் நின்று இள ஆய்ச்சி மார்களை தீமை செய்யாதே மருவும் தமனகமும் சீர் மாலை மணம் கமழ்கின்ற இவை உகந்து—

புருவங்களையும் கருநிறமான கூந்தலையும் (இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள) நெற்றியையும்கொண்டு விளங்குகின்ற மேகக்கன்றுபோலே வடிவழகிய சிறந்தோனே! தெருவிலே நின்றுகொண்டு இடைச் சிறுமிகளை தீம்புசெய்யாமலிரு; மருவையும் தமநகத்தையும் (சேர்த்துக்கட்டின) அழகிய மாலைகள் வாஸனை வீசுகின்றன; இவற்றை மகிழ்ச்சிகொண்டு சூட்ட நீ வாராய்—.

*புள்ளினைவாய்பிளந்திட்டாய் பொருகரியின்கொம்பொசித்தாய்**
*கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய்**
*அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன்**
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (5)

புள்ளினை வாய் பிளந்திட்டாய் பொரு கரியின் கொம்பு ஒசித்தாய் கள்ளம் அரக்கியை மூக்கொடு காவலனை தலை கொண்டாய் நீ வெண்ணெய் அள்ளி விழுங்க அஞ்

பகாஸுரனை வாய்கிழித்துப் பொகட்டவனே! யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை பறித்தவனே! வஞ்சனையையுடைய ராக்ஷஸியாகிய சூர்ப்பணகையின் மூக்கையும் (அவளுக்குப்) பாதுகாவலாயிருந்த ராவணனுடைய தலையையும் அறுத்தவனே! (இப்படிப்பட்ட) நீ வெண்ணெயை வாரி விழுங்க சிறிதும் பயப்படாமல் (எப்போது குழந்தை பிறந்து

சீது அடியேன் அடித்தேன் தெள் ளிய நீரில் எழுந்த செங்கழுநீர்—

வெண்ணெய் விழுங்கப் போகிறது?) என்றிருந்த நான், அடித்தேன்; (அப்பிழையைப் பொறுத்து) தெளிவான நீரிலே உண்டான செங்கழுநீரை சூட்ட வாராய்—.

*எருதுகளோடுபொருதி யேதுமுலோபாய்காண்நம்பி**
*கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்**
*தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு**
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய். (6)

நம்பி! எருதுகளோடு பொருதி ஏதும் உலோபாய் காண் கருதிய தீமைகள் செய்து கஞ்சனை கால் கொடு பாய்ந்தாய் தெருவின்கண் தீமைகள் செய்து சிக்கென மல்லர் களோடு பொருது வருகின்ற பொன்னே—

சிறந்தோனே! (நப்பின்னையை மணம் புணர்வதற்காக) ஏழு ரிஷபங்களுடன் போர்செய்ய நின்ருய்; எதிலும் [ஒன்றிலும்] விருப்பமில்லாதவனு யிராநின்ருய்; (கம்ஸன்) உன்மேல் செய்ய நினைத்த தீம்புகளை (நீ அவன்மேற்) செய்து (அந்தக்) கம்ஸனை காலிஞல் [காலைக்கொண்டு] பாய்ந்தவனே! (அக்ரூரர் மூலமாயழைக்கப்பட்டுக் கம்ஸனரண்மனைக்குப் போகும் போது) தெருவிலே தீமைகளைச் செய்துகொண்டு போய் வலிமையாக (சாணூரமுஷ்டிகரென்னும்) மல்லர்களுடனே போர்செய்துவந்த பொன் போலருமையானவனே! புன்னைப்பூ சூட்ட வாராய்—.

*குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே**
*மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா**
*இடந்திட்டிரணியனெஞ்சை யிருபிளவாகமுன்கீண்டாய்**
குடந்தைக்கிடந்தவெங்கோவே குருக்கத்திப் பூச்சூட்டவாராய். (7)

குடங்கள் எடுத்து ஏறவிட்டு கூத்து ஆடவல்ல எம் கோவே மடம் கொள் மதிமுகத்தாரை மால் செய்யவல்ல என் மைந்தா முன் இரணியன் நெஞ்சை இடந்திட்டு இரு பிளவு ஆக கீண்டாய் குடந்தை கிடந்த எம் கோவே—

பல குடங்களை தூக்கி உயரவெறிந்து (இப்படி) குடக்கூத்தை யாடுவதற்கு ஸாமர்த்தியமுடைய எம்முடைய தலைவனே! மடப்பமென்ற குணத்தையுடைய சந்த்ரன் போன்ற முகத்தை யுடைய பெண்களை மயக்கவல்ல எனது புத்திரனே; நரஸிம்ஹாவதாரத்திலே ஹிரண்யாஸுரனுடைய மார்பை (திருவுகிர்களை) ஊன்றவைத்து இரண்டு பிளவாகப் போம்படி பிளந்தவனே! திருக்குடந்தையில் பள்ளிகொள்ளுகிற எமது தலைவனே! குருக்கத்திப்பூ சூட்ட வாராய்—.

*சீமாலிகனவனேடுதோழமைக் கொள்ளவும்வல்லாய்**
*சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய்**
*ஆமாறறியும்பிரானே அணியரங்கத்தேகிடந்தாய்**
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (8)

சீமாலிகன் அவனேடு தோழமை கொள்ளவும் வல்லாய் அவனை நீ சாம் ஆறு எண்ணி சக்கரத்தால் தலை கொண்டாய் ஆம் ஆறு அறியும் பிரானே அணி அரங்கத்தே கிடந்தாய் என்னை ஏமாற்றம் தவிர்த்தாய்—

மாலிகன் என்ற பெயரையுடையவனேடு ஸ்நேஹம் செய்து கொள்ளுவதற்கும் வல்லவனுய், அந்த மாலிகனை நீ செத்துப் போம் வழியையும் ஆலோசித்து சக்ராயுதத்தினுல் தலையையு மறுத்தாய்; நடத்தவேண்டியவைகளை அறியவல்ல ப்ரபுவே! அழகிய கோயிலிலே பள்ளிகொண்டிருப்பவனே! எனக்கு துன்பத்தைப் போக்குகிறவனே? இருவாட்சிப்பூ சூட்ட வாராய்—.

மாலிகனென்னுமொருவன் முதலில் கண்ணனேடு மிகவும் ஸ்நேகமாயிருந்து பல அஸ்திரங் களையும் பயின்று, பிறகு அஹங்காரப்பட்டதனுல் சக்கராயுதம் பயில்விக்கிற வியாஜயமாக அவன் கண்ணனுல் தலையறுத்தொழிக்கப் பட்டானென்பது சுருக்கமான வரலாறு. சீமாலிகன் - ஸ்ரீமாலிகன்.

அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய்
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் தூமலராள் மணவாளா
உண்டிட்டுலகினையேழும் ஓராலிலையிற்றுயில்கொண்டாய்
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (9)

அத்தாணியுள் அமரர்கள் சூழ அங்கு அண்டத்து இருந்தாய் தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய் தூ மலராள் மணவாளா உலகினை ஏழும் உண்டிட்டு ஓர் ஆல் இலையில் துயில் கொண்டாய் நான் உன்னை கண்டு உகக்க கருமுகைப்பூ—

அருகான இடத்திலே (ஸேவிக்கும்படி) தேவர்கள் சூழ்ந்திருக்க அவர்கள் நடுவில் பரமபதத்தில் வீற்றிருப்பவனே! அடியார்களுடைய ஹ்ருதயத்தில் வஸிப்பவனே! பரிசுத்தமான தாமரைமலரைப் பிறப்பிடமாக வுடைய பிராட்டிக்கு கொழுநனே! (பிரளயகாலத்தில்) ஏழு உலகங்களையும் உள்ளடக்கி ஒரு ஆலிலையில் யோகநித்திரையைக் கொண்டவனே! நான், நீ பூச்சூட்டியதைப் பார்த்து மகிழும்படி கருமுகைப் பூவை சூட்ட வாராய்—.

செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி
எண்பகர்பூவுங்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (10)

செண்பகம் மல்லிகையோடு செங்கழு நீர் இருவாட்சி எண் பகர் பூவும் கொணர்ந்தேன் இன்று இவை சூட்ட வா என்று பகர் மண் கொண்டானை ஆய்ச்சி மகிழ்ந்து உரை செய்த பண் பகர் வில்லிபுத்தூர் கோன் பட்டர்பிரான் சொன்ன இ மாலை பத்தே.

'செண்பகப்பூவும் மல்லிகைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும் இருவாட்சிப்பூவும் (ஆகிய) (இன்னதின்னதென்று) எண்ணிச் சொல்லப்படுகிற மலர்களையெல்லாம் கொண்டுவந்தேன்! இப்போது இப் பூக்களைச் சூட்டும்படி வருவாயாக' என்று—(சாஸ்திரங்களில் தன்னதாகச்) சொல்லப்பட்ட மண்ணை (இரந்து) கொண்டவனை யசோதை மகிழ்ச்சி கொண்டு சொல்லியவற்றை ராகமாகவே சொல்லுகின்ற ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் அருளிச்செய்த இந்தச் சொல் மாலையும் ஒருபத்தே! [இது வொரு அற்புதமான பதிகம் என்றபடி.]

அடிவரவு :—ஆநிரை, கரு, மச்சு, தெரு, புள், எருது, குடம், சீமாலிகன், அண்டம், செண்பகம், இந்திரன்.

காப்பிடல்—இந்திரனோடு பிரமன்

[பெரியாழ்வார் திருமொழி 2 - 8.]

யசோதைப்பிராட்டி கண்ணபிரானை நீராட்டிக்குழல்வாரிப் பூச்சூட்டின பின்பு, அவனுக்கு த்ருஷ்டி தோஷம் வாராதபடி காப்பிடவேணுமென்று கருதி, 'நீ போது போன வேளையில் நாற்சந்தி முதலிய இடங்களில் நில்லாதே' என்று அப்பிரானை அழைத்துக் காப்பிட்டபடியை அருளிச்செய்வது.

இந்திரனோடுபிரமன் ஈசனிமையவரெல்லாம்
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார்
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய்
அந்தியம்போதிதுவாகும் அழகனேகாப்பிடவாராய். (1)

சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய் அழகனே இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம் மா மந்திரம்

சந்த்ரனுனவன் வீடுகளின்மேல்நிலையிலே சேரப் பெற்ற ஸமர்த்தர்கள் வஸிக்கின்ற திருவெள்ளறையிலே நின்றவனே! அழகு உடையவனே! இந்திரனும் ப்ரஹ்மாவும் ருத்ரனும் மற்றுமுள்ள தேவர்களும் (ஆகிய) யாவரும் சிறந்த மந்த்ர புஷ்பங்களைக்

காப்பிடல்—இந்திரனேடு பிரமன்

மலர் கொண்டு உவர் ஆய் வந்து மறைந்து நின்ருர் இது அம் அந்தி போது ஆகும் காப்பு இட வாராய்.

கொண்டு (மிக்க ஸமீபமாகவும் மிக்க தூரமாகவு மல்லாமல்) நடு விடத்திலிருப்பவராகவந்து மறைந்து நிற்கிருர்கள்; இக் காலம் அழகியஸாயம் ஸந்த்யாகாலமாகும்; (ஆகையால்) (நான் உனக்கு ரக்ஷையாக) திருவந்திக் காப்பிடும்படி வருவாயாக.

கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம்
நின்றெழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய்
மன்றினில்லேலந்திப்போது மதிட்டிருவெள்ளறைநின்ருய்
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய். (2)

மதிள் திருவெள்ளறை நின்ருய் மேல் ஒன்றும் நேசம் இலாதாய் உன்னை கூவி நின்றெழிந்தேன் பசு எல்லாம் கன்றுகள் இல்லம் புகுந்து கதறுகின்ற அந்தி போது மன்றில் நில்லேல் என்தன் சொல்லு நன்று கண்டாய்.

மதிளரணையுடைய திருவெள்ளறையிலே நின்றருளினவனே! (என்) மேல் அல்பமும் அன்பில்லாதவனே! உன்னைக் கூவிக் கொண்டு நின்றுவிட்டேன். (அதனுல்) பசுக்களெல்லாம் கன்றுகளிருக்கு மிடத்திலே சேர்ந்து கத்துகின்றன; (நீ) அந்தி வேளையில் நாற்சந்தியில் நில்லாதே; என்னுடைய வார்த்தை (உனக்கு) நல்லதாகுங்கிடாய்; நான் உன்னை காப்பு இட வாராய்—.

செப்போதுமென்முலையார்கள் சிறுசோறுமில்லஞ்சிதைத்திட்டு
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலையாள்வாய்
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்ருய்
இப்போதுநானென்றுஞ்செய்யேன் எம்பிரான்காப்பிடவாராய். (3)

ஆள்வாய் முப்போதும் வானவர் ஏத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்ருய் செப்பு ஓது மெல்முலையார்கள் சிறு சோறும் (சிறு) இல்லம் சிதைத்திட்டு அப்போது நான் உரப்ப போய் அடிசிலும் உண்டிலை இப்போது நான் ஒன்றும் செய்யேன் —

என்னை ஆளப் பிறந்தவனே! மூன்றுகாலத்திலும் தேவர்கள் ஸ்தோத்திரஞ் செய்கின்ற (உன் மங்களத்தையே எண்ணுகிற) வர்களுடைய திருவெள்ளறையிலே நிற்பவனே! (நீ), பொற் கலசங்களை (உவமையாகச்) சொல்லத்தகுந்த மெல்லிய முலையை யுடைய ஸ்திரீகள் (விளையாட்டாகச்செய்த) மணற் சோற்றையும் மணல் வீட்டையும் அழித்துவிட்டு (நிற்க) அக்காலத்தில் நான் கோபித்துச் சொல்ல (பிடித்தடிப்பளோ? என்றஞ்சி என் முன் நில்லாமல்) அப்பாற்போய் சோற்றையும் உண்ணுமலிருந்திட்டாய்; இந்த ஸமயத்திலே நான் உன்னை (மருட்டுதல் முதலியன) ஒன்றும் செய்ய மாட்டேன்; எம் பிரான் காப்பிட வாராய்—.

கண்ணில்மணற்கொடுதூவிக் காலினுற்பாய்ந்தனையென்றென்று
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்ருர்
கண்ணனேவெள்ளறைநின்ருய் கண்டாரோடேதீமைசெய்வாய்
வண்ணமேவேலையதொப்பாய் வள்ளலேகாப்பிடவாராய். (4)

கண்ணனே கண்டாரோடே தீமை செய்வாய் வண்ணம் வேலை அது ஒப்பாய் வள்ளலே எண் அரு பிள்ளைகள் இவர் வந்திட்டு மணல் கொடு கண்ணில் தூவி காலினல் பாய்ந்தனை என்று முறைப் படுகின்ருர்.

ஸ்ரீ க்ருஷ்ணனே! வெள்ளறை நின்ருய்!—கண்டவரோ டெல்லாம் தீம்பு செய்பவனே! திருமேனி நிறம் கடலின் நிறத்தை ஒத்திருக்கப்பெற்றவனே! உதாரனே! எண்ணு வதற்கு அருமையான (மிகப்பல) இப்பிள்ளைகள் வந்திருந்து மணலைக்கொண்டு வந்து கண்ணில் தூவிவிட்டு (அதனேடு நில் லாமல்) காலினுலும் உதைத்தாய்; என்று பலதரஞ் சொல்லி (நீ செய்யுந் தீம்பைக் குறித்து) முறையிடா நின்ருர்கள்! (ஆத லால் அங்கேபோவதைவிட்டு) காப்பு இட வாராய்—.

பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகள் தீமைகள்செய்வார்
எல்லாமுன்மேலன்றிப்போகாது எம்பிரான்நீயிங்கேவாராய்
நல்லார்கள்வெள்ளறைநின்ருய் ஞானச்சுடரேயுன்மேனி
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (5)

நித்யாநுஸந்தானவுரை

இ ஊரில் தீமைகள் செய்வார் பிள்ளைகள் பல் ஆயிரவர் எல்லாம் உன்மேல் அன்றி போகாது நல்லார்கள் ஞானம் சுடரே உன்மேனி சொல் ஆரநின்று ஏத்தி வாழ்த்தி சொப்பட—

(பஞ்சலக்ஷம் குடியுள்ள இவ்வூரிலே) தீம்புகளைச் செய்பவர்களாகிய சிறுவர்கள் அனேக ஆயிரக்கணக்கானவராவர்; அவர்கள் செய்யும் தீம்புகளெல்லாம் உன்மேலல்லாமல் (வேறொருவர் மேலும்) ஏறாது; (இப்படியிருப்பதால் அங்கே போகாமல்) எம்பிரான்! நீ இங்கே வாராய்—. நல்லவர்கள் வாழ்கிற வெள்ளறை(யில்) நின்றாய்—. ஞானவொளியையுடையவனே; உன் திருமேனியை சொல் நிறையும்படி நின்று ஸ்தோத்திரஞ்செய்து மங்களாசாஸநஞ் செய்து நன்றாக காப்பு இட வாராய்—.

*கஞ்சன் கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை**
*வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதோர்வார்த்தையுமுண்டு**
*மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய்**
அஞ்சுவன்நீயங்குநிற்க அழகனேகாப்பிடவாராய். (6)

மஞ்சுதவழ் மணிமாடம் மதிள் கஞ்சன் நின்மேல் கறுக்கொண்டு கருநிறம் செம்மயிர் பேயை வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பது ஓர் வார்த்தையும் உண்டு நீ அங்கு நிற்க அஞ்சுவன்—

மேகங்கள் ஊர்ந்து செல்கின்ற ரத்நமயமான வீடுகளையும் மதிலையுமுடைய திரு வெள்ளறை(யில்) நின்றாய்—. 'கம்ஸனவன் உன்மேல் கோபங்கொண்டு கரு நிறத்தையும் செம்பட்ட மயிரையுமுடைய பூதனையை (உன்னை) வஞ்சனையாகக் கொல்வதற்கு அனுப்பினான்' என்பதான ஒரு சொல்லும் கேட்டிருப்பதுண்டு, (ஆதலால்) நீ அவ்விடத்திலே நிற்பதற்கு நான் அஞ்சா நின்றேன்; அழகனே! காப்பு இட வாராய்—.

*கள்ளச்சகடுமருதும் கலக்கழியவுதைசெய்த**
*பிள்ளையரசேநீபேயைப்பிடித்து முலையுண்டபின்னை**
*உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய்**
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனேகாப்பிடவாராய். (7)

கள்ளம் சகடும் மருதும் கலக்கு அழிய உதை செய்த பிள்ளை அரசே நீ பேயை முலை பிடித்து உண்டபின்னை உள்ள ஆறு ஒன்றும் அறியேன் இது பள்ளிகொள் போது ஆகும்—

வஞ்சனையையுடைய சகடாஸுரனையும் யமளார்ஜுநங்களையும் (வடிவம்) கட்டுக்குலைந்தழியும்படி (திருவடிகளால்) உதைத்துத் தள்ளிய பிள்ளைத் தன்மையைக் கொண்ட பெருமையனே! நீ பூதனையினுடைய முலையைப் பிடித்து (வாய் வைத்து) உண்ட பின்பு உள்ளபடி ஒன்று மறுகிறேனில்லை; ஒளி உடை வெள்ளறை நின்றாய்!—. இப்போது படுத்து உறங்குகிற வேளையாகும்; பரமனே! காப்பு இடவாராய்—.

*இன்பமதனையுயர்த்தாய் இமையவர்க்கென்றுமரியாய்**
*கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே**
*செம்பொன்மதிள்வெள்ளறையாய் செல்வத்தினால்வளர்பிள்ளாய்**
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (8)

இன்பம் அதனை உயர்த்தாய் இமையவர்க்கு என்றும் அரியாய் கும்பம் களிறு அட்ட கோவே கொடு கஞ்சன் நெஞ்சினில் கூற்றே செல்வத்தினால் வளர் பிள்ளாய் அங்கு கம்பம் கபாலி காண் கடிது ஓடி—

(உன் குணசேஷ்டிதங்களால்) பரமாநந்தத்தை (எனக்கு) மேன்மேலுண்டாக்கினவனே; தேவர்களுக்கு எந்நாளும் அருமையானவனே! மஸ்தகத்தையுடைய குவலயாபீடயானையைக் கொன்ற ஸ்வாமியே! கொடுமைதங்கிய கம்ஸனுடைய மநஸ்ஸிலே யமன்போல் பயங்கரனாய்த் தோன்றுமவனே! செம்பொன் மதிள் வெள்ளறையாய்!—செல்வச் செருக்கோடு வளர்கின்ற குழந்தாய்! நீ இருக்கிறவிடத்தில் (கண்டார்க்கு) நடுக்கத்தை விளைக்கவல்ல துர்க்கையாகும்; (ஆகையால் அங்கு நில்லாமல்) மிகவும் விரைந்தோடி காப்பு இட வாராய்—.

பெரியாழ்வார் திருமொழி முடிவுப்பதிகம்—சென்னியோங்கு

*இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார்**
*தருக்கேல்நம்பிசந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள்**
*திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்**
உருக்காட்டுமந்திவிளக்கு இன்றொளிகொள்ளவேற்றுகேன்வாராய். (9)

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு எழில் மறையோர் வந்து நின்றார் நம்பி சந்தி நின்று தருக்கேல் சில நாள் தாய் சொல்லு கொள்ளாய் தேசு உடை இன்று நான் திரு காப்பு உன்னை சாத்த உரு காட்டும் அந்தி விளக்கு ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய்.

(புருஷஸூக்தம் முதலிய) ருக்குக்களைச் சொல்லிக் கொண்டு தீர்த்தத்தை சங்கத்திலே கொணர்ந்து விலக்ஷணரான ப்ராஹ்மணர் (உனக்கு ரக்ஷையிடுவதற்கு) வந்து நிற்கிறார்கள்; தீம்பு நிறைந்தவனே! நாற்சந்தியிலே நின்று செருக்கித்திரியாதே; சிலகாலம் தாய் வார்த்தையை கேட்பாயாக. தேஜஸ்ஸை உடைய வெள்ளறை நின்றாய்!—இப்போது நான் அழகிய ரக்ஷையை உனக்கு இடுதற்காக உன்திருமேனி வடிவத்தைக் காட்டுகின்ற அந்த விளக்கை ஒளியையுடையதாக ஏற்றுவேன்; (இதைக்காண கடுக வருவாயாக)—.

*போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை**
*மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக்காப்பிட்டமாற்றம்**
*வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை**
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (10)

மாதர்க்கு உயர்ந்த அசோதை மகன் தன்னை காப்பு இட்ட மாற்றம் போது அமர் செல்வம் கொழுந்து புணர் திருவெள்ளறையானை வேதம் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை பாதம் பயன் கொள்ளவல்ல பத்தர் உள்ளார் வினைபோம்.

ஸ்த்ரீகளுள் சிறந்த யசோதைப்பிராட்டி தன்புத்ரனான கண்ணனை ரக்ஷையிட அழைத்த வார்த்தையை தாமரைப் பூவைப் (பிறப்பிடமாகப்) பொருந்திய செல்வத்தற்கு உரியவளாய் மற்றைத் தேவியரிற் சிறந்தவளான பிராட்டி ஸம்ச்லேஷிக்கப் பெற்ற திருவெள்ளறையில் நின்றருளியவனைப் பற்றி—, (எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்கையே) வேததாத்பர்யமாக அறியவல்ல பெரியாழ்வார் அருளிச்செய்த பாமாலையினுடைய ஓரடி கற்றதனாலாகிய பயனை அடைய வல்ல பக்தராக உள்ளவரது வினைகளெல்லாம் கழிந்துவிடும்.

அடிவரவு:—இந்திரன், கன்று, செப்பு, கண்ணில், பல்லாயிரவர், கஞ்சன், கள்ளம், இன்பம், இருக்கு, போதமர், வெண்ணெய்.

[பெரியாழ்வார் திருமொழி முடிவுப் பதிகம்]—சென்னியோங்கு

நித்தியாநுஸந்தானத்திற்குப் பெரியாழ்வாருடைய திவ்யப்பிரபந்தமே முதன்மையாகக் கொள்ளப்பட்டதனால் அதன் முடிவு திருமொழியாகிய இப்பதிகமும் சேர்த்து அநுஸந்திகப்பட்டு வருகிறது.

*சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்*உலகு*
*தன்னைவாழநின்றநம்பீ தாமோதராசதிரா**
*என்னையுமென்னுடைமையையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு**
நின்னருளே புரிந்திருந்தேன் இனியென்திருக்குறிப்பே. (1)

சென்னி ஓங்கு தண் திருவேங்கடம் உடையாய் உலகு தன்னை வாழ நின்ற நம்பீ தமோதரா சதிரா என்னையும் என் உடைமையையும் உன் சக்கரப் பொறி ஒற்றிக்

கொடுமுடியானது (ஆகாசத்தளவும்) உயர்ந்திருக்கப் பெற்ற குளிர்ந்த திருவேங்கடமலையை (இருப்பிடமாக) உடையவனே! உலகத்தவர்களை வாழ்விப்பதற்காக எழுந்தருளியிராநின்ற (கல்யாண குணங்களால்) நிறைந்தவனே! தாமோதரனே! (அடியாருடைய குற்றத்தைக் கண்ணெடுத்துப் பாராத) சதிரையுடையவனே! எனது ஆத்துமாவுக்கும் என் உடைமை

கொண்டு நின் அருளே புரிந்திருந்தேன் இனி திருக்குறிப்பு என்?

யான சரீரத்திற்கும் உன்னுடைய ஸூதர்சனாழ்வானுடைய திரு விலச்சினையை இடுவித்து உன்னுடைய கருணையையே (ஸ்வயம் பிரயோஜநமாக) விரும்பி யிராநின்றேன்; இப்படியான பின்பு திருவுள்ளக்கருத்து எதுவா யிருக்கின்றது ?

*பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின்**
*பிறவியென்னுங்கடலும்வற்றிப் பெருபதமாகின்றதால்**
*இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால்**
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே. (2)

பறவை ஏறு பரம்புருடா நீ என்னைக் கைக் கொண்டபின் பிறவி என்னும் கடலும் வற்றி பெரும்பதம் ஆகின்றது இறவு செய்யும் பாவம் காடு தீக்கொளீஇ வேகின்றது அறிவை என்னும் அமுதம் ஆறு தலைப்பற்றி வாய்க்கொண்டது.

பெரிய திருவடிமேல்ஏறுமவனான புருஷோத்தமனே! (ஸர்வ ரக்ஷகனான) நீ (வேறு கதியற்ற) என்னை ஆட்படுத்திக் கொண்டபிறகு ஸம்ஸாரமாகிற ஸமுத்ரமும் வறண்டுபோய் (அதனால்) பெரிய தரம் பெற்றதாகிறது; (இவ்வாத்துமாவை) முடிக்கிற பாபஸமூஹமானது நெருப்புப்பட்டு வெந்திட்டது; ஞானமாகிற அம்ருதநதியானது மேன்மேலும் பெருகிச் செல்லா நின்றது.

*எம்மனாவென்குலதெய்வமே யென்னுடைநாயகனே**
*நின்னுளேனாய்ப்பெற்றநன்மை யிவ்வுலகினிலார்பெறுவார்**
*நம்மன்போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ளபாவமெல்லாம்**
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (3)

எம் மனா என் குல தெய்வமே என்னுடைய நாயகனே நின்னுளேன் ஆய்பெற்ற நன்மை இ உலகினில் ஆர் பெறுவார்? நம்மன் போலே வீழ்த்து அமுக்கும் நாட்டில் உள்ள பாவம் எல்லாம் சும்மெனாது கை விட்டு ஓடி தூறுகள் பாய்ந்தன.

எமக்குத் தலைவனே! என் குடிக்குப் பரதேவதையானவனே! எனக்கு நாதனானவனே! (அடியேன்) உன் அபிமானத்தில் ஒதுங்கினவனாய் பெற்ற நன்மையை இந்த உலகத்தினுள் மற்ற யார்தான் பெறுவர்? (பூதப்ரேத பிசாசங்களைப்போல்) (உருத் தெரியாமல் ஒளிந்து வந்து) கீழே தள்ளி மேலே அமுக்கா நின்றுள்ள உலகத்திலுள்ள எல்லாருடைய பாவங்களும் மூச்சுவிடவும் மாட்டாமல் ஸவாஸநமாக விட்டுட்டு ஓடிப்போய் புதர்களில் ஒளிந்து கொண்டன—.

*கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாப்போல்**
*உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன்**
*கொடுமைசெய்யுங்கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெறா**
தடவரைத்தோள்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே. (4)

தடவரை தோள் சக்ரபாணீ சார்ங்கம் வில் சேவகனே கடல் கடைந்து அமுதம் கொண்டு கலசத்தை நிறைத்த ஆ போல் உடல் உருகி வாய் திறந்து உன்னை மடுத்து நிறைத்துக் கொண்டேன் கொடுமை செய்யும் கூற்றமும் என் கோல் ஆடி குறுக பெறா.

பெரிய மலைபோன்ற தோள்களையுடையவனும் திருவாழியாழ்வானைத் திருக்கையிலுடையனுமானவனே! சார்ங்கத்தை வில்லாகக் கொண்ட வீரனே! திருப்பாற்கடலை (மந்தர மலையாகிற) மத்தினால் கடைந்து (அக்கடலினின்றும்) அம்ருதத்தை யெடுத்து கலசத்தில் (நீ) நிறைத்தது போல (அடியேன்) உடல் உருவப் பெற்று வாயைத் திறந்து கொண்டு (ஆராவமுதமாகிய) உன்னை உட்கொண்டு தேக்கிக் கொண்டேன்; (இனி,) கொடிய தண்டங்களை நடத்துமவனான யமனும் எனது செங்கோல் செல்லு மிடங்களில் அணுகவல்லவனல்லன்—.

*பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல்**
*உன்னைக்கொண்டென்னாவகம்பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன்**
*உன்னைக்கொண்டென்னுள்வைத்தேன் என்னையுமுன்னிலிட்டேன்**
என்னப்பாவென்னிருடீகேசா என்னுயிர்காவலனே. (5)

என் அப்பா இருடீகேசா என் உயிர் காவலனே பொன்னை நிறம் எழ உரை கல்மீது கொண்டு உரைத்தால் போல் உன்னை என் நா அகம் பால் கொண்டு மாற்று இன்றி உரைத்துக் கொண்டேன். உன்னை என்னுள் கொண்டு வைத்தேன் என்னையும் உன்னில் இட்டேன்.

எனக்குத் தந்தையானவனே! எனது இந்திரியங்களை (உன் வசப்பட்டொழுகும்படி) நியமிக்க வல்லவனே! என் ஆத்மாவை (அந்யசேஷ மாகாதபடி) காக்க வல்லவனே! ஸுவர்ணத்தை நிறமறிய [நிறத்தைப் பரீக்ஷிப்பதற்காக] உரை கல்லில் இட்டு உரைப்பதுபோல (பரமபோக்யனான) உன்னை என்நாவினுட் கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக் கொண்டேன். (யோகிகட்கும் அரியனான) உன்னை என் நெஞ்சினுள் அமைத்தேன்; (நீசனான) அடியேனையும் உனக்குச் சேஷப்படுத்தினேன்.

*உன்னுடையவிக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம்**
*என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன் **
*மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட இராமநம்பீ**
என்னிடைவந்தெம்பெருமான் இனியெங்குப்போகின்றதே. (6)

மன் அடங்க மழு வலம் கை கொண்ட இராமன் நம்பீ உன்னுடைய விக்ரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம் என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி எழுதிக் கொண்டேன் எம்பெருமான் என்னிடை வந்து இனி போகின்றது எங்கு?

(துஷ்ட) க்ஷத்திரியர்கள் அழியும்படி மழு என்னும் ஆயுதத்தை வலக்கையில் ஏந்தியிரா நின்றுள்ள பரசுராமனாய்த் திருவவதரித்த குணபூர்த்தியை யுடையவனே ! உன்னுடைய வீரச் செயல்களில் ஒன்று தப்பாமல் எல்லாவற்றையும் என்னுடைய நெஞ்சினுள்ளே சுவரில் சித்திர மெழுதுவது போல எழுதிக் கொண்டேன்; எமக்குத் தலைவனே! என் பக்கலில் எழுந்தருளி இனிமேல் போவதானது வேறு எவ்விடத்தைக் குறித்து?—

*பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல் **
*திருப்பொலிந்தசேவடி யென்சென்னியின்மேற்பொறித்தாய்**
*மருப்பொசித்தாய்மல்லடர்த்தாய் என்றென்றுன்வாசகமே**
உருப்பொலிந்தநாவினேனை உனக்குரித்தாக்கினையே. (7)

பருப்பதத்து கயல் பொறித்த பாண்டியர் குல பதி போல் திரு பொலிந்த சே அடி என் சென்னியின் மேல் பொறித்தாய் என்று மருப்பு ஒசித்தாய் என்று மல் அடர்த்தாய் என்று உன் வாசகமே உரு பொலிந்த நாவினேனை உனக்கு உரித்து ஆக்கினையே.

மஹாமேரு பர்வதத்தில் (தனது) மகரகேதுவை நாட்டின பாண்டிய வம்சத்து அரசனைப்போல். அழகு விளங்கா நின்றுள்ள செந்தாமரைமலர் போன்ற திருவடிகளை என் தலையின் மீது அடையாளமாக நாட்டியருளினவனே! என்றும், (குவலயாபீடத்தின்) கொம்பை முறித்தவனே! என்றும், மல்லரை நிரஸித்தவனே! என்றும் (இவ்வாறான) உனது செயல்களுக்கு வாசகமான திருநாமங்களின் அநுஸந்தாநத்தினாலேயே தழும்பேறின நாக்கையுடைய அடியேனை உனக்கு அநந்யார்ஹசேஷனாக ஆக்கிக்கொண்டாயே—.

அனந்தன்பாலுங்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து என்*
*மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாயெம்பிரான் **
*நினைந்தெனுள்ளேநின்றுநெக்குக் கண்களசும்பொழுக**
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே. (8)

நேமி நெடியவனே எம் பிரான் அனந்தன்பாலும் கருடன் பாலும் ஐது நொய்துஆகவைத்து என் மனம் தன் உள்ளே வந்து வைகி வாழ செய்தாய் என் உள்ளே நினைந்துநின்று நெக்கு கண்கள் அசும்பு ஒழுக நினைந்து இருந்தே சிரமம் தீர்ந்தேன்.

திருவாழியாழ்வானையுடைய ஸர்வாதிகனே எனக்குப் பரமோபகாரகனானவனே! திருவனந்தாழ்வானிடத்திலும் பெரிய திருவடியினிடத்திலும் (அன்பை) மிகவும் அற்பமாக வைத்து எனது ஹ்ருதயத்தினுள்ளே வந்து பொருந்தி (என்னை) வாழ்வித்தருளினாய்; (இப்படி வாழ்வித்த உன்னை) என்நெஞ்சில் அநுஸந்தித்துக் கொண்டு (அதனால்) நெஞ்சு சிதிலமாகப் பெற்று கண்களினின்றும் நீர் பெருகும்படி (நீசெய்த நன்றிகளை) அநுஸந்தித்துக்கொண்டே இளைப்பாறப் பெற்றேன்—.

பனிக்கடலிற்பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து என்*
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேயென்றென்று
உனக்கிடமாயிருக்க என்னையுனக்குரித்தாக்கினையே. (9)

பனிகடலில் பள்ளிகோளை பழக விட்டு ஓடிவந்து என் மனம் கடலில் வாழ வல்ல மாயம் மணாள நம்பீ தனி கடல் என்று தனி சுடர் என்று தனி உலகு என்று உனக்கு இடம் ஆய் இருக்க என்னை உனக்கு உரித்து ஆக்கினையே.

குளிர்ந்த திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளுதலை பழகியதாக விட்டு (மறந்து விட்டு) (அங்கு நின்றும்) ஓடிவந்து என்னுடைய ஹ்ருதயமாகிற கடலில் வாழ வல்லவனும் ஆச்சரிய சக்தியை யுடையவனும் (பெரிய பிராட்டியார்க்குக்) கணவனும் குணபூர்ணனுமான எம்பெருமானே! ஒப்பற்ற திருப்பாற் கடலென்றும் ஒப்பற்ற ஆதித்ய மண்டலமென்றும் ஒப்பற்ற பரமபதமென்றும் (சொல்லப்படுகிற இவை) உனக்கு (ஏற்ற) வாஸஸ்தாந மாயிருக்கச் செய்தேயும், (அவற்றை உபேக்ஷித்து விட்டு) (மிகவும் நீசனான) அடியேனை உனக்கு உரிய வாஸஸ்தாநமாக அமைத்துக் கொண்டருளினையே! (இஃது என்ன ஸௌசீல்யம்!)

தடவரைவாய்மிளிர்ந்துமின்னும் தவளநெடுங்கொடிப்போல்
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதிநம்பீ
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராவதியும்
இடவகைகளிகழ்ந்திட்டு என்பாலிடவகைகொண்டனையே. (10)

தடவரைவாய் மிளிர்ந்து மின்னும் தவளம் நெடு கொடி போல் சுடர் ஒளி ஆய் என் நெஞ்சின் உள்ளே தோன்றும் சோதி நம்பீ வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராவதியும் இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே.

பெரிய பர்வதத்தில் மிகவும் விளங்காநின்றுள்ள பரிசுத்தமான பெரியதொரு கொடிபோல, மிக்க தேஜஸ் ஸ்வரூபியாய் எனது ஹ்ருதயத்தினுள் விளங்காநின்றுள்ள ஒளியினால் நிரம்பியவனே!, வடதிசையிலுள்ள திருப்பாற்கடலும் ஸ்ரீ வைகுண்டமும் மதிள்களையுடைய த்வாரகையும் (ஆகிய) இடங்களையெல்லாம் உபேக்ஷித்துவிட்டு என்னிடத்தில்வாஸஸ்தாந புத்தியைப் பண்ணி யருளினையே! (இஃது என்ன வாத்ஸல்யம்!)

வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை
ஆயரேற்றையமரர்கோவை அந்தணர்தமமுதத்தினை
சாயைபோலப்பாடவல்லார் தாமுமணுக்கர்களே. (11)

வேயர் தங்கள் குலத்து உதித்த விட்டு சித்தன் மனத்து கோயில் கொண்ட கோவலனை கொழு குளிர் முகில் வண்ணனை ஆயர் ஏற்றை அமரர் கோவை அந்தணர் தம் அமுதத்தினை பாடவல்லார் தாம் சாயைபோல அணுக்கர்கள்.

வேயர்களுடைய வம்சத்தில் அவதரித்த பெரியாழ்வாருடைய ஹ்ருதயத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கிற கோபாலனும், கொழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய மேகம் போன்ற நிறத்தையுடையவனும், இடையர்களுக்குத் தலைவனும், நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனும், (ஸநகர் முதலிய) மஹர்ஷிகளுக்கு அம்ருதம்போல் இனியனுமான எம்பெருமானை (இத்திருமொழியினால்) பாடவல்லவர்கள் நிழல்போல (எம்பெருமானை எப்போதும்) அணுகியிருக்கப் பெறுவர்கள்.

அடிவரவு :—சென்னி, பறவை, எம்மனா, கடல், பொன், உன், பருப்பு, அனந்தன், பனி, தட, வேயர், மார்கழி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

நாச்சியார் திருமொழியில்—ஆருவது திருமொழி—வாரணமாயிரம்

(ஆண்டாள் தனது திருமணத்தைப்பற்றிக் கனுக்கண்ட திருப்பதிகம்)

அல்லிநாள்தாமரைமேலாரணங்கினின் துணைவி மல்லிநாடாண்டமடமயில்*
மெல்லியலாள் ஆயர்குலவேந்தனகத்தாள்* தென்புதுவை வேயர்பயந்த விளக்கு.*

வாரணமாயிரம் சூழவலஞ்செய்து நாரணநம்பி நடக்கின்ருனென்றெதிர்*
பூரணபொற்குடம் வைத்துப்புரமெங்கும்* தோரணம்நாட்டக்கனுக்கண்டேன்
தோழீநான்.* (1)

தோழீ நம்பி நாரணன் ஆயிரம் வாரணம் சூழ வலம் செய்து நடக்கின்ருன் என்று எதிர் பொன் பூரணகுடம் வைத்து புரம் எங்கும் தோரணம் நாட்ட நான் கனுக் கண்டேன்.

என் உயிர்த்தோழியே! ஸகல குண பர்பூர்ணனை ஸ்ரீமந்நாராயணன் ஆயிரம் யானைகள் சூழ்ந்துவர ப்ரதக்ஷிணமாக எழுந்தருளுகிருனென்று (வாத்திய கோஷாதிகளால் நிச்சயித்து) எதிரே பொன்மயமான பூர்ண கும்பங்களை வைத்து பட்டணம் முழுதும் தோரண ஸ்தம்பங்கள் நாட்ட (இந்த நிலைமையை) நான் ஸ்வப்நத்தில் அனுபவித்தேன்.

நாளைவதுவை மணமென்றுநாளிட்டு பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ்*
கோளரிமாதவன் கோவிந்தனென்பானேர் *காளைபுகுதக் கனுக்கண்டேன்
தோழீநான்.* (2)

நாளை வதுவை மணம் என்று நாள் இட்டு பாளை கமுகு பரிசு உடை பந்தல் கீழ் கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர் காளை புகுத—

தோழீ!—; நாளைக்கு விவாஹ மஹோத்ஸவமென்று முஹூர்த்தம் நிர்ணயித்து பாளைகளோடு கூடின பாக்கு மரங்களாகிற அலங்காரங்களை யுடைத்தான மணப்பந்தலின் கீழே நரஸிம்ஹனென்றும் மாதவனென்றும் கோவிந்தனென்றும் திருநாமங்கள் பூண்ட ஒரு யுவாவானவன் ப்ரவேசிக்க நான் கனுக் கண்டேன்—.

இத்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் வந்திருந்தென்னை மகட்பேசிமந்திரித்து*
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை* அந்தரிசூட்டக் கனுக்கண்டேன்தோழீநான்.* (3)

இந்திரன் உள்ளிட்ட தேவர்குழாம் எல்லாம் வந்து இருந்து என்னை மகள் பேசி மந்திரித்து அந்திரி மந்திரக்கோடி உடுத்தி மணம் மாலை சூட்ட—

இந்திரன் முதலான தேவஸமூஹங்களெல்லாம் (இந்நிலத்திலே) வந்திருந்து என்னைக் கல்யாணப் பெண்ணாக வார்த்தை சொல்லி அதற்குமேல் ஸம்பந்திகள் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளவேண்டிய ஏற்பாடுகள் விஷயமாக யோசித்து முடிவு செய்துகொண்டு, (பிறகு) 'துர்க்கை' என்கிற நாத்தனார் கல்யாணப் புடவையை எனக்கு உடுத்தி பரிமளம் மிக்க புஷ்பங்களையும் சூட்ட தோழீ! நான் கனுக் கண்டேன்—.

*நாற்றிசைத்தீர்த்தம் கொணர்ந்துநனிநல்கி*பாப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி*
பூப்புனைகண்ணிப்புனிதனேடென்றன்னை*காப்புநாண்கட்டக்கனுக்கண்டேன்
[தோழீநான்.* (4)

பாப்பனர் சிட்டர்கள் பல்லார் நால் திசை தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி எடுத்து ஏத்தி பூ புனை கண்ணி புனிதனேடு என்றன்னை காப்பு நாண் கட்ட—

தோழீ!—; சிஷ்டர்களான பல ப்ராஹ்மணர்கள் நான்கு திசைகளிலுமிருந்து தீர்த்தங்களைக் கொண்டுவந்து நன்ருகத் தெளித்து உச்சஸ்வரமாக வெடுத்து மங்களாசாஸநம் பண்ணி (பலவகைப்) புஷ்பங்கள் புனைந்த மாலையை யுடையவனாய் பரமபாவநனை கண்ணபிரானேடு என்னை (இணைத்து) கங்கணங்கட்ட நான் கனுக் கண்டேன்—.

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி சதிரிளமங்கையர் தாம் வந்தெதிர்கொள்ள* மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டெங்கும்* அதிரப்புகுதக் கனாக்கண்டேன் [தோழீநான் (5)*

சதிர் இள மங்கையர் தாம் கதிர் ஒளி தீபம் கலசம் உடன் ஏந்தி வந்து எதிர் கொள்ள மதுரையார் மன்னன் அடி நிலை தொட்டு எங்கும் அதிர புகுத—	தோழீ!—அழகிய இளம் பெண்கள் ஸூர்யனுடைய ஒளி போன்ற ஒளியையுடைய மங்கள தீபத்தையும் பொற்கலசங்களையும் கையில் ஏந்திக்கொண்டு எதிர்கொண்டுவர, மதுரையிலுள்ளார்க்கு அரசனான கண்ணபிரான் பாதுகைகளைச் சாத்திக்கொண்டு பூமியெங்கும் அதிரும்படியாக எழுந்தருள நான் கனாக்கண்டேன்—.

மத்தளம்கொட்ட வரிசங்கம்நின்றூத முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்* மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னை* கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் [தோழீநான். (6)*

மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்று ஊத மைத்துனன் நம்பி மதுசூதன் முத்து உடை தாமம் நிரை தாழ்ந்த பந்தல் கீழ் வந்து என்னை கைத்தலம் பற்ற—	தோழீ—மத்தளங்கள் அடிக்கவும் ரேகைகளையுடைய சங்குகளை ஊதவும், மைத்துனமை முறையையுடையனாய் பூர்ணனான கண்ணபிரான் முத்துக்களையுடைய மாலைத்திரள்கள் தொங்கவிடப்பெற்ற பந்தலின் கீழேவந்து என்னைப் பாணிக்ரஹணம் செய்தருள நான் கனாக் கண்டேன்—.

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால் பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து* காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி* தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன் தோழீநான். (7)*

வாய் நல்லார் நல்ல மறை ஓதி மந்திரத்தால் பாசு இலை நாணல் படுத்து பரிதி வைத்து காய் சினம் மா களிறு அன்னான் என் கை பற்றி தீ வலம் செய்ய—	தோழீ!—நன்றாக ஓதின வைதிகர்கள் சிறந்த வேத வாக்கியங்களை உச்சரிக்க, (அந்தந்த க்ரியைகளுக்கு இசைந்த) மந்த்ரங்களைக்கொண்டு பசுமைதங்கிய இலைகளையுடைத்தான நாணற்புல்லைப் பரிஸ்தரணமாக அமைத்து ஸமித்துக்களை இட்டு, மிக்க சினத்தையுடைய மத்தகஜம்போல் செருக்கனான கண்ணபிரான் என் கையைப் பிடித்துக்கொண்டு அக்நியைச் சுற்றிவர நான் கனாக் கண்டேன்—.

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும்பற்றாவான் நம்மையுடையவன் நாராயணன்நம்பி* செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி* அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான். (8)*

இம்மைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்று ஆவான் நம்மை உடையவன் நம்பி நாராயணன் செம்மை உடைய திரு கையால் தாள் பற்றி அம்மி மிதிக்க—	தோழீ!—இப்பிறவிக்கும் மேலுள்ள பிறவிகள் எல்லாவற்றிற்கும் சரண்யனாயிருப்பவனாய் நமக்கு சேஷியாய் ஸகல கல்யாணகுண பரிபூர்ணனாய் நாராயணனான கண்ணபிரான் செவ்விய (தனது) திருக்கையினால் (எனது) காலைப்பிடித்து அம்மியின்மேல் எடுத்து வைக்க நான் கனாக் கண்டேன்—.

வரிசிலைவாண்முகத்து என்னைமார்தாம்வந்திட்டு எரிமுகம்பாரித்து என்னைமுன்னே [நிறுத்தி* அரிமுகனச்சுதன்கைம்மேலென்கைவைத்து* பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் [தோழீநான். (9)*

வரி சிலைவாள் முகம் என் ஐம்மார் தாம் வந்திட்டு எரி முகம் பாரித்து முன்னே என்னை நிறுத்தி அரி	தோழீ!— அழகிய வில்போன்ற புருவத்தையும் ஒளி பொருந்திய முகத்தையு முடையவர்களான எனது தமையன்மார்கள் வந்து அக்நியை நன்றாக ஜ்வலிக்கச் செய்து அந்த அக்நியின்

முகன் அச்சுதன் கை மேல் என் கைவைத்து பொரி முகந்து அட்ட—	முன்னே என்னை நிறுத்தி (ஹிரண்ய வதத்திற்காக) ஸிம்ஹ முகத்தை யுடையவனாய் அவதரித்த கண்ணபிரானுடைய திருக்கையின் மேலே என்னுடைய கையை வைத்து பொரிகளை அள்ளிப் பரிமாற நான் கனாக் கண்டேன்—.

குங்குமமப்பிக் குளிர்சாந்தம்மட்டித்து மங்கலவீதி வலஞ்செய்துமணநீர்*
அங்கவனோடும் உடன்சென்றங்கானைமேல்* மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்
[தோழீநான். (10)*

குங்குமம் அப்பி குளிர் சாந்தம் மட்டித்து ஆனை மேல் அவனோடும் உடன் சென்று மங்கலம் வீதி வலம் செய்து மணம் நீர் மஞ்சனம் ஆட்ட—	தோழீ !—; குங்குமக் குழம்பை உடம்பெல்லாம் பூசி குளிர்ந்த சந்தனத்தை கனக்கத்தடவி மத்தகஜத்தின் மேலே அக் கண்ணபிரானோடு கூடியிருந்து (விவாஹ நிமித்தமான) அலங்காரங்கள் விளங்குகின்ற வீதிகளிலே ஊர்வலம் வந்து வஸந்த ஜலத்தினால் (எங்களிருவரையும்) திருமஞ்சனம் பண்ணுவதாக நான் கனாக் கண்டேன்—.

ஆயனுக்காகத் தான்கண்டகனாவினை வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதை
[சொல்*
தூயதமிழ்மாலை ஈரைந்தும்வல்லவர்* வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (11)*

வேயர் புகழ் வில்லிபுத்தூர் கோன் கோதை தான் ஆயனுக்கு ஆக கண்ட கனாவினை சொல் தூய தமிழ் மாலை ஈர் ஐந்தும் வல்லவர் வாயும் நல் மக்களை பெற்று மகிழ்வர்.	வேயர் குலத்தவரால் புகழப் பட்டவராய் ஸ்ரீ வில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய (திருமகளான) ஆண்டாள் தான் கோபால க்ருஷ்ணனுக்கு வாழ்க்கைப்பட்டதாகக் கனாக் கண்டபடியைக் குறித்து அருளிச்செய்த பரிசுத்தமான தமிழ்த் தொடையான இப்பத்துப் பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள் நற்குணங்களமைந்த விலக்ஷணரான புத்திரர்களைப் பெற்று ஆநந்திக்கப் பெறுவார்கள்.

அடிவரவு :—வாரணம், நாளை, இந்திரன், நால், கதிர், மத்தளம், வாய், இம்மை, வரிசிலை, குங்குமம், ஆயன், கருப்பூரம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

*ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம் மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா,
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம் யோ நிச்சிகாய மநவை
[முநிவாஹநம் தம்.*

ய: கவேர துஹிது: மத்யே சயாநம் ஹரிம் ஆபாத சூடம் அநுபூய முதித அந்தராத்மா நயநயோ: விஷயாந்தராணாம் அத்ரஷ்ட்ருதாம் நிச்சிகாய தம் முநிவாஹநம் மநவை.	யாவரொரு திருப்பாணாழ்வார் திருக்காவேரியின் நடுவில் திருக்கண் வளர்ந்தருளுகிற அழகிய மணவாளப் பெருமானை திருவடி தொடங்கித் திருமுடியளவாக (கண்குளிர) அநுபவித்து மகிழ்ந்த சிந்தையராய் (தமது) திருக்கண்கள் (அப் பெருமானன்றி) மற்றொன்றையும் காணமாட்டாமையை அறுதியிட்டருளினரோ, அப்படிப்பட்ட லோகஸாரங்கமஹா முநியை வாஹநமாகக் கொண்ட திருப்பாணாழ்வாரை சிந்திக்கக் கடவேன்,

நித்யாநுஸந்தானவுரை

காட்டவே கண்டபாத கமலநல் லாடையுந்தி
தேட்டரு முதரபந்தந் திருமார்வு கண்டஞ்செவ்வாய்
வாட்டமில் கண்கள்மேனி முனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.

முனி ஏறி தனி புகுந்து காட்டவே கண்ட பாத கமலம் நல் ஆடை உந்தி தேட்டரும் உதர பந்தம் திரு மார்வு கண்டம் செம் வாய் வாட்டம் இல் கண்கள் மேனி பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோம்.

லோகஸாரங்க முனியின் (தோளின் மேல்) ஏறி தனியே உள்ளே புகுந்து (அம்முனிவரர்) காண்பித்தபடியே கண்டு ஸேவிக்கப்பட்ட திருவடித் தாமரைகளும் விலக்ஷணமான திருப்பீதாம்பரமும் திருநாபியும் கிடைத்தற்கு அரிதான பொன் அரைநாணும் பிராட்டி வாழ்கிற மார்பும் திருக்கழுத்தும் சிவந்த வாயும் சோர்வு இல்லாத திருக்கண்களும் (ஆகிய இவற்றோடு கூடிய) திருமேனியை பாசுரங்களின் அநுஸந் தானத்தோடுகூட ஸேவித்து ஆனந்தித்த திருப்பாணாழ்வா ருடைய திருவடிகளை துதிக்கப் பெற்றோம்.

அமலனாதிபிரான் அடியார்க்கென்னை யாட்படுத்த
*விமலன்*விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன்**
*நிமலன்நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான்*திருக்*
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளனவொக்கின்றதே. (1)


அமலன் ஆதி பிரான் என்னை அடியார்க்கு ஆள்படுத்த விமலன் விண்ணவர்கோன் விரை ஆர் பொழில் வேங்கடவன் நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிள் அரங்கத்து அம்மான் திருக்கமல பாதம் வந்து என் கண்ணின் உள் ளன ஒக்கின்றதே.

பரிசுத்தனாய் ஜகத்காரணபூதனாய் உபகாரகனாய் (இழிகுலத் தவனான) என்னை (தனது) அடியவர்களான பாகவதர்களுக்கு ஆட்படுத்துகையாலே வந்த சிறந்த புகழை யுடையனாய் நித்ய ஸூரிகட்குத் தலைவனாயிருந்து வைத்து (ஆச்ரிதர்கட்காக) பரிமளம் மிக்க சோலைகளையுடைய திருவேங்கடமலையில் வந்து தங்குமவனாய் ஆச்ரயிப்பார்க்கு அரியனாயிருக்கையாகிற குற்றமற்று, ஆச்ரித பாரதந்திரியத்தை வெளியிட்டு நிற்கு மவனாய் அடியாருடைய குற்றத்தைக் காண்கையாகிற தோஷமில்லாத வத்ஸலனாய், சேஷசேஷி முறை வழுவாதபடி நியாயமே செல்லும் நிலமான பரமபதத்துக்கு நிர்வாஹகனாய் உயர்ந்த மதிள்களையுடைய கோயிலிலே (கண்வளர்ந்தருளு கிற) ஸ்வாமியான அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளானவை தானேவந்து என் கண்ணுக்குள்ளே புகுந்தனபோலிரா நின்றனவே.

*உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்தண்டமுற**
*நிவந்தநீண்முடியன் அன்றுநேர்ந்தநிசாசரரை**
*கவர்ந்தவெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான்*அரைச்*
சிவந்தவாடையின்மேல் சென்றதாமென்சிந்தனையே. (2)

உவந்த உள்ளத்தன் ஆய் உலகம் அளந்து அண்டம் உற நிவந்த நீள் முடியன் அன்று நேர்ந்த நிசா சரரை கவர்ந்த வெம் கணை காகுத் தன் கடிஆர் பொழில் அரங்கத்து அம்மான் அரை சிவந்த ஆடை யின் மேல் என் சிந்தனை சென்றது ஆம்—

மகிழ்ச்சியோடு கூடிய மனத்தையுடையனாய்க்கொண்டு மூவுலகங்களையும் அளந்து அண்டகடாஹத்தளவுஞ் சென்று முட்டும்படி உயர்த்தியை அடைந்த பெரிய திருமுடியை யுடையவனாய் முற்காலத்தில் எதிர்ந்து வந்த ராக்ஷஸர்களை உயிர்வாங்கின கொடிய அம்புகளையுடைய இராமபிரானாய், மணம் மிக்க சோலைகளையுடைய ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி யிருப்பவனான எம்பிரானுடைய திருவரையில் (சாத்திய) பீதாம்பரத்தின்மேல் என்னுடைய நினைவானது பதிந்ததாம்,



திருப்பாணாழ்வார்

கார்த்திகையுரோகிணிநாள் காண்மினின்றுகாசினியீர்*
வாய்ந்தபுகழ்ப்பாணர்வந்துதிப்பால் -* ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான்கற்றதற்பின்
நன்குடனே கொண்டாடும் நாள்.

*மந்திபாய் வடவேங்கடமாமலை*வானவர்கள்*
*சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்**
*அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில்**
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. (3)

மந்தி பாய் வடவேங்கடம் மா மலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவு இன் அணையான் அந்தி போல் நிறம் ஆடையும் அதன் மேல் அயனை படைத்தது ஓர் எழில் உந்தி மேலது அன்றோ அடியேன் உள்ளத்து இன் உயிர்.

குரங்குகளானவை (ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில்) பாயப் பெற்ற வடதிசையிலுள்ள திருவேங்கடமென்னும் திருமலையிலே நித்யஸூரிகள் பூக்களைக்கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவனாய், கோயிலிலே திருவனந்தாழ்வானாகிற போக்யமான படுக்கை யுடையனான அழகிய மணவாளனுடைய செவ்வானம் போன்ற நிறத்தையுடைய திருப்பீதாம்பரமும் அப்பீதாம்பரத்தின் மேலே பிரமனைப்படைத்த ஒப்பற்ற அழகையுடைய திருநாபிக் கமலமும் ஆகிய இவற்றின்மேற் படிந்ததன்றோ என்னுடைய மனஸ்ஸிலே விளங்குகிற இனிதான ஆத்ம ஸ்வரூபம்.

சதுரமாமதிள்சூழிலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்**
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்*
றுதரபந்தம் என்னுள்ளத்துள்நின்றுலாகின்றதே. (4)

சதுரம் மா மதிள் சூழ் இலங்கைக்கு இறைவன் ஓட்டி தலை பத்து உதிர ஓர் வெம் கணை உய்த்தவன் ஓதம் வண்ணன் வண்டு மதுரமா பாட மா மயில் ஆடு அரங்கத்து அம்மான் திருவயிறு உதர பந்தம் என் உள்ளத்துள் நின்று உலாகின்றது.

நாற்சதுரமாய் உயர்ந்திருக்கிற மதில்களாலே சூழப்பட்ட லங்காநகரத்திற்கு நாதனான இராவணனை (முதல்நாள் யுத்தத்தில்) தோற்று ஓடும்படி செய்து (மறுநாட்போரில்) (அவனது) தலை பத்தும் (பனங்காய்போல்) உதிரும்படி ஒப்பற்ற கூர்மையான அஸ்த்ரத்தைப் பிரயோகித்தவனும், கடல்போன்ற (குளிர்ந்த) வடிவையுடையவனும், வண்டுகளானவை மதுரமாக இசைபாட (அதற்குத் தகுதியாக) சிறந்த மயில்கள் கூத்தாடப் பெற்ற திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாதனுடைய திருவயிற்றில் சாத்தியுள்ள 'உதரபந்த' மென்னும் திருவாபரணமானது என் நெஞ்சினுள் நிலைத்து நின்று உலாவுகின்றது.

பாரமாய பழவினைபற்றறுத்து என்னைத்தன்*
*வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றியென்னுள்புகுந்தான்**
*கோரமாதவம்செய்தனன்கொலறியேன் அரங்கத்தம்மான் *திரு*
வாரமார்பதன்றோ அடியேனையாட்கொண்டதே. (5)

பாரம் ஆய பழவினை பற்று அறுத்து என்னை தன் வாரம் ஆக்கி வைத்தான் வைத்தது அன்றி என்னுள் புகுந்தான் கோரம் மா தவம் செய்தனன் கொல் அறியேன் அரங்கத்து அம்மான் திருஆரம் மார்பு அதுஅன்றோ அடியேனை ஆள்கொண்டது.

பொறுக்கமுடியாத சுமையாயிராநின்ற அநாதியான பாபங்களின் சம்பந்தத்தைத் தொலைத்து (அதனால் பாபம் நீங்கப் பெற்ற) அடியேனை தன்னிடத்தில் அன்பு உடையவனாகப் பண்ணி வைத்தான் (ரங்கநாதன்;) இப்படி செய்து வைத்தது மல்லாமல் என் ஹ்ருதயத்திலும் ப்ரவேசித்து விட்டான்; (இப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெறுதற்கு உறுப்பாக, நான்) உக்ரமான பெரியதொரு தபஸ்ஸை (முற்பிறவியில்) செய்திருப்பேனோ என்னவோ? அறிகிறேனில்லை! ஸ்ரீரங்கநாதனுடைய பிராட்டியையும் முக்தாஹாரத்தையும் உடைத்தான அத்திருமார்பன்றோ தாஸனான என்னை அடிமைப்படுத்திக் கொண்டது.

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய*
*வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயவப்பன்**
அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலமெழுமால்வரை முற்றும்*
உண்டகண்டங்கண்டீர் அடியேனையுய்யக்கொண்டதே. (6)

துண்டம் வெண்பிறையன் துயர் தீர்த்தவன் அம் சிறைய வண்டு வாழ் பொழில் சூழ் அரங்கம் நகர் மேய அப்பன் அண்டர் அண்டம் பகிரண்டம் ஒரு மா நிலம் எழு மால் வரை முற்றும் உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக் கொண்டது.

ஒரு துண்டாயிருக்கிற (கலா மாத்ரமான) வெளுத்த சந்திரனை (முடியிலே) உடையவனான சிவனுடைய (பிச்சை யெடுத்துத் திரிந்த) பாதகத்தைப் போக்கினவனும் அழகிய சிறகை யுடைய வண்டுகள் வாழ்தற்கிடமான சோலைகள் சூழப் பெற்ற திருவரங்கப் பெருநகரிலே பொருந்தியிரா நின்ற ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாதனுடைய அண்டத்துக்குட்பட்ட தேவாதி வர்க்கங்களையும் அண்டங்களையும் அண்டாவரணங் களையும் ஒப்பற்ற மஹாப்ருதிவியையும் ஏழு குலபர்வதங்களை யும் சொல்லிச் சொல்லாத மற்றெல்லாவற்றையும் அமுது செய்த திருக்கழுத்துக்கிடீர் தாஸனான என்னை உஜ்ஜீவிப் பித்தது.

கையினார்சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீண்முடியெம்*
ஐயனார் அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார்**
செய்யவாய்ஐயோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. (7)

கையின் ஆர் சுரி சங்கு அனல் ஆழியர் நீள் வரைபோல் மெய்யனார் துளபம் விரை ஆர் கமழ் நீள் முடி எம் ஐயனார் அணி அரங்கனார் அரவு இன் அணை மிசை மேய மாயனார் செய்யவாய் என்னை சிந்தை கவர்ந்தது ஐயோ.

திருக்கையில் பொருந்தியிருக்கிற சுரியையுடைய திருச் சங்கையும் தீ வீசுகின்ற திருவாழியையும் உடையராய் பெரிய தொரு மலைபோன்ற திருமேனியையுடையராய் திருத்துழா யின் பரிமளம் மிகப்பெற்று அதனால் பரிமளியா நின்றுள்ள உயர்ந்த திருவபிஷேகத்தை யுடையராய் எமக்கு ஸ்வாமியாய் அழகு பொருந்திய திருவரங்கத்திற் கண் வளர்ந்தருள்பவராய் திருவனந்தாழ்வானாகிற இனிய திருப்பள்ளியின்மீது பொருந் திய ஆச்சரிய செய்கைகளை யுடையரான ஸ்ரீரங்கநாதருடைய சிவந்த திருப்பவளமானது என்னுடைய நெஞ்சைக்கொள்ளை கொண்டது (ஆநந்தாதிசயக் குறிப்பு.)

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட அமரர்க்*
*கரியவாதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்து**
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி நீண்டவப்*
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமை செய்தனவே. (8)

பரியன் ஆகி வந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கு அரிய ஆதி பிரான் அரங்கத்து அமலன் முகத்து கரிய ஆகி புடை பரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட பெரிய ஆய அக் கண்கள் என்னை பேதைமை செய்தன.

மிகவும் ஸ்தூலமான வடிவையுடையனாய்க் கொண்டு (ப்ரஹ லாதனை நலிய) வந்த அஸுரனான இரணியனுடைய சரீரத்தை கிழித்துப் பொகட்டவனும், பிரமன் முதலிய தேவர்கட்கும் அணுகமுடியாதவனும் ஜகத்காரண பூதனும் மஹோபகார கனும் கோயிலில் எழுந்தருளியிருக்கிற பரமபாவநனுமாகிய எம்பெருமானுடைய திருமுக மண்டலத்தில் கறுத்த நிறமுடை யவையாய் விசாலங்களாய் பிரகாசமுடையவையாய் செவ்வரி படர்ந்திருப்பனவாய் (காது வரை) நீண்டிருப்பனவாய் பெருமை பொருந்தியவையுமான அந்தத்திருக்கண்களானவை அடியேனை உன்மத்தனாகச் செய்துவிட்டன.

அமலனுதிபிரான்

ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனய்
ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில்
நீலமேனிஐயோ! நிறைகொண்டதென்னெஞ்சினையே. (9)

மா ஆலமரத்தின் இலைமேல் ஒரு பாலகன் ஆய் ஞாலம் ஏழும் உன்டான் அரங்கத்து அரவு இன் அணையான் கோலம் மா மணி ஆரமும் முத்து தாமமும் முடிவு இல்லது ஓர் எழில் நீலம் மேனி என் நெஞ்சினை நிறை கொண்டது.

பெரிதான ஆலமரத்தினுடைய (சிறிய) இலையிலே ஒரு சிறு பிள்ளையாகி ஏழுலகங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கினவனும் கோயிலிலே திருவனந்தாழ்வானுகிற திருப்பள்ளியின்மீது சாய்ந்தருள்பவனுமான ஸ்ரீரங்கநாதனுடைய அழகிய சிறந்த ரத்நங்களால் செய்யப்பட்ட ஹாரமும் முத்துவடமும் (ஆகிய இவை போன்ற பல்லாயிரம் திருவாபரணங்கள்) எல்லைகாண முடியாமல் அபரிமிதமாக விளங்காநிற்கப் பெற்றதும் ஒப்பற்ற அழகையுடையதும் கருநெய்தல் மலர்போன்றதுமான திருமேனியானது எனது நெஞ்சினுடைய அடக்கத்தை கொள்ளை கொண்டுபோயிற்று; ஐயோ இதற்கென் செய்வேன்? என்கிருர்.

கொண்டல்வண்ணனைக் கோவலனய்வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம்கவர்ந்தானை*
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணவே.* (10)

கொண்டல் வண்ணனை கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன் என்உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினை கண்ட கண்கள் மற்று ஒன்றினைகாணு.

காளமேகம் போன்ற வடிவையுடையவனும் கோபால குமாரனுகப் பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயையுடையவனும் என்னுடைய நெஞ்சை கொள்ளை கொண்டவனும் நித்யஸூரிகட்குத் தலைவனும் (பூமண்டலத்துக்கு) அலங்காரமான திருவரங்கத்தில் கண் வளர்ந்தருள்பவனும் எனக்குப் பரம போக்யமான அம்ருதமா யிருப்பவனுமான அழகிய மணவாளனை ஸேவிக்கப்பெற்ற (எனது) கண்களானவை வேறொன்றையும் (பரமபத நாதனையும்) காணமாட்டா.

இப்பாட்டு அருளிச்செய்தவுடனே பெரியபெருமாள் அத்திருமேனியோடு ஆழ்வாரை அங்கீகரித்தருள, அனைவருங்காண அப்பிரானது திருமேனியிலே அந்தர்ப்பவித்துக் காய்ந்த இரும்பு உண்டநீராயினர் என்று—ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர்கள் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும். (10)

அடிவரவு :—அமலன், உவந்த, மந்தி, சதுரம், பாரம், துண்டம், கை, பரி, ஆலம், கொண்டல், கண்ணி.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானர் திருவடிகளே சரணம்—ஜீயர் திருவடிகளே சரணம்

அமலனுதிபிரான் உரை முற்றிற்று.

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு

தனியன் உரை

அவிதிதவிஷயாந்தரச்சடாரே: உபநிஷதாமுபகாநமாத்ரபோக:,
அபிச குணவசாத் ததேகசேஷீ மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து.

அவிதித விஷயாந்தர:	(நம்மாழ்வாரைத் தவிர வேறொரு விஷயத்தையுமறியாதவரும்	குணவசாதபிச	குணமடியாகவும்
சடாரே:	நம்மாழ்வாருடைய (திவ்ய ஸூக்திகளாகிய)	ததேகசேஷீ	அந்த நம்மாழ்வாரொருவரையே தமக்கு சேஷியாகக் கொண்டவருமான
உபநிஷதாம்	த்ரமிடோபநிஷத்தான திவ்ய ப்ரபந்தங்களை	மதுரகவி:	மதுரகவியாழ்வார்
உபகாந மாத்ர போக:	இசை பாடுவது ஒன்றையே பேரின்பமாகக் கொண்டவரும்	மம ஹ்ருதயே	என் நெஞ்சில்
		ஆவிரஸ்து	ஆவிர்ப்பவிக்கக்கடவர்.

வேறொன்றும்நானறியேன் வேதந்தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியாரெம்மை
ஆள்வாரவரேயரண்.

வேறு ஒன்றும் நான் அறியேன்	"(நம்மாழ்வார் தவிர) வெறொரு பொருளும் நான் அறியமாட்டேன்;	சடகோபன்	நம்மாழ்வார்
		எங்கள் வாழ்வு ஆம் என்று	எமக்கு உஜ்ஜீவனராவர்" என்று
வேதம் தமிழ் செய்த	வேதார்த்தங்களைத் தமிழாக அருளிச்செய்த	ஏத்தும்	தோத்திரஞ் செய்தருளின
		மதுரகவியார்	மதுரகவியாழ்வார்
மாறன்	மாறனென்னும் திருநாமத்தை யுடையவரும்	எம்மை ஆள்வார்	நம்மை ஆள்பவர்;
		அவரே	அந்த மதுரகவிகளே
வண்குருகூர் ஏறு	அழகிய திருக்குருகூர் நகர்க்குத் தலைவருமான	அரண்	(ப்ரபந்நகுலத்துக்கு) ரக்ஷகர்.

இக்கண்ணிநுண்சிறுத்தாம்பானது மற்றைப்பிரபந்தங்கள்போல் எம்பெருமான் விஷயமன்று; நம்மாழ்வார் விஷயம் இது, ஆயினும் இதனையும் நம் முன்னோர் நாலாயிரப்பிரபந்தத்தினுள் சேர்த்தருளினரென்பதை "வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம்போல், சீர்த்த மதுரகவிசெய்கலையை, ஆர்த்தபுகழாரியர்கள் தாங்கள் அருளிச்செயல்நடுவே, சேர்வித்தார்தாற்பரியந்தேர்ந்து" என்ற உபதேச ரத்தின மாலையாலறிக.

கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் என்னப்பனில்**
*நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்**
அண்ணிக்குமமுதூறும் என்னாவுக்கே. (1)



மதுரகவியாழ்வார்

வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம் போல்*
சீர்த்தமதுரகவிசெய்கலையை -*ஆர்த்தபுகழ்
ஆரியர்கள்தாங்கள் அருளிச்செயல்நடுவே*
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

கண்ணி	(உடம்பிலே உறுத்தும்படி பல) முடிகளையுடைத்தாய்	என் அப்பனில்	எனக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனை விட்டு,
நுண்	(உடம்பிலே அழுந்தும்படி) நுட்பமாய்	நண்ணி	ஆழ்வாரைக் கிட்டி ஆச்ரயித்து
சிறு	(எட்டம் போராதபடி) சிறிதாயிருக்கிற	தென் குருகூர் நம்பி என்றக்கால்	தெற்குத் திசையிலுள்ள (ஆழ்வார்திருநகரி யென்னும்) குருகூர்க்கு நிர்வாஹகரான ஆழ்வார் என்று (அவரது திருநாமத்தைச்) சொன்னால்
தாம்பினால்	கயிற்றினால்		
கட்டுண்ண பண்ணிய	யசோதைப் பிராட்டி தன்னைக் கட்டும்படி பண்ணுவித்துக் கொண்ட	அண்ணிக்கும்	பரம போக்யமாயிருக்கும்:
பெரு மாயன்	விசேஷ ஆச்சரியசக்தியுக்தனாய்	என் நாவுக்கே அமுது ஊறும்	என் ஒருவனுடைய நாவுக்கே அம்ருதம் ஊறுநிற்கும்.

*நாவினால்நவிற்றி இன்பமெய்தினேன்**
*மேவினேன் அவன்பொன்னடிமெய்ம்மையே**
*தேவுமற்றறியேன் குருகூர்நம்பி**
பாவினின்னிசை பாடித்திரிவனே. (2)

நாவினால்	நாக்கினால்	மற்று தேவு அறியேன்	(ஆழ்வாரை யொழிய) வேறொரு தெய்வத்தை அறியமாட்டேன்;
நவிற்றி	(ஆழ்வாரை) ஸ்தோத்திரம் பண்ணி		
இன்பம் எய்தினேன்	ஆநந்தத்தைப் பெற்றேன்;	குருகூர் நம்பி	திருநகரிக்கு நிர்வாஹகரான அவ்வாழ்வாருடைய
அவன்	அவ்வாழ்வாருடைய	பாவின்	அருளிச்செயல்களின்
பொன் அடி	அழகிய திருவடிகளை	இன் இசை	இனிய இசையையே
மேவினேன்	ஆச்ரயிக்கப் பெற்றேன்;	பாடி	பாடிக்கொண்டு
மெய்ம்மையே	இது ஸத்தியமே;	திரிவன்	திரியக்கடவேன்.

*திரிதந்தாகிலும் தேவபிரானுடை**
*கரியகோலத் திருவுருக்காண்பன் நான்**
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கா
ளுரியனாய் அடியேன்பெற்றநன்மையே.* (3)

திரிதந்தாகிலும்	(பகவத் விஷயத்தோடு ஒட்டற்றுத்) திரிந்தேனாகிலும்	நான் காண்பன்	நான் ஸேவிப்பேன்;
தேவபிரானுடைய	நித்திய ஸூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுடைய	பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு	பெருமையும் ஔதார்யமுமுடைய ஆழ்வார்க்கு
கரிய கோலம்	(நீலமேகம்போல்) கறுத்ததாய் அழகியதான	உரிய ஆள் ஆய்	அநந்யார்ஹ சேஷபூதனாயிருந்து வைத்து
திருஉரு	பிராட்டியோடு கூடிய திவ்ய ரூபத்தையும்	அடியேன் பெற்ற நன்மை	அடியேன் பெற்ற பேறு இது காணீர்.

* * *—*ஆழ்வாருடைய உகப்புக்காக எம்பெருமானையும் ஸேவிப்பேனென்றவாறு.* (3)

*நன்மையால்மிக்க நான்மறையாளர்கள்**
*புன்மையாகக் கருதுவராதலில்**
அன்னையாயத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான்* சடகோபனென் நம்பியே. (4)

நித்யாநுஸந்தானவுரை

நன்மையால் மிக்க	நற்குணத்தால் மேன்மை பெற்றவர்களாய்
நால்மறை ஆளர்கள்	நான்கு வேதங்களிலும் வல்லவர்களான வைதிகர்கள்
(என்னை)	அடியேனை
புன்மை ஆக கருதுவர் ஆதலில்	ஹேய குணங்களே ஒரு வடிவு கொண்டதென்றெண்ணி உபேக்ஷித்திருப்பரென்பதுவே ஹேதுவாக
அன்னை ஆய்	மாதாவாயும்
அத்தன் ஆய்	பிதாவாயும்
என்னை ஆண்டிடும் தன்மையான்	அடியேனைக் கைக்கொண்டருளு மியல்வினரான
சடகோபன்	நம்மாழ்வார்
என் நம்பி	எனக்குத் தலைவர்

** * *—அருள் மிகுந்தவர்களும் கைவிடத்தக்க தம்மை ஆழ்வார் கைக்கொண்டாரென்க.* (4)

*நம்பினேன் பிறர்நன்பொருள்தன்னையும்**
*நம்பினேன் மடவாரையும்முன்னெலாம்**
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேனின்றே.* (5)

அடியேன்	(இன்று 'அடியேன்' என்று சொல்லும்படி திருந்தின) நான்
முன் எலாம்	(ஆழ்வாருடைய விஷயீகாரம் பெறுவதற்கு) முன்பெல்லாம்
பிறர்	அயலாருடைய
நல் பொருள் தன்னையும்	நல்ல பொருள்களை
நம்பினேன்	ஆசைப்பட்டுக்கிடந்தேன்;
(பிறர்) மடவாரையும்	பிறருடைய ஸ்த்ரீகளையும்
நம்பினேன்	விரும்பிப் போந்தேன்;
இன்று	இப்போதோ வென்றால்
செம்பொன் மாடம்	செவ்விய பொன்னாற் சமைந்த மாடங்களையுடைய
திரு குருகூர் நம்பிக்கு	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்க்கு
அன்பன் ஆய்	பக்தனாகப்பெற்று
சதிர்த்தேன்	சதிரை யுடையேனானேன் [சமத்தனாய் விட்டேன்.]

*இன்றுதொட்டும் எழுமையுமெம்பிரான்**
*நின்றுதன்புக ழேத்தவருளினான்**
*குன்றமாடத் திருக்குருகூர்நம்பி**
என்றுமென்னை யிகழ்விலன்காண்மினே. (6)

இன்று தொட்டும்	இன்று முதலாக
எழுமையும்	மேலுள்ள காலமெல்லாம்
நின்று	(நான்) அத்யவஸாயம் நிலைக்கப்பெற்று
தன்புகழ்	தம்முடைய (ஆழ்வாருடைய) திருப்புகழ்களை
ஏத்த	துதிக்கும்படி
எம்பிரான் அருளினான்	எம் ஸ்வாமியான ஆழ்வார் க்ருபை பண்ணினார்;
குன்றம் மாடம்	மலைபோன்ற மாடங்களையுடைய
திருகுருகூர் நம்பி	திருநகரிக்குத் தலைவரான அவ்வாழ்வார்
என்றும்	(இனி) எக்காலத்திலும்
என்னை	என் விஷயத்தில்
இகழ்வு இலன்	அநாதரமுடையவராக இருக்கமாட்டார்,
காண்மின்	(இதனை அநுபவத்தில்) கண்டு கொள்ளுங்கள்,

*கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான்**
*பண்டைவல்வினை பாற்றியருளினான்**
*எண்டிசையும் அறியவியம்புகேன்**
ஒண்டமிழ்ச் சடகோபனருளையே. (7)

கண்ணிநுண் சிறுத்தாம்பு

பிரான்	பரமோபகாரகராய்	பாற்றி அருளினான்	உருமாய்ந்து போம்படிபறக்கடித்தருளினார் (ஆதலால்)
காரி மாறன்	பொற்காரியார் திருக்குமாரரான நம்மாழ்வார்	ஒண் தமிழ் சடகோபன் அருளையே	அழகிய தமிழ்க் கவிகளுக்கு ஆகரமான அவ்வாழ்வாருடைய க்ருபையையே
என்னை	(தமதுபெருமையை அறியாத) என்னை	எண் திசையும்	எட்டுத் திக்கிலுள்ளவர்களும்
கண்டு	கடாக்ஷித்து	அறிய	அறியும்படி
கொண்டு	கைக்கொண்டு	இயம்புகேன்	சொல்லக்கடவேன்;
பண்டைவல்வினை	அநாதியாய்ப் பிரபலமாயிருந்த பாவங்களை		

*அருள்கொண்டாடும் அடியவரின்புற***
*அருளினான் அவ்வருமறையின்பொருள்***
*அருள்கொண்டு ஆயிரமின்றமிழ்ப்பாடினான்***
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. (8)

அருள் கொண்டாடும்	பகவத் க்ருபையைக் கொண்டாடுகின்ற	இன் தமிழ்	இனிய தமிழ்ப் பாஷையிலே அமைந்த
அடியவர்	பக்தர்கள்	ஆயிரம்	திருவாய்மொழி யாயிரத்தை
இன்புற	ஆநந்திக்கும்படி	பாடினான்	பாடினவருமான ஆழ்வாருடைய
அ அருமறையின் பொருள்	அந்த அருமையான வேதத்தின் உட்பொருள்களை	அருள் கண்டீர் இ உலகினில் மிக்கது	க்ருபை ஒன்று மாத்திரமன்றோ இந்த லோகத்தில் அதிசயித்திருக்கிறது;
அருளினான்	அருளிச் செய்தவராயும்		
அருள் கொண்டு	பரமக்ருபையாலே		

*மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்***
*நிற்கப்பாடி யென்நெஞ்சுள்நிறுத்தினான்***
*தக்கசீர்ச் சடகோபனென்நம்பிக்கு** *ஆட்*
புக்ககாதல் அடிமைப் பயனன்றே. (9)

மிக்க வேதியர் வேதத்தின்	சிறந்த வைதிகர்களால் ஓதப்படுகின்றவேதத்தினுடைய	சடகோபன்	சடகோபனென்ற திருநாமத்தை யுடையரான
உள் பொருள்	உள்ளுறை பொருளானது	என் நம்பிக்கு ஆள் புக்க	(அந்த) ஆழ்வார் விஷயத்திலே அடிமை செய்வதற்கு உறுப்பான
நிற்க	நிலை நிற்கும்படி	காதல்	ஆசையானது
பாடி	(திருவாய்மொழியைப்) பாடி	அன்றே	அந்த க்ஷணத்திலேயே
என் நெஞ்சுள்	என்னுடையஹ்ருதயத்திலே	அடிமைப் பயன்	(ஆழ்வார் திருவடிகளில்) கைங்கரியம் செய்வதையே பயனாகவுடைத்தாய்த்து.
நிறுத்தினான்	(அந்த வேதார்த்தங்களை அல்லது திருவாய்மொழியை) ஸுப்ரதிஷ்டிதமாக்கி யருளினார் (ஆழ்வார்);		
தக்க சீர்	தகுதியான குணங்களை யுடையராய்		

*பயனன்றாகிலும் பாங்கலராகிலும்***
*செயல்நன்றாகத் திருத்திப்பணிகொள்வான்***
*குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி***
முயல்கின்றேன் உன்றன்மொய்கழற்கன்பையே. (10)

பயன் அன்று ஆகிலும்	(பிறர் திருந்துவதால்) தமக்கொரு பயனில்லாமற் போனாலும்	பாங்கு அலர் ஆகிலும்	(அவர்கள்) திருந்துகைக்குப் பாங்காக அமையாமற் போனாலும்

நித்யாநுஸந்தானவுரை

செயல்	தமது அநுஷ்டானத்தாலே	நம்பீ!	ஆழ்வாரே!
நன்றாக திருத்தி	நன்றாக சிக்ஷித்து	உன்தன்	தேவரீருடைய
பணிகொள்வான்	(அவர்களை) ஆட்கொள்வதற்காக	மொய் கழற்கு	சிறந்த திருவடிகளில்
குயில் நின்று ஆல் பொழில் சூழ் குருகூர்	குயில்களானவை நின்று ஆரவாரஞ் செய்யப் பெற்ற சோலைகளாலே சூழப்பட்ட திருநகரியிலே (எழுந்தருளியிருக்கிற)	அன்பையே முயல்கின்றேன்	அன்பு உண்டாவதைக் குறித்தே முயற்சி செய்கிறேன்.

அன்பன்றன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் தென்குருகூர் நகர்நம்பிக்கு**
அன்பனாய் மதுரகவி சொன்னசொல்
நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே.* (11)

அன்பன் தன்னை	ஆச்ரித பக்ஷபாதியான எம்பெருமானை	அன்பன் ஆய்	பக்தனாயிருந்து கொண்டு
அடைந்தவர்கட்குஎல்லாம்	ஆச்ரயித்தவர்களான ஸகல பாகவதர் பக்கலிலும்	மதுரகவிசொன்னசொல்	மதுரகவி அருளிச்செய்த இத்திவ்வியப் பிரபந்தத்தை
அன்பன்	பக்தியையுடையரான	நம்புவார்	(தங்களுக்குத் தஞ்சமாக) விச்வஸித்திருப்பவர்களுக்கு
தென் குருகூர் நகர் நம்பிக்கு	நம்மாழ்வார் விஷயத்திலே	பதி	வாஸஸ்தானமாவது
		வைகுந்தம் காண்மின்	—பரமபதமாம்;

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம்—ஜீயர் திருவடிகளே சரணம்


ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

கோயில் திருவாய்மொழி

"அத்யயந ஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்யமாகிறாப்போலே சந்தங்களாயிரமும் அறியக் கற்று வல்லாரானால் வைஷ்ணவத்வஸித்தி" என்பது ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி. நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரத்தையும் அறியக் கற்று வல்லவர்களுக்கே ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்திக்குமென்றது. எந்த விஷயத்திலும் ப்ரதாநகல்பம், அநுகல்பம் [அதாவது - முக்யபக்ஷம், கௌணபக்ஷம்] என்று இரண்டு உண்டாதலால் திருவாய்மொழி யாயிரத்தையும் அதிகரிக்கமாட்டாதவர்களுக்காக அநுகல்பமாய் கோயில் திருவாய் மொழியைப் பரமகாருணிகர்களான நம் பூருவாசாரியர்கள் நிபந்தித்தருளினார்கள். நைமித்திக விசேஷங்களில் திருவாய்மொழி யாயிரத்தையும் ஸேவிக்க இயலாத போதைக்கு ஸௌகரியமாகவும் இந்தக் கோயில் திருவாய்மொழி அமைக்கப்பட்டது.

திருவாய்மொழி யாயிரத்தில் ஒவ்வொரு நூறிலும் ஸாரமான ஒவ்வொரு பதிகம் எடுத்து இது அமைக்கப்பட்டுள்ளது. முதற்பத்திலும் பத்தாம் பத்திலும் மாத்திரம் இரண்டிரண்டு பதிகங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆக, பன்னிரண்டு பதிகங்கள் [நூற்றிருபது பாசுரங்கள்] கோயில் திருவாய்மொழி யென்றுணர்க.



நம்மாழ்வார்

உண்டோவைகாசி விசாகத்துக்கொப்பொரு நாள்*
உண்டோசடகோபர்க்கொப்பொருவர் -*உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு தென்குருகைக்குண்டோ*
ஒருபார் தனிலொக்குமூர்.

கோயில் திருவாய்மொழி

அவற்றின் அடைவு வருமாறு:—

1. முதற்பத்தில் தொடக்கத்திலேயுள்ள *உயர்வற* *வீடுமின்* என்கிற இரண்டு பதிகங்கள்.
2. இரண்டாம் பத்தில் திருமாலிருஞ்சோலைமலை விஷயமான *கிளரொளி* என்கிற பத்தாம் பதிகம்.
3. மூன்றாம்பத்தில் திருவேங்கடமலை விஷயமான *ஒழிவில்காலமெல்லாம்* என்கிற மூன்றாம் பதிகம்.
4. நாலாம்பத்தில் திருக்குருகூர் விஷயமான *ஒன்றுந்தேவு முலகும்* என்கிற பத்தாம் பதிகம்.
5. ஐந்தாம்பத்தில் திருக்குடந்தை விஷயமான *ஆராவமுதே* என்கிற எட்டாம் பதிகம்.
6. ஆறாம்பத்தில் திருவேங்கடமலை விஷயமான *உலகமுண்ட* என்கிற பத்தாம் பதிகம்.
7. ஏழாம்பத்தில் கோயில் விஷயமான *கங்குலும் பகலும்* என்கிற இரண்டாம் பதிகம்.
8. எட்டாம்பத்தில் பாகவத சேஷத்வ ப்ரதிபாதகமான *நெடுமாற்கடிமை* என்கிற பத்தாம் பதிகம்.
9. ஒன்பதாம்பத்தில் திருக்கண்ணபுரம் விஷயமான *மாலை நண்ணி* என்கிற பத்தாம் பதிகம்.
10. பத்தாம்பத்தில் அர்ச்சிராதி கதியநுபவ விஷயமாயும் அவாவற்று வீடுபெற்ற விஷயமாயும் முடிவிலுள்ள *சூழ்விசும் பணி முகில்* *முனியே நான் முகனே* என்கின்ற இரண்டு பதிகங்கள்.

ஆக இப்பன்னிரண்டு பதிகங்களுக்குக் கோயில் திருவாய்மொழியென்று தொன்று தொட்டு வழங்குந் திருநாமம். திருநாராயணபுர ப்ராந்தத்தில் *ஒரு நாயகமாய்* (4—1.) என்கிற பதிகத்தையும் சேர்த்து வழங்குவர்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழித் தனியன்கள்

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்,
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

பக்த அம்ருதம்	தொண்டர்கட்கு அமுதமாயிருப்பதும்
விச்வ ஜந அநு மோதநம்	ஸகல ஜனங்களையும் ஆனந்திக்க செய்வதும்
ஸர்வ அர்த்ததம்	ஸமஸ்த புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லதும்
ஸஹஸ்ர சாகா உபநிஷத் ஸமாகமம்	ஆயிரக்கணக்கான சாகைகளையுடைய உபநிஷத்துக்களின் திரட்சியாயிருப்பதும்

ஸ்ரீ சடகோப வாங்மயம்	நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திமயமுமான
த்ராவிட வேத ஸாகரம்	தமிழ் வேதக் கடலை
அஹம்	அடியேன்
நமாமி	ஸேவிக்கிறேன்.

நித்யாநுஸந்தானவுரை

* * *—திருவாய்மொழி ஒருகடலாக ரூபணம் செய்யப்படுகின்றது. கடலுக்குள்ள தன்மையடங்கலும் திருவாய்மொழிக்கும் உண்டென்று ஐந்து விசேஷணங்களினால் நிரூபிக்கப்படுகின்றது.

திருவழுதிநாடென்றுந் தென்குருகூரென்றும்
மருவினியவண்பொருநலென்றும்—அருமறைகள்
அந்தாதிசெய்தானடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய்நெஞ்சேதெளிந்து.

நெஞ்சே	மனமே !	அரு மறைகள்	அருமையான வேதங்களை
திருவழுதி நாடு என்றும்	திருவழுதி நாடென்கிற தேசத்தை அநுஸந்தித்தும்	அந்தாதி செய்தான்	அந்தாதித் தொடையான திருவாய்மொழி முகத்தாலே பாடின ஆழ்வாருடைய
தென் குருகூர் என்றும்	அழகிய திருக்குருகூரென்கிற திவ்ய தேசத்தை அநுஸந்தித்தும்	அடி இணையே	உபயபாதங்களையே
மருவ இனிய வண் பொருநல் என்றும்	ஆசைப்படும்படி போக்யமாய் அழகியதான தாமிர பர்ணி யாற்றை அநுஸந்தித்தும்,	எப்பொழுதும்	இடைவிடாமல்
		தெளிந்து	தெளிவுடனே
		சிந்தியாய்	சிந்தை செய்யக்கடவை.

* * *—ஆழ்வாருடைய திருவடிகளை அநுஸந்திக்கும்போது அவரது திருவவதாரஸ்தலமான திருநகரியையும், அது இருக்கும் நாடாகிய வழுதிவளநாட்டையும், அந்நாட்டுக்கு அலங்காரமாய் ஆழ்வார்க்குப் புராண நிரூபகமுமான தாமிரபர்ணி திவ்யநதியையும் அநுஸந்தித்துப் பின்பு 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்ன வேணுமென்கிறது. இதனால் உத்தேச்ய வஸ்துவின் ஸம்பந்தஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களும் உத்தேச்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாகும்.

மனத்தாலும்வாயாலும்வண்குருகூர்பேணும்
இனத்தாரையல்லாதிறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன் எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

மனத்தாலும்	நெஞ்சினாலும்	ஏதும் குறைவு இலேன்	எவ்விதமான குறையுமுடையேனல்லேன் ; (ஏதனாலென்னில்)
வாயாலும்	வாக்கினாலும்	எந்தை சடகோபன்	அஸ்மத் ஸ்வாமியான நம்மாழ்வாருடைய
வண் குருகூர் பேணும்	திருநகரியை ஆதரிக்கின்ற	பாதங்கள்	திருவடிகள்
இனத்தாரை அல்லாது	கோஷ்டியில் சேர்ந்தவர்களைத் தவிர (மற்றையோர்களை)	யாமுடைய	நம்முடைய
இறைஞ்சேன்	வணங்கமாட்டேன் ;	பற்று	ஆதாரமாயிராநின்றது.
தனத்தாலும்	செல்வத்தினாலும்		

* * *—ஆழ்வார் திருநகரியையே போற்றிக்கொண்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் அந்வயித்த மஹான்களைத் தவிர மற்று எவரையும் வணங்கமாட்டேனென்றது, எப்போதும் அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகளையே வணங்குவேனென்றபடி.

முன்னடியில் இறைஞ்சேன் என்று ஒருமையாகச் சொல்லிப் பின்னடியில் யாமுடைய என்று பன்மையாகச் சொன்னது, இயல்புபற்றிய தனித்தன்மைப் பன்மை ஸ்வஸம்பந்திகளையுங் கூட்டிக்கொண்டு பேசுகிறாரென்னவுமாம். ... (*)

திருவாய்மொழி தனியன்கள்

ஏய்ந்தபெருங்கீர்த்தி யிராமாநுசமுனிதன்
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன் செந்தமிழ்வேதந்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

ஆய்ந்த	குற்றங் கலசாத	பெற	பெறும் பொருட்டு
பெருசீர்	சிறந்த திருக்குணங்களினால்	ஏய்ந்த பெரு கீர்த்தி இராமாநுசமுனிதன்	தகுதியான பெரும் புகழையுடைய எம்பெருமானாரது
ஆர்	பரிபூர்ணரான	வாய்ந்த பாதம் மலர்	பொருத்தமான திருவடித் தாமரைகளை
சடகோபன்	நம்மாழ்வார் அருளிச்செய்த	வணங்குகின்றேன்	தொழுகின்றேன்.
செந்தமிழ் வேதம்	செவ்விய தமிழ் வேதத்தை		
தரிக்கும்	தாங்கிக் கொள்ளவல்லதாய்		
பேராத	வேறொன்றில் செல்லமாட்டாததான		
உள்ளம்	நெஞ்சை		

* * *—மேல் தனியனில் "*தமிழ்மறைக ளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்*" என்னப்படுதலால் திருவாய்மொழியை வளர்த்தவரான எம்பெருமானாருடைய திருவருளின்றித் திருவாய்மொழியை மனப்பாடமாகத் தரிக்கவல்ல சக்தி வாய்க்க மாட்டாதாதலால், செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறுதற்காக இராமாநுசனது மலர்ப்பாதம் வணங்குகின்றேனென்கிறது இதில்.

"*எங்கள் கதியே யிராமாநுசமுனியே, சங்கை கொடுத்தாண்டதவராசா. பொங்குபுகழ் மங்கையர்கோனீந்த மறையாயிர மனைத்தும், தங்குமனம் நீயெனக்குத்தா*" என்ற பெரிய திருமொழித் தனியனையும் இங்கு ஸ்மரிப்பது.

வான்திகழுஞ்சோலை மதிளரங்கர்வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்—ஈன்ற
முதற்றாய்சடகோபன் மொய்ம்பால்வளர்த்த
இதத்தாயிராமாநுசன்.

வான் திகழும் சோலை	ஆகாசத்தளவும் ஓங்கி விளங்குகின்ற சோலைகளையும்	தமிழ் மறைகள் ஆயிரமும்	தமிழ் வேதமான ஆயிரம் பாசுரங்களையும்
மதிள்	ஸப்த ப்ராகாரங்களையும் உடைத்தான	ஈன்ற முதல்தாய்	பெற்ற முக்கியமான மாதா
அரங்கர்	திருவரங்கத்தில் பள்ளி கொண்ட எம்பெருமானுடைய	சடகோபன்	நம்மாழ்வாராவர்
		மொய்ம்பால்	மிடுக்குடனே
		வளர்த்த	அதனை வளர்த்த
வண் புகழ் மேல் ஆன்ற	திருக்கல்யாண குண விஷயமாக அமைந்த	இதம் தாய்	இதமான மாதா
		இராமாநுசன்	எம்பெருமானாராவர்.

* * *—கீழ்த் தனியனிலே "*செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராத வுள்ளம் பெற—இராமாநுச முனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்*" என்று பேசும்படி எம்பெருமானார்க்கும் திருவாய்மொழிக்குமுள்ள தொடர்பை வெளியிடுவது இப்பாசுரம். உலகத்தில் பிரஜைகளுக்குப் பெற்றதாய் என்றும் வளர்த்த தாய் என்றும் இரண்டு தாய்மார் ஏற்படுவதுபோல் திருவாய்மொழியாகிற ப்ரஜைக்கும் இரண்டு தாய்மாருண்டு; அவர்களாகிறார் நம்மாழ்வாரும் எம்பெருமானாரும். ஆழ்வார் பெற்றருளினார்; எம்பெருமானார் போஷித்தருளினார். கண்ணபிரானுக்கு தேவகிப்பிராட்டியும் யசோதைப்பிராட்டியும் போலே.

மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும்
தக்கநெறியுந் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும்வாழ்வினையு மோதுங்குருகையர்கோன்.
யாழினிசைவேதத்தியல்.

குருகையர் கோன்	திருநகரியிலுள்ளார்க்குத் தலைவரான ஆழ்வார் (அருளிச்செய்த)
யாழின் இசை வேதத்து இயல்	வீணாகானம்போன்ற திருவாய்மொழிப் பாசுரங்கள்
மிக்க இறை நிலையும்	ஸர்வோத்க்ருஷ்டனான எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும்
மெய்யாம் உயிர் நிலையும்	நித்யனான ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும்
தக்க நெறியும்	ஸ்வரூபாநுரூபமான உபாயத்தின் ஸ்வரூபத்தையும்
தடை ஆகி தொக்கு இயலும் ஊழ்வினையும்	(பகவத்ப்ராப்திக்குப்) பிரதிபந்தமாகிச் சேர்ந்து கிடக்கிற முன்னை வினைகளாகிற விரோதி ஸ்வரூபத்தையும்
வாழ்வினையும்	வாழ்வாகிற பரம புருஷார்த்த ஸ்வரூபத்தையும்
ஓதும்	கூறுவன.

எம்பெருமானே ஸர்வஸ்மாத்பரன், ஜீவாத்மா அவ்வெம்பெருமான் பக்கலில் சேஷத்வத்தையே தனக்கு நிரூபகமாகவுடையவனாயிருப்பன், சரணாகதியே எம்பெருமானைப் பெறுதற்கு வழி, பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாகிற விவையே பிரதிபந்தகம், ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்வதே பரமபுருஷார்த்தம் என்கிற இவ்வைந்து அர்த்தங்களும் இத்திருவாய்மொழியில் பன்னிப்பன்னி யருளிச்செய்யப்படுகின்றன. ஆதலால் அர்த்த பஞ்சகமே திருவாய்மொழிக்கு ப்ரமேயமென்றது பொருந்தும்.

[தனியன் உரை முற்றிற்று.]

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

கோயில் திருவாய்மொழி

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழியில்—முதற்பத்து—முதல் திருவாய்மொழி

*உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன் **
*மயர்வறமதிநலம் அருளினன்யவனவன் **
*அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன் **
துயரறுசுடரடி தொழுதெழென்மனனே. (1)

என் மனனே	எனது மனமே!
உயர்வு அற	(தன்னைப் பார்க்கிலும்) உயர்த்தி இல்லாதபடி
உயர்	உயர்ந்த
நலம்	(ஆனந்தம் முதலிய) கல்யாண குணங்களை
உடையவன்	(சுயமாக) உடைத்தானவன்
யவனவன்	யாவனொருவனோ.
மயர்வு அற	அஜ்ஞானம் நசிக்கும்படி
மதி நலம்	ஞானத்தையும் பக்தியையும்
அருளினன்	(அடியேனுக்குக்) கிருபை பண்ணினவன்
யவனவன்	யாவனொருவனோ;
அயர்வு அறும்	மறப்பு இல்லாத
அமரர்கள்	நித்யஸூரிகளுக்கு
அதிபதியவன்	ஸ்வாமி யாவனொருவனோ
அவன்	அந்த எம்பெருமானுடைய
துயர் அறுசுடர் அடி	துக்கங்களைப் போக்குகிற சோதிமயமான திருவடிகளை
தொழுது	வணங்கி
எழு	நீ கடைத்தேறக்கடவை.

* * *—இதில், மஹோபகாரங்களைத் தமக்குச் செய்தருளின எம்பெருமானுடைய திருவடிகளைத் தொழுது மேன்மை பெறும்படியாக ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார். புறமதத்தவருடைய கொள்கைப்படி எம்பெருமான் நிர்க்குணனல்லன், ஸமஸ்த கல்யாண குணாத்மகன் என்கிற வேதாந்த ஸித்தாந்தத்தை முதலடியிலே வெளியிட்டருளுகிறார். இதனால், எம்பெருமான் தனது திருக்கல்யாண குணங்களைக் காட்டி இவ்வாழ்வாரை ஈடுபடுத்திக்கொண்டமை விளங்கும். (1)

*மனனகமலமற மலர்மிசையெழுதரும் **
*மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன் **
*இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும் **
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. (2)

மனனகம்	மனத்திலே யிருக்கிற	இனன்	இப்படிப்பட்டவனும்
மலம் அற	காமம் கோபம் முதலிய தீக்குணங்கள் கழியக் கழிய (அதனால்)	முழு உணர் நலம்	பரிபூர்ண ஞானாநந்த ஸ்வரூபியும்
மலர்	மலர்ந்ததாகி		
மிசை எழுதரும்	மேலே மேலே விருத்தி யடைகிற	எதிர் நிகழ் கழிவினும்	எதிர் காலம் நிகழ் காலம் இறந்த காலம் என்றமூன்று காலங்களிலும்
மனன் உணர்வு	மானஸ ஜ்ஞான மென்கிற யோக வுணர்ச்சியால்		
அளவிலன்	அளவிடப்படாதவனும்	இனன் இலன்	ஒப்பு இல்லாதவனும்
பொறி உணர்வு அவைஇலன்	(மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும்) வெளியிந்திரியங்களின் ஞானத்தினால் அளவிடப்படாதவனுமாய்	மிகுநரை இலன்	மேற்பட்டவரில்லாதவனு மாயிருப்பவன்.
		என் நன் உயிர்	எனக்கு நல்ல ஆத்மா.

* * *—முதற்பாசுரத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட திருக்குணங்களுக்கு ஆச்ரயமான திவ்யாத்மஸ்வரூபமானது சித்து அசித்து என்கிற இரண்டு தத்துவங்களிற் காட்டிலும் விலக்ஷண மென்பதை இப்பாட்டில் அருளிச்செய்கிறார். முதல் ஒன்றரையடிகளால் ஜீவாத்ம ஸ்வரூபத்திற்காட்டிலும் பரமாத்மஸ்வரூபம் விலக்ஷணமெனப் படுகிறது. பொறியுணர்வவை யிலன் என்பதனால் ஜடப்பொருள்களிற் காட்டில் வைலக்ஷண்யம் சொல்லப்படுகிறது. இனன் - இப்படிப் பட்டவனென்று, முன்னடிகளிற் சொன்ன சிதசித் வைலக்ஷண்யத்தையே அநுபாஷிக்கிறபடி. உணர்முழுநலம்-உணர்வும் நலமுமே முழுதுமாகவுள்ளவன்; கட்டடங்க ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியென்றபடி. எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்-மூன்று காலங்களிலும் தனக்கு ஒப்பில்லாதவன். (2)

*இலனதுஉடையனிது எனநினைவரியவன் **
*நிலனிடைவிசும்பிடை உருவினனருவினன் **
*புலனொடுபுலனலன் ஒழிவிலன் பரந்த **
அந்நலனுடையொருவனை நணுகினம்நாமே. (3)

அது இலன்என	அந்தப் பொருள் (தனக்கு) இல்லாதவனென்றும்	நிலன் இடை	பூமி முதலான (கீழ்) உலகங்களிலும்
இது உடையன் என	இந்தப் பொருளை யுடையவன் என்றும்	விசும்பு இடை	ஆகாசம் முதலான (மேல்) உலகங்களிலும் உள்ள
நினைவு அரியவன்	நினைப்பதற்குஅருமைப் பட்டவனாகியும்	உருவினன்	ரூபியான அசேதநப் பொருள்களையுடையவனாகியும்

உருவினன்	ரூபியில்லாத சேதனர்களை யுடையவனாகியும்	ஒழிவு இலன் பரந்த	எப்பொழுதும் எங்கும் வியாபித்திருக்கிற
புலனொடு	(இப்படிப்) புலன்களுக்கு விஷயமாகிற பொருள்களோடு (கலந்துநின்றாலும்)	அநலன் உடை ஒருவனை	முன் சொன்ன கல்யாண குணங்களையுடைய ஒப்பற்ற எம்பெருமானை
புலன் அலன்	(தான்) புலன்களுக்கு விஷயமாகாதவனாகியும்	நாம் நணுகினம்	நாம் கிட்டப்பெற்றோம்.

** * *—எம்பெருமானுக்குண்டான லீலாவிபூதிச் செல்வத்தை இப்பாட்டிலருளிச் செய்கிறார். 'இவனுக்கு அது இல்லை' என்றும் நினைக்கமுடியாது, 'இவனுக்கு அதுவுண்டு என்றும் நினைக்கமுடியாது'; 'நிலனிடை விசும்பிடை யுருவினனருவினன்' என்றே பேசவேணும்; கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் சேதநப் பொருள்களும் ஜடப்பொருள்களும் எத்தனையுண்டோ அவற்றையெல்லாமுடையவன் என்னவேணுமென்கை.* **புலனொடு புலனலன்** - *புலப்படுகின்ற ஸகல பதார்த்தங்களோடும் அந்தராத்மாவாய்க் கலந்து நின்றானேயாகிலும் அவற்றின் தோஷங்கள் தன்னிடத்தில் தட்டப்பெறாதவன்.* **ஒழிவிலன் பரந்த** - *ஒரு வஸ்துவும் ஒரு காலமுமொழியாமல் ஸர்வத்ர ஸர்வதா வியாபித்தவன்.* (3)

*நாமவனிவனுவன் அவளிவளுவளெவள் **
*தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது **
*வீமவையிவையுவை அவைநலந்தீங்கவை **
ஆமவையாயவை ஆய்நின்றவவரே. (4)

நாம்	நாம் முதலான தன்மைப் பொருள்களும்	எது	எது என்னும் ஒன்றன்பால் வினாப்பொருளும்
அவன் இவன் உவன்	அவன் இவன் உவன் என்கிற ஆண்பால் சுட்டுப் பொருள்களும்	வீம் அவை	நசிக்குந் தன்மையுள்ள பொருள்களும்
அவள் இவள் உவள்	அவள் இவள் உவள் என்கிற பெண்பால் சுட்டுப் பொருள்களும்	இவை உவை அவை	இவை உவை அவை என்னும் பலவின்பால் சுட்டுப் பொருள்களும்
எவள்	எவள் என்கிற பெண்பால் வினாப் பொருள்களும்	நலம் அவை	நல்ல வஸ்துக்களும்
தாம்	தாம் என்னும் பன்மைப் பொதுப் பொருள்களும்	தீங்கு அவை	கெட்ட வஸ்துக்களும்
		ஆம் அவை	எதிர்காலப் பொருள்களும்
அவர் இவர் உவர்	அவர் இவர் உவர் என்னும் பலர்பால் சுட்டுப் பொருள்களும்	ஆய அவை	இறந்தகாலப் பொருள்களும்
அது இது உது	அது இது உது என்னும் ஒன்றன்பால் சுட்டுப் பொருள்களும்	ஆய்நின்ற	ஆகின்ற எல்லாப் பொருள்களும்
		அவரே	அந்த ஸர்வேச்வரனேயாம்.

** * *—இப்பாட்டு முதல் மேற்பாட்டுக்களெல்லாம் கீழ்ப்பாட்டிற்சொன்ன லீலாவிபூதிச் செல்வத்தைப் பன்னியுரைப்பன. எம்பெருமானார் கத்யத்தில்* ***ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்*** *என்றருளிச்செய்வது இப்பாட்டுமுதல் முறையேயுள்ள மூன்று பாசுரங்களிலும் சொல்லுகிற பொருளையே ஸங்க்ரஹித்தபடியாம். ஸகல சேதநாசேதநங்களினுடையவும் ஸ்வரூபம் எம்பெருமானுடைய அதீநமாயிருக்குமென்பது இப்பாட்டிற் சொல்லுகிறது. அப்படியே அவற்றின் ஸ்திதியும் [ரக்ஷணமும்] அவனதீனமென்பது மேற்பாட்டிற் சொல்லுகிறது. அவற்றின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவனதீனங்களென்பது அதற்கு மேற்பாட்டிற் சொல்லுகிறது.* (4)

*அவரவர்தமதமது அறிவறிவ்வகைவகை **
*அவரவரிறையவர் எனவடியடைவர்கள் **
*அவரவரிறையவர் குறைவிலரிறையவர் **
அவரவர்விதிவழி அடையநின்றனரே. 5

அவர் அவர்	அந்தந்த அதிகாரிகள்
தம தமது	தங்கள் தங்களுடைய
அறிவு அறி வகை வகை	ஞானத்தாலே அறியப்படுகிற பலபலபடிகளாலே
அவரவர்	அந்தந்த தெய்வங்களை
இறையவர் என	ஸ்வாமிகளென்றெண்ணி
அடி அடைவர்கள்	ஆச்ரயிப்பர்கள் ;
அவரவர் இறையவர்	அந்தந்த அதிகாரிகளால் தொழப்படுகிறதெய்வங்கள்
குறைவு இலர்	(அவர்கள் விரும்பின பலன்களை கொடுப்பதில்) குறையற்றனவே; (எதனாலே என்னில்)
இறையவர்	ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணன்
அவரவர்	அந்தந்த அதிகாரிகள்
விதி வழி	தங்கள் தங்கள் அத்ருஷ்டாநுஸாரமாய்
அடைய	பலன் பெறும்படியாக
நின்றனர்	(அந்தந்த தேவதைகளுக்கு) அந்தர்யாமியாக எழுந்தருளியுள்ளான்

* * *—உலகத்தில் நடக்கிற ரக்ஷணத்தொழில்யாவும் எம்பெருமானுடையதே; அக்கி இந்திரன் சிவன் பிரமன் முதலிய இதர தெய்வங்களைக் குறித்து அவரவர்கள் வழிபாடுகள் செய்து தாம்தாம் கோலின பலன்களைப் பெறுவதாகக் கண்டாலும் அதுவும் எம்பெருமான் தானே அத்தெய்வங்களுக்கு உள்ளீடாக இருந்து நடத்துகிற ரக்ஷணமேயன்றி அத்தெய்வங்களே சுதந்திரமாகச் செய்துவிடுகிற ரக்ஷணமன்று என்றதாயிற்று. (5)

*நின்றனரிருந்தனர் கிடந்தனர்திரிந்தனர் **
*நின்றிலரிருந்திலர் கிடந்திலர்திரிந்திலர் **
*என்றுமொரியல்வினர் எனநினைவரியவர் **
என்றுமொரியல்வொடு நின்றவெந்திடரே. (6)

நின்றனர்	நிற்பவர்கள்
இருந்தனர்	இருப்பவர்கள்
கிடந்தனர்	கிடப்பவர்கள்
திரிந்தனர்	திரிபவர்கள் (ஆக இப்படிப் பட்டவர்களினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதலாகிற ப்ரவ்ருத்திகளெல்லாம் அப் பெருமானுடைய அதீநமே)
நின்றிலர்	நில்லாதவர்கள்
இருந்திலர்	இராதவர்கள்
கிடந்திலர்	கிடவாதவர்கள்
திரிந்திலர்	திரியாதவர்கள் (ஆக இப்படிப் பட்டவர்களினுடைய நில்லாமை இராமை கிடவாமை திரியாமையாகிய நிவ்ருத்திகளெல்லாமும் அப் பெருமானுடைய அதீநமே)
என்றும்	எப்போதும்
ஒரு இயல்வினர் என நினைவு அரியவர்	ஒரேவிதமான இயற்கையையுடையவரென்று நினைக்க முடியாதவரும் (அவரே) (அவர்தாம் யாவரென்னில்)
என்றும்	எப்போதும்
ஓர் இயல்வொடு நின்ற	ஒரேவிதமான இயற்கையோடு கூடியிருக்கின்றவராய்.
எம் திடர்	திடமானபிரமாணத்தினால் ஸித்தரான நம்முடையவர்.

* * *—லீலாவிபூதியின் ஸ்வரூபமும் ரக்ஷணமும் எம்பெருமானுடைய அதீனமென்பது கீழிரண்டு பாசுரங்களில் அருளிச்செய்யப்பட்டது; அதனுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவனதீனமேயென்கிறது இப்பாட்டில். இதில் முதலடியில் ப்ரவ்ருத்திகளைச் சொல்லுகிறது. நின்றனர் இத்யாதிக்கு - நிற்றல் இருத்தல் கிடத்தல்

திரிதல் என்கிற தொழில்களே இங்குப் பொருளாக அமையும். நின்றிலர் இத்யாதிக்கும் நில்லாமை இராமை கிடவாமை திரியாமை என்பவைகளே பொருளாகப்பொருந்தும்.

நீடர் - திடமான வேதப்ரமாணத்தில் ஸித்திப்பவர் என்றபடி. எம்பெருமான் அப்படி ஸித்திப்பது வைதிகோத்தமராகிய தமக்குப் பரமலாபம் என்பது தோன்ற எம்நீடர் என்கிறார். (6)

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும் *
உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன் *
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. (7)

திடம்	உறுதியான
விசும்பு	ஆகாசமென்ன
எரி வளி நீர் நிலம்	அக்கியென்ன வாயுவென்ன ஜலமென்ன பூமியென்ன
இவை மிசை	ஆகிய இவற்றை ஆதாரமாகக் கொண்டு
படர் பொருள் முழுவதும் ஆய்	படர்ந்த பதார்த்தங்கள் யாவும் தானாம்படி அவற்றுக்கு உபாதானமாய் (அவற்றை உண்டாக்கி)
அவை அவை தொறும்	அந்தந்த பதார்த்தங்களெல்லாவற்றிலும்
உடல் மிசை உயிர் என	சரீரத்தில் ஆத்மா வியாபிப்பது போல
கரந்து	மறைந்து
எங்கும் பரந்து	உள்ளிலும் வெளியிலும் வியாபித்து
சுடர் மிகு சுருதியுள் உளன்	தேசுபொலிந்த வேதத்தில் உள்ளவனான எம்பெருமான்
இவை உண்ட சுரன்	(ஸம்ஹார காலத்தில்) இவற்றையெல்லாம் தன் பக்கலிலே யாக்கிக் கொள்ளும் தேவனாவான்.

* * *—கீழ்ப்பாசுரங்களிலும் மேலிற் பலவிடங்களிலும் 'எல்லாப் பொருள்கட்கும் எம்பெருமானே நியாமகன்' என்று சொல்லவேண்டுமிடங்களில் அப்படிச் சொல்லாமல் 'எல்லாம் எம்பெருமானே' என்று [ஸமாநாதிகரணமாகச்] சொல்லுவதால் அத்வைதாபிப்ராயம்போல் தோன்றக்கூடுமன்றோ; உண்மையில் அப்படியில்லை; ஸகல சேதநாசேதநங்களும் சரீரமாய் எம்பெருமான் ஸகலாந்தர்யாமித்வேந சரீரியாய் நிற்றலால் இப்படிப்பட்ட சரீர சரீரிபாவ ஸம்பந்தத்தைப் பற்றவே ஐக்கியம் சொல்லப்பட்டதென்று நிரூபிக்கிறது இப்பாசுரம். விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டை இப்பாட்டு ஸாரமாக எடுத்துரைக்கின்றதென றுணர்க: (7)

சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும் *
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன் *
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து *
அரனயனென உலகழித்தமைத்துளனே. (8)

சுரர் அறிவு அருநிலை	(பிரமன் முதலிய) தேவர்களுக்கும் அறியவொண்ணாத நிலைமையையுடைத்தான
விண் முதல் முழுவதும் வரன் முதல் ஆய்	மூலப்ரக்ருதி முதலாக உள்ள ஸகல வஸ்துக்களுக்கும் சிறந்த காரண பூதனாய் (அவற்றையெல்லாம் படைத்தவனாயும்)
அவை முழுது உண்ட	அவற்றையெல்லாம் (பிரளய காலத்தில்) திருவயிற்றிலே ரக்ஷிப்பவனாயுமுள்ள
பரபரன்	பரம புருஷன்
அரன் என	ருத்ரமூர்த்தியின் உருவத்தைத் தரித்தவனாகி
ஒரு மூன்று புரம் எரித்து	இணையில்லாத திரிபுரங்களைத் தஹித்தும்
உலகு அழித்து	உலகங்களை அழித்தல் செய்தும்
அயன் என	நான்முகக் கடவுள் என்னும்படியாக நின்று
அமரர்க்கு	தேவர்களுக்கு
அறிவுஇயந்து	ஞானத்தைக் கொடுத்தும்
உலகுஅமைத்து	உலகங்களைப் படைத்தல் செய்தும்
உளன்	அவர்களுக்குள் ஆத்மாவாயிருக்குமவனே.

* * *—பிரமன் சிவன் முதலான தேவர்களும் சிலசில அரிய பெரிய காரியங்களை நடத்திப் போருவதாக ப்ரமாணங்களில் விளங்காநின்றதே; சிவபிரான் த்ரிபுர ஸம்ஹாரமாகிற மிகப் பெரிய காரியத்தை நடத்தினனென்றும் ஸகல லோகத்தின் ஸம்ஹாரத் தொழிலுக்கு அதிகாரியாயிருக்கிறானென்றும், பிரமனும் தேவர்களுக்கெல்லாம் ஞானமளித்தன னென்றும் லோக ஸ்ருஷ்டியை நடத்திப் போருகிறானென்றும் பிரமாணங்களால் விளங்கும்போது எல்லாப் பெருமைகளையும் விஷ்ணுவின்மேலேயே ஏறிட்டுச் சொல்லுவதென்? என்று சிலர் சங்கிக்க, அவர்களுக்குத் தெளிவு பிறப்பிக்கும் பாசுரம் இது. *விஷ்ணு ராத்மா பகவதோ பவஸ்யாமித தேஜஸ:, தஸ்மாத் தநுர்ஜ்யா ஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர:* என்று மஹாபாரதத்தில் சொல்லிற்று. இங்ஙனே பல ப்ரமாணங்களை நோக்குமிடத்து சிவன் பிரமன் முதலானோர் செய்யுமவையும் ஸ்ரீமந் நாராயணாதிஷ்டான பலத்தினாலேயே என்பது ஸ்பஷ்டமாகு மென்றதாயிற்று. (8)

உளனெனிலுளன் அவனுருவமிவ்வுருவுகள் *
உளனலனெனில் அவனருவமிவ்வருவுகள் *
உளனெனஇலனென இவைகுணமுடைமையில் *
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே. (9)

உளன் எனில்	ஈச்வரனுண்டென்று (வைதிகர்கள் சொல்லுகிறபோல) சொன்னாலும்	இவ்வுருவுகள் இவ்வருவுகள்	உருவமுடையவனாயும் உருவமில்லாதனவாயுமிருக்கின்ற உலகப் பொருள்கள் யாவும்
உளன் அலன் எனில்	ஈச்வரனில்லை யென்று (நாஸ்திகர்களின் படியே) சொன்னாலும்	அவன் உருவம் அவன் அருவம்	அப்பெருமானுக்கு ஸ்தூல சரீரங்களும் ஸூக்ஷ்ம சரீரங்களும்
உளன்	ஈசுவரனுண்டு என்பதாகவே தேறும்;	இரு தகைமையொடு	இரண்டு தன்மையோடும் (அதாவது ரூபியும் அரூபியுமான ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரபஞ்சங்களை வடிவாகக் கொண்டு)
உளன் என இலன் என இவை குணம் உடைமையின்	உளனென்றும் இலனென்றுஞ் சொல்லப் படுகிற அஸ்தித்வ நாஸ்தித்வங்களை ப்ரகாரமாக வுடையனாகுந் தன்மையினாலே	ஒழிவு இலன் பரந்து உளன்	எல்லாக்காலங்களிலும் எல்லா இடங்களிலுமுள்ளவனாகவே ஸித்திப்பன்.

* * *—இப்பாட்டால் ஸர்வ சூந்யவாதி நிரஸிக்கப்படுகிறான். ப்ரஹ்மஸூத்ரம் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் *ஸர்வதாநுபபத்தேச்ச* என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் பாஷ்யகாரர் சூந்யவாதத்தைக் கண்டித்திருப்பது பெரும்பாலும் இப்பாசுரத்தின் நடையை உட்கொண்டேயாம். 'எல்லாமுள்ளது' என்று ப்ரதிஜ்ஞை பண்ணினால் என்ன தேறுமோ அதுவேதான் 'எல்லாம் இல்லது' என்கிற பிரதிஜ்ஞையாலும் தேறும் உலகத்தில், உண்மையென்றும் இல்லாமையென்றும் இரண்டுவகையான சப்தங்களும் ப்ரதீதிகளும் இருக்கின்றனவே, அவற்றின் விஷயம் என்ன வென்று ஆராய்ந்தால், உள்ளதான வஸ்துவுக்கே நிலைமை வேறுபாடுகள் நேருவதே மேற்குறித்த ப்ரதீதிகளுக்கு விஷயமாகும். 'இங்கே துணியிருக்கின்றது' என்றால் பஞ்சினுடைய அல்லது நூலினுடைய நிலைமைவேறுபாடு தோன்றும். முன்பு பஞ்சாகவோ நூலாகவோ இருந்த பொருள் இப்போது துணியாகிய வேறொரு நிலைமையைப் பெற்றுள்ளது என்றபடியாகும். துணி அழிந்து போயிற்று' என்றால் துணி யென்னும்படியான காரிய நிலைமையைவிட்டுக் காரணாவஸ்தையாக மாறிவிட்டது என்றபடியாகும். இந்த விதமாகவே எந்த ப்ரதீதியாலும் அடியோடு சூந்யத்வமென்பது ஸித்திக்கவேமாட்டாது.

'முயற்கொம்பு இல்லை, மலடிமகன் இல்லை, ஆகாசத்தாமரை இல்லை' என்றால் மேற் குறித்த வஸ்துக்களின் அத்யந்த சூந்யத்வம் விளங்குகின்றதே; இவ்விடங்களில் அவஸ்தாந்தரா பத்தி யென்பது சொல்லமுடியாதன்றோ என்னில்; இங்கும் அடியோடு சூந்யத்வமென்பது ஒரு நாளும் ஏற்படாது. முயற்கொம்பு இல்லையென்றால் முயல் இல்லையென்றும் கொம்பு இல்லையென்றும் ஏற்படுமோ? மலடிமகன் இல்லையென்றால் மலடி இல்லையென்றும் மகன் இல்லை யென்றும் ஏற்படுமோ? ஆகாசத்தாமரை யில்லையென்றால் ஆகாசமேயில்லை, தாமரையே யில்லையென்பதாக ஏற்படுமோ? மேற்குறித்த பொருள்களெல்லாம் உண்டென்பது மறைக்கமுடியாது; ஆனால் 'முயலுக்கும் கொம்புக்கும் ஸம்பந்தமில்லை, மலடிக்கும் மகனுக்கும் ஸம்பந்தமில்லை, ஆகாசத்திற்கும் தாமரைக்கும் ஸம்பந்தமில்லை' என்று அந்தந்த வஸ்துக்களுக்குப் பரஸ்பர ஸம்பந்தமில்லை யென்பதாக ஸம்பந் தாபாவம் மாத்திரம் ஏற்படுமேயன்றி அந்தவஸ்துக்களே அடியோடு இல்லையென்பதாக ஒருபோதும் ஏற்படாது. ஆகவே ஸர்வசூந்யவாதம் ஒருவழியாலும் ஸித்திக்க வகையில்லை. (9)

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன் *
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற *
கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ்பொருடொறும் *
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே. (10)

பரந்த	எங்கும் வியாபித்த	இடம்	அவ்வவ்விடங்களிலே
தண் பரவையுள்	குளிர்ந்த கடலினுள்	திகழ்	விளங்காநின்ற
நீர் தொறும்	ஜலபரமாணுதோறும்	பொருள்தொறும்	ஆத்மவஸ்துக்கள்தோறும்
பரந்த அண்டம் இது எனபரந்து உளன்	விஸ்தாரமான இவ்வண்டத்திலிருக்குமா போலே நெருக்குண்ணாமல் இருப்பவனாய் (இப்படி)	கரந்து	(வ்யாப்ய வஸ்துக்களும் அறியாதபடி) மறைந்து
நிலம்	பூமியிலும்	எங்கும் பரந்து உளன்	எல்லாவிடங்களிலும் வியாபித்திராநின்றான் (யாவனெனில்;)
விசும்பு	மேலுலகங்களிலும்		
ஒழிவு அற	ஒன்றொழியாமே	இவை உண்ட கரன்	இவ் வஸ்துக்களை ஸம்ஹார தசையிலும் தனக்குள்ளே யடக்கி தான் ஸ்திரமாயிருக்குமெம்பெருமான்.
கரந்தசில் இடம் தொறும்	அதி ஸூக்ஷ்மமாய் அற்பமான இடங்கள்தோறும்		

* * *—பரதத்துவத்தைப் பேசுவதான இப்பதிகத்தில் ஸ்ரீமந்நாராயணனுக்கே பரத்வமுள்ளதாக ஸ்தாபித்தல் ஆழ்வாருடைய திருவுள்ளத்திலுள்ளது. அந்த நாராயணத் திருநாமத்தை மேற்பதிகங்களிலே ஸ்பஷ்டமாகப் பேசியருளுகிற ஆழ்வார் இந்தப் பதிகத்திலே ஒருவாறு மறைத்தே காட்டினர். கீழ் ஏழாம்பாட்டில் "சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசுரனே" என்றது முக்கியமாக நாராயணத் திருநாமத்தைத் திருவுள்ளம் பற்றியேயாமென்பது ஸம்பிரதாயம். சுருதியென்றால் வேதம்; மிகுசுருதி யென்றால் வேதாந்தமாகிய உபநிஷத்து; சுடர்மிகு சுருதியென்றால் நாராயணாநுவாகம்; ஆகவே நாராயணாநுவாக ஸித்தனான எம்பெருமானுக்கே இப்பதிகத்தில் பரத்துவம் பேசப்பட்டதென்பது குறிக்கொள்ளத்தக்கது. ஸர்வ வ்யாபகத்வமே நாராயணநாமத்தின் தேர்ந்த பொருளாதலால் அதனை இப்பாட்டில் அருளிச் செய்தாராயிற்று. (10)

கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை *
வரனவில்திறல்வலி அளிபொறையாய்நின்ற *
பரனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொல் *
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே. (11)

கரம்	திடமான	பொறை	எதையும் பொறுத்துக் கொண் டிருப்பதாகிற க்ஷமையென்ன
விசும்பு	ஆகாசமென்ன	ஆய் நின்ற	ஆகிய இத்தருமங்களெல்லாம் தன் வசமாயிருக்கப் பெற்ற
எரி	அக்னியென்ன	பரன்	ஸர்வேச்வரனுடைய
வளி	வாயுவென்ன	அடி மேல்	திருவடி விஷயமாக
நீர்	ஜலமென்ன	குருகூர் சடகோபன் சொல்	திருநகரியில் திருவவதரித்த நம்மாழ்வார் அருளிச் செய்த
நிலம்	பூமியென்ன (ஆகிய)	நிரல் நிறை	சப்த பூர்த்தியும் அர்த்த பூர்த் தியுங் கொண்ட
இவை மிசை	இவற்றின் மீதுள்ள (இவற் றிற்கு ஸ்வபாவங்களா யுள்ள)	ஆயிரத்து	ஆயிரம் பாசுரங்களிலே
வரன்	சிறந்த	இவை பத்தும்	இப்பத்துப் பாசுரமும்
நவில்	சப்தமென்ன	வீடு	மோக்ஷப்ராபகம்.
திறல்	கொளுத்தும் சக்தியென்ன		
வலி	(எதையும் தூக்கவல்ல) பல மென்ன		
அளி	குளிர்ச்சியென்ன		

****—இது திருநாமப்பாட்டு எனப்படும். இப்பதிகங்கற்பார்க்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறது இது. **இவை பத்தும்வீடே** யென்றது இப்பத்துப் பாசுரமும் வீடாகிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைத் தரவல்லது என்றபடி.*

இவைபத்தும் வீடு=*இப்பத்துப் பாசுரங்களும் எம்பெருமானுடைய திருவடிகளின் மேலே விடப்பட்டன—ஸமர்ப்பிக்கப்பட்டன என்றும் பொருளுரைப்ப.* (11)

முதல் திருவாய்மொழி உரை முற்றிற்று

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

இரண்டாந் திருவாய்மொழி—வீடுமின்முற்றவும்

எம்பெருமானுடைய நன்மையையும், ஸம்ஸாரிகள் பற்றிக்கிடக்கிற விஷயாந்தரங்களின் அற்பத் தன்மை அநித்யத்தன்மை முதலியவற்றையும் அருளிச் செய்யா நின்றுகொண்டு விஷயாந்தரங்களில் நசையற்று பகவத்பக்தியைப் பண்ணுங்கோளென்று உபதேசம் பண்ணுகிறார்.

*வீடுமின்முற்றவும் * வீடுசெய்து * உம்முயிர்*
*வீடுடையானிடை * வீடுசெய்ம்மினே.* (1)

முற்றவும்	(பஜந விரோதியான ஸாத்ய ஸாதனங்கள்) எல்லாவற்றையும்	உம் உயிர்	உங்களுடைய ஆத்ம வஸ்துவை
வீடுமின்	விட்டுவிடுங்கள்;	வீடு உடையான் இடை	மோக்ஷ நிர்வாஹகனான ஸ்வாமியிடத்திலே
வீடுசெய்து	அப்படிவிட்டு,	வீடு செய்ம்மின்	ஸமர்ப்பியுங்கள்.

****—எம்பெருமானைத் தவிர்ந்த மற்றெல்லா விஷயங்களையும்விட்டு எம்பெருமானது திருவடிகளிலே ஆத்மாவை ஸமர்ப்பியுங்கோளென்கை.* (1)

*மின்னின்னிலையில * மன்னுயிராக்கைகள் **
*என்னுமிடத்து * இறையுன்னுமின் நீரே.* (2)

உயிர் மன்னு	ஆத்மா பொருந்திவர்த்திக்கிற	நீரே	(இதை) நீங்களே
ஆக்கைகள்	சரீரங்கள்	இறை	சிறிது
மின்னின்	மின்னலைக்காட்டிலும்		
நிலை இல	நிலையுடையனவல்ல;	உன்னுமின்	ஆராய்ச்சி பண்ணிப் பாருங்கள்.
என்னும் இடத்து	என்று சொல்லுமளவில்		

** * *—நெடுநாள் வாஸனை பண்ணித் தொடர்ந்துவருகிற விஷயங்களை விட முடியுமோ? என்ன அவற்றின் குற்றங் குறைகளைக் காணவே நன்கு விடலாமென் கிறார் இப்பாட்டில்.*

மின்னின்=*மின்னல்போல்; மின்னலைக்காட்டிலும்.*

என்னுமிடத்து இறையுன்னுமின்நீரே=*இந்த விஷயத்தை நீங்களே ஆராய்ந்து பார்க்கலாமே; இதற்காக ஒரு ஆசார்யோபதேசம் வேணுமோ? தோஷம் ப்ரத்யக்ஷ மாதலால் உங்களுக்கே தெரியுமே என்றவாறு.*

பன்னீராயிர வுரையின்படிக்குப் பின்னடிகளின் கருத்தாவது—மின்னின் னிலையில மன்னுயிராக்கைகள் என்று சொல்லும்படியாதலால் நீங்கள், இறை—ஸ்வாமியை, உன்னுமின்—மநநம் பண்ணுங்கோள் என்பதாம். (2)

*நீர் நுமதென்றிவை * வேர்முதல் மாய்த்து * இறை*
*சேர்மினுயிர்க்கு * அதன் நேர்நிறையில்லே.* (3)

நீர் நுமது என்ற இவை	அஹங்கார மமகாரங்களாகிற இவற்றை	சேர்மின்	அடையுங்கள்;
		உயிர்க்கு	ஆத்மாவுக்கு
வேர் முதல் மாய்த்து	(ருசி வாஸனைகளாகிற) பக்க வேரோடே முதலறுத்து	அதன் நேர்	அதனோடு ஒத்த
இறை	ஸ்வாமியை	நிறை இல்	பூர்த்தி இல்லை.

** * *—விடவேண்டிய வஸ்துக்கள் பலபல கிடப்பதால் அவற்றையெல்லாம் தனித் தனியே எடுத்துரைத்தல் பெரும்பாடாகுமாதலால் விடவேண்டியவற்றைச் சுருங்க அருளிச்செய்கிறாரிதில். நீர் நுமது என்றது அநுவாதரீதியாலுங்கூட அஹங் கார மமகார ஸ்பர்சம் தமக்குக் கூடாதென்ற கருத்தினாலென்க.* **நான் எனது** *என்று தம்வாக்காலே சொல்லமாட்டாரே. நாக்குவேம் என்று.* (3)

இல்லதுமுள்ளதும் அல்லதவனுரு**
எல்லையிலந்நலம் புல்குபற்றற்றே** (4)

அவன் உரு	அந்த எம்பெருமானுடைய ஸ்வரூபமானது	எல்லை இல்	எல்லையில்லாத
இல்லதும் அல்லது	விகாராஸ்பத மாகையாலே அஸத்து என்னப்படுவதான அசேதநத்தின் படியை யுடையது மன்று;	அ நலம்	அப்படிப்பட்ட ஆநந்த ஸ்வரூபியாயிருக்கும்; (ஆதலால்)
உள்ளதும் அல்லது	ஸத்து என்னப்படுபவனான ஜீவாத்மாவின் படியை யுடையதுமன்று;	பற்று அற்று	ஹேய விஷயஸங்கத்தைவிட்டு
		புல்கு	(அப்பெருமானை) ஆச்ரயிக்க.

** * * விடவேண்டிய விஷயத்தின் தோஷமிகுதியை இரண்டாம் பாட்டிலருளிச் செய்தார். பற்றவேண்டிய பகவத் விஷயத்தின் நன்மைமிகுதியை இப்பாட்டிலருளிச் செய்கிறார்.* அவனுரு உள்ளது மல்லது இல்லது மல்லது—*இல்லது என்றது அழியுந் தன்மையுடையது என்றபடி. உள்ளது என்றது அழியாத பொருள் என்றபடி.*

அசித்தையும் சித்தையும் சொன்னபடி. பகவானுடைய ஸ்வரூபம் சித்தையும் அசித்தையுங்காட்டில் விலக்ஷணம் என்றதாயிற்று.

புல்கு என்னும் ஏவலொருமைவினைமுற்றுக்குச் சேர, விளி வருவித்துக் கொள்க. நாட்டை நோக்கிச் சொல்வதாகக் கூறுப. (4)

அற்றதுபற்றெனில்* உற்றதுவீடுயிர்*
செற்றதுமன்னுறில்* அற்றிறைபற்றே* (5)

பற்று அற்றது எனில்	விஷயாந்தர ஸங்கம் அற்றொழிந்தது என்னுமளவிலேயே	மன்ன உறில்	நிலைநிற்கும்படி பகவத் விஷயத்தைக் கிட்டப்பார்க்கில்
உயிர்	ஆத்துமா	அற்று	(ஆச்ரயிக்கும்போதே) எம்பெருமானுக்கென்றே அற்றுத் தீர்ந்து
வீடு உற்றது	மோக்ஷத்தைப் பெற்றுனவன்; [கைவல்ய மோக்ஷமுண்டாகும்;]		
அது	அந்த கைவல்ய மோக்ஷத்தை	இறை	அந்த எம்பெருமானை
செற்று	வெறுத்து	பற்று	பற்றுக.

* * * எம்பெருமானைப் பற்றுதற்கு இடையூறாகக் கைவல்ய மோக்ஷத்தில் நசையுண்டாகக் கூடியதாதலால் அந்த இடையூறுதன்னை விலக்கிக்கொள்ளுமாறு உபதேசித்தருளுகிறாரிப்பாட்டில். (5)

பற்றிலனீசனும்* முற்றவும்நின்றனன்*
பற்றிலையாய்* அவன்முற்றிலடங்கே* (6)

ஈசனும்	எம்பெருமானும்		(ஓ லோகமே)
பற்றிலன்	ஆச்ரிதர்களோடு பொருந்தியிருப்பதையே இயல்வாகவுடையவனாய்	பற்றிலை ஆய்	எம்பெருமானோடு பொருந்தியிருப்பதையே இயல்வாக உடைத்தாய்
முற்றவும்	தாரகம் போஷகம் போக்யம் என்னும்படியான ஸகல வஸ்துவாகவும்	அவன்	அப்பெருமானுடைய
		முற்றில்	ஸகல கைங்கரியங்களிலும்
நின்றனன்	இராநின்றான்;	அடங்கு	அந்வயிப்பது.

* * *—"ஆழ்வீர்! புறம்புள்ளவற்றைவிட்டுப் பரமபுருஷனைப் பற்றும்படி உபதேசிக்கிறீர்; அவன்தான் ஸர்வேச்வரனன்றோ? நமக்கு அவன் முகந்தருவனோ" என்று ஸம்ஸாரிகள் சங்கிப்பதாகக்கொண்டு, எம்பெருமானை அப்படி நினைக்கலாமோ? ஈச்வரத்துவம் வந்தேறியென்னும்படி ஸௌசீல்யமே வடிவாயிருப்பனன்றோ அவன் என்று ஸமாதானம் பண்ணுகிறாரிதில்.

முற்றவும் நின்றனன் ஸகலவித பந்துவுமாகவும், தாரக போஷக போக்யவஸ்துக்களெல்லாமாகவும், அறிவு ஒழுக்கம் ஜாதி முதலியவற்றால் ஏற்றத்தாழ்வு பெரிதுமுடைய எவ்வகுப்பினர்க்கும் ஒருங்கே ஆச்ரயணீயனாகவும் நின்றான் என்க.

இப்பாசுரத்திற்கு பட்டர் அருளிச்செய்யும்படியொன்றுண்டு; அதாவது—**ஈசனும்**-ஷாட்குண்ய பரிபூர்ணனாய் ஸ்ரீவைகுண்ட நிலயனான எம்பெருமானும் **பற்றிலன்** அங்குள்ள நித்யமுக்தர்களிடத்தும் பற்று இல்லாதவனாய், **முற்றவும் நின்றனன்**—இன்று ஆச்ரயிக்கிற ஸம்ஸாரிகளிடத்திலேயே பரிபூர்ணமான காதல் கொண்டிராநின்றான். **பற்றிலையாய்**-ஹேய விஷயங்களிலே நீ வைத்திருக்கிற பற்றை விட்டவனாகி, **அவன்முற்றிலடங்கு**-அவனையே எல்லாமாகப் பற்றுவாயாக என்று.

இப்பாட்டிலும் அடங்கு என்ற ஏவலொருமை வினைமுற்றுக்குச் சேர விளி வருவித்துக் கொள்க. உலகத்தை விளித்துச் சொல்லுகிறபடி. (6)

அடங்கெழில்சம்பத்து* அடங்கக்கண்டு* ஈசன்
அடங்கெழிலஃதென்று* அடங்குகவுள்ளே. (7)

அடங்க எழில்	முற்றிலும் அழகியதான	ஈசன அஃது	நம்பெருமானுடையதான
சம்பத்து அடங்க	(எம்பெருமானுடைய) விபூதியை எல்லாம்	எழில் என்று	ஸம்பத்து என்று துணிந்து
கண்டு	பார்த்து	உள்ளே	அந்த பகவத் விபூதிக்குள்ளேயே
அடங்க	அதெல்லாம்	அடங்குக	சொருகிப்போவது.

உள்ளமுரைசெயல்* உள்ளவிம்மூன்றையும்*
உள்ளிக்கெடுத்து* இறையுள்ளிலொடுங்கே. (8)

உள்ளம்	நெஞ்சு என்னும்	உள்ளி	ஆராய்ந்து பார்த்து
உரை	வாக்கு என்றும்	கெடுத்து	அவற்றிற்குள்ள விஷயாந்தரப் பற்றைத் தவிர்த்து
செயல்	உடல் என்றும்		
உள்ள	ஏற்கனவே யுள்ள	இறை உள்ளில்	எம்பெருமான் பக்கலிலே
இம் மூன்றையும்	இந்த மூன்று உறுப்புக்களையும்	ஒடுங்கு	அந்வயிப்பது.

*** என்ன உபகரணங்களைக்கொண்டு எம்பெருமானுக்கு அடிமைசெய்வது? என்ன, புதிதாக சம்பாதிக்கவேண்டாமல் ஏற்கனவே அமைந்திருந்துள்ள மனமொழி மெய்கள் மூன்றையும் 'இவை எம்பெருமானுக்கு அடிமை செய்வதற்குறுப்பாகவே கண்டவை' என்று அநுஸந்தித்து, புறம்புண்டான விஷயங்களில் நின்றும் மீட்டு எம்பெருமான் பக்கலிலே ஊன்றவைப்பதென்கிறார் இப்பாட்டில்.

ஒடுங்கு என்பதைத் தன்வினையாகவும், பிறவினையில்வந்த தன்வினையாகவுங் கொள்வர். நீங்கள் ஒடுங்கவேணுமென்றும், உங்கள் உறுப்புக்களை ஒடுங்கச் செய்ய வேணுமென்றும் முறையே பொருள் காண்க. ஒடுங்குதல்—அந்வயித்தல். (8)

ஒடுங்கவவன்கண்* ஒடுங்கலுமெல்லாம்*
விடும்பின்னுமாக்கை* விடும்பொழுதெண்ணே. (9)

அவன் கண்	அந்த எம்பெருமான் பக்கலிலே	விடும்	விட்டு நீங்கும்;
		பின்னும்	அதற்குப்பிறகு
ஒடுங்க	அந்வயிக்கவே	ஆக்கை விடும் பொழுது	சரீரம் தொலையும் நாளை
எல்லாம் ஒடுங்கலும்	ஆத்மாவை ஒடுங்கப் பண்ணுவதான அவித்யை முதலானவை யெல்லாம்	எண்	எதிர்பார்த்திருப்பது.

*** எம்பெருமானோடு நமக்குள்ள உறவின் உணர்ச்சி யுண்டாகவே கூசாமல் அணுகலாமென்றார் ஏழாம் பாட்டில். அவன் தன்விஷயத்தில் உபயோகப்படுத்துதற்காகவே தந்தருளின உறுப்புக்களை அவன் விஷயத்திலேயே உபயோகப்படுத்து மத்தனையே வேண்டுவது என்றார் எட்டாம் பாட்டில். இவற்றைக் கேட்ட உலகர்கள் 'ஆழ்வீர்! நாங்கள் ஸ்வாதந்திரியம் பாராட்டி அதனால் பகவத்விஷயத்தில் ஊற்றமற்றிருக்கின்றோ மல்லோம்; எம்பெருமானுடைய போக்யதையை அறியாமலிருக்கிறோ மல்லோம், அப்ராப்தங்களான விஷயாந்தரங்களை விட்டு ப்ராப்தனான அவனையே பஜிக்கவேணுமென்னும் விருப்பம்மிகவுடையோமாயினும் பஜிக்கவொட்டாத விரோதிகள் கனக்க உண்டாயிருப்பதனாலன்றோ நாங்கள் பஜியாமலிருக்கி

றேம்' என்ன ; நீங்கள் அவனைக் கிட்டவே அந்த விரோதிகளெல்லாம் உடனே விட்டு நீங்குமென்கிறாரிப்பாட்டில். (9)

எண்பெருக்கந்நலத்து* ஒண்பொருளீறில*
வண்புகழ்நாரணன்* திண்கழல்சேரே.* (10)

எண் பெருக்கு	எண்ணிக்கை பெருகிக் கொண்டேயிருக்கும்படி அளவிறந்த	ஈறு இல	முடிவில்லாத
அ நலத்து	அப்படிப்பட்ட ஞானம் முதலிய குணங்களையுடைய	வண் புகழ்	திருக்கல்யாண குணங்களையும் உடையனான
ஒண் பொருள்	சிறந்த பொருளாகிய ஜீவாத்மவர்க்கத்தையும்	நாரணன்	நாராயணனுடைய
		திண் கழல்	(அடியாரை ஒருநாளும்) கைவிடகில்லாத திருவடிகளை
		சேர்	ஆச்ரயிப்பது.

* * *—கீழே ஆழ்வார் உபதேசித்தபடிகளையெல்லாங்கேட்ட ஸம்ஸாரிகள் "ஆழ்வீர்! அப்படியே செய்வோம்; எம்பெருமானைப் பூசிப்போம்; பஜநத்திற்கு ஆலம்பனமாக ஒரு மந்த்ரம் வேணுமே, அது என்ன மந்த்ரம்?" என்ன, அந்த மந்த்ரம் இன்னதென்று தெரிவித்தருளுகிறாரிப்பாட்டில். நாராயண திருநாமத்தின் பொருளை அநுஸந்தானஞ் செய்துகொண்டே அத்திருநாமத்தை வெளியிட்டருளுகின்றார் காண்மின்.

இப்பாசுரம் திருமந்த்ரார்த்தம் என்னுமிடம் ஆழ்வானுடைய இதிஹாஸத்தினால் நன்கு விளங்கும்; அது வருமாறு:—அழகிய மணவாளனுடைய அநுக்ரஹத்தினால் ஆழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிக்க, ஆழ்வான் அக்குமாரர்கட்கு நாமகரணம் முதலியன செய்வித்தற்கு உடையவர் கடவரென்று எண்ணித் தாம் ஒன்றுஞ்செய்யாதிருக்க, நம்பெருமாள் திருவருளால் ஆழ்வானுக்கு உபய குமாரர்கள் உதித்ததாகப் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த ஸ்ரீ பாஷ்யகாரர் அக்குழந்தைகள் பிறந்த பதினோரா நாளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வான் திருமாளிகைக்கெழுந்தருளித் தமது பிரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரை நோக்கிக் 'குழந்தைகளை எடுத்துக்கொண்டு வாரும்' என்ன, அவர் அங்ஙனமே பிரபன்னகுலக்கொழுந்தான அக்குழந்தைகளை யெடுத்துவரும்போது த்ருஷ்டிதோஷாதிகள் தாங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்த்ரரத்னத்தை அநுஸந்தித்து வாழ்த்திக்கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர். அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்விக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக் கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடட் த்யவம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்' என்று வினவ, எம்பார், 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தானஞ் செய்துகொண்டுவந்தேன்' என்று சொல்ல, உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக்கடவீர்' என்று நியமித்துவிட்டார். இக்குமாரரிருவர்க்கும் கூரத்தாழ்வான் திருவாய்மொழிப் பொருள் சொல்லி வரும்போது *எண்பெருக்கந் நலத்து* இத்யாதியான இந்தப் பாசுரம் வந்தவளவிலே இது திருமந்திரார்த்தத்தை விவரிக்கிறதாதலாலும் மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, அதனை விரைவில் அறிந்துகொள்ளவேணுமென்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தங்கள் ஆசார்யரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப்புக்கவளவில், ஆழ்வான் யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற்கொண்டு அவர்களை யழைத்து 'இன்னபோது

இன்னாரிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று திருமந்திரத்தைச் சொல்லி இப்பாட்டின் பொருளையும் விவரித்து, 'இப் பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளி னார்—என்பதாம்.

ஈறிலவான ஆத்மாக்களையும் ஈறிலவான கல்யாணகுணங்களையு முடையனாகை யாயிற்று நாராயணனாகையாவது. அப்படிப்பட்ட நாராயணனுடைய திண்கழல்சேர் = அடியவர்களை ஒரு நாளுங் கைவிடமாட்டாத திருவடிகளைச் சேருங்கள் என்றவாறு. இப்பாட்டிலும் விளி வருவித்துக் கொள்வது. (10)

சேர்த்தடத்* தென்குருகூர்ச்சடகோபன்சொல்*
சீர்த்தொடையாயிரத்து* ஓர்த்தவிப்பத்தே. (11)

சேர் தடம்	செறிந்த தடாகங்களையுடைய	சீர் தொடை	கவி யுறுப்புக்களெல்லாம் நன்கு அமையப்பெற்ற
தென் குருகூர்	திருநகரியில் அவதரித்த	ஆயிரத்து	ஆயிரத்தினுள்ளே
சடகோபன் சொல்	நம்மாழ்வார் அருளிச்செய்த	இ பத்து	இப்பத்துப் பாசுரம்
		ஓர்த்த	ஆராய்ந்து சொல்லப்பட்டது.

* * *—இத்திருவாய்மொழி வாய்வந்தபடி சொல்லிற்றன்று, சேதநருடைய ஹிதத்துக் கீடாக ஆராய்ந்து சொல்லப்பட்டதென்று நிகமனஞ் செய்கிற பாசுரம் இது.

சேர்த்தடத் தென்குருகூர்ச்சடகோபன்சொல் = இங்கு ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் "சேர்த்தடம் என்கிற வித்தைச் சேர்தடமாக்கி" என்றருளிச்செய்யப்பட்டுள்ளது. இலக்கணப்படிக்குச் சேர்தடமென்று இயல்பாகவே யிருக்கவேண்டுமல்லது சேர்த் தடமென்று தகரவொற்று மிக வேண்டிய அவசியமில்லை; ஆனாலும், மற்ற மூன்றடி களிலும் இதே ஸ்தானத்தில் வல்லொற்று மிக்கிருப்பதனால் அதற்கிணங்க முதலடி யிலும் மிக்கது; சொற்செறிவு அங்ஙனமிருந்தாலும் பொருட்சேர்த்திக்கு ஏற்பத் தகர வொற்று இன்றியே கொள்க என்கிறார் நம்பிள்ளை.

பாட்டின் முதலிலுள்ள சேர் என்பதை வினைமுற்றாகவுங் கொள்ளலாம்; இப் பத்தேசேர்—இப்பத்துப் பாட்டையும் சேருங்கள். (அதாவது) அனுஸந்தானஞ் செய்யுங்கள் என்றபடி. முதற்பாட்டில் வீடுமின் என்ற பன்மைக்குச் சேர இங்கும் பன்மையாகவே பொருள் கொள்ளவுரியது. (11)

இரண்டாம் திருவாய்மொழி உரை முற்றிற்று.

இரண்டாம்பத்து—பத்தாந் திருவாய்மொழி—கிளரொளியிளமை

அவதாரிகை:—எம்பெருமான் தெற்குத் திருமலையிலே தானிருக்கிறபடியைக் காட்டிக் கொடுக்க ஆழ்வாரும் அதை அநுஸந்தித்து 'எம்பெருமான் நமக்கு உபேய னானால் அவன் எழுந்தருளியிருக்குமிடமும் நமக்கு உபேயந்தானே; ஆகவே, திருமலை யோடு அதனோடு சேர்ந்ததொரு மலையோடு திருப்பதியோடு போம்வழியோடு, போவோமென்கிற அத்யவஸாயத்தோடு வாசியற எல்லாம் நமக்கு ப்ராப்யமே' என்று கொண்டு அநுபவித்து இனியராகிறார் இத்திருவாய்மொழியில்,

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

*கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்**
*வளரொளிமாயோன் மருவியகோயில்**
*வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை**
தளர்விலராகிச் சார்வதுசதிரே. (1)

கிளர் ஒளி	மேன்மேலுங் கொழுந்துவிட்டுக் கிளர்கின்ற ஞான வொளியையுடைய	கோயில்	ஆலயமாய்,
இளமை	இளம்பிராயம்	வளர் இள பொழில் சூழ்	வளர்கின்ற இளஞ் சோலைகளால் சூழப்பட்டதான
கெடுவதன் முன்னம்	அழிவதற்குள்ளே,	மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலை மலையை
வளர் ஒளி	குன்றுத தேஜஸ்ஸை யுடைய ஞான	தளர்வு இலர் ஆகி	தளர்ச்சி யில்லாதவராகி
மாயோன்	எம்பெருமான்	சார்வதே	அடைவதுதான்
மருவிய	நித்யஸந்நிதானம் பண்ணி யிருக்கிற	சதிர்	ஸ்வரூபாநுரூபம்.

** * *—திருமாலிருஞ் சோலைமலையைச் சென்று சேர்வதே இவ்வாத்மாவுக்குப் பரமபுருஷார்த்த மென்கிறார். இளமை கெடுவதற்கு முன்னமே நன்மையை ஸம்பாதித்துக் கொள்ளப் பாருங்களென்கிறார். "வாள்களாகி நாள்கள் செல்ல நோய்மை குன்றி மூப்பெய்திமாளும் நாள்" என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்கிறபடி அந்தகாலம் வந்துவிட்டால் திருமலையை நினைக்கவும் நேராதாதலால், கிளரொளியிளமை கெடுவதன் முன்னம் திருமாலிருஞ் சோலையைச் சார்வது சதிர் என்கிறார். புத்தி கொழுந்து விட்டுச் செல்லுவது இளம்பிராயத்திலே யாதலால் கிளரொளியிளமை எனப்பட்டது. விஷயாந்தர ப்ராவண்யம் விளைவதற்கு முன்னே என்றவாறு.* ... (1)

*சதிரிளமடவார் தாழ்ச்சியைமதியாது**
*அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில்**
*மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை**
பதியதுவேத்தி எழுவதுபயனே. (2)

சதிர்	அழகு பொருந்திய	அழகர்தம் கோயில்	அழகருடைய ஆலயமாய்,
இள மடவார்	இளம் பருவத்துப் பெண்களிடத்து	மதி தவழ் குடுமி	சந்திரன் உலாவப்பெற்ற சிகரத்தை யுடைத்தான
தாழ்ச்சியை	ஆழங்காற்படுவதை		மாலிருஞ்சோலை ;—(என்கிற)
மதியாது	ஒருபொருளாக நினையாமல்	பதி அது	அந்தத் திருப்பதியை
அதிர் குரல் சங்கத்து	முழங்குகின்ற ஓசையை யுடைய சங்கு ஒலிக்கப் பெற்ற	ஏத்தி எழுவதே	துதித்து உய்வதே
		பயன்	புருஷார்த்தம்.

** * *—நமக்கு ப்ராப்யபூதன் எம்பெருமான் எனினும், அவனோடு ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ ஸம்பந்தமுடைய பொருள்களையும் ப்ராப்யங்களாகவே கொள்வதுண்டு. மோக்ஷத்திற்கு எம்பெருமானொருவனே உபாயம் என்று ஸித்தாந்தமாயிருக்கச் செய்தேயும், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆசாரியர்கள் பிராட்டி முதலானோரிடத்திலும், தேசவாஸம் திருநாம ஸங்கீர்த்தநம் முதலான செயல்களிடத்திலும் உபாயத்வ வ்யவஹாரம் பண்ணுகிறப்போலே, திருமலை முதலானவற்றிலும் உபேயத்வ வ்யவஹாரம் பண்ணக் குறையில்லை ; ஆதலால் எம்பெருமானைவிட்டு அவனுடைய திருப்பதியாகிய திருமலையே உபேயம் என்று இத்திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்வது கூடு மென்க.* (2)

Released by Maran’s Dog Toronto , Canada

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில்*
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை*
அயல்மலையடைவது அதுகருமமே.* (3)

நெஞ்சே	மனமே!,
புயல் மழை வண்ணர்	வர்ஷாகாலத்து மேகம் போன்ற திருநிறத்தை யுடைய பெருமான்
புரிந்து	விரும்பி
உறை	நித்யவாஸம் செய்கிற
கோயில்	ஸந்நிதியாய்,
மயல் மிகு பொழில் சூழ்	(கண்டவர்களை) மயக்குகிற சக்திமிகுந்த சோலைகளால் சூழப்பட்ட
மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையினுடைய
அயல்	அருகிலுள்ள
மலை	மலையை
அடைவது அது	அடைவதும்
கருமமே	உத்தேச்யந்தான் ;
பயன் அல்ல செய்து	நிஷ்பலமான காரியங்களைச் செய்வதனால்
பயன் இல்லை	லாபமில்லை.

* * *—திருமலையைத் தொழவேணுமென்பதுகூட அவசியமன்று; திருமலை ஸம்பந்தமுள்ள [அதன் அருகிலுள்ளதான] ஒரு மலையைத் தொழுதாலும் போதும் என்கிறது இப்பாட்டு. (3)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில்*
வருமழைதவழும் மாலிருஞ்சோலை*
திருமலையதுவே அடைவதுதிறமே.* (4)

கருமம்	கருமங்களாகிற
வன் பாசம்	வலிய பாசங்களை
கழித்து	கழற்றி
உழன்று	அடிமை செய்து திரிந்து
உய்யவே	உஜ்ஜீவிக்கும் பொருட்டே
பெரு மலை எடுத்தான் பீடு உறை	கோவர்த்தநோத்தரணம் செய்தருளினவனான எம்பெருமான் தனது பெருமையெல்லாம் விளங்க நித்யவாஸம் பண்ணுமிடமான
கோயில்	ஸந்நிதியாய் ;
வரு மழை தவழும்	மழை பெய்யவருகிற மேகங்கள் தவழ்கின்ற
மாலிருஞ் சோலை திருமலை அதுவே —;	
அடைவது	சேர்வது
திறம்	உசிதம்.

* * *—ஒருவர்க்கும் எளிதில் கழித்துக்கொள்ள முடியாத கரும பந்தங்களைக் கழிப்பதற்கும், அவை கழிந்து அடிமை செய்து வாழுகைக்குமாகவே எம்பெருமான் ஸந்நிதி பண்ணியிருக்கிற திருமலையை யடைவதே தகுதியென்கிறார். முதலடியில் உய்ய என்கிற வினையெச்சம் (இரண்டாமடியில்) உறை என்ற வினையைக் கொண்டு முடியும். (4)

திறமுடைவலத்தால் தீவினை பெருக்காது
அறமுயலாழிப் படையவன்கோயில்*
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை*
புறமலைசாரப் போவதுகிறியே.* (5)

திறம் உடை	பலவகைப்பட்ட
வலத்தால்	வலிமையைக் கொண்டு
தீ வினை	பாவங்களை
பெருக்காது	மிகையாகச் செய்யாமல்,
அறம் முயல் ஆழி படையவன் கோயில்	ஆச்ரித ரக்ஷண தருமத்திலே முயல்கின்ற திருவாழியை ஆயுதமாகவுடைய பெருமானது கோயிலாய்,

மறு இல்	அழுக்கற்ற	புறம் மலை	பக்கத்திலுள்ளதொரு மலையை
வண் சுனை சூழ்	வளமான சுனைகளால் சூழப்பட்ட	சார	கிட்டுமாறு
மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையினுடைய	போவது	போவதானது
		கிறி	நல்ல உபாயம்.

* * *—கீழ் மூன்றாம் பாட்டில் "மாலிருஞ்சோலை யயன்மலை அடைவது அது கருமமே" என்று திருமலையோடு ஸம்பந்தமுடைய பிறிதொரு மலையை யடைந்தாலும் போதுமென்றார்; அடைய வேணுமென்கிற அவ்வளவும் வேண்டா; அந்தப் புறமலை தன்னை யடையவேணுமென்று எண்ணங்கொண்டு யாத்திரை புறப்படுவதுதானே போது மென்கிறாரிதில்—நமக்குள்ள தேஹ பலத்தைக்கொண்டு மேன் மேலும் பாவங்களைக் கூடுபூரித்துக்கொள்வது தகுதியன்று; திருமலை யாத்திரையிலே அந்த தேஹபலத்தை உபயோகப்படுத்துவது நன்று என்பது இப்பாட்டின் முழுநோக்கு. (5)

*கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே**
*உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில்**
*மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை**
நெறிபடவதுவே நினைவதுநலமே. (6

கீழ்மை செய்யாதே	இழிவான செயல்களைச் செய்யாமல்	கோயில்	ஆலயமாய்
கிறி என	(இப்போது நான் சொல்லுகிறதை) நல்லவுபாயமென்று	மறியொடு பிணை சேர்	தம் குட்டிகளோடுகூட மான் பேடைகள் சேர்ந்து வாழப் பெற்ற
நினைமின்	நினையுங்கோள்;	மாலிருஞ்சோலை	திருமலையினுடைய
	(அது யாதெனில்)	நெறி	வழியிலே
உறி அமர்	உறிகளிலே அமைத்துவைத்த	பட	செல்லவேணுமென்கிற
வெண்ணெய்	வெண்ணெயை	அதுவே	அந்த நினைவு ஒன்றையே
உண்டவன்	அமுது செய்த கண்ணபிரானுடைய	நினைவது	நினைப்பது
		நலம்	நல்லது.

* * *—திருமலைக்குப் போகிற மார்க்கமுண்டே, அதனைச் சிந்திப்பது தானும் போதுமென்கிறார். ஸ்ரீக்ருஷ்ணனாகத் திருவவதரித்துத் தன்னுடைய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணாதிசயங்களைக் காட்டியருளின பெருமான்தானே பிற்பட்டவர்களும் இழவாமைக்காக இப்போது திருமலையில் நித்யஸந்நிதி பண்ணியிராநின்றானென்பது இரண்டாமடியின் கருத்து. விஷயாந்தர ப்ராவண்யத்திலே நெஞ்சைச் செலுத்தாமல் திருமாலிருஞ்சோலை யாத்திரை வழியிலே நெஞ்சைச் செலுத்துங்கோள் என்றாராயிற்று.

ஈற்றடியில் நெறிபட என்பதை ஒரு முழுச் சொல்லாகக் கொண்டு 'நன்றாக' என்றும் பொருள் கொள்வர்: திருமாலிருஞ் சோலையை நன்றாகச் சிந்திப்பது நலம் என்றவாறு. (6)

*நலமெனநினைமின் நரகழுந்தாதே**
*நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்**
*மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை**
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (7)

நரகு அழுந்தாதே	நரகத்தில் அழுந்த நினையாமல்
நலம் என நினைமின்	(இவ்வுபதேசத்தை) நன்மையென்று நெஞ்சிற் கொள்ளுங்கள்; (அதாவது)
முனம்	முற்காலத்தில்
நிலம்	பூமியை
இடந்தான்	வராஹ ரூபியாகி இடந்தெடுத்துவந்த பெருமான்
நீடு உறை கோயில்	நித்யவாஸம் பண்ணுகிற ஸந்நிதியாய்,
மலம் அறுமதி சேர்	களங்கமற்ற சந்திரன் சேருமிடமான
மாலிருஞ் சோலை	திருமலையை
வலம் முறை எய்தி	அநுகூலமான முறையிலே கிட்டி
மருவுதலே	பொருந்துவதே
வலம்	உறுதியானது.

** * *—"யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா" என்கிற படியே எம்பெருமானோடு கூடியிருப்பது சுவர்க்கம்; அவனைப் பிரிந்திருப்பது நரகம் என்பது பக்தர்களின் ஸித்தாந்தமாதலால் இங்கு நரகழுந்தாதே யென்றது எம்பெருமானைப் பிரிந்திருக்கை யன்றிக்கே என்றபடி.* (7)

*வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே**
*வலஞ்செய்யும் ஆயமாயவன் கோயில்**
*வலஞ்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை**
வலஞ்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (8)

வலம் செய்து	(கரணங்களுக்கு) வலிமையுண்டாக்கிக் கொண்டு
வைகல்	எப்போதும்
வலம் கழியாதே	அந்த வலிமையை வீணாகப் பாழ்படுத்தாமல்,—
வலம் செய்யும்	(நமக்கு) நன்மையையே செய்தருளாநின்ற
ஆயன்	கோபாலகிருஷ்ணனை
மாயவன்	மாயவனுடைய
கோயில்	கோயிலாகி
வானோர் வலம் செய்யும்	நித்யஸூரிகளும் வந்து பிரதக்ஷிணம் செய்யுமிடமான
மாலிருஞ் சோலை	திருமலை விஷயத்தில்
வலம் செய்து	பிரதக்ஷிணம் முதலிய அநுகூல வ்ருத்திகளைச்செய்து
நாளும்	நாடோறும்
மருவுதல்	பொருந்தியிருப்பது
வழக்கு	யுக்தம்.

** * *—கண்டவற்றையும் தின்று தேஹத்திற்கு வலிமையை, ஸம்பாதித்துக் கொண்டிருக்கிற ஜனங்களே! அந்த வலிமையை ஸ்வரூபத்திற்குத் தகாத விஷயங்களிலே செலுத்திப் பாழ்படுத்தாமல் திருமலையைப் பிரதக்ஷிணஞ் செய்வதாகிற நற்செயலிலே உபயோகித்து வாழுங்கோளென்கிறார்.*

வலஞ்செய்யும் வானோர்=பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது திருவயோத்தியிலுள்ளாரடங்கலும் பின்தொடர்ந்தாப்போலே பராத்பரன் இங்கே யெழுந்தருள, நித்ய முக்தர்களுங் கூடவந்து வலஞ் செய்வர்களாயிற்று. ... (8)

*வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது**
*அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்**
*மழக்களிற்றினம்சேர் மாலிருஞ்சோலை**
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (9)

வல் வினை மூழ்காது	கொடிய பாவங்களிலே அழுந்தாமல்
வழக்கு என நினைமின்	(இவ் வுபாயத்தை) நியாயமென்று கொள்ளுங்கள்;
அழம் கொடி	பேய்ச்சியாகிற பெண்ணை [பூதனையை]
அட்டான்	முடித்தருளின பெருமான்
அமர்	எழுந்தருளியிருக்கிற
பெரு கோயில்	பெரிய ஸந்நிதியாய்,
மழ களிறு இனம் சேர்	இளமைதங்கிய யானைக்கூட்டங்கள் சேருகிற
மாலிருஞ் சோலை	திருமலையை
தொழ கருதுவது	வணங்க வேணுமென்று எண்ணுவதில்
துணிவதே	திடமான அத்யவஸாயங் கொள்வதே
சூது	சிறந்த வுபாயம்.

* * *—திருமலையைத் தொழவேணுமென்கிற திண்ணிய அத்யவஸாயங் கொள்ளுமத்தனையே போதுமென்கிறார்.

மழக்களிற்றினஞ்சேர் என்றவிடத்து ஒரு ரஸோக்தி அருளிச் செய்வர் நம் பிள்ளை :—"லக்ஷணோபேதமா யிருப்பதொரு ஆனை நின்றவிடத்தே ஆயிர மானைகள் வந்து சேராநிற்கும். அங்கு நிற்கிறதோ சோலைமழகளிறு" என்று. திருமங்கை யாழ்வார் அழகரை "சோமழலைகளிறே" என விளித்தார். தென்னனுய்! என்று தெற்குத் திருமலையில் நிற்கிற யானையே! என்றும் விளித்தார்; அப்படிப்பட்ட யானையினருகே மழக்களிற்றினம் சேர்வது வியப்பன்று என்று காட்டியவாறு. (9)

சூதென்றுகளவும் சூதும்செய்யாதே*
வேதமுன்விரித்தான் விரும்பியகோயில்*
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை*
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (10)

சூது என்று	உபாயமென்றெண்ணி	கோயில்	கோயிலாய்
களவும்	களவையும்	மாது உறுமயில் சேர்	பேடையோடு கூடின ஆண் மயில்கள் சேர்ந்துவாழப் பெற்ற
சூதும்	சூதையும்	மாலிருஞ்சோலை	மாலிருஞ்சோலை யென்கிற
செய்யாதே	செய்ய நினைக்காமல்,—	போது அவிழ் மலை	புஷ்பங்கள் விகஸிக்கிற திரு மலையில்
முன்	முற்காலத்தில்	புகுவதே	சென்று சேர்வதே
வேதம்	வேதங்களை	பொருள்	புருஷார்த்தம்.
விரித்தான்	(கீதை முதலியவற்ருல்) விவ ரித்தருளின பெருமான்		
விரும்பிய	விரும்பி யெழுந்தருளியிருக்கு மிடமான		

* * *—முதலடிக்கு இரண்டு வகையான அர்த்த நிர்வாஹ முண்டு'—அற நூற்களில் சூதும் களவும் கூடாதென்று நிஷேதித்திருக்கையாலே அதனை யடி யொற்றி ஆழ்வாரும் அருளிச்செய்கிறார்; சூது களவு முதலிய தீய செயல்களாலே வீண்போது போக்காமல் திருமலையிலே சென்று புகுங்கோள்—என்பதாக ஒரு நிர்வாஹம்.

இனி, களவாவது—எம்பெருமானுக்கு சேஷப்பட்டதான ஆத்ம வஸ்துவைத் தன்னதென்றிருக்கை. அதாவது—விவேகியாயிருப்பானொருவன் 'ஈச்வர சேஷமான ஆத்மாவுண்டு, ஸர்வ சேஷியான ஈச்வரனுண்டு, புண்யபாப வகுப்பு உண்டு, பரலோக முண்டு' என்றிப்படி நூற் பொருள்களை யெடுத்துரைத்தால் மாயச் சொற்களாலே 'இவை யொன்றுமில்லை' என்று அவன் தானே கையெழுத்திடும்படி அவனை மயக்கி மிக்க நாஸ்திகனுக்கித் தன் வகுப்பில் இணக்கிக்கொள்ளுகை. ஆகிய இவ்விரண்டை யும் செய்து கெட்டுப்போகாமல்........என்பது மற்றொரு நிர்வாஹம். இதை நிர்வாஹ பேதமாகக் கொள்ளாமல் ஸ்வாபதேசப் பொருளாகவும் கொள்ளலாம். ... (10)

பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்*
மருளில்வண்குருகூர் வண்சடகோபன்*
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்து*
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே.

பொருள் என்று	(ஒரு நாளாகிலும்) பிரயோ ஜனப்படுமென்று கருதி	மருள் இல்	அஜ்ஞானமில்லாத
		வண்	குருகூர் வண் சடகோபன்—;
இ உலகம்	இவ்வுலகங்களை	தெருள்கொள்ள	(சேதநர்க்குத்) தெளிந்த ஞான முண்டாகுமாறு
படைத்தவன்	ஸ்ருஷ்டித்தபெருமானுடைய		
புகழ்மேல்	திருக்கல்யாணகுணங்களில்	சொன்ன	அருளிச்செய்த

ஓர் ஆயிரத்துள்	ஆயிரம் பாசுரங்களுள்	அருள் உடையவன் தாள்	பரமதயாளுவான எம்பெருமானது திருவடிகளில்
இ பத்து	இப்பதிகம்	அணுவிக்கும்	சேர்விக்கும்.
முடித்து	ஸம்ஸாரபந்தத்தைப்போக்கி		

* * * — இப்பதிகந்தானே ஸம்ஸார பந்தத்தை யறுத்துப் பரமகாருணிகனான எம்பெருமானது திருவடிகளிலே கொண்டு சேர்க்குமென்று பயனுரைத்தவாறு. இப்பதிகத்தை அநுஸந்திப்பவர்களை எம்பெருமான் திருவுள்ளமுவந்து கைக்கொள்வன் என்பது தேர்ந்த கருத்து.

புகழ்மேல் மருள் இல்—எம்பெருமானது திருக்கல்யாண குணங்களில் ஸந்தேஹம், விபர்யயம், மறப்பு முதலானவை யில்லாதவர் என்றபடி. *மயர்வற மதிநலமருளப்பெற்றவராதலால் இங்ஙனஞ் சொல்லத்தகுமென்க. (11)

ஸ்ரீ:

மூன்றும்பத்து—மூன்றுந் திருவாய்மொழி—ஒழிவில்காலம்

அவதாரிகை.—எம்பெருமான் திருவேங்கட மலையில் நின்றருளுகிறபடியைக் காட்டியருளக் கண்ட ஆழ்வார் அத்திருமலையப்பன் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளுஞ் செய்யவேணுமென்று பாரிக்கிறார் இத்திருவாய்மொழியில்.

*ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி**
*வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்**
*தெழிகுரலருவித் திருவேங்கடத்து**
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. (1)

தெழி குரல் அருவி	கம்பீரமான ஓசையையுடைய அருவிகள் பொருந்தின	காலம் எல்லாம்	காலம் முழுவதும்
திருவேங்கடத்து	திருவேங்கடமலையில்	உடன் ஆய்	கூடவேயிருந்து
எழில்கொள்	நிறம்பெற்ற	மன்னி	ஸகல அவஸ்தைகளிலும் பிரியாது நின்று
சோதி	தேஜஸ்ஸையுடைய	வழு இலா	குற்றமற்ற
எந்தை தந்தை தந்தைக்கு	எமது குலநாதனான பெருமானுக்கு;	அடிமை	கைங்கரியங்களை
நாம்	அடியோம்	செய்யவேண்டும்	பண்ணக்கடவோம்.
ஒழிவு இல்	ஓய்வில்லாத		

* * *—திருவேங்கடமுடையானுக்கு எல்லாவடிமைகளும் செய்யப்பெறவேணுமென்று மநோரதிக்கிறார். பின்னடிகளை முன்னே அந்வயித்துக்கொண்டு பிறகு முன்னடிகளை அந்வயித்துக்கொள்வது. “காலமெல்லாம் அடிமை செய்யவேண்டும்” என்றாலே போதுமாயிருக்க, ஒழிவில் காலமெல்லாம் என்று விசேஷித்துக் கூறினதற்குச் சில ஆசாரியர்கள் ஒரு விசேஷார்த்தம் கூறுவர்களாம்; அதாவது—இனிமேல் வரும் காலங்களில் மாத்திரம் கைங்கரியம் செய்ய விரும்புகிறாரல்லர்; கீழ்க்கழிந்த காலங்களிலும் கைங்கரியம் செய்யவிரும்புகிறார் என்று. இதுவொரு ரஸோக்தியாம். (1)

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
மூந்தை வானவர்வானவர்கோனொடும்**
*சிந்துபூமகிழும் திருவேங்கடத்து**
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. (2)

வானவர்	நித்யஸூரிகள்
வானவர் கோனொடும்	தங்களில் தலைவரான ஸேனை முதலியாரோடு கூட
சிந்து	தூவின
பூ	புஷ்பங்கள்
மகிழும்	செவ்வி குன்றாதிருக்கப்பெற்ற
திருவேங்கடத்து	திருமலையில்
அந்தம் இல் புகழ்	முடிவில்லாத புகழுடையவனும்
கார் எழில்	நீலநிறத்தழகுடையனுமான
அண்ணல்	எம்பெருமான்
எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை	எம் குலநாதன்.

* * *—திருநாட்டிலே சென்று எம்பெருமானுக்கு அடிமை செய்வதன்றோ எல்லார்க்கும் ஸ்வரூபம்; அப்படியிருக்க, நீர் இந்நிலத்தில் திருமலையிலே அடிமை செய்ய விரும்புவது என்? என்ன; திருநாட்டிலுள்ள நித்தியமுக்தர்களுங்கூட இத்திருமலையிலே வந்து அடிமை செய்யக் காண்கையாலே நானும் இங்கே அடிமை செய்யக் குறையென்? என்கிறார். (2)

அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன் செங்கனிவாய்க்கருமாணிக்கம்**
*தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து**
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (3)

அணி கொள்	அழகு பொருந்திய
செம் தாமரை கண்ணன்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களை யுடையவனும்
செம் கனிவாய்	சிவந்த கனிபோன்ற அதரத்தை யுடையவனும்
கரு மாணிக்கம்	நீல ரத்னம்போல் திருமேனி விளக்கத்தை யுடையவனும்
தெள் நிறை சுனைநீர்	தெளிவையும் நிறைவையுமுடைய சுனைநீர் பொருந்திய
திருவேங்கடத்து	திருமலையில்
எண் இல் தொல் புகழ்	எண்ணிறந்தநித்தியகல்யாண குணங்களை யுடையவனும்
வானவர் ஈசன்	நித்தியஸூரிகட்குத் தலைவனுமான எம்பெருமான்
அண்ணல்	நமக்கு ஸ்வாமியும்
மாயன்	ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையனுமானவன்.

* * *—ஆழ்வீர்! திருமலையில் அடிமை செய்யவேணுமென்று நீர் பாரிக்கின்றீர்; இஃது உமக்கு வாய்க்குமோ வென்ன; எண்ணிறந்த நித்ய ஸித்த புருஷர்களெல்லார்க்கும் தன்னை அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறதொரு பரமோபகாரகனல்லனோ அவன்; அன்னவன் நமக்கும் தன்னைத் தந்தருளுமென்கிறார்.

[எம்பெருமான் ஸ்வாநுபவத்தை நமக்குத் தந்தருள்வன் என்பது இப்பாசுரத்தில் கூறப்பட்டிருக்கவில்லையே என்னவேண்டா; எண்ணில் தொல்புகழ் வானவரீசனே என்ற ஈற்றடியில் இக்கருத்து உறைந்து நிற்கும். நமக்குத் தந்தருளாதொழிந்தானாகில் தொல்புகழுடைமை தேறுமோ என்றவாறு.] (3)

ஈசன்வானவர்க்கென்பன் என்றால் அது*
*தேசமோ திருவேங்கடத்தானுக்கு?**
நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண்*
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. (4)

வானவர்க்கு	நித்தியஸூரிகளுக்கு
ஈசன்	தலைவன்
என்பன்	என்று சொல்லுவேன்;
என்றால்	இப்படிச்சொன்னால்
நீசனேன் நிறைவு ஒன்றும் இலேன் என் கண்	கடை கெட்டவனும் குணபூர்த்தியற்றவனுமான என் விஷயத்தில்
பாசம் வைத்த	ஆசாபாசத்தை வைத்தருளிய
பரம் சுடர் சோதிக்கு	நிரவதிகஜ்யோதிர்மய திவ்ய மங்களவிக்ரஹயுக்தனான
திரு வேங்கடத்தானுக்கு	திருவேங்கடமுடையானுக்கு
அது தேசமோ	நான் சொன்னவது ஒரு பெருமையோ?

* * *—"எண்ணில் தொல்புகழ்வானவரீசன்" என்று கீழ்ப்பாட்டில் நித்ய ஸூரிகளுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுத்தானென்பதை ஓரேற்றமாக அருளிச் செய்தார்; மிகவும் நீசனை என்பக்கலிலே பாசம்வைத்திருக்குமப் பெருமானுக்கு அது ஓர் ஏற்றமோ என்கிறாரிப்பாட்டில்.

என்கண்பாசம்வைத்த என்பதற்கு வேறுவகையாகவும் பொருளுரைப்பர்; தன் விஷயமான பாசத்தை என் பக்கலிலே [எனக்கு] உண்டாக்கின என்று. (4)

சோதியாகி எல்லாவுலகும்தொழும்*
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ?*
வேதியர் முழுவேதத்தமுதத்தை*
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. (5)

வேதியர் முழு வேதத்து அமுதத்தை	வைதிகர்களால் ஓதப் படுகிற ஸகல வேதங்களிலும் பரம போக்யனாக ப்ரதிபாதிக்கப் படுபவனும்	சோதி ஆகி	சோதிமயமான திருமேனியை யுடையனாய்
		எல்லா உலகும் தொழும்	உலகத்தவர்க ளெல்லாராலும் தொழப்படுபவனாய்
தீது இல் சீர்	தீது ஒன்று மில்லாத திருக் குணங்களையுடையனுமான	ஆதி	ஸகலஜகத்காரண பூதனான
		மூர்த்தி	ஸர்வேச்வரன் (இவன்)
திரு வேங்கடத்தானை	திருமலையப்பனைக் குறித்து	என்றால்	என்றுநான் சொன்னால் அது
		அளவு ஆகுமோ	ஒரு பெருமை யாகுமோ?

* * *—நீசனான எனக்குத் தன்னைத் தந்தவனுக்கு நித்யஸூரி நிர்வாஹகத்வம் ஓரேற்றமோ வென்றார் கீழ்ப்பாட்டில்; என்னிலும் தாழ்ந்தவர்களைத் தேடிப் பெறமாட்டாதேயிருக்கிறவனுக்கு, எனக்குத் தன்னைத் தந்தானென்கிற விதுதான் ஓர் ஏற்றமோவென்கிறாரிப்பாட்டில். (5)

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும்*
தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்*
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாங்கடமை* அதுசுமந்தார்கட்கே. (6)

வேங்கடத்து	திருமலையிலே		(ஆகிய)
உறைவார்க்கு	நித்யவாஸஞ் செய்தருளுகிற பெருமானுக்கு	முற்றவும்	ஸகலபாபங்களும்
நம என்னல்ஆம் கடமை அது	நம: என்று சொல்லுவதாகிற அந்தக் கடமையை	வேம்	வெந்து போயின வென்னும் படி அழிந்துவிடும்;
சுமந்தார்கட்கு	வஹிக்கின்றவர்களுக்கு		(இப்படிபாவங்கள் தொலையவே)
கடங்கள்	அநுபவித்தே தீர்க்கவேண்டிய (பூர்வக்ருத) பாபங்களும்	தாங்கள்	அடியவர்களான தாங்கள்
		தங்கட்கு நல்லனவே	தங்கள் ஸ்வரூபத்திற்குத்தகுதி யானவற்றையே
மேல் வினை	(ப்ரக்ருதிவாஸனையாலே) இனி விளையக்கூடிய பாவங்களும்		[கைங்கரியங்களையே]
		செய்வார்	செய்யப்பெறுவர்கள்.

* * *—இப்பதிகத்தில் முதற்பாட்டில் கைங்கர்யம் பிரஸ்தாவிக்கப்பட்டது; (அதன் மேல் நான்கு பாசுரங்கள் ப்ராஸங்கிகங்கள்.) முதற்பாட்டோடு இப்பாட்டிற்கு ஸங்கதி கொள்ளலாம். பிரதிபந்தகங்களான கருமங்கள் பல கிடக்க அடிமை செய்வது எங்ஙனே ஸாத்யம்? என்று சங்கைபிறக்க, அடிமை செய்வோமென்று இசையவே அவை தானே தொலையுமென்கிறாரிப்பாட்டில்.

“ நமோ வென்னல் ” என்கிறபாடம் பெரியோர் வழங்குமதன்று. ‘ நம வென்னல்’ என்றேகொள்க. “ இராமாநுசாய நமவென்று ” என்ற ஆர்த்திப் பிரபந்த ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கது. என்னலாங்கடமையது—என்கிற ஸுலபமான உபாயத்தை என்றபடி. சுமந்தார்கட்கு என்றது எம்பெருமானுடைய அபிப்பிராயத்தாலாம். பக்தர்களின் வாக்கில் நம: என்கிற ஒருசிறிய சொல் வந்தாலும் இதை மலையாக நினைப்பனும் எம்பெருமான். (6)

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபங்கொண்டு*
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும்*
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு*
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (7)

மா	சிறந்த	அமர்ந்து நமன்று	அநந்ய ப்ரயோஜனராய் வணங்கி
மலர்	புஷ்பங்களையும்	எழும்	உஜ்ஜீவிக்குமிடமான
நீர்	தீர்த்தத்தையும்	திருவேங்கடம்	திருவேங்கடமென்கிற
சுடர்	தீபத்தையும்	தடகுன்றமே	பெரிய திருமலையே
தூபம்	தூபத்தையும்	நங்கட்கு	நமக்கு
சுமந்து கொண்டு	ஏந்திக்கொண்டு	சமன்கொள் வீடு	பரமஸாம்யாபத்தி ரூபமான மோக்ஷத்தை
வானவர்	தேவர்கள்	தரும்	அளிக்கும்.
வானவர் கோனொடும்	தங்கள் தலைவனோடுகூட		

* * *—நமக்கு அபேக்ஷிதமான அடிமைகளெல்லாம் பெறுதற்குத் திருவேங்கடமுடையானை ஆச்ரயிக்க வேண்டுவதில்லை, திருமலையின் ஆச்ரயணமே போதுமென்கிறார். வானவர் வானவர்கோனொடும் மாமலர் நீர்சுடர் தூபம் சுமந்துகொண்டு அமர்ந்து எழும் திருவேங்கடம் தடம்குன்றம் நங்கட்குச்சமன் கொள்வீடு தரும்-என்று அந்வயக்ரமம். *பரமம்ஸாம்யமுபைதி* என்கிற உபநிஷத்தை நோக்கிச் ‘ சமன் கொள்வீடு ’ என்றது. (7)

குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்*
அன்றுஞாலம் அளந்தபிரான்* பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை*
ஒன்றுமேதொழ நம்வினையோயுமே. (8)

குன்றம் ஏந்தி	(கோவர்த்தன) மலையைக் குடையாகத் தாங்கி நின்று	பரன்	எம்பெருமான்
குளிர் மழை	குளிர்ந்தபெருமழையை	சென்றுசேர்	வந்து சேர்ந்தவிடமான
காத்தவன்	தடுத்தவனும்	திருவேங்கடம் மாமலைஒன்றுமே	திருமலை யொன்றை மாத்திரமே
அன்று	முன்பொருகாலத்தில்	தொழ	தொழப்பெறில்
ஞாலம் அளந்த பிரான்	உலகங்களை யளந்த பிரபுவு மாகிய	நம் வினை	நமது வினைகள் யாவும்
		ஓயும்	தொலைந்திடும்.

* * *—எம்பெருமானுக்கும் பரமப்ராப்யமான திருமலைதான் நமக்கும் பரமப்ராப்யம்; அது நமக்கு ஒரு பலனை யளிக்கவேணுமென்பதில்லை; ஒரு பலனையும் தாராதொழியினும் அதுவே நமக்கு ப்ராப்யமாகக் கடவது—என்கிறார். ... (8)

ஓயும்மூப்புப் பிறப்பிறப்புப்பிணி*
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்
தாயன்* நாள்மலராம் அடித்தாமரை*
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (9)

திருவேங்கடத்துஆயன்	திருமலையில் வாழ்கிற ஸ்ரீ கிருஷ்ணன்	ஓயும் மூப்பு	ஓய்வை விளைக்கின்ற கிழத்தனமென்ன
தாமரை நாள் மலர் ஆம்	அப்போதலர்ந்த செந்தாமரைப் பூப்போன்ற	பிறப்பு	பிறவியென்ன
அடி	திருவடிகளை	இறப்பு	மரணமென்ன
வாய் உள்ளும்	வாக்கினுள்ளும்	பிணி	வியாதியென்ன (ஆகிய இவை)
மனத்துள்ளும்	நெஞ்சினுள்ளும்	வீயும் ஆறு	தொலையும் வகை
வைப்பார்கட்கு	வைத்துக்கொள்பவர்களுக்கு	செய்வான்	செய்தருள்வான்.

* * *—திருமலையொன்றே நம் வினை ஓய்வதற்குப் போதுமென்றார் மேல். அந்தத் திருமலைதானும் பூர்த்தியாக வேணுமென்பதில்லை, அதில் ஏகதேசமே போது மென்கிறார் இப்பாட்டில். இங்கு ஏகதேச மென்கிற வார்த்தையினால் நினைக்கிறது திருமலையப்பனை ; திருமலையில் ஸம்பந்தத்தைப்பற்றி யாயிற்று ஸ்ரீநிவாஸனும் உத்தேச்யனாவது. திருமங்கையாழ்வார் "வடமாமலையுச்சியை" என்று ஸ்ரீநிவாஸனைத் திருமலையின் ஏகதேசமாகவே கூறினர். (9)

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ*
பைத்தபாம்பணையான் திருவேங்கடம்*
மொய்த்தசோலை மொய்பூந்தடந்தாழ்வரே. (10)

வைத்த	(பாகவதர்களே!) (உங்களுக்குச்) சங்கற்பித்து வைத்த	சென்று	(திருமலையை நோக்கிச்) சென்று
நாள்	ஆயுட்காலத்தினுடைய	பைத்த பாம்பு அணையான்	படமெடுத்த ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட பெருமானது
வரை	அளவான	திருவேங்கடம்	(அத்) திருமலையில்
எல்லை	எல்லையானது	மொய்த்தசோலை	நெருங்கின சோலைகளும்
குறுகி	அணுகி	மொய் பூ தடம்	நெருங்கின புஷ்கரிணிகளுமுள்ள
எய்த்து இளைப்பதன் முன்னம்	(அதனால் நீங்கள்) மிகவும் தளர்ச்சியடைவதற்கு முன்னே,	தாழ்வர்	திருத்தாழ்வரையை
		அடைமின்	அடையுங்கள்.

* * *—பரம போக்யமான திருமலையையே பரம ப்ராப்யமாகப் பற்றுங்களென்று பிறர்க்கு உபதேசிக்கிறார். எம்பெருமான் சேதநர்களுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து ஆயுளையும் அருளுகிறான்; இவை எதற்காகவென்னில், திருமலை முதலான திருப்பதிகளிலே சென்று வழிபாடு செய்வதற்காகவேயன்றி வேறொரு காரியத்திற்காகவன்று. ஆயினும், உலகர் உடலில் வலிவுள்ள காலங்களில் விஷயாந்தரங்களிலே மண்டிக்கிடந்து, திவ்ய தேசவழிபாடுகளைப் பற்றிப் போகப்போகப் பார்த்துக் கொள்வோம் என்று பதற்றமற்று ஆறியிருந்துவிடுகிறார்கள் ; பார்த்துக்கொண்டிருக்கும்போதே பலவகைகளிலும் தளர்ச்சிவந்து சேர்கின்றது ; அப்போது திவ்ய தேச வழிபாட்டை நெஞ்சிலும் நினைக்க ப்ரஸக்தியில்லையாகிறது. அங்ஙனம் ஆகாமே திருமலையைப் பணிமின் என்றாராயிற்று.

எம்பெருமானுக்குப் பரமபோக்யமான சயனமாகத் திருவனந்தாழ்வான் இருக்கவும் அவனையும் விட்டுத் திருமலையில் வாஸம் மிகவும் ருசித்தது என்பதை மூன்றாமடி காட்டும். (10

கோயில் திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்

தாள்பரப்பி மண்தாவியவீசனை*
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல்*
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்*
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (11)

தாள் பரப்பி	திருவடியை விரித்து
மண் தாவிய	பூமியையெல்லாம் அளந்து கொண்ட
ஈசனை	எம்பெருமானைக் குறித்து
நீள் பொழில்	உயர்ந்த சோலைகளையுடைய
குருகூர்	திருக்குருகூரில் (அவதரித்த)
சடகோபன்	ஆழ்வார்
சொல்	அருளிச்செய்த
கேழ் இல்	ஒப்பற்றதான
ஆயிரத்து	ஆயிரத்தில்
இப்பத்தும்	இத்திருவாய்மொழியை
வல்லவர்	ஓதவல்லவர்கள்
ஞாலம் புகழ	உலகம் யாவும் கொண்டாடும் படி
வாழ்வு எய்தி	வாழ்ச்சிபெற்று
	(அந்த வாழ்ச்சி ஒருநாளும் குன்றுமே)
வாழ்வர்	விளங்குவர்.

* * *—இத் திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் உலகமெல்லாங் கொண்டாடும் படியான வாழ்ச்சியைப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார். (11)

ஸ்ரீ:

நாலாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்

அவதாரிகை:—ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்வத்தை மூதலிக்கிறது இத்திருவாய்மொழி. திருக்குருகூர் விஷயமான பதிகம் இது.

உலகத்தில் பலர் பல சாஸ்த்ரங்களையும் கற்றுவைத்தும் 'பரதத்துவமின்னது' என்று துணியமாட்டாமல் கண்ட தெய்வங்களின் காலிலும் குனிகின்றார்கள்; நம் எம்பெருமானுடைய திருவடி ஸம்பந்தம் பெற்றவர்கள் எத்தனையேனும் கல்வியறிவு இல்லாதவர்களாயிருந்தாலுங்கூட தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லாக நினைத்திருப்பார்கள்: இதற்குக் காரணம்—பரம காருணிகரான நம்மாழ்வார் *ஒன்றுந்தேவு* மென்கிற இத்திருவாய்மொழியை அருளிச்செய்து வைத்ததேயாம்—என்று எம்பார் அருளிச் செய்வராம்.

ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும் யாதுமில்லா
வன்று* நான்முகன் தன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்*
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள்*
நின்றவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே: (1)

தேவும்	தேவர்களும்
உலகும்	அவர்களுக்கிருப்பிடமான உலகங்களும்
உயிரும்	மனிதர் முதலிய பிராணிகளும்
மற்றும் யாதும்	மற்றுமுள்ள எல்லாமும்
ஒன்றும் இல்லா அன்று	சிறிது மில்லாத அந்த ஊழியக் காலத்தில்
நான் முகன் தன்னொடு	பிரமனையும்
தேவர்	தேவதைகளையும்
உலகு	உலகங்களையும்
உயிர்	பிராணிகளையும்
படைத்தான்	படைத்தவனும்
நின்ற	சாஸ்த்ரங்களில் நிலைத்திருப்பவனுமான
ஆதி பிரான்	ஆதிநாதனென்னும் எம்பெருமான்
குன்றம் போல் மணி மாடம்நீடு	மலைபோன்ற திருமாளிகைகள் உயர்ந்திருக்கப்பெற்ற
திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே
நிற்க	காட்சி தந்து கொண்டிருக்கும்போது
மற்றை தெய்வம் நாடுதிர் ஏ	வேறு தெய்வங்களை தேடியோடுகின்றீர்களே !

* * *—ஸகலஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன் திருநகரியிலே எளியனாய்க் காட்சிதந்தருளாநிற்க, வேறு தெய்வத்தைத் தேடி யோடுகிறீர்களே ! இது என்ன அறிவு கேடு என்று வெறுக்கிறார். எம்பெருமானுடைய ஜகத்காரணத்வத்தை மூதலிப்பன முன்னடிகள்.

திருக்குருகூர்—இது பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்று; ஆழ்வார் திருநகரியென வழங்கப்படுவது. [குருகாபுரீ] என்பது வடமொழிவழக்கு. (1)

நாடிநீர்வணங்குந்தெய்வமும் உம்மையும்முன்படைத்தான்*
வீடில்சீர்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில்*
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்பரந்தே. (2)

பல் உலகீர்	பலவகைப்பட்ட உலகர்களே	ஆதி பிரான் அவன் மேவி உறைகோயில்	ஆதிநாதன் விரும்பியெழுந்தருளி யிருக்குமிடமான
நீர்	நீங்கள்	மாடம்மாளிகை சூழ்ந்து அழகு ஆய திரு குருகூர் அதனை	மாடமாளிகைகளால் சூழப்பட்டு அழகு வாய்ந்த திரு நகரியை
நாடி	தேடி	பாடி ஆடி	பாடுதலும் ஆடுதலும் செய்துகொண்டு
வணங்கும்	வணங்கும்படியாயுள்ள	பரவி	துதித்து
தெய்வமும்	தேவதைகளையும்	பரந்து செல்மின்கள்	எல்லாவிடத்திலும் பரவி நடவுங்கள்.
உம்மையும்	உங்களையும்		
முன்படைத்தான்	முன்னம் படைத்தவனும்		
வீடு இல் சீர்	நித்யஸித்தங்களான திருக்குணங்களாலுண்டான		
புகழ்	புகழையுடையனுமான		

* * *—உலகர்களே! நீங்கள் எந்த தெய்வங்களைப் பணிகின்றீர்களோ, அந்த தெய்வங்களோடு உங்களோடு ஒரு வாசியில்லை; நீங்கள் எப்படி கார்யபூதர்களோ அப்படியே அவர்களும் கார்ய பூதர்களேயல்லது காரணபூதர்களல்ல; ஆகையாலே, அவர்களை நீங்கள் ஆச்ரயிப்பதுபோல உங்களையும் அவர்கள் ஆச்ரயிக்கலாம். உங்களைக்காட்டிலும் அவர்களுக்குச் சிறிது ஞானமும், சக்தியும் ஏறியிருக்கிறது என்கிற இவ்வளவேயல்லது வேறொரு வாசியில்லைகிடீர்; உங்களோடு அவர்களோடு வாசியற அனைவர்க்கும் காரணபூதனான ஸ்ரீமந் நாராயணன் காட்சி தந்தருளுமிடமாகிய திருநகரியைப் பணியுங்கோளென்கிறார். (2)

பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்து அன்றுடனேவிழுங்கி*
கரந்துமிழ்ந்துகடந்திடந்ததுகண்டும் தெளியகில்லீர்*
சிரங்களாலமரர்வணங்கும் திருக்குருகூரதனுள்*
பரன்திறமன்றிப்பல்லுலகீர் ! தெய்வம்மற்றில்லைபேசுமினே. (3)

பரந்த	விஸ்தீர்ணமான	கடந்து	(மஹாபலியிடத்தில் தானம் பெற்று) அளந்துகொண்டும்
தெய்வமும்	தேவதாவர்க்கங்களையும்	இடந்தது	(மஹா வராஹமாய்) இடந்தெடுத்தும் ஆக இப்படிச் செய்த காரியங்களை
பல் உலகும்	(அவர்களுக்குப்) பல உலகங்களையும்	கண்டும்	பிரமாணங்களாலே கண்டறிந்து வைத்தும்
படைத்து	ஸ்ருஷ்டித்தும்,	தெளியகில்லீர்	தெளியமாட்டாத
அன்று	பிரளயம் வந்த காலத்திலே	பல் உலகீர்	பலவகைப்பட்ட உலகத்தவர்களே !
உடனே விழுங்கி	எல்லாவற்றையும் ஒரு சேர விழுங்கி		
கரந்து	உள்ளே யொளித்து வைத்தும்,		
உமிழ்ந்து	பிறகு வெளிப்படுத்தியும்		

அமரர்	தேவர்கள்
சிரங்களால் வணங்கும்	தலையால் வணங்கப் பெற்ற
திருகுருகூர் அதனுள்	திருநகரியில் எழுந்தருளியிருக்கிற
பரன்	பரம புருஷனுக்கு
திறம் அன்றி	பிரகாரமாயல்லது

மற்று	வேறு ஸ்வதந்திரமாயிருப்பதொரு
தெய்வம் இல்லை	தேவதை கிடையாது ;
பேசுமின்	அப்படிப்பட்ட தேவதையொன்று உண்டாகில் சொல்லுங்கள்.

* * *—உலகங்களை ரக்ஷித்தருள்வதற்காக எம்பெருமான் செய்துபோரும் செயல்களை ஆராய்ந்து பார்த்தாலும் இவனே 'பரமபுருஷனென்று அறியப் போதுமென்கிறார். தேவவர்க்கம் முதற் கொண்டு பல வுலகங்களையும் படைத்ததும், *மண்ணாடும் விண்ணாடும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம் உண்ணாத பெரு வெள்ள முண்ணாமல் தான் விழுங்கி உய்யக்கொண்டதும், பிறகு வெளிநாடு காணப் புறப்படவிட்டதும், வாமனாவதாரம் பண்ணி மூவடி நீரேற்றுப்பெற்று அளந்து கொண்டதும், மஹாவராஹமாய் அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித் தெடுத்துக் கொண்டதுமாகிய இத்தகைய செயல்களைக் கொண்டே இவனே பரமதேவதை என்று திண்ணமாக எண்ணலாயிருக்க, அந்தோ! தெளிவுபெற மாட்டிற்றிலீரே என்கிறார். (3)

பேசநின்றசிவனுக்கும்பிரமன்தனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே * கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின் *
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள் *
ஈசன்பாலோரவம்பறைதல் என்னாவதிலிங்கியர்க்கே ? (4)

பேச நின்ற	உங்களால் பரதெய்வமாகப் பேசப்படுகின்ற
சிவனுக்கும்	ருத்ரனுக்கும்
பிரமன் தனக்கும்	(அவனது தந்தையான) பிரமனுக்கும்
பிறர்க்கும்	மற்றுமுள்ள தேவதைகளுக்கும்
நாயகன் அவனே	தலைவன் ஸ்ரீமந் நாராயணனே என்னுமிடத்தை
கபாலம் நல் மோக்கத்து	கபால மோக்ஷக் கதையினால்
கண்டு கொண்மின்	தெரிந்து கொள்ளுங்கள்.

தேசம்	தேஜஸ்ஸூ பொருந்திய
மா	சிறந்த
மதிள் சூழ்ந்து	மதில்களால் சூழப்பட்டு
அழகு ஆய	அழகு பெற்றதான
திருகுருகூர் அதனுள்	திருநகரியில் எழுந்தருளியிருக்கிற
ஈசன் பால்	ஸர்வேச்வரன் விஷயத்தில்
ஓர் அவம் பறைதல்	தப்பான பேச்சுக்களைப் பேசுவது
இலிங்கியர்க்கு	லிங்கப்ரமாணவாதிகளுக்கு
என் ஆவது	என்ன பலனைத் தரும் !

* * *—அநுமாநத்தாலே ஈச்வரனை ஸாதிக்க விரும்புமவர்களும் பசுபதியே ஸர்வேச்வரனென்று கூறுமவர்களுமான சிலரை இப்பாசுரத்தாலே நிராகரித்தருளுகிறார். இலிங்கியர்க்கு என்றது ஹேதுவாதிகளுக்கு என்றபடி ; அநுமானத்தைக் கொள்ளுபவர்களே ஹேதுவாதிகளாவர்கள். சப்த ப்ரமாணமான சாஸ்த்ரத்தின் முன்னே வேறு எந்த ப்ரமாணமும் நிற்கமாட்டாதாகையாலே அந்த சாஸ்த்ர ப்ரமாண விருத்தமாக இலிங்கியர் பேசுவது பொருளற்றது என்று நிரூபிக்கிறார். இலிங்கியர்—லிங்கவாதிகள் ; லிங்கமாவது ஹேது ; அநுமாநமென்கை. (4)

இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும்சாக்கியரும் *
வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான் *
மலிந்துசெந்நெல்கவரிவீசும் திருக்குருகூரதனுள் *
பொலிந்துநின்றபிரான்கண்டீர் ஒன்றும்பொய்யில்லை போற்றுமினே. (5)

இலிங்கத்து இட்ட புராணத்தீரும்	லிங்கமாஹாத்மியவிஷயமாகக் கல்பிக்கப்பட்ட புராணத்தைப் பற்றினவர்களாயும்	பொலிந்து நின்ற பிரான்	பொலிந்து நின்ற பிரானென்கிற எம்பெருமானே,
சமணரும்	ஜைநர்களாயும்	செந்நெல்	செந்நெற்பயிர்களானவை
சாக்கியரும்	பௌத்தர்களாயும்	மலிந்து	ஸம்ருத்திபெற்று
வலிந்து வாது செய்வீர்களும்	விதண்டாவாதம் செய்பவர்களாயுமிருக்கிற நீங்களாகவும்	கவரி வீசும்	சாமரை வீசப்பெற்ற
		திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே
		கண்டீர்	ஸேவியுங்கோள் ;
மற்றும் நும் தெய்வமும் ஆகி நின்றான்	தேவதாந்தரங்களாகவும் (இப்படி ஸர்வ சரீரகனான)	ஒன்றும்	எள்ளளவும்
		பொய் இல்லை	அஸத்யமில்லை ;
		போற்றுமின்	துதியுங்கோள்.

* * *—லிங்கபுராணம் முதலாகச் சில குத்ருஷ்டி ஸ்ம்ருதிகளையும் பாஹ்ய ஸ்ம்ருதிகளையும் பிரமாணமாகக்கொண்டு பேசவந்தவர்களை நிராகரித்தருளுகிறார்.

புராணங்களானவை ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் ஸாத்விகங்களென்றும் பாகுபாடுற்றிருக்கின்றன. தாமஸகல்பங்களில் அக்கினியினுடையவும் சிவனுடையவும் மாஹாத்மியத்தையும், ராஜஸகல்பங்களில் நான்முகனுடைய மாஹாத்மியத்தையும், ஸாத்விககல்பங்களில் ஸர்வேச்வரனுடைய மாஹாத்மியத்தையும், முக்குணங்களும் கலசின ஸங்கீர்ணகல்பங்களில் பித்ருக்களினுடையவும் ஸரஸ்வதியினுடையவும் மாஹாத்மியத்தையும் பேசியிருப்பதாக மஹர்ஷிகளே கூறிவைத்தார்கள்.

எருமையை யானையாகக் கவிபாடித்தரவேணு மென்பாரைப்போலவே லிங்கத்துக்குப் பெருமையிட்டுச் சொல்லவேணுமென்று கேள்வியாய், அதன்மேற்பிறந்தது லிங்கபுராணமாகையாலே இலிங்கத்து இட்ட புராணத்தீரும் என்று ஆழ்வார் மருமத்தை வெளியிட்டுப் பேசியருளினாராயிற்று.

இப்படிப்பட்ட பாஹ்யகுத்ருஷ்டிமத நிஷ்டர்களை விளித்து, 'நீங்களும் நீங்கள் தொழுகிற தெய்வங்களும் அவனேயாகி நின்றான்' என்று இங்கு ஆழ்வார் அருளிச்செய்வது. அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா, அஹம் பவோ பவந்தச்ச ஸர்வம் நாராயணாத்மகம், தவாந்தராத்மா மமச யேசாந்யே தேஹிஸம்ஜ்ஞிதா: * இத்யாதி ப்ரமாணங்களை உட்கொண்டாம். சிவபிரான் திரிபுரமெரித்த வரலாற்றை நன்குணர்ந்தால் ஒவ்வொரு தேவதைக்கும் எம்பெருமானே உயிராகி நிற்பவன் என்பது புலனாகும். (5)

போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு * உம்மையின்னே
தேற்றிவைத்தது எல்லீரும்வீடுபெற்றா லுலகில்லையென்றே *
சேற்றில்செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள் *
ஆற்றவல்லவன்மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோடுமினே. (6)

மற்ற ஓர் தெய்வம்	வேறொரு தேவதையை		(எதற்காக வென்றால்)
போற்றி	துதித்து	எல்லீரும்	எல்லாரும்
பேண	ஆதரிக்கும்படியாக	வீடு பெற்றால்	முக்தியடைந்தால்
புறத்து இட்டு	வேறுபடுத்தி	உலகு இல்லை என்றே	புண்ணிய பாப விஷயமான சாஸ்த்ரமரியாதை குலைந்து போகுமென்ற காரணத்தாலேயாகும் ;
உம்மை	உங்களை		
இன்னே	இப்போது நீங்களிருக்கிற விதமாக	சேற்றில்	சேற்றுநிலத்தில்
தேற்றி வைத்தது	தேவதாந்தரங்களை நம்பும்படியாக (எம்பெருமான் செய்து வைத்ததானது)	செந்நெல்	செந்நெற்பயிர்களும்
		கமலம்	தாமரையும்
		ஓங்கு	ஓங்கிவளரப்பெற்ற

திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே யெழுந்தருளி யிருக்கின்ற	அறிந்து	தெரிந்துகொண்டு
ஆற்ற வல்ல வன்	பரமசக்தியுக்தனான பெருமானுடைய	அறிந்து	'அது தப்பும் வழி—அவன் திருவடிகளைப் பற்றுவதே' என்றும் தெரிந்துகொண்டு
மாயம் கண்டீர் அது	மாயையேயாமத்தனை : மாயையென்பதை	ஓடுமின்	திருவடியே சென்று சேரப் பாருங்கள்.

* * *—ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனாகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்துவைத்தது ஏன்! என்று சிலர் கேட்பதாகக்கொண்டு அவர்களுக்கு உத்தரமளிக்கும் பாசுரம் இது. உங்கள் பாபந்தான் அதற்குக் காரணம் என்று விடை கூறிற்றாகிறது.

இப்பாசுரத்தில் எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே என்பதுதான் மருமமாகவுள்ளது. ஆபாதப்ரதீதியில் இதற்கு என்னபொருள் தோன்றுமென்றால், எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனையே தொழப்பெற்றால், எல்லாருமே வீடுபெற்றுவிட்டால் லீலாவிபூதி அடியற்றுப்போய்விடும்; அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதாபஜநம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்துவைத்தான்—என்பதாகப் பொருள்தோன்றும். இப்படிப்பட்ட பொருள் எம்பெருமானுக்கு மிக்க அவத்யத்தை விளைக்குமதாகையாலே ஆழ்வார் இப்பொருள் பட அருளிச்செய்ய ப்ரஸக்தியில்லை;

பிள்ளான் முதலிய ஸகலபூருவாசாரியர்களும் திருவுள்ளம்பற்றின பொருள் யாதெனில்; உலகில்லையென்றே என்றவிடத்தில் உலகு என்பதற்கு சாஸ்த்ரமர்யாதை என்று பொருள். அவரவர்கள் பண்ணின புண்ணியபாபரூப கருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ரமரியாதை ஏற்பட்டிருக்கின்றது; நீங்கள் முற்பிறவிகளில் பிரபலமான தீவினைகளைச் செய்திருந்தபடியால் அவற்றின் பலனாக இப்பிறப்பில் உங்களை க்ஷுத்ரதேவதாபஜனம் பண்ணும்படியாக உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களை புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந்நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணிவிடுவதானால் அப்போது முன்சொன்ன சாஸ்த்ரமரியாதை அழிந்து விடுமன்றோ. அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனே நிறுத்திவைத்தது—என்கை. வேதாந்த தேசிகனும் தாத்பர்ய ரத்நாவளியில் * தத்தத்கர்மாநுரூபம் பலவிதரணத: * என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினார்.

* மம மாயா துரத்யயா * என்று அவன்தானே கீதையில் சொல்லிவைத்தபடி தப்பவொண்ணாத இந்த மாயையை அவன் திருவடிகளைக் கட்டியே தப்பப் பாருங்களென்கிறார் பின்னடிகளில். (6)

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தெய்வம்
பாடியாடிப்பணிந்து * பல்படிகால் வழியேறிக்கண்டீர் *
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள் *
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே. (7)

ஓடிஓடி	ஸம்ஸார சக்கரத்தில் ஓடியோடி	மற்று ஓர் தெய்வம் வழி ஏறி	தேவதாந்தரங்களை அந்தந்த நூல்களிலே சொல்லியிருக்கிறபடி
பல பிறப்பும் பிறந்து	பலபல யோனிகளில் பிறந்து	பாடி ஆடி பணிந்து	பலபடியாக வழிபட்டு
பல் படி கால்	வம்ச பரம்பரையாக		

கண்டீர்	பலன் கைபுகுந்தமை கண்டீர்களே ;	திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே எழுந்தருளியிருக்கின்ற
வானவர்	தேவர்கள்	ஆடு புள் கொடி ஆதி மூர்த்திக்கு	ஆடுங் கருடக்கொடியுடைய ஆதிநாதப் பெருமானுக்கு
கூடி	திரண்டு		
ஏத்த நின்ற	துதிக்கும்படி நின்ற	அடிமைபுகுவது	அடியராயிருக்கத் தகுதி.

* * *—தேவதாந்தரங்களை ஆச்ரயிப்பதனால் என்னபலன் உண்டாகுமோ அது உங்களுக்கு இதுவரையில் தெரியாமலில்லை; இந்நாள்வரையிலே கைகண்ட பலன்தான் இனி மேலும் காணக்கடவதா யிருக்கும்; ஆனபின்பு கருடக்கொடியுடையானுக்கு அடிமை புகுவதுவே உறுவதென்றார்.

நீங்கள் தொழுகிற்கிற தெய்வங்களும் வந்து தொழுது தத்தம் வாய்படைத்த பலன் பெறுமாறு தோத்திரம் செய்யுமிடமான திருக்குருகூரிலே ஸேவைஸாதிக்கின்ற பறவையேறு பரம்புருடனுக்கு அடிமை செய்வதே ஸ்வரூப ப்ராப்தமென்றாராயிற்று.

ஆடுபுள் 'ஆடு' என்று வெற்றிக்கும் பெயராதலால் வெற்றிக்கருடன் என்னவுமாம். (7)

புக்கடிமையினால்தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை *
நக்கபிரானுமன்றுய்யக்கொண்டது நாராயணனருளே *
கொக்கலர்தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள் *
மிக்கவாதிப்பிரான் நிற்க மற்றைத்தெய்வம்விளம்புதிரே. (8)

அடிமையினால்	அடிமை செய்து	கொக்கு அலர்	கொக்குபோலே வெண்ணிறமாக அலர்கின்ற
புக்கு	உள்புகுந்து		
தன்னை கண்ட	தன்னைக் காணப்பெற்ற	தட தாழை	பெரிய தாழைகளை
		வேலி	வேலியாகவுடைய
மார்க்கண்டேயனவனை	மார்க்கண்டேயனென்று ப்ரஸித்தனானவனை	திருகுருகூர் அதனுள்	திருநகரியிலே
அன்று	அக்காலத்தில்	மிக்க	மேம்பாடுடைய
நக்கபிரான்	திகம்பரச்சாமியான ருத்ரன்	ஆதிபிரான் நிற்க	ஆதிநாதப் பெருமாளிருக்க
உய்யக் கொண்டதும்	ரக்ஷித்ததும்	மற்று எ தெய்வம்	வேறு எந்த தேவதைகளை
நாராயணன் அருளே	நாராயணனுடைய அருளின் பயனேயாகும் ;	விளம்புதிர்	பேசுகிறீர்கள் ?

* * *—மார்க்கண்டேயன் ருத்ரனை ஆராதித்துத் தன் அபேக்ஷிதம் பெற்றானேயென்று சிலர் சொல்ல, அந்தக்கதையின் மருமமும் கேட்கலாகாதோ வென்கிறார்.

சிவபிரான் மார்க்கண்டேயனுக்கு அருள் செய்தது திருமாலினருளால் தான் பெற்ற சக்தியினாலேயென்பதும், அச்சிவபிரானுக்கு அந்தராத்மாவாய் நின்று தொழில் செய்தவன் ஸர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயணனே என்பதுமாகிய உண்மை உணரத்தக்கது. சில புராணங்களில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது பரமசிவனே மார்க்கண்டேயனுக்கு அபயமளித்ததாகக் காணப்படினும், மஹாபாரதத்தில் ஆரண்யபருவத்தில் நூற்றுத்தொண்ணூற்றிரண்டாமத்யாயத்தில் மார்க்கண்டேயன் தானே தரும புத்திரரை நோக்கிச் சொல்லுமளவில் ஸ்ரீமந்நாராயணனுடைய வார்த்தைகளை அநுவதிக்குமிடத்து, *பித்ருபக்தோஸி விப்ரர்ஷே! மாஞ்சைவ சரணம் கத:* என்றுள்ள ச்லோகத்தினால் இவன் ஸ்ரீமந்நாராயணனை சரணம் புகுந்தவனென்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ பாகவதத்திலும் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில் எட்டாமத்தியாயத்தில் * ஆராதயந் ஹ்ருஷீகேசம் ஜிக்யே ம்ருத்யும் ஸுதுர்ஜயம் * [ஸ்ரீமந்நாராயணனை ஆராதித்து வெல்லவொண்ணாத யமனைவென்றொழித்தான்] என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று. (8)

விளம்புமாறுசமயமும் அவையாகியமற்றும்தன்பால் *
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும் *
வளங்கொள் தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
உளங்கொள்ஞானத்துவைம்மின் உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே. (9)

விளம்பும்	கண்டபடி சொல்லுவது தவிரப் பொருட் பொருத்தம் சிறிது மில்லாதவைகளான	வளம் கொள் தண் பணை சூழ்ந்து அழகு ஆய	வளம் மிக்க குளிர்ந்த நீர் நிலங்களாலே சூழப்பட்டு அழகியதான
ஆறு சமயமும்	ஆறுவகைப்பட்ட பாஹ்ய மதங்களும்		
அவை ஆகிய	அந்த பாஹ்ய மதங்கட்குப் பரியாயமான	திரு குருகூர் அதனை	திருநகரியை, (நீங்கள்)
மற்றும்	குத்ருஷ்டி மதங்களும்	உம்மை	உங்களை
தன்பால்	தன் விஷயத்திலே	உய்யக் கொண்டு போகுறில்	உஜ்ஜீவிப்பித்துக் கொண்டு நடக்கவேண்டியிருந்தீர்களாகில்
அளந்து காண்டற்கு அரியன் ஆகிய	எல்லைகாணவொண்ணாதவனாயிருக்கிற		
ஆதி பிரான்	ஸகலஜகத் காரண பூதனான ஸர்வேச்வரன்	உளம் கொள் ஞானத்து	அந்தரங்க ஜ்ஞானத்துக்குள்ளே
அமரும்	நித்தியவாஸம் பண்ணுமிடமாய்	வைம்மின்	வைத்துச்சிந்தனை செய்யுங்கள்.

* * *—வேதபாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் பண்ணுகின்ற துஸ்தர்க்கங்களால் அழிக்கவொண்ணாத ஐச்வர்யத்தை யுடையனான எம்பெருமானெழுந்தருளியிருக்கிற திருநகரியை ஆச்ரயியுங்கோள் பிழைக்கவேண்டியிருந்தீர்களாகில் என்கிறார்.

விளம்பும் ஆறுசமயமும் = சாக்ய, உலூக்ய, அக்ஷபாத, க்ஷபண, கபில, பதஞ்சலி மதங்கள் எனப்படுகிற ஆறும் பாஹ்ய ஸமயங்களாம்; **சாக்யர்**—பௌத்தர்; **உலூக்யர்**—சார்வாகர்; அக்ஷபாதரென்று கௌதமரைச் சொல்லி நையாயிக வைசேஷிகர்களை நினைக்கிறது. **க்ஷபணர்**—ஜைநர்.

அவையாகிய மற்றும்=மற்று அவற்றோடொத்த குத்ருஷ்டிகளும் என்றபடி. "**அவையாகியும்**" என்பது பன்னீராயிரப்படி யுரைக்கு மாத்திரம் பாடம். **மற்றும்** என்பதற்கே குத்ருஷ்டிவர்க்கமெனப் பொருள்கொண்டு, **அவையாகியும்** என்பதற்கு "ஸபையாகத் திரண்டாலும்' என்று பொருள் கூறினர் பன்னீராயிரவுரைகாரர். **அவை**=ஸபை; பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் பெருந்திரளாகக் கூடினாலும் பரிச்சேதித்து அறிய முடியாதவன் எம்பெருமான் என்றபடி. போக + உறில், போகுறில்; தொகுத்தல். (9)

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால் *
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே *
செறுவில்செந்நெல்கரும்பொடோங்கு திருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே. (10)

எ தேவும்	எல்லாத் தேவதைகளும்	செந்நெல்	செந்நெற் பயிர்களும்
எ உலகங்களும்	எல்லா வுலகங்களும்	கரும்பொடு	கருப்பஞ் சோலைகளும்
மற்றும்	மற்றுமுண்டான சேதநா சேதநங்களுமாகிய	ஓங்கு	வளரும்படியான
இத்தனையும்	இவை யடங்கலும்	திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே
தன் பால்	தன்னுடையதான		
மறு இல் மூர்த்தியோடு ஒத்து	நிஷ்கலங்கமான அஸாதாரண விக்ரஹம் போன்று (ஸகல விதத்தாலும் விதேயங்களாகி யென்றபடி)	குறிய மாண் உரு ஆகிய	வாமந ப்ரஹ்மசாரி வேஷமெடுத்தவனும்
		நீள் குடக்கூத்தனுக்கு	(க்ருஷ்ணனாய்) பெரிய குடக்கூத்தாடினவனுமான பெருமானுக்கு
நின்ற வண்ணம் நிற்க	குறையற நிற்குமிருப்பிலே	ஆள் செய்வதே	அடிமை செய்வதே
செறுவில்	விளைநிலங்களில்	உறுவது ஆவது	உற்றதாம்.

** * *—தன் ஐச்வர்யத்தில் ஒன்றும் குறையாமல் திருநகரியில் வந்து நின்றருளின பொலிந்து நின்ற பிரானுக்கு அடிமைசெய்கைதானே ஸ்வரூபாநுரூபமென்கிறார். பாட்டினடியிலுள்ள உறுவதாவது என்பதை, முடிவிலுள்ள ஆட்செய்வதே என்பதனோடு கூட்டுக ; ஆட்செய்வதே உறுவதாவது என்றபடி.*

எத்தேவும் எவ்வுலகங்களும் மற்றும் இத்தனையும் தன்பால் மறுவில் மூர்த்தியோடொத்து இத்யாதி. *இந்திரன் சந்திரன் குபேரன் என்று சொல்லப்படுகிற ஸகல தேவதாவர்க்கமும், ஸமஸ்தலோகங்களும், மற்றுமுண்டான சேதநாசேதநவர்க்கமுமான இவை யித்தனையும் தன்னுடைய அஸாதாரண விக்ரஹம்போலே தனக்கு விதேயமாயிருக்கும்படியாகப் பெற்ற எம்பெருமான் திருக்குருகூரிலே நின்றருளுகிறனைகயாலே அவனுக்கு ஆட்செய்வதே உறுவது என்றபடி.* (10)

*ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன் வண்குருகூர்நகரான் **
*நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன் **
*வேட்கையால்சொன்ன பாடல் ஆயிரத்துளிப்பத்தும்வல்லார் **
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (11)

ஆள் செய்து	(உபதேச முகத்தாலே ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளுகையாகிற) கைங்கரியத்தைப் பண்ணி	மாறன் சடகோபன்	ஆழ்வார்
		வேட்கையால்	ஆதரத்தோடு
		சொன்ன	அருளிச் செய்ததான
ஆழி பிரானை சேர்ந்தவன்	ஆழியங் கையனான பெருமானை அடைந்தவரும்	பாடல் ஆயிரத்துள்	ஆயிரம் பாட்டினுள்ளே
வண் குருகூர் நகரான்	திருநகரிக்குத் தலைவரும்	இ பத்தும்	இப்பதிகத்தை
		வல்லார்	ஓத வல்லவர்களுக்கு
		மீட்சி இன்றி	மீண்டும் திரும்புதலில்லாத
நாள் கமழ்மகிழ் மாலை மார்பினன்	பரிமளம் மாறுத மகிழ்மாலையைத் திருமார்பிலே அணிந்தவருமான	வைகுந்தம் மாநகர் மற்றது	ஸ்ரீவைகுண்ட மஹா நகரமாகிய அவ்விடம்
		கையது	கரஸ்தம்.

** * *—இந்த நன்மைக்கு அடி நல்லார்நவில் குருகூரிலே பிறப்பு, என்பது தோன்ற வண்குருகூர் நகரான் என்கிறார்.* (11)

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து—எட்டாந்திருவாய்மொழி—ஆராவமுதே

அவதாரிகை :—நமக்குத் திருக்குடந்தையிலே காட்சி தந்தருள்வதாக எம்பெருமான் ஸங்கல்பித்திருக்கக் கூடுமென்று எண்ணி, 'அங்குச் சென்று புகவே நம் அபேக்ஷிதம் தலைக்கட்டும்; குறைகளெல்லாம் தீரும்' என்று கனக்கப் பாரித்துக்கொண்டு திருக்குடந்தையிலே சென்று புகுந்து இன்னும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக்கடவேன்! என்னுமார்த்தியோடே தலைக்கட்டுகிறார்.

ஆராவமுதேயடியேனுடலம் நின்பாலன்பாயே *
நீராயலைந்துகரையவுருக்குகின்ற நெடுமாலே!*
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை *
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே! (1)

ஆரா அமுதே	எவ்வளவு அநுபவித்தாலும் திருப்தி பிறவாத அமுதமாகிய
எம்மானே	எம்பெருமானே!
அடியேன் உடலம்	என்னுடைய சரீரமானது
நின்பால்	உன் திறத்தில்
அன்பு ஆய் ஏ	அன்புதானே வடிவெடுத்ததாகி
நீர் ஆய் அலைந்து	நீர்ப்பண்டமாக உருகி வியாகுலப்பட்டு
கரைய	கரையும்படியாக
உருக்குகின்ற நெடுமாலே	உருகப் பண்ணுநிற்கிற ஸர்வேச்வரனே!
சீர் ஆர் செந் நெல்	சீர்மைமிக்க செந்நெற் பயிர்கள்
கவரி வீசும்	சாமரம்போல் வீசப்பெற்று
செழு நீர்	செழுமை தங்கிய தீர்த்தங்களையுடைத்தான
திருகுடந்தை	திருக்குடந்தையிலே
ஏர் ஆர் கோலம் திகழ	அழகு பொருந்திய திருமேனி விளங்க
கிடந்தாய்	சாய்ந்தருளினாய்; அவ்வழகை
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்.

* * *—இத்திருவாய்மொழியிலே நம் பூருவர்கள் போரவும் ஈடுபட்டிருப்பர்களாயிற்று. இங்கு ஈட்டில் நம்பிள்ளை அருளிச்செய்வது பாரீர்;—"உத்தரபூமியிலே லோகஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியா நிற்க, இங்குத்தையானொருவன் அங்கேறச் செல்ல, 'பிள்ளாய் தக்ஷிணபூமியில் விசேஷமென்?' என்று கேட்க, 'திருவாய்மொழி யென்றொரு பிரபந்தமவதரித்து சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக் கொண்டாடிக் கொடுபோராநின்றார்கள்' என்ன, 'அதிலே உனக்குப் போவதொரு சந்தை சொல்லிக்காணாய்' என்ன, * ஆராவமுதே * என்கிற வித்தனையும் எனக்குப் போம்' என்ன, 'நாராயணாதி நாமங்கள் கிடக்க இங்ஙனேயொரு நிர்த்தேசமுண்டாவதே! இச்சொல் நடையாடுகிற தேசத்தேறப் போவோம்' என்று அப்போதே புறப்பட்டுப் போந்தார்."

[சீரார் செந்நெல்] "செந்நெல்லுக்குச் சீர்மையாவது.—ஆராவமுதாழ்வார்க்கு அமுதுபடியாகிற சீர்மை" என்பர் நம்பிள்ளை. அர்ச்சாவதாரத்திலே எம்பெருமானுடைய திருப்பவளத்துக்குப் பாங்காக நிவேதனமாகப்பெறுகிற சீர்மை செந்நெற் பயிர்களுக்காம். (1)

எம்மானே! என்வெள்ளைமூர்த்தி என்னையாள்வானே! *
எம்மாவுருவும் வேண்டுமாற்றால் ஆவாயெழிலேறே! *
செம்மாகமலம்செழுநீர்மிசைகண்மலரும் திருக்குடந்தை *
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே என்நான்செய்கேனே? (2)

எம்மானே	எல்லாவிதத்திலும் மஹானுன வனே!
என் வெள்ளை மூர்த்தி	என்னை ஈடுபடுத்திக் கொண்ட பரிசுத்த சொரூபனே
என்னை ஆள் வானே	என்னை அடிமை கொள்பவனே
வேண்டும் ஆற்ருல்	திருவுள்ளமானபடியே
எம் மா உருவம் ஆவாய்	எப்படிப்பட்ட அவதார விக்ரஹங்களையும் பரிக்ரஹிப்பவனே!
எழில் ஏறே	அழகிற் சிறந்தவனே!
மா செம் கமலம்	பெரிய செந்தாமரைகள்
செழு நீர் மிசை	அழகிய நீரினிடத்து
கண்	கண்டவிடமெங்கும்
மலரும்	மலரப்பெற்ற
திரு குடந்தை	திருக்குடந்தையிலே
அ மா மலர் கண்வளர்கின்ருனே	அப்படிப்பட்ட சிறந்த மலர் போன்ற திருக்கண்கள் துயில்பவனே!
நான் என் செய்கேன்	நான் என்ன பண்ணுவேன்! (இவ்வழகுகண்டு என்னால் தரிக்கப் போகிறதில்லையே!)

** * *—கீழ்ப்பாட்டில் "கண்டேனெம்மானே!" என்ற ஆழ்வாருடைய கருத்து—பிரானே! உன்னை உலகத்தார் காண்கிற ரீதியிலே நானும் காணுமித்தனையேயோ? எனக்காக எழுந்திருத்தல், இருத்தல், உலாவுதல், குசலப்ரச்னம் பண்ணியருளுதல், அணைத்தல் செய்தருள வேண்டாவோ? என்று கேட்பதாம். அங்ஙனே கருத்துத் தொனிக்கக் கூப்பிடச் செய்தேயும் ஆராவமுதன் அசையாதேயிருக்க, மீண்டுமொருபடி கூப்பிடுகிருர்.* (2)

என்நான்செய்கேன்? யாரேகளைகண் என்னையென்செய்கின்ருய்?
*உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும்குறைவேண்டேன் **
*கன்ஞர்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாணாள் **
சென்னளெந்நாளந்நாள் உனதாள்பிடித்தேசெலக்காணே. (3)

நான் என் செய்கேன்	அடியேன் என்ன செய்வேன்!
களைகண் யாரே	ரக்ஷகராவார் யாவர்?
என்னை என் செய்கின்ருய்	என்னை என்ன செய்வதாக இருக்கின்ருய்?
உன்னால் அல்லால்	உன்னைத் தவிர்த்து
யாவராலும்	வேறு ஒரு விதமான உபாயத்தாலும்
குறை ஒன்றும் வேண்டேன்	சிறிதும் அபேக்ஷை யுடையேனல்லேன்;
கன் ஆர் மதிள் சூழ் குடந்தை கிடந்தாய்	வேலைப்பாடு பொருந்தியமதிள் சூழ்ந்த திருக்குடந்தையிலே சயனித்தருள்பவனே!
அடியேன்	அடியேனுடைய
அரு	ஆத்மாவானது
வாழ் நாள்	வாழும் காலத்தில்
செல் நாள் எநாள்	கழிகின்ற நாள்கள் எத்தனை நாளோ
அ நாள்	அந்த நாள்களெல்லாம்
உன தாள் பிடித்தே	உனது திருவடிகளைப் பற்றிக் கொண்டே
செல	நடக்கும்படி
காண்	கடாக்ஷித்தருளவேணும்.

** * *—இப்படி துடித்துக் கூப்பிட்டவிடத்திலும் குளிர நோக்குதல் குசலப்ரச்னம் பண்ணுதல் ஒன்றும் செய்யாமையாலே, 'நாம் பேற்றுக்கு ஏதேனும் உபாயம் அனுஷ்டிக்கவேணும் என்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருக்கிருன் போலும் என்று கொண்டு, பிரானே! நான் என்காரியம் செய்கையென்று ஒன்றுண்டோ? நீயேசெய்து தலைக்கட்டித்தரவேணும்' என்கிருர்.* ... (3)

*செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்! **
*உலப்பிலானே யெல்லாவுலகுமுடையவொருமூர்த்தி! **
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய்! உன்னைக்காண்பான்நான்
*அலப்பாய் * ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே.* (4)

செல காண்கிற்பார்	மேலே மேலே காணவல்லவர்கள்
காணும் அளவும்	எவ்வளவு காண்பர்களோ அவ்வளவும்
செல்லும் கீர்த்தியாய்	வளர்ந்து செல்கின்ற திருக்குணங்களை யுடையவனே !
உலப்பு இலானே	அந்தத் திருக்குணங்கட்கு முடிவு இல்லாதவனே !
எல்லா உலகும் உடைய	எல்லா வுலகங்களுக்கும் ஸ்வாமியான
ஒரு மூர்த்தி	ஒப்பற்ற தலைவனே !
நலத்தால் மிக்கார் குடந்தை	பக்தி மிகுந்தவர்கள் வாழ்கிற திருக்குடந்தையிலே
கிடந்தாய்	சயனித்தருள்பவனே !
நான் உன்னை காண்பான் அலப்பு ஆய்	நான் உன்னை காணவேண்டி அலமந்து
ஆகாசத்தை நோக்கி	(நீ வருதற்குரிய) வானத்தைப் பார்த்து
அழுவன் தொழுவன்	அழுவதும் தொழுவதும் செய்யா நின்றேன்.

** * *—பிரானே! என்போல்வார்க்காக நீ திருக்குடந்தையிலே ஸன்னிதி பண்ணியிருக்கும் நினைத்தபடி பரிமாற்றம் கிடையாமையாலே நான் நோவுபடா நின்றேனென்கிறார். முதலடியினால் நீ படைத்த புகழெல்லாம் பாழாய்ப்போகிறதே யென்று வயிறு பிடிக்கிறார். தமக்கு உதவாமையினாலே இங்ஙனே சொல்லுகிறபடி. எம்பெருமானுடைய கீர்த்திகளை [அதாவது ஸ்வரூப ரூபகுணவிபூதிகளை] யார் யார் எவ்வளவு பேசுகிறார்களோ அவை அவ்வவ் வளவாயிருக்கும். மந்தமதிகள் பேசப் புக்காலும் அவர்களது வாக்கிலே அடங்கி நிற்கும்; மஹாமதிகள் பேசப்புக்காலும் அவர்களது திறமைக்குத் தக்கபடி கரைகட்டாக் காவேரிபோலப் பெருகிச் சென்றிருக்கும் என்க.* (4)

*அழுவன்தொழுவனாடிக் காண்பன் பாடியலற்றுவன்**
*தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்**
*செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய்! செந்தாமரைக்கண்ணா! **
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (5)

செழு ஒண்பழனம்	செழுமை தங்கிய நீர்நிலங்களை யுடைய
குடந்தை கிடந்தாய்	திருக்குடந்தையிலே சயனித்தருள்பவனே !
செந்தாமரை கண்ணா	செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களை யுடையவனே
அழுவன் தொழுவன்	அழுவேன் தொழுவேன் ;
ஆடி காண்பன்	நடனம் செய்து பார்ப்பேன் ;
பாடி அலற்றுவன்	வாயாரப்பாடிப் பிரலாபனம் செய்வேன் ;
தழு வல்வினையால்	என்னைத் தழுவிக்கொண்டிருக்கிற வலிய பாவத்தினாலே
பக்கம் நோக்கி	(எந்த பக்கமாக நீ வருகிறாயோ வென்று) பக்கந்தோறும் பார்த்து (எங்கும் வரக் காணாமையாலே)
நாணி கவிழ்ந்து இருப்பன்	வெட்கப்பட்டுத் தலை கவிழ்ந்திருப்பேன் ;
தொழுவனேனை	மிகுந்த அருவருப்பை யுடையனான என்னை
உன தாள் சேரும் வகையே	உன் திருவடியடையுமாறு
சூழ் கண்டாய்	உபாய சிந்தைபண்ணவேணும்.

** * *—பிரானே! உன் கண்ணழகிலே யீடுபட்டுப் பலவகை ப்ரவ்ருத்திகளும் பண்ணினவிடத்திலும் பயன் பெற்றிலேன்; உன் திருவடிகளைச் சேரும்படி நீயே பார்த்தருள வேணுமென்கிறார்.* (5)

சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன் ?*
*வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்! வானோர்கோமானே !**
யாழினிசையே! அமுதே! அறிவின்பயனே! அரியேறே! (6)

வாழ் தொல் புகழார் குடந்தை	விளங்குகின்ற அநாதியான புகழையுடையார் வர்த்திக்கிற திருக்குடந்தையிலே
கிடந்தாய்	சயனித்தருள்பவனே !
வானோர் கோமானே	நித்யஸூரிநாதனே !
யாழின் இசையே	வீணாகானம்போலே பரமபோக்யனானவனே !
அமுதே	அமிருதம் போன்றவனே !
அறிவின் பயனே	அறிவுக்குப் பலனானவனே !
அரி ஏறே	சிங்கமும் இடபமும் போன்று சிறந்தவனே !
உன் அடி சேரும் ஊழ் கண்டு இருந்தே	நான் உனது திருவடிகளையடையும்படியான முறைமையைக் கண்டிருந்தும்
தூரா குழி தூர்த்து	ஒருநாளும் தூர்க்கவொண்ணாத இந்திரியக்குழிகளை நிறைத்துக்கொண்டு
எனை நாள்	எத்தனை காலம்
அகன்று இருப்பன்	உன்னை விட்டுப் பிரிந்திருப்பேன் ?
என் தொல்லை வினையை அறுத்து சூழ் கொண்டாய்	(இப்படி அகன்றிருக்கைக்குக் காரணமான) எனது அநாதி பாபங்களைத் தொலைத்து என்னை ஸ்வீகரித்தருள வேணும்.

** * *—பிரானே! உன்னுடைய போக்யதையிலே அகப்பட்டிருந்துள்ள வெனக்கு ஓர் உபகாரம் செய்தருளவேணும்; உன்னைப்பெறுதற்கு இடையூறான தொல்லைவினைகளை யெல்லாம் தொலைத்தருளி உன்னைப் பெறுவதொரு நல்விரகு பார்த்தருளவேணும் என்கிறார்.* (6)

*அரியேறே! என்னம்பொற்சுடரே செங்கண்கருமுகிலே!**
*எரியேபவளக்குன்றே! நால்தோளெந்தாய்! உனதருளே**
பிரியாவடிமையென்னைக்கொண்டாய்! குடந்தைத்திருமாலே!
தரியேனினியுன்சரணம்தந்து என்சன்மங்களையாயே. (7)

அரி ஏறே	சிறந்த சிங்கமே !
என்	நான் அனுபவித்தற்குரிய
அம் பொன் சுடரே	அழகிய பொன்போன்ற ஒளியுருவனே !
செம் கண் கரு முகிலே	சிவந்த கண்களையுடைய காளமேகம் போன்றவனே !
எரி ஏய் பவளம் குன்றே	நக்ஷத்திர மண்டலத்தளவும் ஓங்கின பவளமலை போன்றவனே !
நால் தோள் எந்தாய்	சதுர்ப்புஜ ஸ்வாமியே !
உனது அருளே	உனது கிருபையினால்
என்னை பிரியா அடிமை கொண்டாய்	என்னை அத்தாணிச் சேவகங் கொண்டவனே !
குடந்தை திருமாலே	திருக்குடந்தையில் வாழும் திருமாலே !
இனி தரியேன்	இனிமேல் நான் தரித்திருக்ககில்லேன் ;
உன் சரணம் தந்து	உனது திருவடிகளைக் கொடுத்தருளி
என் சன்மம் களையாய்	எனது சரீரத்தொடர்பைத் தவிர்த்தருளவேணும்.

** * *—பிரானே! உன்னுடைய வைலக்ஷண்யத்தை நீயே காட்டித்தந்து அடிமையிலே என்னை ஊன்றவைத்தாயான பின்பு உன் திருவடிகளைத்தந்து தீரவேணுமன்றோ; தந்து பின்னை ஸம்ஸாரத்தைக் களைந்தொழியாய் என்கிறார். மேனாணிப்புத்தோற்ற விருக்குமிருப்பை* **அரியேறே!** *என்ற விளிகாட்டும். அந்த மேனாணிப்புக்குத் தகுதியான வடிவுபடைத்தவ னென்கிறது* **அம்பொற்சுடரே!** *என்பது. விலக்ஷணமான பொன்போலே ஸ்ப்ருஹணீயமான ஒளியையுடையவனே! என்றபடி. வடிவின் புகரைக்காட்டி என்னை யீடுபடுத்திக்கொண்டவனே என்றவாறு.* **செங்கட்கருமுகிலே!**—*வாத்ஸல்யமாகிற அம்ருதத்தை வர்ஷிக்கிற திருக்கண்களையுடையவனே! என்றபடி.*

எரியேபவளக்குன்றே!—*எரியென்று கேட்டை நக்ஷத்ரத்திற்கு வாசகமாய் நக்ஷத்ர ஸாமாந்யத்தைச் சொல்லி நிற்கும். நக்ஷத்ரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கிற*

பவளக்குன்று போலே [பவழமயமான மலைபோலே] விலக்ஷணமான வடிவு படைத்தவனே ! என்கை. — (7)

*களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்**
*வளைவாய்நேமிப்படையாய் ! குடந்தைக்கிடந்தமாமாயா !**
*தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது**
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. (8)

வளை வாய் நேமி படையாய்	வளைந்த வாயையுடைய திருவாழியை ஆயுதமாக வுடையவனே !
குடந்தை கிடந்த	திருக்குடந்தையிலே சயனித்தருள்கின்ற
மா மாயா	மஹாச்சர்ய ரூபனே !
துன்பம் களை வாய்	எனது துன்பங்களை நீ களைந்தாலும் சரி ;
களையாது ஒழி வாய்	களையாவிட்டாலும் சரி ;
களைகண் மற்று இலேன்	வேறு சரணமுடையேனல்லேன் ;
உடலம் தளரா	உடல் தளர்ந்து
எனது ஆவி	என் உயிரானது
சரிந்து போம் போது	நிலைகுலைந்து உத்க்ரமண மடையும்போது
இளையாது	மெலியாமல்
உன தாள்	உன் திருவடிகளையே
ஒருங்க பிடித்து போத	ஒரு மிக்கப் பிடித்துப் போகும்படி
நீயே இசை	நீயே திருவுள்ளம் பற்றவேணும்.

* * *—ப்ரபந்நர்கட்கு ஆகிஞ்சந்யம், அநந்யகதித்வம் என்ற இரண்டும் குலையாதிருக்க வேணும். உபாயாந்தரங்களில் அந்வயலேசமும் அற்றிருக்கை ஆகிஞ்சந்யமெனப்படும். எம்பெருமான் பக்கலில் முகம்பெறாதொழியினும் பிறர்மனைதேடியோடப் பாராதே. "ரக்ஷித்தபோதோடு ரக்ஷியாத போதோடு வாசியற இவ்விடமொழிய வேறுபுகலில்லை" என்கிற திண்ணிய அத்யவஸாயத்துடனிருக்கை அநந்யகதித்வமெனப்படும் : அது இப்பாட்டின் முதலடியில் தெளிவாகிறது. எனக்கு உன்னுடைய அநுபவம் கிடையாமற் போனாலும் உன் திருவடியே தஞ்சமென்று பிறந்த விச்வாஸம் குலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார். ஒருங்க—நிரந்தரமாக என்றபடி.(8)

இசைவித்தென்னையுன்தாளிணைக்கீழ் இருத்துமம்மானே !
*அசைவிலமரர்தலைவர்தலைவா ! ஆதிப்பெருமூர்த்தி !**
*திசைவில்வீசும்செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை**
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் ! காணவாராயே. (9)

என்னை	நெடுநாள் விமுகனாயிருந்த வென்னை
இசைவித்து	அடிமைக்கு இசையும்படி செய்து
உன் தாள் இணை கீழ்	உனது உபய பாதங்களின் கீழே
இருத்தும் அம்மானே	தங்கும்படி செய்தருளின ஸ்வாமியே
அசைவு இல் அமரர் தலைவர்	நித்யஸூரிகளுக்குள் தலைவரான அநந்த கருட விஷ்வக்ஸேனர்களுக்கும்
தலைவா	முதல்வனே !
ஆதி பெரு மூர்த்தி	ஸகல ஜகத்காரண பூதமான திவ்ய விக்ரஹத்தை யுடையவனே !
திசை வில் வீசும் செழு மாமணிகள் சேரும்	எங்கும் ஒளி வீசுகின்ற மிகச் சிறந்த ரத்னங்கள் சேருமிடமான
திரு குடந்தை	திருக்குடந்தையிலே
அசைவு இல்	ஓய்வில்லாதபடி [அநவரதம்]
உலகம் பரவ கிடந்தாய்	உலகமெல்லாம் துதிக்கும்படி சயனித்தருள்பவனே !
காண வாராய்	நான் கண்டு அநுபவிக்கும்படி வரவேணும்.

* * *—கண்ணாலே காணலாம்படி வரவேணுமென்கிறார். இதில் முதலடியில் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரம் பொதிந்து கிடக்கிறது.

இசைவித்து என்னை என்கையாலே நெடுநாள் திருவடிஸேவைக்கு இசையாதிருந்த தம்மை எம்பெருமான் தானே வருந்தி யிசைவித்தமை ஸ்பஷ்டமாக விளங்கும். திசைவில்வீசும் செழுமாமணிகள் என்று திருமழிசை யாழ்வார் போல்வாரைச் சொல்லுகிற தென்று ஸம்ப்ரதாயம். திசைகள் தோறும் பரந்த புகழையுடைய மஹாஜ்ஞாதாக்கள் சேருமிடமான திருக்குடந்தையென்கை. (9)

*வாராவருவாய்வருமென்மாயா! மாயாமூர்த்தியாய்!**
*ஆராவமுதாய்அடியேனாவி அகமேதித்திப்பாய்**
தீராவினைகள் தீரவென்னையாண்டாய்! திருக்குடந்தை
யூரா! உனக்காட்பட்டும் அடியேனின்னுமுழல்வேனோ?* (10)

வாரா	திருவுருவத்தோடு வாராமல்	தீரா வினைகள் தீர	தொலையாத பாவங்களும் தொலையும்படியாக
அரு ஆய் வரும்	அருபியாய் உள்ளே வந்து தோன்றுகின்ற	என்னை ஆண்டாய்	அடியேனை ஆண்டருளினவனே!
என் மாயா	என் மாயவனே!	திருக்குடந்தை ஊரா	திருக்குடந்தைப் பதியோனே!
மாயா மூர்த்தியாய்	ஒருகாலும் அழியாத திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவனே!	அடியேன்	அடியேன்
ஆரா அமுது ஆய்	எவ்வளவு அநுபவித்தாலும் த்ருப்திபிறவாத அமிருதமாய்க் கொண்டு	உனக்கு ஆள் பட்டும்	உனக்கு அடிமைப்பட்டும்
அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்	என் உள்ளுக்குள்ளே தித்தித்திருக்குமவனே!	இன்னும் உழல்வேனோ!	இன்னமும் கிலேசப்படுவேனோ!

* * *—திருக்குடந்தையிலே புகவே நம் அபேக்ஷிதங்களெல்லாம் பெறலாமென்று புக்க ஆழ்வார் அங்ஙனம் பெறாமையாலே இன்னம் எத்தனையிடம் தட்டித்திரியக்கடவேனோவென்கிறார்.

நான்காமடியின் முதற்சொல் ஊரா! என்றும் ஊராய்! என்றும் இருவகையிலும் பொருந்தும்; ஊரன் என்பது விளியுருபு ஏற்றால் 'ஊரா' என்றாகும்; ஊரான் என்பது விளியுருபு ஏற்றால் ஊராய் என்றாகும். (10)

*உழலையென்பின்பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான்**
*கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்**
*குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்**
மழலைதீரவல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே. (11)

உழலை என்பின் பேய்ச்சி	உழல்தடி போன்ற எலும்புகளை யுடையளான பூதனையினுடைய	குழலில் மலிய	குழலோசையிற் காட்டிலும் இனிதாக
முலை ஊடு	முலை வழியாக	சொன்ன	அருளிச்செய்த
அவளை உயிரை உண்டான்	அவளது உயிரை முடித்த பெருமானுடைய	ஓர் ஆயிரத்துள்	ஒப்பற்ற ஆயிரத்தினுள்ளே
கழல்கள் அவையே	திருவடிகளையே	இ பத்தும்	இப்பதிகத்தை
சரண் ஆக கொண்ட	சரணமாகப் பற்றின	மழலை தீர	தமது அறியாமை தொலையும்படி
குருகூர் சடகோபன்	ஆழ்வார்	வல்லார்	அதிகரிக்க வல்லவர்கள்
		மான் ஏய் நோக்கியர்க்கு	மான்போன்ற நோக்கை யுடைய திவ்யாப்ஸரஸ்ஸுக்களுக்கு
		காமர்	ஆதரிக்கத்தக்கராவர்.

கோயில் திருவாய்மொழி—உலகமுண்டபெருவாயா

* * *—இப்பதிகம் பழுதறக் கற்கவல்லார் காமிநிகளுக்குக் காமுகர்போலே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு போக்யராவர் என்று பலனுரைத்துத் தலைக்கட்டுகிறார். திருக்குழலோசையிற் காட்டிலும் அதிசயித்ததாம்படி யருளிச்செய்த ஆயிரம் பாசுரத்தில் இப்பத்தையும் ஊற்றத்துடனே சொல்லவல்லார்களை எம்பெருமானும் ஸ்ரீவைஷ்ணவர்களும் மேல்விழுந்து போக்யராகக்கொள்வர்கள் என்றதாயிற்று. ... (11)

ஸ்ரீ:

ஆறும்பத்து—பத்தாந்திருவாய்மொழி—உலகமுண்டபெருவாயா

அவதாரிகை :—திருவேங்கடமலையிலே நித்யஸூரிகளோடு நித்திய ஸம்ஸாரிகளோடு திர்யக்குக்களோடு வாசியற எல்லாரும்வந்து ஒருமிடறாக ஆச்ரயிக்கலாம்படி எம்பெருமான் நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறபடியை யநுஸந்தித்து அத்திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பெரிய பிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து சரணம் புகுகிறார்—இத் திருவாய்மொழியில்.

ஒன்பது பாட்டாலும் சரண்யன்படி சொல்லி, பத்தாம் பாட்டிலே சரணம் புகுகிறார்.

உலகமுண்டபெருவாயா ! உலப்பில் கீர்த்தியம்மானே !*
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாயடியேனாருயிரே !*
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே !*
குலதொல்லடியேனுனபாதம் கூடுமாறுகூறாயே. (1)

உலகம் உண்ட பெருவாயா	(பிரளய காலத்தில்) உலகங்களை யெல்லாம் அமுது செய்த பெருவாயை யுடையவனே !	உலகுக்கு திலதம் ஆய் நின்ற திரு வேங்கடத்து	உலகுக்கெல்லாம் திலகம் போன்றதான திருமலையிலே விளங்குகின்ற
உலப்பு இல் கீர்த்தி அம்மானே	முடிவில்லாத புகழையுடைய பெருமானே !	எம்பெருமானே	அஸ்மத் ஸ்வாமியே !
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி	அப்ராக்ருத தேஜோமயமான திவ்ய விக்ரஹத்தை யுடையவனே !	குலம் தொல் அடியேன்	குல பரம்பரையாக உனக்கு அடிமைப்பட்டிருப்பவனான அடியேன்
நெடியாய்	மிகப் பெரியோனே !	உன பாதம்	உனது திருவடிகளை
அடியேன் ஆர் உயிரே	அடியேனுக்குப் பரிபூர்ண ப்ராண பூதனே !	கூடும் ஆறு	வந்து சேரும்படியை
		கூறாய்	அருளிச் செய்யவேணும்.

* * *—ஸகல ஜகத்தையும் ரக்ஷிக்குமியல்வை யுடையையாய்க் கொண்டு திருமலையிலே நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிற வுன்னை நான் கிட்டி யநுபவிக்கும் விரகு அருளிச்செய்ய வேணுமென்கிறார். உன்னுடைய திருவடியை நான் கிட்டப் பெறாமல் கிலேசிப்பது பிரளயாபத்தோடொக்கும்; இந்த ஆபத்தை நீ போக்கினாலல்லது பிரளயாபத்தைப் போக்கினாயென்கிற புகழ் உனக்கு நிலைநிற்கமாட்டாதென்கிற கருத்துப்பட 'உலகமுண்ட பெருவாயா' என்கிறார். ஆபத்து நேர்ந்த காலத்தில் தளராதபடி ரக்ஷிக்கைக்காகவன்றோ நீ உலகமுண்டது; அந்த ஆபத் ரக்ஷகத்வம் மெய்யானால் என்னையும் ஆபத்தில் நின்று மெடுத்தருளித் திருவடிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டாவோ வென்றவாறு.

உலப்பில் கீர்த்தியம்மானே !—உலப்பாவது முடிவு; முடிவில்லாத புகழுடைமையாவது திருக்குணங்களைத் தனித்தனியாகவும் ஒரு ராசியாகவும் எண்ண முடியாமை.

நித்யாநுஸந்தானவுரை

நிலவுஞ் சுடர் சூழொளிமூர்த்தி—ரக்ஷிக்குமவனல்லனாயினும் குணமுடையவனல்லனாயினும் விடமுடியாத வடிவழகு படைத்தவனென்கிறது.

அடியேன் ஆருயிரே!—வடிவழகையும் திருக்குணங்களையும் காட்டிப் பிரிந்து பிழைக்கவொண்ணாதபடி என்னைப் பண்ணினவனே! என்றவாறு. “திருவேங்கடத்தெம்பெருமானே அடியேனாருயிரே!” என்று கூட்டுவது. திருமலையிலே நின்று என்னுடைய சேஷத்வமுறைமையை யறிவித்து உன்னாலல்லது செல்லாதபடி பண்ணினவனே! என்கை. (1)

கூறாய்நீறாய்நிலனாகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்*
சீறாவெறியும்திருநேமிவலவா தெய்வக்கோமானே!*
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே!*
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணமருளாயே. (2)

கொடு வல் அசுரர் குலம் எல்லாம்	மிகக் கொடிய அசுரர்களின் கூட்டமெல்லாம்	சேறு ஆர் சுனை தாமரை	சேறு நிரம்பிய சுனைகளிலே செந்தாமரை மலர்கள்
கூறு ஆய்	பலபல கண்டங்களாகி	செம் தீ மலரும்	சிவந்த தீப்போன்ற நிறத்தையுடைத்தாய்க் கொண்டு மலரும்படியுள்ள
நீறு ஆய்	சாம்பலாகி		
நிலன் ஆகி	தரைப்பட்டிருக்கச்செய்தேயும்	திருவேங்கடத்தானே	திருமலையிலே எழுந்தருளியிருப்பவனே!
சீறா	பின்னையும் சீறி		
எறியும்	ஜ்வலியா நிற்கிற	ஆறா அன்பின் அடியேன்	அளவுபடாத அன்பையுடையேனான நான்
திருநேமி வலவா	திருவாழியாழ்வானை வலவருகிலே ஏந்தியிருப்பவனே!	உன் அடி சேர் வண்ணம்	உன் திருவடிகளைச் சேரும்படி
தெய்வம் கோமானே	நித்ய ஸூரிநாதனே!	அருளாய்	அருள்புரிய வேணும்.

* * *—விரோதிகளையெல்லாம் கிழங்கெடுக்கவல்ல திவ்யாயுதத்தினால் ஒளி பெற்றிருக்கிற நீ எனது விரோதிகளையும் போக்கி, நான் உன் திருவடிகளைச் சேரும்படி க்ருபை பண்ணவேணுமென்கிறார். “கொடுவல்லசுரர் குலமெல்லாம் கூறாய் நீறாய் நிலனாகி” என்று அந்வயிப்பது. சத்ருக்களை முதலில் இருதுண்டமாக்கிப் பிறகு நீறாக்கிப் பின்பு அதுவுங்காணவொண்ணாதபடி வெறுந்தரையாக்குமென்று திருவாழியாழ்வானுடைய விக்கிரமம் சொல்லுகிறது. மூலத்தில் ஆகி என்றிருந்தாலும் ‘ஆக’ என்று எச்சத்திரிபாகக் கொள்ளலாம். கூறாய் நீறாய் நிலனாம்படியாக வென்றபடி. ‘ஆக்கி’ என்று பிறவினையாகவுங் கொள்ளலாம். ‘சீறா’ என்பது செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்; சீறியென்றபடி. வலவா—வல்லவன் என்ற சொல் வலவன் என்று தொகுத்தலாய் விளியுருபு ஏற்றதாகக் கொண்டால் ‘திருவாழியை அடக்கியாள வல்லவனே!’ என்று பொருளாம்.

ஆறாவன்பிலடியேன்—ஆழ்வார்க்கு இதுவொரு நிரூபகமான திருநாமம் போலும். “ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்” என்றாப்போலே ஆறாதவன்பையே நிரூபகமாகவுடைய அடியேன் என்கிறார். நீ திருமலையிலே நிற்கிற நிலைக்குப் பயன்பெற வேணும்; எனது அன்புக்கு இரையிடவேணும் என்கிறாராயிற்று. ... (2)

வண்ணமருள்கொளணிமேகவண்ணா மாயவம்மானே!*
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே இமையோரதிபதியே!*
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே!*
அண்ணலேயன்னடிசேர அடியேற்காவாவென்னாயே. (3)

வண்ணம் அருள்கொள்	அருளே வடிவெடுத்த வண்ணமாய்	மணி பொன் முத்து	மணிகளையும் பொன்களையும் முத்துக்களையும்
அணி மேகம் வண்ணா	அழகிய மேகம் போன்ற நிறத்தையுடையவனே!	அலைக்கும்	கொழிக்குமிடமான
மாயம் அம் மானே	ஆச்சரிய குணங்களையுடைய ஸ்வாமியே!	திரு வேங்கடத் தானே	திருமலையிலே விளங்குபவனே!
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே	நெஞ்சுக்குள்ளே புகுந்து ரஸிக்கும் அமிருதமானவனே!	அண்ணலே	ஸ்வாமியே!
இமையோர் அதிபதியே	தேவாதி தேவனே!	உன் அடி சேர	உன் திருவடிகளில் வந்து சேரும்படி
தென் நல் அருவி	தெளிந்தழகிய அருவிகள்	அடியேற்கு	அடியேன் விஷயத்திலே
		ஆ ஆ என்னாய்	ஐயோவென்றிரங்கியருளவேணும்.

* * *—கீழ்ப்பாட்டில் 'உன்னடிசேர் வண்ணமருளாய்' என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் கேட்டபோதே நாம் அருளமுடியுமோ? அதற்கு ஸமயமில்லையோ?' என்ன; இதர விஷயங்களில் போகாதபடியான ஜ்ஞான லாபத்தைப் பண்ணித்தந்தவுனக்கு ப்ராப்தி பண்ணித் தருகை அரிய பெரிய காரியமோ வென்கிறார். **வண்ணமருள்கொள் அணி மேகவண்ணா!**—அருள் வண்ணங்கொள் அணி மேகவண்ணா என்று அந்வயிக்கலாம். அருள் வண்ணங்கொள்—அருள் தானே வடிவெடுத்த என்றபடி. அருளே திருவேங்கடமுடையானாக மூர்த்திகரித்த தென்றவாறு. அருள் என்னாமல் 'மருள்' என்றும் சொல் பிரிக்கலாம். **வண்ணம்**—வடிவானது, **மருள்கொள்**—கண்டார் நெஞ்சை இருளப் பண்ணக் கடவதாயிருக்கிற என்றபடி. **மாயவம்மானே!**—வெறும் வடிவழகு மாத்திரமேயல்லாமல் ஆச்சரியமான குண சேஷ்டிதங்களாலும் பெரியனானவனே!. (3)

ஆவாவென்னாதுலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்*
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா திருமாமகள்கேள்வா
தேவா * சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே! *
பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறுபுணராயே. (4)

ஆ ஆ என்னாது	இரக்கமில்லாமல்	தேவா	தேவனே!
உலகத்தை அலைக்கும்	உலகத்தவர்களை ஹிம்ஸிப்பவர்களான	சுரர்கள் முனி கணங்கள் விரும்பும்	தேவர்களும் முனிவர்களும் திரள் திரளாக ஆதரிக்கும்படியான
அசுரர்	ஆஸுரப்ரக்ருதிகளினுடைய	திரு வேங்கடத் தானே	திருமலையில் எழுந்தருளியிருப்பவனே!
வாழ் நாள் மேல்	ஆயுளை முடிப்பதற்காக	பூ ஆர் கழல்கள்	(உனது) புஷ்பங்கள் நிறைந்த திருவடிகளை
தீ வாய் வாளி	நெருப்பை உமிழ்கிற அம்புகளை	அரு வினையேன்	மஹாபாபியான நான்
மழை பொழிந்த சிலையா	மழைபோலே வர்ஷித்தசார்ங்க வில்லையுடையவனே!	பொருந்தும் ஆறு	கிட்டும்படி
திரு மா மகள் கேள்வா	திருமகள் கொழுநனே!	புணராய்	கற்பித்தருளவேணும்.

* * *—பிரானே! உன்னைப் பெறுகைக்கு உடலாக நீ சாஸ்த்ரங்களில் காட்டிக்கொடுத்த ஸாதனங்களொன்றும் எனக்கு உபயோகப்படவில்லை; ஆன பின்பு எனக்கென்று தனியேயொரு ஸாதனம் கண்டு தரவேணுமென்கிறார்.

ட பிரமன் சிவனிந்திரன் முதலான தேவர்களும் ஸநக ஸநந்தநாதி மஹர்ஷிகளும் இதுவே நமக்கு ப்ராப்யஸ்தானமென்று விரும்பி யிறைஞ்சியேத்துமிடமான திருமலைக்கு இறைவனே! கிட்டியநுபவிக்கப்பெறாத பாபத்தைப்பண்ணின நான் உன்னுடைய பூவார்கழல்களைப் பொருந்தும்படியான ஒரு உபாயத்தைக் கல்பித்தருள

வேணுமென்றாராயிற்று. பூ ஆர் கழல்—புஷ்பங்கள் நிரம்பிய திருவடி; அல்லது பூப்போன்ற திருவடி. திருவேங்கடமுடையானுடைய திடவடிக்குப் பூவார்கழல்களென்றும், அழகிய மணவாளனுடைய திருவடிக்குத் திருப்பொலிந்த சேவடியென்றும், தேவப்பெருமாளுடைய திருவடிக்குத் துயரறுசுடரடி யென்றும் ஸம்பிரதாயத் திருநாமமென வழங்குவர் பெரியோர். (4)

புணராநின்றமரமேழ் அன்றெய்தவொருவில்வலவாவோ !
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ !*
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே !*
திணரார்சார்ங்கத்துனபாதம் சேர்வதடியேனெந்நாளே !* (5)

அன்று	ராமாவதாரத்திலே
புணரா நின்ற மரம் ஏழ்	ஒன்றோடொன்று பிணைந்திருந்த ஸப்த ஸால வ்ருக்ஷங்களை
எய்த	துளைபடுத்தின
ஒரு வில் வலவா ஓ	ஓ தனிவீரனே !
புணர் ஏய் நின்ற மரம் இரண்டின் நடுவே	சேர்த்தி பொருந்தி நின்ற இரட்டை மருத மரங்களினிடையே
போன	தவழ்ந்து சென்ற
முதல்வா ஓ	ஓ மூலபுருஷனே !
திணர் ஆர் மேகம் என	திண்மை மிக்க மேகங்களென்னும்படி
களிறு சேரும்	யானைகள் சேருமிடமான
திரு வேங்கடத்தானே	திருமலையிலெழுந்தருளி யிருப்பவனே!
திணர் ஆர் சார்ங்கத்து	திண்மைமிக்க ஸ்ரீ சார்ங்க வில்லையுடைய
உன பாதம்	உனது திருவடிகளை
அடியேன் சேர்வது எந்நாள்	அடியேன் அணுகப் பெறுவது என்றைக்கோ?

* * *—ஆழ்வீர் ! நீர் இங்ஙனே கிடந்து துடிப்பதேன் ? எப்படியும் உம்முடைய விருப்பம் செய்வதாகவே நினைத்திருக்கிறோமென்று திருவேங்கடமுடையான் திருவுளளமாக, அது என்றைக்குச் செய்வதாகத் திருவுள்ளம்? ஒரு நாளிட்டுத் தரலாகாதோ வென்கிறார்.

[திணரார்மேகமித்யாதி.] களிறெனமேகஞ்சேரும், மேகமெனக் களிறுசேரும் என்று இரண்டுபடியும் அந்வயிக்கப் பொருந்தும். யானைபோன்ற மேகங்களும், மேகம் போன்ற யானைகளும் திருமலையிலே வர்த்திப்பது இயல்பு. *தென்னானாய் வடவானாய் குடபாலானாய் குணபாலமதயானாய்* என்றும் *சோலை மழகளிறே* என்றும் யானை தானாகச் சொல்லலாம்படியும் *ஸ்ரீ வேங்கடாத்ரி சிகராலயகாளமேகம்* என்று மேகந் தானாகச்சொல்லலாம் படியும் எம்பெருமானிருக்கிற இருப்புக்கு ஸ்மாரகமானபடி.

திணரார் சார்ங்கத்து உன = உன்கையில் வில் இருக்க நான் இழக்க வேண்டுவதில்லை; இழக்க மாட்டேன்; இனி உன்னைப் பெறும் நாளைச் சொல்லியருளினால் போதுமென்கிறார். (5)

எந்நாளேநாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று
எந்நாளும்நின்றிமையோர்களேத்தி இறைஞ்சியினமினமாய்*
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே!*
மெய்ந்நானெய்தியெந்நாள் உன்னடிக்களடியேன்மேவுவதே.* (6)

மண் அளந்த தாமரைகள் இணை	உலகமளந்த உபயபாதங்களை
நாம் காண்பதற்கு எந்நாள் என்று	நாம் காண்பதற்குரிய நாள் எந்த நாளென்று
இமையோர்கள்	நித்யஸூரிகள்
எந்நாளும் நின்று ஏத்தி	நிரந்தரமாக நின்று துதித்து
இறைஞ்சி	வணங்கி
இனம் இனம் ஆய்	திரள் திரளாக

கோயில் திருவாய்மொழி—உலகமுண்டபெருவாயா

மெய்நாமனத்தால்-த்ரிகரணங்களாலும்	
வழிபாடு செய்யும்- ஆராதனைசெய்யுமிடமான	
திரு வேங்கடத்தானே	திருமலையில் எழுந்தருளியிருப்பவனே!
அடியேன் நான்	அடியேனாகிய நான்

மெய் எய்தி	(கனவுபோலன்றிக்கே) மெய்யாகவே யடைந்து
உன் அடிக்கள் மேவுவது	உன் திருவடிகளிலே பொருந்துவது
எந்நாள்	என்றைக்கோ!

* * *—கீழ்ப்பாட்டில் "உனபாதம் சேர்வதடியே னெந்நாளே" என்றதற்கு உன் திருவடிகளை நான் சேரப்பெறும் நாள்கூட ஒன்று உண்டா? அது எது? என்று ஸந்தேஹித்துச் சொல்வதாகவும் பொருளாகக்கூடுமே; எம்பெருமான் 'ஆழ்வீர்' எந்நாளே யென்று நீர் ஸந்தேஹிப்பதென்? அது ஒரு தேச விசேஷத்திலே நியதமா யிருக்குமே' என்றருளிச் செய்ய, அங்குள்ளாரும் இங்கே வந்தன்றோ அநுபவிக்கிறது, அப்படியிருக்க எனக்குமாத்திரம் தேசவிசேஷமா? என்கிறார். இப்பாட்டின் இரண்டாமடியில் **இமையோர்கள்** என்றது நித்யஸூரிகளைச் சொல்லிற்றாகக் கொண்டால் இங்ஙனே ஸங்கதியாகக் கடவது. இனி, ஸ்வர்க்கலோகத்திலுள்ள தேவர்களைச் சொல்லிற்றாகக்கொண்டால், ப்ரயோஜநாந்தர பரர்களானவர்களுங்கூட அநந்ய ப்ரயோஜநரைப்போலே வந்து ஆச்ரயிக்க நிற்கிற விடத்தே நான் இழந்து போவதே! என்கிறாராகக் கொள்க. (6)

> அடியேன்மேவியமர்கின்றவமுதே இமையோரதிபதியே!*
> கொடியாவடுபுள்ளுடையானே கோலக்கனிவாய்ப்பெருமானே!*
> செடியார்வினைகள்தீர்மருந்தே திருவேங்கடத்தெம்பெருமானே!*
> நொடியார்பொழுதுமுனபாதம் காணநோலாதாற்றேனே. (7)

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே	அடியேன் கிட்டி யநுபவிக்கும் படியான அமிருதமே!
இமையோர் அதிபதியே	தேவாதி தேவனே!
அடு புள் கொடி ஆ உடையானே	(பகைவரைப்) பொசுக்க வல்ல கருடனைக் கொடியாகவுடையவனே!
கோலம் கனி வாய் பெருமானே	அழகிய கனிபோன்ற அதரத்தையுடைய பெருமானே!
செடி ஆர் வினைகள் தீர்மருந்தே	செடிபோலே செழித்த பாபங்களைத் தீர்க்கும் மருந்தானவனே!

திருவேங்கடத்து எம்பெருமானே!-;

உன பாதம் காண	உனது திருவடிகளைக் காண்கைக்கு
நோலாது	நான் ஒரு நோன்பும் அனுஷ்டியாமலிருந்தும் (நோற்றவர்கள் பலன் தாழ்த்தால் படுமாபோலே)
நொடி ஆர் பொழுதும்	ஒரு க்ஷண மாத்திரமும்
ஆற்றேன்	தரித்திருக்கமாட்டாமல் துடிக்கின்றேன்.

* * *—பேறுதப்பாதென்று துணிந்திருத்தல் ஸ்வரூபமாயினும் அத்தலையில் போக்யதை நெஞ்சுக்கு விஷயமாக ஆக, தரித்திருக்க முடியாதபடி பதறவேண்டியிருக்குமே; அந்தப் பதற்றத்தை யருளிச்செய்கிறாரிப்பாட்டில். **அடியேன் மேவியமர்கின்ற அமுதே!**—எம்பெருமானுக்கு இவர் சாத்தும் ஒரு திருநாமம்போலே யிராநின்றது இது. தேவஜாதிகள் உப்புச்சாற்றைப்பருகிக் களிப்பர்கள்; அதுவோ இது? இங்குள்ள மற்றையோர்கள் அநுபவிக்கும் போலேயா நான் அநுபவிப்பது? அடியேனுடைய அநுபவம் அஸாதாரணமன்றோ வென்கிறார். உடனே **இமையோரதிபதியே!** என்றது—அங்குத் திருநாட்டிலே நித்ய ஸூரிகள் உன்னை எப்படியநுபவிக்கிறார்களோ அப்படி இங்கு அடியேன் அநுபவிப்பவனல்லனோ? என்று காட்டினபடி.

திருவாராதனத்தில் பெருமாளுக்கு அமுது செய்தருளப் பண்ணும்போது *அடியேன் மேவி யமர்கின்றவமுதே* யென்கிறவிப்பாசுரத்தை யநுஸந்திப்பதென்று **பட்டர் நியமனம்.** (7)

நோலாதாற்றேனுனபாதம் காணவென்று நுண்ணுணர்வின்
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும்
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே !
மாலாய்மயக்கியடியேன்பால் வந்தாய்போலேவாராயே. (8)

நுண் உணர் வின்	ஸர்வஜ்ஞனாகையாலே நுட்பமான உணர்வையுடையனான		மாட்டுகின்றிலேன்" என்று சொல்லிக்கொண்டு
நீலார் கண்டத்து அம்மானும்	சிவபிரானும்	சேல் ஏய் கண்ணார் பலர் சூழ	கயற் கண்ணிகளான தங்கள் மனைவிமார்கள் பலரோடுங் கூடி வந்து
நிறை நான்முகனும்	(ஞானசக்திகளால்) நிறைந்த பிரமனும்	விரும்பும்	விரும்பிப் பணியுமிடமான
இந்திரனும்	தேவேந்திரனும்	திரு வேங்கடத் தானே	திருமலையில் வாழ்பவனே !
உன பாதம் காணநோலாது ஆற்றேன் என்று	"உன் திருவடிகளைக் காண்கைக்கு ஸாதநாநுஷ்டானம் பண்ணாதேயிருந்து ஆற்ற	மால்ஆய்மயக்கி வந்தாய்போலே அடியேன் பால் வாராய்	மயக்கிக் கொண்டு கண்ணனாக வந்தாப் போலே அடியேன் திறத்தும் வந்து தோற்றவேணும்.

***—*ஸாதநாநுஷ்டானம் என் பக்கலில் ஒன்றுமில்லையென்று சொல்லிக் கொண்டே ஆசைப்பட்டு நாக்கு நீட்டினால் கிடைக்குமோ! என்று எம்பெருமான் திருவுள்ளமாக, ஜ்ஞாந சக்திகளால் குறையற்றவர்களான நீலகண்ட சதுர்முக ஸஹஸ்ராக்ஷ ப்ரப்ருதிகளுங்கூடத் தங்களுடைய உபாய தாரித்ரியத்தைச் சொல்லிக் கொண்டன்றோ வந்து உன்னைக் காணப் பெறுகிறது என்கிறார். "நோலாதாற்றேனுன பாதங்காண" என்பது நீலார் கண்டத்தம்மானும் நிறைநான்முகனு மிந்திரனும் சொல்லும் பாசுரமாயிற்று. 'பிரானே! உன் திருவடிகளைக் காண்கைக்கு ஸாதநாநுஷ்டானம் பண்ணாதே யிருந்து வைத்து உன்னையொழிய ஆற்ற மாட்டேன்' என்பதாம் அந்தத் தேவர்களின் வார்த்தை.*

சேலேய்கண்ணார் பலர்சூழ விரும்பும்—*கயல்போன்ற கண்களையுடையவர்களென்று ஸ்த்ரீகளைச் சொல்லுகிறது; ப்ரக்ருதத்தில் அவரவர்களுடைய பத்நிகளைச் சொல்லிற்றாகிறது; தேவர்கள் வந்து சரணம் புகும்போது தாங்கள் தனித்து வருகையன்றிக்கே மணாட்டிமார்களோடு கூடிவருவர்களாம்.*

மாலாய் மயக்கி அடியேன்பால் வந்தாய்போலே வாராய்—*மாலாய் மயக்கி வந்தாப் போலே அடியேன்பால் வாராய் என்று அந்வயிப்பது. மால் என்று கண்ணபிரானைச் சொல்லுகிறது. கண்ணபிரானாய்ப் பிறந்து வியாமோஹ சேஷ்டிதங்களைச் செய்து வஸுதேவாதிகள் முன்னே வந்து நின்றாப்போலே என்முன்னே வந்து நிற்கவேணுமென்று பிரார்த்தித்தபடி.* (8)

*வந்தாய்போலேவாராதாய் வாராதாய் போல்வருவானே *
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே!
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே !
அந்தோவடியேனுனபாதம் அகலகில்லேனிறையுமே. (9)

வந்தாய் போலே வாராதாய்	கைக்கு எட்டினாற் போலே யிருந்து எட்டாதவனே!	செம் கனி வாய்	செங்கனி போன்ற திருப்பவளத்தையும்
வாராதாய்போல் வருவானே	எட்டாதவன் போலிருந்து கிட்டி நிற்பவனே!	நால் தோள்	நான்கு திருத்தோள்களையுமுடைய
செம் தாமரை கண்	செந்தாமரை போன்ற திருக் கண்களையும்	அமுதே	பரம போக்யனே !
		எனது உயிரே	எனக்கு உயிரானவனே !

கோயில் திருவாய்மொழி—உலகமுண்டபெருவாயா

சிந்தா மணிகள் பகர்	சிறந்த ரத்னங்களின் ஒளியானது	அந்தோ	ஐயோ !
அல்லை பகல் செய்	இரவையும் பகலாக்கு மிடமான	உன பாதம்	உனது திருவடிகளை
திரு வேங்கடத்தானே	திருமலையில் வாழ்பவனே !	அடியேன்	அடிமைச் சுவடறிந்த நான்
		இறையும்அகலகில்லேன்	ஒரு க்ஷணகாலமும் பிரிந்திருக்க வல்லேனல்லேன்

* * *—தம்முடைய விச்லேஷ வ்யஸநத்தைக் கனக்க அருளிச் செய்கிறார். **வந்தாய் போலே வாராதாய்**—மாநஸாநுபவம் கரைபுரண்டு போகும்போது நோக்கினால் பாஹ்ய ஸம்ச்லேஷமும் பெற்றோம் என்றெண்ணி த்ருப்தி பிறக்கும்படியாயிருக்குமே அத்தை மெய்யென்றெண்ணி அணைக்கைக்குக் கைநீட்டினால் கைக்கு எட்டாதபடியன்றோ இருப்பது; அதைச் சொல்லுகிறது இங்கு. **வாராதாய் போல் வருவானே!**—வந்து தோற்றுகைக்கு ப்ரஸக்தியில்லையென்று நிச்சயித்து ஆசையற்றுக் கிடக்குங்கால், கேட்பாரற்ற ஸ்வாதந்த்ரியத்தாலும் அப்ரதிஹத ஸங்கல்பத்தாலும் ஆகஸ்மிகமாக வந்து நிற்பதுமுண்டே பகவானிடத்தில்; அதைச் சொல்லுகிறது.

[**சிந்தாமணிகள் இத்யாதி**] நெஞ்சால் நினைத்தவாறே எதையும் அளிக்கவல்ல ரத்னத்திற்குச் சிந்தாமணி யென்று பெயர். அதுபோற் சிறந்த ரத்னங்களை இங்குச் சிந்தாமணிகளென்கிறது. திருமலையிலுள்ள ரத்னங்களைச் சொன்னதாகவுமாம்; திருவேங்கடமுடையானுடைய திருமேனியிலணிந்துள்ள ரத்னங்களைச் சொன்னதாகவுமாம். அவற்றினுடைய பகர்—ஒளியானது, அல்லைப்பகல் செய்யாநின்றதாம்; எப்போதும் பகலாகவே காண்கிறதாயிற்று. (9)

அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா !*
நிகரில்புகழாயுலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே !*
நிகரிலமரர் முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே;*
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே. (10)

அலர் மேல் மங்கை	பூவில் வாழ்மகளான பெரிய பிராட்டியார்	நிகர் இல்	ஒப்பற்றவர்களான
இறையும்அகலகில்லேன் என்று	ஒரு க்ஷணமும் பிரிந்திருக்க மாட்டேனென்று சொல்லிக் கொண்டு	அமரர்	தேவர்களும்
		முனி கணங்கள்	மஹர்ஷி ஸமூஹங்களும்
		விரும்பும்	விரும்பிவந்து பணியுமிடமான
உறை மார்பா	நித்யவாஸம் பண்ணப் பெற்ற திருமார்பை யுடையவனே !	திரு வேங்கடத்தானே	திருமலையில் வாழ்பவனே.
நிகர் இல் புகழாய்	ஒப்பற்றதான புகழை யுடையவனே !	புகல் ஒன்று இல்லா அடியேன்	அநந்யகதியான நான்
உலகம் மூன்று உடையாய்	சேதநாசேதநங்களுக் கெல்லாம் ஸ்வாமியே !	உன் அடி கீழ்	உனது திருவடிவாரத்திலே
என்னை ஆள்வானே	நீசனான என்னையு மடிமை கொள்பவனே!	அமர்ந்து புகுந்தேன்	மிகப் பொருத்தமாக அந்வயித்து விட்டேன்.

* * *—[**அகலகில்லேன்**] கீழ் ஒன்பது பாட்டாலும் சரண்யனான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தையும் தம்முடைய ஆற்றாமையையும் சொன்னார்; இப்பாட்டில், தம்முடைய அபேக்ஷிதம் சடக்கென ஸித்திக்கைக்காகப் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டு தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும் அநந்யகதித்வத்தையும் தெரிவித்துக்கொண்டு திருவேங்கட முடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

எம்பெருமானுடைய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுநின்ற பெரிய பிராட்டியார் ‘இறையும் அகலகில்லேன், இறையும் அகலகில்லேன்’ [ஒரு கணப்பொழுதும் பிரிந்திருக்கமாட்டேன்] என்று இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறாளாம். ஒரு நிமிஷமும் பிரியாதே நித்ய ஸம்ச்லேஷத்துடனிருக்கும்போது அகலுகைக்கு ப்ரஸக்திதானுமில்லையாயிருக்க இந்த வார்த்தை எதற்காகச் சொல்லவேணுமென்னில், போக்யதையின் கனத்தைப் பார்த்தவாறே ஐயோ! அகல நேர்ந்துவிடுமோ என்னவோவென்று அதிசங்கை யுண்டாகக்கூடியது; அவ்வதிசங்கை சொல்லுவிக்கச் சொல்லுகிறபடியென்ப.

உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்—ஆக இவ்வளவாலும் த்வயத்தில் பூர்வ கண்டம் அநுஸந்திக்கப்பட்டதாயிற்று. ப்ரபத்தியானது வாசிகமாகவும் காயிகமாகவும் மாநஸிகமாகவும் உண்டு. ‘என்னை நீ ரக்ஷிக்கவேண்டும்’ என்று வாயினால் பிரார்த்திக்கை வாசிகமாகும். *அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ* என்கிறபடியே பகவத்ப்ரஸாத ஹேதுபூதமான அஞ்ஜலியை ப்ரயோகித்தல், காகாசுரன் முதலானவரைப்போலே ரக்ஷகவஸ்து இருந்தவிடத்தே வருதல் செய்கை காயிகமாகும். திண்ணிய அத்யவஸாயங் கொள்ளுதல் மாநஸிகமாகும். *ஜ்ஞாநாந் மோக்ஷ மென்று சொல்லுகையாலே மாநஸிகமே சிறந்ததாகும். அதுவே இங்கு உற்றது. அஸ்மதாதிகளுடைய உஜ்ஜீவநார்த்தமாக ஆழ்வார் பாசுரமிட்டு அருளிச்செய்த வித்தனை; இதனால் ஆழ்வாருடைய ப்ரபத்தி வாசிகமென்று கொள்ளக் கடவதன்று. ... (10)

அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர்! வாழ்மினென்றென்றருள் கொடுக்கும் *
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன் *
முடிப்பான்சொன்னவாயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும் *
பிடித்தார்பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (11)

அடியீர்	அடியவர்களே!	முடிப்பான் சொன்ன	ஸம்ஸாரத்தை முடிப்பதற்காக அருளிச்செய்த
அடி கீழ் அமர்ந்துபுகுந்து வாழ்மின் என்று என்று	நம்முடைய திருவடிகளின் கீழே புகுந்திருந்து உஜ்ஜீவித்துப் போருங்கள்’ என்று அநவரதமும் காட்டிக் கொடுத்து.	ஆயிரத்து	ஆயிரத்தினுள்ளும்
		திரு வேங்கடத்துக்கு இவை பத்தும்	திருவேங்கடமலை விஷயமான இத்திருவாய்மொழியை
அருள் கொடுக்கும்	க்ருபை பண்ணுகிறவனும்	பிடித்தார் பிடித்தார்	ஸாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் அவலம்பித்தவர்கள்
படி கேழ் இல்லா பெருமானை	ஒப்புயர்வற்ற பெருமை வாய்ந்தவனுமான ஸர்வேச்வரனைக் குறித்து	பெரிய வானுள்	பரமாகாச மென்கிற பரமபதத்திலே
பழனம் குருகூர் சடகோபன்	நீர்நிலங்களையுடைய திருநகரிக்குத்தலைவரான ஆழ்வார்	வீற்றிருந்து நிலாவுவர்	நிலை நின்று வீற்றிருப்பர்கள்.

* * *—இத்திருவாய்மொழியைப் பற்றினவர்கள் திருநாட்டிலே நித்யாநுபவம் பண்ணப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார். எம்பெருமானுடைய திருக்கையானது திருவடியை நோக்குமாபோலே யிருப்பதுண்டே; அதற்கொரு கருத்துக் காணலாம்; “அடியவர்களே! உங்களுக்கு இந்தத் திருவடியே தஞ்சம்; இதன் கீழே அமர்ந்து புகுந்து வாழ்ந்து போங்கள்” என்று தெரிவிப்பதாகக் கருத்துக் கொள்ளலாம்; அதனை இங்கு முதலடியில் காட்டியருளுகிறார். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *கிரீடம் ஸ்ரீரங்கே சயிது:* என்கிற ச்லோகத்தில், நிஹீநாநாம் முக்யம் சரணமிதி பாஹுஸ்தலமிதம் ஸ்புடம் ப்ரூதே பாதாம்புஜயுகளம் ஆஜாநு நிஹித:* என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம்.

முடிப்பான் சொன்னவாயிரம்—*தம்முடைய மநோரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அருளிச்செய்த ஆயிரமென்று உரைத்தார்கள் சில ஆசாரியர்கள்; "பல நீ காட்டிப் படுப்பாயோ என்கிற ஸம்ஸார விரோதத்தை முடிக்கையிலே திருவுள்ளத்தாலே அருளிச்செய்தவாயிரம்" என்பர் நம்பிள்ளை.*

திருவேங்கடத்துக்கு இவைபத்தும்—**வான் திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்* என்ற திருவாய்மொழித் தனியன்படியே ஆயிரமும் ஸ்ரீரங்கநாதன் விஷயமாக ஸங்கல்பிக்கப்பட்டு அதில் இத்திருவாய்மொழி திருவேங்கடத்துக்குப் பகுத்துக் கொடுக்கப்பட்டதென்பது நன்கு அறியக்கிடக்கின்றது.*

'பிடித்தார் பிடித்தார்' என்ற இரட்டிப்புக்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர்; (1) சொல்லைப் பற்றினவர்கள். (2) பொருளைப் பற்றினவர்கள் என்று ஒரு நிர்வாஹம். பிடித்தாரைப் பிடித்தவர்கள் என்றபடியாய் ஸம்பந்த ஸம்பந்த ஸம்பந்திகளைச் சொன்னதாக மற்றொரு நிர்வாஹம். (11)

ஸ்ரீ:

ஏழாம்பத்து—இரண்டாந் திருவாய்மொழி—கங்குலும் பகலும்

அவதாரிகை:—*நம்மாழ்வார் தாமான தன்மையிலேயிருந்து பேசுவதுதவிர, நாயகி பாசுரமாகவும் தோழிபாசுரமாகவும் தாய்பாசுரமாகவும் பேசுவதுமுண்டு சில திருவாய்மொழிகள். தாய்பாசுரமாகச் சொல்லுகிறதாயிற்று இத்திருவாய்மொழி. ஸ்ரீ ரங்கநாதன் திறத்திலே அதிமாத்ரமாக ஈடுபாடுகொண்ட ஆழ்வார் தமது நிலைமையைத் தம் வாயாலே பேசமாட்டாமல் தாய்வாயாலே பேசுகிறாராயிற்று.*

*கங்குலும்பகலும் கண்டுயிலறியாள் கண்ணநீர்கைகளாலிறைக்கும் **
*சங்குசக்கரங்களென்றுகைகூப்பும் தாமரைக்கண்ணென்றேதளரும்**
*எங்ஙனே தரிக்கேனுன்னைவிட்டென்னும் இருநிலம்கைதுழாவிருக்கும் **
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்செய்கின்றாயே. (1)

செம் கயல்பாய் நீர் திரு அரங்கத்தாய்	அழகிய மீன்கள் துள்ளி விளையாடுமிடமான திருக்காவேரி சூழ்ந்த கோயிலில் சயனித்தருள் பவனே!
	(இப் பெண்பிள்ளையானவள்)
கங்குலும் பகலும்	இரவும் பகலும்
கண் துயில் அறியாள்	கண்ணுறங்கப் பெறுகின்றிலள்;
கண்ண நீர் கைகளால்இறைக்கும்	கண்ணீரைக் கைகளாலே இறைக்க வேண்டும்படி தாரை தாரையாய்ப் பெருக விடா நின்றாள்;
சங்கு சக்கரங்கள்	திருவாழி திருச்சங்குகள் இதோ ஸேவை ஸாதிக்கின்றன.
என்று கை கூப்பும்	என்று சொல்லி அஞ்ஜலி பண்ணுகின்றாள்:
தாமரை கண் என்றே தளரும்	(என்னைக் கடாக்ஷித்த) தாமரைக் கண்களன்றோ இவை! என்று சொல்லித் தளர்கின்றாள்;
உன்னை விட்டு எங்ஙனே தரிக்கேன் என்னும்	'(பிரானே), உன்னைவிட்டுப் பிரிந்து தரிக்கவும் முடியுமோ?' என்கிறாள்;
இரு நிலம்	விஸ்தீர்ணமான பூதலத்தை
கை துழாவிருக்கும்	கைகளாலே துழாவா நின்றாள்; (ஸ்ரீ ரங்கநாதனே!)
இவள் திறத்து	இப்பெண்பிள்ளை விஷயத்தில்
என் செய்கின்றாய்	ஏது செய்வதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாய்?

* * *—ஸ்ரீரங்கநாதனே! இப் பராங்குசநாயகி உன்னைக் காணவாசைப்பட்டு அது பெருமையாலே கண் துஞ்சாதே கண்ணீரைப் பெருக்கிக்கொண்டிரா நின்றாள்; பாவநாப்ரகர்ஷத்தாலே உன்னை நேரில் ஸேவிக்கப்பெற்றதாகக்கொண்டு சங்குசக்கரங்களை நோக்கிக் கைகூப்புகின்றாள்; 'இவையன்றோ என்னைக் கடாக்ஷித்தருளி இப்பாடுபடுத்தின தாமரைக்கண்கள்' என்று சொல்லி, இப்போது ஸாக்ஷாத்தாகக் காணப்பெறவில்லையே! என்று நொந்து தளர்கின்றாள்; உன்னைப் பிரிந்து தரிக்க முடியவில்லையே! என்கிறாள்; தன்னுடைய ஸந்தாபத்தைப் பொறுக்க மாட்டாமே தரையெல்லாம் கையாலே துழாவா நின்றாள்; திருவரங்கநாதனே! இவள் திறத்து உமது ஸங்கல்பம் எத்தகைத்தோ தெரியவில்லையே! என்று தாய் அலமருகின்ற பாசுரமாயிருக்கிறபடி. (1)

*என்செய்கின்றாயென் தாமரைக்கண்ணாவென்னும் கண்ணீர்மல்கவிருக்கும் **
*என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்**
*முன்செய்தவினையேமுகப்படாயென்னும் முகில்வண்ணாதகுவதோவென்னும் **
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய் என்கொலோமுடிகின்றதிவட்கே. (2)

	(இப்பெண்பிள்ளை யானவள்)
என் தாமரைக் கண்ணா	என்னை யீடுபடுத்திக்கொண்ட செந்தாமரைக் கண்ணனே!
என் செய்கின்றாய் என்னும்	என்னை என் செய்வதாக விருக்கிறாய்? என்று சொல்லுகின்றாள்;
கண் நீர் மல்க இருக்கும்	கண்ணீர் ததும்பநின்று ஸ்தப்தையாயிருக்கின்றாள்;
எறி நீர் திரு அரங்கத்தாய்	அலையெறிகின்ற திருக்காவேரி சூழ்ந்த திருவரங்கத்தில் துயில்பவனே!
என் செய்கேன் என்னும்	(உன்னைப் பெறுதற்கு) என்ன செய்வேன்? என்கிறாள்;
வெவ்வுயிர்த்து உயிர்த்து	வெப்பமாகப் பலகாலும் பெருமூச்சுவிட்டு
உருகும்	கரைகின்றாள்;
முன் செய்த வினையே	முற்பிறவிகளிலே நான் பண்ணிவைத்த கருமமே!
முகப்படாய் என்னும்	என் கண்முன்னே வந்து நில் பார்ப்போம் என்கிறாள்;
முகில் வண்ணா	காளமேகவண்ணனான எம்பெருமானே!
இது தகவோ என்னும்	இதுதானோ உன்னுடைய க்ருபைக்கு லக்ஷணம்! என்கிறாள்;
இவ் உலகம்	இந்த ப்ரபஞ்சங்களை யெல்லாம்
முன் செய்து	முற்காலத்தில் ஸ்ருஷ்டித்து
உண்டு உமிழ்ந்து	(காலவிசேஷங்களிலே) உண்பதும் உமிழ்வதும் செய்து
அளந்தாய்	அளப்பதும் செய்து பல முகமாக ரக்ஷித்தருளும் பெருமானே!
இவட்கு	இங்ஙனே துடிக்கின்ற என் பெண்பிள்ளைக்கு
முடிகின்றது என் கொலோ	(இந்தப்பரிதாபமெல்லாம்) என்னாய் முடியப்போகிறதோ?

* * *—எம்பெருமான் என்னை இப்படி உபேக்ஷிக்கும்படி நான் என்ன பாவம் பண்ணி விட்டேன்? அப்படி நான் செய்த பாவம் ஏதேனுமுண்டாகில் அது என்னெதிரே வந்து நிற்கட்டுமே யென்கிறாளென்பது "முன்செய்தவினையே முகப்படாயென்னும்" என்றதன் கருத்தாம். "தகுவதோ" "தகவு இதோ" என்பன பாடபேதங்கள் (2)

*வட்கிலளிறையும்மணிவண்ணாவென்னும் வானமேநோக்கும்மையாக்கும்**
*உட்குடையசுரருயிரெல்லாமுண்ட ஒருவனேயென்னுமுள்ளுருகும் **
*கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய் காகுத்தாகண்ணனேயென்னும் *,*
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்செய்திட்டாயே. (3)

(இப் பெண்பிள்ளை)

இறையும் வட்கு இலள்	சிறிதும் வெட்கமில்லாதவளாகி
மணிவண்ணா என்னும்	நீலமணிவண்ணனே! என்று கூப்பிடா நின்றாள்!
வானமே நோக்கும்	(யானைக்கு உதவ வந்தாப்போலே நமக்கும் உதவவரக்கூடுமென்று) வானத்தையே நோக்குகின்றாள்;
மையாக்கும்	(எதிர்பார்த்தபடி வந்து தோன்றக்காணாமையினால்) மோஹமடைகின்றாள்;
உட்கு உடை அசுரர்	வலிமையுடையவர்களான அசுரர்களினுடைய
உயிர் எல்லாம் உண்ட	பிராணன்களை யெல்லாம் கவர்ந்த
ஒருவனே என்னும்	அத்விதீயனே! என்கிறாள்;
உள் உருகும்	உள்ளம் நீர்ப்பண்டமாய் உருகப் பெறுகின்றாள்;
கட்கு இலீ	கண்களுக்கு விஷயமாக மாட்டாதவனே!
காகுத்தா கண்ணனே!	ஸ்ரீராம க்ருஷ்ணாவதாரங்கள் செய்து எல்லார் கண்ணுக்கும் விஷயமானவனே!
உன்னை காணும் ஆறு அருளாய் என்னும்	உன்னை நான் கண்ணாரக் காணும் விதம் அருளவேணுமென்கின்றாள்;
திண் கொடி மதிள் சூழ் திரு அரங்கத்தாய்	திடமான கொடிகள் விளங்கும் மதிள்களாலே சூழப்பட்ட திருவரங்கத்தில் துயிலும் பெருமானே!
இவள் திறத்து	இப் பெண்பிள்ளை விஷயமாக
என் செய்திட்டாய்	நீ செய்தது என்னே!

*இட்டகாலிட்டகையளாயிருக்கும் எழுந்துலாமயங்குங்கைகூப்பும் **
*கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்கும் கடல்வண்ணாகடியைகாணென்னும் **
*வட்டவாய்நேமிவலங்கையாவென்னும் வந்திடாயென்றென்றேமயங்கும் **
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்சிந்தித்தாயே. (4)

(இப் பெண்பிள்ளையானவள்)

இட்டகால் இட்டகையள் ஆய் இருக்கும்	(சில சமயங்களிலே) கையும் காலும் இட்டது இட்டபடியேயிரா நின்றாள்
	(மற்றுஞ் சிலசமயங்களிலே)
எழுந்து உலாம்	எழுந்து உலாவுகின்றாள்
மயங்கும்	மயங்கா நின்றாள்;
கை கூப்பும்	(அப்படி மயங்கின தசையிலும்) கைகூப்புதல் தவிர்கின்றிலள்;
காதல் கட்டமே என்று மூர்ச்சிக்கும்	(பகவத் விஷயத்திலே) காதலைத் தாங்குவது வெகு கஷ்டமென்று சொல்லி மூர்ச்சை யடைகின்றாள்;
கடல் வண்ணா கடியை காண் என்னும்	கடல் வண்ணனே! என் விஷயத்தில் நீ கடுமை கொண்டிருக்கிறாயே! என்கிறாள்!
வட்டம் வாய் நேமி வலம் கையா என்னும்	வட்டமான விளிம்பையுடைய திருவாழியை வலத்திருக்கையிலுடையவனே என்கின்றாள்;
வந்திடாய் என்று என்றே மயங்கும்	வாராய் வாராய் என்று பலகாலு மழைத்தும் வரக்காணாது மயங்குகின்றாள்;
சிட்டனே!	பரமபவித்திரனே!
செழு நீர் திரு அரங்கத்தாய்	நீர்வளம் பொருந்திய கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே!
இவள் திறத்து என் சிந்தித்தாய்	இப்பெண்பிள்ளை விஷயமாக நீ சிந்தித்திருப்பது என்ன?

*சிந்திக்கும்திசைக்கும்தேறும்கைகூப்பும் திருவரங்கத்துள்ளாயென்னும் **
வந்திக்கும் ஆங்கேமழைக்கண்ணீர்மல்க வந்திடாயென்றென்றேமயங்கும் **
*அந்திப்போதவுணனுடலிடந்தானே அலைகடல்கடைந்தவாரமுதே **
சந்தித்துன் சரணம்சார்வதேவலித்த தையலைமையல்செய்தானே. (5)

அந்தி போது	மாலைப்பொழுதிலே
அவுணன் உடல் இடந்தானே	(நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி) இரணியனது உடலைப் பிளந்தவனே!
அலை கடல் கடைந்த ஆர் அமுதே	அலையெறிகின்ற கடலை (த்தேவர்களுக்காக)க் கடைந்த ஆராவமுதமே

- சந்தித்து உன் சரணமே சார்வது வலித்த தையலை மையல் செய்தானே — உன்னோடே கலந்து உன் திருவடிகளிலேயே லயிக்க வேணுமென்கிற திடமான அத்யவஸாயங் கொண்ட இப் பெண்பிள்ளையை மதி கெடுத்தவனே!
- (இப் பெண்பிள்ளையானவள்)
- சிந்திக்கும் — (ஏற்கனவே விதிவசமாக நேர்ந்திருந்த கலவியைப் பற்றிச்) சிந்தனைசெய்கின்றாள்!
- திசைக்கும் — அறிவு அழியா நின்றாள்.
- தேறும் — (திடீரென்று) தெளிவு பெறுகின்றாள்;
- கைகூப்பும் — அஞ்சலி பண்ணுநின்றாள்;
- திரு அரங்கத்து உள்ளாய் என்னும் — கோயிலிலே கண்வளர்ந்தருளு மவனே! என்கிறாள்;
- வந்திக்கும் — தலைவணங்கா நின்றாள்;
- ஆங்கே — அவ்வளவிலே
- மழை கண் நீர் மல்க — கண்ணீர் தாரை தாரையாகப் பெருகநின்று
- வந்திடாய் என்று என்றே மயங்கும் — (எம்பெருமானே!) வாராய் வாராய் என்று பலகாலுஞ் சொல்லி (வரக் காணாது) மோஹிக்கின்றாள்.

*மையல்செய்தென்னைமனம்கவர்ந்தானேயென்னும் மாமாயனேயென்னும்**
*செய்யவாய்மணியேயென்னும் தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாயென்னும்**
*வெய்யவாள்தண்டுசங்குசக்கரம்வில்லேந்தும் விண்ணோர்முதலென்னும் **
பைகொள்பாம்பணையாயிவள்திறத்தருளாய் பாவியேன்செயற்பாலதுவே. (6)

- (இப் பெண்பிள்ளையானவள்,)
- என்னை மையல் செய்து — என்னை வியாமோஹப் படுத்தி
- மனம் கவர்ந்தானே என்னும் — மனதைக்கொள்ளை கொண்டவனே! என்கிறாள்;
- மா மாயனே என்னும் — மிகப்பெரிய மாயங்களை யுடையவனே! என்கிறாள்;
- செய்ய வாய் மணியே என்னும் — சிவந்த அதரசோபையை உடையாய்க்கொண்டு நீலமணி போன்றவனே என்கிறாள்;
- தண் புனல் சூழ் திரு அரங்கத்து உள்ளாய் என்னும் — குளிர்ந்த தீர்த்தம் —சூழ்ந்த கோயிலில் கண்வளர்ந்தருள்பவனே! என்கிறாள்.
- வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் — (ஆச்ரித விரோதி விஷயத்தில்) வெப்பமே வடிவெடுத்த பஞ்சாயுதங்களைத் தரித்துக் கொண்டிருக்கிற
- விண்ணோர் முதல் என்னும் — நித்யஸூரிநாதனே! என்கிறாள்;
- பை கொள் பாம்பு அணையாய் — படமெடுத்த ஆதிசேஷன் மீது சயனித்தருள்பவனே!
- இவள் திறத்து — இப் பெண்பிள்ளை விஷயமாக
- பாவியேன் செயல் பாலது அருளாய் — பாவியேனான நான் செய்யக் கூடியது இருந்தால் அதை அருளிச்செய்யவேணும்.

** * *—இவள் விஷயத்தில் என்னால் செய்யத்தக்கது ஒன்றுமில்லையே! என்கிற கருத்தில் ஈற்றடி அமைந்தது.* (6)

*பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய் பற்றிலார்பற்றநின்றானே **
*காலசக்கரத்தாய்கடலிடங்கொண்ட கடல்வண்ணாகண்ணனேயென்னும் **
*சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னும் என்தீர்த்தனேயென்னும் **
கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கும் என்னுடைக்கோமளக்கொழுந்தே. (7)

- என்னுடைய கோமளம் கொழுந்து — மிக மெல்லியலாளான என் மகள்,
- பால துன்பங்கள் இன்பங்கள் — அவ்வவ்விடங்களுக்குத் தகுதியாக துன்பங்களையும் இன்பங்களையும்
- படைத்தாய் என்னும் — படைத்தவனே என்கிறாள்
- பற்று இலார் பற்ற நின்றானே என்னும் — அசரண்ய சரண்யனே! என்கிறாள்;

கால சக்கரத் தாய் என்னும்	காலசக்ரத்திற்கு நிர்வாஹகனானவனே! என்கிருள்;	சேல் கொள் தண் புனல் சூழ் திருஅரங்கத்தாய் என்னும்	மீன்கள் நிரம்பிய குளிர்ந்த தீர்த்தம் சூழ்ந்த கோயிலில் வாழ்பவனே! என்கிருள்;
கடல் இடம் கொண்டகடல் வண்ணு என்னும்	திருப்பாற் கடலை இடமாகக் கொண்ட கடல் வண்ணனே என்கிருள்:	என் தீர்த்தனே என்னும்	என்னைப் பவித்திரமாக ஆக்குமவனே! என்கிருள்;
கண்ணனே என்னும்	ஸ்ரீ கிருஷ்ணு என்கிருள்;	கோலம் மா மழை கண்பனி மல்க இருக்கும்	அழகு பொருந்திப் பெருத்துக் குளிர்ந்த கண்கள் நீர்பெருக நிற்கின்றுள்.

* * *—என்னும் என்கிற வினைமுற்று ஒவ்வொரு விளியோடும் அந்வயிக்கவுரியது. "பால துன்பங்களின்பங்கள் படைத்தாய்" என்றதற்குப் பலவகையாகப் பொருள் கூறுவர். எம்பெருமானே! நீ உலகில் இன்ப துன்பங்களைப் படைக்குமிடத்து அவ்வவ்விடங்களுக்குத் தகுதியாகவன்றோ படைப்பது; என்னால் தாங்கவொண்ணுத துன்பத்தைப் படைத்திருக்கின்றுயே! இஃது உனக்குத் தகுதியோ? என்பதான கருத்தை முக்கியமாகக் கொள்க. பால்-இடம்; பால—பாலவாக; இடங்களுக்கேற்ப என்றவாறு.

*கொழுந்துவானவர்கட்கென்னும் குன்றேந்திக்கோ நிரைகாத்தவனென்னும் **
*அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்கும் அஞ்சனவண்ணனேயென்னும் **
*எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்கும் எங்ஙனேநோக்குகேனென்னும் **
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாய் என்செய்கேனென்திருமகட்கே. (8)

(இப் பெண்பிள்ளையானவள்)		(இக் கூக்குரலைக்கேட்டு எம்பெருமான் வரக்கூடுமென நினைத்து)	
வானவர் கட்கு கொழுந்து என்னும்	நித்ய ஸூரிகளுக்குத் தலையானவனே! என்கிருள்;	மேல் எழுந்து நோக்கி	மேலே தலையெடுத்துப் பார்த்து
குன்று ஏந்தி	கோவர்த்தன மலையைக் குடையாகவெடுத்து நின்று	இமைப்பு இலள் இருக்கும்	இமையாதகண்ணினளாய் இருக்கின்றுள்;
கோ நிரை காத்தவன் என்னும்	பசுக்களின் கூட்டத்தைக்காத்தருளினவனே என்கிருள்;	எங்ஙனே நோக்குகேன் என்னும்	எந்தப்ரகாரத்தாலே உன்னைக் காண்பேன்? என்கிருள்;
அழும்	கண்ணுங் கண்ணீருமாயிருக்கின்றுள்;	செழுதடம் புனல் சூழ் திரு அரங்கத்தாய்	மிகச் சிறந்த தீர்த்தம் சூழ்ந்த கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே!
தொழும்	அஞ்ஜலி பண்ணுநின்றுள்;	என் திருமகட்கு	பிராட்டியோடொத்த என் பெண்மணிகள் விஷயத்திலே
ஆவி அனல வெவ்வுயிர்க்கும்	ஆத்மவஸ்து கொளுந்தும்படி வெப்பமாகப் பெரு மூச்சு விடா நின்றுள்;	என் செய்கேன்	எதைச் செய்வேன்?
அஞ்சனம் வண்ணனே என்னும்	அஞ்சனமேனியனே? என்கிருள்;		

*என்திருமகள்சேர்மார்பனேயென்னும் என்னுடையாவியேயென்னும் **
*நின்திருவெயிற்றுலிடந்துநீகொண்ட நிலமகள்கேள்வனேயென்னும் **
*அன்றுருவேழும்தழுவிநீகொண்ட ஆய்மகளன்பனேயென்னும் **
தென்திருவரங்கம்கோயில்கொண்டானே தெளிகிலேன்முடிவிவள்தனக்கே. (9)

என் திரு மகள் சேர் மார்பனே என்னும்	எனக்குப் புருஷகார பூதையான பிராட்டி சேர்ந்த திருமார்பை யுடையவனே! என்கிருள்;	என்னுடை ஆவியே என்னும்	எனக்கு உயிராயிருப்பவனே! என்கிருள்;

நித்யாநுஸந்தானவுரை

நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட	உனது கோரப் பற்களாலே இடந்து ஏற்றுக்கொண்ட
நிலம் மகள்கேள்வனே என்னும்	பூமிப்பிராட்டிக்கு நாயகனே என்கிறாள்;
அன்று	முன் பொருகால்
உரு ஏழும்	இடிபோன்ற குரலையுடைய ரிஷபங்களேழையும்
தழுவி	மதமொழித்து
நீ கொண்ட	மணந்துகொண்ட
ஆய்மகள் அன்பனே என்னும்	நப்பின்னைப் பிராட்டிக்கு ப்ரியனே! என்கிறாள்;
தென் திருஅரங்கம் கோயில் கொண்டானே	ஸ்ரீ ரங்கநாதனே!
இவள் தனக்கு	இவளுக்கு
முடிவு தெளிகிலேன்	ஆர்த்தி முடியுமாறு அறிகின்றிலேன்.

*முடிவிவள் தனக்கொன்றறிகிலேனென்னும் மூவுலகாளியேயென்னும் **
*கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும் நான்முகக்கடவுளேயென்னும் **
*வடிவுடைவானோர் தலைவனேயென்னும் வண்திருவரங்கனேயென்னும் **
அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள் முகில்வண்ணனடியே. (10)

இவள்	இப் பெண்பிள்ளையானவள்
தனக்கு முடிவு ஒன்று அறிகிலேன் என்னும்	தனது ஆர்த்திக்கு முடிவு ஒன்றும் தெரியவில்லையே! என்கிறாள்;
மூ உலகு ஆளியே என்னும்	மூவுலகுக்கும் கடவுளான இந்திரனுக்கு அந்தர்யாமியே, என்கிறாள்;
கடி கமழ் கொன்றை சடையனே என்னும்	பரிமளம் மிக்க கொன்றை மாலையைச்சடையிலணிந்த சிவனுக்கு அந்தர்யாமியே! என்கிறாள்;
நான்முகக் கடவுளே என்னும்	பிரமதேவனுக்கு அந்தர்யாமியே! என்கிறாள்;
வடிவு உடை வானோர் தலைவனே என்னும்	தன்னோடொத்த வடிவுடையரான நித்ய ஸூரிகளுக்கு நாதனே! என்கிறாள்;
வண் திருஅரங்கனே என்னும்	ஸ்ரீ ரங்கநாதனே! என்கிறாள்;
அடி அடையாதாள் போல் இவள்	திருவடிகளைக் கிட்டமாட்டாள் போலும் என்னும்படி யிருந்தவிவள்
முகில் வண்ணன் அடி	மேகவண்ணனான அவனது திருவடிகளை
அணுகி அடைந்தனள்	கிட்டியடையப் பெற்றாள்.

*முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன் மொய்புனற்பொருநல்**
*துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன்**
*முகில்வண்ணனடிமேல்சொன்னசொல்மாலை ஆயிரத்திப்பத்தும்வல்லார்**
முகில்வண்ணவானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே. (11)

முகில் வண்ணன் அடியை அடைந்து	மேகவண்ணனான எம்பெருமானுடைய திருவடிகளையடைந்து
அருள் சூடி உய்ந்தவன்	அவனுடைய திருவருளைத் தலைக்கொண்டு உஜ்ஜீவித்தவரும்
மொய் புனல் பொருநல்	உத்தமதீர்த்தமான தாமிரபர்ணியினுடைய
துகில் வண்ணம் தூ நீர் சேர்ப்பன்	துகிலின் நிறம்போலே பரிசுத்தமான ஜலத்தின் கரையிலே சேர்ந்திருப்பவரும்
வண் பொழில் சூழ் வண் குருகூர்	வளம்மிக்க சோலைகள் சூழ்ந்த திருநகரிக்குத் தலைவருமான
சடகோபன்	ஆழ்வார்
முகில் வண்ணன் அடிமேல் சொன்ன	மேகவண்ணனான எம்பெருமானது திருவடிகளை நோக்கியருளிச் செய்த
சொல் மாலை ஆயிரத்து இப் பத்தும் வல்லார்	சொல் தொடையான ஆயிரத்தினுள் இப்பதிகத்தை ஓத வல்லவர்கள்
முகில்வண்ணம் வானத்து	முகில் வண்ணனுடைய நிழலீட்டாலே முகில் வண்ணமாயிருக்கின்ற பரமபதத்திலே
இமையவர் சூழ	நித்தியஸூரிகள் புடைசூழ
பேர் இன்பம் வெள்ளத்தே	ப்ரஹ்மானந்த ப்ரவாஹத்தில்
இருப்பர்	மூழ்கியிருக்கப் பெறுவார்கள்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி— நெடுமாற்கடிமை

பாகவத சேஷத்வமே பரமபுருஷார்த்த மென்று அறுதியிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருதவஞ்சித்து
தடுமாற்றற்றதீக்கதிகள் முற்றும்தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமாவினையேனவனடியாரடியே கூடுமிதுவல்லால்
விடுமாறென்பதென்னந்தோ வியன்மூவுலகுபெறினுமே. (1)

நெடுமாற்கு	ஸர்வேச்வரனுக்கு
அடிமை செய்வேன் போல்	அடிமை செய்பவன் போல விருந்து
அவனை கருத	அப்பெருமானை நினைத்த வளவிலே
தீ கதிகள் முற்றும்	(என்னிடத்திலிருந்த) தீவினைகளெல்லாம்
வஞ்சித்து	வஞ்சனைசெய்து (என்னோடு சொல்லாமலே)
தடுமாற்று அற்ற	நிச்சயமாக
தவிர்ந்த சதிர் நினைந்தால்	என்னைவிட்டு நீங்கிப்போன படியை ஆராய்ந்து பார்த்தால்
வியன் மூ உலகு பெறினும்	விஸ்தாரமான மூவுலகையும் பேருகப் பெற நேர்ந்தாலுங் கூட (அதை உபேக்ஷித்து)
அவன் அடியார் அடியே கூடும் இது அல்லால்	பாகவதர்களின் திருவடிகளையே அடைவது தவிர
கொடு மா வினையேன்	பெரும் பாவியான நான்
விடும் ஆறு என்பது	(அந்த பாகவத சேஷத்வத்தை) விடுவதென்று ஒன்று உண்டோ ?
அந்தோ	இதை நான் சொல்லவும் வேணுமோ ;

வியன்மூவுலகுபெறினும்போய்த் தானேதானேயானாலும்
புயல்மேகம்போல்திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்
சயமேயடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி இம்மையே*
பயனேயின்பம்யான்பெற்றது உறுமோபாவியேனுக்கே. (2)

வியன் மூ உலகு பெறினும்	த்ரிலோக ஸாம்ராஜ்யத்தைப் பெற்றாலும்,
போய்	அதற்கும் மேலாக
தானே தானே ஆனாலும்	தன்னைத் தானே யநுபவிக்கையாகிற கைவல்ய மோக்ஷம் பெற்றாலும்
புயல் மேகம் போல் திரு மேனி அம்மான்	மழைகாலத்து மேகம்போன்ற திருமேனி வாய்ந்த எம்பெருமானுடைய
புனை பூ கழல் அடி கீழ்	சாத்தின புஷ்பங்களையும் வீரக்கழலையு முடைத்தான திருவடி வாரத்திலே
சயமே	ஸ்வயம் பிரயோஜநமாக
அடிமை தலை நின்றார்	கைங்கரியத்தின் மேலெல்லையிலே நிலை நின்றவர்களுடைய
திரு தாள் வணங்கி	திருவடிகளைத் தொழுது
இம்மையே	இஹலோகத்திலேயே
யான் பெற்றது	நான் அடைந்தது
பயனே இன்பம்	புருஷார்த்தமான சுகமே ;
பாவியேனுக்கு	பாவியான வெனக்கு
உறுமோ	(கீழ்ச்சொன்ன ஐச்வர்ய கைவல்யங்கள்) இப்பேற்றுக்கு ஒக்குமோ ?

உறுமோபாவியேனுக்கு இவ்வுலகுமூன்றுமுடன்நிறைய
சிறுமாமேனிநிமிர்த்த என்செந்தாமரைக்கண்திருக்குறளன்
நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார்
சிறுமாமனிசராயென்னையாண்டார் இங்கேதிரியவே, (3)

சிறு மா மனிசர் ஆய்	வடிவில் சிறுத்து அறிவில் பெருத்தவர்களா யிருந்து கொண்டு	இவ் உலகம் மூன்றும் உடன் நிறைய சிறுமா மேனி நிமிர்த்த	இம் மூவுலகங்களும் ஏக காலத்தில் இடமடையும்படி தனது சிறிய பெரிய திருமேனியை வளரச்செய்த
என்னை ஆண்டார்	என்னை யீடுபடுத்திக்கொண்டவர்களான	செம் தாமரை கண் என் திரு குறளன்	புண்டரீகாக்ஷனாய் எனக்கினியனான ஸ்ரீவாமனனுடைய
அவன் அடியார்	பாகவதர்கள்	நறு மா விரை நாள் மலர் அடி கீழ் புகுதல்பாவியேனுக்கு உறுமோ	மிக்கபரிமளம் வாய்ந்த திருவடித் தாமரைகளிலே சென்று சேர்தல் எனக்குத் தகுமோ ?
இங்கே திரிய	இங்கிலவுலகில் இருக்க,		
அன்றி	அன்னவர்களுக்கு அடிமை பூண்டிருப்பது தவிர,		

*இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென் இருமாநிலமுன் னுண்டுமிழ்ந்த**
*செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கணென்னம்மான்**
*பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப் புலன்கொள்வடிவென்மனத்ததாய்**
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோடவருளிலே. (4)

முன்	முன்பொரு காலத்திலே	என் மனத்தது ஆய்	என் மனத்திலுள்ளதாகவும்
இரு மா நிலம் உண்டு உமிழ்ந்த	மிகப்பெரிய பூமியை யெல்லாம் தனது திருவயிற்றிலே வைத்து நோக்கிப் பிறகு வெளிப்படுத்தின	அங்கு ஏய் மலர்கள்	அத்தலைக்கு ஏற்ற புஷ்பங்கள்
கோலத்த	அழகு வாய்ந்த	கைய ஆய்	என் கையிலுள்ளனவாகவும் பெற்று
செம் பவளம் வாய்	சிவந்த பவழம் போன்ற அதரத்தையுடைய	வழிபட்டு ஓட அருளில்	பாகவதர்கள் செய்யும் கைங்கரிய மார்க்கத்திலே நானும் உடன்பட்டு நடக்கும்படியாக அருளுமாகில்
செம் தாமரை கண் என் அம்மான்	புண்டரீகாக்ஷனான எம்பெருமான்,	இங்கே திரிந்தேற்கு	(திருநாடு செல்ல விரும்பாதே) இந்த விபூதியிலேயே இப்படி திரிவேனான எனக்கு
பொங்கு ஏழ் புகழ்கள்	பொங்கிக் கிளர்கின்ற தனது திருக்குணங்களானவை	இழுக்குற்று என்	என்ன தாழ்வு ?
வாய ஆய்	என் வாக்குக்கு விஷயமாகவும்		
புலன் கொள் வடிவு	மனோஹரமான தனது வடிவு		

*வழிபட்டோடவருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ்**
*சுழிபட்டோடும்சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும்**
*இழிபட்டோடுமுடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று**
மொழிபட்டோடும்கவியமுதம் நுகர்ச்சியுறுமோமுழுதுமே. (5)

வழிபட்டு ஓட அருள் பெற்று	நித்ய கைங்கரியம் பண்ணும்படியாக அவனது திருவருளைப் பெற்று	இன்புற்று இருந்தாலும்	ஆனந்த வாழ்ச்சியாக இருக்கப் பெற்றாலும்
மாயன்	ஆச்சர்ய விபூதி யுக்தனான அந்த ஸர்வேச்வரனுடைய	முழுதும்	கீழ்ச் சொன்ன ஐச்வர்ய கைவல்யாதிகள் எல்லாம் கூடினாலும்
கோலம் மலர் அடி கீழ்	அழகிய திருவடித் தாமரைகளின் கீழ்	இழிபட்டு ஓடும் உடலினில் பிறந்து	தாழ்ச்சியின் மிக எல்லையில் நிற்பதான சரீரத்திலே பிறந்து
சுழிபட்டு ஓடும் சுடர் சோதி வெள்ளத்து	சுழித்து ஓடுகிற சுடர்ச்சோதி வெள்ளமென்னும்படியான பரமபதத்திலே	தன் சீர் யான் கற்று	தன்னுடைய குணங்களை நான் அப்யஸித்து

மொழிபட்டு ஓடும் கவி அமுதம்	அவ் வநுபவத்தா லுண்டான ப்ரீதி சொல்லாய் ப்ரவஹிக்கிற கவியாகிற அம்ருதத்தை	நுகர்ச்சி உறுமோ	பாகவதர்களோடு கூடி யநுபவித்து ரஸிக்கைக்கு ஒக்குமோ ? (ஒவ்வாது.)

நுகர்ச்சியுறுமோமூவுலகின் வீடுபேறுதன்கேழில்
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கையென்னம்மான்*
நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள் நீண்டவசுரருயிரெல்லாம்*
தகர்த்துண்டுழலும்புட்பாகன் பெரியதனிமாப்புகழே.* (6)

தன் கேழ் இல்	தனக்கு ஒப்பின்றியே யிருப்பதாய்	நீண்ட	பருத்த வடிவு படைத்தவர்களான
புகர்	புகரை யுடைத்தாய்	அசுரர்	அசுரர்களினுடைய
செம் முகத்த	சீற்றத்தாலே சிவந்த முகத்தை யுடைத்தான	உயிர் எல்லாம்	பிராணன்களை யெல்லாம்
களிறு	(குவலயாபீட மென்கிற) யானையை	தகர்த்து உண்டு	பீடித்து வாங்கி
அட்ட	கொன்று முடித்தவனும்	உழலும்	இதுவே தொழிலாக ஸஞ்சரிக்கிற
பொன் ஆழி கை	அழகிய திருவாழி மோதிரமணிந்த திருக்கையை யுடையவனும்	புள்	கருடனுக்கு
என் அம்மான்	எனக்கு ஸ்வாமியும்	பாகன்	நியாமகனுமான எம்பெருமானுடைய
நிகர் செம்பங்கி	தங்கள் ஜாதிக்குத் தகுதியாகச் சிவந்த (செம்பட்ட) மயிர்களையும்	பெரிய தனி மா புகழ் நுகர்ச்சி உறுமோ மூ உலகின் வீடு பேறு	பெரிய ஒப்பற்ற கல்யாண குண ராசியை அநுபவிக்கையோடு ஒக்குமோ ஸர்வேச்வரத்வம் ?
எரி விழிகள்	அக்நிசக்கரம் போன்ற கண்களையுமுடையராய்		

தனிமாப்புகழேயெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான்தோன்றி
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும்முளைப்பித்த*
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார்*
நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்கநங்கட்கே.* (7)

தனி மா புகழே	ஒப்பில்லாத சிறந்த புகழே	முளைப்பித்த	உண்டாக்கின
எஞ்ஞான்றும் நிற்கும்படி ஆய்	காலமுள்ளதனையும் வேதாந்த ப்ரஸித்தமாய் நிற்கும்படியாக	தனி மா தெய்வம்	ஒப்பற்ற பரதேவதையினுடைய
தான் தோன்றி	தானே (படைப்புக் கடவுளாக) ஆவிர்ப்பவித்து	தளிர் அடி கீழ்	தளிர்போன்ற திருவடியின் கீழே
முனி	(ஸ்ருஷ்டிக்காக) ஸங்கல்பிக்கிற	புகுதல் அன்றி	புகுகையைத் தவிர்ந்து
மா பிரமம்	பரப்ரஹ்மமாகிற	அவன் அடியார்	ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
முதல் வித்து ஆய்	பரமகாரணமாய்	நனி மா கலவி இன்பமே	மிகச் சிறந்ததான ஸம்ச்லேஷ ஸுகமே
உலகம் மூன்றும்	லோகங்களை யெல்லாம்	நங்கட்கு நாளும் வாய்க்க	நமக்கு எப்போதும் வாய்க்க வேணும்.

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து தன்
தாளும்தோளும்முடிகளும் சமனிலாதபலபரப்பி*
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபன்னாயிற்றின்*
கோளுமுடையமணிமலைபோல் கிடந்தான்தமர்கள்கூட்டமே.* (8)

நளிர் நீர் கடலை படைத்து	குளிர்ந்த நீரையுடைய கடலை யுண்டாக்கி	நிறை பல் நாயிற்றின் கோளும் உடைய	நிறைந்த பல ஆதித்ய தேஜஸ்ஸையுமுடைத்தான
சமன் இலாத	ஒப்பில்லாத	மணிமலைபோல்	மாணிக்கமலை போலே
தன் பல தாளும் தோளும் முடிகளும்	தன்னுடைய பல திருவடிகளையும் திருத் தோள்களையும் திரு முடிகளையும்	கிடந்தான்	கண்வளர்ந்தருளின பெருமானுடைய
பரப்பி	பரப்பிக்கொண்டு	தமர்கள்	பக்தர்களோடுண்டான
நீளும் படர் பூகற்பகக் காவும்	உயர்ந்து மிகவும் தழையா நின்றுள்ள அழகிய கற்பகச் சோலையையும்	கூட்டம்	சேர்த்தியானது
		நங்கட்கு நாளும் வாய்க்க	எமக்கு எப்போதும் உண்டாக வேணும்.

தமர்கள்கூட்டவல்வினையை நாசஞ்செய்யும்சதிர்மூர்த்தி
அமர்கொளாழிசங்குவாள் வில்தண்டாதிபல்படையன்
குமரன்கோலவைங்கணைவேள் தாதை கோதிலடியார்தம்
தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே. (9)

தமர்கள் கூட்டம்	பக்த வர்க்கங்களுக்கு வருகின்ற	குமரன்	நித்யயுவாவாய்
வல் வினையை	வலிய விரோதிகளை	கோலம் ஐங்கணை வேள் தாதை	அழகிற் சிறந்த பஞ்சபாணனான மன்மதனுக்கும் தலைவனான எம்பெருமானுடைய
நாசம் செய்யும் சதிர்	போக்கும்படியான திறமையுடைய	கோது இல் அடியார் தம்	கோதற்ற அடியார்க்கு
மூர்த்தி	ஸ்வாமியாய்,	தமர்கள் தமர்கள் தமர்கள் ஆம் சதிர்	அடிமையில் முடிந்த நிலமான வாய்ப்பே
அமர் கொள்	போர் செய்யக் கிளர்கின்ற	தமியேற்கு வாய்க்க	துணையற்ற அடியேனுக்கு வாய்க்கவேணும்.
ஆழி சங்கு வாள்வில் தண்டு ஆதி	பஞ்சாயுதங்கள் முதலிய		
பல் படையன்	திவ்யாயுத வர்க்கத்தையுடையனாய்		

வாய்க்கதமியேற்கூழிதோறூழியூழி மாகாயாம்*
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கையென்னம்மான்
நீக்கமில்லாவடியார்தம் அடியாரடியாரடியாரெங்
கோக்கள் அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே.* (10)

மா காயா பூ கொள் மேனி	அழகிய காயாம்பூ நிறத்தைக் கொண்ட திருமேனியையும்	எம் கோக்கள்	எமக்கு ஸ்வாமிகள்;
நான்கு தோள்	நான்கு திருத்தோள்களையும்	அவர்க்கே	அன்னவர்களுக்கே
பொன் ஆழி கை	அழகிய திருவாழி யேந்திய கையையும் உடைய	குடிகள் ஆய் செல்லும்	சேஷவ்ருத்தி பண்ணுங் குலமாய்ச் செல்லும்படியான
என் அம்மான்	எம்பெருமானுடைய	நல்ல கோட்பாடு	திடமான அத்யவஸாயமானது
நீக்கம் இல்லா	பிரிவு இல்லாத	ஊழி ஊழி ஊழி தோறு	எஞ்ஞான்றும்
அடியார் தம்	அடியார்களுக்கு	தமியேற்கு வாய்க்க	அடியேனுக்கு உண்டாக வேணும்.
அடியார் அடியார் அடியார்	சரமாவதிதாஸ பூதர்கள்		

நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும்தான்நிறைந்த
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன்
சொல்லப்பட்டவாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள்
நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே. (11)

நல்ல கோட்பாடு	நல்ல கட்டளைப்பாடுடைய	இவையும் பத்தும் வல்லார்கள்	இவை பத்தையும் ஓதவல்லவர்கள்
உலகங்கள் மூன்றின் உள்ளும்	மூவுலகங்களினுள்ளும்	கொண்ட பெண்டிர் மக்களே	ஸகுடும்பமாக
தான் நிறைந்த	வியாபித்த	நல்ல பதத்தால்	பாகவத சேஷத்வ பர்யந்தமான சிறப்புடனே
அல்லி கமலம் கண்ணனை	விகஸித்த தாமரைப் பூப்போன்ற கண்களையுடைய பெருமான் விஷயமாக	மனை வாழ்வர்	க்ருஹஸ்தர்களாக வாழப் பெறுவர்கள்.
அம் தண் குருகூர் சடகோபன் சொல்லப்பட்ட ஆயிரத்துள்	ஆழ்வாரா லருளிச்செய்யப்பட்ட ஆயிரத்தினுள்		

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி—மாலைநண்ணித்தொழுதெழு

அவதாரிகை :—*திருக்கண்ணபுரத்திலே ஈடுபடுமாறு உபதேசித்தருளும் பதிகமிது.*

*மாலைநண்ணித் தொழுதெழுமினோவினைகெட**
*காலைமாலை கமலமலரிட்டுநீர்**
*வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து**
ஆலின்மேலாலமர்ந்தான் அடியிணைகளே. (1)

வேலை மோதும் மதிள் சூழ்	கடலலை மோதப்பெற்ற மதிளாலே சூழப்பட்ட	அடி இணைகள்	அவனது உபய பாதங்களையும்
திரு கண்ண புரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந்தருளி யிருப்பவனும்	காலை மாலை	இரவும் பகலும்
ஆலின் மேல்	ஜலத்தின் மீது	கமலம் மலர் இட்டு	தாமரைப்பூக்களை ஸமர்ப்பித்து
ஆல் அமர்ந்தான்	ஆலிலையில் கண்வளர்ந்தவனுமான	நீர்	(அன்பர்களே !) நீங்கள்
மாலை	ஸர்வேச்வரனை	வினை கெட	(உங்களுடைய) பாவம் தொலையும்படி
நண்ணி	கிட்டி	தொழுது எழுமின்	வணங்கி உஜ்ஜீவியுங்கள்.

*கள்ளவிழும்மலரிட்டு நீரிறைஞ்சுமின்**
*நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை**
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுர
முள்ளி நாளுந்தொழுதெழுமினோதொண்டரே.* (2)

தொண்டரே !	எம்பெருமானிடத்து ஆசையுள்ளவர்களே !	வயல்சூழ் கிடங்கின் புடை	அகழ்களைப் பக்கங்களிலேயுடையதும்
நீர்	நீங்கள்	வெள்ளி ஏய்ந்த மதிள் சூழ்	சுக்கிரனைத் தொட்டுக் கொண்டிருக்கிற மதிள்களாலே சூழப்பட்டதுமான
கள் அவிழும் மலர் இட்டு	தேனொழுகுகின்ற புஷ்பங்களைப் பணிமாறி	திருக்கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
இறைஞ்சுமின்	வணங்குங்கள் ;	உள்ளி	சிந்தனை செய்துகொண்டு
நள்ளி சேரும்	பெண் நண்டுகள் களித்து வாழப்பெற்ற கழனிகள் சூழ்ந்த	நாளும் தொழுது எழுமின்	நாடோறும் வணங்கி உஜ்ஜீவியுங்கள்.

நித்யாநுஸந்தானவுரை

*தொண்டர்நுந்தம் துயர்போகநீரேகமாய்**
*விண்டுவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்**
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்
தண்டவாணன் அமரர்பெருமானையே.* (3)

தொண்டர்	தொண்டர்களே !
வண்டு பாடும் பொழில்சூழ்	வண்டுகள் பாடுமிடமான சோலைகளாலே சூழப்பட்ட
திரு கண்ண புரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கிற
அண்டம் வாணன் அமரர் பெருமானை	அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனான எம்பெருமானை
நும் தம் துயர் போக	உங்களுடைய துக்கம் தொலையும்படி
நீர் ஏகம் ஆய்	நீங்கள் அநந்ய ப்ரயோஜனர்களாய்
விண்டு வாடா மலர் இட்டு	மலர்ந்து வாடாத [அப்போதலர்ந்த] பூக்களைப் பணிமாறி
நீர் இறைஞ்சுமின்	நீங்களே தொழுங்கள்.

*மானைநோக்கி மடப்பின்னைதன்கேள்வனை**
*தேனைவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்**
*வானையுந்துமதிள்சூழ் திருக்கண்ணபுரம்**
*தானயந்தபெருமான் சரணாகுமே** (4)

மானை நோக்கி மட பின்னை தன் கேள்வனை	மானை யொத்த கண்பார்வையையுடையளான நப்பின்னைப் பிராட்டிக்கு நாதனும்
தேனை	தேன்போல் இனியனுமான எம்பெருமானை
வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்	அப்போதலர்ந்த செவ்விப் பூக்களையிட்டு நீங்கள் தொழுங்கள் ;
வானை உந்தும் மதிள் சூழ்	ஆகாசத்தை யளாவியிருக்கின்ற மதிளாலே சூழப்பட்ட
திரு கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
நயந்த பெருமான் தான்	விரும்பியிருக்கின்ற சௌரிப் பெருமாளே
சரண் ஆகும்	ரக்ஷகராவர்.

*சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்**
*மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்பிரான்**
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் தனதன்பர்க்கன்பாகுமே.* (5)

தன தாள் அடைந்தார்க்கு	தனது திருவடிகளை யடைந்தவர்களுக்கு
சரணம் எல்லாம் ஆகும்	ஸகலவித ரக்ஷகனுமாய்
மரணம் ஆனால்	இந்த தேஹம் விட்டு நீங்கினவுடனே
வைகுந்தம் கொடுக்கும் பிரான்	பரமபதமளிக்கும் பெருமானுமாய்
அரண் அமைந்த மதிள் சூழ்	காப்பாக அமைந்த மதிளாலே சூழப்பட்ட
திரு கண்ண புரம்	திருக்கண்ணபுரத்தை
தரணி	க்ஷேத்திரத்தை
ஆளன்	ஆள்பவனுமான எம்பெருமான்
தனது அன்பர்க்கு	தன்னிடத்தில் அன்பு வைத்தவர்களுக்கு
அன்பு ஆகும்	அன்புதானே வடிவெடுத்தவனாயிருப்பன்.

*அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்**
*செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன்**
நன்பொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தன்பன் நாளும்தனமெய்யர்க்குமெய்யனே.* (6)

கோயில் திருவாய்மொழி—மாலைநண்ணி

தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்	தனது திருவடிகளைப் பற்றினு ரெல்லார்க்கும்	நன் பொன் ஏய்ந்த மதிள் சூழ்	நல்ல பொன்னாலே யமைத்த மதிளாலே சூழப்பட்ட
அன்பன் ஆகும்	அன்பு செய்பவனும்	திரு கண்ண புரத்து அன்பன்	திருக்கண்ண புரத்திலே விருப்ப முடையவனான எம்பெருமான்
செம்பொன் ஆகத்து அவுணன் உடல் கீண்டவன்	சிவந்த பொன் போன்ற வடிவுடைய இரணியாசுரனது உடலைக் கீண்டவனும்	தன மெய்யர்க்கு	தன் திறத்திலே உண்மையாக ஸ்நேஹிக்குமவர்களுக்கு
		நாளும் மெய்யன்	எப்போதும் உண்மையான ஸ்நேஹ முடையவன்.

*மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்**
*பொய்யனாகும் புறமேதொழுவார்க்கெல்லாம்**
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்
தையன் ஆகத்தணைப்பார்கட்கணியனே.* (7)

விரும்பி தொழுவார்க்கு எல்லாம்	தன்னையே [illegible]க ஆசைப்பட்டுத் தொழுமவர்களெல்லார்க்கும்	செய்யில் வாளை உகளும் திருக்கண்ணபுரத்து ஐயன்	கழனிகளில் வாளை மீன்கள் துள்ளி விளையாடப் பெற்ற திருக்கண்ணபுரத்திலே யெழுந்தருளி யிருப்பவனான எம்பெருமான்
மெய்யன் ஆகும்	மெய்யனாவன்		
புறமே தொழுவார்க்கு எல்லாம்	பிரயோஜநாந்தரங்களுக்காக மேலெழுந் தொழுமவர்களுக்கெல்லாம்	ஆகத்து அணைப்பார்கட்கு	தங்கள் மனத்தில் ஊன்ற வைத்துக் கொள்பவர்களுக்கு
பொய்யன் ஆகும்	தன்னை உள்ளபடி காட்டாதவனும்.	அணியன்	ஸமீபத்திலுள்ளவன்.

*அணியனாகும் தன்தாளடைந்தார்க்கெல்லாம்**
*பிணியும்சாரா பிறவிகெடுத்தாளும்**
மணிபொன்னேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின் நாளும்பரமேட்டிதன்பாதமே.* (8)

தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்	தன் திருவடிகளைப் பணிந்தவர்களெல்லார்க்கும்	மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ்	ரத்னங்களும் பொன்களும் பொருந்தின மதிளாலே சூழப்பட்ட
அணியன் ஆகும்	அந்தரங்கனு மிருப்பன்;	திருக்கண்ண புரம்	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளி யிருக்கிற
பிணியும் சாரா	வியாதி முதலானவைகளும் அணுகமாட்டா;	பரமேட்டி தன் பாதம்	பரம புருஷனுடைய திருவடிகளை
பிறவி கெடுத்து ஆளும்	ஸம்ஸார ஸங்கத்தை யறுத்து அடிமை கொள்வன்;	நாளும் பணிமின்	எப்போதும் ஆச்ரயிப்பீர்களாக.

*பாதநாளும்பணியத் தணியும்பிணி**
*ஏதம்சாரா எனக்கேலினியென்குறை**
வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்
தாதியானை அடைந்தார்க்கல்லலில்லையே.* (9)

வேதம் நாவர் விரும்பும்	வைதிகர்கள் விரும்பி வர்த்திக்கு மிடமான	ஆதி யானை	முழுமுதற் கடவுளான எம்பெருமானை
திரு கண்ண புரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளி யிருக்கிற	அடைந்தார்க்கு அல்லல் இல்லை	ஆச்ரயித்தவர்களுக்கு துக்கமொன்று மில்லையாகும்;

நாளும் பாதம் பணிய	(அப்பெருமானுடைய) திருவடிகளை எப்போதும் ஸேவிக்குமளவில்	இனி	இப்படியான பின்பு
பிணி தணியும்	நோய்கள் அறும்;	எனக்கு	இப்பெருமானிடத்து ஈடுபட்டிருக்குமெனக்கு
ஏதம் சாரா	பாவங்கள் சேரமாட்டா;	என் குறை	என்ன குறையுண்டு? (ஒரு குறையுமில்லை.)

இல்லையல்லல் எனக்கேலினி யென்குறை
அல்லிமாதரமரும் திருமார்பினன்*
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல* நாளும்துயர் பாடுசாராவே.* (10)

அல்லல் இல்லை	துக்கங்கள் தொலையும்;	கல்லில் ஏய்ந்த மதிள் சூழ்	கற்பணிமிக்க மதிளாலே சூழப்பட்ட
எனக்கு இனி என் குறை—;		திரு கண்ணபுரம் சொல்ல	திருக்கண்ணபுரம் என்று சொன்ன வளவிலே
அல்லி மாதர் அமரும் திரு மார்பினன்	தாமரையாளான பெரிய பிராட்டியாருறையும் திருமார்பையுடைய பெருமான் வர்த்திக்கிற,	நாளும்	ஒரு நாளும்
		துயர் பாடு சாரா	துக்கம் அணுகாது.

***பாடுசாராவினை பற்றறவேண்டுவீர்*
மாடநீடு குருகூர்ச்சடகோபன் *சொல்
பாடலான தமிழ் ஆயிரத்துளிப்பத்தும்
பாடியாடி* பணிமினவன் தாள்களே.* (11)

வினை பற்று	துக்க ஸம்பந்தம்	சொல்	அருளிச்செய்த
பாடு சாரா	அருகில் கிட்டாதபடி	தமிழ்ப்பாடல் ஆன ஆயிரத்துள் இப்பத்தும்—;	
அற வேண்டுவீர்	அது தொலையவேணுமென்றிருப்பவர்களே!	பாடி	வாயாரப்பாடி
மாடம் நீடு குருகூர்	மாடமாளிகைகள் உயர்ந்த திருநகரியிலே அவதரித்த	ஆடி	அதற்குச் சேர நர்த்தனம் பண்ணி
சடகோபன்	ஆழ்வார்	அவன் தாள்களே பணிமின்	அப்பெருமானுடைய திருவடிகளையே தொழுங்கள்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து—ஒன்பதாந் திருவாய்மொழி—சூழ்விசும் பணிமுகில்

ஆழ்வார் தாம் திருநாடேற எழுந்தருளும்படியையும் தாமெழுந்தருளும்போது ஸர்வ லோகங்களும் தம்மைக் கொண்டாடும்படியையும் திருவுள்ளத்தாலே ப்ரத்யக்ஷித்துப் பேசுகிற பதிகம்.

***சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின*
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின*
ஏழ்பொழிலும் வளமேந்தியவென்னப்பன்*
வாழ்புகழ் நாரணன் தமரைக்கண்டுகந்தே.* (1)

என் அப்பன்	அஸ்மத் ஸ்வாமியாய்	தூரியம் முழக்கின	வாத்ய கோஷம் செய்வன போன்றிருந்தன;
வாழ் புகழ்	நித்ய கீர்த்தியுக்தனான	ஆழ் கடல்	ஆழமான கடல்கள்
நாரணன்	ஸ்ரீமந் நாராயணனுடைய	அலை திரை	அலைந்து வருகிற திரைகளை
தமரை	அடியார்களை	கை எடுத்து	கையாகக் கொண்டு
கண்டு உகந்து	வரக்கண்டுகளித்து	ஆடின	கூத்தாடின;
சூழ் விசும்பு	எங்கும் பரந்த ஆகாசத்திலே	ஏழ் பொழிலும்	ஸப்த த்வீபங்களும்
அணி முகில்	அழகிய மேகங்கள்	வளம் ஏந்திய	உபஹாரங்களைக் கையேந்தின.

கோயில் திருவாய்மொழி—சூழ்விசும்பணிமுகில்

நாரணன் தமரைக்கண்டுகந்து நன்னீர்முகில்
பூரணபொற்குடம் பூரித்தவுயர்விண்ணில்
*நீரணிகடல்கள் நின்றார்த்தன*நெடுவரைத்*
தோரணம்நிரைத்து எங்கும்தொழுதனருலகே. (2)

நாரணன் தமரை கண்டு	பாகவதர்களைக் கண்டு
நல் நீர் முகில்	நல்ல தீர்த்தம் நிறைந்த மேகமானது
உகந்து	மகிழ்ந்து
உயர் விண்ணில்	உயர்ந்த ஆகாசத்திலே
பூரணம் பொன் குடம் பூரித்தது	பூர்ண கும்பம் நிறைத்து வைத்தாற் போன்றிருந்தது ;
நீர் அணி கடல்கள்	நீரை வஹிக்கிற கடல்களானவை
நின்று ஆர்த்தன	நிலை நின்று கோஷித்தன :
உலகு	அந்தந்த லோகங்களிலுள்ளார்
நெடு வரை தோரணம் நிரைத்து	பெரிய மலைகளைத் தோரணங்களாக ஒழுங்கு படுத்தி
எங்கும் தொழுதனர்	எங்கும் தொழுதுகொண்டிருந்தார்கள்.

தொழுதனருலகர்கள் தூபநன்மலர்மழை
பொழிவனர் பூமியன்றளந்தவன் தமர்முன்னே*
எழுமினென்றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்
வழியிதுவைகுந்தர்க்கென்று வந்தெதிரே. (3)

அன்று	முன்பொருகால்
பூமி அளந்தவன் தமர் முன்னே	பூமியை யளந்துகொண்ட பகவானது அடியார்களின் ஸன்னிதியிலே
தூபம்	தூபம் ஸமர்ப்பிப்பதோடு
நல் மலர் மழை	நன்றான புஷ்பவர்ஷத்தை
பொழிவனர்	பொழிகின்றவர்களாய்க் கொண்டு
உலகர்கள்	அந்தந்த லோகங்களிலுள்ளவர்கள்
தொழுதனர்	தொழுதார்கள்.
முனிவர்கள்	ஆங்காங்குள்ள முனிவர்கள் (தாங்கள் மௌனமாயிருக்கும் விரதத்தைத் தவிர்ந்து)
வைகுந்தர்க்கு	"ஸ்ரீவைகுண்டத்தை நோக்கிப் போமவர்களுக்கு
வழி இது என்று	இதுதான் வழி" என்று சொல்லி
எதிரே வந்து	அபிமுகர்களாக வந்து
எழுமின் என்று	எழுந்தருளவேணும் எழுந்தருளவேணு மென்று எச்சரிக்கை யிட்டு
இரு மருங்கு இசைத்தனர்	இருபக்கங்களிலும் சொன்னார்கள்.

எதிரெதிரிமையவர் இருப்பிடம்வகுத்தனர்
கதிரவரவரவர் கைநிரைகாட்டினர்
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த
மதுவிரிதுழாய்முடி மாதவன் தமர்க்கே. (4)

மது விரி துழாய் முடி	தேன் பெருகுகின்ற திருத்துழாயைத் திருமுடியிலே யுடைய
மாதவன்	திருமாலினது
தமர்க்கு	அடியாரான பாகவதர்களுக்கு
இமையவர்	தேவர்கள்
எதிர் எதிர்	இவர்கள் போகிற வழிக்கு முன்னே
இருப்பு இடம் வகுத்தனர்	தங்குமிடங்களைச் சமைத்தார்கள் ;
கதிரவர்	த்வாதசாதித்யர்களும்
அவர் அவர்	மற்றுமுள்ளவர்களும் [ஆதிவாஹிக கணங்களெல்லாம்]
கை நிரை காட்டினர்	பார்த்தருளீர் ! பார்த்தருளீர் ! என்று கைகாட்டிக் கொண்டே சென்றார்கள் ;
அதிர் குரல் முரசங்கள்	அதிருகிற முழக்கத்தையுடைய பேரிகளானவை
அலை கடல் முழக்கு ஒத்த	அலையெறிகின்ற ஸமுத்ர கர்ஜனை போன்றிருந்தன.

*மாதவன்தமரென்று வாசலில்வானவர்**
*போதுமினெமதிடம் புகுதுகவென்றலும்**
*கீதங்கள்பாடினர் கின்னரர்கெருடர்கள்**
வேதநல்வாயவர் வேள்வியுள்மடுத்தே. (5)

வானவர்	வருணன் இந்திரன் பிரஜாபதி ஆகிய தேவர்கள்
வாசலில்	தம்தம் ஸ்தானங்களின் வாசல்களிலே வந்து
மாதவன் தமர் என்று	'இவர்கள் பரம பாகவதர்கள்' என்று சொல்லி ஆதரித்து
போதுமின்	"இங்ஙனே எழுந்தருளுங்கள்;
எமது இடம் புகுதுக	எங்களது அதிகார ஸ்தலங்களிலே பிரவேசியுங்கள்"
என்றலும்	என்று சொன்னவாறே
வேதம் நல்வாயவர்	(மேலுலகங்களிலே) வைதிகராயுள்ளவர்கள்
வேள்வி உள் மடுத்து	தாங்கள் செய்த தேவபூஜைகளின் பலன்களை ஸமர்ப்பிக்க
கின்னரர் கெருடர்கள்	கின்னரர்களும் கருடர்களும்
கீதங்கள் பாடினர்	கீதங்களைப் பாடினார்கள்.

*வேள்வியுள்மடுத்தலும் விரைகமழ்நறும்புகை**
*காளங்கள்வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்**
*ஆண்மின்கள்வானகம் ஆழியான்தமரென்று**
வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர்மகிழ்ந்தே. (6)

வேள்வி உள் மடுத்தலும்	(வைதிகர்கள்) தம் தம் தேவ பூஜாபலன்களை ஸமர்ப்பித்த வளவிலே
விரை கமழ்	பரிமளம் மிக்க
நறு புகை	ஸுகந்த தூபங்களானவை
எங்கும் கலந்து	எங்கும் வியாபிக்க
காளங்கள் வலம்புரி	திருச்சின்னங்களையும் சங்குகளையும்
இசைத்தனர்	ஊதினார்கள்;
வாள் ஒண் கண் மடந்தையர்	ஒளிமிக்க கண்களையுடைய தேவஸ்திரீகள்
ஆழியான் தமர்	"திருவாழியை யேந்திய எம்பெருமானுக்கு அடிமைப் பட்டவர்களே
வானகம் ஆண்மின்கள் என்று	இந்த ஸ்வர்க்காதிபதங்களை ஆளுங்கோள்" என்று சொல்லி
மகிழ்ந்து வாழ்த்தினர்	ப்ரீதியுடன் வாழ்த்தினார்கள்.

*மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும்**
*தொடர்ந்தெங்கும் தோத்திரஞ்சொல்லினர்*தொடுகடல்*
*கிடந்தவெங்கேசவன் கிளரொளிமணிமுடி**
குடந்தையன்கோவலன் குடியடியார்க்கே. (7)

தொடுகடல் கிடந்த	அகாதமான கடலிலே திருக்கண் வளர்ந்தருளின
எம் கேசவன்	எம்பெருமானை
கிளர் ஒளி மணி முடி	கிளர்ந்த வொளியையுடைய ரத்ன கிரீடத்தை யணிந்தவனாய்க் கொண்டு
குடந்தையன்	திருக்குடந்தையிலே கண் வளர்ந்தருளுகிற
கோவலன்	கோபாலனுக்கு
குடி அடியார்க்கு	குலங்குலமாக அடிமைப்பட்டவர்கள் விஷயத்திலே
மடந்தையர் வாழ்த்தலும்	அப்ஸரஸ்ஸுக்கள் பல்லாண்டு பாடினவளவிலே
மருதரும் வசுக்களும்	மருத்துக்களும் அஷ்டவஸுக்களும்
எங்கும் தொடர்ந்து	போமிடமெங்கும் தொடர்ந்து வந்து
தோத்திரம் சொல்லினர்	பல்லாண்டு பாடினார்கள்.

*குடியடியாரிவர் கோவிந்தன்றனக்கென்று**
*முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள**
*கொடியணிநெடுமதில் கோபுரம்குறுகினர்**
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே, (8)

இவர் கோவிந்தன் தனக்கு குடி அடியார் என்று	இவர்கள் பகவானுக்குக் குலங்குலமாக அடியவர்கள் என்று சொல்லி	வடிவு உடை மாதவன் வைகுந்தம் புக	அழகிய வடிவு படைத்த எம்பெருமானுடைய ஸ்ரீ வைகுண்டத்திலே பிரவேசிக்கைக் குறுப்பாக
முடி உடை வானவர்	சேஷத்வத்துக்குச் சூடின முடியையுடைய நித்ய ஸூரிகள்	கொடி அணி நெடு மதிள்	அலங்காரமாக வெடுத்துக் கட்டின கொடிகளையுடைய உயர்ந்த மதிளை யுடைத்தான
முறை முறை	கிரமம் தப்பாமல்		
எதிர் கொள்ள	'ஸ்வாகதம்' என்று சொல்லி யெதிர் கொண்டழைக்க	கோபுரம் குறுகினர்	தலைவாசலில் புகுந்தார்கள்.

*வைகுந்தம்புகுதலும் வாசலில்வானவர்**
*வைகுந்தன் தமர் எமரெமதிடம்புகுதென்று**
*வைகுந்தத்தமரும் முனிவரும்வியந்தனர்**
வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே. (9)

வைகுந்தம் புகுதலும்	ஸ்ரீவைகுண்டத்திலே சென்று புகுந்தவளவிலே	வியந்தனர்	உகந்தார்கள்;
		வைகுந்தத்து	அவ்விடத்திலே
வாசலில் வானவர்	திருவாசல் காக்கும் முதலிகளானவர்கள்	அமரரும் முனிவரும்	கைங்கர்ய நிஷ்டராயும் குணாநுபவநிஷ்டராயு முள்ளவர்கள்
வைகுந்தன் தமர் எமர்	"ஸ்ரீவைகுண்டநாதனுடையார்கள் எங்களுடைய ஸ்வாமிகள் (ஆகையாலே)	மண்ணவர் வைகுந்தம் புகுவது விதியே (என்று) வியந்தனர்	"லீலாவிபூதியி லிருந்தவர்கள் நித்ய விபூதியேற வருவது மஹாபாக்யமே!" என்று சொல்லி உகந்தார்கள்
எமது இடம் புகுது என்று	எங்களதிகாரத்திலே புக வேணும்" என்று சொல்லி		

*விதிவகைபுகுந்தனரென்று நல்வேதியர்**
*பதியினிற்பாங்கினில் பாதங்கள் கழுவினர்**
*நிதியுநற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்**
மதிமுகமடந்தையர் ஏந்தினர்வந்தே. (10)

விதி வகை புகுந்தனர் என்று	"நம்முடைய பாக்யாநுகுணமாக இவர்கள் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள்" என்று சொல்லி	நிதியும்	ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிதியான திருவடி நிலைகளையும்
		நல் சுண்ணமும்	ஸ்ரீ சூர்ணத்தையும்
		நிறை குடம்	பூரண கும்பங்களையும்
நல் வேதியர்	நல்வேதங்களாலே பிரதிபாதிக்கப்பட்ட நித்ய ஸூரிகள்	விளக்கமும்	மங்கள தீபங்களையும்
பதியினில்	தம்தம் திவ்ய ஸ்தானங்களிலே	மதி முகம் மடந்தையர்	பூர்ண சந்திரன் போன்ற முகத்தை யுடையவர்களான பரிசாரிகைகள்
பாங்கினில்	உபசாரங்களுடனே		
பாதங்கள் கழுவினர்	அவர்களது திருவடிகளை விளக்கினார்கள்;	வந்து ஏந்தினர்	ஏந்திக்கொண்டு எதிரே வந்தார்கள்.

***வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து**
*அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை**
*கொந்தலர்பொழில் குருகூர்ச்சடகோபன்*சொல்*
சந்தங்களாயிரத்து இவைவல்லார்முனிவரே, (11)

நித்யாநுஸந்தானவுரை

அவர் வந்து எதிர்கொள்ள	அந்த பெருமாளும் பிராட்டியும் வந்து எதிர்கொள்ள	கொந்து அலர் பொழில் குருகூர் சடகோபன்	பூங்கொத்து அலருகிற சோலைகளை யுடைத்தான திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்
மா மணி மண்டபத்து	திருமாமணி மண்டபத்தில்	சொல்	அருளிச் செய்த
அந்தம் இல் பேர் இன்பத்து	முடிவில்லாத மஹானந்தத்தை யுடைய	சந்தங்கள் ஆயிரத்து	வேதரூபமான ஆயிரம் பாசுரங்களில்
		இவை	இப்பத்துப் பாசுரங்களை
அடியரோடு	பரமபாகவதர்களோடே கூடி	வல்லார்	ஓதவல்லவர்கள்
இருந்தமை	இருந்தபடியை	முனிவர்	பகவத் குணங்களை மனனம் பண்ணும் முனிவராவர்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி—முனியே நான்முகனே.

அவதாரிகை:—*இத்திருவாய்மொழியில் ஆழ்வார் அவாவற்று வீடு பெற்றுத் தலைக்கட்டுகிறார்.*

***முனியேநான்முகனே முக்கண்ணப்பா* என்பொல்லாக்*

*கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமேயென்கள்வா**

*தனியேனாருயிரே யென்தலைமிசையாய்வந்திட்டு**

இனிநான்போகலொட்டேன் ஒன்றும்மாயம்செய்யேலென்னையே. (1)

முனியே	படைக்கும் வகையை மனனம் பண்ணுமவனே!	என் கள்வா	என்னை வஞ்சித்து ஈடுபடுத்திக் கொண்டவனே!
நான்முகனே	நான்முகனுக்கு அந்தர்யாமியா யிருக்குமவனே!	தனியேன் ஆர் உயிரே	என்னொருவனுக்குப் பரிபூர்ண ப்ராணனானவனே
முக்கண் அப்பா	ஸம்ஹாரக் கடவுளான ருத்ரனுக்கு அந்தர்யாமி யானவனே!	என் தலைமிசை ஆய் வந்திட்டு	என் தலைமேலே வந்து சேர்ந்தாயான பின்பு
கனிவாய் தாமரை கண்	கனிந்த அதரத்தையும் தாமரை போன்ற திருக்கண்களையு முடைய	இனி நான் போகல் ஒட்டேன்	இனி யொருகாலும் உன்னை அகன்றுபோக இசைய மாட்டேன்;
என் பொல்லா கரு மாணிக்கமே	துளையாத கருமாணிக்கம் போன்ற திருவுருவத்தை எனக்கு அநுபவிப்பித்தவனே!	என்னை	ஆர்த்தி மிகுந்த என்னை
		ஒன்றும் மாயம் செய்யேல்	ஒரு படியாலும் வஞ்சிக்கலாகாது.

*மாயம்செய்யேலென்னை உன்திருமார்வத்துமாலை நங்கை**

*வாசஞ்செய்பூங்குழலாள் திருவாணைநின்னாணைகண்டாய்**

*நேசஞ்செய்துன்னோடென்னை உயிர்வேறன்றியொன்றாகவே**

கூசஞ்செய்யாதுகொண்டாய் என்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ. (2)

என்னை மாயம் செய்யேல்	என் திறத்தில் வஞ்சனை பண்ணாதொழியவேணும்;	வாசம் செய் பூ குழலாள்	பரிமளம் மிக்க கூந்தலை யுடையவளான
உன் திரு மார்வத்து மாலை	உன்னுடைய திருமார்விலே சாத்திய மாலை போன்றவளாய்	திரு ஆணை	பெரிய பிராட்டி யாணை;
		நின் ஆணை	உன் ஆணை; கண்டாய்
		நேசம் செய்து	தானாகவே ஸ்நேஹித்து
நங்கை	ஸகல குணபரிபூர்ணையாய்	உன்னோடு	உன்னோடே

கோயில் திருவாய்மொழி—முனியே நான்முகனே

என்னை	நீசனான என்னை
உயிர் வேறு அன்றி	ஆத்ம பேதமில்லாமல்
ஒன்று ஆகவே	ஏக வஸ்துவாகவே
கூசம் செய்யாது	எனது தன்மையைப் பார்த்துக் கூசாமல்
கொண்டாய்	அடியே பிடித்து அங்கீகரித்தருளினாய் ;
	(ஆனபின்பு)
என்னை வந்து கூவி கொள்ளாய்	இனி உபேக்ஷியாதே என்னைத் திருவடி சேர்த்துக் கொள்ள வேணும்.

*கூவிக்கொள்ளாய்வந்தந்தோ என்பொல்லாக்கருமாணிக்கமே**
*ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்நான்**
*மேவித்தொழும்பிரமன்சிவன் இந்திரனாதிக்கெல்லாம்**
நாவிக்கமலமுதற்கிழங்கே உம்பரந்ததுவே. (3)

என் பொல்லாக் கருமாணிக்கமே	
மேவி தொழும்	விரும்பித் தொழுகின்ற
பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கு எல்லாம்	பிரமன் சிவன் இந்திரன் முதலானோர்க்கும்
முதல்	மூலகாரணமான
நாவி கமலம்	திருநாபிக் கமலத்திற்கு
கிழங்கே	இருப்பிடமானவனே !
உம்பர் அந்ததுவே	அவர்களினும் மேற்பட்ட நித்ய ஸூரிகளுக்கும் பரம ப்ராப்யனானவனே !
ஆவிக்கு	ஆத்மாவுக்கு
ஓர் பற்றுகொம்பு	ஓர் கொள்கொம்பு
நின் அலால்	உன்னைத் தவிர
நான் அறிகின்றிலேன்	நான் காண்கின்றிலேன் ; (ஆதலால்)

அந்தோ ! வந்து கூவிக் கொள்ளாய்—.

உம்பரந்தண்பாழேயோ அதனுள்மிசைநீயேயோ
*அம்பரநற்சோதி அதனுள்பிரமனரன்நீ**
*உம்பரும்யாதவரும்படைத்த முனிவனவன்நீ**
எம்பரம்சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே. (4)

உம்பர் அம் தண் பாழேயோ	மூல பிரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே !
அதனுள் மிசை நீயேயோ	அந்த ப்ரக்ருதிக்குள்ளே நிற்கிற ஆத்ம தத்வத்துக்கு நிர்வாஹகனானவனே
அம்பரம் நல் சோதி அதனுள் பிரமன் அரன் நீ	ஆகாசம் முதலானவற்றுக்கும் அண்டத்துக்குள்ளே யிருக்கிற பிரமன் சிவன் முதலானவர்களுக்கும் நிர்வாஹகன் நீ;
உம்பரும்	மேலான தேவர்களையும்
யாதவரும்	மனுஷ்யாதி ஸகல சேதநரையும்
படைத்த முனிவன் அவன் நீ	அவரவர்களது கருமங்களை மனனம் பண்ணி ஸ்ருஷ்டித்தவன் நீ ;
	(இப்படியாயிருக்க)
எம் பரம் சாதிக்கல் உற்று	என் காரியம் நீயே செய்வதாக ஏறிட்டுக் கொண்டு
	இவ்வளவும் வரநிறுத்தி)
என்னை போர விட்டிட்டாயே	என்னை இங்கேயே பொகட்டு வைத்தாயே.

போரவிட்டிட்டென்னை நீபுறம்போக்கலுற்றால் பின்னையான்*
*ஆரைக்கொண்டெத்தையந்தோ எனதென்பதென்யானென்பதென்**
தீரவிரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருக எனக்காராவமுதானாயே.* (5)

இரும்பு	காய்ச்சின இரும்பானது
தீர உண்ட	தன் காய்ச்சல் தீரும்படி உண்ட
நீர் அது போல	நீர்போலே
என் ஆர் உயிரை ஆர பருக	என் ஆத்மாவின் விடாயெல்லாம் தீரப் பருகுகைக்கு
எனக்கு ஆரா அமுது ஆனாயே	எனக்கு ஆராவமுதமாயிருக்கின்றாயே;
	(இப்படியிருக்க)
நீ என்னை போர விட்டிட்டு	நீ என்னை அநாதரித்து
புறம் போக்கல் உற்றால்	உபேக்ஷித்துப் பொகட்டால்
பின்னை	ஸர்வ சக்தியான நீயுமிப்படி கைவிட்ட பின்பு
யான்	அசக்தனான நான்
யாரைகொண்டு	எந்த உபாயத்தைக் கொண்டு

எத்தை	எந்த புருஷார்த்தத்தை (ஸாதிப்பேன் !)	எனது என்பது என்	என்னுடையது என்கைக்கு என்ன இருக்கிறது ?
அந்தோ	ஐயோ !	யான் என்பது என்	நான் என்கைக்கு ஒரு ஸ்வதந்த்ர கர்த்தா வுண்டோ ?

*எனக்காரவமுதாய் எனதாவியையின்னுயிரை**
*மனக்காராமைமன்னியுண்டிட்டா யினியுண்டொழியாய்**
*புனக்காயாநிறத்த புண்டரீகக்கண்செங்கனிவாய்**
உனக்கேற்கும்கோலமலர்ப்பாவைக்கன்பா என்னன்பேயோ. (6)

புனம் காயா நிறத்த	தன்னிலத்தில் அலர்ந்த காயாம் பூப்போன்ற நிறத்தையுடையையாய்	என் அன்பே	என் விஷயத்தில் அன்பு தானே வடிவெடுத்தாற் போன்றிருப்பவனே !
புண்டரீகம் கண் செம் கனிவாய்	தாமரை போன்ற திருக் கண்ணையும் சிவந்த திருப்பவளத்தையு முடையையான	எனக்கு ஆரா அமுது ஆய்	எனக்குப்பரம போக்யனாய்
உனக்கு	உனக்கு	எனது ஆவியை இன் உயிரை	என்னுடைய ஹேயமான ப்ரக்ருதியையும் விலக்ஷணனான ஆத்மாவையும்
ஏற்கும்	ஏற்றிருக்கின்ற	மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய்	ஹ்ருதயத்துக்கு த்ருப்தி பிறவாதபடி விரும்பி நிரந்தரமாக புஜித்தாய் ;
கோலம்	வடிவுபடைத்தவளான		
மலர்பாவைக்கு	பெரிய பிராட்டிக்கு	இனி உண்டொழியாய்	குறையும் பஜித்தேயாக வேணும்.
அன்பா	அன்பனே !		

* * *—'மனக்கு' என்றது 'மனத்துக்கு' என்றபடி; அத்துச்சாரியை பெறாதுவந்த பிரயோகம். "மாடக்குச் சித்திரமும்" என்றாற் போன்றது. (6)

***கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ**
*நீலவரையிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப**
*கோலவராகமொன்றாய் நிலம்கோட்டிடைக்கொண்டவெந்தாய்**
நீலக்கடல்கடைந்தாய் உன்னைப் பெற்றினிப்போக்குவனோ. (7)

கோலம் மலர் பாவைக்கு அன்பு ஆகிய என் அன்பே யோ	பெரிய பிராட்டியார்க்கு உகப்பான வத்தாலே அவள் பரிக்ரஹமான என் பக்கலிலே அன்பு செய்யுமவனே !	கோட்டிடை கொண்ட	எயிற்றிலே கொண்டெடுத்த
		எந்தாய்	எம்பெருமானே !
		நீலம் கடல்	உனது திருமேனி நிழலீட்டாலே நீலமான கடலை
நீலம் வரை	நீலமணி மலை யொன்று		
இரண்டு பிறை கவ்வி	இரண்டு பிறையைக் கவ்விக் கொண்டு	கடைந்தாய்	கடைந்து அமுதமளித்தவனே !
நிமிர்ந்தது ஒப்ப	எழுந்திருந்தாப் போலே		
கோலம் வராகம் ஒன்று ஆய்	விலக்ஷணமான அத்விதீய மஹா வராஹமாய்	உன்னை பெற்று	உன்னைப் புகலாகப் பெற்று வைத்து
நிலம்	பூமியை	இனி போக்குவனோ	கைபுகுந்த பின்பு நழுவவிடுவேனோ

*பெற்றினிப்போக்குவனோ உன்னையென் தனிப்பேருயிரை**
*உற்றவிருவினையாய் உயிராய்ப்பயனாயவையாய்**
*முற்றவிம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றிற்புக்கு**
முற்றக்கரந்தொளித்தாய் என்முதல்தனிவித்தேயோ. (8)

கோயில் திருவாய்மொழி—முனியே நான்முகனே

உற்ற இரு வினை ஆய்	ஆத்மாவைப் பற்றின புண்ய பாப ரூப கருமங்களுக்கு நிர்வாஹகனாய்	தூற்றில் புக்கு	இந்தத் தூறு தன்னுள்ளே புகுந்து
உயிர் ஆய்	கர்ம வச்யனான ஆத்மாவுக்கு நியந்தாவாய்	முற்ற கரந்து ஒளித்தாய்	ஒரு படியாலு மறிய வொண்ணாதபடி மறைந்து நிற்குமவனாய்
பயன் அவை ஆய்	கரும பலனான ஸுக துக்கங்களைக் கொடுப்பவனாய்க் கொண்டு	என் முதல் தனி வித்தே ஓ	எனக்கு உன்னைக் கிட்டுகைக்கு மூல ஸுக்ருதமாயிருப்பவனே !
இம் மூ உலகும் முற்ற பெரு தூறு ஆய்	இந்த மூவுலக மெல்லாமாகிற பெரிய தூற்றை யுண்டாக்கினவனாய்	உன்னை பெற்று இனி போக்குவனோ	இவ்வளவாக உன்னைப் பெற்று வைத்து இனி விடுவேனோ ?

*முதல்தனிவித்தேயோ முழுமூவுலகாதிக்கெல்லாம்**
*முதல்தனியுன்னையுன்னை யெனைநாள்வந்து கூடுவன்நான்**
*முதல் தனியங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்**
முதல்தனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலீயோ. (9)

முழு மூ உலகு ஆதிக்கு எல்லாம்	மூவுலகு தொடக்கமான எல்லாவற்றுக்கும்	முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவு இலீ ஓ	ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுக்கு நியாமகமாய் ஒப்பற்றதாய் தர்ம பூதஜ்ஞானத்தாலே எங்கும் வியாபித்ததாய் நித்யமான ஆத்மவர்க்கத்துக்கு நியாமகனானவனே !
முதல் தனி வித்தே ஓ	மூவகைக் காரணமுமானவனே !		
அங்கும் இங்கும் முழுமுற்று உறு	எங்கும் ஸமஸ்த பதார்த்தங்களையும் வியாபித்திருப்பதாய்		
முதல் தனி	அத்விதீய காரணமாய் போக மோக்ஷங்களாகிற	முதல் தனி உன்னை	முதல்வனாயும் அத்விதீயனாயுமிருக்கிற உன்னை
வாழ்	வாழ்ச்சிக்கு	உன்னை	அஸாதரணனான வுன்னை
பாழ் ஆய்	வினை நிலமான மூல ப்ரக்ருதிக்கு நியாமகனாய்	நான் எனை நாள் வந்துகூடுவன்	நான் எந்நாள் வந்து கூடக்கடவேன் ?

***சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ**
*சூழ்ந்ததனிற்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ**
*சூழ்ந்ததனிற்பெரிய சுடர்ஞானவின்பமேயோ**
சூழ்ந்ததனிற்பெரிய என்னவாவறச்சூழ்ந்தாயே. (10)

சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த	பத்து திக்கிலும் வ்யாப்தமாய்	சூழ்ந்து	கீழ்ச் சொன்ன இரண்டு தத்வங்களையும் வியாபித்து
		அதனில் பெரிய	அவற்றுக்கும் நிர்வாஹகமாய்
முடிவு இல்	நித்யமா யிருக்கிற	சுடர் ஞானம் இன்பமே ஓ	ஸங்கல்ப ரூபமாய் ஸுக ரூபமான ஞானத்தை யுடையவனே!
பெரு பாழே ஓ	ப்ரக்ருதி தத்வத்துக்கு நியாமகனாய் நிற்கிறவனே !		
சூழ்ந்து	(தர்ம பூத ஜ்ஞானத்தாலே) அதையும் வியாபித்து	சூழ்ந்து	அந்த தத்வத்ரயத்தையும் வளைத்துக் கொண்டு
அதனில் பெரிய பரம்	அதிற் காட்டிலும் பெரிதாய் மேற்பட்டதாய்	அதனில் பெரிய	அதிலும் மிகப் பெரிதான
நல் மலர் சோதி ஓ	விகஸ்வர தேஜோரூபமான ஆத்ம வஸ்துவுக்கும் ஆத்மாவானவனே !	என் அவா	என் அபிநிவேசமானது
		அற	தீரும்படியாக
		சூழ்ந்தாயே	வந்து ஸம்ச்லேஷித்தாயே !

**அவாவறச்சூழ் அரியையயனையரனையலற்றி*
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன*
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்* முடிந்த
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே. (11)

அவா அற	(அடியார்களின்) அபிநி வேசம் தீரும்படி
சூழ்	ஸம்ச்லேஷிப்பவனாய்
அரியை	இப்படி தாபத்தை ஹரிப்பவனாகையாலே ஹரியென்று திருநாமம் பெற்றவனாய்
அயனை	பிரமனுக்கு அந்தர்யாமியாய்
அரனை	ருத்ரனுக்கு அந்தர்யாமியாயிருக்கிற எம்பெருமானை
அலற்றி	கூப்பிட்டு
அவா அற்று வீடு பெற்ற	ஆசை தீர்ந்து வீடு பெற்றவரான
குருகூர் சடகோபன்	நம்மாழ்வார்

சொன்ன	அருளிச் செய்ததாய்
அவாவில்	பக்தியினாலுண்டானதான
அந்தாதிகளால்	அந்தாதித் தொடையான பாசுரங்களால் நிறைந்த
இவை ஆயிரமும்	இவ்வாயிரத்தினுள்ளே
முடிந்த அவாவில்	பரமபக்தியாலே (பிறந்ததான)
அந்தாதி	அந்தாதியான
இப்பத்து	இப் பதிகத்தை
அறிந்தார்	அறியக் கற்குமவர்கள்
பிறந்தே உயர்ந்தார்.	ஸம்ஸாரத்தில் பிறந்திருக்கச் செய்தேயும் உயர்ந்தவர்களாவர்.

* * *—உயர்வற வுயர்நல மென்கிற முதல் திருவாய்மொழி தொடங்கி *சூழ் விசும் பணிமுகிலுக்கு முன் திருவாய்மொழி வரையில் பரஜ்ஞானத்தையுள்ளே கொண்டிருக்கிற பர பக்தியினால் சென்றதென்றும், *சூழ்விசும்பணி முகிலில்* அந்தமில் பேரின்பத் தடிய ரோடிருந்தமை* என்று, அர்ச்சிராதிகதியாலே தேச விஷயத்திலே போய், பரிபூர்ணாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகள் திரளிலே கூடியிருந்ததாகக் கண்டு பேசுகையாலே அந்தத் திருவாய்மொழி பூர்ண பரஜ்ஞானத்தினால் சென்றதென்றும், அங்ஙனம் கண்டது மாநஸாநுபவமாய் பாஹ்யாநுபவ யோக்ய மல்லாமையாலே பெருவிடாய் பிறந்து கூப்பிட்டுத் தரிக்கமாட்டாமல் திருவாணை யிட்டுத் தடுத்துப்பேற்றேடே தலைக்கட்டின * முனியே நான்முகனென்கிற இத் திருவாய்மொழி பக்தியினுடைய சரமாவதியான பரமபக்தியாலே சென்றதென்றும் பூருவாசாரியர்களின் நிர்வாஹமென்பது இங்கு உணரத்தக்கது. இப் பாட்டில் " முடிந்தவவா " என்றது பரம பக்தியையே யாம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம் ஜீயர் திருவடிளே சரணம்

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
கோயில் திருவாய்மொழி உரை முற்றுப்பெற்றது.



குலசேகராழ்வார்

மாசிப்புனர்பூசம் காண்மினின்றுமண்ணுலகீர்*
தேசித்திவசத்துக்கேதென்னில் -* பேசுகின்றேன்
கொல்லிநகர்கோன் குலசேகரன்பிறப்பால்
நல்லவர்கள்கொண்டாடும்நாள்.



திருமங்கையாழ்வார்

மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்*
ஆறங்கம்கூறவவதரித்த -* வீறுடைய
கார்த்திகையில்கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார்*
வாய்த்தமலர்த்தாள்கள் நெஞ்சே வாழ்த்து.



ஸ்ரீ எம்பெருமானார் - ஸ்ரீபெரும்பூதூர்

எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா

ஸ்ரீ:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்

இராமாநுச நூற்றந்தாதி

நூறு வெண்பாவினாலேனும் நூறு கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது நூற்றந்தாதியாம். இத்திவ்யப்பிரபந்தம் நூறு பாசுரங்களுக்குமேல் அதிகமாக எட்டுப் பாசுரங்கள் கொண்டதாயினும் நூற்றந்தாதியென்னத் தட்டில்லை; நூறு, ஆயிரம் முதலிய பெரிய எண்களுக்குப் பத்தெட்டு குறையினும் மேற்படினும் அவை நூறு ஆயிரம் என்னத் தகுந்தவையேயாம்.

இப்பிரபந்தத்தில் நூற்றெட்டுப் பாசுரங்கள் அமைந்ததற்கும், பாட்டுத்தோறும் இராமாநுசத் திருநாமம் தட்டாமல் அநுஸந்திக்கப்பட்டிருப்பதற்கும் பெரியார் ஒரு காரணங் கூறுவர்:—எம்பெருமானார் திருவடிகளில் மிக்க அன்புபூண்டவர்கட்கு இப்பிரபந்தம் ஸாவித்ரிபோலே நித்யாநுஸந்தேயமாகவேணுமென்று பாட்டுத்தோறும் திருநாமத்தை வைத்து நூற்றெட்டுப் பாட்டாக அருளிச்செய்தார்—என்று. **ப்ரபந்ந ஸாவித்ரீ** என்றும் **ப்ரபந்ந காயத்ரீ** என்றும் இதனை நம்மவர் கூறிப் போருவர்கள்.

இப்பிரபந்தம் எம்பெருமானார் காலத்திலே அவதரித்ததாயினும், பெரிய பெருமாள் அமுதனார்க்கு அருளப்பாடிட்டு எம்பெருமானாரால் திருச்செவி சாத்தப்பட்டதாதலால் இது ஆழ்வார்களருளிச் செயல்களோடு சேர்ந்து அநுஸந்திக்கலாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின் ஆழ்வார் திவ்ய ப்ரபந்தங்கட்கு ஏற்பட்டுள்ள அநத்யயநம் இதற்கும் ஒக்கும்.

முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற நான்கு ஆயிரங்களுள் நான்காவதான இயற்பாவில் சரமப் பிரபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த நூற்றந்தாதி. ப்ரணவார்த்தமான முதலாயிரத்தோடு நம்மாழ்வார் விஷயமான பாகவதசேஷத்வத்தை ப்ரதிபாதிக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பைச் சேர்த்தாற்போல, கைங்கரியத்தில் களையறுப்பதான இயற்பாவுடனே இதனைச் சேர்த்து அநுஸந்திக்கை பொருத்தமுடைத்தேயாம்.

திருவரங்கத்தமுதனார் வரலாறு

இவ்வமுதனார், ஒரு பங்குனித்திங்களில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் மூங்கிற்குடியில் திருவவதரித்து, திருவரங்கம் பெரிய கோயிலில் இருந்ததுவே காரணமாகப் **பெரியகோயில் நம்பி** என்ற ப்ரஸித்தராய் வாழ்ந்துவந்தார்.

[அஷ்டப்பிரபந்தம் செய்தருளினவரும், பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவருமான "பிள்ளைப் பெருமாளையங்கார்" என்பவர்க்கு இவர் திருத்தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் சொல்லுவர்.]

இவர் ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹா நிபுணராய், தமக்குக் குலக்ரமமாகக் கிடைத்த ஸந்நிதி புரோஹித வ்ருத்தியையும் புராணபடந கைங்கர்யத்தையும் பெற்று மிகவும் ராஜஸராய்ச் செருக்குடன் வாழ்ந்துவரும் நாளிலே, உலகங்களை வாழ்விக்கத் திருவனந்தாழ்வானது திருவவதாரமாய்த் திருவவதரித்த எம்பெரு

மானுர் தமது இயற்கையின்னருளாலே இவரைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிக் கூரத்தாழ்வானுக்கு நியமிக்க, ஆழ்வானும் இவரை அநுவர்த்தித்து ஞானச்சுடர் கொளுத்தி எம்பெருமானுர் திருவடிக்கீழ்க் கொணர்ந்து சேர்க்க, எம்பெருமானுரும் அவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி ஆழ்வான் பக்கல் ஆச்ரயிக்கும்படி நியமிக்க, அப்படியே அவரும் ஆழ்வானை ஆச்ரயித்துத் தத்வஹித புருஷார்த்தங்களை ஐயந்திரிபறத் தெளிந்து ஆத்ம ஆத்மீயங்களை அந்த ஆசார்யன் திருவடிகளிலே ஸமர்ப்பித்து பரமப்ரவணராயிருந்தார். இப்படியிருக்கையில் ஸ்வாசார்யருடைய உகப்புக்கு உறுப்பாகத் தமக்கு ப்ராசார்யரான எம்பெருமானுர் விஷயமாக ஒன்றிரண்டு பிரபந்தங்களைச் செய்து அவற்றை எம்பெருமானுர் ஸந்நிதியிற் கொணர்ந்து வைக்க, எம்பெருமானுரும் அவற்றை அவிழ்த்துக் கடாக்ஷிக்க, அவை தமது திருவுள்ளத்துக்கு இசைந்திராமையாலே அவற்றைக் கிழித்தெறிந்துவிட்டு அவரை நோக்கி, 'நம்மைப்பற்றிப் பிரபந்தம் பாடவிருப்பம் உமக்கிருக்குமாகில், ஆழ்வார்களிடத்தும் உகந்தருளின நிலங்களினிடத்தும் நமது ப்ராவண்யம் தோற்றுமாறு ஒரு பிரபந்தம் செய்யும்' என்று நியமித்தருள, இவரும் அப்படியே செய்கிறேனென்று அந்த நியமநத்தை சிரஸாவஹித்து எம்பெருமானுர்க்கு ஆழ்வார்களிடத்திலும் திவ்ய தேசங்களிடத்திலுமுள்ள அன்பை நன்கு விளங்கவைத்து இந்தப் பிரபந்தத்தை அருளிச் செய்து எம்பெருமானுர் ஸந்நிதியிலேவந்து வணங்கி 'இதைக் கேட்டருளவேணும்' என்று பிரார்த்தித்து அநுமதி பெற்றுக் கூரத்தாழ்வான் முதலானோர் பேரோலக்சமாக இருக்கிற அங்குத்தானே இந்த பிரபந்தத்தை விண்ணப்பம் செய்ய, எம்பெருமானுர் மற்றை முதலிகளோடும் திருச்செவி சாத்தித் தலை துலுக்கிப் போரவுகந்தருளி, தம் திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கெல்லாம் அந்த பிரபந்தத்தை அன்று தொடங்கி என்றும் நித்யாநுஸந்தேயமாம்படி கற்பித்தருளியதும் தவிர, அவரது வாக்கு அமுதவாக்காயிருந்தமையால் அவர்க்கு அமுதன் என்ற திருநாமத்தையும் ப்ரஸாதித்தருளி மிகவும் கடாக்ஷித்தருளினுர். ஆகையால் அதுமுதல் 'பெரியகோயில் நம்பி' என்ற திருநாமம் மாறித் திருவரங்கத்தமுதனுர் என்ற திருநாமம் வழங்கத் தொடங்கிற்று. இப்பிரபந்தத்திற்கு **ப்ரபந்ந காயத்ரீ** என்ற திருநாமமும் அன்றே தொடங்கி நிகழலாயிற்று.

இந்த விருத்தாந்தம் சிறிது மாறுபாடாகவும் சொல்லப்படுவதுண்டு; எங்ஙனேயெனின் ;—அமுதனுர் எம்பெருமானுருடைய நியமனம் பெற்று இப்பிரபந்தம் இட்டருள்வதாக அடைய வளைந்தான் திருமதிலுக்கு இவ்வருகேயிருந்த ஒரு தென்னஞ்சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும்போது, அவ்வளவில் எம்பெருமானுர் அழகியமணவாளனது நியமநத்தினுல் ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய அந்தரங்கசிஷ்யர்களோடு அவ்விடத்தே யெழுந்தருள அப்போது "செழுந்திரைப்பாற்கடல்" என்ற நூற்றைந்தாம்பாசுரம் தலைக்கட்டி, இருப்பிடம் வைகுந்தமென்றபாசுரம் எழுத வேண்டிய தருணமாயிருந்ததென்றும், அது முதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானுர் திருமுன்பே தொடுக்கப்பட்டன வென்றும், பிறகு அரங்கேற்றியானபின் 'இந்த விசேஷத்துக்கு ஸ்மாரகமாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப் பாசுரங்கள் மூன்றுயிருக்கவேணும்' என்று ஆழ்வான் நியமித்தருளினுரென்றும் ஆனதுபற்றியே மற்றைப் பிரபந்தங்கட்கு இரண்டு பாசுரம் சாற்றுயிருப்பது போலல்லாமல் இதற்கு மூன்று பாசுரம் சாற்றுக ஸம்ப்ரதாயம் நிகழ்கின்றதென்றும்.

இராமாநுச நூற்றந்தாதியின் தனியன்கள்

தனியன்கள்—(வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்தவை.)

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்—என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

முன்னை வினை	முன்னே செய்த பாபங்களெல்லாம்	அணி ஆக	ஆபரணமாக
அகல	ஒழிவதற்காக,	சேர்த்தினேன்	பொருந்தவைத்துக் கொண்டேன் ;
மூங்கில் குடி அமுதன்	'மூங்கிற்குடி' என்னுங் குலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனுருடைய	யான்	இப்படி அமுதனுருடைய திருவடிகளைச் சூடப்பெற்ற அடியேன்
பொன் அம் கழல் கமலப் போது இரண்டும்	பொன் போல் அழகிய பாதாரவிந்தங்களிரண்டையும்	தென் புலத்தார்க்கு	தெற்குத்திக்கிலுள்ளாரான யமகிங்கரர்கட்கு
		என்னுக்கு	ஏதுக்காக
என்னுடைய சென்னிக்கு	எனது தலைக்கு	கடவு உடையேன்	ப்ராப்தி யுடையேன் ?

* * *—மூங்கிற்குடியென்ற மஹாகுலத்திலே தோன்றிய திருவரங்கத்த முதனுருடைய திருவடித் தாமரைகளை நான் சிரோபூஷணமாக அணிந்துகொண்டேன் ; அதனல் எனது ஸகல கருமங்களும் தீயினில் தூசாயொழிந்தன. இனி யம னுக்காவது யமபடர்களுக்காவது என்னருகே வருவதற்கு யாதொரு ப்ரஸக்தியு மில்லை : என்றாராயிற்று.

"முன்னை வினையகலச் சேர்த்தினேன்" என இயையும். [மூங்கிற்குடி] வேயர்குலம் ஆஸூரிகுலம், கூரகுலம் என்பனபோல மூங்கிற்குடி யென்று ஒரு குலமுண்டாம். கமலப்போது=தாமரைப்பூ. அணி=ஆபரணம். சேர்த்தினேன்=சேர்த்தேன் என்றபடி. இன்—சாரியை.

என்னுக்கு + கடவுடையேன் = என்னுக்கடவுடையேன் ; (கடைக்குறை) கெடுதல் விகாரப் புணர்ச்சி. என்னுக்கு—ஏதுக்காக என்கை ; "என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய்" என்றார் குலசேகரப் பெருமாளும். [கடவுடையேன்] கடவு—ப்ராப்தி ; அதாவது—உரிமை.

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்திஇராமாநுசமுனி தாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதி யோதவிசைநெஞ்சமே.

நெஞ்சமே	மனமே !,		
நயம் தரு	விஷயங்களால் தரப்படுகிற	உயர்ந்த குணத்து திரு அரங்கத்து அமுது	சிறந்த குணசாலியான திருவரங்கத் தமுதனர்
பேர் இன்பம் எல்லாம்	சிற்றின்பங்கள் யாவும்		
பழுது என்று	வ்யர்த்தங்களென்று (அவற்றை விட்டொழிந்து)	ஓங்கும் அன்பால்	கொழுந்து விட்டோங்கிய பக்தியினலே
நண்ணினர் பால்	தம்மை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில்	இயம்பும்	அருளிச்செய்த
சயம் தரு கீர்த்தி	ஸம்ஸார ஜயத்தைப் பண்ணிக் கொடுக்கும் புகழுடையரான	கலித்துறை அந்தாதி	கட்டளைக் கலித்துறையினல் அமைந்த நூற்றந்தாதியை
இராமாநுசமுனி	எம்பெருமானருடைய		
தாள் இணை மேல்	இரண்டு திருவடிகள் விஷயமாக	ஓத	அத்யயநம் செய்ய
		இசை	ஸம்மதித்திருக்கக் கடவை.

நித்யாநுஸந்தானவுரை

* * *—விஷயாந்தரங்களின் அநுபவத்தினுலுண்டாகும் சிற்றின்பங்கள் யாவும் அற்பங்களென்றும் ஹேயங்களென்றும் கருதி அருவருத்து அவற்றில் நசையற்றுத் தம்மைவந்து அடி பணிகின்ற மஹாநுபாவர்களுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்தருளி மோக்ஷத்தைத் தந்தருள்பவராய் இப்பெரும்புகழ் பரவப் பெற்றவரான எம்பெருமானுர் விஷயமாக, பகவத் - பாகவத பக்தி முதலிய மஹாகுணங்கள் நிறைந்த திருவரங்கத்தமுதனுர் பரம பக்தி தலையெடுத்துச் சொன்ன நூற்றந்தாதியென்னும் திவ்ய ப்ரபந்தத்தை ஓதுவதற்கு நெஞ்சே! நீ இசைந்திடாய் என்கிறுர்.

நயம்—விஷயாந்தரங்கள். "நாணுமை நள்ளேன் **நயம்**" (முதல் திருவந்தாதி) என்றவிடத்து, **நயம்** என்பதற்கு விஷயாந்தரங்களென்று பொருள் அருளிச்செய்யப் பட்டிருத்தல் காண்க. **பேரின்பம்**—சிற்றின்ப மென்னவேண்டுமிடத்துப் பேரின்ப மென்றது விபரீதலக்ஷணை.

சொல்லின் தொகைகொண்டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்துமுன் நாமமெல்லா மென்றன்நாவினுள்ளே
அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமயம்
வெல்லும்பரமவிராமாநுச விதென்விண்ணப்பமே.

அறு சமயம்	அப்ராமாணிகங்களான ஆறு மதங்களையும்	ஏத்தும்	துதிக்கிற
வெல்லும்	கண்டித்தருளின	உன் நாமம் எல்லாம்	தேவரீருடைய திருநாமங்களெல்லாம்
பரம	ஆரியரான	என் தன் நாவினுள்ளே	எனது நாவிலே
இராமானுச	எம்பெருமானுரே!	அல்லும் பகலும்	அஹோராத்ரமும்
உனது அடி போதுக்கு	தேவரீருடைய பாதாரவிந்தங்களிலே	அமரும்படி	பொருந்தியிருக்கும்படி
தொண்டு செய்யும்	வாசிக கைங்கரியம் பண்ணுகிற	நல்கு	க்ருபை செய்தருளவேணும்;
நல் அன்பர்	பரம பக்தர்கள்	இதுவே என் விண்ணப்பம்	இவ்வளவே அடியேன் செய்யும் விஜ்ஞாபனம்.
சொல்லின் தொகை கொண்டு	சப்த ராசிகளைக் கொண்டு		

[இம்மூன்று நனியன்களே ஸகல திவ்ய தேசங்களிலும் வழங்கு மவை; மற்றெரு தனியன் மேனுட்டில் அநுஸந்திக்கப் படுகிறதாம்;] அதாவது:

இனியென்குறைநமக் கெம்பெருமானுர்திருநாமத்தால்
முனிதந்தநூற்றெட்டுச் சாவித்திரியென்னு நுண்பொருளைக்
கனிதந்த செஞ்சொற்கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன்திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே.

(இதன் கருத்து :—) ஸர்வேச்வரன் ஆதியிலே ஸங்கல்பபூர்வகமாக உலகத்தைப் படைத்து முதலிலே சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஸாவித்ரியை உபதேசித்தான். இவ்வமுதனுர் அந்த ஸாவித்ரியின் ஸாரார்த்தத்தை யெடுத்து இராமாநுசன் என்னுந் திருநாமத்தோடிணக்கிக் கட்டளைக் கலித்துறையிலே வைத்துத் தாம் அநுபவித்த அநுபவத்தின் பரீவாஹரூபமாக இந்நூற்றந்தாதியைப் பாடிப் பின்புள்ளாரான நமக்கும் உபகரித்தருளினுர். இனி நமக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் ஒரு குறையுமில்லை என்பதாம். "திரு நாமத்தால்" என்ற விடத்து, திருப்பெயரால் என்று பாடமிருப்பின் வெண்டளைக்குச் சேரும்.

தனியன் உரை முற்றிற்று.

இராமாநுச நூற்றந்தாதி

இராமாநுச நூற்றந்தாதி உரையின் அவதாரிகை.

ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸங்க்ரஹம் திருவஷ்டாக்ஷரம். அதனுடைய பரம தாத்பர்யமாயும், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தமாயும், ஸ்ரீ மதுரகவிகளுடைய உக்தியாலும் அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிதமாயும், நம் பூருவாசார்யர்களின் உபதேச பரம்பரையாலே ப்ராப்தமாயும், சேதநர்களனைவர்க்கும் இன்றியமையாத ஸ்வரூப புருஷார்த்தங்களின் நிஷ்க்ருஷ்ட வேஷமாயும், பரம ரஹஸ்யார்த்தமாயிருப்பது சரமபர்வ நிஷ்டை. அஃதிருக்கும்படியைத் திருவரங்கத்தமுதனார்க்கு எம்பெருமானார் தமது நிர்ஹேதுகக்ருபையினாலே கூரத்தாழ்வான் திருவடிகளிலே இவரை ஆச்ரயிப்பித்தருளி இவர் முகமாக உபதேசித் தருளினார். அங்ஙனம் உபதேச ப்ராப்தமான அந்தச் சீரிய பொருளை இவ்வமுதனார் தாம் அநவரத பாவனை பண்ணி எம்பெருமானார் திருவடிகளை இடைவிடாது ஸேவித்துக் கொண்டு போந்தாராய் அவருடைய திருக்கல்யாண குணங்களைத் தமது பத்திப் பெருங்காதலுக்குப் போக்குவீடாகப் பேசி அநுபவித்தே தீரவேண்டும்படியான நிலைமை தமக்கு உண்டானமையாலும், சரமபர்வ நிஷ்டையே சீரியதென்கிற பரமார்த்தத்தைச் சேதநர்கட்கு எளிதில் உணர்த்த வேணுமென்கிற க்ருபா மூலகமான கருத்தினாலும் தாம் எம்பெருமானாருடைய திவ்யகுண சேஷ்டிதாதிகளை ப்ரேமத்துக்குத் தகுதியாகப் பேசுகிற பாசுரங்களாலே அவருடைய வைபவங்களை அனைவர்க்கும் வெளியிடா நின்றுகொண்டு முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கே அற்றுத்தீர்ந்த மதுரகவிகள் தமது நிஷ்டையைக் கூறும் முகத்தாலும் பிறர்க்கு உபதேசிக்கும் முகத்தாலும் உஜ்ஜீவநத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தை லோகத்திலே வெளியிட்டருளினதுபோல, இவர் தாமும் அவ்வகைகளாலே ஆசார்யாபிமாநநிஷ்டர்க்கு அறிந்துகொள்ளத்தக்க அர்த்தங்களையெல்லாம் மிக்க சுருக்கமும் மிக்க விரிவுமின்றி நூற்றெட்டுப் பாசுரங்கள் கொண்ட இத்திவ்ய ப்ரபந்த முகத்தால் அருளிச்செய்கிறார்.

**பூமன்னுமாதுபொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்னவந்தவிராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சேசொல்லுவோமவன் நாமங்களே. (1)

நெஞ்சே :	ஓ மனமே !	பணிந்து	ஆச்ரயித்து
பூ மன்னு மாது	தாமரைப் பூவில் பொருத்தமுடையளாயிருந்த பிராட்டி	உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவரும்
பொருந்திய மார்பன்	(அப்பூவை விட்டு வந்து) பொருந்துகைக் குறுப்பான போக்யதையை யுடைய திருமார்பை யுடையனான பெருமானுடைய	பல் கலையோர் தாம் மன்ன வந்த	பலபல சாஸ்த்ரங்களை ஓதின மஹான்கள் நிலைபெறும்படி (இவ்வுலகில்) வந்தவதரித்தவருமான
		இராமாநுசன்	எம்பெருமானாருடைய
புகழ் மலிந்த பா	திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ்ப் பாசுரங்களிலே	சரண அரவிந்தம்	திருவடித் தாமரைகளை
		நாம் மன்னி வாழ	நாம் ஆச்ரயித்து வாழ்வதற் குறுப்பாக
மன்னு மாறன்	ஊற்ற முடையவரான நம்மாழ்வாருடைய	அவன் நாமங்களே	அவ்வெம்பெருமானரது திருநாமங்களையே
அடி	திருவடிகளை	சொல்லுவோம்	ஸங்கீர்த்தநம் பண்ணுவோம்.

* * *—தாமரைமலரிற் பிறந்த பெரிய பிராட்டியார் அப்பூவை விட்டு "அகலகில்லேன் இறையும்' என்று வந்து மிக்க விருப்பத்துடன் வஸிக்கப்பெற்ற திருமார்பை யுடையனான திருமாலினது திவ்ய குணசேஷ்டிதங்களை நிறைத்துக்கொண்

டிருக்கிற திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளைத்தொழுது ஸத்தை பெற்றவராயும், பலபல சாஸ்த்ரங்களைக் கற்றும் உஜ்ஜீவநோபாயத்தில் த்ருடாத்யவஸாயமின்றியே ஸம்சய விபர்யயங்கள் கொண்டு தடுமாறுகின்றவர்களை ஒரு நிச்சயஜ்ஞானத்திலே நிலைநிறுத்தி வாழ்விக்க வந்தவதரித்தவராயுமிருக்கிற எம்பெருமானாருடைய திருவடிகளை நாம் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு அவருடைய திருநாமங்களை வாயாரப் பேசுவோமென்று தமது திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லுகிறாராயிற்று.

பல்கலையோர் தாம்மன்ன=நாநா சாஸ்த்ரங்களைக்கற்று வல்லவர்களான ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய மஹான்கள் ப்ரதிஷ்டிதராகைக்காக என்றபடி. எம்பெருமானாருடைய சரணாரவிந்த ப்ராப்திக்கு ஸாதநம்=அவருடைய திருநாம ஸங்கீர்த்தநமேயாம் என்பது இப்பாசுரத்தில் வெளியாயிற்று. ... (1)

**கள்ளார்பொழில்தென்னரங்கன் * கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளாமனிசரைநீங்கி * குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமாநுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே (2)

கள் ஆர் பொழில் தென் அரங்கன்	தேன் நிறைந்த சோலைகளையுடைய தென் திருவரங்கத்திலே பள்ளிகொள்ளும் பெருமானுடைய	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
கமலம் பதங்கள்	தாமரைபோன்ற திருவடிகளை	மிக்க சீலம் அல்லால்	சிறந்த சீலகுணத்தைத் தவிர
நெஞ்சில் கொள்ளா	தமது நெஞ்சிலே வையாத	ஒன்று	வேறொன்றையும்
மனிசரை நீங்கி	மனிதர்களை விட்டொழித்து	என் நெஞ்சு உள்ளாது	எனது நெஞ்சானது நினைக்க மாட்டாது; (இவ்வாறு)
குறையல் பிரான்	திருமங்கை மன்னனுடைய திருவடிகளிலே என்றும்	எனக்கு உற்ற பேர் இயல்வு	எனக்கு வாய்த்ததொரு சிறந்த ஸ்வபாவத்திற்கு
அடிக்கீழ் விள்ளாத அன்பன்	விட்டு நீங்காத பக்தியையுடையரான	ஒன்று அறியேன்	ஒரு காரணத்தையும் அறிகின்றிலேன்.

***—ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளை நெஞ்சாலும் நினையாத பாவிகளோடு நெடுங்காலம் பழகிக்கிடந்த என்நெஞ்சானது இன்று அப்பாவிகளோடு உறவை ஒழித்துவிட்டு, திருமங்கையாழ்வாருடைய திருவடிகளையே அநவரதம் இறைஞ்சுமவரான எம்பெருமானாருடைய சிறந்த சீலகுண மொன்றையே சிந்தியாநின்றது; இப்படிப்பட்டதொரு பெருந்தன்மை எனக்கு நேர்ந்ததற்குக் காரணம் அவ்வெம்பெருமானாருடைய நிர்ஹேதுக க்ருபாகடாக்ஷமேயொழிய வேறொன்றுண்டாக நானறிகின்றிலேன் என்றவாறு (2)

பேரியல்நெஞ்சே அடிபணிந்தேனுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ளசுற்றம்புலர்த்தி * பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமாநுசமுனிக்கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே, (3)

பேர் இயல் நெஞ்சே!	மிகவும் கம்பீரமான மனமே!	பேய் பிறவி	ஆஸுரப் பிறப்பையுடையவர்களான
உன்னை அடி பணிந்தேன்	உன்னை வணங்குகின்றேன்; (என்னை வணங்குவது எதற்காக என்னில்;)	பூரியரோடு உள்ள	நீசர்களோடு (எனக்கு) இருந்த
		சுற்றம்	உறவை
		புலர்த்தி	போக்கடித்து

பொருவு அரு சீர்	ஒப்பற்ற குணங்களையுடையவரும்	அன்பு செய்யும் சீரிய பேறு உடையார்	பக்தி பண்ணுவதையே பரம புருஷார்த்தமாக வுடையவர்களான கூரத்தாழ்வான் போல்வாருடைய
ஆரியன்	சிறந்த அநுஷ்டாந முடையவரும்	அடிக்கீழ் என்னை	திருவடிகளின் கீழே (பரம நீசனாயிருந்த) என்னை
செம்மை	(ஆச்ரிதரோடு) ருஜுவாகப் பரிமாறுந்தன்மை வாய்ந்தவருமான	சேர்த்ததற்கே	கொண்டு சேர்த்த மஹோபகாரத்திற்காகவே (உன்னை அடிபணிந்தேன்).
இராமாநுச முனிக்கு	எம்பெருமானார் திறத்தில்		

பரம நீசர்களோடு எனக்கிருந்த ஸம்ஸர்க்கத்தைப் போக்கடித்து, ஒப்பற்ற குணசாலியான எம்பெருமானாருடைய திருவடிகளில் ப்ராவண்யமாகிற பரமபுருஷார்த்தத்தைப் பெற்றுள்ள ஆழ்வான் போல்வாருடைய திருவடிகளின் கீழே என்னைக் கொண்டு சேர்த்த நெஞ்சே! இப்பெரு நன்றிபுரிந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? "தலையல்லால் கைம்மாறிலேனே" என்றாற்போல உன்னைத் தலையால் வணங்குவது தவிர வேறொரு கைம்மாறு நான் செய்யகில்லேன் என்றாராயிற்று. **பூரியர்**=இழிபிறப்பாளர். **புலர்த்துதல்**—உலரச் செய்தல்; அதாவது போக்கடித்தல். **பொருவு—ஒப்பு.**

"இராமாநுசனடிக் கன்புசெய்யுஞ் சீரிய பேறுடையார்" என்றவிடத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களெல்லாரையும் விவக்ஷிக்கிறார் என்றலும், கூரத்தாழ்வானை விசேஷித்துக் கருதுகின்றாரென்றலும் ஒக்கும். (3)

என்னைப்புவியிலொருபொருளாக்கி * மருள்சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்து * ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன் பரன்பாதமுமென்
சென்னித்தரிக்க வைத்தான் * எனக்கேதுஞ்சிதைவில்லையே. (4)

ஊழி முதல்வனையே	காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான எம்பெருமானையே	மருள் சுரந்த முன்னை பழவினை வேர் அறுத்து	அஜ்ஞான மூலகங்களாய் மிகவும் அநாதிகளான (எனது) பாவங்களை வேரற நீக்கி
பன்ன	(எல்லாரும் விவேகித்து) அநுஸந்திக்கும்படி	பாதமும்	தமது திருவடிகளையும்
பணித்த	(ஸ்ரீ பாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த	என் சென்னி	எனது தலையிலே
பரன் இராமாநுசன்	ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார்	தரிக்க வைத்தான்	நான் உகந்து தரிக்கும்படியாக வைத்தருளினார்; (இவ்வளவு மஹாப்ரஸாதம் பெற்றேனான பின்பு)
புவியில்	இந்தப் பூமியிலே	எனக்கு	அடியேனுக்கு
என்னை ஒரு பொருள் ஆக்கி	(அபார்த்தமாய்க் கிடந்த) என்னை ஒரு பதார்த்தமாக்கி	ஏதும் சிதைவு இல்லை	எவ்விதமான ஹாநியும் இனி உண்டாக வழியில்லை.

* * *—எம்பெருமானாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு ஆளான நான் இனி ஒரு நாளும் எவ்விதமான ஹாநியையும் அடையமாட்டேன் என்கிறார். பதார்த்த கோடியில் சேராமல் துச்சனாயிருந்த எனது கருமங்களையெல்லாம் வேரற நீக்கி, தமது பாதாரவிந்தங்களையும் என் தலைமேலே வைத்தருளினார் எம்பெருமானார்; இப்பேறு பெற்ற எனக்கு இனி ஒரு குறையுமில்லை என்றாராயிற்று.

மருள் சுரந்த—அஜ்ஞானத்தாலே செய்யப்பட்ட என்கை; மருளாலே சுரக்கப்பட்ட என்றவாறு **[ஊழிமுதல்வனையே பன்னப்பணித்த]** ஊழிமுதல்வனான எம்பெரு

மானையே பரவும்படி அமுதனாராகிய தம்மைச் செய்தருளின—என்று அர்த்தமல்ல; பகவத்விமுகரா யிருந்தவர்களை யெல்லாம் உபதேசாதி முகத்தாலே பகவத் ப்ரவண ராம்படி செய்தருளினவர் என்று பொதுப்படையாகச் சொன்னபடி. ஊழிமுதல்வன்—பிரளயகாலத்தில் முழுமுதற் கடவுளாயிருந்தவன் என்றுமாம். (4)

எனக்குற்றசெல்வமிராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன் திருநாமங்கள்சாற்றும், என்பா
வினக்குற்றங்காணகில்லார் * பத்தியேய்ந்தவியல்விதென்றே. (5)

எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் என்று	'நமக்கு ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானாரே' என்று	உற்ற	தகுதியான
இசைய கில்லா	அத்யவஸாயங் கொண்டிருக்க மாட்டாத	அன்பர்	அன்பை யுடையவர்களான மஹான்கள்
மனக்குற்றம் மாந்தர்	துஷ்ட ஹ்ருதயர்களான மனிசர்	பத்தி ஏய்ந்த இயல் விது என்று	இந்நூலானது பக்தியோடு கூடின ப்ரவ்ருத்தியை யுடையதென்று (திருவுள்ளம்பற்றி)
பழிக்கில்	(இந்நூலைப்) பழிப்பர்களாகில்		
புகழ்	(அன்னவர்களுடைய பழிப்பே இதற்குப்) புகழாய்விடும்;	அவன் திருநாமங்கள் சாற்றும் என் பா இனம் குற்றம் காணகில்லார்	அவ்விராமாநுசனுடைய திருநாமங்களைச் சொல்லுகின்ற என்னுடைய (இந்தப்) பாசுர மாலைகளிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள்.
அவன்	அவ்வெம்பெருமானுடைய		
மன்னிய சீர் தனக்கு	நித்யஸித்தமான கல்யாண குணங்களுக்கு		

* * *—உலகத்தில் ஒரு பிரபந்தம் பிறந்தால் அதனைத் தூஷிப்பார் பலரும், பூஷிப்பார் சிலரும் ஏற்படுவது வழக்கம். உண்மையில் தோஷங்கள் இல்லாதிருந்தாலும் எதையாவது சொல்லித் தூஷித்தே தீருவர்கள்; குற்றங் குறைகள் இருந்துவிட்டால் தூஷகர்களின் உத்ஸாஹம் கேட்கவே வேண்டியதில்லை. அறிவிலியான நான் இயற்றும் இந்நூலில் தோஷங்கள் தான் மிகையாக இருக்கக்கூடும்; அவற்றைக்கண்டு சிலர் நிந்திப்பர்களாகில், அன்னவருடைய தூஷணம் நமக்கு பூஷணமேயா மித்தனை என்கிறார்.

'பிறருடைய பழிப்பு நமக்கு அப்ரயோஜகம்' என்று சொல்லவேண்டியிருக்க, அவர்களுடைய பழிப்புத்தானே நமக்குப் புகழாம் என்கைக்குக் கருத்தென்? அவர்களது பழிப்பு இவர்க்கு எப்படி புகழாய் விடும்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். அவர்கள் தெளியுமாறு சொல்லுகிறோம்;—அமுதனாராம் ஒருவர்; அவர் இராமாநுச நூற்றந்தாதி என்றொரு பிரபந்தம் பாடினாராம்; அதில் ஒவ்வொருபாட்டிலும் இராமாநுசன் என்று சொன்னதையே சொல்லிக்கொண்டு கிடக்கிறார். தவிரவும், சாஸ்திரங்களில் புருஷார்த்தமாகச் சொல்லப்பட்டுள்ள ஐச்வர்யம் முதலானவற்றை இகழ்ந்துரைக்கிறார்; ஸகல புருஷார்த்தங்களும் தமக்கு 'உடையவர்' தானாம்; எம்பெருமானைக்கூட அவர் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாராம். என்றிவைபோல்வன சில வார்த்தைகளைச் சொல்லிப் பழிப்பர்கள். வாஸ்தவத்தில் இவையெல்லாம் குணமேயாதலால் குணகீர்த்தநத்தில் சேர்ந்து புகழ்ச்சியேயாய்முடியக் குறையில்லையென்க. எம்பெருமானைப் பழித்த சிசுபாலாதிகளும் பர்யாயேண குணகீர்த்தநம் பண்ணினார்களாகவன்றோ உய்ந்து போனது. (5)

இயலும்பொருளு மிசையத் தொடுத்து * ஈன்கவிளன்பால்
மயல்கொண்டு வாழ்த்துமிராமாநுசனை * மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்றன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (6)

ஈன் கவிகள்	விலக்ஷணரான கவிகள்	கவிகளில்	பாடல்களிலே
அன்பால்	ப்ரீதியினாலே	பத்தி இல்லாத	பக்தியற்றதான
இயலும் பொருளும்	சப்தமும் அர்த்தமும்	என் பாவி நெஞ்சால்	என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே
இசைய	நன்கு பொருந்தும்படியாக	அவன் தன்	அவ்வெம்பெருமானாருடைய
தொடுத்து	கவனம் பண்ணி	பெரு கீர்த்தி மொழிந்திட	அளவற்ற கீர்த்திகளை பேசுவதாக
மயல் கொண்டு	வ்யாமோஹம் தலையெடுத்து	மதி இன்மையால் முயல்கின்றனன்	புத்தியில்லாமையினாலே ப்ரவர்த்திக்கின்றேன்.
வாழ்த்தும்	துதிக்கும்படி நின்ற		
இராமாநுசனை	எம்பெருமானாரை		
பயிலும்	வருணிக்கின்ற		

* * *—"பத்தியேய்ந்த வியல்விதென்றே" என்று கீழ்ப்பாட்டிற் சொன்னவிவர், அப்படிப்பட்ட பக்தி தமக்கு உண்டோவென்று பார்த்தார்; "அந்தோ! நாமோ அவ்வெம்பெருமானாரைத் துதிக்க இழிந்தது" என்று தம்மைத்தாமே வெறுத்துக் கொள்ளுகிறார் இதில்.— இன்கவி பாடும் பரமகவிகளான சில மஹான்கள் சொல்லின்பமும் பொருளின்பமும் நன்கு பொருந்துமாறு கவி பண்ணி ஆந்தரமான அன்பினாலே வ்யாமோஹித்து இராமாநுசனை வாழ்த்தாநிற்பர்கள்; அன்னவர்களுடைய பக்திபரீவாஹ ரூபமான கவிகளில் ஆதரமற்ற எனது பாவி நெஞ்சால் அவ்விராமாநுசனுடைய பெருப்பெருத்த புகழ்களையெல்லாம் பேசுவதாக நான் முயல்கின்றேனே! இஃது என்ன புத்திகெட்ட தன்மை! என்று வெறுத்துக் கொள்ளுகிறார். (6)

** மொழியைக்கடக்கும்பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்துமிராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினியாதும் வருத்தமன்றே. (7)

மொழியைக் கடக்கும்	வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான	சரண்	திருவடிகளை
பெரு புகழான்	பெரிய புகழை யுடையவரும்	கூடியபின்	நான் ஆச்ரயித்த பின்பு
முக்குறும்பு ஆம் வஞ்சக் குழியை கடக்கும்	கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்னும் மூவகைக் குறும்புகளாகிற படுகுழியைக் கடந்திருப்பவரும்	பழியை கடத்தும்	ஸர்வ பாப நிவர்த்தகரான
நம்	நமக்கு நாதருமான	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
கூரத்து ஆழ்வான்	கூரத்தாழ்வானுடைய	புகழ் பாடி	நற்குணங்களைப்பாடி
		அல்லா வழியை கடத்தல்	ஸ்வரூபத்திற்குச் சேராத தீய வழிகளைத் தப்பிப்பிழக்கையானது
		எனக்கு	அடியேனுக்கு
		இனி	இனிமேலுள்ள காலமெல்லாம்
		யாதும் வருத்தம் அன்று	ஈஷத்தும் ப்ரயாஸ ஸாத்யமன்று; [எளிதேயாம்]

* * *—எம்பெருமானாரைத் துதிப்பதற்குத் தாம் யோக்யதையற்றவர் என்று பின்வாங்கப்பார்த்த அமுதனார், தமக்குள்ள ஆழ்வான் திருவடி ஸம்பந்தத்தை நினைத்து இஃது இருக்கும்போது எனக்கு அஸாத்யமானது ஒன்றுமில்லையென்று

துணிவு கொள்ளுகிறார் இதில். வாய்கொண்டு வருணிக்கமுடியாத பெரும்புகழ் படைத்தவரும், கல்வி, செல்வம், குலம் என்ற மூன்றுவகை ஸம்பத்தும் புஷ்கலமாயிருந்தும் அவற்றால் இஸ்றையும் அஹங்கார மடையாதவருமான கூரத்தாழ்வானுடைய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்து க்ருதக்ருத்யனான வெனக்கு எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் பாடுதலும் அதுவே காரணமாக அர்ச்சிராதிகதி யொழிந்த மற்ற கதிகளிற் போகாதபடி அவ்வழியே போதலும் மிகவுமெளிதேயாம் என்றாராயிற்று.

நம் பூருவாசாரியர்கள் எல்லாருமே சிறந்த புகழுடையராயினும் ஆழ்வானுடைய புகழ் அத்யந்த விலக்ஷணமென்பது ப்ரஸித்தமான விஷயம். நம் தர்சநத்துக்கு மஹாத்ரோஹியான நாலூரானுக்குக் கொடிய நரகங்களைக் கொடுக்க வேணுமென்று பகவத்ஸந்நிதியிலே ப்ரார்த்திக்கவேண்டியிருக்க, பேரருளாளன் திருமுன்பே வரதராஜஸ்தவத்தை விண்ணப்பம்செய்து கண்தெரியும்படி வரம்வேண்டிக்கொள்ளீர் என்ற ஸ்வாசார்ய நியமநத்தையும் அதிக்ரமித்து "நான் பெற்றபேறு நாலூரானும் பெறவேணும்" என்று வரம் வேண்டிக்கொள்ளும்படி விசாலமான திருவுள்ளம் பெற்ற ஆழ்வானுடைய புகழை நாம் என்சொல்வோம்! "மொழியைக்கடக்கும் பெரும்புகழான்" என்று சொல்லுவது தவிர வேறு வாசக மில்லைகாணும்.

[வஞ்சமுக்குறும்பாமித்யாதி.] கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச் செருக்கு என்ற இம்மூன்று அஹங்காரங்கள் மிகக்கொடியவை; இவற்றைக் கடத்தல் ஆர்க்கும் அரிது; இவற்றைக் கடந்தவர் என்னும் ஏற்றம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரண மென்பதாக எம்பெருமானார் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. திருவாய்மொழியில் "பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பன்" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் ஆழ்வான் விஷயமாக அருளிச் செய்யப்பட்டதொரு ஐதிஹ்யம் குறிக்கொள்ளத்தகும். மற்றும்பல இதிஹாஸங்களும் பன்னி யுரைக்குங்காற் பாரதமாம். (7)

*வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான்மறையின்*
*குருத்தின்பொருளையும்செந்தமிழ்தன்னையுங்கூட்டி * ஒன்றத்*
திரித்தன்றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
*யிருத்தும் பரமன் * இராமாநுசனெம்மிறையவனே.* (8)

வருத்தும்	வருத்தத்தை யுண்டுபண்ணக் கூடிய
புறம் இருள்	பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞானமாகிற இருளை
மாற்ற	போக்குவதற்காக
எம் பொய்கைப் பிரான்	நமது குலத் தலைவரான பொய்கையாழ்வார்
அன்று	முற்காலத்தில்
மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்ற திரித்து	வேதாந்தங்களிற் பதிந்து கிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையுங் கூட்டி இரண்டையும் ஒன்று சேர ஒரு திரியாக்கி
எரித்த திருவிளக்கை	ஜ்வலிக்கச்செய்த (முதல் திருவந்தாதியாகிற) திருவிளக்கை
தன் திரு உள்ளத்தே	தனது திருவுள்ளத்திலே
இருத்தும்	வைத்துக்கொண்டிரா நின்ற
பரமன் இராமாநுசன்	மஹாவைபவசாலியான எம்பெருமானார்
எம் இறையவன்	நமக்கு ஸ்வாமி.

* * *—பகவத்பாகவத விஷயம் அந்தரங்க விஷயமென்றும், சப்தாதி விஷயங்கள் பாஹ்ய விஷயம் (அதாவது-புறவிஷயம்) என்றும் சொல்லப்படும். அந்த பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞாநாந்தகாரமானது புறவிருள் எனப்படும்; [புறம்பான விஷயங்களைப்பற்றி — இருள் புறவிருள்] அவ்விருளானது முதலிலே ஸ்வரூபம்

போல் தோற்றினாலும் பிறகு மிக்கவருத்தத்தை விளைக்கக்கூடியது; அப்படிப்பட்ட கொடிய இருளை அகற்றுவதற்காகப் பொய்கையாழ்வார் “வையம் தகளியா வார் கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக” என்று தொடங்கித் திருவந்தாதி திவ்ய ப்ரபந்தமென்னும் ஒரு விளக்கை ஏற்றியருளினார். அவ்விளக்குக்கு எதைத் திரியாக்கினார் என்றால், வேதாந்தங்களில் திரண்டு கிடக்கும் ஸாரப் பொருள்களையும் இனிய தமிழ்ச்சொற்களையும் ஒன்று சேர்த்துத் திரித்தார். அப்படிப்பட்ட திரு விளக்கை எம்பெருமானார் தமது திருவுள்ளத்தினுள்ளே எப்போதும் அணையாதபடி ஸ்தாபித்தருளினார்; அவரே அடியேனுக்கு ஸ்வாமி என்றாராயிற்று. (8)

*இறைவனைக்காணு மிதயத் திருள்கெட * ஞானமென்னும்*
*நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள் * நெஞ்சத்*
துறையவைத்தாளு மிராமாநுசன் புகழோதும் நல்லோர்
*மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே.* (9)

இறைவனை	ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை	உறைய வைத்து	சாச்வதமாக ஸ்தாபித்து
காணும்	ஸாக்ஷாத்கரிப்பதற்கு உபகரணமான	ஆளும்	(அவற்றையே) அநுபவிக்கின்ற
இதயத்து	ஹ்ருதயத்திலுள்ள	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
இருள்	அஜ்ஞானமாகிற அந்தகாரமானது	புகழ்	திவ்ய குணங்களை
கெட	நசிக்கும்படியாக	ஓதும்	இடைவிடாது அநுஸந்திக்கின்ற
ஞானம் என்னும் நிறை விளக்கு ஏற்றிய	ஞானமாகிற பூர்ண தீபத்தை ப்ரகாசிப்பித்தருளி இரண்டாம் திருவந்தாதியை அருளிச்செய்த	நல்லோர்	விலக்ஷண புருஷர்கள்தாம்
		இந்த மண் அகத்தே	இப் பூமண்டலத்திலே
		மறையினை	வேதங்களை
பூதத் திருவடி	பூதத்தாழ்வாருடைய	காத்து	ரக்ஷித்து
தாள்கள்	திருவடிகளை	மன்ன வைப்பவர்	என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ண வல்லவர்கள்.
நெஞ்சத்து	தமது திருவுள்ளத்திலே		

* * *—‘ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர் என்னும் விருது இராமாநுசனுடையார்க்கே ஏற்குமென்கிறார்: —ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு எல்லார்க்கும் உபகரணமாயிராநின்ற ஹ்ருதயமானது அஜ்ஞாநாந்தகாரத்தாலே இருண்டு கெட்டுப் போகாதபடி பரஜ்ஞாநமாகிற பூர்ணதீபத்தை ஏற்றினவரான பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே இடைவிடாது வைத்துக்கொண்டு அவற்றையே அநுபவிக்கும் எம்பெருமானாருடைய குணகீர்த்தனமே போது போக்காக இருக்கும் விலக்ஷணர் யாரோ அவர்கள் தான் வேதத்தை நன்றாக ரக்ஷித்து இந்நிலவுலகத்தில் நிலைநிறுத்தவல்ல மஹான்கள் என்றாராயிற்று. பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானமென்னும் நிறைவிளக்கானது—இரண்டாம் திருவந்தாதியாகிற அவருடைய அருளிச்செயல். பூதத்திருவடி திருவடியென்று இங்கே ஸ்வாமிக்கு வாசகம்; பூதத்தாரென்னும் ஸ்வாமி என்றபடி.

[மறையினைக்காத்து மன்னவைப்பவர்] எம்பெருமானார் ஸம்பந்தம் பெறாத மற்றையோர்கள் “வேதம் ப்ரமாணமேயல்ல” என்று சொல்லுவாரும், அதனைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டும் அபார்த்தங்கள் பண்ணுவாருமாய் இருப்பதால் அவர்கள் யாவரும் வேதமார்க்க வித்வம்ஸிகள்; இராமநுசனுடையார் தாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள் என்றபடி. (9)

நித்யாநுஸந்தானவுரை

*மன்னியபேரிருள் மாண்டபின் * கோவலுள்மாமலராள்*
*தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும். * தமிழ்த்தலைவன்*
பொன்னடிபோற்றுமிராமாநுசற்கன்பு பூண்டவர்தாள்
*சென்னியிற்சூடும் * திருவுடையாரென்றுஞ்சீரியரே.* (10)

மன்னிய	ஒருவராலும் பேர்க்கமுடியாதபடி நிலைத்துநின்ற	தமிழ் தலைவன்	தமிழுக்குத் தலைவரான பேயாழ்வாருடைய
பேர் இருள்	(அஜ்ஞாநமாகிற) பெருத்த இருளானது	பொன் அடி	அழகிய திருவடிகளை
		போற்றும்	புகழுமவரான
மாண்ட பின்	முற்பட்ட ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே) நன்றாக நீங்கின பின்பு,	இராமாநுசற்கு	எம்பெருமானார் திறத்தில்
கோவலுள் ஆயனை	திருக் கோவலூரில் ஆயனை	அன்பு பூண்டவர்	பக்தியை யுடையவர்களினது
மா மலராள் தன்னொடு	பிராட்டியோடு கூட	தாள்	திருவடிகளை
கண்டமை	தாம் ஸேவித்த படியை	சென்னியில் சூடும் திரு உடையார்	சிரோ பூஷணமாகக் கொள்ளுஞ் செல்வமுடையோர் தாம்
காட்டும்	("திருக்கண்டேன்" இத்யாதி ப்ரபந்த முகத்தாலே) வெளியிட்டருளின	என்றும் சீரியர்	என்றைக்கும் ஸ்ரீமான்கள்.

* * *—*பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றின இரண்டு திருவிளக்குகளாலும் இருள் நீங்கவே, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று திருக்கோவலூராயனைப் பிராட்டியோடுகூட ஸேவிக்கப்பெற்றார் பேயாழ்வார். தாம் அப்படி ஸேவித்ததாக மூன்றாந்திருவந்தாதி முகத்தால் வெளியிட்டருளின அவ்வாழ்வாருடைய திருவடிகளைத் துதிக்குமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியையுடையவர்கள் யாரோ, அவர்களுடைய திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்வதையே அழியாச் செல்வமாக நினைத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய திருவடியைச் சிரமேற்கொள்ளுமவர்கள் தாம் நித்திய ஸ்ரீமான்கள் என்றாராயிற்று.*

இப்பாட்டில் பேயாழ்வார் "தமிழ்த்தலைவன்" என்று சிறப்பித்துக் கூறப்பட்டார். (10)

*சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழாலளித்த*
*பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணாம்பதுமத்*
தாரியல்சென்னி யிராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
*காரியவண்மை * என்னால்சொல்லொணாதிக்கடலிடத்தே.* (11)

சீரிய நால் மறை செம் பொருள்	சிறந்த நால் வேதங்களிலுள்ள செவ்விய பொருள்களை	இராமாநுசன் தன்னை	எம்பெருமானாரை
செம் தமிழால்	அழகிய தமிழ்ப் பாசுரங்களினால்	சார்ந்தவர் தம்	ஆச்ரயமாகப் பற்றினவர்களுடைய
அளித்த	அருளிச்செய்தவரும்	காரியம் வண்மை	அநுஷ்டாந வைலக்ஷண்யமானது
பார் இயலும் புகழ்	பூமியெங்கும் பொருந்தின புகழை யுடையவருமான	இக் கடல் இடத்து	கடல்சூழ்ந்த இப்பூமியில்
பாண் பெருமாள்	திருப்பாணாழ்வாருடைய		
சரண் ஆம் பதுமம் தார் இயல் சென்னி	திருவடிகளாகிற தாமரைப் பூவாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியை யுடையரான	என்னால் சொல்ல ஒணாது	(இப்படிப்பட்ட வைபவமுடையதென்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாதது.

* * *—எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை யெல்லாம் விசதமாகப் பேசுகையாலே சிறந்தவையான நால்வேதங்களில் பொதிந்து கிடக்கும் நற்பொருள்களை "அமலனாதிபிரான்" என்னும் திவ்ய ப்ரபந்தத்தில் சுருக்கி அருளிச்செய்தவராய் நாடெங்கும் பரவின புகழையுடையரான திருப்பாணாழ்வாருடைய சரணாரவிந்தங்களாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியை யுடையவரான எம்பெருமானாரை அடிபணிந்தவருடைய ஆசாரவைலக்ஷண்யமானது என் வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி மிகவும் சிறந்தது என்றாராயிற்று. (11)

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போது
அடங்குமிதயத் திராமாநுசன் * அம்பொற்பாத மென்றுங்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல் செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேனன்புசெய்வதுவே. (12)

இடம் கொண்ட கீர்த்தி	பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியை யுடையரான	கடம் கொண்டு இறைஞ்சும் திரு	இதுவே நமக்கு ஸ்வரூபமென்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தை யுடையரான
மழிசைக்கு இறைவன்	திருமழிசைப் பிரானுடைய	முனிவர்க்கு அன்றி	மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு
இணை அடி போது	உபயபாதாரவிந்தங்கள்	காதல் செய்யா	அன்பு பூண்டிராத
அடங்கும்	குடிகொண்டிருக்கப்பெற்ற	திடம் கொண்ட ஞானியர்க்கே	மிக்க உறுதியை யுடையரான ஞானிகளுக்குத் தான்
இதயத்து	திருவுள்ளத்தை யுடையரான	அடியேன் அன்பு செய்வது	அடியேன் பக்தனாயிருப்பேன்.
இராமாநுசன்	எம்பெருமானாருடைய		
அம் பொன் பாதம்	மிகவும் அழகிய திருவடிகளை		
என்றும்	எக்காலத்திலும்		

* * *—உலகமெங்கும் பரவின புகழையுடையரான திருமழிசைப்பிரானுடைய பாதாரவிந்தங்கள் அடங்கியிருக்கப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை ஸ்வரூப ப்ராப்தத்வ புத்தியோடே அநவரதம் ஆச்ரயிக்கின்ற மஹா பாகவதர்கட்குத் தவிர வேறொருவர்க்கும் விதேயப்படாத மாஞானிகளுக்கே அடியேன் அன்பனாயிருப்பன் என்கிறார். இப்பாட்டால், 'ஸ்ரீராமாநுஜ பக்த பக்த பக்தன் அடியேன்' என்றாராயிற்று.

கடங்கொண்டு—கடமையாகக்கொண்டு. (12)

செய்யும்பசுந்துளவத்தொழின்மாலையும் * செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன் * இராமாநுசன்சரணேகதி வேறெனக்கே. (13)

செய்யும்	(தொண்டரடிப் பொடியாழ்வாராகிற தம்மாலே செய்யப் பட்டதாய்	செம் தமிழில்	அழகிய தமிழ்ப் பாஷையிலே
பசும் துளவம்	பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய்	பெய்யும்	உண்டாக்கப் பட்டதாய்
தொழில்	வேலைப்பாடுகளை யுடைத்தான	மறை	வேதஸத்ருசமான
மாலையும்	பூமாலைகளையும்	தமிழ் மாலையும்	திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும்

பேராத சீர் அரங்கத்து ஐயன் கழற்கு அணியும்	நித்ய ஸித்தமான கல்யாண குணங்களையுடையரான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளிலே சாத்தினவரான	மெய்யன்	ஸத்ய சீலரான
		இராமாநுசன்	எம்பெருமானாருடைய
		சரணே	திருவடிகளே
பரன்	தொண்டரடிப்பொடி யாழ்வாராகிற பெரியவருடைய	எனக்கு	அடியேனுக்கு
தாள் அன்றி ஆதரியா	திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத	வேறுகதி	விலக்ஷணமான ப்ராப்ய வஸ்துவாம்.

** * *—தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை யன்றி மற்றொன்றில் ஆதரம் அற்றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே நமக்குச் சரணமென்கிறார் இதில்.*

தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளைச்செய்து ஸமர்ப்பித்தனரென்று சாடுக்தியாகச் சொல்லுகிறார் அமுதனார். "துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி" என்றும், "தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றும் தாமே அருளிச்செய்தபடிக்குப் பொருந்தத் திருத்துழாய் மாலைகளையும், திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல்மாலைகளையும் அரங்கத்தையன் கழல்களிலே ஸமர்ப்பித்தவரிறே தொண்டரடிப்பொடியாழ்வார்.

"துளபத்தெழில் மாலையும்" என்றும் சிலர் பாடங்கூறுவர்; துளபத்து—துளஸியினாலாகிய, எழில் மாலை—அழகிய மாலை என்றபடி. இப்பாடம் அழகியதேயாயினும் வியாக்கியானத்தில் ஆதரிக்கப்பட்ட பாடமன்றாதலால் உபேக்ஷிக்கத் தக்கதென்க. (13)

*கதிக்குப்பதறி * வெங்கானமுங் கல்லுங் கடலுமெல்லாம்*
*கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற்றேன் * கொல்லி காவலன்சொல்*
பதிக்குங்கலைக் கவிபாடும்பெரியவர் பாதங்களே
*துதிக்கும்பரமன் * இராமாநுச னென்னைச் சோர்விலனே.* **(14)**

கொல்லி காவலன்	குலசேகரப் பெருமாளாலே அருளிச் செய்யப்பட்டதாய்	கதிக்கு பதறி	ப்ராப்ய லாபத்துக்காக விரைந்து
கலை சொல் பதிக்கும்	சாஸ்திரச் சொற்கள் அமையப் பெற்றதான	வெம் கானமும் கல்லும்	அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும்
கவி	பெருமாள் திருமொழிப் பாசுரங்களை		
பாடும் பெரியவர்	பாடுகின்ற பெரியோர்களது	கடலும்	கடல்களிலும் (நின்று கொண்டு)
பாதங்களே	திருவடிகளையே	எல்லாம் கொதிக்க	எல்லா அவயவங்களும் கொதிக்கும்படியாக
துதிக்கும்	ஸ்தோத்ரம் செய்பவராய்		
பரமன்	உத்க்ருஷ்டரான	தவம் செய்யும் கொள்கை	தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவத்தை
இராமாநுசன்	எம்பெருமானார்		
என்னை சோர்விலன்	என்னைவிட்டு நீங்குகிறாரில்லை; (ஆதலால்)	அற்றேன்	விட்டொழித்தேன்.

** * *—ஸகல சாஸ்த்ரங்களின் ஸாரப்பொருள்களையும் திரட்டி ஸ்ரீகுலசேகரப் பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி யென்னுந் திவ்யப்ரபந்தத்தை அநுஸந்திக்கின்ற பெரியவர்களது திருவடிகளையே போற்று மியல்வினரான எம்பெருமானார் வந்து தாமே என்னை ஸ்வீகரித்தாராதலால் இனி ஒருநாளும் அவர் அடியேனைக்*

கைவிடமாட்டார்; ஆனபின்பு நமக்கு ப்ராப்யம் வேறு ஒன்று மில்லாமையாலே, வநபர்வத ஸமுத்ர தீரங்களில் நின்று க்ரூரமாகச் செய்யும் தவங்களில் இனி எனக்கு அந்வய மில்லை யென்றாராயிற்று.

"எல்லாங் கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கை" என்றதற்கு—இவனுடைய தவத்தின் கொடுமையைக் கண்டு கானமும் கல்லும் கடலும் பரிதபிக்கும்படியாக அந்தந்த ஸ்தலங்களிலே நின்று தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவம் என்று பொருள் கூறுவாருமுளர்.

சோர்வு இலன்—பிரிவிலன் என்றபடி. (14)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் * பான்மையன்தாள்
பேராத வுள்ளத் திராமானுசன்றன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன் * எனக்கென்ன தாழ்வினியே? (15)

சோராத காதல் பெரு சுழிப்பால்	ஒருநாளும் குறைவு படாத ப்ரேமத்தில் பெருஞ்சுழிப் படுகையாலே	தாள் பேராத உள்ளத்து	திருவடிகள் விட்டகலாத திருவுள்ளத்தை யுடையரான
தொல்லை மாலை ஒன்றும் பாராது	நித்யனான எம்பெருமான் படியைச் சிறிதும் நிரூபியாமல்	இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
அவனை	அவ் வெம்பெருமானை நோக்கி	பிறங்கிய சீர்	மிக்க திருக்குணங்களை
பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன்	பல்லாண்டு பல்லாண் டென்று மங்களாசாஸநம் பண்ணுகையையே நித்ய ஸ்வபாவமாக வுடையரான பெரியாழ்வாருடைய	சாரா	தங்களுக்கு அநுபாவ்யமாகக் கொள்ளாத
		மனிசரை	மநுஷ்யர்களை
		சேரேன்	பற்றமாட்டேன்.
		இனி	இப்படிப்பட்ட உறுதி பிறந்த பின்பு
		எனக்கு என்ன தாழ்வு	அடியேனுக்கு என்ன குறை?

* * *—பாண்டியராஜனுடைய பண்டித சபையில் எழுந்தருளி "எம்பெருமானே பரதத்துவம்" என்று ஸ்தாபநம் செய்து கிழியறுத்துவிட்ட காலத்து, அப்பாண்டியன் தம்மை யானைமேலேற்றி ஊர்வலம் வருவிக்கையில் தம் வைபவத்தைக் காணவந்து ஆகாசத்திலே கருடாரூடனாய் நின்ற திருமாலைச் சேவித்து அப்பெருமானிடத்துள்ள பெருங்காதலாலே ரக்ஷ்யபூதரான தம்மையும் ரக்ஷகனான அவனையும் மறந்து, தம்மை ரக்ஷகராகவும் அவனை ரக்ஷ்யனாகவு மெண்ணி அவனுக்குப் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்" டென்று தொடங்கி மங்களாசாஸநம் செய்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளையே அநவரதம் தியானித்தருளும் எம்பெருமானாருடைய குணங்களைச் சிந்திக்கயில்லாத மனிசரோடு நான் ஸஹவாஸம் செய்ய மாட்டேன்; இந்நினைவு பிறந்தபின் இனி எனக்கு ஒரு குறையுமில்லை—என்றாராயிற்று.

முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டுள்ள சரிதையின் விரிவு பெரியாழ்வார் வைபவத்திற் காணத்தக்கது. (15)

**தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள் வந்தளித்தவன்காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுசனென்னும் மாமுனியே. (16)

அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையை	ஸ்ரீ ரங்கநாதனுடைய திருமுடியிலே சாத்தக்கடவதான பூமாலையை	தாழ்வு ஒன்று இல்லா மறை	ஒரு குறையுமில்லாதிருந்த வேதமானது
சூடி கொடுத்தவள்	தனது திருக் குழலிலே அணிந்து வாஸிதமாக்கிக்கொடுத்தவளான ஆண்டாளுடைய	தாழ்ந்து	(குத்ருஷ்டிகளாலே) இழிவு பெற
தொல் அருளால் வாழ்கின்ற வள்ளல்	அவ்யாஜமான அருளாலே வாழ்பவரும் உதாரருமான	தலம் முழுதும்	பூமியெங்கும்
இராமாநுசன் என்னும் மாமுனி	ஸ்ரீ ராமாநுச முனியானவர் (எப்படிப் பட்டவரென்றால்)	கலியே ஆள்கின்ற நாள்	கலியே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே
		வந்து	இங்கே வந்தவதரித்து
		அளித்தவன் காண்மின்	அந்த வேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை ரக்ஷித்தருளினவர்.

* * *—ப்ரமாணங்களிற் சிறந்து உத்துங்கமாயிருந்த வேதமானது பாஹ்ய குத்ருஷ்டிகளால் தாழ்வுபெற்றுக் கலிபுருஷனே செங்கோல் செலுத்திக் கிடந்த காலத்திலே வந்து திருவவதரித்தருளி அக்கலியைக் கெடுத்து வேதத்தை நிலைநிறுத்தின மஹாநுபவர் காண்மின் எம்பெருமானார்.

அரங்கர்மௌலி சூழ்கின்ற மாலையைச்சூடிக்கொடுத்த வரலாறு ஆண்டாள் வைபவத்திற் காணத்தக்கது. சூடிக்கொடுத்த நாச்சியாருடைய பரமக்ருபைக்குப் பாத்ரபூதர் எம்பெருமானார் என்றதாயிற்றுப் பின்னடிகளால். (16)

முனியார்துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினுங்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானை * கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகி
லினியானை * எங்களிராமாநுசனை வந்தெய்தினரே. (17)

கலைபரவும் தனி ஆனையை	ஸகல சாஸ்த்ரங்களாலும் துதிக்கப் பெற்ற அத்விதீயமான மத்த கஜம்போன்ற	இனியானை	ப்ரேம முடையவராய்
கண்ண மங்கை நின்றானை	திருக்கண்ண மங்கையிலே நிற்கும் பத்தராவிப் பெருமானைக் குறித்து	எங்கள்	எங்களுக்குத் தலைவரான
உலகில்	இவ்வுலகில்	இராமாநுசனை	எம்பெருமானாரை
தண் தமிழ் செய்த	ஸம்ஸார தாபஹரமான திவ்ய ப்ரபந்தத்தைச் செய்தருளின	வந்து எய்தினர்	வந்து பணிந்த மஹான்கள்
நீலன் தனக்கு	திருமங்கையாழ்வார் பக்கல்	துயரங்கள் முந்திலும் முனியார்	தாபத்ரயம் செறிந்தாலும் வருத்தப்பட மாட்டார்கள் ;
		இன்பங்கள்மொய்த்திடினும் மனம் கனியார்	ஸுகங்கள் செறிந்தாலும் களிப்படைய மாட்டார்கள்.

* * *—ஸகல சாஸ்த்ரப்ரதிபாத்யனான எம்பெருமானைத் தம்முடைய திவ்ய ப்ரபந்தங்களிலே அமைத்துப் பாடின திருமங்கையாழ்வார்க்கு அந்தரங்க பக்தரான எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் ஸுகதுக்கங்கள் மேலிடுங்காலத்தில் மற்ற ஸம்ஸாரிகளைப்போல் ஹர்ஷ சோகங்களை யடையாமல் எவ்வித விகாரமும் அற்றிருப்பர்கள் ; நீங்களும் ஹர்ஷ சோகங்களில் கலங்கவேண்டா என்றபடி.

கண்ணமங்கை நின்றானை = திருக்கண்ண மங்கையைச் சொன்னது மற்றுள்ள எல்லாத் திருப்பதிகட்கும் உபலக்ஷணம் ; பல திருப்பதிகளிலும் புக்குக் கவிபாடின கலியன் என்றபடி. **நீலன்** = திருமங்கையாழ்வாருடைய திருநாமங்களில் ஒன்று. (17)

இராமாநுச நூற்றந்தாதி

*எய்தற்கரியமறைகளை * ஆயிரமின்தமிழால்*
*செய்தற்குலகில்வருஞ் சடகோபனை * சிந்தையுள்ளே*
பெய்தற்கிசையும்பெரியவர்சீரை யுயிர்களெல்லாம்
*உய்தற்குதவும் * இராமாநுசனெம்முறு துணையே.* (18)

எய்தற்கு அரிய மறைகளை	அதிகரிக்க முடியாத (அளவற்ற) வேதங்களை	பெரியவர்	ஸ்ரீ மதுரகவிகளுடைய
இன் தமிழ் ஆயிரத்தால்	இனிய தமிழாலாகிய ஆயிரம் பாசுரங்களினுல்	சீரை	ஜ்ஞாநாதி குணங்களை
செய்தற்கு	அருளிச் செய்வதற்காக	உயிர்கள் எல்லாம் உய்தற்கு உதவும்	ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்குமாறு உபகரித்தருளாநிற்கிற
உலகில் வரும்	இவ்வுலகில் வந்துதித்த	இராமாநுசன்	எம்பெருமானுர்
சடகோபனை	நம்மாழ்வாரை	எம் உறு துணை	எமக்கு உற்ற துணை.
சிந்தை உள்ளே	தமது ஹ்ருதயதினுள்ளே		
பெய்தற்கு இசையும்	த்யானிப்பதற்கு இணங்கின		

* * *—*வேதந் தமிழ்செய்த மாறன் சடகோபனையே வாழ்த்தும் ஸ்ரீ மதுரகவிகளின் பக்தரான எம்பெருமானுர் நமக்கு உற்றதுணை யென்றுராயிற்று. இப்பாட்டில், ஸ்ரீமதுரகவிகள் பெரியவர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டமை நோக்கத் தக்கது. "புவியு மிருவிசும்பும் நின்னகத்த, நீ யென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளு" [பெரிய திருவந்தாதி] என்று பெரிதான பரப்ரஹ்மத்தை உள்ளடக்கின பெரியவரையும் [—நம்மாழ்வாரையும்] உள்ளடக்கின பெரியவரிறே மதுரகவிகள்.* (18)

*உறுபெருஞ்செல்வமுந் தந்தையுந்தாயும் * உயர்குருவும்*
*வெறிதருபூமகள்நாதனும் * மாறன்விளங்கியசீர்*
நெறிதருஞ்செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோர்
*அறிதரநின்ற * இராமாநுசனெனக்காரமுதே.* (19)

உறு பெரு செல்வமும்	சிறந்த பெரிய ஸம்பத்தும்	மாறன் விளங்கிய சீர் நெறி தரும் செம் தமிழ் ஆரணமே என்று	நம்மாழ்வார் (தமக்கு) ப்ரகாசித்த பகவத் குணங்களின் அடைவே அருளிச் செய்த செந்தமிழ் வேதமே யென்று
தந்தையும் தாயும்	மாதா பிதாக்களும்	இ நீள் நிலத்தோர் அறிதர நின்ற	இப்பெரிய வுலகிலுள்ளார் யாவரும் அறியும்படி நின்ற
உயர் குருவும்	ஸதாசார்யனும்	இராமாநுசன்	எம்பெருமானுர்
வெறி தரு பூமகள் நாதனும்	மணம் மிக்க பூவைப் பிறப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்குக் கொழுநனுன ஸர்வேச்வரனும் (ஆகிய எல்லாம்)	எனக்கு	அடியேனுக்கு
		ஆர் அமுது	பரம போக்யர்.

* * *—'*நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிதான் நமக்கு ஸர்வஸ்வம்' என்கிற அத்யவஸாய முடைய் உடையவர் திறத்து அடியேன் அநந்ய போக்யத்வ புத்தியை யுடையேன் என்றுராயிற்று.*

மாறன் விளங்கிய சீர்நெறிதரும் செந்தமிழாரணம்=திருவாய்மொழியில் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திவ்யகுணத்தை வெளியிட்

டிருக்கிறார்; அது வெளியிட்டவாறு என்னென்னில், எம்பெருமான் ஆழ்வார்க்கு எந்த க்ரமமாகக் குணங்களை அநுபவிப்பித்தானோ அந்த க்ரமமாகவே இவர் வெளியிட்டாரென்க. (19)

*ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத்திருவாய்*
*ஈரத்தமிழி னிசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தஞ்*
சீரைப்பயின் றுய்யுஞ்சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
*வாரிப்பருகும் * இராமாநுசனென்றன் மாநிதியே.* (20)

ஆரம் பொழில்	சந்தனச்சோலைகளையுடைய	இனியவர் தம்	இஷ்டரா யிருப்பவர்களுடைய
தென் குருகை	அழகிய திருக்குருகூரிலே (அவதரித்த)	சீரை	குணங்களை
பிரான்	மஹோபகாரகரான ஆழ்வாருடைய	பயின்று	அப்யஸித்து
அமுதம் திருவாய்	பரமபோக்யமான திருப்பவளத்தில் பிறந்த	உய்யும் சீலம் கொள்	ஸத்தை பெறும் சீலத்தையுடையரான
ஈரம் தமிழின் இசை	ஈரச்சொல்லாகிய திருவாய்மொழியின் இசையை	நாதமுனியை	நாதமுனிகளை
உணர்ந்தோர்கட்கு	அறிந்தவர்களுக்கு	நெஞ்சால்	தம் திருவுள்ளத்தாலே
		வாரி பருகும்	அபிநிவேசத்தோடு அனுபவிக்கின்ற
		இராமாநுசன்	எம்பெருமானார்
		என் தன் மா நிதி	எனக்கு அக்ஷயமான நிதி.

*நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம்வாசல்பற்றித்*
*துதிகற்றுலகிற் றுவள்கின் றிலேனினி * தூய்நெறிசேர்*
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவ னிணையடியாம்
*கதிபெற்றுடைய * இராமாநுச னென்னைக்காத்தனனே.* (21)

தூய் நெறி சேர் எதிகட்கு	பரிசுத்தமான அனுட்டானமுடைய யதிகளுக்கு	இனி	இனிமேல்,—
இறைவன்	தலைவரான	நிதியை பொழியும் முகில் என்று	"நிதிகளை வர்ஷிக்கிற மேகமே" என்று
யமுனைத் துறைவன்	ஆளவந்தாருடைய	துதி கற்று	ஸ்தோத்ரங்களைப் பண்ணிக்கொண்டு
இணை அடி ஆம் கதி	உபய பாதங்களாகிற ப்ராப்யத்தை	உலகில்	இவ்வுலகத்தில்
பெற்று	பெற்று (அதனாலே)	நீசர் தம்	நீசராயிருப்பவருடைய
உடைய	உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற	வாசல் பற்றி	வாசலைப்பற்றி நின்று
இராமாநுசன்	எம்பெருமானார்	துவள்கின்றிலேன்	வருந்தமாட்டேன்.
என்னை காத்தனன்	என்னைரக்ஷித்தருளினார்; (ஆன பின்பு)		

* * *—நேற்றுவரையிலும் நான் கண்டபேர்களுடைய வாசற் கடைகளிலும் போய் நின்று வாயைக்காட்டி வயிற்றைக்காட்டி "மஹாநிதிகளைப் பொழிகின்ற மேகமே!" என்று பொய்யான நரஸ்துதிகளைச் செய்து துவண்டேன்; இன்று முதல் எந்நாளும் இனி நான் அவ்வாறு துவள மாட்டேன்; ஒரு நீசனுடைய வாசலையும் பற்றமாட்டேன். இன்று நான் எம்பெருமானாருடைய ஸம்ரக்ஷணைக்கு ஆளாய்விட்டேன்; அவரோ, எதிகளுக்குத் தலைவரான ஆளவந்தாருடைய ஸம்ரக்ஷணையைப் பெற்று உய்ந்தவர். அன்னவராலே ஸம்ரக்ஷிக்கப் பெற்றேனானபின்பு இனி நான் ஏதுக்காக ஒரு நீசன் வாசலைப் பற்றித்துவளவேண்டும்!; துவள்கின்றிலேனினி. (21)

இராமாநுச நூற்றந்தாதி

*கார்த்திகையானுங் கரிமுகத்தானும் * கனலும்முக்கண்*
*மூர்த்தியும் மோடியும்வெப்பும்முதுகிட்டு * மூவுலகும்*
பூத்தவனேயென்று போற்றிட வாணன்பிழைபொறுத்த
*தீர்த்தனையேத்தும் * இராமாநுசனென்றன்சேமவைப்பே.* (22)

கார்த்திகையானும்	ஸுப்ரஹ்மண்யனும்	மூ உலகும் பூத்தவனே என்று போற்றிட	"மூன்று உலகங்களையும் திருநாபிக்கமலத்திலே உண்டாக்கின பெருமானே!" (என்னைக் காத்தருள்) என்று போற்ற
கரிமுகத்தானும்	கணபதியும்	வாணன் பிழை பொறுத்த	(அந்த) பாணாஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின
கனலும்	(அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்நியும்	தீர்த்தனை	பாவநனான ஸர்வேச்வரனை
முக்கண் மூர்த்தியும்	சிவனும்	ஏத்தும்	நித்யம் துதிக்கின்ற
மோடியும்	துர்க்கையும்	இராமாநுசன்	எம்பெருமானார்
வெப்பும்	ஜ்வரதேவதையும்	என் தன் சேம வைப்பு	எனக்கு ஆபத்தநம்.
முதுகு இட்டு	முதுகுகாட்டி ஓடிப்போன பின்பு (அநந்யகதியான பாணாஸுரனானவன்)		

* * *—[*ஐச்வர்யம் சங்கராதிச்சேத்; ஆரோக்யம் பாஸ்கராத் ததா; சிவன் பக்கல் செல்வம் பெற விரும்பவேண்டும்; ஸூர்யன் பக்கல் ஆரோக்யம் பெற விரும்பவேண்டும்*] *என்று ஸாமாந்யமாகச் சிலர் சொல்லுவதுண்டே; அதனைக் கொண்டு ஒருவன் அமுதனாரை நோக்கி 'ஓய்! நீர் எம்பெருமானாரைப் பற்றினால் உம்முடைய தாரித்ர்யம் நீங்குமோ? சிவனைப் பற்றினாலன்றோ செல்வம் மிகும்' என்று கூற; அந்தச் சிவன்பட்ட பரிபவங்களை விளக்கும் ஒரு இதிஹாஸத்தைப் பரக்கப்பேசிக் கொண்டு, 'எம்பெருமானார்தாம் தமக்கு ஆபத்தனம்' என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை உறுத்திக் கூறுகின்றார் இதில்.* ... (22)

*வைப்பாய வான்பொருளென்று * நல்லன்பர்மனத்தகத்தே*
*எப்போதும் வைக்குமிராமாநுசனை * இருநிலத்தில்*
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்சநெஞ்சில்வைத்து
*முப்போதும்வாழ்த்துவன் * என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே?* (23)

நல் அன்பர்	விலக்ஷண பக்தியுடையவர்கள்	வஞ்சம் நெஞ்சில் வைத்து	என்னுடைய க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து
வைப்பு ஆய வான் பொருள் என்று	"எம்பெருமானார் தாம் நமக்கு ஆபத் ரக்ஷகமான அக்ஷய தநம்" என்று கொண்டு	முப்போதும் வாழ்த்துவன்	ஸர்வ காலமும் ஏத்தா நின்றேன்;
மனத்தகத்தே	தங்கள் ஹ்ருதயத்திலே	இது	மிகப்பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது
எப்போதும் வைக்கும்	எப்போதும் த்யாநிப்பதற்கு விஷயமான	அவன்	அவ்வெம்பெருமானாருடைய
இராமாநுசனை	எம்பெருமானாரை	மொய் புகழ்க்கு	சிறந்த கீர்த்திக்கு
இரு நிலத்தில்	இந்தப்பெரிய வுலகத்திலே	என் ஆம்	என்னாகுமோ? [அவத்யமாமே!]
ஒப்பார் இலாத உறு வினையேன்	ஒப்பற்ற மஹாபாபியான அடியேன்		

* * *—"*வளவேழுலகின் முதலாய*" *என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ணினதுபோல, இப்பாட்டில் இவ்வமுதனாரும் நைச்யாநுஸந்தானம் பண்ணுகிறார்.* (23)

*மொய்த்தவெந்தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து * அதனால்*
*எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்று கண்டுயர்ந்தேன்*
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
*கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமாநுசனென்னும் கார்தன்னையே.* (24)

முன நாள்கள் எல்லாம்	கீழ்க்கழிந்த அநாதிகால மெல்லாம்	பொய் தவம் போற்றும் புலைச் சமயங்கள்	கபடமான அநுஷ்டானங்களை நடத்திப் போருகிற நீச மதஸ்தர்கள்
பல் உடல் தொறும்	பலபல சரீரங்கள் தோறும்	நிலத்து அவிய	இந்நில வுலகத்திலே வேரற்றொழியும்படி
மொய்த்த வெம் தீவினையால் மூத்து	ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதி க்ரூரமான கர்மத்தாலே கிழத்தனம் வருமளவும் வாஸஞ் செய்து	கைத்த	நிரஸித்தருளின
		மெய் ஞானத்து	உண்மை ஞானமுடையரான
		இராமாநுசன் என்னும் கார் தன்னை	எம்பெருமானாராகிற காளமேகத்தை
அதனால்	அத்தாலே	இன்று கண்டு	இன்று அடியேன் ஸேவிக்கப் பெற்று
எய்த்து ஒழிந்தேன்	மிக்க பரிதாப மடைந்தேன்;	உயர்ந்தேன்	சிறந்தவனானேன்.

** * *—நெடுநாளாக ஸம்ஸாரத்திலிருந்து பலபல கருமங்களைப்பண்ணி, அக்கருமங்களின் பலனைப் பலபல பிறவிகளிற் பிறந்து படாதனபட்டு இப்படியாகவே அநேக பர்யாயம் அவஸந்னனாய்க் கிடந்தேன் நான்; இப்பொழுது, பரம உதாரரான எம்பெருமானார் இப்பூமியிலவதரித்துப் பல துர்மதங்களை வேரறுத்தொழித்ததுபோல எனது கருமங்களையும் வேரறுத்தொழித்துத் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே தம்மைக்காட்டியருளக் கண்டு க்ருதார்த்தனானேனென்கிறார்.*

பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள்—*ராவண ஸம்ந்யாஸம், காலநேமிஜபம் முதலியவைபோலே மதாந்தரஸ்தர்கள் க்ருத்ரிமமான ஆசாரங்களை அனுட்டிப்பார்களென்க.* **மெய்ஞ்ஞானத்திராமாநுசன்**—“**யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்**” *என்று ஸ்தாபித்தருளினவர் எம்பெருமானார்.* (24)

*காரேய்கருணை யிராமாநுச * இக்கடலிடத்தில்*
*ஆரேயறிபவர் நின்னருளின் தன்மை * அல்லலுக்கு*
நேரேயுறைவிடம் நான்வந்துநீயென்னை யுற்றபின்உன்
*சீரே யுயிர்க்குயிராய் * அடியேற்கின்று தித்திக்குமே.* (25)

கார் ஏய் கருணை இராமாநுச!	மேகத்தையொத்த கருணையையுடைய எம்பெருமானாரே!	உயிர்க்கு உயிர் ஆய்	ஆத்மாவுக்கு தாரகமாய்
நான்	அடியேன்	அடியேற்கு	அடியேனுக்கு
அல்லலுக்கு நேரே உறைவு இடம்	துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமாயிருப்பவன்;	இன்று தித்திக்கும்	இன்று ரஸியா நின்றது;
என்னை	இப்படிப்பட்ட அடியேனை	நின் அருளின் தன்மை	தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை
நீ வந்து உற்றபின்	தேவரீர் தாமாகவே ஸ்வீகரித்தருளின பின்பு	இ கடல் இடத்தில்	கடல்சூழ்ந்த இப் பூமண்டலத்தில்
உன் சீரே	தேவரீருடைய கல்யாண குணங்களே	ஆரே அறிபவர்	அறியக்கூடியவர்கள் ஆருமில்லை.

** * *—ஜலஸ்தலவிபாகம் பாராமல் ஸர்வத்ர ஸமமாக வர்ஷிக்கின்ற மேகம் போலே, தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வாசிபாராமல் எல்லார்திறத்தும் அருள்*

புரிகின்ற எம்பெருமானாரே! மிகக்கொடிய துக்கங்களுக்கெல்லாம் இருப்பிடமான என்னை தேவரீர் தாமே வந்து விஷயீகரித்தபின்பு தேவரீருடைய திருக்கல்யாண குணங்களே எனக்குப் பரமபோக்யமாய் ஆத்ம தாரகமுமாய்விட்டது. தேவரீர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்னுமிடத்தை இவ்வுலகில் உள்ளபடியே ஒருவரு மறியார்கள். (25)

*திக்குற்றகீர்த்தி யிராமாநுசனை * என் செய்வினையாம்*
*மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை * மேவும்நல்லோர்*
எக்குற்றவாளரெதுபிறப் பேதியல்வாக நின்றோர்
*அக்குற்றமப்பிறப்பு * அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே.* (26)

என் செய்வினை ஆம்	என்னாலே செய்யப்பட்ட வினையாகிற	எக் குற்றவாளர்	யாதொரு குற்றத்தை யுடையராகவும்
மெய் குற்றம் நீக்கி	நிலை நின்ற தோஷங்களைப் போக்கி	எது பிறப்பு	யாதொரு ஜன்மத்தை யுடையவராகவும்
விளங்கிய	(இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோமென்னும் மகிழ்ச்சியாலே) உஜ்ஜ்வலரான	எது இயல்வு ஆக	யாதொரு சரிதையை யுடையராகவும்
		நின்றோர்	முன்பு நின்றார்களோ,
மேகத்தை	பரம உதாரராய்	அக்குற்றம்	அந்தக் குற்றமும்
திக்கு உற்ற கீர்த்தி	திசைகள் தோறும் விரிந்த புகழுடையரான	அப் பிறப்பு	அந்த ஜன்மமும்
		அ இயல்வே	அந்த சரிதையுமே
இராமாநுசனை	எம்பெருமானாரை	நம்மை	நம்மை
மேவும்	பொருந்தியிருக்கின்ற	ஆள் கொள்ளும்	அடிமைப்படுத்திக் கொள்ள வற்று.
நல்லோர்	விலக்ஷணர்கள்		

** * *—ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய ஜாதி முதலியவை ஏதாயினும் அவர்களெல்லாரும் அப்படியே நமக்கு உத்தேச்யர்கள் என்று காட்டியவாறு.* (26)

*கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்துவிட் டோங்கியவுன்*
*வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம்நீபுகுந்தாய் **
வெள்ளைச் சுடர்விடுமுன்பெருமேன்மைக் கிழுக்கிதென்று
*தள்ளுற்றிரங்கும் * இராமாநுசவென் தனி நெஞ்சமே.* (27)

இராமாநுச	எம்பெருமானாரே!,	இது	(வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந்தாற்போலே) புகுந்ததிது,
கொள்ள குறைவு அற்று இலங்கி	கொள்ளக் கொள்ளக் குறையாமல் தானே விளங்கி	வெள்ளை	பரிசுத்தமாய்
கொழுந்து விட்டு ஓங்கிய	மேன்மேலும் இளகிப்பதித்து வளர்ந்திருப்பதான	சுடர் விடும்	விளங்கா நின்றுள்ள
உன் வள்ளல் தனத்தினால்	தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே	உன் பெரு மேன்மைக்கு	தேவரீருடைய ப்ரபாவத்திற்கு
வல்வினையேன் மனம்	மஹாபாபியான எனது நெஞ்சிலே	இழுக்கு என்று	அவத்யாவஹம் என்று
		என் தனி நெஞ்சம்	எனது துணையற்ற நெஞ்சானது
நீ புகுந்தாய்	(தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று;	தள்ளுற்று இரங்கும்	தளர்ந்து ஈடுபடா நின்றது.

** * *—ஸ்வாமிந்! தேவரீருடைய பெருமையையும் அடியேனுடைய சிறுமையையும் சிறிதும் பாராமல் "இவன் நம் அடியார் விஷயத்திலே சபலனாயிருப்பானொருவன்" என்கிற இவ்வளவையேகொண்டு பாபிஷ்டமான என் ஹ்ருதயத்திலே தேவரீர் புகுந்தருளிற்று; வஸிஷ்டன் சண்டாளர் மனையிற் புகுந்தாற்போல் தேவரீர் என்*

நெஞ்சில் புகுந்த விது, தேவரீருடைய பரிசுத்தமாய் விளங்கும் மஹிமைக்கு என்ன அவத்யத்தை விளைத்திடுமோவென்று அஞ்சாநின்றேன். (27)

நெஞ்சில்கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னை தன்காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய விராமாநுசன்புகழன்றி யென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது * என்னவாழ்வின்றுகூடியதே. (28)

நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனை	நெஞ்சிலே கல்மஷத்தை யுடையனாயிருந்த கம்ஸனை	வஞ்சர்க்கு	ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு
காய்ந்த	முடித்த	அரிய	துர்லபரான
நிமலன்	ஹேயப்ரத்யநீகனாய்,	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
நங்கள் பஞ்சி திருவடி	ஆச்ரிதர் பக்கல் அபிமானமுடையவளாய் பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளை யுடையவளான	புகழ் அன்றி	குணங்களை யொழிய (மற்றொன்றை)
		என்வாய்	என் வாக்கானது
		கொஞ்சி பரவகில்லாது	குலாவி ஏத்தமாட்டாது.
பின்னை தன் காதலன்	நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய	இன்று கூடியது வாழ்வு	இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது
பாதம் நண்ணா	திருவடிகளை ஆச்ரயியாத	என்ன	ஆச்சரியமானது.

* * *—நேற்றுவரை அபதார்த்தமாய்க் கிடந்த அடியேன் இன்று ஸத்தை பெற்றுவாழ்ந்த அதிசயம் சொல்லி முடியுமோ? இன்று உமக்குவந்த அதிசயம்என்ன வென்று கேட்கிறீர்களோ? எம்பெருமானாருடைய குண கீர்த்தநத்தில் நேற்றுவரை உதாஸீநமாய்க் கிடந்த என் வாயானது இன்று அவருடைய திவ்ய கீர்த்திகளையன்றி வேறொன்றையும் அநுசந்திக்கமாட்டேனென்று அதுதன்னிலே ஊன்றிக் கிடக்கிறதே, இதைவிட அதிசயமுண்டோ? என்கிறார். (28)

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ? * தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னைத் * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த விராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோ
ரீட்டங்கள்தன்னை * என்நாட்டங்கள் கண்டின்பமெய்திடவே. (29)

தென் குருகை பிரான்	நம்மாழ்வாருடைய	மெய் உணர்ந்தோர்	உள்ளபடி அறிந்திருக்குமவர்களுடைய
பாட்டு என்னும்	பாசுரங்கள் என்று ப்ரஸித்தமாய்	ஈட்டங்கள் தன்னை	கோஷ்டிகளை
வேதம்	வேதரூபமாய்	என் நாட்டங்கள் கண்டு	என் கண்களானவை ஸேவித்து
பசும் தமிழ் தன்னை	செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை	இன்பம் எய்திட	ஸுகிக்கும்படியாக
தன் பத்தி என்னும் வீட்டின் கண் வைத்த	தம்முடைய பக்தியாகிற மாளிகையிலே ஸ்தாபித்தருளிய	கூட்டும் விதி	அமைக்கவல்ல (அவருடைய) க்ருபையானது.
இராமாநுசன் புகழ்	எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை	என்று கூடுங் கொல்	என்றைக்கு வாய்க்குமோ?

* * *—நம்மாழ்வாரருளிச்செய்த தமிழ் வேதத்தைப் பக்தியுடன் பரவும் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை உள்ளபடி உணர்ந்து ஈடுபட்டிருக்கும் மஹான்களுடைய கோஷ்டிகளை அடியேன் ஸேவித்து ஆநந்திக்கும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ என்கிறார்.

தன்பத்தி யென்னும் வீட்டின்கண் வைத்த—விலையுயர்ந்த மாணிக்கத்தைச் செப்பிலே வைத்துக் கொண்டிருப்பாரைப் போல அநர்க்கமான அருளிச் செயலைத் தம்முடைய பக்தியாகிற உயர்ந்த மாளிகையிலே வைத்துப் பேணிக்கொண் டிராநின்ற உடையவர் என்றபடி. நாட்டம்—கண். (29)

இன்பந்தருபெரு வீடுவந்தெய்திலென் ? * எண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பல சூழிலென் ? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன் மாயனெனமொழிந்த
அன்பனனகன் * இராமாநுசனென்னையாண்டனனே. (30)

தொல் உலகில்	'அநாதியான இவ்வுலகத்தில்	என்னை ஆண்டனன்	என்னை அடிமை கொண்டருளினார் (ஆன பின்பு)
மன் பல் உயிர்கட்கு இறையவன் மாயன்	நித்யரான எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷியாவான் விஷ்ணுவே'	இன்பம் தரு பெரு வீடு	ஆநந்தாவஹமான மோக்ஷம்
என மொழிந்த	என்று(ஸ்ரீபாஷ்ய முகத்தாலே) அருளிச் செய்த	வந்து எய்தில் என்	வந்து ஸித்தித்தா லென்ன
அன்பன்	பரமகாருணிகராய்	எண் இறந்த துன்பம் தரு பல நிரயம் சூழில் என்	அளவற்ற துக்கங்களைத் தருகிற பல நரகங்கள் வந்து சூழ்ந்து கொண்டால் தான் என்ன ?
அனகன்	நிர்த்தோஷரான		
இராமாநுசன்	எம்பெருமானார்		

* * *—எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளப்பெற்றபின்பு எனக்கு மோக்ஷம் கிடைத்தாலென்ன? பலபல நரகங்கள் தான் நேர்ந்தாலென்ன? எனக்கு எது பரம ப்ராப்யமோ அது கிடைத்து விட்டது என்று சரக்கறப் பேசுகிறார்.

நிரயம்—வடசொல். அனகன்—வடசொல் விகாரம்: ஹேயப்ரதிபடர் என்றபடி.

** ஆண்டுகள்நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோம் * இன்றோரெண்ணின்றியே
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன் * இராமாநுசனைப் பொருந்தினமே. (31)

மனமே	நெஞ்சே !,	இன்று ஓர் எண் இன்றியே	இன்று ஒரு நினைவு மில்லா திருக்கச்செய்தே (அகஸ்மாத்தாக)
நாள் ஆய்	நாள்களாகவும்	காண்தகுதோள் அண்ணல் தென் அத்தியூரர் கழல் இணை கீழ் பூண்ட அன்பு ஆளன் இராமாநுசனை பொருந்தினம்	கண்ணாரக் காணத்தக்க தோள்களையுடைய ஸ்வாமியான பேரருளாளனுடைய திருவடிகளில் அன்பு பூண்ட எம்பெருமானாரைச் சேரப் பெற்றோம் : (என்ன பாக்கியம் !.)
திங்கள் ஆய்	மாதங்களாகவும்		
ஆண்டுகள் ஆய்	வருஷங்களாகவும் (இப்படி)		
நிகழ்காலம் எல்லாம்	நடந்துசெல்லுகிற ஸர்வ காலங்களிலும்		
ஈண்டு பல்யோனிகள் தோறு	திரண்டு பலவகைப்பட்ட யோனிகள் தோறும்		
உழல்வோம்	தட்டித்திரிந்த நாம்		

* * *—நெஞ்சே! இன்றளவும் நமக்குக் கழிந்த காலங்கள் கணக்கிடமுடியா : வருஷக்கணக்காகவும் மாதக்கணக்காகவும் நாட்கணக்காகவும் கழிந்து செல்லுகின்ற காலமெல்லாம் மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து தடுமாறித் திரிந்த நாம் இன்று ஒரு நினைவின்றியே அகஸ்மாத்தாக எம்பெருமானாரை அடிபணியப் பெற்றோமே! நம்முடைய அத்ருஷ்டம் எப்படிப்பட்டது! கண்டாயே! என்று தம் திருவுள்ளத் தோடே உசாவுகின்றார். (31)

*பொருந்தியதேசும் பொறையுந்திறலும் புகழும் * நல்ல*
*திருந்தியஞானமுஞ் செல்வமுஞ்சேரும் * செறுகலியால்*
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
*அருந்தவன் * எங்களிராமாநுசனை யடைபவர்க்கே.* (32)

செறு கலியால்	தரும நெறியைத் திரஸ்கரிக்கின்ற கலியினாலே	அடைபவர்க்கு	ஆச்ரயிக்குமவர்களுக்கு
வருந்திய	துக்கப்பட்ட	பொருந்திய தேசும்	ஸ்வரூபாநுரூபமான தேஜஸ்ஸும்
ஞாலத்தை	பூமியை	பொறையும்	க்ஷமாகுணமும்
வண்மையினால் வந்து எடுத்து அளித்த	தமது நிர்ஹேதுக க்ருபையாலே வந்து உத்தரித்து ரக்ஷித்தவரும்	திறலும்	ஜிதேந்த்ரியத்வமாகிற பலமும்
அரும் தவன்	சரணாகதியென்கிற அரிய தபஸ்ஸை அநுஷ்டித்தவரும்	புகழும்	கீர்த்தியும்
எங்கள்	எமக்கு ஸ்வாமியுமான	நல்ல திருந்திய ஞானமும்	பரமவிலக்ஷணமான அறிவும்
இராமாநுசனை	எம்பெருமானாரை	செல்வமும்	பக்தியாகிற ஸம்பத்தும்
		சேரும்	தானே வந்துசேரும்.

*அடையார்கமலத்தலர்மகள்கேள்வன் * கையாழியென்னும்*
*படையோடு நாந்தகமும் படர்தண்டும் * ஒண்சார்ங்கவில்லும்*
*புடையார் புரிசங்கமுமிந்தப்பூதலம் காப்பதற்கென்று **
இடையே யிராமாநுசமுனியாயின விந்நிலத்தே. (33)

அடை ஆர் கமலத்து அலர் மகள் கேள்வன்	தளங்கள் நெருங்கிய தாமரைப் பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு வல்லபனான எம்பெருமானுடைய	புடை ஆர் புரி சங்கமும்	ஒரு பக்கத்துக்குத்தானே ஆபரணமாகப் போரும்படியான அழகிய ஸ்ரீ பாஞ்சஜந்யமும் (ஆக இப் பஞ்சாயுதாழ்வார்கள்)
கை	திருக்கையிலே விளங்காநின்ற	இந்த பூதலம் காப்பதற்கு என்று	இந்தப் பூமியை ரக்ஷிக்கைக்காக
ஆழி என்னும் படையோடு	திருவாழியென்கிற திவ்யாயுதத்தோடே	இந்நிலத்து	இப்பூமண்டலத்திலே
நாந்தகமும்	நந்தகவாளும்	இராமாநுசமுனி இடையே ஆயின	எம்பெருமானார் பக்கலிலே ஆயினர்.
படர் தண்டும்	ரக்ஷணத்தொழிலிலே பரந்திராநின்ற கதையும்		
ஒண் சார்ங்கம் வில்லும்	அழகிய ஸ்ரீ சார்ங்க மென்கிற வில்லும்		

* * *—ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களும் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலே வந்து குடிகொண்டனர் என்கிறார் இப்பாட்டில்.

“அடையார்=புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இந்நிலத்தே இராமாநுச முனியிடையே ஆயின” என்று அந்வயித்தவாறு ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்கள் இவர்பக்கலிலே ஆகையாவது—இவருடைய நினைவைக் கடாக்ஷித்துநின்று இவர் அதிகரித்த காரியத்திற்குத் துணைசெய்கையாம். அம்பரீஷனுக்குத் திருவாழியாழ்வான் ஸஹகரித்ததுபோல.

இப்பாட்டை மற்றொரு வகையாகவும் அந்வயிக்க இடமுண்டு:—“அடையார் + புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இந்நிலத்திடையே இராமாநுசமுனியாயின” என்று. இப்பக்ஷத்தில் ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களே இந்நிலவுலகைக் காக்க எம்பெருமானாராக வந்து திருவவதரித்தார்களென்றதாகிறது.

இப்பாட்டினால், எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களுடைய திருவவதாரமென்று விளங்கா நின்றமையால் திருவனந்தாழ்வானுடைய அவதாரமென்று சொல்வது எங்ஙனே? என்று சங்கிக்குமவர்கள் நமது சேஷாவதாரச் சிறப்பு நூல் காண்க. (33)

*நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய*
*பெலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை * என்பெய்வினைதென்*
புலத்தில் பொறித்த வப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
*நலத்தைப் பொறுத்தது * இராமாநுசன் தன் நயப்புகழே.* (34)

இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
நயம் புகழ்	கல்யாணகுணங்களானவை
நிலத்தை செறுத்து உண்ணும் நீசம் கலியை	பூலோகத்தை ஹிம்ஸித்துத் தின்கிற நீசனான கலிபுருஷனுடைய
நினைப்பு அரிய பெலத்தை செறுத்தும்	இவ்வளவென்று நினைக்க முடியாதபடி அளவற்றதான பராக்ரமத்தைத் தொலைத்தவளவிலும்

பிறங்கியது இல்லை	பிரகாசிக்கவில்லை ;
(பின்னை எப்போது பிரகாசித்தன ? என்னில்)	
என் பெய் வினை	என்னாலே செய்யப்பட்ட பாவங்களை
தென் புலத்தில்	யமலோகத்தில்
பொறித்த	எழுதிவைத்த
அப்புத்தகம் சும்மை	அந்த புஸ்தகக் கட்டுகளை
பொறுக்கியபின்	கொளுத்திவிட்டபின்பு
நலத்தைபொறுத்தது	விளக்கம் பெற்றன.

* * *—எம்பெருமானாருடைய ஞானம், சக்தி முதலிய திருக்கல்யாண குணங்கள் எப்போது பிரகாசித்தனவென்றால், இந்நிலவுலகத்தில் கலிபுருஷன் செங்கோல் செலுத்த முடியாதபடி அவனுடைய வலிமையைத் தொலைத்துக் கிருதயுக தர்மமே எங்கும் நடைபெறும்படி செய்தருளினவாறே "இவர் மஹா புருஷர்; அரிய பெரிய ஞான சக்திகளை யுடையவர்" என்று உலகத்தாரனைவரும் போற்ற நேர்ந்ததனால் கலியின் கொடுமையைக் கெடுத்தது காரணமாகவே இவருடைய திருக்கல்யாண குணங்கள் நன்றாக விளங்கின—என்பர் சிலர்; அது தகுதியல்ல; கலிதோஷத்தைப் போக்கினவளவிலும் எம்பெருமானாருடைய திருக்குணங்கள் பொலிவு பெறவில்லை. பின்னை எப்போது பொலிவு பெற்றனவென்றால், எனது அளவற்ற பாவங்களையெல்லாம் சித்திரகுப்தன் எழுதிவைத்திருந்த பெரிய புத்தகச் சுமையைக் கொளுத்திவிட்டு என்னை நிஷ்கல்மஷனாக்கி அடிமைகொண்டாரென்கிற விஷயம் வெளிவந்த பிறகு தான் அவருடைய திருக்குணங்கள் ஆச்சரியமாக விளங்கின என்கிறார். இதனால், தம்முடைய பாவங்கள் ஸர்வசக்தனாலும் போக்க முடியாதவை என்பதும், கலியின் கொடுமையிற் காட்டிலும் தமது கொடுமை வலிதாயிருந்ததென்பதும், இப்படி மஹா பாபிஷ்டராயிருந்த தம்மை க்ஷமித்தருளி உஜ்ஜீவிக்கச் செய்தமையைக் கண்டு உலகத்தாரனைவரும் ஆச்சரியப்பட்டார்களென்பதும் தெரிவிக்கப்பட்டன. (34)

*நயவேனொருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்*
*புயலே யெனக்கவி போற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்*
மயலேபெருகு மிராமாநுசன் மன்னுமாமலர்த்தா
*ளயரேன் * அருவினையென்னை யெவ்வாறின்றடர்ப்பதுவே ?* (35)

ஒரு தெய்வம்	வேறொரு தெய்வத்தை
நயவேன்	விரும்பமாட்டேன் ;
நால்நிலத்தே	இவ்வுலகில்
சிலமானிடத்தை	சில நீசமனிதர்களைக் குறித்து

புயலே என	‘மேகம்போலே வர்ஷிக்கிற உதாரனே!’ என்று (அதிவாதமாகச்) சொல்லி
கவிபோற்றி செய்யேன்	கவிகள் கட்டி ஸ்தோத்ரம் செய்யமாட்டேன்;

நித்யாநுஸந்தானவுரை

பொன்அரங்கம் என்னில்	'திருவரங்கம்' என்று சொன்னவாறே	அயரேன்	மறக்கமாட்டேன் ; (ஆனபின்பு)
மயல் பெருகும்	அளவற்ற வ்யாமோஹத்தையடைகின்ற	அருவினை என்னை	கொடிய பாவங்கள் என்னை
இராமாநுசன்	எம்பெருமானாருடைய	இன்று	இன்று முதலாக
மன்னு மா தாள் மலர்	பொருந்திய சிறந்த திருவடித் தாமரைகளை	எவ்வாறு அடர்ப்பது	எப்படி ஆக்ரமிக்கக் கூடும் ?

*அடல்கொண்டநேமிய னாருயிர்நாதன் * அன்றாரணச்சொற்*
*கடல்கொண்டவொண்பொருள் கண்டளிப்ப * பின்னுங்காசினியோர்*
இடரின்கண் வீழ்ந்திடத்தானு மவ்வொண்பொருள்கொண்டவர்பின்
*படருங்குணன் * எம்மிராமாநுசன் தன்படியிதுவே.* (36)

அடல்கொண்ட நேமியன்	(ஆச்ரித விரோதிகளை அழிக்க வல்ல) மிடுக்கையுடைய திருவாழியை ஏந்தினவனாய்	பின்னும்	அதற்குப் பின்பும்
		காசினியோர்	பூமியிலுள்ளவர்கள்
		இடரின் கண் வீழ்ந்திட	ஸம்ஸார துக்கத்தில் அழுந்திக் கிடக்க,
ஆர் உயிர் நாதன்	ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான்	தானும்	(எம்பெருமானாராகிற) தாமும்
அன்று	அர்ஜுநனுக்கு ஸாரதியாயிருந்த வக்காலத்தில்	அவ்வொண்பொருள் கொண்டு	(முன்பு ஸர்வேச்வரனருளிச் செய்த) அந்தச் சிறந்த அர்த்தங்களைக் கொண்டு
ஆரணச்சொல் கடல்கொண்ட ஒண் பொருள் கண்டு அளிப்ப	வேதங்களாகிற கடலில் மறைந்து கிடந்த நல்ல அர்த்தங்களை ஆராய்ந்து (கீதாமூலமாக) உபதேசிக்க	அவர் பின் படரும் குணன்	அந்த ஸம்ஸாரிகளைப் பின் தொடரும் சீலமுடையார்;
		எம் இராமாநுசன் தன் படி இது	அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானாருடைய ஸ்வபாவம் இது.

* * *—முன்பு பகவான் பல சிறந்த அர்த்தங்களை ஸ்ரீ பகவத்கீதாமுகத்தாலே வெளிப்படுத்தினவளவிலும் பாழும் ஸம்ஸாரிகள் அவ்வர்த்தங்களைத் தெரிந்து கொண்டு உஜ்ஜீவிக்கமாட்டாமல் மேன்மேலும் ஸம்ஸாரத்தையே பெருக்கிக் கொண்டு அதோகதியை யடைந்துவிடவே, "ஐயோ! இப்படி நித்யஸம்ஸாரிகளாய்க் கெட்டுப்போகிறார்களே!" என்று அநுதாபங்கொண்ட எம்பெருமானார் அந்த கீதா சாஸ்த்ரத்திலுள்ள பொருள்களையே விளங்க உரைத்துக்கொண்டு, இது கேட்டுத் திருந்துவார் ஆரேனுமுண்டோ? என்று ஸம்ஸாரிகளைப் பின்தொடர்ந்து செல்லுகிறார்; நம்மைப் பெறுதற்கு அவர் தாமே முயற்சி செய்துகொண்டு * ஆள்பார்த்து உழிதருகின்றார்; இந்தத் திருக்குணம் உங்களுக்குத் தெரியவில்லையா? என்கிறார்.

தானும் அவ்வொண் பொருள் கொண்டு=கீதா பாஷ்யம் அருளிச் செய்து என்று கருத்து. திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சரமச்லோகார்த்தத்தை ஏகாந்தமாகக் கேட்டு அதனை யெல்லாருமறிந்து உஜ்ஜீவிக்குமாறு கோபுரத்தின் மேலேறி விளம்பரப்படுத்தின திருக்குணத்தை இப்பாட்டில் பேசுகின்றாரென்னவுமாம். ... (36)

*படிகொண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம் **
*குடிகொண்ட கோயி லிராமாநுசன்குணங்கூறும் * அன்பர்*
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளங்கனியும்நல்லோ
*ரடிகண்டு கொண்டுகந்து * என்னையுமாளவர்க்காக்கினரே.* (37)

படிகொண்ட கீர்த்தி	உலக மெங்கும் பரந்த புகழை யுடைத்தான
இராமாயணம் என்னும்	ஸ்ரீராமாயண மென்கிற
பத்திவெள்ளம்	பக்தி ஸமுத்ரம்
குடிகொண்ட கோயில்	நித்யவாஸம் பண்ணுகிறதிவ்ய ஸ்தாநமாயிருக்கிற
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
குணம் கூறும் அன்பர்	திருக்குணங்களைப் பேசுகின்ற பக்திமான்களுடைய
கடிகொண்ட மாதாள் மலர்	மணம்மிக்குச் சிறந்த பாதார விந்தங்களில்
உள்ளம் கலந்து	நெஞ்சு பொருந்தி
கனியும்	ஸ்நேஹித்திருக்கிற
நல்லோர்	மஹாநுபாவர்கள்
அடிகண்டு கொண்டு	(இவ்வாத்ம வஸ்துவானது உடையவர்க்கு சேஷப்பட்டதென்கிற) மூலப்பொருளைத் தெரிந்து கொண்டு
உகந்து	ஆதரித்து
என்னையும்	அடியேனையும்
அவர்க்கு	அவ்வெம்பெருமானார்க்கு
ஆள் ஆக்கினர்	ஆட்படுத்தினார்கள்.

****—இப்படிப்பட்ட எம்பெருமானாரை நீரே சென்று பற்றினீரோ? அன்றி அவர் தாமே ஸ்வீகரித்தருளினரோ? என்று அமுதனாரைச் சிலர் கேட்க, நானும் பற்றவில்லை, அவரும் ஸ்வீகரிக்கவில்லை; அவருடைய ஸம்பந்த ஸம்பந்திகள் என்னைக் கொண்டு சேர்த்தார்கள் என்கிறார்.*

அடி கண்டு கொண்டு = *அடியாவது மூலம்; எம்பெருமானார்க்கு உரித்தாயிருக்கையாகிற மூலத்தைத் தெரிந்துகொண்டு சேர்த்தார்களென்கை. மருமமறிந்து காரியஞ் செய்தார்களென்றவாறு.* (37)

*ஆக்கியடிமை நிலைப்பித்தனையென்னையின்று * அவமே*
*போக்கிப் புறத்திட்ட தென்பெருளாமுன்பு? * புண்ணியர்தம்*
வாக்கிற்பிரியா விராமாநுச நின்னருளின்வண்ணம்
*நோக்கிற்றெரிவரிதால் * உரையாயிந்த நுண்பொருளே.* (38)

என்னை	(ஸ்வாமிந் !) (நெடுநாளாக அஹங்காரியாய்க்கிடந்த) என்னை
இன்று	இன்றைத் தினத்தில்
ஆக்கி	ஒரு பொருளாக்கி
அடிமை	சேஷத்வத்தில்
நிலைப்பித்தனை	நிலை நிறுத்தினீர்; (இன்று இப்படி செய்தருளின தேவரீர்)
முன்பு	முற்காலமெல்லாம்
அவமே போக்கி	வீணாகப் போக்கி
புறத்து இட்டது	வெளி விஷயங்களிலே தள்ளி விட்டு வைத்தது
என் பொருளா	என்ன நிமித்தமாக ?
புண்ணியர் தம்	(தேவரீரை இடைவிடாது அநுபவிக்கும்) பாக்யசாலிகளுடைய
வாக்கில் பிரியா	வாக்கை விட்டுப் பிரியாத
இராமாநுச	எம்பெருமானாரே !
நின் அருளின் வண்ணம்	தேவரீருடைய திருவருளிருக்கும் பரிசு
நோக்கில்	நோக்கு மளவில்
தெரிவு அரிது	அறிய முடியாததாயிரா நின்றது ;
இந்த நுண் பொருள்	இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை
உரையாய்	தேவரீரே அருளிச் செய்ய வேணும்.

****—கூரத்தாழ்வானைக் கொண்டு அடியேனை இன்று திருத்திப் பணிகொண்ட தேவரீர் இதற்கு முற்கால மெல்லாம் இந்த சேஷத்வரஸத்தை அடியேனுக்கு ஊட்டாமல் வீணாக விஷயாந்தரங்களிலே அகலவைத்திருந்ததற்கு என்ன காரணம்? இன்று இங்ஙனே திருவுள்ளம் பற்றும்படியாக என்னிடத்தில் என்ன ஸுக்ருத முண்டாயிற்று? ஒன்றுமில்லை ; அப்படியிருக்கச் செய்தேயும் தேவரீர் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையைக் கொண்டேயன்றோ இன்று ஆட்படுத்திக் கொண்டது. ஹா ஹா இப்படியும் ஒரு க்ருபையுண்டோ? இவ்வருளின் திறத்தை அறிவாரார் ! அறிந்த தேவரீரே அருளிச் செய்யவேணும் என்றாராயிற்று.*

நிலைப்பித்தனை = முன்னிலை யொருமை வினைமுற்று. அவம்—வீண். "இன்று என்னை ஆக்கி அடிமை நிலைப்பித்தனை, முன்பு அவமே போக்கிப் புறத்திட்டது என் பொருளா!" = இன்று ஸ்வீகரித்ததற்கும் இத்தனை நாள் ஒதுக்கிவைத்ததற்கும் என்ன காரணம்? (38)

பொருளும்புதல்வரும்பூமியும் * பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சே! * மற்றுளார்தரமோ?
இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன்னீறில் பெரும்புகழே
தெருளுந்தெருள் தந்து *இராமாநுசன் செய்யுஞ்சேமங்களே. (39)

பொருள் என்றும்	த்ரவ்யம் என்று சொல்லிக் கொண்டும்	வெம் துயர் மாற்றி	க்ரூரமான துக்கங்களை போக்கடித்து
புதல்வர் என்றும்	புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும்	தன் ஈறு இல் பெரு புகழே தெருளும் தெருள்	தம்முடைய முடிவில்லாத சிறந்தகல்யாண குணங்களையே சிந்திக்கக் கடவதான ஞானத்தை
பூமி என்றும்	க்ஷேத்ரமென்று சொல்லிக் கொண்டும்	தந்து	அளித்தருளி
பூ குழலார் என்றுமே	அழகிய குழலையுடைய ஸ்திரீகள் என்று சொல்லிக் கொண்டும் (அர்த்த புத்திரா திகளையே விரும்பி)	இராமாநுசன்	எம்பெருமானார்
மருள் கொண்டு	அறிவு கெட்டு	செய்யும் சேமங்கள்	செய்கிற க்ஷேமங்களானவை
இளைக்கும் நமக்கு	வருந்திக் கொண்டு கிடக்கிற நமக்கு	நெஞ்சே	ஓ மனமே!
இருள்கொண்ட	அஜ்ஞானத்தோடு கூடிய	மற்று உளார் தரமோ	மற்ற பேர்களுக்குச் செய்கிற மாதிரியோ? [அல்ல விலக்ஷணம் என்றபடி.]

* * * எம்பெருமானாருடைய திருவருளாலே தாம் பெற்ற நன்மைகளை நினைத்து நினைத்து ஆநந்தமுள்ளடங்காமல் அவ்வாநந்தத்தை நெஞ்சோடே கூடி உசாவுகிறார். நெஞ்சே! *அன்னை அத்தன் என் புத்திரர் பூமி வாசவார்குழலாள் என்று மயங்கிப் புத்ர தார க்ருஹ க்ஷேத்ரங்களுக்கு மேற்பட வொன்றுமறியாமல் உடலுக்கே கரைந்து நைந்துகிடந்த நமக்கு அஜ்ஞானங்களையும் அது காரணமாக வரும் பாவங்களையும் தொலைத்தருளித் தம்து திவ்ய கீர்த்திகளையே அநவரதம் பேசும் படியான நிலைமையிலே நம்மைக் கொண்டு நிறுத்தினார் எம்பெருமானார்; இப்படியாக அவர் நமக்குச் செய்தருளும் க்ஷேமங்கள் இவ்வுலகில் வேறு யார்க்காவது கிடைக்கக் கூடியதோ? நம்முடைய பாக்கியமே பாக்கியமன்றோ என்றாராயிற்று.

மற்றுளார் தரமோ? என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; இப்படிப் பட்ட க்ஷேமங்களை நமக்கு எம்பெருமானார் தவிர வேறு யாரேனும் அளிக்கக்கூடுமோ? என்றும், இப்படிப்பட்ட க்ஷேமங்கள் நமக்குத் தவிர வேறு ஆர்க்கேனும் கிடைக்கத் தகுமோ? என்றும். (39)

சேமநல்வீடும் பொருளுந்தருமமும் * சீரியநற்
காமமுமென்றிவை நான்கென்பர் * நான்கினுங்கண்ணனுக்கே
ஆமதுகாம மறம்பொருள்வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன்சீலன் * இராமாநுசனிந்தமண்மிசையே. (40)

சேமம் நல் வீடும்	அனைவர்க்கும், க்ஷேமரூபமான சிறந்த மோக்ஷமும்	சீரிய நல் காமமும் என்று இவை	மிகவுஞ் சிறந்த காமமும்— ஆக இப்படி சொல்லப் பட்டுள்ள இவை
பொருளும்	அர்த்தமும்	நான்கு என்பர்	நான்கு புருஷார்த்தங்கள் என்று வைதிகர் கூறுவர்கள்;
தருமமும்	தர்மமும்		

இராமாநுச நூற்றந்தாதி

நான்கினும்	இந்த நான்கு புருஷார்த்தங்களுள்	இதற்கு என்று	இந்தக் காம புருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் என்று
காமம்	காமமாவது	வாமனன் சீலன் இராமாநுசன்	வாமநாவதாரம் செய்த பெருமானோடு ஒத்த சீலத்தையுடையரான எம்பெருமானார்
கண்ணனுக்கே ஆமது	எம்பெருமான் விஷயத்திலேயே உண்டாமது		
அறம் பொருள் வீடு	தர்ம அர்த்த மோக்ஷங்கள் மூன்றும்	இந்த மண் மிசை உரைத்தான்	இவ்வுலகத்தில் அருளிச் செய்தார்.

** * *—எம்பெருமானார் இவ்வுலகத்தார்க்கு உபதேசித்தருளின அர்த்தங்களில் ஒரு அர்த்த விசேஷத்தை இப்பாட்டில் எடுத்துரைக்கின்றார்:—ஸகல சாஸ்த்ரங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுமவை தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்கு புருஷார்த்தங்களாம்; அந்த நான்கினுள் காமமென்பது பகவத் விஷய காமம்; விஷயாந்தரங்களைப்பற்றின காமம் சிற்றின்ப மாதலால் அது புருஷார்த்தமன்று; பேரின்பமாகிய பகவத் காமமே காமம். அதுவே புருஷார்த்தம். மற்ற மூன்று புருஷார்த்தங்கள் மேற்சொன்ன காம புருஷார்த்தத்திற்கு சேஷப்பட்டவைகள்; காமமே ப்ரதாநசேஷியான புருஷார்த்தம் என்று உலகத்தாரெல்லார்க்கும் உபதேசித்தருளினர் எம்பெருமானார் என்றாராயிற்று.*

சேம நல்வீடு மென்று தொடங்கி அறம் பொருள் வீடிதற்கு என்னுமளவும் எம்பெருமானாருடைய உபதேச வடிவம்.

கண்ணனுக்கேயாமது காமம்=காமக்ரோதங்களைக் கெட்ட குணமாகக் கூறியிருப்பது தகாத விஷயங்களில் காமம் கூடாதென்பதுபற்றி. பகவத்விஷயத்தில் காமம் சாஸ்த்ரவிஹிதம். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் இக்காமமே பொலியும்.

வாமநன் சீலன்=வாமநாவதாரம் செய்த எம்பெருமானுடைய சீலம்போன்ற சீலத்தையுடையவர் என்கை. ஒருவரும் அபேக்ஷியாதிருக்கத் தன்பேறாக எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்துத் திரிவிக்கிரமனானதுபோல், ரஸ்யமாயும் ரஹஸ்யமாயுமுள்ள அர்த்த விசேஷங்களைத் தமது நிர்ஹேதுகக்ருபையாலே வெளியிடுபவர் எம்பெருமானார் என்கிறது. (40)

*மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே*
*கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்களெல்லாம்*
அண்ணலிராமாநுசன் வந்துதோன்றிய வப்பொழுதே
*நண்ணருஞானந் தலைக்கொண்டு * நாரணற்காயினரே.* (41)

எங்கள் மாதவனே	நமக்கு நாதனான திருமால் தானே	அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே	ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் இங்கே வந்தவதரித்தவுடனே
மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து	(இப்பூமியிலுள்ள மநுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்து		
கண் உற நிற்கிலும் காணகில்லா உலகோர்கள் எல்லாம்	எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டு நின்ற விடத்திலும் (அவனை நம்முடைய நாதனென்று) காணமாட்டாதிருந்த இவ்வுலகத்தாரெல்லாரும்	நண்ண அரு ஞானம் தலைக்கொண்டு	பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப்பெற்று
		நாரணற்கு ஆயினர்	ஸ்ரீமந் நாராயணனுக்கு சேஷப்பட்டனர்.

* * *—எம்பெருமானுடைய அவதாரத்திற்காட்டிலும் எம்பெருமானாருடைய அவதாரமே சிறப்புற்றதென்கிறார். எம்பெருமான் பலபலயோனிகளிற் பலவகைப் பிறவி பிறந்து கண்காண வந்துநின்று உபதேசங்களாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்த விடத்திலும் யாரும் அவனை லக்ஷியம் பண்ணவில்லை; "அவஜாநந்தி மாம் மூடா:" [என்னை மூடர்கள் அவமானப்படுத்துகிறார்கள்] என்று அவன்றானே சொல்லிக்கொண்டு வருத்தப்படவேண்டியதாயிற்று. ஆகையாலே பகவானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளுடைய தெள்ளறிவுக்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானாருடைய அவதாரமோ வென்னில்; பயன்பெற்றது. இவர்தாம் திருவவதரித்தவுடனே எல்லாவுலகத்தாரும் ஆச்சரியமான ஞானத்தைப்பெற்று உஜ்ஜீவித்தார்கள்—என்றாராயிற்று. (41)

*ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதலளற்றழுந்தி*
*மாயுமென்னாவியை வந்தெடுத்தா னின்று * மாமலராள்*
நாயக னெல்லாவுயிர்கட்கும் நாத னரங்கனென்னுந்
*தூயவன் * தீதிலிராமாநுசன் தொல்லருள் சுரந்தே.* (42)

மா மலராள் நாயகன்	லக்ஷ்மீபதியான	ஆய் இழையார் கொங்கை தங்கும் அக்காதல் அளறு அழுந்திமாயும் என் ஆவியை	அழகிய ஆபரணங்களணிந்த ஸ்திரீகளுடைய கொங்கைத் தடத்தில் தங்கும் ஆசையாகிற சேற்றிலே அழுந்தி நசித்துப் போகிற என் ஆத்மாவை
அரங்கன்	பெரியபெருமாள்		
எல்லா உயிர்கட்கும் நாதன் என்னும்	ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷி என்று உபதேசிப்பவரும்		
தூயவன்	பரமபரிசுத்தரும்		
தீது இல்	எவ்வகை குற்றமுமில்லாதவருமான	தொல் அருள் சுரந்து வந்து இன்று எடுத்தான்	இன்று நிர்ஹேதுக க்ருபை பண்ணிவந்து உத்தரித்தருளினார்.
இராமாநுசன்	எம்பெருமானார் :— (என்ன செய்தாரென்றால்)		

* * *—பகவானுடைய அவதாரகாலங்களில் திருந்தாத ஸம்ஸாரிகளும் எம்பெருமானார் காலத்தில் திருந்திவிட்டார்களென்று கீழ்ப்பாட்டில் கூறியதற்கு வேறு த்ருஷ்டாந்தம் காட்ட வேணுமோ? என்னைத் திருத்திப் பணிகொண்ட விஷயமொன்றே போராதோ வென்பார்போலத் தம்மைத் திருத்தினதைச் சொல்லி ஆநந்தப்படுகிறார். (42)

*சுரக்குந் திருவுமுணர்வும் * சொலப்புகில் வாயமுதம்*
*பரக்கு மிருவினை பற்றற வோடும் * படியிலுள்ளீர்!*
உரைக்கின்றனனுமக்கியானறஞ்சீறு முறுகலியைத்
*துரக்கும் பெருமை * இராமாநுசனென்று சொல்லுமினே.* (43)

படியில் உள்ளீர்	இப்பூமியிலுள்ளவர்களே !	திருவும்	பக்திப் பெருஞ்செல்வமும்
யான் உமக்கு உரைக்கின்றனன்	நான் உங்களுக்கு (ஒரு ஹிதம்) சொல்லுகிறேன் : (என்னவென்றால்)	உணர்வும்	ஞானமும்
		சுரக்கும்	மேன் மேலும் பெருகும்
அறம் சீறும் உறுகலியை துரக்கும் பெருமை இராமாநுசன் என்று சொல்லுமின்	தர்மமார்கத்தில் சீற்றமுடைத்தாய் ப்ரபலமான கலியை ஓட்டிவிடும் எம்பெருமானாருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள்; (அப்படி சொன்னால்)	சொல புகில்	அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொடங்கும் போதே
		வாய் அமுதம் பரக்கும்	வாக்கிலே அம்ருதரஸம் வியாபிக்கும்;
		இருவினை	மஹாபாவங்கள்
		பற்று அற ஓடும்	அடியோடே போய் விடும்.

* * *—உலகத்தாரை நோக்கி நீங்களெல்லாரும் ஸ்ரீ ராமாநுஜ திவ்ய நாமத்தை வாயாரச் சொல்லுங்கள், உங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகுமென்கிறார்; ஓ ஜனங்களே! உங்களுக்கு ஓர் அருமையான அர்த்தத்தை உபதேசிக்கிறேன் கேளுங்கள்; எம்பெருமானாருடைய ஸம்பந்தமுள்ள தேசத்தில் தருமத்திற்கு மாறான கலிபுருஷன் நிற்கப்பெறமாட்டான்; அன்னவரது திருநாமங்களை நீங்கள் அநுஸந்தானம் பண்ணுங்கள்; உங்களுக்கும் ஜ்ஞாநபக்திகள் தலையெடுக்கும். பாவங்களும் தொலையும். அத்திருநாமங்கள் நாவுக்கும் இனிதாயிருக்கும். சொல்லிப்பாருங்கள்.

உமக்கு+யான், உமக்கியான். "யவ்வரின் இய்யாம்" என்பது நன்னூல்.

"நேர்பதினாறே நிரைபதினேழென் றோதினர் கலித்துறையோரடிக் கெழுத்தே" என்ற இலக்கணத்திற்கு மாறாக இப்பாட்டின் மூன்றாமடியில் (ஒற்றொழித்துப்) பதினெட்டெழுத்து வந்தது என்னெனில்; உமக்கியான் என்ற விடத்தில் ககரத்தின் மேலேறின இகரம் குற்றிய லிகரமாகையாலே வண்ணங்கெடாமைக்குக் கழித்து உடலெழுத்தான ககரத்தைக் கீழோடே ஒன்றுவித்துப் பதினேழெழுத்தாகவே எண்ணத்தக்கது. கம்பர் இயற்றிய சடகோபரந்தாதியில் "என் முடியாதெனக்கியாதே யரிய திராவணன்றன்" என்ற இருபத்தொன்பதாம்பாட்டிலும் இப்படியே பிரயோகம் வந்தமை காண்க. இந்த நூற்றந்தாதியிலும் மேல் ஐம்பத்து மூன்றாம் பாட்டில் "பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்" என்ற விடத்திலும் இங்ஙனமே கொள்க. (43)

சொல்லார் தமிழொருமூன்றும் * சுருதிகள் நான்குமெல்லை
யில்லா வறநெறியாவுந் தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவு மிராமாநுசன் திருநாமம் நம்பிக்
கல்லாரகலிடத்தோர் * எதுபேறென்று காமிப்பரே. (44)

அகல் இடத்தோர்	விசாலமான இப்பூமியிலுள்ளவர்கள்,	நல்லார் பரவும்	ஸத்துக்களால் துதிக்கப்படுபவராயு மிருக்கிற
சொல் ஆர் தமிழ் ஒரு மூன்றும்	சொல் நிரம்பிய இயல் இசை நாடகம் என்கிற ஒப்பற்ற முத்தமிழையும்	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
சுருதிகள் நான்கும்	நான்கு வேதங்களையும்	திரு நாமம்	திருநாமத்தை
எல்லை இல்லா அறம் நெறி யாவும்	கணக்கில்லாத தரும சாஸ்திரங்களையும் மற்றும் எல்லாக் கலைகளையும்	நம்பி கல்லார்	(என் வார்த்தையை) நம்பிக் கற்கின்றார்களில்லை; (ஸ்ரீராமாநுஜ நாமஸங்கீர்த்தநமே புருஷார்த்தமென்று அறியாதவர்களாய்)
தெரிந்தவன்	அறிந்தவராயும்	எது பேறு என்று காமிப்பரே!	நமக்குப் புருஷார்த்தம் எது? என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஐயோ!
எண் அரு சீர்	எண்ண முடியாத குணங்களையுடையவராயும்		

* * *—சொல் ஆர் தமிழொரு மூன்றும் = இயல் இசை நாடகம் என மூவகைப்படும் தமிழ்:—"எழுத்துப் பதின்மூன்று இரண்டசை சீர்முப்பதேழ்தளை ஐந்து, இழுக்கிலடிகள் நாறு ஒன்பது ஒண்பொருள் கோள் இருமூ, வழுக்கில்விகாரம் வனப்பெட்டு யாப்புள் வகுத்தனவே" என்று தொகுத்து உணர்த்தப்படும் இயற்றமிழின் இலக்கணங்கள். குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம், காந்தாரம், பாலையாழ் முதலிய பண்களைக் கொண்டுள்ள தமிழ் இசைத்தமிழாம். இயலுக்கும் இசைக்கும் பொதுவானது நாடகத் தமிழாம். திராவிட சாஸ்த்ரங்களெல்லாவற்றையும் அறிந்தவர் எம்பெருமானார் என்கிறது.

நித்யாநுஸந்தானவுரை

சுருதிகள் நான்கும்—ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என வேதங்கள் நான்காம். எல்லையில்லா அறநெறி—தர்மசாஸ்த்ரங்கட்கு அளவேயில்லை. யாவும்—கீழ்ச் சொன்னவற்றையும் மற்றுமுள்ள கலைகளையும். (44)

*பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி * அப்பேறளித்தற்*
*காறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * என்றிப்பொருளைத்*
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்த செம்மை சொல்லால்
*கூறும்பரமன்று * இராமாநுச! மெய்ம்மை கூறிடிலே.* (45)

இராமாநுச	எம்பெருமானாரே !
நின் சரண் அன்றி	தேவரீருடைய திருவடிகளைத் தவிர
மற்று பேறு ஒன்றும் இல்லை	உபேயம் வேறொன்றுமில்லை;
அப்பேறு அளித்தற்கு	தேவரீர் திருவடிகளாகிற அந்த உபேயத்தைத் தருவதற்கு
அச்சரண் அன்றி	அத்திருவடிகள் தவிர
மற்று ஆறு ஒன்றும் இல்லை	வேறு உபாயம் ஒன்றுமில்லை
என்று இப்பொருளை	என்கிற இவ்வுண்மைப் பொருளை

தேறுமவர்க்கும்	தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறமஹான்களுக்கும்
எனக்கும்	(இந்தத் தெளிவு சிறிதுமில்லாத) எனக்கும்
உனை தந்த செம்மை	(வாசி பாராமல் ஸமமாகவே) தேவரீரைக் காட்டிக் கொடுத்த செம்மைக் குணமானது
மெய்ம்மை கூறிடில்	உண்மை சொல்லில்
சொல்லால் கூறும் பரம் அன்று	வாய்கொண்டு சொல்லத்தரமன்று [அநுபவித்து உருகுமித்தனை].

* * *—'உபாயமும் உபேயமும் எம்பெருமானார் திருவடிகளே' என்றிருக்கும் மஹான்களுக்கு தேவரீர் எவ்வாறு அருள் புரிகின்றதோ அவ்வாறுகவே சிறிதும் வாசிவையாமல் பாவியேனுக்கும் அருள் புரிகின்றதே! இஃது என்ன பெருங்குணம்!! த்ருடவிச்வாஸமுடைய ஆழ்வான் ஆண்டான் போல்வாரை அடிமை கொள்வது போலவே அவிச்வாஸியான என்னையும் அடிமை கொள்வதே! இச்செம்மைக் குணத்தின் பெருமையைப் பாசுரமிட்டுச் சொல்ல எனக்கு சக்தியில்லையே யென்று தடுமாறுகின்றார். (45)

*கூறுஞ்சமயங்களாறுங்குலைய * குவலயத்தே*
*மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்*
தேறும்படியென் மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
*ஏறுங்குணனை * இராமாநுசனை யிறைஞ்சினமே.* (46)

கூறும் சமயங்கள் ஆறும் குலைய	மனம்போனபடி சொல்லிக் கொண்டிருக்கிற ஆறுபாஹ்யமதங்களும் தலை மடங்கும்படி
குவலயத்தே	இப்பூமண்டலத்திலே
மாறன் பணித்த மறை	நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதத்தை
உணர்ந்தோனை	கற்று அறிந்தவராயும்

மதியிலியேன் தேறும்படி	ஜ்ஞாநஹீநனான நானும் தெளியும்படியாக
என்மனம் புகுந்தானை	என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தவராயும்
திசை அனைத்தும் ஏறும் குணனை	எல்லாத் திக்குகளிலும் பரவிய திருக்குணங்களையுடையவராயுமிருக்கிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
இறைஞ்சினம்	வணங்கினோம்.

* * *—எம்பெருமானார் செய்தருளின அரியபெரிய உபகாரங்கள் நெஞ்சில் ஊற ஊற, பரவசராய்த் திருவடிகளிலே வணங்குகிறார் :—உலகத்தில் பிரமாணமில்லாமலும் யுக்தியில்லாமலும் மனம்போனபடி சொல்லிக்கொண்டு திரிகிற மதாந்தரஸ்தர்களையெல்லாம் பங்கப்படுத்துவதற்காக நம்மாழ்வார் அருளிச் செய்த தமிழ்வேதமான

திருவாய்மொழியை ஓதியுணர்ந்தவரும், அவிவேகியான நான்கூடத் தேறுதலடையும்படி என் நெஞ்சினுள்ளே புகுந்து என் ஸத்தையை நோக்குபவரும், திசைகளிலெங்கும் பரவிய புகழையுடையவருமான எம்பெருமானாரை வணங்கினேனென்றதாயிற்று.

சமயங்கள் ஆறும்=தேஹாத்மவாதி, தேஹபரிணாமாத்மவாதி, விஜ்ஞாநாத்மவாதி, சூந்யவாதி, அத்வைதவாதி, சிவபரத்வவாதி - என்றிப்படி ஆறு மதஸ்தர்களுண்டு. வேறு வகைகளும் உண்டு. எல்லா மதங்களும் திருவாய்மொழியில் நெற்செய்யப் புல்தேயுங்கணக்கிலே தொலைக்கப்பட்டனவென்க. குவலயம்—வடசொல். தேறும்படி— 'ஒரு வழியாலும் நாம் உஜ்ஜீவிக்க வகையில்லையே! என்செய்வோம்' என்று தடுமாறிக்கிடந்த நானும் 'இனி நமக்கொரு குறையுமில்லை' என்று தேறி மார்விலே கைவைத்துறங்கும்படியாக என்கை. (46)

இறைஞ்சப்படும் பரனீச னரங்கனென்று * இவ்வுலகத்
தறம் செப்புமண்ண லிராமாநுசன் * என்னருவினையின்
திறஞ்செற்றிரவும் பகலும் விடா தென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்காரும் நிகரில்லையே. (47)

இறைஞ்சப்படும் பரன் ஈசன் அரங்கன் என்று	'எல்லாராலும் வணங்கத் தக்க பரதெய்வம் (எதுவென்றால்) ஈசனாகிய ஸ்ரீரங்கநாதனேயாம்' என்று	பகலும் இரவும் விடாது	ஸர்வ காலத்திலும்
இ உலகத்து	இப்பூமண்டலத்திலே	என்தன் சிந்தை உள்ளே	(என் ஹ்ருதயத்தினுள்ளே
அறம் செப்பும்	ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச் செய்யுமவராய்	நிறைந்து	பரிபூர்ணராகி
அண்ணல்	ஸர்வஸ்வாமியான	ஒப்பு அற இருந்தான்	(இவ்விருப்புக்கு) ஒப்பில்லாதபடி எழுந்தருளியிருக்கிறார்;
இராமாநுசன்	எம்பெருமானார்	எனக்கு	இப்படிப்பட்ட அருளைப்பெற்ற எனக்கு
என் அருவினையின் திறம் செற்று	என்னுடைய போக்க முடியாத கர்மஸமூஹத்தைப் போக்கி	ஆரும் நிகர் இல்லை	ஒப்பாவார் ஆருமில்லை.

* * *—ஸ்ரீரங்கநாதனே எல்லாரும் வணங்கத்தக்க பரதெய்வமென்னும் உண்மையை உலகத்தார்க்கு உபதேசித்து எல்லாரையும் பகவத் ஸமாச்ரயணத்தில் ருசியுடையவர்களாக்கிப் போருகின்ற எம்பெருமானார் என்னுடைய தீவினைகளை வேரோடே களைந்தொழித்து அநவரதமும் எனது ஹ்ருதயத்தினுள்ளே பரிபூர்ணராயெழுந்தருளியிராநின்றார்; இப்படிப்பட்ட பரமபாக்கியம் பெற்றவன் இவ்வுலகில் நானொருவனேயாகையால் * இல்லை யெனக் கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரே. (47)

நிகரின்றிநின்றவென் னீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல் * புன்மையிலோர்
பகரும்பெருமை யிராமாநுசவினி நாம்பழுதே
அகலும் பொருளென் * பயனிருவோமுக்கு மானபின்னே. (48)

புன்மையிலோர் பகரும் பெருமை இராமாநுச	மஹான்கள் பேச வேண்டும்படியான பெருமையையுடைய எம்பெருமானாரே!	நின் அருளின் கண் அன்றி	தேவரீருடைய க்ருபையினிடத்தில் தவிர
		புகல் ஒன்றும் இல்லை	வேறு எவ்விடத்திலும் ஒதுங்க இடமில்லை;
நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு	என்னுடைய ஒப்பற்ற தாழ்மைக்கு	அருட்கும்	தேவரீருடைய அந்த க்ருபைக்கும்

அ:.தே புகல்	(என் போல்வாருடைய அந்தத் தாழ்மையே சரணம், (ஆக இவ்வகையாலே)	இனி நாம்	இனி மேலும் நாம்
இருவோமுக்கும் பயன் ஆன பின்	அடியேனால் தேவரீருக்குப் பயன், தேவரீரால் அடியேனுக்குப் பயன் என்று ஸித்தமான பின்பு	பழுதே	வியர்த்தமாக
		அகலும் பொருள் என்	பிரிந்திருக்கைக்குக் காரணம் என்ன ?

* * *—எனக்காரும் நிகரில்லையே என்று களித்துக்கூறின அமுதனாரை நோக்கி எம்பெருமானார் "இக்களிப்பு உமக்கு எத்தனை நாளைக்கு நிற்கும்? நான் உம்மை விட்டுவிடவுங்கூடும்; நீர் என்னை விட்டுவிடவுங்கூடும். இரண்டத்தொன்று நேர்ந்தால் இக்களிப்பு மாறக்கூடியது தானே" என்ன—இனி நாம் வீணாக விட்டுப் பிரிவதற்குக் காரணமேயில்லை யென்கிறார்.

["ததஹம் த்வத்ருதே ந நாதவாந் மத்ருதே த்வம் தயநீயவாந் நச, விதி நிர்மிதமேத தந்வயம் பகவந் பாலய மா ஸ்ம ஜீஹப:" என்ற ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ந ச்லோகமும் இப்பொருள் கொண்டதே.

நீசதை—'நீசதா' என்ற வடசொல் ஐயீறாயிற்று. நீசஸ்ய பாவ: நீசதா—நீசனாயிருக்குந் தன்மை. அருட்குமஃதேபுகல்—நீசர்கள் விஷயத்தில் க்ருபை பண்ணினாலன்றோ அருள் விளங்குவதும் பயன் பெறுவதும். (48)

ஆனதுசெம்மையறநெறி * பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றி இறந்தது வெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமாநுச னித்தலத்துதித்தே. (49)

பூ கமலம் தேன்	தாமரைப் பூக்களிலுண்டான மகரந்தமானது	இராமாநுசன்	எம்பெருமானார்
நதி பாய் வயல்	ஆறுகப் பெருகப் பெற்ற கழனிகளையுடைய	இ தலத்து உதித்து	இப்பூமியிலே திருவவதரித்ததனால்
தென் அரங்கன்	ஸ்ரீ ரங்கத்திலே எழுந்தருளியிருக்கிற பெரிய பெருமாளுடைய	செம்மை அறம் நெறி	ருஜுவான தர்மமார்க்கமானது
கழல்	திருவடிகளை	ஆனது	ஸத்தை பெற்றது
சென்னி வைத்து	சிரஸாவஹித்துக் கொண்டு	பொய்மை அறு சமயம்	பொய்யே நிறைந்து கிடக்கிற அறுசமயங்களும்
தான் அதில் மன்னும்	தாம் அத்திருவடிகளிலேயே ப்ரவணராயிருக்கிற	பொன்றிபோனது	நாசமடைந்தன;
		வெம் கலி இறந்தது	கொடிய கலியுகமும் மாண்டது.

* * *—எம்பெருமானார் திருவவதரித்ததனாலே இவ்வுலகத்துக்கு உண்டான நன்மைகளை அருளிச் செய்கிறார் இதில். முன்பு குத்ருஷ்டிகளினால் அழிந்துகிடந்த தர்மமார்க்கம் மீண்டு நிலைபெற்றது; சாஸ்த்ரவிருத்தமான புறமதங்களெல்லாம் தலை சாய்ந்தன; கலிதோஷமும் கெட்டுப்போயிற்று. (49)

உதிப்பனவுத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன் குற்றமெல்லாம்
பதித்தவென் புன்கவிப் பாவினம் பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமாநுசன்றன் னிணையடியே. (50)

பாவு தொல் சீர்	உலகமெங்கும் பரவின நித்ய கல்யாண குணங்களையுடையவரும்	அஞ்சி கொதித்திட	பயப்பட்டுப் பரிதவிக்கும்படி
எதி தலை நாதன்	யதிகளுக்குத் தலையான நாயகருமான	மாறி நடப்பன	மாறிமாறியிட்டு நடக்குந்தன்மையுடையன ;
இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய	கொள்ளை வன் குற்றம் எல்லாம் பதித்த	அபாரமான வலிய தோஷங்கள் யாவும் அழுந்திக்கிடக்கிற
இணை அடி	திருவடியிணைகள்		
(எப்படிப்பட்டவை யென்றால்)			
உத்தமர் சிந்தையுள் உதிப்பன	உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே ப்ரகாசிப்பவை ;	என் புன் கவி	என்னுடைய க்ஷுத்ரமான கவனமாகிய
ஒன்னலர் நெஞ்சம்	பிரதிபக்ஷிகளுடைய நெஞ்சானது	பா இனம் பூண்டன	பாசுரங்களை (ஸ்தோத்ரமாகப்) பெற்றுக் கொண்டவை.

* * *—தமக்குப் ப்ரமப்ராப்யமான எம்பெருமானார் திருவடிகளை வருணிக்கிறார் இதில். வடுகநம்பி போல்பவரான உத்தமாதிகாரிகளாலே இடைவிடாது சிந்திக்கப்படுவன ; பிரதிபக்ஷிகளுடைய நெஞ்சிலே பரிதாபத்தை உண்டுபண்ணுவன ; பல்வகைக் குற்றங்கள் நிறைந்த எனது கவிகளையும் ஏற்றுக்கொள்வன — அத்திருவடிகள், என்றாராயிற்று.

ஒன்னலர் நெஞ்ச மஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன—பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிப்பதற்காகப் பலவிடங்களிலும் ஸஞ்சரித்தருளினமை அறிக. மாறிநடத்தல்—ஒரு அழகான நடை. நம்பெருமாள் நடைபோல. (50)

*அடியைத்தொடர்ந்தெழு மைவர்கட்காய் * அன்றுபாரதப்போர்*
*முடியப் பரிநெடுந் தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த*
அடியர்க்கமுத மிராமாநுசனென்னை யாளவந்திப்
*படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம் பார்த்திடிலே.* (51)

அன்று	முற்காலத்தில்	முழுது உணர்ந்த	(ஸ்வரூப ஸ்வபாவங்களில் ஒன்றுங் குறையாதபடி) பூர்த்தியாகத் தெரிந்து கொண்ட
அடியை தொடர்ந்து	திருவடிகளை அவலம்பித்து		
எழும்	செருக்கிக்கிளர்ந்த	அடியர்க்கு	பாகவதர்களுக்கு
ஐவர்கட்கு ஆய்	பஞ்ச பாண்டவர்களுக்காக [பக்ஷபாதம் பூண்டு,]	அமுதம்	பரமபோக்யரான
		இராமாநுசன்	எம்பெருமானார்
பாரதப் போர்	பாரதயுத்தத்திலே	இப்படியில்	இப்பூமண்டலத்தில்
முடிய	(துரியோதநாதிகள்) மாளும்படியாக	வந்து பிறந்தது	வந்து அவதரித்தது (எதற்காக வெனில்)
பரி நெடு தேர்	குதிரை பூண்ட பெரிய தேரை	என்னை ஆள	அடியேனை ஆட்கொள்ளுகைக்காகவேயாம் ;
விடும்	நடத்தின	பார்த்திடில்	ஆராய்ந்து பார்க்குமளவில்
கோனை	ஸர்வேச்வரனை	மற்று காரணம் இல்லை	இது தவிர வேறொரு காரணமில்லை.

*பார்த்தானறுசமயங்கள் பதைப்ப * இப்பார்முழுதும்*
*போர்த்தான் புகழ்கொண்டு புன்மையினேனிடைத் தான்புகுந்து **
தீர்த்தானிருவினை தீர்த்தரங்கன் செய்ய தாளிணையோ
*டார்த்தான் * இவை யெம்மிராமாநுசன் செய்யு மற்புதமே.* (52)

(எம்பெருமானாரானவர்)

அறு சமயங்கள் பதைப்ப	(வேதபாஹ்யங்களான) ஆறு தர்சநங்களும் துடிக்கும்படியாக
பார்த்தான்	திருக்கண் செலுத்தினார்
இப்பார் முழுதும்	இப்பூமண்டலம் முழுவதையும்
புகழ் கொண்டு	(தமது) கீர்த்தியினாலே
போர்த்தான்	மூடிவிட்டார்;
புன்மையிலேனிடை	நீசனான அடியேன் பக்கலிலே
தான் புகுந்து	தாமாகவே (நிர்ஹேதுகக்ருபையினால்) வந்து புகுந்து
இருவினை	பெரிய பாவங்களை
தீர்த்தான்	போக்கியருளினார்;
தீர்த்து	பாவங்களைப் போக்கினது மன்றியில்
அரங்கன்	ஸ்ரீரங்கநாதனுடைய
செய்ய தாளிணையோடு ஆர்த்தான்	அழகிய திருவடிகளோடே (என்னை) அந்வயிப்பித்தார்;
இவை	ஆகிய இக்காரியங்களெல்லாம்
எம் இராமநுசன் செய்யும் அற்புதம்	எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச்செயல்களாம்.

* * *—எம்பெருமானாருடைய ஆச்சரியமான சில செயல்களை எடுத்துக் கூறுகின்றார்:—சாக்யர் உலூக்யர் பௌத்தர் சார்வாகர் பாசுபதர் காணாதர் என்றிப்படி சொல்லப்படுகிற புற மதத்தவர்களை யெல்லாம் நடுங்கச்செய்தார்; இப்பூமண்டலமெங்கும் தமது திருப்புகழே பரவும்படி செய்தார்; ஆத்மகுண மொன்றில்லாத என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து என் பாவங்களைப் போக்கி அழகிய மணவாளனுடைய ஸ்ரீபாதங்களிலே என்னை ஆச்ரயிக்கச் செய்தார்; இப்படியாக எம்பெருமானார் செய்தருளுமவையெல்லாம் மிக அற்புதமானவை. (52)

*அற்புதன்செம்மை யிராமாநுசன் * என்னையாளவந்த*
*கற்பகங் கற்றவர்காமுறுசீலன் * கருதரிய*
பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்
*நற்பொருள் தன்னை * இந்நானிலத்தேவந்து நாட்டினனே.* (53)

என்னை ஆள வந்த	என்னை ஆட்கொள்வதற்காக அவதரித்த
கற்பகம்	உதாரரும்
கற்றவர் காமுறுசீலன்	ஞானிகள் ஆசைப்படும்படியான சீலகுணத்தையுடையவரும்
அற்புதன்	ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவரும்
செம்மை	ருஜுவாயிருக்குந் தன்மை பொருந்தியவருமான
இராமாநுசன்	எம்பெருமானார்,—
கருத அரிய பல் பல் உயிர்களும்	நினைக்கவும் முடியாதபடி எண்ணிறந்திருக்கிற ஆத்மவர்க்கங்களும்
பல் உலகு யாவும்	(அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான) அளவிறந்த எல்லாவுலகங்களும்
பரனது என்னும் நல் பொருள் தன்னை	எம்பெருமானுடைய சொத்துக்களாம் என்கிற ஸாரார்த்தத்தை
இ நானிலத்தே	இவ்வுலகத்திலே
வந்து	வந்தவதரித்து
நாட்டினன்	ஸ்தாபித்தருளினார்.

* * *—எம்பெருமானார் மதாந்தரங்களைக் கண்டித்து நிலை நாட்டியஸித்தாந்தம் இன்னதென்கிறார்—சிறந்த ஞானிகளனைவரும் கொண்டாடுதற்குரிய திருக்குணங்களையும் அதிமாநுஷவ்யாபாரங்களையும் உடையரான எம்பெருமானார் இவ்வுலகில் திருவவதரித்து "ஸகல ப்ராணிகளும் அந்தப் ப்ராணிகளுக்கு இருப்பிடமாயுள்ள ஸகல லோகங்களும் ஸ்ரீமந்நாராயணனுக்கே உரிமை பட்டவை" என்கிற பரமார்த்தத்தை நிலைநாட்டியருளினார் என்கை.

உலகு=யாவும், உலகியாவும்: "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல்விதி. (53)

இராமாநுச நூற்றந்தாதி

நாட்டியம் நீசச் சமயங்கள் மாண்டன நாரணனைக்*
காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகைவள்ளல்*
வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து இராமாநுசன் தன்னியல்வுகண்டே.* (54)

மண் உலகில் ஈட்டியசீலத்து இராமாநுசன் தன்	இப் பூலோகத்தில் மேன்மேலும் திரட்டிக் கொண்ட சீல குணத்தை யுடையரான எம்பெருமானாருடைய	வேதம்	வேதங்களானவை
இயல்வு	ஸ்வபாவத்தை	களிப்பு உற்றது	(நமக்கு இனி ஒரு குறையுமில்லை யென்று,) செருக்கடைந்தன;
கண்டு	பார்த்து,	தென் குருகை வள்ளல்	அழகிய திருக்குருகூரில் அவதரித்த உதாரரான ஆழ்வார் (அருளிச்செய்த)
நாட்டிய நீச சமயங்கள் மாண்டன	(துஷ்டயுக்திகளாலே) நிலை நிறுத்தப்பட்டிருந்த க்ஷுத்ர மதங்களெல்லாம் ஒழிந்தன;	வாட்டம் இலா	ஒரு குறையுமற்ற
நாரணனை காட்டிய	ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதித்த	வண் தமிழ் மறை	சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி
		வாழ்ந்தது	வாழ்வு பெற்றது.

***—*சிங்கத்தைக் கனவில் கண்டாலும் ஸாமான்யமிருகங்கள் நசித்தொழியும்; அவற்றைக் கொல்லுவதற்காகச் சிங்கம் ஒரு முயற்சியும் செய்யவேண்டா. அது போல, இவ்வுலகில் கிளர்ந்து கிடந்த பாஹ்யகுத்ருஷ்டி மதங்களைத் தொலைப்பதற்காக எம்பெருமானார் ஒரு பிரயத்நமும் எடுத்துக் கொள்ளவில்லை; அவருடைய இயல்வைக் கண்ட காட்சியில்தானே மதாந்தரங்கள் யாவும் மாண்டுபோயின; அவை மாளவே ஸ்ரீமந் நாராயணபரங்களான வேதங்களும் அந்த வேதங்களின் ஸாரமாகிய அருளிச் செயல்களும் பொலிவு பெற்று ஓங்கின—என்றாராயிற்று.* ... (54)

*கண்டவர் சிந்தைகவரும் கடிபொழில் தென்னரங்கன் **
தொண்டர்குலாவு மிராமாநுசனை தொகையிறந்த*
பண்டருவேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும் குடியாமெங்கள் கோக்குலமே* (55)

தொகை இறந்த	கணக்கில்லாத	தென் அரங்கன்	தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு
பண் தரு வேதங்கள்	ஸ்வரப்ரதாநங்களான வேதங்கள்	தொண்டர்	அடிமைப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களால்
பார்மேல்	இப்பூமியிலே	குலாவும்	கொண்டாடப்படுபவருமான
நிலவிட	ஓங்கி வளரும்படி	இராமாநுசனை	எம்பெருமானாரை
பார்த்தருளும்	செய்தருளினவரும்	மேவி தொழும் குடி	பொருந்தி ஆச்ரயிக்கிற குலம்
கொண்டலை	பரம உதாரரும்,	எங்கள் கோக் குலம் ஆம்	எங்களுக்கு ஸ்வாமியாகக் கூடிய குலமாம்.
கண்டவர் சிந்தை கவரும்	கண்டவர்களின் நெஞ்சைக் கவர்கின்ற		
கடி பொழில்	மணமிக்க சோலைகள் சூழ்ந்த		

***—*எம்பெருமானாரை அடிபணிந்து உஜ்ஜீவிக்கும் மஹான்கள் தாம் அடியேனை ஆள்வதற்கு உரியவர்கள் என்றாராயிற்று. ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு அடியேன் தாஸனாயிருப்பேன் என்றவாறு.*

இராமாநுசனை மேவித் தொழுங்குடி எங்கள் கோக்குலமாம்—எம்பெருமானாரன்று எமக்கு ஸ்வாமி; அவரை ஆச்ரயிப்பவர்களே எமக்கு ஸ்வாமிகள்.

கோ என்பதற்கு மேன்மையென்றும் பொருள் உண்டாதலால்; எங்கள் கோக்குலம்—எங்களுடைய மேன்மையான குலம் (எப்படிப்பட்டதென்றால்,) இராமாநுசனை

மேவித் தொழுங்குடியாம்—என்பதாகவும் உரைக்கலாம். "எங்கள் கோக் குடியே" என்றும் பாடமுண்டு; பொருள் ஒன்றே. (55)

கோக்குலமன்னரை மூவெழுகால் *ஒரு கூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும் புனிதன்* புவனமெங்கு
மாக்கியகீர்த்தி யிராமாநுசனை யடைந்தபின், என்
வாக்குரையாது* என்மனம் நினையாதினி மற்றொன்றையே. (56)

கோக்குலம் மன்னரை	க்ஷத்திரிய குலத்து அரசர்களை
மூ எழு கால்	இருபத்தொரு தலைமுறையளவும்
ஒரு கூர் மழுவால்	கூர்மை பொருந்திய ஒரு மழுவாலே
போக்கிய	(பரசுராமாவதாரத்தில்) தொலைத்தருளின
தேவனை	எம்பெருமானை
போற்றும்	துதிக்கின்ற
புனிதன்	பரமபரிசுத்தரும்,
புவனம் எங்கும் ஆக்கியகீர்த்தி	உலகமெங்கும் பரவின புகழையுடையவருமான
இராமாநுசனை	எம்பெருமானாரை
அடைந்த பின்	ஆச்ரயித்த பின்பு
இனி	மேலுள்ள காலமெல்லாம்
மற்று ஒன்றை	வேறு எந்த விஷயத்தையும்
என் வாக்கு	எனது வாக்கானது
உரையாது	சொல்லமாட்டாது;
என் மனம்	எனது மனமும்
நினையாது	நினைக்கமாட்டாது.

"அடைந்தற்பின் வாக்குரையாது என்மனம் நினையாது" என்றும் பாடமுண்டாம். (56)

மற்றொரு பேறு மதியாது* அரங்கன் மலரடிக்கா
ளுற்றவரேதனக் குற்றவராக் கொள்ளுமுத்தமனை*
நற்றவர் போற்று மிராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன்* பெற்றபின்மற்றறியேனொருபேதைமையே. (57)

மற்று ஒருபேறு மதியாது	ப்ரயோஜநாந்தரங்களை கணிசியாமல்
அரங்கன் மலர் அடிக்கு	அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளுக்கு
ஆள் உற்றவரே	அடிமைப்பட்டவர்களையே
தனக்கு உற்றவர் ஆ	தமக்கு ஆத்ம பந்துக்களாக
கொள்ளும்	திருவுள்ளம்பற்றுகிற
உத்தமனை	உத்தம புருஷராயும்
நல் தவர் போற்றும்	ப்ரபந்நர்களாலே புகழப்பட்டவராயு மிருக்கிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
இ நானிலத்தே பெற்றனன்	இந்த லோகத்திலே அடியேன் ஆச்ரயிக்கப் பெற்றேன்;
பெற்றபின்	ஆச்ரயித்த பின்பு
மற்று ஒரு பேதைமை அறியேன்	(வேறு விஷயங்களை விரும்புகை முதலிய) எவ்வித அஜ்ஞாந கார்யமும் அறியமாட்டேன்.

* * *—"இனி என்வாக்குரையாது, என்மனம் நினையாது மற்றொன்றை" என்று எப்படி நீர் சொல்லக்கூடும்? இருள் தருமா ஞாலத்தில் இருக்கிறீராகையாலே அவிவேகம் வந்து மூடிக் கொள்ள எத்தனை நாழிகை செல்லும்? என்று சிலர் கூற, எம்பெருமானாரை இந்த லோகத்திலே நான் ஆச்ரயித்தேனான பின்பு இனி யொரு நாளும் அவிவேகியாக ஆகமாட்டேனென்கிறார்.

நல்தவர் போற்றும்—ப்ரபத்தியாகிற நல்ல தபஸ்ஸைக் கைப்பற்றினவர்களாலே போற்றப்படுபவர். (57)

பேதையர்வேதப் பொருளிதென் றுன்னி* பிரமநன்றென்
றோதிமற்றெல்லா வுயிருமஃதென்று* உயிர்கள்மெய்விட்
டாதிப்பரனோ டொன்றாமென்று சொல்லுமவ் வல்லலெல்லாம்
வாதில்வென்றான்* எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே. (58)

பேதையர்	(வேதத்தைப் ப்ரமாணமாகக் கொள்ளாத) அவிவேகிகள்	உயிர்கள் மெய் விட்டு	ஜீவாத்மாக்கள் தேஹத்தை விட்ட பின்பு
இது வேதப் பொருள் என்று உன்னி	'நாங்கள் சொல்லுகிற இது தான் வேதத்தின் அர்த்தம்' என்று நிரூபித்துக்கொண்டு	ஆதி பரனோடு ஒன்று ஆம் என்று சொல்லும் அவ் அல்லல் எல்லாம்	ஸர்வகாரண பூதனான பரமபுருஷனோடே ஐக்கியத்தையடைகின்றன என்று சொல்லுகிற அந்த கோலாஹலங்களையெல்லாம்
பிரமம் நன்று என்று ஓதி	பரப்ரஹ்மமானது எல்லாவற்றினும் விலக்ஷணம் என்று சொல்லி	மெய் மதி கடல்	தத்வஞானக் கடலாகிய
		எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
மற்று எல்லா உயிரும் அஃது என்று	'அந்த ப்ரஹ்மந்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளும் அந்த ப்ரஹ்மமே' என்றுசொல்லி	வாதில் வென்றான்	வாதத்தில் நிரஸித்து வெற்றி பெற்றார்.

***—எம்பெருமானார் குத்ருஷ்டிகளின் குத்ஸிதமான வாதங்களைக் கண்டித்த படிகளில் ஒருபடியைச் சொல்லி ஈடுபடுகிறார். சில மூர்க்கர்கள் தாங்கள் சொல்லுவதே வேதங்களின் உண்மையான பொருள் என்று கொக்கரித்துக் கொண்டு அபார்த்தங்களைப் பிதற்றுவர்கள், பரப்ரஹ்மம் ஸர்வவிலக்ஷணம்; ஜீவாத்மாக்களெல்லாம் பரப்ரஹ்மத்தில் ஓர் பகுதி; இப்போது உபாதியினால் வெவ்வேறாகத் தோன்றுகின்றன; அவ்வுபாதி கழிந்தபின் ஜீவர்களெல்லாம் பரப்ரஹ்மத்தோடு ஒற்றுமையை அடைந்து விடுகின்றன-என்று மூர்க்கர் பிதற்றும் பிதற்றல்களையெல்லாம் தத்வஜ்ஞான நிதியான எம்பெருமானார் வாதத்தில் கண்டித்து உண்மைப் பொருளை ஸ்தாபித்து வெற்றி பெற்றாரென்கிறது.

பிரமம்—ப்ரஹ்மம் என்ற வடசொல்விகாரம். உயிர்கள் மெய்விட்டு ஆதிப்பரனோடு ஒன்றும்—ஜீவாத்மாக்கள்; பரப்ரஹ்மத்தோடு ஐக்கியப்படுவது தான் மோக்ஷம் என்று குத்ருஷ்டிகள் உபபாதிப்பர்கள்; "தத் த்வமஸி" என்றும் "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி" என்றுமுள்ள வேதவாக்யங்களுக்கு இப்படி அபார்த்தம் பண்ணுவர்கள்.

வென்றான் என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் வினையாலணையும் பெயராகக்கொண்டு வாதில் வென்றவராகிய எம்பெருமானார், மெய்ம்மதிக்கடல்-ஸத்யஜ்ஞாந ஸமுத்ரமாயிருப்பவர் என்று முடிப்பதாக உரைத்தலுமாம். (58)

கடலளவாய திசையெட்டினுள்ளும்* கலியிருளே
மிடைதரு காலத்திராமாநுசன்* மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத்துரந்திலனேல்* உயிரை
யுடையவன் நாரணனென்றறிவாரில்லை யுற்றுணர்ந்தே. (59)

கடல் அளவு ஆய	நான்கு ஸமுத்ரங்களை எல்லையாகவுடைய	மிக்க சுடர் ஒளியால்	அளவற்ற தேஜஸ்ஸைக் கொண்டு
திசை எட்டினுள்ளும்	எல்லாவிடங்களிலும்	அவ்விருளை துரந்திலன் ஏல்	அந்த கலி தோஷத்தைப் போக்கியிராமற் போனால்
கலி இருளே மிடைதரு காலத்து	கலிபுருஷனாகிற அந்தகாரமே நெருங்கிக் கிடந்த காலத்தில்	உயிரை உடையவன் நாரணன் என்று	எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஸ்ரீமந்நாராயணனே என்று
இராமாநுசன்	எம்பெருமானார் (திருவவதரித்து)	உற்று உணர்ந்து அறிவார் இல்லை	யாரும் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள்.
நான் மறையின்	நான்கு வேதங்களின்		

* * *—என்னப்பனிராமாநுசன் திருவவதரித்து வேதார்த்தங்களை விளங்கக் காட்டியருளாவிடில் இவ்வுலகமனைத்தும் அஜ்ஞாநமயமாகவே கிடக்கும்; தைவாதீநமாக என்னப்பன் திருவவதரித்து எங்கும் வியாபித்துக்கிடந்த கலிபுருஷனுடைய தோஷங்களைத் தொலைத்து வேதச் சுடர்விளக்கேற்றி அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கடிக்கவே எல்லாரும் ஸ்ரீமந் நாராயணனே ஸர்வசேஷி யென்கிற பரமார்த்தத்தைத் தெரிந்து உய்வு பெறலாயிற்று என்கிறார்.

மிடைதருதல்—நெருங்கியிருத்தல்; இடைவிடாது எங்கும் பரவியிருத்தல். (59)

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்* திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறும்* மாமலராள்
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும்பதிதொறும் புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல்* இராமாநுசனெங் குலக்கொழுந்தே. (60)

குணம் திகழ்	ஆத்ம குணங்களால் விளங்குபவரும்	திருவாய்மொழியின் மணம் தரும் இன் இசை மன்னும் இடம் தொறும்	திருவாய்மொழியினுடைய பரிமளம் மிக்க இனிய இசையுள்ள இடங்களெங்கும்
கொண்டல்	(ஔதார்யத்தில்) காளமேகத்தை ஒத்தவரும்		
எம் குலம் கொழுந்து	எங்கள் குலத்துக்குத் தலைவரு மான		
இராமாநுசன்	எம்பெருமானார்	மா மலராள் புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதி தொறும்புக்கு நிற்கும்	பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற அழகிய மார்பையுடைய திருமால் எழுந்தருளி யிருக்கிற திவ்ய தேசங்களெங்கும் எழுந்தருளியிருப்பர்.
(எங்கே எழுந்தருளியிருப்பரென்றால்)			
உணர்ந்த மெய் ஞானியர் யோகம் தொறும்	கற்றுணர்ந்த தத்வ ஜ்ஞானிகளுடைய கோஷ்டிகளெங்கும்		

* * *—ஞானம் தலையெடுத்த மஹான்களுடைய திரள் எங்கெங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம் எழுந்தருளியிருப்பவரும், திருவாய்மொழியின்பரமபோக்யமான இசை எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கெல்லாம் ஸேவைஸாதிப்பவரும், ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் எங்கெங்கு ஸந்நிதாநம் பண்ணுகிறானோ அந்தத் திருப்பதிகளெங்கும் புகுந்து நிற்பவருமான எம்பெருமானார் அஸ்மத்குல கூடஸ்தர் என்றதாயிற்று. (60)

கொழுந்துவிட்டோடிப் படரும் வெங்கோள் வினையால்*நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும்* அருமுனிவர்
தொழுந்தவத்தோ னெம்மிராமாநுசன் தொல்புகழ் சுடர்மிக்
கெழுந்தது* அத்தால்நல்லதிசயங்கண்ட திருநிலமே. (61)

அரு முனிவர் தொழும்	அருமையான நிஷ்டையையுடைய மஹான்களாலே ஸேவிக்கப் பெற்றவராயும்	நிரயத்து அழுந்தியிட்டேனை	ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்திக் கிடந்த என்னை
தவத்தோன்	ப்ரபத்தியாகிற தபஸ்ஸையுடையவராயுமிருக்கிற	வந்து ஆள் கொண்ட பின்னும் சுடர் மிக்கு எழுந்தது	வந்து ஆட்படுத்திக் கொண்ட பின்பும் ஒளி குன்றாதே முன்னிலும் விசேஷமாக விளங்காநின்றன ;
எம் இராமாநுசன	ஸ்வாமி எம்பெருமானாருடைய		
தொல் புகழ்	நித்யமான கல்யாண குணங்கள்		
கொழுந்து விட்டு ஓடி படரும் வெம் கோள் வினையால்	மேன்மேலும் அதிகமாகப் பெருகுகின்ற க்ரூரமாய் [illegible]மான துஷ்கர்மத்தாலே	அத்தால்	அதைக் கண்டு
		இரு நிலம்	விசாலமான இப்பூமண்டலம்
		நல் அதிசயம் கண்டது	மிக்க ஆச்சரியங் கொண்டது.

* * *—எம்பெருமானாருடைய குணங்கள் மஹாபாபியான என்னை ஆட்படுத்திக்கொண்டவளவோடு த்ருப்திபெற்று விடாமல் 'இப்படிப்பட்ட பாபிகள் இன்னும் யாரேனும் கிடைப்பாருண்டோ? கிடைப்பாருண்டோ?' என்று இன்னமும் நாக்கு நீட்டிக்கிளர்ந்து செல்லுகின்றன என்றும் கருத்தாகும். (61)

இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி * இன்றுயானிறையும்
வருந்தேனினியெம்மிராமாநுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கொன்றும் நன்மை செய்யாப்
பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தம் கழல்பிடித்தே. (62)

எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானாருடைய	பெரியோர் தம் கழல் இன்று பிடித்து	ஆழ்வானாகிற மஹானுடைய திருவடிகளை இன்று ஆச்ரயித்தேனான பின்பு
மன்னுமா தாள் மலர் பொருந்தா நிலை உடை புன்மையினோர்க்கு	சிறந்த திருவடித்தாமரைகளில் சேராத ஸ்வபாவத்தை யுடையவர்களான நீசர்களுக்கு	இரு வினை பாசம் கழற்றி இருந்தேன்	புண்ணியம் பாவமென்று இரண்டு வகையான கரும பாசங்களினின்று விடுபட்டவனானேன்;
ஒன்றும் நன்மை செய்யா	ஒரு விதமான உபகாரமும் செய்யாதே	யான்	இப்படி நிர்மலனாகப் பெற்ற அடியேன்
பெரு தேவரை பரவும்	பெரிய பெருமாளை போற்றுகின்ற	இனி இறையும் வருந்தேன்	இனிமேல் கொஞ்சம் கூட வருத்தப்பட மாட்டேன்.

* * *—ஸ்ரீராமாநுச பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே ஸர்வஸ்வதாநம் பண்ணவல்ல பெரிய பெருமாளைப் போற்றுகின்ற கூரத்தாழ்வானை அடைந்து உஜ்ஜீவித்த அடியேனுக்கு இனி ஒரு வருத்தமும் விளையக் காரணமில்லையென்று தம்முடைய க்ருதக்ருத்யத்வத்தைக் கூறினாராயிற்று.

இருவினைப் பாசங்கழற்றி - பாவம்போலே புண்ணியமும் பரகதிக்குப் பிரதிபந்தகம் என்பதை உணர்க. பாவம் இரும்பு விலங்கென்றும், புண்ணியம் பொன் விலங்கென்றும் சாஸ்திரங்கள் கூறும். (62)

பிடியைத்தொடரும் களிறென்ன * யானுன்பிறங்கியசீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத் தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோட வந்திப்
படியைத்தொடரும் * இராமாநுச மிக்க பண்டிதனே. (63)

அறு சமயம் செடியை தொடரும் மருள் செறிந்தோர்	பாஹ்யமான ஆறு மதங்களாகிற தூறுகளிலே படிவதற்குக் காரணமான அவிவேகம் நிறைந்த மூடர்கள்	மிக்க பண்டிதன் இராமாநுச	மஹாபண்டிதரான எம்பெருமானாரே!
		பிடியை தொடரும் களிறு என்ன	யானைப் பேடையைப் பின்பற்றித் திரிகின்ற ஆண் யானைபோல
சிதைந்து ஓட	பங்கமடைந்து வெருவி ஓடும்படியாக	யான்	அடியேன்
வந்து இப் படியை தொடரும்	இப்பூமியிலே வந்து அவதரித்து (நம்போல்வாரை விஷயீகரிப்பதற்குப்) பின் தொடர்கின்ற	சீர் பிறங்கிய உன் அடியை தொடரும்படி நல்க வேண்டும்	ஸௌந்தரியம் முதலிய குணங்கள் விளங்குகின்ற தேவரீரது திருவடிகளைப் பின்பற்றும்படி கிருபை செய்தருளவேண்டும்.

* * *—ஸ்வாமி! யானையானது தன் பேடையினிடத்துப் பெருங்காதல்கொண்டு அதனையே பின்பற்றித் திரிவதுபோல் அடியேன் தேவரீருடைய அழகிய திருவடிகளையே அளவற்ற அபிநிவேசத்தோடு அநுவர்த்தித்துச் செல்லும்படியாக அருள் புரிய வேணுமென்று வேண்டினாராயிற்று. (63)

பண்டருமாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிடவெங்க ளிராமாநுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காளுங்கள் வாழ்வற்றதே. (64)

எங்கள் இராமாநுச முனி வேழம்	எங்களுக்கு விதேயமான ஸ்ரீராமாநுச முனியாகிற மத்தகஜமானது,	மெய்ம்மை கொண்ட நல் வேதம் கொழு தண்டம் ஏந்தி	ஸத்யவாதியான நல்ல வேதமாகிற பெரிய தடியைத் தூக்கிக் கொண்டு
மாறன்	நம்மாழ்வார்	குவலயத்தே	இப்பூமண்டலத்திலே
பண்	இசைகளாலே	மண்டி வந்து ஏன்றது	உங்களை நெருக்கிக் கொண்டு வந்து மேலிடா நின்றது ;
தரு	அருளிச்செய்த	வாதியர்காள்	துர்வாதிகளே !
பசுந்தமிழ் ஆநந்தம்	செந்தமிழான திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம்	உங்கள் வாழ்வு அற்றது	உங்களுடைய பிழைப்பு போயிற்று.
பாய்மதம் ஆய் விண்டிட	பெருகுமதநீராக ஒழுகப் பெற்று		

* * *—குத்ஸிதவாதங்கள் பண்ணுகிற துர்வாதிகளே ! இனி நீங்கள் பிழைக்க வழியில்லையென்று நிச்சயித்துக் கொள்ளுங்கள் ; ஏன் ? என்கிறீர்களோ ; எம்பெருமானாரென்னும் ஒரு மதயானையானது உங்களைப் புடைப்பதாகப் பெரிய தடியையெடுத்துக்கொண்டு எதிரிட்டு வாரா நின்றது ; இதற்குத் தப்பிப்பிழைக்க உங்களாலாகாது என்கிறார்.

யானைக்கு மதநீர் பெருகுமே ; இந்த ஸ்ரீராமாநுஜ கஜராஜனுக்கு எது மதநீர் என்ன ; முதலடியிற் கூறுகின்றார். திருவாய் மொழியின் அநுபவத்தாலுண்டான ஆநந்தரஸமே இந்த கஜராஜனுக்கு மதநீர்ப் பெருக்காம். இதனால், எம்பெருமானார் எப்போதும் திருவாய்மொழியை அநுபவித்துக் களிப்புறுவர் என்றதாகிறது. (64)

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு * என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்த குணத்தினர்க்கந்
நாழற்றது * நம்மிராமாநுசன் தந்தஞானத்திலே. (65)

நம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்	தாரணி	பூமண்டலமானது
தந்த ஞானத்தில்	அருளின ஞானத்தினால்	தவம் பெற்றது	பாக்கியம் பெற்றது ;
தொல்லை வாதியர்க்கு	நெடுநாளாக இருந்த துர்வாதிகளுக்கு	தத்துவம் நூல்	தத்வபரமான சாஸ்திரங்கள்
வாழ்வு அற்றது	வாழ்ச்சி அற்றுப் போயிற்று;	கூழ் அற்றது	ஸந்தேஹமற நிச்சயமான பொருளைத் தெரிவிப்பவையாயின ;
மறையவர் தம் தாழ்வு	வைதிகர்களுடைய குறை	குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு	பல்வகைக் குற்றங்களும் நிறைந்த ஸ்வபாவத்தையுடைய ஜனங்களுக்கு
என்றும் அற்றது	இனி ஒருநாளும் இல்லாதபடியாயிற்று.	அநாழ் அற்றது	அந்தக் குற்றங்கள் தீர்ந்தன.

* * *—எம்பெருமானார் இவ்வுலகில் அவதரித்து உபதேசாதி முகத்தாலே உண்டாக்கின தத்துவஞானத்தால் பலித்த அம்சங்கள் எவையென்றால், துர்வாதிகளுடைய வாழ்வு மாண்டது ; வைதிகர்களுக்கு இருந்த ஸங்கடங்கள் அற்றுப் போயின ; பூமண்டலம் மஹாபாக்யம் பெற்றது ; தத்வ சாஸ்த்ரங்களில் எவ்விதமான ஸந்தேஹமும் உண்டாகாதபடி நிச்சயஞானமே உண்டாயிற்று ; பாவிகளின் பாவங்களெல்லாம் தொலைந்துபோயின ; ஆகிய இவை எம்பெருமானாரளித்த தத்துவ ஞானத்தின் பயனைத் தெரிவிப்பவை—என்றாராயிற்று.

தொல்லைவாதியர் = வைதிகர்கள் தாம் அநாதியாகவுள்ளவர்; துர்வாதிகளும் அநாதியாக உண்டோவெனில்; பயிருள்ளபோதே தொடங்கிக் களையுமுண்டாவது போல, பாஹ்யர் குத்ருஷ்டிகள் என்கிற வாதிகளும் பழையராகவே யுண்டென்க.

தரணி என்ற வடசொல் தாரணியென நீட்டல் விகாரம் பெற்றது. **கூழ்** - ஸந்தேஹம். **நாழ்** - குற்றம். (65)

*ஞானம்கனிந்த நலங்கொண்டு * நாடொறும் நைபவர்க்கு*
*வானங்கொடுப்பது மாதவன் * வல்வினையேன்மனத்தில்*
ஈனங்கடிந்த விராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
*தானங்கொடுப்பது * தன்தகவென்னும் சரண்கொடுத்தே.* (66)

மாதவன்	திருமால்
வானம் கொடுப்பது	மோக்ஷம் அளிப்பது
	(எப்படிப்பட்டவர்களுக் கென்றால்)
ஞானம் கனிந்த நலம் கொண்டு நாள் தொறும் நைபவர்க்கு	ஞானம் பக்திரூபமாகப் பரிபக்வமாகி அந்த பக்தியினால் நித்யம் உருகுகிறவர்களுக்கேயாம்;
வல் வினையேன் மனத்தில் ஈனம் கடிந்த இராமாநுசன்	மஹாபாபியான எனது ஹ்ருதயத்திலிருந்த கல்மஷங்களைப் போக்கடித்த எம்பெருமானார்

தன்னை எய்தினர்க்கு	தம்மைப் பற்றினவர்களுக்கு
அத்தானம் கொடுப்பது	அந்த மோக்ஷ ஸ்தானத்தை அளிப்பது
	(எவ்விதமாக வென்றால்,
தன் தகவு என்னும் சரண் கொடுத்து	தம்முடைய க்ருபையாகிற ஸாதனத்தை (அவர்களுக்கு கைம் முதலாகக்) கொடுத்து. [தமது திவ்ய க்ருபையாலே.]

* * *—அடியார்களுக்கு மோக்ஷமளிக்கிற அதிகாரம் எம்பெருமானுக்குமுண்டு, எம்பெருமானார்க்குமுண்டு. எம்பெருமான் அளிப்பது மிகவும் ச்ரமப்படுத்தியே; எம்பெருமானார் அளிப்பது கேவலம் தம்முடைய திருவருளாலே என்கிறார் இதில்.

ஞானமானது நன்றாகக் கனிந்து அது பக்தி, பரபக்தி, பரமபக்தி என்னும்படியான அவஸ்தைகளையடைந்து, அதனால் இந்த ஸம்ஸாரத்தில் க்ஷணகாலமிருப்பதும் அஸஹ்யமாய் ஆழ்வார்களைப்போல "ஒரு பகலாயிரமூழியாலோ" என்று துடிப்பவர்களுக்குத்தான் எம்பெருமான் முக்தியளிப்பது; எம்பெருமானாரோ வென்னில் * க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராகையாலே அடியார்களிடத்தில் எவ்விதமான க்லேசத்தையும் எதிர்பாராமல் தமது திருவருளைக்கொண்டே அவர்களைக் கரையேற்றுவர் என்றதாயிற்று. (66)

வல்வினையேன் மனத்திலீனங்கடிந்த என்பதற்கு—மாதவனை அடிபணிந்து வருந்துகை யாகிற ஈனத்தை எனக்குத் தவிர்த்த எம்பெருமானார் என்று உரைக்கவுமாம்.

*சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை*
*மரணமடைவித்தமாயவன் * தன்னை வணங்கவைத்த*
கரணமிவையுமக்கன்றென் றிராமாநுச னுயிர்கட்கு
*அரணங்கமைத்திலனேல் * அரணார்மற்றிவ் வாருயிர்க்கே.* (67)

சரணம் அடைந்த தருமனுக்கு ஆ	தன்னைச் சரணம் பற்றின தர்ம புத்ரருக்காக
பண்டு	முற்காலத்திலே
நூற்றுவரை	துரியோதனன் முதலிய நூறு பேர்களை

மரணம் அடைவித்த மாயவன்	சாகும்படி செய்த எம்பெருமான்
தன்னை வணங்க வைத்த கரணம் இவை	தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்தி வைத்த இந்திரியங்களாம் இவை:

உமக்கு அன்று	உங்களுக்கு உரிமைப் பட்டவையல்ல;	அரண் அமைத்திலன் ஏல்	ரக்ஷையைக் கற்பித்திலராகில்
என்று	என்று இவ்வாறாக உபதேசித்து	இஆர் உயிர்க்கு	இந்த அருமை ஆத்மாக்களுக்கு
இராமாநுசன்	எம்பெருமானார்	மற்று அரண் ஆர்	வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை.)
உயிர்கட்கு	ஆத்மாக்களுக்கு		

*ஆரெனக்கின்று நிகர்சொல்லில் * மாயனன்றைவர்தெய்வத்*
*தேரினில்செப்பிய கீதையின்செம்மை * பொருள்தெரியப்*
பாரினில்சொன்ன விராமாநுசனைப் பணியும் நல்லோர்
*சீரினில்சென்றுபணிந்தது * என்னாவியும் சிந்தையுமே.* (68)

மாயன்	ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான்	சொன்ன	(கீதா பாஷ்யமுகத்தாலே) அருளிச் செய்த
அன்று	முற்காலத்தில்	இராமாநுசனை	எம்பெருமானாரை
ஐவர்	பஞ்சபாண்டவர்களுடைய	பணியும்	ஆச்ரயித்திருக்கிற
தெய்வம் தேரினில்	தெய்வத்தன்மை பொருந்திய தேரின் மீது (இருந்து கொண்டு)	நல்லோர்	விலக்ஷண புருஷர்களுடைய
		சீரினில்	கல்யாண குணங்களிலே
செப்பிய	அருளிச் செய்த	என் ஆவியும் சிந்தையும்	எனது ஆத்மாவும் மநஸ்ஸும்
கீதையின்	பகவத் கீதையினுடைய		
செம்மை பொருள்	ஸ்வரஸமான அர்த்தத்தை	சென்று பணிந்தது	சென்று சேர்ந்துவிட்டன.
தெரிய	(அனைவரும் எளிதாகத்) தெரிந்து கொள்ளும்படி	சொல்லில்	சொல்லுமளவில்
		இன்று	இக்காலத்தில்
பாரினில்	இப்பூமியிலே	எனக்கு ஆர் நிகர்	எனக்கு ஆர் ஒப்பாவார்?

*சிந்தையினோடு கரணங்கள்யாவும் சிதைந்து * முன்னாள்*
*அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * அவையென்றனக் கன்றருளால்*
*தந்தவரங்கனும் தன் சரண்தந்திலன் தானதுதந்து **
எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனனின்றென்னையே. (69)

முன் நாள்	ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில்	அருளால் தந்த அரங்கனும்	க்ருபையாலே உண்டாக்கின எம்பெருமானும்
சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து	சிந்தையும் இந்திரியங்களுமெல்லாம் அழிந்து	தன் சரண் தந்திலன்	தனது திருவடிகளைக் காட்டிக் கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை.
அந்தம் உற்று ஆழ்ந்தது கண்டு	உபஸம்ஹாரத்தை யடைந்து அசேதநப்ராயமா யிருப்பதைப் பார்த்து		(அக்குறை நீங்க)
		எந்தை இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
என் தனக்கு	(அப்படி அசேதந ப்ராயராய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு	தான் வந்து	தாமாகவே வந்து
		அது தந்து	அந்தத் திருவடிகளைத் தந்தருளி
அவை	அந்த கரண களேபரங்களை	இன்று என்னை எடுத்தனன்	இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார்.
அன்று	அக்காலத்தில்		

*என்னையும் பார்த்தென்னியல்வையும்பார்த்து * எண்ணில் பல்குணத்த*
*உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் * அன்றியென்பால்*
பின்னையும் பார்க்கில் நலமுளதேயுன் பெருங்கருணை
*தன்னையென்பார்ப்பர் * இராமாநுசா உன்னைச் சார்ந்தவரே.* (70)

இராமாநுசா — எம்பெருமானாரே!

என்னையும் பார்த்து — (ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி

என் இயல்வையும் பார்த்து — (இனி மேலும் எவ்வித நன்மையும் ஸம்பாதித்துக் கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி

எண் இல் பல் குணத்த உன்னையும்பார்க்கில் — எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில்

அருள் செய்வதே நலம் — (இப்போது போல எப்போதும்) அருள் செய்திருப்பதே நல்லது;

அன்றி — இது வொழிய

பின்னையும்பார்க்கில் மேலும் ஆராயுமளவில்

என் பால் நலம் உளதே — என்னிடத்தில் ஏதாவது நன்மை யுண்டோ? (சிறிதும் இல்லை)

(நன்மையொன்றுமில்லாவிடில் நாம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம்பற்றினால்)

உன்னைசார்ந்தவர் — தேவரீரை ஆச்ரயித்தவர்கள்

உன்பெருகருணை தன்னை என் பார்ப்பர் — தேவரீருடைய கிருபையைப் பற்றி என்ன நினைப்பர்கள்?) இளப்பமாக நினையார்களோ!)

*சார்ந்ததென்சிந்தையுன் தாளிணைக்கீழ் * அன்புதான் மிகவும்*
*கூர்ந்ததத் தாமரைத்தாள்களுக்கு * உன்தன் குணங்களுக்கே*
தீர்ந்ததென்செய்கை முன்செய்வினை நீ செய்வினையதனால்
*பேர்ந்தது * வண்மை யிராமாநுசா! எம்பெருந்தகையே.* (71)

வண்மை — ஔதார்யமுடையரும்

எம் — எமக்கு ஸ்வாமியும்

பெரு தகை — பெருந்தன்மை யுடையருமான

இராமாநுசா — எம்பெருமானாரே!

என் சிந்தை — எனது நெஞ்சு

உன் தாள் இணை கீழ் சார்ந்தது — தேவரீருடைய உபயபாதங்களின் கீழ் அமர்ந்து விட்டது;

அன்புதான் — பக்தியும்

அத் தாமரை தாள்களுக்கு — அந்தத் திருவடித் தாமரைகள் விஷயத்திலேயே

மிகவும் கூர்ந்தது மிகவும் அதிகரித்தது.

என் செய்கை — எனது செயலும்

உன்தன் குணங்களுக்கே தீர்ந்தது — தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது;

முன் செய்வினை — முன்னே செய்த பாவங்களெல்லாம்

நீ செய் வினை அதனால் பேர்ந்தது — தேவரீர் செய்தருளின (கடாக்ஷமாகிற) காரியத்தாலே தொலைந்து போயின.

*கைத்தனன்தீய சமயக்கலகரை * காசினிக்கே*
*உய்த்தனன்தூய மறைநெறிதன்னை * என்றுன்னியுள்ளம்*
நெய்த்தவன்போ டிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
*வைத்தனனென்னை * இராமாநுசன்மிக்க வண்மைசெய்தே.* (72)

இராமாநுசன் — எம்பெருமானார்

மிக்க வண்மை செய்து — தமது ஔதார்ய குணத்தை அதிகமாகக் காட்டி,

தீய சமயம் கலகரை — தீய மதங்களிலிருந்து கொண்டு கலஹஞ் செய்கிறவர்களை

கைத்தனன் — ஒழித்துவிட்டார்:

தூய — பரிசுத்தமான

மறை நெறி தன்னை — வேதமார்க்கத்தை

காசினிக்குஉய்த்தனன் — பூமியிலே ஸ்தாபித்தருளினார்;

என்று உன்னி — என்று அநுஸந்தித்து

உள்ளம் நெய்த்து — நெஞ்சு கனிந்து

அவ்வன்போடு இருந்து — அந்த ப்ரீதியோடே கூடியிருந்து

ஏத்தும் — (அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற

நிறை புகழோருடனே — புகழ் நிறைந்த மஹான்களோடே

என்னை வைத்தனன் — (என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார்.

திறைபுகழோருடனே வைத்தனன் :—அஸத்துக்களோடே பழகிக்கிடந்த என்னை ஸத்துக்களோடே கூட்டி வைத்தார் என்னவுமாம். (72)

*வண்மையினுலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்*
*தண்மையினுலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணுய்*
உண்மைநன்ஞான முரைத்தவிராமா நுசனையுன்னும்
*திண்மையல்லாலெனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே.* (73)

தன் வண்மையினுலும்	தம்முடைய ஔதார்ய குணத்தாலும்	உண்மை நல் ஞானம் உரைத்த இராமாநுசனை	யதார்த்தமாய் விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கிற எம்பெருமானாரை
மா தகவாலும்	பரம க்ருபையாலும்		
மதி புரையும் தண்மையினுலும்	சந்திரனையொத்த திருவுள்ளக் குளிர்ச்சியாலும்	உன்னும் திண்மை அல்லால்	சிந்திப்பதாகிற அத்யவஸாயமொன்று தவிர
இத்தாரணியோர்கட்கு	இப்பூமியிலுள்ளவர்களுக்கு	தேர்ந்திடில்	ஆராயுமளவில்
தான் சரண் ஆய்	தாமே ரக்ஷகராய்க் கொண்டு	எனக்கு மற்று ஓர் நிலை இல்லை	அடியேனுக்கு வேறொரு அத்யவஸாயமில்லை.

*தேரார்மறையின் திறமென்று * மாயவன் தீயவரைக்*
*கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை*
ஏரார்குணத்தெம் மிராமாநுசனவ்வெழில்மறையில்
*சேராதவரைச்சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே.* (74)

மறையின் திரம் தேரார் என்று	(இப்பாவிகள்) வேதஞ் சொல்லுகிற வழியை நிருபித்தறிகிறதில்லை யென்று	ஏர் ஆர் குணத்து	(மற்றும்) பல நல்லகுணங்களுடையவருமான
தீயவரை	பாவிகளை	எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானுர்
மாயவன்	எம்பெருமான்	அ எழில் மறையில் சேராதவரை சிதைப்பது	அந்த சிறந்த வேதத்தில் அங்வயியாதவர்களை பங்கப்படுத்துவது (எப்படி யென்றால்)
குறைப்பது	தண்டிப்பது		
கூர் ஆழி கொண்டு	கூர்மையான தனது திருவாழியாலே;		
கொண்டல் அனைய வண்மை	மேகம்போன்ற ஔதார்யகுணமுடையவரும்	அப்போது ஒரு சிந்தைசெய்து	அப்போதப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம்.

* * *—*எம்பெருமான் தனது ஆஜ்ஞாரூபமான வேதங்களின் கட்டளைப்படி நடவாத கொடியவர்களைத் தனது திருவாழியைக் கொண்டு த்வம்ஸம்பண்ணிவிடுவன் ; எம்பெருமானுரோவென்னில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக்கொள்வதில்லை ; வேதங்களை அடியோடு ஒப்புக்கொள்ளாத பாஹ்யர்களையும், வேதங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டு அவற்றில் அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையும் வாதப்போரில் அப்போதப்போது திருவுள்ளத்தில் ஸ்புரிக்கின்ற நல்லயுக்திகளைக்கொண்டு கண்டித்து விடுவர் என்கை.* (74)

*செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்*
*கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே*
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
*மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசாவென்னை முற்றுநின்றே.* (75)

செய் தலை	வயல்களில்	உன்னை விடேன் என்று இருக்கிலும்	உன்னைவிடமாட்டேன் என்று இருந்தாலும்.
சங்கம்	சங்குகளானவை	இராமாநுசா	எம்பெருமானாரே !
செழு முத்தம்	அழகிய முத்துக்களை	நின் புகழே	தேவரீருடைய திவ்ய குணங்களே
ஈனும் திரு அரங்கர்	உண்டாக்கு மிடமான திருவரங்கமா நகரில் எழுந்தருளி யிருக்கும் பெருமாள்	என்னை வந்து முற்றும் மொய்த்து நின்று	என் பக்கல் வந்து சூழ்ந்து கொண்டு
கை தலத்து	தமது திருக்கையிலே	அலைக்கும்	ஆகர்ஷிக்கின்றன.
ஆழியும் சங்கமும் ஏந்தி	திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக்கொண்டு		
நம் கண்முகப்பே	நமது கண்ணெதிரில்		
மொய்த்து	வந்து நெருங்கி		
அலைத்து	புத்தியைக் கெடுத்து		

** * *—எம்பெருமான் தனது விலக்ஷணமான அழகைக் காட்டிக் கொண்டு வந்து என் கண்ணெதிரே நின்றாலும், என்னை விடாதே வலியப்பற்றினாலும் அவனது அழகில் நான் மோஹிக்கப் பெறுவதில்லை; தேவரீருடைய திருக்குணங்களே என்னை ஈடுபடுத்துகின்றன. பகவத் குணங்களுக்கு நான் ஈடுபடுவதில்லை யென்றாராயிற்று.*

"செய்த் தலைச்சங்கம் செழுமுத்தமீனும்" என்கிற விசேஷணம் - திருவரங்கர் என்பதன் பகுதியாகிய திருவரங்கத்தில் அந்வயிக்கும். திருவரங்கம் எப்படிப்பட்டதென்றால், முத்துக்களை யுதிர்க்கும் சங்குகள் நிறைந்த வயல்சூழ்ந்தது என்றவாறு. ஈனுதல் பிரஸவித்தல். (75)

*நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்*
*குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் **
உன்றனக் கெத்தனை யின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
*என்றனக்குமது * இராமாநுசா இவை யீந்தருளே.* (76)

இராமாநுசா	எம்பெருமானாரே !	உன் தனக்கு	தேவரீருக்கு
நின்ற வண்கீர்த்தியும் நீள் புனலும்நிறை	நிலைநின்ற பெரும் புகழும் அதிகமான நீர்ப் பெருக்கும் நிறைந்துள்ள	எத்தனை இன்பம் தரும்	எவ்வளவு ஆநந்தத்தை விளைக்குமோ
வேங்கடம் பொன் குன்றமும்	திருவேங்கட மென்னும் அழகிய திருமலையும்	உன் இணைமலர் தாள்	தேவரீருடைய உபயபாதாரவிந்தங்கள்
வைகுந்தம் நாடும்	ஸ்ரீ வைகுண்டமாகிய திருநாடும்	என் தனக்கும் அது	எனக்கும் அவ்வளவு ஆநந்தத்தை யுண்டாக்கும்;
குலவிய பால் கடலும்	கொண்டாடத்தக்க திருப்பாற்கடலும்	இவை	இப்படிப்பட்ட திருவடிகளை
		ஈந்தருள்	அடியேனுக்குத் தந்தருள வேணும்.

** * *—கீழ்ப்பாட்டில் அமுதனார் விளக்கிய பரமபக்தியை அறிந்த எம்பெருமானார் மிகவும் உகந்தருளி 'இவர்க்கு நாம் ஏதைச் செய்வோம்' என்றிருப்பதாகக் கண்ட அமுதனார். ஸ்வாமிந்! அடியேனுக்கு தேவரீர் வேறொன்றும் செய்தருள வேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய இந்தத் திருவடித்தாமரைகளைத் தந்தருள வேண்டுமத்தனை யென்கிறார்.* (76)

*ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைகுறும்பைப்*
*பாய்ந்தனனம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்*
ஏய்ந்தனன் கீர்த்தியினா லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மை யிராமாநுசற்கென் கருத்தினியே. (77)

ஈயாத	(இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத
இன் அருள்	விலக்ஷணமான க்ருபையை
ஈந்தனன்	அடியேனுக்குச் செய்தருளின வரும்
எண் இல் மறை குறும்பை	எண்ணிறந்த வேதவிரோதி மதங்களை
அம்மறை பல் பொருளால் பாய்ந்தனன்	அந்த வேதங்களின் அர்த்தங்களையே கொண்டு கண்டித்தவரும்,
கீர்த்தியினால்	தமது கீர்த்தியாலே
இப்படி அனைத்தும் ஏய்ந்தனன்	இப்பூமியெங்கும் வியாபித்தவரும்
என் வினைகளை வேர் அறிய காய்ந்தனன்	எனது கருமங்களை வேரோடே அறும்படி போக்கினவரும்
வண்மை	ஔதார்யமே வடிவு கொண்டவருமான
இராமாநுசற்கு	எம்பெருமானார்க்கு
இனி என் கருத்து	இன்னமும் (செய்யத்தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனுமுண்டோ?

* * *—கீழ்ப்பாட்டில் தாம் அபேக்ஷித்தபடியே திருவருளைத் தந்தருளப் பெற்று, க்ருத க்ருத்யராய், அவர் செய்தருளின உபகாரங்களை அநுஸந்தித்து, இவையெல்லாம் செய்தபின்பு இன்னமும் செய்தருள்வதாகத் திருவுள்ளம்பற்றியிருப்பது எதுவோ என்கிறார்.

மறைக்குறும்பாவது—வேதத்திற்கு மாறாகச்சொல்லும் தப்புப் பொருள்கள். ஈந்தனன், பாய்ந்தனன், ஏய்ந்தனன், காய்ந்தனன் என்பவற்றை வினைமுற்றாகவே கொண்டு உரைத்தலுமாம். (77)

கருத்தில்புகுந்துள்ளில்கள்ளங்கழற்றி * கருதரிய
வருத்தத்தினல் மிகவஞ்சித்து * நீ யிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச! மற்றோர் பொய்ப்பொருளே. (78)

எம் இராமாநுச நீ	எம்பெருமானாரே! தேவரீர்
கருத அரிய வருத்தத்தினால் மிக வஞ்சித்து	நெஞ்சால் நினைக்கமுடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை நன்றாக ஏமாத்தி
கருத்தில் புகுந்து	(எனது) நெஞ்சிலே வந்து புகுந்து
உள்ளில் கள்ளம் கழற்றி திருத்தி	உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி சிக்ஷித்து
இந்த மண் அகத்தே	இந்த லோகத்திலே
திரு மகள் கேள்வனுக்கு ஆக்கிய பின்	திருமாலுக்கு ஆளாம்படி பண்ணின பின்பு
மற்று ஓர்பொய் பொருள்	(இதற்கு மாறான) வேறு எந்த தப்புவிஷயமும்
என் நெஞ்சில்	என் மனத்தில்
பொருத்தப் படாது	பொருந்தமாட்டாது.

* * *—எம்பெருமானார் தம்மைத் திருத்துகைக்காகப் பட்டபாடுகளை எடுத்துச் சொல்லி, இப்படி என்னைத் திருத்தி தேவரீருக்கு உத்தேச்யமான விஷயத்திலே ஆட்படுத்தின பின்பு இனி வேறு எந்த விஷயமும் என்னெஞ்சுக்கு இசையமாட்டாதென்கிறார். (78)

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப் புரக்குமிராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ள வல்லதெய்வமிங்கியாதென் றுலர்ந்துஅவமே
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (79)

பொய்யை சுரக்கும் பொருளை துரந்து	பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (புற மதத்தவர்களின்) அர்த்தங்களைக் கண்டித்து	நம்மை உய்யக் கொள்ளவல்ல	'நம்மை உஜ்ஜீவிக்கச் செய்யக் கூடிய
இந்த பூதலத்தே	இப்பூமியிலே	வேறு தெய்வம் இங்கு யாது என்று	வேறு ஏதாவது தேவதை இவ்வுலகில் உண்டோ?' என்று (விசாரித்துக் கொண்டு)
மெய்யை புரக்கும்	ஸத்யத்தை ரக்ஷிக்கிற	உலர்ந்து	மனவருத்தத்தாலே உடம்பு உலர்ந்து
இராமாநுசன்	எம்பெருமானார்	நல் அறிவு இழந்து	(எம்பெருமானார் திருவடிகளே சரணம்என்றிருக்கையாகிற) நல்ல ஞானம் பெறாமல்
நிற்க	எழுந்தருளியிருக்கும் போது (இவரைக் கணிசியாமல்)	அவமே	வீணாக
வையத்து உள்ளோர்	இப்பூமியிலுள்ளவர்கள்	ஐயம் படா நிற்பர்	ஸம்சயப்படா நின்றார்கள். ஐயோ !

பொய்யைச் சுரக்கும் பொருளென்றது—*பொய் தவிர வேறில்லாத அர்த்தம் என்றபடி. "ஸர்வம் அஸத்யம்" என்கிறவர்களாகையாலே அஸத்யமயம்.* **மெய்யைப் புரக்கு மிராமாநுசன்** *= "யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்" என்று ஸ்தாபித்தருளினவர். புரத்தல்—காப்பாற்றுதல்.*

*நல்லார்பரவு மிராமாநுசன் * திருநாமம் நம்ப*
*வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர் * அவர்க்கே*
*எல்லாவிடத்திலு மென்றுமெப் போதிலுமெத்தொழும்பும் **
சொல்லால்மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே. (80)

நல்லார் பரவும் இராமாநுசன்	ஸத்துக்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானாருடைய	எல்லா இடத்திலும்	ஸகல தேசங்களிலும்
திரு நாமம்	திருநாமத்தை	என்றும்	ஸகல அவஸ்தைகளிலும்
		எப்போதிலும்	ஸகல காலங்களிலும்
நம்ப வல்லார் திறத்தை	(தங்களுக்குத்தஞ்சமாக) நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை	எத்தொழும்பும்	ஸகலவித கைங்கரியங்களையும்
மறவாதவர்கள் எவர்	மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ,	சொல்லால் மனத்தால் கருமத்தினால்	மனமொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும்
அவர்க்கே	அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே	சோர்வு இன்றி செய்வன்	பிரியாதே யிருந்து செய்வேன்

** * *—தம்முடைய நிலைநின்ற நிஷ்டையைப் பேசுகிறார் இதில். ஸத்துக்களனைவரும் கொண்டாடும்படியான எம்பெருமானாருடைய திருநாமங்களையே தங்களுக்குத் தஞ்சமாக நம்பியிருக்கிற மஹான்களையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே அடியேன் * ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமைகள் செய்யக்கடவே னென்றாராயிற்று.* **தொழும்பு**—*அடிமை.* (80)

*சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்*
*சார்வின்றிநின்ற வெனக்கு * அரங்கன்செய்ய தாளிணைகள்*
பேர்வின்றியின்று பெறுத்து மிராமாநுச வினியுன்
*சீரொன்றிய கருணைக்கு * இல்லைமாறு தெரிவுறிலே.* (81)

உன் தன் துணை அடி கீழ்	தேவரீருடைய உபய பாதங்களின் கீழே
சோர்வு இன்றி தொண்டு பட்டவர் பால்	சோராமல் அடிமைப்பட்டவர்கள் விஷயத்தில்
சார்வு இன்றி நின்ற எனக்கு	பொருத்தமில்லாமலிருந்த எனக்கு
இன்று	இன்றைத்தினத்தில்
அரங்கன் செய்ய தாள் இணைகள்	பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை
பேர்வு இன்றி பெறுத்தும் இராமாநுசா	ஒருகாலும் விட்டு நீங்காத படி சிரோ பூஷணமாகத் தந்தருளின எம்பெருமானாரே !
இனி	இப்படியான பின்பு
தெரிவுறில்	ஆராயுமளவில்
உன்	தேவரீருடைய
சீர் ஒன்றிய கருணைக்கு	சிறந்த திருவருளுக்கு
மாறு இல்லை	ஒப்பு இல்லை.

*தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந் தீவினையால்*
*உருவற்றஞானத் துழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்*
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றானென்ன புண்ணியனோ
*தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்றும் சீர்முகிலே.* (82)

தெரிவு உற்ற ஞானம் செறிய பெறாது	தெளிவான ஞானத்தைச் சேரப்பெறாமல்
வெம் தீ வினையால்	மிகவுங் கொடிதான கருமத்தாலே
உரு அற்ற ஞானத்து உழல்கின்ற என்னை	உபயோகமற்ற ஞானத்தையுடையனாய் (ஒன்றிலும் நிலையில்லாமல்) திரிகின்ற என்னை
ஒரு பொழுதில்	ஒரு க்ஷணகாலத்தில்
பொருவு அற்ற கேள்வியன் ஆக்கி நின்றான்	ஒப்பற்ற பஹுச்ருதனாக ஆக்கியருளினவரும்
தெரிவு உற்ற கீர்த்தி	ப்ரஸித்தமான புகழையுடையவரும்
சீர் முகில் என்னும்	(ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத் தக்கவருமான
இராமாநுசன்	எம்பெருமானார்
என்ன புண்ணியனோ	என்ன தார்மிகரோ? [ஒப்பற்ற தார்மிஷ்டரென்றபடி.]

*சீர்கொண்டு பேரறம்செய்து * நல்வீடு செறிதுமென்னும்*
*பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்*
ஏர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவ னுன்னுடைய
*கார்கொண்ட வண்மை * இராமாநுசா! இது கண்டுகொள்ளே.* (83)

இராமாநுசா	எம்பெருமானாரே !
சீர் கொண்டு	சமம் தமம் முதலிய குணங்களையுடையராய்
பேர் அறம் செய்து	சிறந்த தருமமாகிய சரணாகதி யோகத்தை யநுஷ்டித்து
நல் வீடு செறிதும் என்னும்	பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற
பார்கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன்	ப்ரஸித்தமான ப்ரபாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியில் நான் சேர்ந்தவனல்லேன்;
உன் பதயுகம் ஆம்	தேவரீருடைய உபயபாதங்களாகிற
ஏர் கொண்ட வீட்டை	பரம விலக்ஷணமான மோக்ஷத்தை
எளிதினில் எய்துவன்	ஸுலபமாக அடைந்திடுவேன்;
கார் கொண்ட	(ஔதார்யத்தில்) மேகத்தை வென்றிருக்கிற
உன்னுடைய	தேவரீருடைய
வண்மை இது	ஔதார்யம் இப்படிப்பட்டது;
கண்டுகொள்	தேவரீரே இதனைக் கண்டு கொள்ளலாம்.

[அடியேன் சொல்ல வேணுமோ ?]

** * *—சரமச்லோகத்திலே கண்ணபிரான் நியமித்தபடியே நாம் சரணாகதியை அநுஷ்டித்து விட்டோமாகையால் நமக்கு மோக்ஷம் கைபுகுந்து விட்டதேயாமென்று அறுதியிட்டிருக்கும் மஹான்களில் அடியேன் சேர்ந்தவனல்லேன்; அப்படி அடியேன் ஒன்றும் அநுஷ்டிக்கவில்லை. தேவரீருடைய திருவடிகளாகிற*

மோக்ஷத்தை அடைந்திடத் தடையில்லை யென்கிற மனவுறுதியே அடியேனுக்குள்ளது என்றாராயிற்று. (83)

*கண்டுகொண்டே னெம்மிராமாநுசன் தன்னைக் காண்டலுமே **
*தொண்டுகொண்டேனவன் தொண்டர்பொற்றாளில் * என் தொல்லை வெந்நோய்*
விண்டுகொண்டேனவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத் தின்று
*உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே.* (84)

எம் இராமாநுசன் தன்னை	ஸ்வாமி எம்பெருமானாரை	விண்டுகொண்டேன்	நீக்கிக்கொண்டேன்,
இன்று கண்டுகொண்டேன்	இன்று (உள்ளபடி) தெரிந்துகொண்டேன்;	அவன் சீர்வெள்ளம் வாரியை	அவருடைய கல்யாண குணப்ரவாஹமாகிற கடலை
காண்டலுமே	இப்படி தெரிந்துகொண்டவளவிலே	வாய் மடுத்து உண்டுகொண்டேன்	வாயார அநுபவிக்கப் பெற்றேன்;
அவன் தொண்டர் பொன் தாளில்	அவரது பக்தர்களுடைய அழகிய திருவடிகளில்	இன்னம் உற்றன	இப்படியாக இன்னமும் நான் பெற்ற நன்மைகளை
தொண்டு கொண்டேன்	அடிமைப்பட்டேன்; (அதனால்)	ஓதில்	சொல்லத் தொடங்கினால்
என் தொல்லை வெம் நோய்	எனது பழைய கொடுவினைகளை	உலப்பு இல்லை	(அதுக்கு) ஒரு முடிவு கிடையாது.

* * *—*இனிமேலும் எம்பெருமானார் திருவருளால் நான் பெறப்போகிற நன்மைகள் அளவற உண்டு; எனினும் இன்றளவும் நான் பெற்ற பேறுகளுக்கு எல்லையுண்டோவென்றாராயிற்று.* (84)

*ஓதியவேதத்தி னுட்பொருளாய் * அதனுச்சி மிக்க*
*சோதியை நாத னெனவறியா துழல்கின்ற தொண்டர் **
பேதைமைதீர்த்த விராமாநுசனைத் தொழும் பெரியோர்
*பாதமல்லாலென்றன் னாருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே.* (85)

ஓதிய வேதத்தின் உள் பொருள் ஆய்	அத்யயநம் பண்ணப்படுகிற வேதங்களின் உட்பொருளாயும்	பேதைமை	அவிவேகத்தை
		தீர்த்த	போக்கடித்த
		இராமாநுசனை	எம்பெருமானாரை
அதன் உச்சி மிக்கசோதியை	அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்குபவனாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனை	தொழும்	ஸேவிக்கின்ற
		பெரியோர்	மஹான்களுடைய
		பாதம் அல்லால்	திருவடிகள் தவிர
நாதன் என அறியாது	ஸர்வசேஷியென்று தெரிந்துகொள்ளாமல்	என் தன் ஆர் உயிர்க்கு	எனது அருமையான ஆத்மாவுக்கு
உழல்கின்ற தொண்டர்	கண்ட விடங்களிலும் அடிமை செய்து திரிகின்ற பாமரர்களுடைய	யாது ஒன்றும் பற்று இல்லை	வேறு ஏதேனும் புகலிடமில்லை.

* * *—*கீழ்ப்பாட்டில் "அவன் சீர் வெள்ளவாரியை வாய்மடுத்து உண்டுகொண்டேன்" என்றும் "அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றும் சொன்ன இரண்டு விஷயங்களுள் முதற்சொன்ன விஷயமே [அதாவது—ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு பக்தனாயிருப்பதே] எனக்குச் சிறந்த உத்தேச்யமென்கிறார் இதில். வேதத்தின் நுண் பொருள் என்றும் பிரிக்கலாம்,* (85)

Released by Maran's Dog Toronto , Canada

பற்றுமனிசரைப்பற்றி * அப்பற்று விடாதவரே
உற்றாரென வுழன்றோடி நையேனினி * ஒள்ளிய நூல்
கற்றார்பரவு மிராமாநுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர் * அவரெம்மை நின்றாளும் பெரியவரே. (86)

பற்று மனிசரை பற்றி	உபயோகமற்ற மநுஷ்யர்களைப் பற்றி	ஒள்ளிய நூல் கற்றார்	சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே
அப் பற்று விடாது	அந்தப் பற்றுதலை விடாமல்	பரவும்	கொண்டாடப்படுகிற
அவரே உற்றார் என	அவர்களையே உறவினராகக் கொண்டு	இராமாநுசனை	எம்பெருமானாரை
உழன்று	அவர்கள் பின்னே அலைந்து	கருதும் உள்ளம் பெற்றார் யவர்	அநுசந்திக்கும்படியான நெஞ்சையுடையோர் யாவரோ,
ஓடி	அவர்களிட்ட காரியங்களைச் செய்ய ஓடி	அவர்	அந்த மஹான்களே
இனி நையேன்	இனிமேல் துவள மாட்டேன்;	எம்மை	நம்மை
		நின்று ஆளும் பெரியவர்	சாச்வதமாக அடிமை கொள்ளும் மஹாத்மாக்கள்.

ஒள்ளிய நூல்—"சுடர்மிகு சுருதி" என்றார் ஆழ்வாரும். (86)

பெரியவர்பேசிலும் பேதையர் பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்வில் மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி யிராமாநுசன் மறை தேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் * பொருந்ாதவரைப் பொரும் கலியே. (87)

பெரியவர் பேசிலும்	ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும்	வண் கீர்த்தி	திவ்யகீர்த்தியை யுடையரான
பேதையர் பேசிலும்	ஒன்றுந் தெரியாதவர்கள் பேசினாலும்	இராமாநுசன்	எம்பெருமானார்
தன் குணங்கட்கு உரிய சொல் என்றும் உடையவன் என்று என்று	தனது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் உடையவரென்று பல காலுஞ் சொல்லி	மறை தேர்ந்து	வேதங்களை ஆராய்ந்து
		உலகில்	இவ்வுலகத்தில்
		புரியும்	உபதேசித்தருளின
		நல் ஞானம் பொருந்தாதவரை	நல்ல ஞானத்தில் சேராதவர்களை
உணர்வில் மிக்கோர் தெரியும்	சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கிற	கலி பொரும்	கலிபுருஷன் பீடிப்பன்.

* * *—கீழ்ப்பாட்டிற் கூறின அத்யவஸாயம் எனக்குக் கலியின் கொடுமையினால் ஒரு காலத்தில் மாறிவிடக் கூடுமென்று நினைக்கிறீர்களோ, அப்படி நினைக்க வேண்டா; இராமாநுசனடியார் திறத்தில் கலிபுருஷன் ஒரு கொடுமையும் செய்ய முடியாதவன்; மற்றவர்களைத்தான் கலிபுருஷன் கெடுப்பன். எனது அத்யவஸாயம் நெடுநாளளவும் நிலைநிற்கக் கூடியதே என்றாராயிற்று.

[பெரியவர் பேசிலும் இத்யாதி] இதன் கருத்து யாதெனில் - எம்பெருமானாருடைய திருக்குணங்களை மஹாஞானிகள் தாம் பேசி முடிக்கவல்லவர்கள்; அற்பஞானிகள், நம்மால் பேசமுடியாதென்று பின்வாங்கக் கூடியவர்கள்; என்பதில்லை; "தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்து பூசிப்ப" என்றும் "பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாசமலர்த்துழாய் மாலையான்—வடிவு" என்றும் சொன்னாற்போல, பெரியோர் சொன்னாலும் சிறியோர் சொன்னாலும் அவரவர்களுடைய யோக்யதைக்குத் தக்கபடி சொல்லித் துதிக்கத்தகுந்தவர் எம்பெருமானார் என்று பெரியோர்கள்தெரிந்துகொண்டு, நாம் நமது சக்திக்குத்தக்கபடி ஸ்தோத்ரம் பண்ணுவோமென்று துதிக்கின்றார்களென்கை. அப்படி துதிக்கப்படுகின்ற

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

எம்பெருமானார் உபதேசித்த ஞானத்தை அநாதரித்து அவ்வுபதேசத்தின்படி நடவாதவர்களே கலிதோஷத்தினால் வருந்துவார்களென்றதாயிற்று. ... (87)

கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீய மிராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே. (88)

கலி மிக்க	நிலவளம் மிகுந்த	அதனால் வலி மிக்க	அத்தால் மிடுக்கு அதிகரித்த
செந்நெல்கழனி	செந்நெல்கழனிகளையுடைய	சீயம்	சிங்கம்போன்ற
குறையல்	திருக்குறையலூரில் அவதரித்தவராய்	இராமாநுசன்	எம்பெருமானார்
கலை பெருமான்	சாஸ்த்ர மென்னும்படியான திவ்யப்ரபந்தங்களை யருளிச்செய்த பெருமைவாய்ந்த திருமங்கையாழ்வாருடைய	மறை வாதியர் ஆம் புலி மிக்கது என்று இப்புவனத்தில் வந்தமை	வேதத்தில் துர்வாதங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் அதிகமாய் விட்டனவென்று (அவற்றைத் தண்டிப்பதற்காக) இவ்வுலகில் அவதரித்தபடியை
மிக்க ஒலி பாடலை	அதிசயித்த இசையையுடைய பெரிய திருமொழியை		
உண்டு	அநுபவித்து		
தன் உள்ளம் தடித்து	தமது திருவுள்ளம் பூரித்து	போற்றுவன்	புகழ்ந்திடக் கடவேன்.

கலிமிக்க செந்நெற்கழனி = கலியாவது ஆரவாரம்; உழுவது நடுவது அறுப்பதாய்ச் செல்லுகிற கோலாஹலம். (88)

போற்றரும் சீலத்திராமாநுச * நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வதுதீரில் * உன்சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலுமென் மனமேத்தி யன்றி
ஆற்றகில்லாது * இதற்கென்னினைவா யென்றிட் டஞ்சுவனே. (89)

போற்ற அரு சீலத்து	புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீல குணத்தையுடைய	என்றே கொண்டு இருக்கிலும்	என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும்
இராமாநுச	எம்பெருமானாரே ;		
நின் புகழ்	தேவரீருடைய திருக்குணங்களை	என் மனம்	எனது நெஞ்சானது
தெரிந்து சாற்றுவனேல்	உணர்ந்து பேசுவானாகில்	ஏத்தி அன்றி	(தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்தல்லது
அது	(நீசனாகிய நான்) பேசுகிறவது		
தாழ்வு	(தேவரீருக்கு) அவத்யமாம் ;	ஆற்றகில்லாது	தரித்திருக்க மாட்டாது ;
அது தீரில்	அப்படி நான் பேசுவது தவிர்ந்தால்	இதற்கு	இவ்விஷயத்திலே
உன் சீர் தனக்கு ஓர் ஏற்றம்	தேவரீருடைய திருக்குணங்களுக்கு மேன்மையாகும்	என் நினைவாய் என்றிட்டு அஞ்சுவன்	தேவரீர் என்ன நினைக்குமோவென்று பயப்படுகின்றேன்.

நினையார் பிறவியை நீக்கும்பிரானை * இந்நீணிலத்தே
எனையாள வந்த விராமாநுசனை * இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர்மாந்தர் மருள்சுரந்தே. (90)

பிறவியை நீக்கும் பிரானை	ஸம்ஸாரத்தை யொழிக்கும் உபகாரகராயும்
இ நீள் நிலத்தே	இப்பெரிய பூமியிலே
எனை ஆள	என்னை அடிமை கொள்வதற்கே
வந்த	அவதரித்தவராயுமுள்ள
இராமாநுசனை	எம்பெருமானாரை
நினையார்	சிந்தியாதவர்களாயும்,
இரு கவிகள் புனையார்	(அவர் விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களாயும்
புனையும் பெரியவர் தாள்களில்	(ஏதேர் பாக்கியத்தாலே) பாடல்களைப் பாடுகிற மஹான்களின் திருவடிகளில்
பூ தொடையல் வனையார்	புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களாயுமுள்ள
மாந்தர்	மனிதர்கள்
மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று
பிறப்பில் வருந்துவர்	ஸம்ஸாரத்திற் கிடந்து துன்பப்படுவர்கள்.

** * *—கீழ்ப்பாட்டில் அஞ்சுவனே என்ற விவருடைய அச்சம் தீரும்படி குளிரக் கடாக்ஷித்தார் எம்பெருமானார்; அந்தக் கடாக்ஷ வைபவத்தாலே அச்சம் தீரப் பெற்றுத் தேறுதலடைந்து, மநோ வாக்காயங்களில் ஏதேனுமொன்றால் எம்பெருமானார் விஷயத்தில் ஒரு நன்மை செய்து வாழ்ந்துபோகலாமாயிருக்க, பாவிகள் அதுசெய்யாதே பாழாய்ப்போகிறார்களே! என அநுதபிக்கிறார் இதில்.* (90)

*மருள் சுரந்தாகம வாதியர்கூறும் * அவப்பொருளாம்*
*இருள் சுரந்தெய்த்த வுலகிருள்நீங்க * தன்னீண்டியசீர்*
அருள் சுரந்தெல்லா வுயிர்கட்கும்நாத னரங்கனென்னும்
*பொருள் சுரந்தான் * எம்மிராமாநுசன் மிக்கபுண்ணியனே.* (91)

ஆகமம் வாதியர்	(சிவன் சொன்ன) சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு வாதம் பண்ணுகிற பாசுபதர்கள்
மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகரிக்கப் பெற்று
கூறும்	(சிவனுடைய பரத்துவ விஷயமாகச்) சொல்லுகிற
அவம் பொருள் ஆம் இருள் சுரந்து	நீசமான அர்த்தங்களாகிற இருள் மேலிட்டு (அதனால்)
எய்த்த	கெட்டுப்போன
உலகு	உலகத்தவர்களுடைய
இருள்	அஜ்ஞாநாந்தகாரமானது
நீங்க	போகும்படியாக
தன்	தம்முடைய
ஈண்டிய சீர் அருள் சுரந்து	விலக்ஷணமான க்ருபையைப் பெருக்கி
எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும் பொருள்	'எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனே' என்கிற அர்த்தத்தை
சுரந்தான்	வெளியிட்டவரான
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
மிக்க புண்ணியன்	சிறந்த புண்யாத்மா.

** * *—இந்த ஸம்ஸாரிகள் இப்படி விமுகராயிருக்கச் செய்தேயும் இவர்களைத தம் பேறாக உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக எம்பெருமானார் முயன்றதைச் சிந்தித்து அவரைக் கொண்டாடுகிறார்.*

மிக்க புண்ணியனான எம்மிராமாநுசன்...............பொருள் சுரந்தான் என்றும், பொருள் சுரந்தவனான எம்மிராமாநுசன் மிக்க புண்ணியன் என்றும் இரண்டுபடியும் யோஜிக்கலாம். (91)

*புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றி செய்யும்*
*நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற் புலவர்க்கு*
எண்ணருங்கீர்த்தி யிராமாநுச இன்று நீபுகுந்தென்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்றவிக்காரணம் கட்டுரையே. (92)

செம்மை நூல் புலவர்க்கு	நல்லசாஸ்த்ரங்களைக் கற்றுக் கவி சொல்ல வல்லவர்களுக்கும்
எண் அரு கீர்த்தி	அளவிட முடியாத கீர்த்தியையுடைய
இராமாநுச	எம்பெருமானாரே !,
புண்ணியம் நோன்பு புரிந்தும் இலேன்	புண்ணியமான ஒருவிரதத்தையும் அடியேன் அநுஷ்டிக்கவில்லை ;
அடி போற்றி செய்யும்	தேவரீருடைய திருவடிகளை வாழ்த்துகைக்கு உறுப்பான
நுண் அரு கேள்வி	ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தை
நுவன்றும் இலேன்	(செய்ய வேணுமென்று வாயாலே) சொல்லவுமில்லை (அப்படியிருந்தும்)
இன்று	இன்று
என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்	அடியேனது கண்ணினுள்ளேயும் நெஞ்சினுள்ளேயும்
புகுந்து நின்ற இக்காரணம் கட்டுரை	புகுந்து எழுந்தருளியிருப்பதற்குக் காரணமருளிச் செய்யவேணும்.

*கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர் சொல்லும்*
*பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே * என் பெருவினையைக்*
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னு மொள்வாளுருவி
*வெட்டிக்களைந்த * இராமாநுச னென்னும் மெய்த்தவனே.* (93)

கிட்டி	அடியேன் பக்கல் வந்து நெருங்கி
தன் அருள் என்னும் ஒள் வாள் உருவி	தம்முடைய கிருபையாகிற அழகியவாளை உறையில் நின்றுங் கழற்றி (அதனால்)
என் பெருவினையை கிழங்கொடுவெட்டி களைந்த	எனது மஹாபாபங்களை வேரோடே அறுத்தொழித்த
இராமாநுசன் என்னும்	எம்பெருமானாரென்கிற
மெய் தவன்	மாமுனிவர் (எப்படிப்பட்டவரென்றால்)
கயவர்	துஷ்டர்களான குத்ருஷ்டிகள்
கட்டம் பொருளை மறை பொருள் என்று சொல்லும் பெட்டை	தப்பான அர்த்தங்களை வேதங்களின் அர்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப் பேச்சுகளை
கெடுக்கும் பிரான் அல்லனே	கண்டித்தொழித்த மஹாநுபாவரன்றோ.

கட்டம்—க்ஷ்டம்; கட்டப்பொருளென்றது கஷ்டப்பட்டுச் சொல்லும் பொருள் என்றபடி ; மதாந்தரஸ்தர்கள் சொல்லும் பொருள்கள் அஸ்வரஸமாகையால் க்லிஷ்டங்களாயிருக்குமென்க. கயவர்—நீசர், துஷ்டர். பெட்டு—பிறரை வஞ்சிக்கச் சொல்லும் பொய்ப்பேச்சு. மெய்த்தவன்—தவமாவது சரணாகதியோகம். ... (93)

*தவந்தருஞ் செல்வம் தகவுந்தரும் * சரியாப்பிறவிப்*
*பவந்தருந் தீவினை பாற்றித்தரும் * பரந்தாமமென்னும்*
திவந்தரும் தீதிலி ராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
*உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானென்று முள்மகிழ்ந்தே.* (94)

தீது இல் இராமாநுசன்	எவ்வகைக் குற்றமும் அற்றவரான எம்பெருமானார்
தன்னை சார்ந்தவர்கட்கு	தம்மைவந்து அடைந்தவர்களுக்கு
தவம் தரும்	சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர் ;
செல்வம் தகவும் தரும்	பக்தியாகிற செல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர் ;
சரியா பிறவி பவம் தரும் தீவினை	நிவர்த்திக்க முடியாத ஜந்ம ஸம்ஸாரங்களை உண்டாக்குகின்ற கொடுவினைகளை
பாற்றி தரும்	போக்கடித்தருள்வர் ;
பரம் தாமம் என்னும் திவம் தரும்	பரமபதமென்று சொல்லப்படுகிற வானுலகத்தை அளிப்பர் ; (ஆனபின்பு)
யான்	அடியேன்
அவன் சீர் அன்றி	அவ்வெம்பெருமானாருடைய திருக்குணங்களைத் தவிர்த்து
என்றும்	வேறொன்றையும்
உள் மகிழ்ந்து உவந்து அருந்தேன்	மனக் காதலோடே விரும்பி அநுபவிக்க மாட்டேன்.

இப்பாட்டில், தரும் என்னும் பதம் ஐந்து இடங்களில் வருகின்றது. இரண்டாமடியின் முதலிலுள்ள தரும் என்பது மாத்திரம் தீவினைக்கு விசேஷணம்; மற்ற நான்கும் எம்பெருமானார் பக்கல் அந்வயிக்கும் வினைமுற்றுக்கள்.

"சலியாப்பிறவி, சரியாப்பிறவி" என்பன பாடபேதங்கள். பவம்-வடசொல். பரந்தாம-வடசொல். தீவம்-வடசொல் விகாரம். (94)

உண்ணின் றுயிர்களுக் குற்றனவேசெய்து * அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பானெம் மிராமாநுசன்
மண்ணின் தலத்துதித்து * உய்மறைநாலும் வளர்த்தனனே. (95)

உயிர்களுக்கு உள் நின்று	எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு	பல் உயிர்க்கும்	ஸகல ஆத்மாக்களுக்கும்
உற்றனவே செய்து	ஹிதமானவற்றையே நடத்திக் கொண்டு	வீடு அளிப்பான்	மோக்ஷத்தை அருள்வதற்காக
அவர்க்கு	அவ்வாத்மாக்களுக்கு	எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
உயவே பண்ணும் பரனும்	உஜ்ஜீவநத்தையே பண்ணிக் கொண்டிருக்கிற எம்பெருமானும்	விண்ணின் தலை நின்று	ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும்
பரிவு இலன் ஆம் படி	(ஆத்மாக்களிடத்தில் எம்பெருமானாரைப் போல்) ப்ரீதியுடையவனல்லன் என்ன வேண்டும்படியாக	மண்ணின் தலத்து உதித்து	இப்பூதலத்திலே அவதரித்து
		உய்மறை நாலும்	எல்லார்க்கும் உஜ்ஜீவநஹேதுவான நான்கு வேதங்களையும்
		வளர்த்தனன்	குறைவின்றி வளரச் செய்தருளினார்.

இப்பாட்டின் ஈற்றடியை "மண்ணின் தலத்துதித்து மறைநாலும் வளர்த்தனனே" என்றே அத்யாபகர்கள் ஓதுவர்கள். "நேர்பதினாறே" என்ற கட்டளைக் கலித்துறையின் இலக்கணப்படி பதினேழெழுத்து ஒத்திருந்தாலும் தளைதட்டுகிறபடியாலும், மணவாளமாமுனிகளுரையில் "ஸர்வோஜ்ஜீவந சாஸ்த்ரமான" என்கிற ஒரு வாக்கியம் வ்யர்த்தமாகவேண்டிவருகையாலும் இவ்விரண்டு குறைகட்கும் இடமறும்படி "....உய் மறைநாலும்" என்கிற ப்ராசீநபாடம் கொள்ளத் தக்கது. உய் என்பதற்குப் பொருளாகவே மணவாள மாமுனிகள் "ஸர்வோஜ்ஜீவந சாஸ்த்ரமான" என்கிற வாக்கியமருளிச் செய்தாரென்க. (95)

வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத் தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் * இராமாநுசன் றன்னை யுற்றவரே. (96)

வளரும் பிணி கொண்டவல் வினையால்	அளவற்ற துன்பங்களை யுண்டாக்கவல்ல கொடிய கருமங்களாலே	தரித்தும் விழுந்தும்	ஒருவாறு தரித்திருந்தும் (சப்தாதி விஷயங்களிலே) போய் விழுந்தும்
மிக்க நல் வினையில்	பரம தர்மமான சரணாகதியில்	தனி திரிவேற்கு	துணையின்றித்திரிகிற எனக்கு
கிளரும் துணிவு கிடைத்தறியாது	மஹாவிச்வாஸம் கிடைக்காததனால்	இறைவர்	ஸ்வாமிகள் (யாரென்றால்)
முடை தலை ஊன் தளரும் அளவும்	கெட்ட நாற்றங்களுக்கு இருப்பிடமான சரீரம் கட்டுக் குலையும் வரையில்	எம் இராமாநுசன் தன்னை உற்றவர்	நம் எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள்
		உளர்	இருக்கிறார்கள்.

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய வென்னையுய்த்தானின்று * தன் தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணம்சாற்றிடுமே. (97)

இராமாநுசன்	எம்பெருமானாரானவர்,	தன் தகவால்	தமது அருளாலே
			(என்ன செய்தாரென்றால்)
தன்னை உற்றார் அன்றி தன்னை உற்றாரை குணம் சாற்றிடும் தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து	தம்மைப் பற்றியிருப்பாருண்டே யொழிய தம்மைப் பற்றி யிருப்பவர்களுடைய குண கீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்த பக்தர்கள் ஒருவருமில்லையென்று திருவுள்ளம் பற்றி	தன்னை உற்று ஆள் செய்யும் தன்மையினோர்	தம்மையடைந்து கைங்கரியம் பண்ணும் ஸ்வபாவ முடையரான ஸ்வபக்தர்களுடைய
		மன்னு தாமரை தாள் தன்னை உற்று ஆள் செய்ய	ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை நான் அடைந்து ஆட்செய்யும்படி
என்னை	அடியேனை		
இன்று	இன்றைத் தினத்தில்	உய்த்தான்	வைத்தருளினார்.

* * *—எம்பெருமானார் என்னைத் தம்மிடத்து ஆட்படுத்திக்கொள்ளாமல் தம்மை அடுத்தவர்கள் பக்கல் என்னை ஆட்படுத்தினார். இதற்கு என்ன காரணமென்கிறீர்களோ? எல்லோரும் நம்மையே நேராகவந்து ஆச்ரயிக்கிறார்களேயொழிய நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிப்பார் ஆருமில்லையே; இவ்வமுதனார், நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிக்கிற அதிகாரியாக இருக்கட்டும்—என்று திருவுள்ளம் பற்றிச் செய்தார்.

இப்பாட்டின் அந்வயக்ரமம் சிறிது வருத்தப்படுத்தும்; ஜாகரூகராயிருந்து அந்வயித்துக்கொள்க;—தன்னையுற்றாரன்றித் தன்னையுற்றாரை குணம் சாற்றிடுந் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து, இராமாநுசன், தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னையுற்று ஆட்செய்யத் தன்தகவால் இன்று என்னையுய்த்தான்—என்று அந்வயம்.

சாற்றிடும் என்கிற விசேஷணபதம் பாட்டின் முடிவில் வந்து நின்றது அபூர்வப் பிரயோகமென்பர். என்னையுற்றான் என்று ஓதுவர்கள். (97)

இடுமேயினிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகிலிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை * சுழல்பிறப்பில்
நடுமேயினிநம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால் * மனமேநையல் மேவுதற்கே. (98)

நம் இராமாநுசன்	நம் எம்பெருமானார்,	அவற்றை தொடர்தரு	அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற
சரணம் என்றால்	உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லி விட்டோமானால்	தொல்லை சுழல் பிறப்பில்	அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே
[illegible]		நடுமே	நிறுத்துவரோ?
[illegible] சுவர்க்[illegible] இடுமே	(சிலர்க்கு) இனிதாகத் தோன்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக் கொண்டு சேர்த்திடுவரோ?	இனி	மேலுள்ள காலங்களில்
		நம்மை	நம்மை
		நம் வசத்தே விடுமே	நாம் போகிற வழியே விட்டு வைப்பரோ?
இன்னம்	அல்லது		(இவை செய்யமாட்டாரான பின்பு)
[illegible] இட்டு [illegible]மே	நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வரோ?	மனமே!	ஓ நெஞ்சே!
		மேவுதற்கு	பேறுபெறும் விஷயமாக
[illegible]		நையல்	நீ கரையவேண்டா.

நையல்—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. நையாதே என்றபடி. (98)

நித்யாநுஸந்தானவுரை

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்மிராமாநுச முனி போந்தபின்னே (99)

தற்கம் சமணரும்	தர்க்கம் பண்ணுகிற சமணர்களும்
பேய்	பேய்போலே பிடித்த பிடி விடாதே நிற்கிற
சாக்கியர்களும்	பௌத்தர்களும்
தாழ்சடையோன் சொல் கற்ற சோம்பரும்	ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும்
சூனிய வாதரும்	சூந்யவாதிகளும்
நால் மறையும் நிற்க	நான்கு வேதங்களும்விளங்கிக் கொண்டிருக்கச் செய்தே
குறும்பு செய் நீசரும்	(அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும்
மாண்டனர்	ஒழிந்தார்கள் ;
	(எப்போது ? என்றால்)
பொன்கற்பகம் எம் இராமாநுச முனி	சிறந்த கல்பவ்ருக்ஷம் போலே உதாரரான ஸ்வாமி எம்பெருமானார்
நீள் நிலத்தே போந்த பின்	விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு,

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு * உனதடிப்போதி லொண்சீ
ராந்தெளிதேனுண்டமர்ந்திட வேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டு மிராமாநுச இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனிமற்றொன்றுகாட்டி மயக்கிடலே. (100)

இராமாநுச	எம்பெருமானாரே !
என் நெஞ்சு என்னும் பொன் வண்டு	எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது
உனது அடி போதில்	தேவரீருடைய திருவடித் தாமரைகளில்
ஒண் சீர் ஆம் தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி	அழகிய குணங்களாகிற தேனைப்பருகி நித்ய வாஸம் பண்ண விரும்பி
நின்பால்	தேவரீரிடத்தில்
போந்தது	வந்துசேர்ந்தது
அதுவே	அத்திருக்குணங்களையே
ஈந்திட வேண்டும்	அளித்தருளவேணும் ;
இது அன்றி	இத்திருக்குணங்களைத்தவிர
ஒன்றும்	வேறொன்றையும்
மாந்த கில்லாது	(நெஞ்சு) புஜிக்கமாட்டாது:
இனி	இப்படியான பின்பு
மற்று ஒன்று காட்டி	வேறொரு விஷயத்தைக்காட்டி
மயக்கிடல்	மயக்கவேண்டா.

* * *—ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய திருக்குணங்களையே எப்போதும் அநுபவிக்கவிருப்பங்கொண்டு மேல்விழுந்து தேவரீரிடம் வந்து சேர்ந்தது. இது இனி வேறொன்றை விரும்பாது; தேவரீரும் இனி இதை ஸம்ஸாரத்தில் போகவொட்டாமல் தேவரீரிடத்திலேயே நிலைநிறுத்திக் கொள்ளவேணும்: என்றாராயிற்று :

தமது நெஞ்சை ஒரு வண்டாக ரூபணம் பண்ணினதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திவ்வியகுணங்களை மதுவாக ரூபணம் பண்ணினார். இந்த வண்டுக்கு அந்தத் தேன் தவிர வேறொன்றும் ரஸிக்கமாட்டாது.

மயக்கிடல் = முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. மயக்காதே என்றபடி. (100)

மயக்குமிருவினை வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டு நல்குமிராமாநுசவென்ற துன்னை யுன்னி
நயக்குமவர்க் கிதிழுக்கென்பர் * நல்லவரென்று நைந்தே (101)

மயக்கும்	"அஜ்ஞானத்தை விளைக்க வல்ல	நல்கும்	அருள் செய்கின்ற
இரு வினை	புண்ய பாபமென்னும் இரு கருமங்களாகிற	இராமாநுச	எம்பெருமானாரே !"
வல்லியில்	விலங்கில்	என்றது இது	என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிற இது
பூண்டு	அகப்பட்டுக் கொண்டு		
மதி மயங்கி	அறிவு கெட்டு	உன்னை உன்னி நைந்து	தேவரீரை அநுஸந்தித்து உருகி
துயக்கும்	ப்ரமிக்கச் செய்கிற		
பிறவியில்	ஸம்ஸாரத்திலே		
தோன்றிய என்னை	பிறந்த அடியேனை	என்றும் நயக்குமவர்க்கு	எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு
துயர் அகற்றி உய கொண்டு	துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து	இழுக்கு என்பர் நல்லவர்	தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள்.

** * *—எம்பெருமானார்க்கு, பாவநத்வம் என்றும் போக்யத்வம் என்றும் இரண்டு படிகள் உண்டு. பாவநத்வமாவது—பக்தர்களுடைய பாவங்களைப்போக்கிப் பரிசுத்தப்படுத்தல். போக்யத்வமாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியவரா யிருக்கை. இவ்விரண்டில் பாவநத்வத்தை விட போக்யத்வமே சிறந்தது; ஏனென்றால், நம்முடைய பாவங்களைப் போக்கினாரென்கிற காரணத்தாலே நாம் அவரைப் பாவநர் என்று அநுஸந்திக்க வேண்டும்; இது ஒரு உபாதியைப் பற்றி வருவது; போக்யத்வத்தை அநுஸந்திப்பதோ இப்படிப்பட்டதல்ல. அது ஸ்வரூபப்ரயுக்தம். ஆகையாலே, பாவநத்வத்தை அநுஸந்திப்பதைவிட போக்யதையை அநுஸந்திப்பதே சிறந்தது. அப்படியிருக்க இவ்வமுதனார் இப்பிரபந்தத்தில் அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை அநுஸந்தித்தார்; 'என்னுடைய பாவங்களையெல்லாம் போக்கினார், என்னுடைய குற்றங்களையெல்லாம் நீக்கினார்' என்று அடிக்கடி சொல்லியிருக்கிறார். அப்படி சொன்னதற்கு அநுதாபப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டுப் பேசவேண்டியிருக்க, பாவநத்வத்தில் ஈடுபட்டமை தோற்றப் பேசினது பிசகு என்று பெரியோர்கள் சொல்லுவர்கள் என்றாராயிற்று.* (101)

*நையும்மனமுன்குணங்களையுன்னி * என்னாவிருந்தெம்*
*ஐயனிராமாநுச னென்றழைக்கும் * அருவினையேன்*
கையும் தொழும் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
*வையமிதனில் * உன்வண்மை யென்பாலென்வளர்ந்ததுவே.* (102)

(எம்பெருமானாரே)			
மனம்	என்து நெஞ்சானது	தொழும்	அஞ்ஜலிபண்ணுகின்றன;
உன் குணங்களை உன்னி	தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து	கண்	கண்களானவை
நையும்	கரைகின்றது ;	காண கருதிடும்	(தேவரீரை) ஸேவிக்க ஆசைப்படுகின்றன ;
என் நா	எனது வாக்கானது	கடல் புடைசூழ் வையம் இதனில்	சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தினுள்ளே
இருந்து	நிலை நின்று		
எம் ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும்	எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே ! என்று அழைக்கின்றது.	உன் வண்மை	தேவரீருடைய ஔதார்ய குணம்
அரு வினையேன்	மஹாபாபியான என்னுடைய	என்பால் வளர்ந்தது என்	அடியேன் மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக்காரணம் யாதோ ?
கையும்	கைகளும்		

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் அன்று வாளவுணன்*
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன் கீர்த்திப் பயிரெழுந்து*
விளைந்திடும் சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
*களைந்து நன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே.* (103)

அன்று	முன்னொருகாலத்தில்	கீர்த்தி பயிர் எழுந்து	திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து
வளர்ந்த வெம் கோபம்மடங்கல் ஒன்று ஆய்	கடூரமான கோபம் மேலிடப்பெற்ற ஒரு நரசிங்கமூர்த்தியாகி	விளைந்திடும் சிந்தை	விளையப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான
வாள் அவுணன்	வாளையுடைய ஹிரண்யாஸுரனது	இராமாநுசன்	எம்பெருமானார்
கிளர்ந்த	செருக்கினால் நெறித்திருந்த	என் தன் மெய் வினை நோய் களைந்து	எனது உடலைப்பற்றி யிருக்கிற வினைநோய்களையெல்லாமொழித்து
பொன் ஆகம்	பொன்போன்ற மார்வை	கையில் கனி என்ன	கையிலங்கு நெல்லிக்கனி போலே ஸுலபமாக
கிழித்தவன்	கிழித்துப்பொகட்டவனான எம்பெருமானுடைய	நல் ஞானம் அளித்தனன்	விலக்ஷணமான ஞானத்தைத் தந்தருளினார்.

கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும் உன்தன்*
*மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * நிரயத்*
தொய்யில் கிடக்கிலும் சோதிவிண்சேரிலும் இவ்வருள் நீ
*செய்யில்தரிப்பன் * இராமாநுச என்செழுங் கொண்டலே.* (104)

செழு கொண்டல்	(ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம் போன்ற	நிரயம் தொய்யில்	ஸம்ஸார நரகக்குழியில்
என் இராமாநுச	எம்பெருமானாரே! (தேவரீர்)	கிடக்கிலும்	அழுந்திக் கிடந்தேனாகிலும்
கண்ணனை	எம்பெருமானை	சோதி விண் சேரிலும்	சோதிமயமான பரமபதத்தை அடைந்தேனாகிலும்
கையில் கனி என்ன	உள்ளங்கை நெல்லிக்கனி போலே		
காட்டி தரினும்	காட்டிக் கொடுத்தாலும்	இவ் அருள்	(தேவரீருடைய) திருமேனியழகை அநுபவித்திருக்கைக்கு உறுப்பான கிருபையை
உன்தன் மெய்யில் பிறங்கிய சீர் அன்றி யான் வேண்டிலன்	தேவரீருடைய திருமேனியில் விளங்குகிறஸௌந்தரியம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் கண்வைக்கமாட்டேன்;	நீ செய்யில்	தேவரீர் செய்தருளினால்தான்
		தரிப்பன்	(ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவிநிற்பேன்.

* * *—நிரயத்தொய்யில் = நிரயமாவது நரகம். இந்த ஸம்ஸாரநிலமே நரகமெனப்படும். தொய்யில்—சேறு. ஏழனுருபு தொக்கியிருக்கிறது. தொய்யல் என்பாருமுளர். (104)

*செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில்மாயன் * திருவடிக்கீழ்*
*விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்*
தொழுந்திருப்பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
*எழுந்திரைத்தாடுமிடம் * அடியேனுக் கிருப்பிடமே.* (105)

செழு திரை பால் கடல்	அழகிய அலைகளையுடைய திருப்பாற்கடலில்	நல் வேதியர்கள் தொழும் திருபாதன்	நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளையுடையராயு மிருக்கிற
கண் துயில்	பள்ளிகொண்டிராநின்ற	இராமாநுசனை	எம்பெருமானாரை
மாயன்	ஸர்வேச்வரனுடைய	தொழும்	ஸேவிக்கின்ற
திரு அடி கீழ்	திருவடிகளின் கீழே	பெரியோர்	மஹாத்மாக்கள்
விழுந்து இருப்பார்	விழுந்துகிடக்கும் மஹான்களுடைய	எழுந்து இரைத்து ஆடும் இடம்	உடம்பு இருந்த விடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக்கொண்டு கூத்தாடும் இடம்
நெஞ்சில் மேவும்	ஹ்ருதயத்திலே பொருந்தியெழுந்தருளியிருக்கிற	அடியேனுக்கு இருப்பு இடம்	அடியேன் வஸிக்குமிடமாகும்.
நல் ஞானி	சிறந்த ஞானியாயும்		



ஸ்ரீ ராமானுஜர் - தொண்டனூர்

[சாற்றுப் பாசுரங்கள்]

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவைதன்னொடும்வந்

திருப்பிடம் மாயனிராமாநுசன்மனத் தின்றவன்வந்
திருப்பிடம்* என்றனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (106)

மாயனுக்கு	ஸர்வேச்வரனுக்கு
இருப்பு இடம்	வாஸஸ்தானம் (எவை
வைகுந்தம்	பரமபதமும் யென்றால்)
வேங்கடம்	திருவேங்கடமலையும்
மாலிருஞ் சோலை என்னும்பொருப்பு இடம்	திருமாலிருஞ் சோலையென்கிற திருமலையும் (ஆகிய இவை யாம்)
என்பர் நல்லோர்	என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள்
மாயன்	(இவற்றை இருப்பிடமாக வுடைய) ஸர்வேச்வரன்
அவை தன்னொடும் வந்து இருப்பிடம்	அந்த ஸ்ரீவைகுண்டம் முதலியவற்றோடே கூடவந்து எழுந்தருளியிருப்பது
இராமாநுசன் மனத்து	எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்;
அவன்	அவ்வெம்பெருமானார் தாம்
இன்று வந்து	இப்போது வந்து
தனக்கு இன்பு உற இருப்பிடம்	தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது
என் தன் இதயத்து உள்ளே	அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளேயாம்.

———கீழ்ப்பாட்டில் கூறியபடியே அமுதனாருடைய எல்லை கடந்த ப்ராவண்யத்தை அறிந்த எம்பெருமானார் 'நம்மேல் இவ்வளவு காதல் கொண்டிருக்கிற இவருடைய நெஞ்சை நாம் விட்டு நீங்கலாகாது' என்று கொண்டு அமுதனாருடைய திருவுள்ளத்தை மிகவும் விரும்பியருள, அதனைக் கண்டு மகிழ்ந்து பேசுகிறார். (106)

இன்புற்றசீலத் திராமாநுசா* என்றுமெவ்விடத்தும்
என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து* எண்ணரிய
துன்புற்று வீயினும்சொல்லுவதொன்றுண் டுன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி* என்னையாக்கியங்காட்படுத்தே. (107)

அன்பு உற்ற	ஆநந்த பூர்ணரா யெழுந்தருளியிருக்கிற
சீலத்து இராமாநுசா	ஸௌசீல்யகுணமுடைய எம்பெருமானாரே !
சொல்லுவது ஒன்று உண்டு	தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு
	(அஃது என்னவென்றால்)
என்பு உற்ற நோய் உடல் தோறும்	எலும்பிலே உறைந்து நலியக்கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம்
பிறந்து இறந்து	பிறப்பதும் இறப்பதுமாகி
எண்ண அரிய துன்பு உற்று வீயினும்	எண்ண முடியாத துன்பங்களை யநுபவித்து முடிந்து போனாலும்
என்றும்	எல்லாக்காலங்களிலும்
எவ் இடத்தும்	எல்லா விடங்களிலும்
உன் தொண்டர்கட்கே	தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே
அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி	பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி
அங்கு ஆள்படுத்து	அந்த பக்தர்களிடத்தில் (அடியேனை) ஆட்படுத்தியருளவேணும்.
	(இதுவே அடியேனுடைய வேண்டுகோள்)

அங்கயல்பாய்வயல் தென்னரங்கன்* அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும்* பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்துநெஞ்சேநந்தலைமிசையே
பொங்கியகீர்த்தி இராமாநுசனடிப்பூமன்னவே. (108)

நெஞ்சே	ஓ மனமே!	அம் கயல் பாய் வயல் தென் அரங்கன்	அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் பெருமானுடைய
பத்திஎல்லாம் தங்கியது என்ன தழைத்து	பக்தியெல்லாம் தம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக விறுபெற்று.	அணி ஆகம் மன்னும்	அழகிய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிறவளாய்
பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடி பூ	பரந்த புகழை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள்	பங்கயம் மாமலர் பாவையை	சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமைபோன்றவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியை
தம் தலைமிசையே மன்ன	தமது தலைமேலே நித்யவாஸம் பண்ணும்படியாக	போற்றுதும்	வாழ்த்துவோம்.
(நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்			

▪▪▪—இப்பிரபந்தத்தின் தொடக்கத்தில் "இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ" என்று எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளைப் பொருந்தி வாழ்வதே தமக்குப் பரம புருஷார்த்தமாக அருளிச் செய்தவராகையாலே அந்தப் புருஷார்த்தம் நமக்கு யாவஜ்ஜீவம் ஸித்திக்கும்படியாக—எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல பெரியபிராட்டியாரைப் பிரார்த்திப்போமென்கிறார்—முடிவான இப் பாட்டில்.

ஸாமாந்ய ஸம்பத்தை அளிக்கவல்ல பிராட்டியே இந்த விசேஷ ஸம்பத்தையும் அளிக்கக் கடவள் என்றதாயிற்று. (108)

எம்பெருமானார் திருவடிகளே சரணம். திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

இராமாநுச நூற்றந்தாதி—அடிவரவு

1. பூமன் கள்ளார் பேரிய லென்னை, எனக்கியலும் மொழி வருத்து மிறைமன் சீர்.
2. சீரிடம் செய்யும் கதி சோராதாம், முனியெய்தற் குறு வாரப்பொழில் நிதி
3. நிதி கார்த்தி வைப்பா மொய்த்த காரேய் திக்குக் கொள்ள நெஞ்சில் கூட்டு மின்பமாண்டு.
4. ஆண்டு பொரு மடையார் நில நயவேன், அடல் படி யாக்கிப் பொருளும் சேமமன்.
5. மன் ஆயி கரச் சொல்லார் பேறு கூறு மிறை நிகரான துதிப் பிடி.
6. அடி பார்த் தற்புதன் நாட்டி கண் கோக்குலம், மற்றெருகு, பேதையர் கடலுணர் கொழுந்து.
7. கொழு விரும் பிடியைப் பண்டரு வாழ்வானாம், சரண மாமெனச் சிந்தையென்னையும் சார்.
8. சார் கைத்த வண்மை தேர் செய்த்தலை நின்ற, ஈந்தனன் கருத்தில் பொய்யை நல் சோர்வி.
9. சோர் தெரிவுற்ற சீர்கண் டோதி பற்று, பெரியவர் கலிமிக்க போற்றரும் நினையார்.
10. நினையார் மருள் புன்னரி கட்டத் தவமுண்ணின், வளரும் தன்னையுற் றிடும் தற் போந்த.
11. போந்ததென் மயக்கும் நையும் வளர்ந்த, கையிற் செழுத்திரை யிருப்பின் பங்கயல் பூ

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

வித்யாநுஸந்தானவுரையில் இராமாநுச நூற்றந்தாதி உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:
ஜீயர் திருவடிகளே சரணம்.

உபதேசரத்தினமாலையின் முன்னுரை.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களுள் இது முதலது. மற்றவை திருவாய்மொழி நூற்றந்தாதியும் ஆர்த்திப் பிரபந்தமும். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு ப்ரதான ப்ரவர்த்தகர்களான ஆழ்வார்கள் அவதரித்த மாதங்கள், நக்ஷத்திரங்கள், ஸ்தலங்கள், அவ்வாழ்வார்களருளிய திவ்வியப்பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் முதலியவற்றை அருளிச்செய்த ஆசாரியர்களின் பெருமைகள், — அப்படிப்பட்ட ஆசாரியர்களுள் தலைவரான பிள்ளை லோகாசார்யரின் பெருமை, அவர் பணித்த ரஹஸ்யங்களுள் தலையான ஸ்ரீவசநபூஷணத்தின் பெருமை, அந்த திவ்ய சாஸ்த்ரத்தின் ஸாரார்த்த விசேஷம் ஆகிய இவ்விஷயங்கள் இப்பிரபந்தத்தில் மிக அழகிய நடையில் அருளிச்செய்யப் படுகின்றன.

ஆழ்வார்களின் திருவவதாரக்ரமம் "பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையையனருள் மாறன் சேரலர்கோன் துய்யபட்டநாத னன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன் ஈதிவர் தோற்றத் தடைவாமிங்கு" என்ற பாசுரத்தினால் இதில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. மேலே அவ்வாழ்வார்களின் அவதார நாள்களை அருளிச்செய்து வருமிடத்து முதலாழ்வார்கள் மூவருடைய அவதார நாள்களைக் கூறிவிட்டு அடுத்தபடியாகத் திருமழிசையாழ்வாரின் அவதார நாளைக் கூறவேண்டியிருக்க அதுகூறாமல், திருமங்கையாழ்வார் திருப்பாணாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமழிசையாழ்வார் குலசேகராழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் என்று இங்ஙனே ஒரு க்ரமம் வைத்து அவதார நாட்கள் கூறப்பட்டிருக்கின்றன; இஃது எந்த க்ரமத்தில் சேர்ந்ததென்று பலரும் விமர்சிப்பர்கள். கேண்மின். முதலாழ்வார்களின் அவதார நாட்களை முதலிலே கூறிவிட்டு உடனே மாதங்களினடைவே அருளிச்செய்து வருகிறார். அதாவது—முதலாழ்வார்கள் அவதரித்தது ஐப்பசி மாதம். அதற்கடுத்த மாதம் கார்த்திகையாதலால் அத்திங்களில் அவதரித்த இரண்டு ஆழ்வார்களைப்பற்றிப் பேசினார். அதற்கு அடுத்த மாதம் மார்கழியாதலால் அதில் அவதரித்த தொண்டரடிப்பொடியாழ்வாரைப்பற்றி உடனே பேசினார். அதற்கு அடுத்தது தை மாதம். அதிலவதரித்த திருமழிசையாழ்வாரைப் பேசுவது ப்ராப்தமாயிற்று. இங்ஙனே மாதக்ரமமாக வைத்து அருளிச்செய்கிறாரென்று கண்டுகொள்வது.

இத் திவ்வியப் பிரபந்தத்தின் அமைப்பினழகு நிகரற்றது. அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பிய சீர்மை சொலப்புகில் வாயமுதம் பரக்கும். *



வாசியறிந்த வதரியில் நாரணர் மனங்கொள்
தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர்தழைப்ச்
சீசயிலேச தயாபாத்திரமென்னும் சீர்மந்திரம்
தேசிகனாய்க் கண்டுரைத்தார் இவ்வையதம் சீருறவே

– கோயில் அண்ணன்

தனியன்

முன்னந்திருவாய் மொழிப்பிள்ளை தாமுபதேசித்த நேர்
தன்னின்படியைத் தணவாதசொல் மணவாளமுனி
தன்னன்புடன்செய் உபதேசரத்தினமாலைதன்னைத்
தன்னெஞ்சுதன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே.

முன்னம்	முற்காலத்தில்
திருவாய் மொழிப் பிள்ளை தாம் உபதேசித்த நேர் தன்னின் படியை தணவாத சொல்	(ஸ்வாசார்யரான திருவாய் மொழிப்பிள்ளை உபதேசித்தருளின க்ரமத்தை அதிக்ரமியாமல் அநுவர்த்தித்தே பேசுமவரான
மணவாள முனி	மணவாள மாமுனிகள்
தன் அன்புடன் செய்	தம்முடைய பரமகிருபையினால் செய்தருளின
உபதேசரத்தின மாலை தன்னை	உபதேசரத்தின மாலையென்கிற திவ்யப் பிரபந்தத்தை
தம் நெஞ்சு தன்னில்	தங்கள் ஹ்ருதயத்திலே
தரிப்பவர்	(கண்டபாடஞ் செய்து தரிக்கின்றவருடைய)
தாள்கள்	திருவடிகளே
நமக்கு சரண்	நமக்குத் தஞ்சம்.

தனியன் உரை முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

விசதவாக் சிகாமணிகளான மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

உபதேசரத்தினமாலை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது.

தமக்குக் கிடைத்த உபதேச வழியின்படியே வெண்பாவிலமைத்துப் பேசுவதாகக் கூறுதல்

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால் *
வந்த வுபதேச மார்க்கத்தைச்—சிந்தை செய்து *
பின்னவருங் கற்க உபதேசமாய்ப் பேசுகின்றேன் *
மன்னியசீர் வெண்பாவில் வைத்து. (1)

எந்தை	எமக்கு ஆசிரியரான
திருவாய் மொழிப் பிள்ளை	திருவாய் மொழிப்பிள்ளை என்கிற திருமலையாழ்வாருடைய
இன்னருளால் வந்த	பரம கிருபையினால் கிடைத்த
உபதேசம் மார்க்கத்தை சிந்தை செய்து	உபதேச வழியை அநுஸந்தித்து
பின்னவரும் கற்க	பின்புள்ளாரும் கற்குமாறு
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து	பொருத்தமான சீர்களையுடைய வெண்பாவென்கிற யாப்பிலே அமைத்து
உபதேசம் ஆய் பேசுகின்றேன்	(உள்ளத்திற்கும் உலகத்திற்கும்) உபதேசரூபமாகப் பேசுகிறேன்.

"மன்னியசீர்" என்பதை வெண்பாவுக்கு விசேஷணமாக்காமல் "மன்னிய சீர்களைப் பேசுகின்றேன்" — ஆழ்வாராசாரியர்களின் திருக்குணங்களைப் பேசுகின்றேன் என்றுரைப்பாருமுளர். (1)

இப்பிரபந்தத்தை விவேகிகள் உகப்பதே போதுமென்றல்

கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதன்னி லாசையுள்ளோர்*
பெற்றோமெனவுகந்து பின்புகற்பர்*—மற்றோர்கள்
மாச்சரியத்தாலிகழில் வந்ததென் நெஞ்சே!* இகழ்கை
ஆச்சரிய மோதா னவர்க்கு. (2)

நெஞ்சே	மனமே !	மாச்சரியத்தால்	மாத்ஸர்யத்தினால் [பகை பாராட்டி]
கற்றோர்கள்	கல்வி பயின்றவர்கள் (இப்பிரபந்தத்தைப் பெற்று மகிழ்ந்திடுவர்கள் ;	இகழில்	இதனை இகழ்ந்தால்
கல்வி தன்னில் ஆசை உள்ளோர்	கல்வியில் விருப்பமுள்ளவர்கள்	வந்தது என்	அதனால் நமக்கு உண்டாகும் சேதமென்ன ? (ஒன்றுமில்லை)
பெற்றோம் என உகந்து	இது லபிக்கப் பெற்றோமே!' என அகங்குழைந்து	அவர்க்கு	அப்படிப்பட்டவர்களுக்கு
பின்பு கற்பர்	பிறகு இதை அப்யஸிப்பர்கள் ;	இகழ்கை	நல்ல விஷயங்களை இகழ்வதென்பது
மற்றோர்கள்	(கீழ்ச்சொன்ன இரண்டு வகுப்பிலுஞ் சேராத) மற்றையோர்கள்	ஆச்சரியமோ தான்	வியப்போ? [அவர்கட்கு இது இயல்பேயன்றோ]

''ஆச்சரியமோ-தானவர்க்கு'' என்று பிரித்து தானவர்க்கு-ஆஸுரப்ரக்ருதிகளுக்கு என்று பொருளுரைப்பாருமுளர்; ஆயினும் மணவாளமாமுனிகள் இங்ஙனம் விவக்ஷித்து அருளிச் செய்பவரல்லர் என்பர் பெரியோர்.

ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு வாழ்த்துக் கூறுதல்

* ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி* — ஏழ்பாரும்
உய்ய அவர்களுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறைதன்னுடனே சேர்ந்து. (3)

ஆழ்வார்கள் வாழி	பொய்கையாழ்வார் முதலான ஆழ்வார்கள் வாழ்ந்திடுக;	ஏழ் பாரும் உய்ய	பூமண்டலம் முழுதும் உஜ்ஜீவிக்குமாறு
அருளிச் செயல் வாழி	அவர்களருளிய திவ்வியப் பிரபந்தங்கள் வாழ்ந்திடுக;	அவர்கள்	அவ்வாசிரியர்கள்
தாழ்வு ஆதும் இல் குரவர் தாம் வாழி	தாழ்வொன்றுமில்லாத (மிகச்சிறந்த எம்பெருமானார் முதலான) ஆசாரியர்கள் வாழ்க ;	உரைத்தவைகள் தாம் செய்ய மறை தன்னுடனே சேர்ந்துவாழி	அருளிச் செய்த ஸ்ரீஸூக்திகளும் விலக்ஷணமான வேதங்களோடு கூட வாழ்க.

"செய்யமறை தன்னுடனே சேர்ந்து" என்றது வேதங்களும் வாழவேணுமென்று அவற்றுக்குமாக மங்களாசாஸனம் செய்தபடி. ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் வேதமே மூலமானது பற்றி அவற்றுக்கும் மங்களாசாஸனம் ப்ராப்தம். ''செய்யமறை தன்னுடனே சேர்ந்து அவர்களுரைத்தவைகள்'' என்று அந்வயித்து 'வேதங்களுக்குச்சேர ஆசாரியர்கள் அருளிச்செய்தவை'என்று பொருளுரைப்பாருமுளர். (3)

ஆழ்வார்களின் அவதாரக்ரமம் கூறுதல்

பொய்கையார் பூதத்தார் பேயார் * புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன்*—துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன்*
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு. (4)

பொய்கையார்	பொய்கையாழ்வார் முதல்வர்	அன்பர் தாள்தூளி	தொண்டரடிப்பொடியாழ்வார் எட்டாமவர்,
பூதத்தார்	பூதத்தாழ்வார் இரண்டாமவர்;	நல் பாணன்	பரமஸாத்விகரான திருப்பாணாழ்வார் ஒன்பதாமவர்,
பேயார்	பேயாழ்வார் மூன்றுமவர்		
புகழ் மழிசை ஐயன	கீர்த்திவாய்ந்த திருமழிசைப் பிரான் நான்காமவர்	நன் கலியன்	விலக்ஷணரான திருமங்கையாழ்வார் பத்தாமவர்;
அருள் மாறன்	அருள் மிகுந்த நம்மாழ்வார் ஐந்தாமவர்.	ஈது	இந்த வரிசைக்கிரமமானது
சேரலர் கோன்	குலசேகரப் பெருமாள் ஆறுமவர்	இங்கு	இவ்வுலகில்.
துய்ய பட்டநாதன்	பரிசுத்தரான பெரியாழ்வார் ஏழாமவர்;	இவர் தோற்றத்து அடைவு ஆம்	இவ்வாழ்வார்களின் அவதாரக்ரமமாகும்.

இக்காலத்தவர்கள் சிலர் ஆராய்ச்சி செய்வதாகப்புகுந்து தவறுதலான சில நிரூபணங்களைக் காட்டி இந்த அடைவினை மாறுபடுத்தி, பின்னேயுள்ளவர்களை முன்னே தள்ளி முன்னேயுள்ளவர்களைப் பின்னே யிழுத்து மனம்போனவாறாக அவதாரக்ரமங்களைக் கல்பிக்கின்றனர்; அதனால் ஆஸ்திகர்களின் நெஞ்சு கலங்காமைக்காகப் *பொய்யிலாத மணவாள மாமுனிகள் இங்ஙனே அடைவுதன்னை அமைத்தருளினாராயிற்று. (4)

ஆழ்வார்களவதரித்த மாத நக்ஷத்திரங்களைக் கூறுவோமெனல்

அந்தமிழால்நற்கலைகள் ஆய்ந்துரைத்த வாழ்வார்கள்*
இந்தவுலகிலிருள் நீங்க*— வந்துதித்த
மாதங்கள் நாள்கள் தமை மண்ணுலகோர் தாமறிய*
ஈதென்று சொல்லுவோம்யாம். (5)

அம் தமிழால் நல் கலைகள்	அழகிய தமிழ்ப் பாஷையினால் திவ்யப்ரபந்தங்களை	மாதங்கள் நாள்கள் தமை	மாஸங்களையும் நக்ஷத்திரங்களையும்
ஆய்ந்து உரைத்த ஆழ்வார்கள்	ஆராய்ந்தருளிச் செய்த (மேற்கூறிய) ஆழ்வார்கள்.	மண் உலகோர் தாம் அறிய	இந் நிலவுலகத்தவர்கள் நிஷ்கர்ஷமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு
இந்த உலகில் இருள் நீங்க	இவ்விருள்தருமாஞாலத்தில் அகவிருள் தொலைவதற்காக	ஈது என்று	இன்னவையென்று
வந்து உதித்த	வந்து அவதரிக்கப் பெற்ற	யாம் சொல்லுவோம்	இனி நாம் கூறுவோமாக.

இன்ன ஆழ்வார் இன்ன மாதத்தில் இன்ன நக்ஷத்திரத்தில் அவதரித்தாரென்பது அக்காலத்தில் வழங்கி வந்தாலும் பிற்காலத்தில் எக்காரணத்தாலும் பிறழ்வு விளையாமைக்காக அவற்றை ப்ரபந்தீகரித்தருள்கின்றாரென்க. பெரியவாச்சான் பிள்ளையருளிச்செய்த முதல் திருவந்தாதி வியாக்கியானத் தொடக்கத்தில் "இந்த முதலாழ்வார்கள் இன்னவிடத்தில் அவதரித்தார்களென்பது காலப் பழமையாலே நிச்சயிக்கப் போகாது" என்று பொருள்பட ஒரு ஸ்ரீஸூக்தி காண்கிறது. அவ்விடத்தில் அரும்பதவுரைகாரர்கள் இங்கு ஏதோ வாக்கியப் பிறழ்வு உள்ளது என்று எழுதியுள்ளார்கள். பெரியவாச்சான் பிள்ளை அங்ஙனம் அருளிச்செய்தது உண்மையாயிருப்பின் பரம ப்ராமாணிகரான மணவாளமாமுனிகள் இவ்வுபதேச ரத்தினமாலையில் "எண்ணருஞ் சீர்ப்பொய்கை முன்னோரிவ்வுலகில் தோன்றிய வூர் வண்மை மிகு கச்சி மல்லை மாயயிலை" என்று அறுதியிட்டாக அருளிச்செய்ய நேர்ந்திராது. பெரியவாச்சான் பிள்ளை காலத்திற்கு முன்னமே

அவதரித்து அநுஸந்தானத்திலும் நிகழ்ந்து வரும் திருவந்தாதித் தனியன்களிலும் "கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்" என்றும், "கடன் மல்லைப் பூதத்தார்" என்றும் உள்ளதற்கு மாருகப் பெரியவாச்சான் பிள்ளை தாம் அருளிச் செய்யவும் ப்ரஸக்தியில்லை. ஆயினும் வாக்கியப் பிறழ்வு விளைந்திட்டது. இங்ஙனே பிறழ்வு நேராமைக்காகவே மாமுனிகள் ஆழ்வார்களவதரித்த மாஸ நக்ஷத்ர திவ்ய தேசங்களை இப்பிரபந்தத்தில் இட்டருள்கின்ருரென்றுணர்க. (5)

முதலாழ்வார்களின் மாத நக்ஷத்திரங்கள் கூறுதல்

**ஐப்பசியிலோணம் அவிட்டம் சதயமிவை*
ஒப்பிலவா நாள்களுலகத்தீர்! *—எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார்பேயாழ்வார்*
தேசுடனே தோன்றுசிறப் பால். (6)

உலகத்தீர்	உலகத்திலுள்ளவர்களே !	தேசுடனே தோன்று சிறப்பால்	தேஜஸ்ஸுடனே அவதரித்த ஏற்றததிஞல்
எப் புவியும் பேசு புகழ்	உலகமெங்கும் பேசப்படுகின்ற புகழையுடைய	ஒப்பு இல ஆம் நாள்கள்	ஒப்பில்லாதவையான நாட்கள் எவை யென்ருல்,
பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்	பொய்கை பூதம் பேயாழ்வார் மூவரும்	ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயம் இவை	ஐப்பசி மாதத்தில் திருவோணம் அவிட்டம் சதயமென்னும் இத் திருநாட்களாம்.

***—இவ்வாழ்வார்கள் மூவரும் விபவத்தில் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதவராய், ஓடித்திரியும் யோகிகளாயிருந்ததனுலும். அர்ச்சையிலும் அப்படியே கூடியே வாழ்வதனுலும் இம்மூவர்க்கும் சேர்த்தே பாசுர மிட்டருளிஞராயிற்று. ஐப்பசி, ஐப்பிசி என இரண்டு முண்டென்பர். ஓணம்—'ச்ரோண' என்னும் வடசொற்சிதைவு. 'தேசுடனே' என்றவிடத்து அயோநிஜத்வப்ரயுக்தமான தேஜஸ்ஸு விவக்ஷிதம். "சிறப்பால் ஒப்பிலவாம்" என்று அந்வயிக்கும். (6)

பொய்கையார் முதலான மூவர்க்கு முதலாழ்வார்களென்கிற திருநாமம்
நிகழ்ந்தமைக்குக் காரணங் கூறுதல்.

மற்றுள்ளவாழ்வார்களுக்கு முன்னேவந்துதித்து*
நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த*—பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு*
நின்றதுலகத்தே நிகழ்ந்து. (7)

இவர்க்கு	பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற இம் மூவர்க்கும்	மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னேவந்து உதித்து	(திருமழிசைப்பிரான் முதலான) மற்ற ஆழ்வார்களுக்கு முன்னம் வந்து தோன்றி
முதலாழ்வார்கள் என்னும் பெயர்	முதலாழ்வார்களென்கிற திருநாமம்	நல் தமிழால்	விலக்ஷணமான தமிழிஞல்
உலகத்தே நிகழ்ந்து நின்றது	உலகத்தில் ப்ரஸித்தமானது (எதனுலே யென்னில்)	நூல் செய்து	திருவந்தாதிகளென்கிற திவ்வியப் பிரபந்தங்களையருளிச்செய்து
(இவ்வாழ்வார்கள் மூவரும்)		நாட்டை உய்த்த பெற்றிமையோர் என்று	இவ்வுலகை உஜ்ஜீவிப்பித்த பெரியோர் என்கிற காரணத்திஞல்.

***பொய்கையார் முதலான மூவர்க்கும் முதலாழ்வார்களென்று ப்ரஸித்தமாகத் திருநாமம் வழங்கி வருகின்றது. இத்திருநாமத்திற்கு இன்னது காரணமென்று நிரூபிக்கிறது இப்பாசுரம். மற்றுமுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்த படியினுல் முதல்வராயினர்; நற்றமிழால் நூல் செய்ததனுல் ஆழ்வார்களாயினர் என்றதாயிற்று. பெற்றிமை—பெருமை. என்று —என்ற காரணத்திஞல் என்றபடி. 'பெற்றிமையோ ரென்றும்'' என்கிற பாடம் மறுக்கவும் மறக்கவும் தக்கது 7

திருமங்கையாழ்வாருடைய அவதார நாள் கூறுதல்

பேதை நெஞ்சே! இன்றைப் பெருமை யறிந்திலையோ!*
ஏதுபெருமை யின்றைக் கென்றென்னில்! * — ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ்மங்கையர்கோன் மாநிலத்தில்வந்துதித்த*
கார்த்திகையில் கார்த்திகைநாள் காண். 8

பேதை நெஞ்சே	அறிவில்லாத மனமே?
இன்றை பெருமை அறிந்திலையோ	இன்றைக்குள்ள பெருமையை நீ அறிந்து கொள்ள வில்லையோ?
இன்றைக்கு என்று	இன்றைக்கு அஸாதாரணமாக
ஏது பெருமை என்னில்	என்ன பெருமை யுள்ளது என்கிருயோ? (கேள்)
ஓதுகின்றேன்	சொல்லுகின்றேன்;
வாய்த்த புகழ்	பொருந்திய புகழை யுடையரான
மங்கையர் கோன்	திருமங்கையாழ்வார்
மா நிலத்தில்	விசாலமான இவ்வுலகில்
வந்து உதித்த	வந்து தோன்றப்பெற்ற
கார்த்திகையில் கார்த்திகை நாள் காண்	கார்த்திகை மாதத்து க்ருத்திகா நக்ஷத்ர மன்றோ இன்று.

*** அந்தந்த ஆழ்வார்களின் திருநக்ஷத்திர தினங்களில் கோயில்களிலும் க்ருஹங்களிலும் நாள்பாட்டென்று ஸேவிப்பதற்கு உதவ வேணுமென்று சிஷ்யர்களின் வேண்டுகோளினுல் இப்பிரபந்தம் அருளிச் செய்ததனுல் அதற்குத் தகுதியாகவே இந்த நாட்பாட்டுக்களில் பெரும்பாலும் 'இன்று' என்று அமைக்கப்பட்டது. அந்த அவதார நன்னுளை நோக்கிய நிர்த்தேசம் இது. இரண்டாமடியில், ''இன்றைக் கென்னென்னில்'' என்று சில பிரதிகளிற் பாடம் கண்டாலும் அதில் அர்த்தம் பொருந்தாது. ஏது என்பதும் என் என்பதும் பர்யாயமாதலால் புநருக்தமாகும்; ஆகவே ''இன்றைக்கென்றென்னில்'' என்பதே பாடம்.''அதற்கென்று என்ன ஏற்றம்'' என்று உலக வழக்குள்ளதாதல் அறிக. 8

*மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த பெருமை

****மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்***
ஆறங்கங்கூற அவதரித்த* — வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார்*
வாய்த்தமலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து. 9

நெஞ்சே	ஓ மனமே!
மாறன் பணித்த	நம்மாழ்வாரருளிச் செய்த
தமிழ் மறைக்கு	த்ராவிட வேதமான 'திருவிருத்தம் முதலிய நான்கு பிரபந்தங்களுக்கும்
ஆறு அங்கம் கூற	ஆறு அங்கங்களாக ஆறு பிரபந்தங்களை யருளிச் செய்யும் பொருட்டு
மங்கையர் கோன் அவதரித்த	திருமங்கை யாழ்வார் அவதரிக்கப்பெற்ற
வீறு உடைய	பெருமை வாய்ந்த

கார்த்திகையில் கார்த்திகை நாள் இன்று என்று	கார்த்திகை மாதத்து க்ருத்திகை யன்றோ இன்று என்று கொண்டு	வாய்த்த மலர் தாள்கள்	(நமக்கு) ப்ராப்தமான பாதாரவிந்தங்களை
காதலிப்பார்	குதூஹலிப்பவர்களினுடைய	வாழ்த்து	தோத்திரஞ் செய்வாயாக.

* * * ஆசார்யஹ்ருதயத்தில் "வேத சதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினுலும் போலே இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றை யெண்மர் நன்மாலைகளும்" என்றுள்ளது வடமொழி வேதத்திற்கு அங்கங்களும் உபாங்கங்களும் இருப்பது போலே தமிழ் வேதத்திற்கும் அவை யுண்டு; ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களுக்கும் சீக்ஷா வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் ஜ்யோதிஷம் என்கிற ஆறு அங்கங்களும், மீமாம்ஸா ந்யாய புராண தர்ம சாஸ்த்ரங்கள் முதலிய உபாங்கங்கள் எட்டும் ஆகப் பதினுலும் போலே, திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழியாகிற இந்தத் தமிழ்மறை நான்கிற்கும் திருமங்கையாழ்வாருடைய திவ்யப் பிரபந்தங்களாறும் மற்றையாழ்வார்கள் எண்மருடைய விலக்ஷண ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாமென்பது தாற்பரியம். திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்களும் ஆறு அங்கமாகக் கொள்ளப் பட்டன. நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தைப் பின்பற்றியே இவர் அருளிச்செய்திருப்பது கொண்டு இங்ஙனே கூறலாயிற்றென்க. 9

திருப்பாணாழ்வார் திருநாள் கூறுதல்

கார்த்திகையுரோகிணிநாள் காண்மினின்று காசினியீர்*
வாய்த்த புகழ்ப்பாணர் வந்துதிப்பால்*— ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான் கற்றதற்பின்*
நன்குடனே கொண்டாடும் நாள். 10

காசினியீர்	உலகத்தவர்களே!	ஆத்தியர்கள்	ஆஸ்திகர்கள்
இன்று	இந்நாள்	அன்புடனே தான்	பக்தியோடு
கார்த்திகை உரோகிணி நாள் காண்மின்	கார்த்திகை மாதத்து ரோஹினி நக்ஷத்திரமாகும்;	அமலனாதி பிரான் கற்ற தன்பின்	அமலனாதி பிரானென்கிறபிரபந்தம் (இவரருளால்) கற்கப்பெற்றோமென்று மகிழ்வது பற்றியும்
வாய்த்த புகழ்	பொருந்திய புகழை யுடையரான		
பாணர்	திருப்பாணாழ்வார்	நன்குடனே	நலமாக
வந்து உதிப்பால்	வந்து தோன்றினபடியால்	கொண்டாடும் நாள்	கொண்டாடப்பெறும் நாளாகுமிது.

* * * தமிழில் ரகரமுதலதான சொல் வரத்தகாதாதலால் "கார்த்திகையில் ரோகிணி நாள்" என்பது சுத்த பாடமன்று; "கார்த்கையில் உரோகிணி நாள்" என்னில் வெண்டளை பிறழுமாதலால் அதுவும் பாடமன்று; "கார்த்திகையுரோகிணி நாள்" என்பதுவே சுத்த பாடம். "புதியன புகுதலும் வழுவல" என்றநன்னூல் சூத்திரத்தைக் கொண்டு ரகர முதலதான சொற் பிரயோகமும் சிறுபான்மை வழுவற்ற தென்பாருமுளர். அறியவேண்டுமர்த்தங்களை யெல்லாம அழகாக அமைத்து பத்தே பாசுரமாகச் சுருங்கவருளிச் செய்தவர் இவ்வாழ்வாரே யாதலால் "அமலனாதிபிரான் கற்றதற்பின்" என்று சிறப்பித்தெடுத்துக் கூறினரென்க. நன்கு — நன்மை, 10

பத்தே பாசுரமாகச் சுருங்கவருளிச் செய்தவர். இவ்வாழ்வாரே யாதலால் "அமல னாதிபிரான் கற்றதற்பின்" என்று சிறப்பித்தெடுத்துக் கூறினரென்க. நன்கு—நன்மை. (10)

தொண்டரடிப்பொடியாழ்வார் திருநாள் கூறுதல்

மன்னியசீர்மார்கழியில் கேட்டையின்றுமாநிலத்தீர்!
என்னிதனுக்கேற்றமெனிலுரைக்கேன்*—துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால்*
நான்மறையோர் கொண்டாடும்நாள். (11)

மா நிலத்தீர்	பரந்தவுலகத்தி லுள்ளவர்களே:	துன்னு புகழ்	நிரம்பிய புகழை யுடையராய்
இன்று	இன்றைத்தினம்	மா மறையோன்	பரம வைதிகரான
சீர் மன்னிய	சிறப்பு பொருந்திய	தொண்டரடிப் பொடி ஆழ்வார்	தொண்டரடிப்பொடி யாழ்வாருடைய
மார்கழியில் கேட்டை	மார்கழி மாதத்துக் கேட்டையாகும்;	பிறப்பால்	அவதாரம் காரணமாக
இதனுக்கு	இந்நாளுக்கு	நால் மறையோர்	வைதிகோத்தமர்கள்
ஏற்றம் என் எனில்	என்ன ஏற்றமென்றால்	கொண்டாடும் நாள்	ஆதரிக்கும் திருநாளாகு மிது.
உரைக்கேன்	சொல்லுகின்றேன்; (கேண்மின்;)		

திருமழிசைப்பிரான் திருநாள் கூறுதல்

தையில்மகமின்று தாரணியீர்! ஏற்றம்* இந்தத்
தையில்மகத்துக்குச் சாற்றுகின்றேன்*—துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாளென்று*
நற்றவர்கள் கொண்டாடும்நாள். (12)

தாரணியீர்	நிலவுலகத்தவர்களே!	துய்ய மதி பெற்ற	பரிசுத்தமான மதியைப் பெற்ற
இன்று	இந்நாள்	மழிசை பிரான்	திருமழிசையாழ்வார்
தையில் மகம்	தைமாதத்து மக நக்ஷத்திரமாகும்;	பிறந்த நாள் என்று	திருவவதரித்த திருநாளென்று
இந்த தையில் மகத்துக்கு ஏற்றம் சாற்றுகின்றேன்	இந்தத் தையில் மகத்திற்குண்டான பெருமையைச் சொல்லுகின்றேன்; (கேண்மின்;)	நல் தவர்கள்	மஹாதபஸ்விகள்
		கொண்டாடும் நாள்	கொண்டாடப்பெற்ற நாளாமிது.

***—இவ்வாழ்வார் பேயாழ்வாரை யடிபணிந்து திருந்தினவராதலால் அது தோன்றத் "துய்யமதி பெற்ற" என்றருளிச் செய்தார். மக நக்ஷத்திரத்தைச் சுற்றி ஸப்தர்ஷிகள் வர்த்திப்பதாகச் சோதிடர்கள் கூறுவார்கள்; அகற்கேற்ப "நல்தவர்கள் கொண்டாடும் நாள்" என்றருளிச்செய்தார் போலும். தரணி யென்னும் வடசொல் தாரணியென்று நீட்டல் பெற்றது. (12)

குலசேகராழ்வார் திருநாள் கூறுதல்

மாசிப்புனர்பூசம் காண்மினின்று மண்ணுலகீர்*
தேசித்திவசத்துக்கேதென்னில்—*பேசுகின்றேன்
கொல்லிநகர்க்கோன் குலசேகரன் பிறப்பால்*
நல்லவர்கள் கொண்டாடும்நாள். (13)

மண் உலகீர்	பூமண்டலத்திலுள்ளவர்களே	பேசுகின்றேன்	-சொல்லுகிறேன், (கேண்மின்)
இன்று	இன்றைத்தினம்	கொல்லி நகர் கோன்	கொல்லியென்னும் நகர்க்குத் தலைவரான
மாசி புனர்பூசம் காண்மின்	மாசி மாதத்துப் புனர்வஸு நக்ஷத்திரமன்றோ;	குலசேகரன்	குலசேகராழ்வாருடைய
இத் திவசத்துக்கு	-இந்நாளுக்கு	பிறப்பால்	திருவவதாரம் காரணமாக
தேசு ஏது என்னில்	என்ன மதிப்பு என்றால்	நல்லவர்கள்	ஸத்துக்கள்
		கொண்டாடும் நாள்	சிலாகிக்கும் நாளாமிது.

—தேசு—தேஜஸ் என்னும் வடசொல்விகாரம். திவசம்—திவஸமென்னும் வடசொல் விகாரம். (13)

நம்மாழ்வார் திருவவதார நாள் கூறுதல்

ஏரார்வைகாசி விசாகத்தி னேற்றத்தை
பாரோரறியப் பகர்கின்றேன்—சீராரும்
வேதம்தமிழ்செய்த மெய்யனெழில்குருகை
நாதனவதரித்தநாள். (14)

ஏர் ஆர்	சீர்மை மிகுந்த	சீர் ஆகும் வேதம்	சீர்மை மிகுந்த வடமொழி வேதத்தை
வைகாசி விசாகத்தின்	வைகாசி மாதத்து விசாக நக்ஷத்திரத்திலுடைய	தமிழ் செய்த	த்ராவிடமாகச் செய்தருளின
ஏற்றத்தை	சிறப்பை	மெய்யன்	யதார்த்தவாதியாய்
பாரோர்	உலகத்தவர்கள்	எழில் குருகை நாதன்	அழகிய திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வார்
அறிய	தெரிந்து கொள்ளுமாறு	அவதரித்த நாள்	தோன்றிய திருநாளன்றோ இது.
கர்கின்றேன்	சொல்லுகிறேன்;		

நம்மாழ்வாரும் அவர்திருநாளும் அவர்திருவாக்கும் அவர் திருநகரியும் ஒப்பற்றவை யெனல்

உண்டோவைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்
உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்?—உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு? தென்குருகைக்குண்டோ
ஒருபார்தனிலொக்குமூர். (15)

வைகாசி விசாகத்துக்கு ஒப்பு ஒரு நாள் உண்டோ	வைகாசி விசாகத்தோடொத்ததொரு திருநாள் உண்டோ? (இல்லை)	திருவாய் மொழிக்கு ஒப்பு உண்டோ	திருவாய்மொழியோடொத்த திவ்யப்பிரபந்தமுண்டோ? (இல்லை;)
		பார் தனில்	இப் பூமண்டலத்திற்குள்ளே
சடகோபர்க்கு ஒப்பு ஒருவர் உண்டோ	நம்மாழ்வாரை யொத்த ஓராழ்வாருண்டோ? (இலர்)	தென் குருகைக்கு ஒக்கும் ஒரு ஊர் உண்டோ	திருநகரியோடொத்த தொரு திவ்யதேசமுண்டோ? (இல்லை).

பெரியாழ்வார் திருநாள் கூறுதல்

இன்றைப் பெருமையறிந்திலையோ ஏழைநெஞ்சே!
இன்றைக்கென்னேற்றமெனிலுரைக்கேன்—நன்றிபுனை
பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த
நல்லானியில் சோதிநாள். (16)

ஏழை நெஞ்சே	அறிவிலியான மனமே!
இன்றை பெருமை அறிந்திலையோ	இன்றைக்குண்டான பெருமையை அறிய மாட்டாயோ?
இன்றைக்கு ஏற்றம் என் எனில்	இந்த நாளுக்கு என்ன பெருமை யென்னில்.
உரைக்கேன்	சொல்லுகிறேன் கேள்;
நன்றி புனை	நன்மை வாய்ந்த
பல்லாண்டு பாடிய	திருப்பல்லாண்டை யருளிச் செய்த
நம் பட்டர் பிரான் வந்து உதித்த	நம் பெரியாழ்வார் வந்து தோன்றிய
ஆனியில் சோதி நல் நாள்	ஆனி மாதத்து ஸ்வாதி யென்கிற நல்ல நாள் காண்.

மா நிலத்தின் முன் நம்பெரியாழ்வார் வந்துதித்த ■
ஆனிதன்னில் சோதியென்றுலா தரிக்கும் ■—ஞானியர்க்கு
ஒப்போரிலை யிவ்வுலகுதனிலென்று நெஞ்சே ■
எப்போதும் சிந்தித்திரு. (17)

ஓ நெஞ்சே	ஓ மனமே!
முன்	முற்காலத்தில்
நம் பெரியாழ்வார்	நமக்குத் தலைவரான பெரியாழவார்
மா நிலத்தில் வந்து உதித்த	இவ்வுலகில் வந்து தோன்றப்பெற்ற
ஆனி தன்னில் சோதி என்றால்	ஆனி மாதத்து ஸ்வாதீ நக்ஷத்ர மென்றபோதே
ஆதரிக்கும்	கொண்டாடுகின்ற
ஞானியர்க்கு	ஞானிகளான பெரியார்களுக்கு
ஒப்போர் இவ் உலகு தனில் இல்லை என்று	ஸமமானவர்கள் இவ்வுலகில் யாருமிலரென்று
எப்போதும் சிந்தித்து இரு	ஸதாகாலமும் அநுஸந்திப்பாயாக.

பெரியாழ்வாரென்ற திருநாமத்திற்குக் காரணம் கூறுதல்

மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள் ■
தங்க ளார்வத்தளவு தானன்றி—■ பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் ■
பெரியாழ்வா ரென்னும் பெயர். (18)

வில்லிபுத்தூர் பட்டர் பிரான்	ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவவதரித்த விட்டுசித்தர்
பெரியாழ்வார் என்னும் பெயர்	பெரியாழ்வா ரென்கிற திருநாமத்தை
பெற்றான்	(பிருதாகப்) பெற்றார்; (இது எதனாலேயென்னில்.)
மங்கள ஆசாசனத்தில்	எம்பெருமானுக்குக் காப்பிடும் விஷயத்தில்
மற்றுள்ள ஆழ்வார்கள் தங்கள்	மற்ற ஆழ்வார்களுடைய
ஆர்வத்து அளவு தான் அன்றி	அபிநிவேசத்திற் காட்டிலும் அதிகமாக
பொங்கும் பரிவாலே	விஞ்சி யெழுந்த பரிவு காரணமாக.

* * *—பட்டர்பிரானுக்குப் பெரியாழ்வாரென்கிற விருது எதனால் விளைந்தது? இவர் மற்ற ஆழ்வார்களிற் காட்டில் வயதில் மூத்தவருமல்லர்; பொய்கையார் முதலாகக் குலசேகரரீறாகவுள்ள ஆழ்வார்கள் இவரைவிட மூத்தவர்கள்; பெரிய பிரபந்தங்கள் இட்டருளினவ ரென்று சொல்லலாமோ வென்னில், நம்மாழ்வாரை விட இவர் அதிகப்பிரபந்தங்களிட்டவரல்லர்; ஆகவே எதனால் இவரைப் பெரியாழ்வாரென்றது? என்னில்; எம்பெருமானுக்கு என்வருகிறதோ வென்று வயிறு பிடித்து மங்களாசாஸநம் செய்வதில் இவருடைய காதல் பெரிதானது பற்றியே இவரைப் பெரியாழ்வாரென்றனர் என்றதாயிற்று. மற்ற ஆழ்வார்

களுக்கு மங்களாசாஸநருசியே இல்லையென்று சொல்லவொண்ணாது; எல்லார்க்கும் அது உண்டு; ஆனாலும் அது இவர்க்குக் கனத்திருந்தது என்னுமிடம் முன்னடிகளில் விளங்கக் காண்க. (18)

திருப்பல்லாண்டின் முதன்மைக்குக் காரணம் கூறுதல்

கோதிலவாமாழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம் *
ஆதி திருப்பல்லாண்டானதுவும்—* வேதத்துக்
கோமென்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம்சுருக்காய்*
தான்மங்கலமாதலால். (19)

கோது இல ஆம்	குற்றமற்றவையான	வேதத்துக்கு ஓம் என்னுமது போல்	ஸகல வேதங்களுக்கும் ப்ரணவம்போலே
ஆழ்வார்கள் கூறு கலைக்கு எல்லாம்	ஆழ்வார்களருளிய திவ்யப்பிரபந்தங்களுக்கெல்லாம்	உள்ளதுக்கு எல்லாம் சுருக்கு ஆய்	உள்ள அர்த்தங்களுக்கெல்லாம் ஸங்க்ரஹமாய்க் கொண்டு
திருப்பல்லாண்டு ஆதி ஆனதுவும்	திருப்பல்லாண்டே முதற் பிரபந்தமாகப் பெற்றதும் (எதனாலே என்னில்)	மங்கலம் ஆதலால் தான்	மங்கள ரூபமாயுமிருப்பது பற்றியே.

* * *—கோதில ஆம்—அஸாரமென்று கழிக்கத் தக்க அம்சங்களொன்றுமின்றிக்கே முழுவதும் ஸாரமேயான என்றபடி. வேதங்களுக்குப்ரணவம் முதன்மையானது போல, திவ்வியப்பிரபந்தங்களுக்கெல்லாம் திருப்பல்லாண்டு முதன்மையாயிற்று. ப்ரணவமானது ஸகல வேதார்த்த ஸாரநிதியாகவும் மங்கலச்சொல்லாகவுமிருக்கும்;அதுபோலவே திருப்பல்லாண்டும் ஸகல திவ்யப்ரபந்த ஸாரார்த்த நிதியாகவும் மங்கலமயமாகவுமிருக்குமென்க.

ஸர்வாதிகாரமான இப்பிரபந்தத்தில் ஓமென்று பிரயோகித்ததனால் ப்ரணவம் ஸர்வாதிகார மென்று ஆசிரியரது திருவுள்ளமாக உணரத்தகும். ... (19)

திருப்பல்லாண்டுக்கும் பெரியாழ்வார்க்கும் ஒப்பிலாமை கூறுதல்

உண்டோதிருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்கலைதான்*
உண்டோபெரியாழ்வார்க் கொப்பொருவர்—* தண்டமிழ்நூல்
செய்தருளுமாழ்வார்கள் தம்மில் அவர்செய்கலையில்*
பைதல்நெஞ்சே நீயுணர்ந்துபார். (20)

தண்தமிழ் நூல் செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில்	திவ்யப்பிரபந்தங்களருளிச் செய்த ஆழ்வார்களுக்குள்ளே	திருப்பல்லாண்டுக்கு ஒப்பது ஓர் கலைதான் உண்டோ	திருப்பல்லாண்டோடொத்ததொரு பிரபந்தந்தானுண்டோ ? (இல்லை.)
பெரியாழ்வார்க்கு ஒப்பு ஒருவர் உண்டோ	பெரியாழ்வாரோடொத்தவொருவர் உளரோ? (இல்லை);	பைதல் நெஞ்சே	பேதை மனமே !
அவர் செய்கலையில்	அவ்வாழ்வார்களருளிச் செய்த நூல்களுள்	நீ உணர்ந்து பார்	இதை நீ விமர்சித்து அறிவாயாக.

* * *—இப்பாட்டின் மூன்றாமடியில் "அவர் செய் கலையை" என்று பலரும் ஓதிவரும் பாடம் மறுக்கவும் மறக்கவும் தக்கது. அது அநந்விதம். ... (20)

ஆண்டாள் மதுரகவிகள் உடையவர் இம்மூவருடைய அவதார நாட்களை இனிக் கூறுவேனெனல்

ஆழ்வார் திருமகளாராண்டாள் * மதுரகவி
யாழ்வாரெதிராசராமிவர்கள்—*வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள்தம்மின் வாசியையும்*
இந்தவுலகோர்க்குரைப்போம் யாம். (21)

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள்	(கீழ்ச்சொன்ன) ஆழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளென்ன	வந்து உதித்த	இங்கு வந்து தோன்றப் பெற்ற
மதுரகவியாழ்வார்	மதுரகவியாழ்வாரென்ன	மாதங்கள் நாள்கள் தம்மின் வாசியையும்	மாஸ நக்ஷத்திரங்களின் வைலக்ஷண்யத்தையும்
எதிராசர் ஆம் இவர்கள்	எம்பெருமானாரென்ன ஆகிய இம் மூவரும்	இந்த உலகோர்க்கு	இவ்வுலகத்தவர்களுக்கு
வாழ்வு ஆக	லோகோஜ்ஜீவனார்த்தமாக	யாம் உரைப்போம்	இனி யாம் எடுத்துரைப்போம்;

* * *—பொய்கையார் முதலானவர்கள் எம்பெருமானது திருக்குணக்கடலில் ஆழ்ந்ததனால் ஆழ்வார்களென்று பெயர்பெற்றதுபோல, மதுரகவிகள் நம்மாழ்வாருடைய குணக்கடலில் ஆழ்ந்ததனால் இவரும் ஆழ்வாரெனப்பெற்றாரென்க. ஆண்டாளும் மதுரகவிகளும் திவ்வியப் பிரபந்தங்களருளிச் செய்தமை பற்றி இவர்களுக்கும் திருநாள்பாட்டு இட்டருளவேண்டியதாயிற்று. எம்பெருமானார் "தமிழ் மறைகளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்றபடி அருளிச்செயல்களை வளர்த்த தாயாதலாலும் அவர் விஷயமான நூற்றந்தாதிப்பிரபந்தம் அவதரித்திருத்தலாலும் அவர்க்கும் திருநாள் பாட்டு இட்டருள வேண்டியதாயிற்று. திருவரங்கத்தமுதனார் பிரபந்தம் பணித்தவராயிருந்தாலும் அவர்க்கு அர்ச்சைத் திருக்கோலம் அமைந்திலதாதலால் நாள்பாட்டு ஸேவிக்கப்ரஸக்தியில்லையென்று விடப்பட்டது. ஆழ்வார்திருமகளார் = ஆழ்வார்களெல்லார்க்கும் திருமகளான என்னவுமாம்.

ஆண்டாளுடைய திருநாள் கூறுதல்

இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
வன்றோ இங்காண்டாளவதரித்தாள்—* குன்றாத
வாழ்வான வைகுந்தவான்போகந் தன்னையிகழ்ந்து*
ஆழ்வார் திருமகளாராய். (22)

இன்றோ திரு ஆடிப்பூரம்	திருவாடிப்பூரமென்னும் திருநாள் இன்றைக்கன்றோ;	இங்கு	இவ் விருள் தருமாஞாலத்திலே
ஆண்டாள்	சூடிக்கொடுத்த நாச்சியார்	ஆழ்வார் திரு மகளார் ஆய்	பெரியாழ்வாரது புதல்வியாய்
குன்றாத வாழ்வு ஆன	நித்ய ஸ்ரீயான		
வைகுந்தம் வான் போகம் தன்னை இகழ்ந்து	ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள திவ்ய போகத்தையும் விட்டு	எமக்காக அன்றோ அவதரித்தாள்	நம் போல்வாருடைய உஜ்ஜீவனத்திற்காகவன்றோ திருவவதாரம் செய்தாள்?

***—எம்பெருமான் இந்நிலத்தில் திருவவதரித்து கீதோபநிஷத்தைத் தன் முகத்தாலே வெளியிட்டருளி உபகரித்தான்; அது வடமொழியாயும் கஹனமாயுமிருப்பதனால் அனைவர்க்கும் ஒருங்கே பயன்படவில்லை; இக்குறை தீரப் பெரிய பிராட்டியார் தாம் வந்து திருவவதரித்து "வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" என்று புகழத்தக்கதான திவ்வியப் பிரபந்தத்தை எளிய தமிழ் நடையில் உபகரித்து அஸ்மதாதிகளை உய்வித்தாள் என்பது இங்கு உணரத்தக்கது. (22)

ஆண்டாளுக்கும் அவளுடைய நன்னாளுக்கும் ஒப்பில்லையெனல்

பெரியாழ்வார்பெண்பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த*
திருவாடிப் பூரத்தின் சீர்மை—*ஒருநாளைக்
குண்டோ மனமேயுணர்ந்துபார்* ஆண்டாளுக்
குண்டாகி லொப்பிதற்குமுண்டு. (23)

ஆண்டாள்	சூடிக்கொடுத்த நாச்சியார்	ஒருநாளைக்கு உண்டோ	மற்றொரு நாளைக்கு உளதோ?
பெரியாழ்வார் பெண்பிள்ளை ஆய்	பெரியாழ்வார் திருமகளாராக	மனமே உணர்ந்துபார்	நெஞ்சே! இதை ஆராய்ந்து காண்;
பிறந்த	அவதரிக்கப் பெற்ற	ஆண்டாளுக்கு ஒப்பு உண்டாகில் இதற்கும் ஒப்பு உண்டு	ஆண்டாளோடொத்த வ்யக்தி யுண்டாகில் இந்நாளோடொத்த நாளும் வேறொன்று இருக்கும்.
திரு ஆடி பூரத்தின் சீர்மை	திருவாடிப்பூர நன்னாளின் பெருமை		

***—முதலடியில் "பெண்பிள்ளை" என்கிற சொல் 'பெண்பிளை' எனத் தொக்கியிருப்பதாகக் கொள்ளவேணும்; இல்லையேல் வெண்டளை பிறழும். (24)

ஆண்டாள் பெருமை கூறுதல்

அஞ்சுகுடிக்கொருசந்ததியாய்* ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—*பிஞ்சாய்ப்
பழுத்தாளையாண்டாளைப் பத்தியுடன் நாளும்*
வழுத்தாய் மனமே மகிழ்ந்து. (24)

அஞ்சு குடிக்கு	(1) ஐந்து குடும்பங்களுக்கு, (2) எம்பெருமானுக்கு என்ன தீங்கு வருகிறதோவென்று அஞ்சுகின்ற (ஆழ்வார்கள் பதின்மரின்) குடிக்கு	விஞ்சி நிற்கும் தன்மையள் ஆய்	அதிசயித்திருக்கும் இயல்வினளாய்
		பிஞ்சு ஆய் பழுத்தாளை	இளம் பிராயத்திலேயே அன்புமுதிரப்பெற்ற
		ஆண்டாளை	சூடிக்கொடுத்த நாச்சியாரை
		மனமே	நெஞ்சே!
ஒரு சந்ததி ஆய்	ஒரு புதல்வியாய்த் தோன்றி	மகிழ்ந்து	உகந்து
		பத்தி உடன்	பக்தியோடு
ஆழ்வார்கள் தம் செயலை	ஆழ்வார்களின் படியை	நாளும் வழுத்தாய்	எப்போதும் துதிப்பாயாக.

***—இப்பாட்டில் முதலடி சிலேடையாக அமைந்தது. "அஞ்சு குடிக்கு" என்றது ஐந்து குடும்பங்களுக்கு என்றும். அஞ்சுகின்ற குடும்பத்திற்கு என்றும்

பொருள்படும்; ஐந்து குடும்பங்கள் எவையென்னில், ஆண்டாளுக்கு முன்னே அவதரித்த ஏழு ஆழ்வார்களின் குடி ஐந்தாகும்; எங்ஙனேயென்னில்—முதலாழ்வார்கள் மூவரும் சேர்ந்து ஒரு குடி [அயோநிஜ குடும்பம்] என்க; இரண்டாவது திருமழிசையாழ்வாரது குடி; மூன்றாவது நம்மாழ்வாரது குடி; நான்காவது குலசேகராழ்வாரது குடி; ஐந்தாவது பெரியாழ்வாரது குடி. ஆக அஞ்சு குடிக்குமாக ஆண்டாளொருத்தியே ஸந்தானமாகத் தோன்றினவென்கை

ஆண்டாளுக்குப் பிறகு அவதரித்தருளின தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் கலியன் ஆகிய மூவர்க்குங்கூட இவளே சந்ததி என்கிற பொருளும் விளங்கக் குறையில்லை. எங்ஙனேயென்னில் அஞ்சுகுடியென்பதற்கு அஞ்சுகின்ற குடியென்றும் பொருள் படுதலால் ஆழ்வார்கள் பதின்மரையும் இச்சொல்லால் ஸங்க்ரஹிக்கக் குறையில்லை. எம்பெருமானுக்கு என்ன அபாயம் நேருமோ! என்று அஞ்சுகை பதின்மர்க்கும் உளதாதலால் அப்பதின்மரையும் அஞ்சு குடியென்னத் தட்டில்லை; ஆகவே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் ஆண்டாளொருத்தியே புதல்வியாகத் தோன்றியவள் என்கிற பரமார்த்தமும் தெரிவிக்கப்பட்டதாயிற்று. *ப்ரஜயா பித்ருப்ய:* என்று வேதத்தில் ஓதப்பட்டதொரு கடனும் ஆழ்வார்கட்கு ஆண்டாளால் தீர்ந்ததென்கை.

ஆழ்வார்கள் இயற்கையிலே ஆண்களாய்ப் பிறந்து பெண்மையை ஏறிட்டுக்கொண்டு பேசினார்கள்; ஆண்டாள் அப்படியல்லாமல் இயற்கையிலேயே பெண்ணாய்ப் பிறந்து புருஷோத்தமனை யநுபவிக்கும் திறத்தில் சிறந்த வுரிமையுடையளானதுபற்றி "ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்குந் தன்மையளாய்" என்றருளிச்செய்யலாயிற்று. இவள் பருவம் நிரம்புவதற்கு முன்னமே *வானிடை வாழுமவ்வானவர்க்கு* என்பது முதலான பாசுரங்களில் பணித்தபடி பகவத் விஷயத்தில் அன்பு அதிகரிக்கப்பெற்றவளாதலால் பிஞ்சாய்ப் பழுத்தாள் எனப்பட்டாள். 'அவரைப் பிராயந்தொடங்கி" என்றதும் காண்க. வழுத்துதல் துதித்தல். (24)

மதுரகவியாழ்வார் திருநாள் கூறுதல்

ஏரார் மதுரகவி யிவ்வுலகில் வந்துதித்த*
சீராரும் சித்திரையில் சித்திரைநாள்—*பாருலகில்
மற்றுள்ளவாழ்வார்கள் வந்துதித்த நாள்களினும்*
உற்றதெமக் கென்றுநெஞ்சே யோர். (25)

ஏர் ஆர் மதுரகவி	சிறப்புப் பொருந்திய மதுரகவிகள்
இ உலகில வந்து உதித்த	இந் நிலததில் வந்து தோன்றப் பெற்ற
சீர் ஆரும் சித்திரையில் சித்திரை நாள்	சிறப்புடைய சித்திரை மாதத்துச் சித்திரை நக்ஷத்திரமானது
(எப்படிப்பட்ட தென்றால்)	
பார் உலகில்	பூலோகத்தில்
மற்றுள்ள ஆழ்வார்கள்	பொய்கையார் முதலான மற்ற ஆழ்வார்கள்
வந்து உதித்த நாள்களிலும்	வந்து தோன்றிய நாள்களிற் காட்டிலும்
எமக்கு உற்றது	நமக்கு மிகவும் உபாதேயமானது
என்று நெஞ்சே ஓர்	என்று மனமே பிரதிபத்தி பண்ணுவாயாக.

ஸ்ரீவசன பூஷணத்தில் நான்காம் பிரகரணத்தில் "உண்டபோதொரு வார்த்தையும் உண்ணாதபோதொருவார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே; அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடுவது; அவர்களைச் சிரித்திருப்பாரொருவருண்டிறே, அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக்கடவோம்" என்று மதுரகவிகளுக்கு ஏற்றம் சொல்லப்பட்டிருப்பதால் அதை நோக்கி இப்பாசுரம் அவதரித்ததென்க. 'ஆசார்யனே உபாயம்' என்கிற அர்த்தம் இவருடைய திவ்வியப்பிரபந்தமான கண்ணிநுண்சிறுத்தாம்பினாலேயே அறுதியிடப்படுமாதலால் இவ்வேற்றம் தகும். (25)

மதுரகவிகளின் பிரபந்தம் நாலாயிரத்தினுள் சேர்ந்தமை கூறுதல்

வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம்போல்
சீர்த்தமதுரகவி செய்கலையை—ஆர்ந்தபுகழ்
ஆரியர்கள்தாங்கள் அருளிச்செயல்நடுவே
சேர்வித்தார் தாற்பரியமதேர்ந்து. (26)

வாய்த்த	நமக்கு ஏற்றதான	ஆரியர்கள் தாங்கள்	பூருவாசாரியர்கள்
திருமந்திரத்தின்	அஷ்டாக்ஷர மஹா மந்த்ரத்தில்	அருளிச் செயல் நடுவே	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களோடே
மத்திமம் ஆம பதம்போல்	இடையிலுள்ளதான நம: பதம் போன்றதாக	சேர்வித்தார்	சேர்த்தருளினார்கள்; (எதனாலே யென்னில்)
மதுரகவி செய் சீர்த்த கலையை	மதுரகவிகள் செய்தருளின திவ்வியப்பிரபந்தத்தை	தாற்பரியம் தேர்ந்து	அந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்புப் பிரபந்தத்தின் கருத்தை நோக்கியாம்.
ஆர்த்த புகழ்	நிறைந்த புகழையுடையரான		

—ஆழ்வார்களருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்களெல்லாம் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணவிபூதி சேஷ்டிதங்களைப் பரக்கப்பேசுவன; அப்படிப்பட்ட திவ்வியப்பிரபந்தங்களினிடையே ஆழ்வார் தோத்திரமான இவரது பிரபந்தம் சேருவதற்கு நியாயமில்லையேயென்று சிலர் சங்கிக்கக்கூடுமாதலால் அன்னவர்கட்குத் தெளிவு பெறுத்துமிப்பாசுரம். ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களெல்லாம் பெரும்பாலும் திருமந்திரம் த்வயம் சரமச்லோகம் ஆகிய ரஹஸ்யத்ரயத்தின் பொருள்களையே விவரிப்பனவாகும்; அதில் திருமந்திரத்தில் நடுவேயுள்ளதான நம: பதத்தில் நம் ஆசாரியர்கள் முக்கியமாக பாகவத சேஷத்வத்தை அநுஸந்தித்துப் போருவர்கள். இவ்விஷயம் முமுக்ஷுப்படியிலும் அதன் வியாக்கியானத்திலும் விசதம். அப்படிப்பட்ட பாகவத சேஷத்வத்தையே கனக்கப் பேசுமதான கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆழ்வாரருளிச் செயல்களிடையே சேர்ந்து திகழவேண்டுவது அவசியம் என்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றினார்களென்றதாயிற்று (26)

எம்பெருமானார் திருநாள் கூறுதல்

இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்த திருவாதிரைநாள்*
என்றையிலுமின்றி தனுக்கேற்றமென்தான்—என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர்தம்பிறப்பால்
நாற்றிசையும்கொண்டாடும் நாள். (27)

உலகீர்	உலகத்தவர்களே!
இன்று	இந்நாள்
சித்திரையில் ஏய்ந்த	சித்திரை மாதத்தில் பொருத்தம் பெற்ற
திரு ஆதிரை நாள்	திருவாதிரை நக்ஷத்திரம்;
என்றையிலும்	மற்றுமுள்ள தினங்களைக் காட்டிலும்
இன்று இதனுக்கு	இற்றை நாளுக்கு
ஏற்றம் என் தான் என்றவர்க்கு	சிறப்பு என் கொல்? என்று கேட்பவர்களுக்கு
சாற்றுகின்றேன்	—விடை கூறுகின்றேன்;
கேண்மின்	கேளுங்கள்;
எதிராசர் தம்	யதிராஜரான உடையவருடைய
பிறப்பால்	திருவவதாரத்தினால்
நால் திசையும்	நாலு திசைகளிலுமுள்ளவர்கள்
கொண்டாடும் நாள்	கொண்டாடுகின்ற நாளாமிது.

ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்தநாட்களினும்*
வாழ்வானநாள் நமக்கு மண்ணுலகீர்—*ஏழ்பாரு
முய்யவெதிராசருதித்தருளும்*சித்திரையில்
செய்ய திருவாதிரை. (28)

மண்ணுலகீர்	மண்ணுலகத்தவர்களே!
ஆழ்வார்கள் தாங்கள்	பொய்கையார் முதலான ஆழ்வார்கள்
அவதரித்த நாட்களினும்	அவதரிக்கப்பெற்ற நாட்களைவிட
நமக்கு வாழ்வு ஆன நாள்	நமக்கு விசேஷித்து உஜ்ஜீவன ஹேதுவான நாள் (எதுவென்றால்)
ஏழ் பாரும் உய்ய	உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி
எதிராசர் உதித்தருளும்	எம்பெருமானார் திருவவதரிக்கப் பெற்ற
சித்திரையில் செய்ய திரு ஆதிரை	சித்திரை மாதத்தில் சிறப்புடைத்தான திருவாதிரையேயாம்.

***ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தங்களை யருளிச்செய்த மாத்திரமே; அவற்றைப் பல படிகளாலும் வளர்த்தருளினவர் எம்பெருமானாரே யாதலாலும் இவ்விஷயத்தை அக்காலத்திலேயே "தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்தவிதத்தாய் இராமாநுசன்" "எங்கள் கதியே இராமாநுச முனியே! சங்கை கெடுத்தாண்டதவராசா! பொங்குபுகழ்மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும் தங்குமனம் நீயெனக்குத் தா" என்பவை முதலான தனியன்களால் பூருவர்கள் வெளியிட்டிருந்ததனாலும், பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்கே பெருமை பொருந்துமாதல்பற்றி இப்பாசுரம் மிகப்பொருத்தமாக அமைநதது. (28)

எந்தையெதிராசர் இவ்வுலகிலெந்தமக்கா*
வந்துதித்த நாளென்னும் வாசியினால்—*இந்தத்
திருவாதிரை தன்னின் சீர்மைதனை நெஞ்சே*
ஒருவாமலெப்பொழுதுமோர். (29)

நெஞ்சே	மனமே!
எந்தை எதிராசர்	அஸ்மதாசார்யரான எம்பெருமானார்
இ உலகில்	இந் நிலவுலகத்தில்
எம் தமக்கு ஆ	நமக்காகவே
வந்து உதித்த நாள் என்னும் வாசியினால்	வந்து தோன்றப் பெற்ற திருநாளென்கிற வைலக்ஷண்யத்தினால்
இந்த திரு ஆதிரை தன்னின்	இந்தத் திருவாதிரைத் திருநாளினுடைய
சீர்மை தனை	சிறப்பை
ஒருவாமல்	இடைவிடாமல்
எப்பொழுதும்	ஸதாகாலமும்
ஓர்	சிந்தித்திரு.

* * *:—ஆதிசேஷனே எம்பெருமானாராகத் திருவவதரித்தருளினர், இவர் நலமந்தமில்லதோர்நாட்டிலே *சென்றால்குடையாம் இருந்தால் சிங்காசனமாம்* இத்யாதிப்படியே எம்பெருமானுக்கு ஸகலவித கைங்கரியங்களும் செய்துகொண்டு வாழ வேண்டியிருக்க, அதைவிட்டுப் பலபல கஷ்டங்களுக்கு ஆஸ்பதமான இவ்விருள் தருமாஞாலத்திலே அவதரித்தருளினது நித்யஸம்ஸாரிகளான நம்போல்வாரைப் பிறவிக் கடலில் நின்றும் கை கொடுத்தெடுப்பதற்காகவேயென்று அநுஸந்தித்து இவரது திருநாளைக் கொண்டாடவேணுமென்றாராயிற்று. (29)

முதலாழ்வார்கள் கலியன் திருப்பாணாழ்வாராகிய இவர்களின் திருவவதார ஸ்தலங்கள் கூறுதல்

எண்ணருஞ்சீர்ப் பொய்கைமுன்னோர் இவ்வுலகில்தோன்றியவூர்■
வண்மைமிகு கச்சிமல்லை மாமயிலை —■மண்ணியினீர்
தேங்கும்குறையலூர் சீர்க்கலியன் தோன்றியவூர்■
ஓங்குமுறையூர் பாணனூர். (30)

எண்ண அருசீர்	எண்ணமுடியாத திருக்குணங்களையுடைய	மண்ணியின் நீர் தேங்கும குறையலூர்	மண்ணியாற்றின் தீர்த்தம் வந்து தேங்குமிடமான திருக்குறையலூரானது
பொய்கை முன்னோர்	பொய்கையார் பூதத்தார் பேயார் மூவரும்	சீர் கலியன் தோன்றிய ஊர்	சீர்மை மிக்க திருமங்கையாழ்வார் அவதரித்த தலம்;
இ உலகில் தோன்றிய ஊர்	இந்நிலத்தில் அவதரிக்கப் பெற்ற தலங்கள் எவையென்றால்,	ஓங்கும் உறையூர்	உயர்ந்த உறையூரானது
வண்மை மிகு கச்சி மல்லை மா மயிலை	(முறையே) அழகிய காஞ்சீநகரமும் திருக்கடல் மல்லையும் மயிலையுமாம்;	பாணன் ஊர்	திருப்பாணாழ்வார் திருவவதரித்த தலம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் குலசேகராழ்வார்களின் திருவவதார ஸ்தலம் கூறுதல்

தொண்டரடிப்பொடியார் தோன்றியவூர்■தொல்புகழ்சேர்
மண்டங்குடியென்பர் மண்ணுலகில்—■எண்டிசையும்
ஏத்தும்குலசேகரனூரென வுரைப்பர்■
வாய்த்ததிருவஞ்சிக்களம். (31)

தொல் புகழ் சேர்	நித்தியமான புகழையுடைய	வாய்த்த திருவஞ்சிக் களம்	அடியார்கள் ஈடுபடத்தக்க திருவஞ்சிக்களத்தை
மண்டங்குடி	திருமண்டங்குடி யென்னும் பதியை	எண் திசையும் ஏத்தும்	எட்டுத்திசையி லுள்ளாரும் துதிக்கும்படியான
தொண்டரடிப் பொடியார் தோன்றிய ஊர் என்பர்	தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த தலமென்பர் பெரியார்;	குலசேகரன் ஊர் என உரைப்பர்	குலசேகராழ்வார் தோன்றிய தலமென்பர்.

திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் பெரியாழ்வார்களின் திருவவதாரஸ்தலம் கூறுதல்

மன்னுதிருமழிசை மாடத்திருக்குருகூர்■
மின்னுபுகழ்வில்லிபுத்தூர் மேதினியில்—■நன்னெறியோர்
ஏய்ந்தபத்திசாரரெழில்மாறன் பட்டர்பிரான்■
வாய்ந்துதித்த வூர்கள்வகை. (32)

மேதினியில்	இந்நில வுலகில்
மன்னு திருமழிசை	நித்தியஸ்ரீயான திருமழிசையும்
மாடம் திருகுருகூர்	மாடங்கள் சூழ்ந்த திருநகரியும்
மின்னு புகழ் வில்லி புத்தூர்	விளங்கும் புகழையுடைய ஸ்ரீ வில்லி புத்தூரும் ஆகிய இம் மூன்று திருப்பதிகள் (முறையே)
நல் நெறியோர் ஏய்ந்த பத்திசாரர்	ஸன்மார்க்கநிஷ்டர்கள் சேரும் திருமழிசையாழ்வாரென்ன,
எழில் மாறன்	அழகிய நம்மாழ்வாரென்ன
பட்டர்பிரான்	பெரியாழ்வாரென்ன ஆகிய இம் மூவரும்
வாய்ந்து	இவ்வுலகத்தைக் காப்பதற்குப் பொருத்தமாக
உதித்த	அவதரிக்கப் பெற்ற
ஊர்கள் வகை	திவ்ய தேசங்களாம்.

ஆண்டாள் மதுரகவிகள் உடையவர்களின் அவதார ஸ்தலங்கள் கூறுதல்

சீராரும் வில்லிபுத்தூர் செல்வத்திருக்கோளூர்*
ஏரார்பெரும்பூதூரென்னுமிவை —*— பாரில்
மதியாருமாண்டாள் மதுரகவியாழ்வார்*
எதிராசர் தோன்றியவூரிங்கு. (33)

பாரில்	இவ்வுலகத்தில்
சீர் ஆரும் வில்லிபுத்தூர்	ஸ்ரீவில்லிபுத்தூர்
செல்வம் திருகோளூர்	ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ மல்கிய திருக்கோளூர்
ஏர் ஆர் பெரும் பூதூர் என்னும் இவை	ஸ்ரீபெரும்பூதூர் என்று சொல்லப்படுகிற இத்தலங்கள் (முறையே)
மதி ஆரும் ஆண்டாள்	ஞானம் நிரம்பிய ஆண்டாளும்
மதுரகவி யாழ்வார்	மதுரகவி யாழ்வாரும்
எதிராசர்	உடையவரும்
இங்கு தோன்றிய ஊர்	இவ்வுலகில் வந்து அவதரித்த திருப்பதிகளாம்.

***— திவ்வியப் பிரபந்தங்களை யருளிச் செய்தவர்கள் விஷயமாகத் தெரிவிக்கவேண்டிய மாஸ — நக்ஷத்ர — அவதார ஸ்தலங்களை இந்தப்பாசுரத்தோடு அருளிச் செய்து தலைக்கட்டினாராயிற்று. திருவரங்கத்தமுதனா ரருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியைப்பற்றி இதில் ஒன்றும் அருளிச் செய்யாமையாலே அந்தப் பிரபந்தம் நாலாயிரத்தினுள் சேர்ந்ததாக அக்காலத்தில் கொள்ளப் படவில்லை யென்று தெரிகிறது. ஆனதுபற்றியே அப்பிள்ளை யென்னுமாசிரியர் அந்த நூற்றந்தாதியைத் தவிர்த்தே நாலாயிரக் கணக்கு இட்டருளினர் போலும்! மணவாள மாமுனிகள் தாமே நூற்றந்தாதியை நாலாயிரதிவ்யப்ரபந்தங்களோடொப்ப ஆதரிக்க வேணுமென்றும் திருக்கார்த்திகை முதலாகக் கொள்ளும் அநத்யயன நியமம் இந்த நூற்றந்தாதிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட வேணுமென்றும் நியமித்தருளினரென்று பெரியார்பணிக்கக் கேட்டிருக்கை. ... (33)

அருளிச்செயல்களுக்கு அவதரித்த வியாக்கியானங்களைப்பற்றிக் கூறுவோமெனல்

ஆழ்வார்களேற்றம் அருளிச்செயலேற்றம்*
தாழ்வாதுமின்றி யவைதாம்வளர்த்தோர் —*ஏழ்பாரு
முய்ய அவர்செய்தவியாக்கியைகளுள்ளதெல்லாம்*
வையமறியப்பகர்வோம் வாய்ந்து. (34)

ஆழ்வார்கள் ஏற்றம்	ஆழ்வார்களுடைய வைபவமும்	ஏழ்பாரும் உய்ய	உலகங்களெல்லாம் உஜ்ஜீவிக்குமாறு
அருளிச் செயல் ஏற்றம்	அவர்களுடைய திவ்ய ஸூக்திகளின் வைபவமும்	அவர் செய்த	அவ்வாசாரியர்கள் செய்தருளின
தாழ்வு ஆதும் இன்றி	ஒரு குறையு முருதபடி	வியாக்கியைகள் உள்ளது எல்லாம்	வியாக்கியானங்களெல்லாவற்றையும்;
அவை	அவற்றை	வையம் அறிய வாய்ந்து பகர்வோம	உலகத்திலுள்ளார் அறியுமாறு பொருத்தமாகக் கூறுவோமாக.
வளர்த்தோர்	வளர்த்தவர்களான பூருவாசாரியர்களையும்		

■■※—இதில் மூன்ருமடியில் "அவர்கள் செய்த" என்ருேதுவது பொருந்தாது. வெண்டளைபிறழும்; 'அவர் செய்த' என்பதே சுத்தபாடம்.

ஆழ்வார்களையுமருளிச்செயல்களையும் கனக்க மதிக்க வேண்டுமெனல்

ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும்■

தாழ்வா நினைப்பவர்கள் தாம்■ நரகில்—வீழ்வார்க

ளென்றுநினைத்து நெஞ்சே யெப்பொழுதும் நீயவர்பால்■

சென்றணுக்க் கூசித் திரி. (35)

நெஞ்சே	மனமே!	நரகில் வீழ்வார்கள் என்று நினைத்து	நரகத்தில் விழுந்து பரிதபிப்பர்களென்று நிச்சயித்து
ஆழ்வார்களையும்	பொய்கையார் முதலான ஆழ்வார்களையும		
அருளிச்செயல்களையும்	அவர்களது திவ்ய ஸ்ரீ ஸூக்திகளையும்	அவர்பால்	அப்படிப்பட்ட பாவிகளிடத்தே
தாழ்வு ஆ நினைப்பவர்கள் தாம்	குறைவாக எண்ணுகின்றவர்கள்	சென்று அணுக கூசி திரி	சென்றுகிட்ட கூச்சத்துடனிருப்பாயாக.

■■■—கீழ்ப்பாட்டில் பிரதிஜ்ஞை செய்தபடியே திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களைப்பற்றி யருளிச்செய்யத் தொடங்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க, அதைவிட்டு இப்பாசுரம் முதலாக நான்கு பாசுரங்கள் வேறு விஷயமாக அருளிச் செய்வதென்? என்னில், இவை ப்ராஸங்கிகமாக அருளிச் செய்யப்படுகின்றன. கீழ்ப்பாட்டில், ஆழ்வார்களேற்றமும் அருளிச்செயலேற்றமும் குறையாதபடி அவற்றை வளர்த்தருளின ஆசார்யர்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்கையாலே அப்படிப்பட்ட ஆசாரியர்களின் திருவுள்ளம் புண்படுமாறு சில த்ரமிடோபநிஷத்பாஹ்ய குத்ருஷ்டிகள் தோன்றி ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தூஷித்துக் கொண்டிருந்ததனுல் அவர்களுடைய ஸஹவாஸமும் வர்ஜநீயமென்று இப்பாசுரத்திலுலருளிச் செய்யப் பிராப்தமாயிற்று.

இதில் இரண்டாமடியில் "தாழ்வாக" என்று பாடம் வழங்கி வந்தாலும் வெண்டளை நிற்றலால் அது கொள்ளற் பாலதன்று. "தாழ்வா" என்றே ஓதுக. (35)

ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான ஆசாரியர்களே நமக்குக் கதியெனல்

தெருளுற்றவாழ்வார்கள் சீர்மையறிவாரார்■

அருளிச்செயலையறிவாரார் —■அருள்பெற்ற

நாதமுனிமுதலாம் நந்தேசிகரையல்லால்■

பேதைமனமேயுண்டோபேசு. (36)

பேதை மனமே	அறிவில்லாத மனமே!	அருள் பெற்ற நாதமுனி முதலாம்	ஆழ்வாரருளை லபிக்கப் பெற்ற ஸ்ரீமந்நாதமுனிகள் முதலாகவுள்ள
தெருள் உற்ற ஆழ்வார்கள சீர்மை அறிவார் ஆர்	யதார்த்த ஞானிகளான ஆழ்வார்களின் பெருமையை அறியுமவர்கள் யார்?	நம் தேசிகரை அல்லால்	நம் ஆசாரியர்களைத் தவிர
அருளிச் செயல் சீர்மையை அறிவார் ஆர்	திவ்ய ஸூக்திகளின் பெருமையை அறியுமவர்கள் யார்?	உண்டோ	வேறு யாரேனுமுளரோ?
		பேசு	ஆராய்ந்து சொல்லுவாயாக.

▒▒▒—கீழ்ப்பாட்டில் ஸஹவாஸ யோக்யரல்லாதாராகக் கழிக்கப்பட்டபாவிகள் வைஷ்ணவர்கள் போலக் காணப்படினும் அவர்கள் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான நம்பூருவாசாரியர்களின் பரம்பரையில் படிந்தவர்களல்லர். எங்கிருந்தோ வந்து புகுந்தவர்கள் என்று காட்டுதற்காக இப்பாசுர மருளிச்செய்யப்பட்டதென்க.

இதில் மூன்றாமடியில் "முதலான" என வழங்கும் பாடம் வெண்டளைக்கு ஒவ்வாதாதலால் சுத்த பாடமன்று. "நாதமுனி முன்னான" என்று சிலருடைய பாடமாம். அது ஸம்பிரதாயபாடமன்று. (36)

ஆசார்ய பரம்பரையில் எம்பெருமானார்க்குள்ள ஏற்றம் கூறுதல்

ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர்▒
ஏராரெதிராசரின்னருளால்—▒பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று▒
பேசி வரம்பறுத்தார்பின். (37)

முன்னோர் ஓர் ஆண் வழி ஆய்	உடையவர்க்கு முன்னேயிருந்த ஆசாரியர்கள் ஓரொருவர் வழியாக	பார் உலகில்	நீங்கள் இப் பூமண்டலத்தில்
உபதேசித்தார்	அர்த்த விசேஷங்களை உபதேசித்துப் போந்தார்கள்;	ஆசை உடையோர்க்கு எல்லாம்	அர்த்தங்கள் கேட்க ஆசையுடையா ரெல்லார்க்கும்
பின் ஏர் ஆர் எதிராசர்	அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எம்பெருமானார்	கூறும் என்று பேசி	உபதேசியுங்கள் என்று நியமித்து
இன் அருளால்	(தமது) பரமகிருபையினாலே,		
ஆரியர்காள்	"ஆரியர்களே!" என்று தம் அடியார்களை விளித்து	வரம்பு அறுத்தார்	முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்த வொரு வரம்பைப் போக்கி விட்டார்.

▒▒▒—கீழ்ப்பாட்டில் "நாதமுனி முதலாம் நம் தேசிகரை" என்று அருளிச்செய்தவர் எம்பெருமானாரை விசேஷித்து எடுத்துக் கூறவேண்டி இப்பாசுரமும் அருளிச்செய்கிறார். எம்பெருமானாரைப்பற்றி ஆர்த்திப் பிரபந்தத்தில் 'மாறனுரை செய்த தமிழ் மறைவளர்த்தோன் வாழியே" என்று இவர்தாமே அருளிச்செய்தவராதலால் அவ்வெம்பெருமானார் தமிழ்மறையை வளர்த்தருளின பிரகாரங்களில் மிக முக்கியமானதொரு பிரகாரத்தை இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார். ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான பூருவாசாரியர்கள் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களை இட்டருளவல்லவர்களாயிருந்தும் ஒருவரும் இட்டருளவில்லை; உபதேசித்துவந்தார்களத்தனை; அப்படி உபதேசித்தும், ஸ்ரீவைஷ்ணவர்களை ஒரு திரளாகக் கூட்டி

உபதேசித்தமையில்லே. ஒரு ஆசிரியர் ஒரு சிஷ்யர்க்கு உபதேசிப்பது என்கிற முறையில் ஓராண்வழியடைவாகவே உபதேசம் நிகழ்ந்து வந்தது. எம்பெருமாஞர் காலம் வரையில் இங்ஙனே நடந்து வந்ததாயிற்று. இதில் குறைகண்ட எம்பெருமாஞர், இங்ஙனே வரம்பு இருக்கத் தகாது; இதனல் நம் ஸ்ரீவைஷ்ணவ தர்சநம் ஸங்குசிதமாகிறதே யல்லது விரிவு பெறுகின்றதில்லே; இந்த வரம்பை அறுத்தேயாகவேணும்" என்று திருவுள்ளம்பற்றி பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தாராம்; அதனுலேயே திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் விசேஷமாக அவதரிக்க இடமுண்டாயிற்றென்று இப்பாசுரத்தினல் தெரிவித்தவாறு.

பிள்ளேலோகாசாரியர் முதலானேர் அநேகரஹஸ்ய க்ரந்தங்களே அருளிச்செய்து அருளிச்செயல் பொருளே வளர்த்தருளினதறகும் இத்தகைய எம்பெருமாஞர் நியமனமே மூலம் என்பது தெரிவிக்கப்பட்டதாகக்கொள்க. ஆசாரியர்களே அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களென்றும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்களென்றும் இரண்டு வகையாகப் பிரித்து, முன்புள்ள ஆசார்யர்களே அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களென்றும் எம்பெருமாஞரை க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்றும் நம் முதலிகள் வழங்கி வருவதற்கும் காரணம் இப்பாசுரத்தினல் நிரூபிக்கப்பட்டதாயிற்று. (37)

எம்பெருமாஞர் தரிசனமென்று வழங்குகைக்கு அடி கூறுதல்

எம்பெருமாஞர் தரிசனமென்றேயிதற்கு
நம்பெருமாள்பேரிட்டு நாட்டி வைத்தார்—அம்புவியோர்
இந்தத்தரிசனத்தை யெம்பெருமாஞர்வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா. (38)

இந்த தரிசனத்தை	இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை
எம்பெருமாஞர் வளர்த்த அந்த செயல்	எம்பெருமாஞர் வளர்த்தருளிஞர் என்னுமந்த விஷயத்தை
எம்பெருமாஞர் தரிசனம் என்றே பேர் இட்டு	"ஸ்ரீ ராமாநுஜ தர்சநம்" என்றே திருநாமம் சாற்றி
அம்புவியோர் அறிகைக்கு ஆ	இப்பூமண்டலத்திலுள்ளாரெல்லாரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு
நம் பெருமாள்	ஸ்ரீரங்கநாதர்
இதற்கு	இந்த ஸித்தாந்தத்திற்கு
நாட்டி வைத்தார்	ஸ்தாபித்தருளிஞர்.

■■■—கீழ்ப்பாட்டில் எம்பெருமாஞருடைய திருவுள்ளத்தின் வைசால்யத்தை அருளிச்செய்த ப்ரஸங்கத்திலே அவ்வெம்பெருமாஞருடைய திருநாமத்தையிட்டே நமது ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை வ்யபதேசிக்க நேர்ந்த பெருமையையும் வெளியிடவேண்டி இப்பாசுரமருளிச் செய்கிருர். கலியுகாதியில் திருவவதரித்த நம்மாழ்வாரது காலத்திற்கு முன்னமே அநாதியாக விளங்கிவருவதான இந்தத்தர்சனத்தை 'ஸ்ரீராமாநுஜதர்சனம்' என வழங்கி வருவானேன்? இத்தரிசனம் ஸ்ரீராமாநுஜரால் நூதனமாக நிருமிக்கப்பட்டதா என்ன? என்று சிலர் சங்கிப்பதுண்டு. அந்த சங்கைக்குப் பரிஹாரமும் இப்பாசுரத்தினல் செய்த

தாகிறது. ஸ்ரீ ராமாநுஜ தர்சனமென்று வழங்கிவரும்படி நியமித்தருளினவர் ஸ்ரீரங்கநாதர். அப்படி அவர் நியமித்ததற்குக் காரணம் இத்தர்சனத்தை ஸ்ரீராமாநுஜர் பலபடிகளாலும் வளர்த்தருளினரென்பதுதான். திவ்யப் பிரபந்தங்கள் வளர்த்தருளினது இங்கு முக்கியமானது.

''அந்தச்செயலை'' என்று சிலர் ஓதும் பாடத்தில் வெண்டளை பிறழுமாதலால் அது கொள்ளற்பாலதன்று. 'அந்தச் செயலறிகைக்கா' என்பதே சுத்தபாடமென்க

திருவாய்மொழிக்கு வியாக்கியானஞ் செய்தருளின ஆசிரியர்கள் ஐவர் எனல்

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை
தெள்ளார்வடக்குத்திருவீதிப்—பிள்ளை
மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த
குணவாளரென்று நெஞ்சேகூறு. (39)

பிள்ளான்	திருக்குருகைப் பிரான் பிள்ளான்	திருவாய் மொழியை	(நம்மாழ்வாருளிய) திருவாய் மொழியை
நஞ்சீயர்	நஞ்சீயர்	காத்த	(வியாக்கியான முகத்தாலே) காத்தருளின
பெரியவாச்சான் பிள்ளை	பெரியவாச்சான் பிள்ளை		
தெள் ஆர் வடக்குத் திருவீதிப் பிள்ளை	தெளிந்த ஞானம் மிக்க வடக்குத் திருவீதிப்பிள்ளை	குணவாளர் என்று	மஹான்களென்று
மணவாள யோகி	வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் (ஆகிய இந்த ஐந்து ஆசாரியர்கள்)	நெஞ்சே	மனமே!
		கூறு	இவர்களது பெருமையைப் பேசு

— திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான ஐந்து ஆசிரியர்கள் திருவாய்மொழிக்குச் செய்தருளின வியாக்கியானங்கள் இன்னின்னவையென்று மேல் ஐந்து பாசுரங்களாலே விசதமாக அருளிச்செய்யப்படுதலால், அவ்வைவரை இங்கு திருவாய்மொழியைக் காத்த குணவாளராகக் கூறினது பொருந்தும். வியாக்கியான மியற்றுவதும் ஒருவகையான ஸம்ரக்ஷணமாதலால் 'காத்த' என்னக் குறையில்லை. நெஞ்சே கூறு என்றது நெஞ்சே! சிந்தை செய் என்றபடி.

வியாக்கியான கர்த்தாக்களின் மீது நன்றி பாராட்டுதல்

முந்துறவேபிள்ளான் முதலானோர் செய்தருளும்
அந்தவியாக்கியைகளன்றாகில்—அந்தோ
திருவாய் மொழிப்பொருளைத்தேர்ந்துரைக்கவல்ல
குருவார் இக்காலம்நெஞ்சே கூறு. (40)

நெஞ்சே	மனமே!	இக்காலம்	இக்காலத்தில்
முந்துறவே	முன்னம்	திருவாய்மொழி பொருளை	திருவாய்மொழியின் அர்த்தங்களை
பிள்ளான் முதலானோர் செய்தருளும்	திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான அவ்வாசாரியர்கள் அருளிச்செய்த	தேர்ந்து	ஆராய்ந்து
		உரைக்கவல்ல	எடுத்துச் சொல்லவல்ல
அந்த வியாக்கியைகள்	அப்படிப்பட்ட வியாக்கியானங்கள்	குரு ஆர்	குரவர் யாருளர்?
		கூறு	சொல்லு.
அன்று ஆகில்	அவதரித்திராவிடில்	அந்தோ	(ஆனந்தக் குறிப்பு).

ஆறாயிரப்படி அவதரித்தமை கூறுதல்

தெள்ளாருஞ்ஞானத் திருக்குருகைப்பிரான்
பிள்ளான்* எதிராசர்பேரருளால்—*உள்ளாரும்
அன்புடனேமாறன் மறைப்பொருளையன்றுரைத்தது*
இன்பமிகுமாறாயிரம். (41)

தெள் ஆரும் ஞானம்	தெளிவுமிக்க ஞானத்தை யுடையரான	அன்று	அக்காலத்தில்
திருக்குருகைப் பிரான் பிள்ளான்	பிள்ளானென்கிற ஆசிரியர்	மாறன் மறை பொருளை	திருவாய்மொழிப் பொருளை (விவரிக்க)
எதிராசர் பேர் அருளால்	எம்பெருமானாருடைய பரம கிருபையினாலே	உரைத்தது	அருளிச் செய்த வியாக்கியானம்
உள் ஆரும் அன்புடனே	ஹார்த்தமான ப்ரீதியோடே	இன்பம் மிகும் ஆறாயிரம்	ரஸம்மிகுந்த ஆறாயிரப்படி யென்பதாம்

■ ■ ■—ஆறாயிரம் க்ரந்தம் கொண்ட நூலுக்கு ஆறாயிரப்படி யென்று பெயர். முப்பத்திரண்டெழுத்துக்கு க்ரந்தமென்று ஸங்கேதம். சிறிது ஏறக்குறைய ஆறாயிரம் க்ரந்த மிருக்கு மென்று கொண்டு இங்ஙனமே திருநாமமிடப்பட்டது. இப்படியே மேலுங் கொள்க. (41)

ஒன்பதினாயிரப்படி அவதரித்தமை கூறுதல்

தஞ்சீரைஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி*
நஞ்சீயர்தாம்பட்டர்நல்லருளால்—■எஞ்சாத
ஆர்வமுடன்மாறன்மறைப்பொருளையாய்ந்துரைத்தது■
ஏரொன்பதினாயிரம். (42)

தம் சீரை	தமது திருக்குணங்களை	எஞ்சாத ஆர்வம் உடன்	குறையாத [பரிபூர்ணமான] அன்புடனே
ஞானியர்கள் தாம் புகழும்	அறிவுடையார் கொண்டாட நின்ற	மாறன் மறை பொருளை	திருவாய்மொழிப் பொருளை
வேதாந்தி	வேதாந்தி யென்று ப்ரஸித்தரான	ஆய்ந்து	ஆராய்ந்து
நஞ்சீயர் தாம்	நஞ்சீயரென்னுமாசிரியர்	உரைத்தது	அருளிச்செய்த வியாக்கியானம்
பட்டர் நல் அருளால்	பட்டருடைய பரம கிருபையினால்	ஏர் ஒன்பதினாயிரம்	அழகிய ஒன்பதினாயிரப்படி யென்பதாம்.

இருபத்து நாலாயிரப்படி அவதரித்தமை கூறுதல்

நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிட■
பின்பெரியவாச்சான் பிள்ளையதனால்—■இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது■
இருபத்துநாலாயிரம். (43)

நம்பிள்ளை	நம்பிள்ளை யென்னுமாசிரியர்	பின் அதனால்	பிறகு அந்த நியமனத்தை யடியொற்றி
தம்முடைய நல் அருளால்	தமது பரமகிருபையினால்		
ஏவியிட	நியமித்தருள,	பெரியவாச் சான்பிள்ளை	பெரியவாச்சான்பிள்ளை யென்னுமாசிரியர்

ஆவருபத்தி மாறன்	ஆனந்த ரூபமாகப் பெருகி வந்த பக்தியையுடைய ரான நம்மாழ்வாரருளிச் செய்த	பொருளை	அர்த்தங்களை (விவரித்து)
		சொன்னது	அருளிச்செய்த வியாக்கியானம்
மறை	தமிழ் வேதமான திருவாய் மொழியினுடைய	இருபத்து நாலாயிரம்	இருபத்துநாலாயிரப்படி யென்பதாம்.

■■■—ஆசாரியர்கள் வியாக்கியான நூல்களை எழுதி யருள்வதற்குப் பல காரணங்களுண்டு; பின்புள்ளாருடைய உஜ்ஜீவநார்த்தமாகச் சிலர் எழுதுவர்கள்; ஸ்வாசார்யர் உபந்யஸித்தருளும் அர்த்தவிசேஷங்கள் பெருக்காறு போலன்றிக்கே *அதிலே தேங்கின மடுக்கள்போலே விளங்கவேணுமென்று சிலர் எழுதுவர்கள்; ஸ்வாசார்யர் ஏடுபடுத்தும்படி நியமித்தருள அதனாலே சிலர் எழுதுவர்கள்; தம்முடைய புலமையைக் காட்டிவைப்போமென்று கருதிச் சிலர் எழுதுவர்கள். இங்ஙனேயுள்ள பல வகைகளில் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான மிட்டருளினது ஸ்வாசார்யரான நம்பிள்ளையின் பரமக்ருபாப்ரயுக்தமான நியமனத்தினால் என்பது இப்பாசுரத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இன்பா வருபத்தி மாறன்—ஆழ்வாருடைய பக்தியானது ஆனந்தருபமென்க.

ஈடு முப்பத்தாறாயிரப்படி அவதரித்தமை கூறுதல்

தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை■
வள்ளல்வடக்குத்திருவீதிப்—பிள்ளை■இந்த
நாடறிய மாறன்மறைப்பொருளை நன்குரைத்தது■
ஈடுமுப்பத்தாறாயிரம். (44)

நம்பிள்ளை	நம்பிள்ளை யென்னுமாசிரியர்	மாறன் மறை பொருளை	திருவாய்மொழியின் அர்த்தங்களை
தெள்ளியது ஆ	தெளிவாக		
செப்பு	அருளிச்செய்த	இந்த நாடு அறிய	இவ்வுலகமெல்லாம் தெரிந்துகொள்ளும்படி
நெறி தன்னை	ஸ்ரீ ஸூக்தி க்ரமத்தை உட்கொண்டு		
வள்ளல்	உதாரரான	நன்கு உரைத்தது	நன்றாக அருளிச்செய்த வியாக்கியானம்
வடக்குத் திரு வீதிப்பிள்ளை	வடக்குத் திருவீதிப்பிள்ளை யென்னுமாசிரியர்	ஈடுமுப்பத்தாறு யிரம்	ஈடு முப்பதாறாயிரப்படி யென்பதாம்.

■■■—நம்பிள்ளையின் உபந்யாஸத்தைப் பகலெல்லாம் கேட்டிருந்து இரவிலே ஏடுபடுத்தி வைத்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இவர் பெரியவாச்சான் பிள்ளையைப் போலே நம்பிள்ளையின் நியமனமடியாக எழுதினாரல்லர்; ஆனதுபற்றியே இந்த வியாக்கியானத்தை நம்பிள்ளை தாருமென வாங்கி உள்ளே வைத்தருளியிருந்து பிறகு பகவந்நியமனத்தாலே பிரசாரத்திற்கு அருளும்படி யாயிற்று. இப்பேராசிரியர் தொண்டர்க்கு அமுதான ஈடுமுப்பத்தாறாயிரப்படியை அருளிச் செய்தவளவே யன்றிக்கே, உலகுக்கு ஒருயிராய் சந்திரஸூர்யர்கள் போன்ற லோகாசாரியர் அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்னும் இரண்டு புத்ரரத்னங்களையும் பெற்று உதவியதுபற்றி "வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை" என்றார். (44)

பன்னீராயிரப்படியுரை பிறந்தமை பகர்தல்

அன்போடழகிய மணவாளச்சீயர்*
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா—■தம்பெரிய
போதமுடன் மாறன்மறையின் பொருளுரைத்தது■
ஏதமில்பன்னீராயிரம். (45)

அழகிய மண வாளச் சீயர்	வாதிகேஸரி அழகிய மணவாள முனிவர்	தம் பெரிய போதம் உடன்	தமது பெரிய ஞானத்தினுல்
பின்போரும்	பின்னுள்ளவர்களும்	மாறன் மறையின் பொருள் உரைத்தது	திருவாய்மொழிக்குப் பதவுரை கூறிய நூல்
அன்போடு கற்று அறிந்து பேசுகைக்கா	அன்புடன் அதிகரித்தறிந்து (பிறர்க்கும) பேசுவதற்குப் பாங்காக	ஏதம் இல் பன்னீ ராயிரம்	குற்றமற்றதான பன்னீராயிரப்படி யென்பதாம்.

■■■—வாதிகேஸரிஜீயர் திருவாய்மொழிக்கு இட்ட வியாக்கியானம் பிரதிபதார்த்த ரூபமாதலால் பதங்களின் மேல் பொருளறிந்து கொள்வதற்கு இது எளிய உரையென்பது பற்றி "பின்போரும் அன்போடு கற்றறிந்து பேசுகைக்கா" எனப்பட்டது. "தம்பெரியபோதமுடன்" என்ற விடத்து ஆழ்ந்த கருத்து ஒன்றுண்டு; அதாவது—வாதிகேஸரி ஜீயர் நம்பிள்ளையினுடைய சிஷ்யபரம்பரையிலே படிந்து கேட்டவராயிருந்தும் சில சில விடங்களில் பூர்வாசார்ய வியாக்கியானநெறிக்கு மாருக எழுதியிருப்பது முண்டு; திருவாய்மொழிக்குப் போலவே திருவிருத்தத்திற்கும் இவர் ஒரு சிறிய வியாக்கியானம் இயற்றியுள்ளார்; இரண்டிலும் இங்ஙனே ஸ்வதந்திரமாகச் சில அர்த்தங்களை இவர் எழுதியிருப்பது கொண்டு 'தம் பெரிய போதமுடன்' என்ன வேண்டியதாயிற்று; ஆசார்யக்ருபாதீநமான போதமன்றிக்கே தம்போதம்—ஸ்வதந்திரமான போதம் என்றபடி. மேலே ■முன்னோர் மொழிந்தமுறை தப்பாமல் கேட்டு■ என்கிற பாசுரமருளிச் செய்துள்ள மணவாளமாமுனிகளின் திருவுள்ளம் சிறிது கன்றும்படியாக இவ்வாசிரியர் உரையிட்டிருந்ததனுல் இங்ஙனே அருளிச்செய்ய நேர்ந்தது போலும். இந்த வாதிகேஸரியும் ஒரு மஹாஜ்ஞையாலே இவர்க்கு ஒரு குறை கூறினதாகவும் இருக்கவொண்ணுதென்கிற திருவுள்ளமும் மாமுனிகளுக்கு இருந்ததனுல், மேலே "ஏதமில்" என்கிற விசேஷணம் கொடுத்து ஒருவாறு தழுவிக்கொள்ளுகிருர். (45)

பெரியவாச்சான்பிள்ளைக்குண்டானதொரு அஸாதாரணமான பெருமையைப் பகர்தல்

பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய■ வியாக்கியைகள் செய்வால்—■ அரிய
அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்கிப்போது■
அருளிச்செயலாய்த் தறிந்து. (46)

பெரியவாச்சான் பிள்ளை	பெரியவாச்சான் பிள்ளை யென்னுமாசிரியர்	பின்பு உள்ள வைக்கும்	திருவாய்மொழி தவிர்ந்த மற்றுமுள்ள திவ்வியப் பிரபந்தங்களுக்கும்

தெரிய	விளக்கமாக	இப்போது	இக்காலத்தில்
வியாக்கியைகள் செய்வால்	வியாக்கியானங்கள் அருளிச் செய்ததனாலே	ஆசியர்கட்கு	ஸ்வாமிகளுக்கு
அரிய அருளிச் செயல்பொருளை	அருமையான திவ்ய ப்ரபந்தப் பொருள்களை	அறிந்து அருளிச் செயல் ஆய்த்து	தெரிந்து ப்ரவசனம் பண்ணுதற்குப் பாங்காயிற்று

■■■—கீழ் ஐந்து பாசுரங்களினால், திருவாய்மொழிக்கு மாத்திரம் அவதரித்த வியாக்கியானங்களை வெளியிட்டருளினாராயிற்று. நாலாயிரத்திற்கும் வியாக்கியான மிட்டருளினவர் பெரியவாச்சான்பிள்ளை யாதலால் அவருடைய மஹோபகாரத்தை இப்பாட்டில் வியந்து கூறுகிறார். பெரியவாச்சான்பிள்ளை நாலாயிரத்திற்கும் வியாக்கியானம் அருளிச்செய்திலராகில் திவ்யப்ரந்த திவ்யார்த்தங்களைப் பின்புள்ளார் அறிந்து ப்ரவசனம் செய்யவேமுடியாது; அந்தப்பேராசிரியர் பரமக்ருபை செய்தருளினதால்தான் பின்புள்ளார்கள் ஆசார்ய பீடத்திலமர்ந்து திவ்யப்ரபந்தப் பொருள்களை ப்ரவசனம் செய்ய ஸௌகரியம் விளைந்ததென்று உண்மையுரைத்தவாறு.

பெரியவாச்சான் பிள்ளையருளிய வியாக்கியானம் பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரும்பாலும் லுப்தமாய்ப்போனாலும் எஞ்சிய திவ்யப்ரபந்தங்களுக்கு அவருடைய வியாக்கியானமே சரணமாயிருப்பதுகொண்டு இங்ஙனே அருளிச்செய்தது. (46)

சில சில பிரபந்தங்களுக்கு உரையிட்டவர்களைப் பற்றிக் கூறுதல்

நஞ்சீயர்செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு■
எஞ்சாமை யாவைக்கு மில்லையே—■ தஞ்சீரால்
வையகுருவின் தம்பி மன்னுமணவாளமுனி■
செய்யுமவைதாமும் சில. (47)

நஞ்சீயர் செய்த	நஞ்சீயர் அருளிச் செய்த	வைய குருவின் தம்பி	பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும்
வியாக்கியைகள்	வியாக்கியானங்கள்	மன்னு மணவாள முனி	அழகிய மணவாளச் சீயரும்
நால் இரண்டுக்கு	சில பிரபந்தங்களுக்கேயாம்;	தம் சீரால்	தமது திருவருளால்
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே	ஒன்று தப்பாமல் எல்லாப் பிரபந்தங்களுக்குமில்லை கிடீர்;	செய்யுமவை தாமும் சில	செய்தருளின வியாக்கியானங்களும் சிலவேயாம்; (எஞ்சாமை யாவைக்கு மில்லையே)

■■■—திருவாய்மொழி தவிர்ந்த மற்ற பிரபந்தங்களுக்கெல்லாம் பூர்த்தியாக வியாக்கியான மிட்டருளினவர் பெரியவாச்சான்பிள்ளை யென்று கீழ்ப்பாட்டிலருளிச்செய்த ப்ரஸக்தியினாலே சிலசில திவ்யப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானமருளிச் செய்துள்ள ஆசிரியர்களையும் தெரிவிக்கவேண்டி இப்பாட்டு அருளிச்செய்கிறபடி. 'நாலிரண்டுக்கு' என்றது ஒரு ஸங்க்யையிலே நோக்காகவன்று;

"ஸ்வல்பப்ரபந்தங்களுக்கு மாத்திரமே" என்ற கருத்தில் அருளிச் செய்ததத்தனை. நஞ்சீயரிட்டருளின வியாக்கியானங்கள் திருப்பாவைக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்புக்குமே காண்பதாகப் பிள்ளைலோகஞ்சீயர் பணித்துள்ளார். ஸ்ரீ லோகாசார்ய ஸஹோதரரும் ஆசார்யஹ்ருதயகாரருமான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருப்பாவைக்கும் அமலனாதிபிரானுக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வியாக்கியானமிட்டருளினதாகக் காண்கிறது. மன்னுமணவாளமுனி யென்றது—வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயரை; இவர் (மூவாயிரத்தில்) திருவிருத்தமொன்றுக்கே உரையிட்டதாகக் காண்கிறது.

ஆக, இப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள மூன்று ஆசிரியர்களே மூவாயிரத்தில் சிற்சில பிரபந்தங்களுக்கு வியாக்கியானமிட்டவர்களென்று விளங்குகிறது. பெரியாழ்வார் திருமொழிக்குத் திருவாய்மொழிப்பிள்ளை ஒருஸ்வாபதேச வியாக்கியானமருளிச் செய்திருப்பதாக இக்காலத்தில் வெளிவந்துலவுமது உண்மையில் அவ்வாசிரியர் இட்டருளினதாயிருக்க ஔசித்யமில்லை. அப்படியிருந்தால் இங்கு மணவாளமாமுனிகள் அவ்வாசிரியரது திருநாமத்தை யெடுத்தருளிச் செய்யாதிருக்க ப்ரஸக்தியில்லை யென்று பெரியோர் பணிக்கக்கேட்டிருக்கை. திருவாய்மொழிப்பிள்ளை ஸந்ததியில் பின்புள்ளவொரு மஹான் பணித்ததாயிருக்கவடுக்கும் அந்த வியாக்கியானம். (47)

ஈடு முப்பத்தாறுயிரப்படியின் பிரசார முறை கூறுவன இப்பாட்டும் மேற்பாட்டும்.

சீரார் வடக்குத்திருவீதிப்பிள்ளை *எழு
தேரார் தமிழ்வேதத்தீடுதனை—*தாருமென
வாங்கி முன் நம்பிள்ளை யீயுண்ணிமாதவர்க்குத்
தாம்கொடுத்தார்* பின்னதனைத்தான். (48)

சீர் ஆர் வடக்குத் திரு வீதிப் பிள்ளை	சீர்மை பொருந்திய வடக்குத் திருவீதிப் பிள்ளை யென்னுமாசிரியர்	தாரும் என வாங்கி	'இதை என்னிடம் கொடும்' என்று கேட்டு வாங்கி
எழுது	எழுதியருளின	பின்	ஸ்ரீரங்கநாதனுடைய நியமனமான பின்பு
ஏர் ஆர் தமிழ் வேதத்து ஈடுதனை	சிறந்த திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப்பத்தாறுயிரப்படியை	அதனை	அந்த ஈட்டு ஸ்ரீ கோசத்தை
முன்	அக்காலத்தில்	ஈயுண்ணி மாதவர்க்கு தாம் கொடுத்தார்	ஈயுண்ணிமாதவப் பெருமாளென்னுமாசிரியருடைய கையிலே தந்தருளினார்.
நம்பிள்ளை	நம்பிள்ளையானவர்		

*** —திருவாய்மொழிக்கு ஐந்து வியாக்கியானங்கள் அவதரித்தனவாகக் கீழே யருளிச் செய்தார்; அந்த ஐந்து வியாக்கியானங்களுள் ஈடுமுப்பத்தாறுயிரப்படி யென்கிற வியாக்கியானமே காலக்ஷேபப்ரசாரத்தில் முக்கியமாக இருந்துவருவதனால் இதைப்பற்றின வரலாற்றை யுணர்த்தவேணுமென்று திருவுள்ளம் பற்றின மாமுனிகள் இரண்டுபாட்டாலே அதையுணர்த்தி யருளுகிறார்.

நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப்பின் பெரியவாச்சான்பிள்ளை யதனால் என்று கீழே யருளிச்செய்தபடி நம்பிள்ளையின் நியமனத்தினால் பெரிய

வாச்சான்பிள்ளை யிட்டருளின இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம் இருக்கவும், நம்பிள்ளை மற்றொருவிசை திருவாய்மொழிப்பொருளை உபந்யஸித்தருளும் போது அதைக்கேட்டிருந்து வடக்குத் திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்டு ஈடு முப்பத்தாறாயிரப்படியாக்கி முடித்து நம்பிள்ளை ஸன்னிதியிலே கொண்டு போய் வைத்தருளினார்; அதை அவர் கடாக்ஷித்து "ஆனை கோலம் செய்தாப்போலே அழகியதாகவே காண்கிறது; ஆகிலும் நமது கட்டளையின்றிக்கே எழுதினீர். இருக்கட்டும்" என்று சொல்லி அந்த ஸ்ரீகோசத்தை உள்ளே வைத்தருளினார் (நம்பிள்ளை); பெரிய பெருமாளுடைய நியமனமாலன்றி நம்பிள்ளை இந்த ஸ்ரீகோசத்தைத் தந்தருளாரென்று தெரிந்துகொண்ட ஈயுண்ணி மாதவப்பெருமாளென்பவர், இந்த ஈடுவியாக்கியானமே உலகில் பிரசாரம் பெறவேணுமென்று ஆவல் கொண்டு அதற்குப் பாங்காக பகவந் நியமனத்தைப் பெறுவிக்க வேணுமென்று கருதிப் பலகாலம் பெரியபெருமாளை வலஞ்செய்து வந்தார்; பெரிய பெருமாளும் திருவுள்ள முவந்து இரங்கி நம்பிள்ளைக்கு நியமித்தருளவே, பின்பு அந்த ஸ்ரீகோசத்தை அவர் ஈயுண்ணி மாதவப் பெருமாளுக்கு ஈந்தருளினார் இதற்கு மேலுள்ள வரலாறு மேற்பாட்டில் காணத்தக்கது. (48)

ஆங்கவர்பால் பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை*
தாம்கொடுத்தார் தம்மகனார் தம்கையில்—* பாங்குடனே
நாலூர்பிள்ளைக்கவர்தாம் நல்லமகனார்க்கவர்தாம்+
மேலோர்க்கீந்தாரவரே மிக்கு. (49)

ஆங்கு	அவ்வண்ணமாக
அவர் பால் பெற்ற	அந்த நம்பிள்ளையிடத்தில் பெற்றுக் கொண்டவரான
சிறியாழ்வான் அப்பிள்ளை தாம்	சிறியாழ்வான் அப்பிள்ளை யென்கிற அவ்வாசிரியர் [ஈயுண்ணிமாதவர்]
தம் மகனார் தம் கையில்	தம்முடைய திருக்குமாரரான பத்மநாபப் பெருமாளுடைய கையில்
கொடுத்தார்	(அந்த ஈட்டைக்) கொடுத்தருளினார் ;
அவர் தாம்	அந்த பத்மநாபப் பெருமாள்
பாங்கு உடனே	திருவுளத்திலிரக்கத்துடனே
நாலூர் பிள்ளைக்கு கொடுத்தார்	நாலூர் பிள்ளை யென்னு மாசிரியரிடம் அதைக் கொடுத்தருளினார்;
அவர் தாம்	அந்த நாலூர்பிள்ளை தாம்
நல்லமகனார்க்கு கொடுத்தார்	தமது திருக்குமாரரான நாலூராச்சான் பிள்ளைக்கு அதைக் கொடுத்தருளினார்;
அவரே	அந்த நாலூராச்சான் பிள்ளையே
மிக்கு	அதிசயமாக
மேலோர்க்கு	மேலுள்ளவர்களுக்கு
ஈந்தார்	உபதேசித்தருளினார்

***—கீழ்ப்பாட்டில் "ஈயுண்ணிமாதவர்க்குத்தாம் கொடுத்தார்" என்றருளிச் செய்தானபின் "ஆங்கவர்பால் பெற்ற" என்றருளிச் செய்திருப்பதற்குப் பொருத்தமான பொருள் 'இந்த ஈயுண்ணிமாதவப் பெருமாளிடம் பெற்றுக்கொண்டவரான' என்று தோன்றக்கூடியது; நம்பிள்ளை ஈயுண்ணிமாதவரிடம் கொடுத்தருளினாரென்றும், அந்த ஈயுண்ணிமாதவர் சிறியாழ்வானப்பிள்ளையிடம் கொடுத்தாரென்றும் கூறுவதாக இங்குப்பொருள் தோன்றக்கூடியது. ஆனால் பிள்ளைலோகஞ்சீயர் பணித்த வியாக்கியானத்தில்—"இப்படி நம்பிள்ளையுடைய ப்ரஸாதத்தாலே சிறியாழ்வானப்பிள்ளையென்று திருநாமத்தையுடையரான ஈயுண்ணி மாதவப்பெருமா

ளுக்கு ப்ராப்தமான ஈடானது" என்று கூறப்பட்டுள்ளது. ஈயுண்ணி மாதவப் பெருமாளுக்கே சிறியாழ்வானப்பிள்ளையென்று ஒரு மறுபேர் உள்ளதாகவும் கூறப் பட்டுள்ளது. ஆகவே அதைத் தழுவியுரைத்தல் நமக்குப் பணியாயிற்று. 'திரு வருள்மால் சேனை முதலி' இத்யாதியான ஈட்டுத் தனியனில் "இருகண்ணர்க்கன் புடைய நம்பிள்ளை இவரீடளித்தநகேய்ந்த மாதவர் பற்பநாபர்" என்றுள்ளதும் நோக்கத் தக்கது. 'வந்தே மாதவபத்பநாப ஸு॰மந: கோலேச தேவாதிபாந்' என்ற ச்லோகமும் இங்கு அநுஸந்திக்கவுரியது. (49)

இனி ஸ்ரீவசநபூஷணப்பெருமை கூறுதற்கு அடிகோலுதல்

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
யென்பர்■ அவரவர் தமேற்றத்தால்—■அன்புடையோர்
சாத்துதிருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே■
ஏத்ததனைச்சொல்லி நீ யின்று. (50

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்பர்	நம்பெருமாளென்றும் நம்மாழ்வாரென்றும் நஞ்சீயரென்றும் நம்பிள்ளை யென்றும் சிறப்பித்துக் கூறுவர் (எதனாலே யென்னில்;)
அவர் அவர் தம் ஏற்றத்தால்	அவரவர்களுக்குண்டான ஏற்றங்காரணமாகவாம்;
	(மேற்கூறிய திருநாமங்களானவை)
அன்பு உடையோர் சாத்து	அவரவர்களிடத்தில் அன்பு கொண்ட மஹான்கள் சிறப்பாக இட்டருளின
திருநாமங்கள் தாம் என்று	திருநாமங்களாமென்று கொண்டு
நல் நெஞ்சே	நல்ல மனமே !
இன்று	இப்போது
நீ அதனை சொல்லி ஏத்து	நீ அந்தச் சிறப்பைச் சொல்லித் துதிப்பாயாக.

■ ■ ■—இப்பாசுரம்முதல் மூன்று பாசுரங்களானவை எதற்காக அருளிச் செய்யப்படுகின்றன வென்னில்; கீழே ஆழ்வார்களைப்பற்றியும் ஆழ்வாரருளிச் செயல்களை வியாக்கியான முகத்தாலே காத்தருளின ஆசாரியர்களைப் பற்றியும் அந்த வியாக்கியானங்களில் தலையான ஈடு முப்பத்தாருயிரப்படியின் வரலாற்றைப் பற்றியும் அருளிச்செய்தாயிற்று. இனி அருளிச் செய்யத் திருவுள்ளம் பற்றின விஷயமென்னவென்ருல், அருளிச் செயல்களுக்குக் காப்பாகப் பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷண திவ்ய சாஸ்திரத்தின் சீர்மையைப்பற்றி யருளிச்செய்ய நினைந்தருளினுர்; [அது ஐம்பத்து மூன்ருவது பாசுரம் முதல் அருளிச் செய்யப்படுகிறது.] அந்த ஆசிரியர்க்கு லோகாசார்யரென்கிற திருநாமம் வந்த வழியை நிருபிக்க வேண்டியதாயிற்று. ஏற்கெனவே அந்தத் திருநாமம் நம்பிள்ளைக்கு இருந்தது; இந்தத் திருநாமமே இவர்க்கு இடப்பட்டது என்று சொல்ல நேர்ந்தது. [அது 51, 52 ஆம் பாசுரங்களாலருளிச் செய்யப்படுகிறது.] அந்த ப்ரஸக்தியின்கண் நம்பிள்ளை யென்கிற திருநாமத்திற்கு நிதானம் சொல்ல வேண்டியது ப்ராப்தமாக அதற்காக இப்பாட்டு அவதரிக்கின்றதென்க.

நம்பிள்ளையைப்பற்றிச் சொல்ல நினைக்கும் போதே 'நம்' என்கிற உபபதம் பெற்றவர்களான நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர்களும் நினைவுக்கு வரவே எல்லாரையுஞ் சேர்த்து ஒரு கோவையாக எடுக்கிருர். நம் என்று சிறப்பித்துக்

கூறுவது ப்ரேமவிசேஷ கார்யமாதலால், அந்த ப்ரேமவிசேஷ கார்யமாகவே ஒவ்வொரு கால விசேஷத்தில் ஒவ்வொரு மஹான்களால் நம்பெருமாளென்பது முதலான திருநாமங்கள் வழங்கிவரலாயின. ஸ்ரீரங்கநாதனுக்கு நம்பெருமாளென்கிற திருநாமம் ஒருகால் ஒரு அரையரால் நிகழ்ந்தது. சடகோபர்க்கு நம்மாழ்வாரென்கிற திருநாமம் ஸ்ரீரங்கநாதனால் நிகழ்ந்தது. வேதாந்தி முனிவர்க்கு நஞ்சீயரென்கிற திருநாமம் பட்டர் இட்டது. திருக்கலிகன்றி தாஸர்க்கு நம்பிள்ளையெனகிற திருநாமம் நஞ்சீயர் சாத்தியது; இதன் விவரணங்களை ஸம்பிரதாயவாயிலாக உணர்க. இப்படி முன்னோர்கள் இவர்களது பெருமையைக் கண்டு அதற்குத் தகுதியாக இட்டருளின திருநாமங்களை நெஞ்சே! நீயுமுகந்து அநுஸந்தித்து உஜ்ஜீவியென்று தம் திருவுள்ளத்திற்கருளிச் செய்தாராயிற்று. (50)

நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்னும் திருநாமம் விளைந்தமை விளம்புதல

துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால்
என்னவுலகாரியனோ வென்றுரைக்க—பின்னை
உலகாரியனெனும்பேர் நம்பிள்ளைக்கோங்கி
விலகாமல் நின்றதென்றும்மேல். (51)

துன்னு புகழ்	பரந்த புகழையுடைய	பின்னை	அந்நாள் தொடங்கி
கந்தாடை	கந்தாடை வம்சத்தில் தோன்றிய	உலகாரியன் எனும் பேர்	லோகாசார்யரென்கிற திருநாமம்
தோழப்பர்	தோழப்பரானவர்	நம்பிள்ளைக்கு ஓங்கி	நம்பிள்ளைக்குப் பிரசித்தமாகி
தம் உகப்பால்	தமது மகிழ்ச்சியினாலே	மேல என்றும் விலகாமல் நின்றது	மேலுள்ள காலமெல்லாம் பேராமல் நிலை நின்று விளங்கிற்று.
என்ன உலகாரியனோ என்று உரைக்க	'நீர் என்ன லோகாசார்யரோ?' என்று வியந்து கூற		

[illegible]—முதலியாண்டானுடைய திருவம்சத்திலே தோன்றி ஆசார்யபுருஷராகப் புகழ்பெற்றிருந்த கந்தாடைத் தோழப்பரென்னும் ஸ்வாமி நம்பிள்ளை காலத்தில் கோயிலில் ஒரு திருவீதியில் வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாகவேயிருந்தும் அனைவரும் நம்பிள்ளை திருவடிகளையே ஆச்ரயித்து அர்த்தங்கள் கேட்டு வந்தார்களேயன்றி அவரிடம் ஒருவரும் வந்து பணிந்திலர்; அதனால் அவர்க்கு நம்பிள்ளையின் மீது அஸூயை அதிகரித்து அவரைத் தூஷித்துக் கொண்டேயிருந்தார் அந்தத்தோழப்பர். இப்படியிருக்கையில் ஒருநாள் அவர்க்கு அநுதாபம் தோன்றி நம்பிள்ளையிடம் சென்று அபராதக்ஷாமணம் செய்து கொள்ள வேணுமென்று ஆசையுண்டாகி அவர் புறப்படுவதாக இருக்கையில், 'ஐயோ! மஹாகுலப்ரஸூதரான இந்தத் தோழப்பருடைய திருவுள்ளம் கன்றும்படி நாம் பிறந்தோமே! அவரிடம் சென்று பொறுப்பித்துக்கொள்வோம்' என்று நம்பிள்ளை அதே ஸமயத்தில் அந்தத்தோழப்பருடைய திருமாளிகை வாசலில் வந்து பதுங்கி நிற்கிறார். தோழப்பர் வெளியே யெழுந்தருளினதும் அவரை நம்பிள்ளை தெண்டனிட்டு க்ஷமை வேண்ட, இதென்ன ஆச்சரியமான குணம்! என வியந்த கந்தாடைத் தோழப்பர் நம்பிள்ளையை நோக்கி 'நீரென்ன லோகாசார்யரோ!' என்று ஈடுபட்டுக் கூறினராம்; அதுமுதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்கிற

ப்ரஸித்தி விளைந்தது. இந்த குணவிசேஷத்தினால் உலகத்தையெல்லாமீடு படுத்திக்கொள்ள வல்லவரென்கை. 51)

வடக்குத்திருவீதிப்பிள்ளை தமது திருக்குமாரர்க்கு ஆசாரிய திருநாமத்தையே யிட்டாரென்பது.

பின்னை வடக்குத் திருவீதிப்பிள்ளை அன்பால்
அன்ன திருநாமத்தையாதரித்து—மன்னுபுகழ்
மைந்தருக்குச் சாத்துகையால் வந்து பரந்தது எங்கும்
இந்தத் திருநாம மிங்கு. (52)

பின்னை	பிறகொரு காலத்தில்	ஆதரித்து சாத்துகையால்	விரும்பி இட்டபடியினால்
வடக்குத் திரு வீதிப்பிள்ளை	(நம்பிள்ளை திருவடியான) வடக்குத் திருவீதிப்பிள்ளை யானவர்	இங்கு எங்கும்	இவ்வுலகமெங்கும்
அன்பால்	ஆசார்யபக்திவிசேஷத்தினால்	இந்த திருநாமம்	இந்த லோகாசார்யதிருநாமமானது
அன்ன திரு நாமத்தை	அந்த லோகாசார்ய திருநாமத்தை		
மன்னுபுகழ் மைந்தருக்கு	யசஸ்வியான தமது திருக் குமாரர்க்கு	வந்து பரந்தது	(அவரது பெயராகப்) பரவிய தாயிற்று

—வடக்குத் திருவீதிப்பிள்ளை யானவர் நம்பிள்ளை திருவடிகளில் கால க்ஷேபம் செய்து போராநிற்கையில் அவர்க்கு ஒரு திருக்குமாரர் ஆசார்யாது அநுக்ரஹாதிசயத்தினால் தோன்ற, அக்குமாரருக்கு ஸ்வாசார்யருடைய திருநாமத்தையே சாத்த வேணுமென்று திருவுள்ளம் பற்றிய வடக்குத் திருவீதிப்பிள்ளை லோகாசார்யரென்று நாமகரணம் செய்தருளப் பிள்ளை லோகாசார்யரென்று அத் திருக்குமாரர் உலகமெங்கும் ப்ரஸித்தி பெற்றாரென்க. (52)

இது முதல் ஏழு பாசுரங்கள் ஸ்ரீவசநபூஷணத்தின் பெருமை கூறுவன

அன்னபுகழ் முடும்பை யண்ணலுலகாசிரியன்
இன்னருளால் செய்தகலை யாவையிலும்—உன்னில்
திகழ்வசன பூடணத்தின் சீர்மையொன்றுக்கில்லை
புகழலவிவ்வார்த்தை மெயிப்போது. (53)

அன்ன புகழ்	அப்படிப்பட்ட புகழையுடையராய்	திகழ்	மிக விளங்குகின்ற
முடும்பை	முடும்பைக் குலதிலகரான	வசன பூடணத்தின் சீர்மை	ஸ்ரீவசநபூஷணத்திற்குண்டான சிறப்பு
அண்ணல் உலகாசிரியன்	ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர்	ஒன்றுக்கு இல்லை	மற்றொரு நூலுக்கும் வாய்க்கவில்லை;
இன் அருளால் செய்த	பரமகிருபையடியாக அருளிச் செய்த	இப்போது இவ் வார்த்தை	இப்போது சொல்லுகிற இந்த வார்த்தையானது
கலையாவையிலும்	ரஹஸ்ய க்ரந்தங்களெல்லாவற்றினுள்ளும்	புகழ் அல	அதிசயோக்தியன்று;
உன்னில்	ஆராயுமிடத்து	மெய்	ஸத்யமானது.

—ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரமானது ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்க்ருதரூப வேத ஸாரார்த்த ஸங்க்ரஹமஹாரஸ வாக்யஜாதம் என்கிறபடியே அறிய வேண்டுமர்த்தமெல்லாம் அழகாக நிரம்பப் பெற்றதாதலால் இது நிகரற்றதென்பது அர்த்தவாதமன்று, மெய்யுரையே. (53)

ஸ்ரீவசநபூஷணமென்கிற திருநாமத்தின் காரணம் கூறுதல்

முன்னம்குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னை * மிகக்கொண்டுகற்றோர் தம்முயிர்க்கு *—மின்னணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேர் * இக்கலைக்கிட்டார் பின். (54)

முன்னம் குரவோர்மொழிந்த	பூருவாசாரியர்களருளிச் செய்த
வசனங்கள் தன்னை	ஸ்ரீ ஸூக்திகளை
மிக கொண்டு	பெரும்பாலும் சேர்த்து
கற்றோர் தம் உயிர்க்கு	கல்வியிற் சிறந்தாருடைய ஆத்மாவுக்கு
மின் அணி ஆ	அழகிய அலங்காரமாக
சேர சமைத்து	சேர்த்து அணி வகுத்து
அவரே	அவ்வாசிரியர் தாமே
பின்	பிறகு
இ கலைக்கு	இந்த க்ரந்தத்திற்கு
சீர் வசனபூடணம் என் பேர்	ஸ்ரீ வசநபூஷண மென்கிற திருநாமத்தை
இட்டார்	இட்டருளினார்.

* * *—ஸ்ரீவசநபூஷணமென்கிற க்ரந்தத்திருநாமத்திற்கு விவரணம் காட்டியருளினாராயிற்று. மணவாளமாமுனிகள் தாமே ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாந அவதாரிகையில்—"ரத்ந ப்ரசுரமான பூஷணத்துக்கு ரத்நபூஷணமென்று பேராமாப்போலே பூர்வாசார்யர்களுடைய வசந ப்ரசுரமாய் அநுஸந்தாதாக்களுக்கு ஔஜ்வல்ய கரமாயிருக்கையாலே இதுக்கு வசநபூஷணமென்று திருநாமமாயிற்று!' என்று அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம். பூருவாசாரியர்களின் வசனங்களையே [ஸ்ரீஸூக்திகளையே] கொண்டு அமைக்கப்பட்டதாய் முமுக்ஷுக்களின் கண்டத்திற்கு பூஷணமாயிருக்கத்தக்கதான இந்த க்ரந்தத்திற்கு ஸ்ரீவசநபூஷண மென்னும் திருநாமம் சாலப் பொருந்துமென்கை.

இப்பாசுரத்தில் "சீர்வசனபூடணமென்னும் பேர்" என வழங்கி வரும்பாடம் பொருந்தாது; அது மறக்கத்தக்கது. என்பேர் என்பதற்கே என்னும் பேர் என்று பொருள். (54)

ஸ்ரீவசநபூஷணாதிகாரிகள் துர்லபர் எனல்

ஆர்வசனபூடணத்தி னாழ்பொருளெல்லாமறிவார் *
ஆரதுசொன்னேரிலனுட்டிப்பார்—* ஓரொருவ
ருண்டாகி லத்தனைகாணுள்ளமே * எல்லார்க்கும்
அண்டாத தன்றோவது. (55)

வசனபூடணத்தின்	ஸ்ரீ வசனபூஷணத்தினுடைய
ஆழ் பொருள் எல்லாம்	கம்பீரமான அர்த்தங்களையெல்லாம்
அறிவார் ஆர்	அறியவல்லாரில்லை;
அது சொல் நேரில்	அந்த வசனபூஷண சாஸ்த்ரம் இட்டகட்டளையிலே
அனுட்டிப்பார் ஆர்	அநுஷ்டிக்க வல்லவர்களுமிலர்;
உள்ளமே	ஓ மனமே!
ஓர் ஒருவர் உண்டு ஆகில் அத்தனை காண்	யாரேனுமொருவர் தேறினாராகில் தேறக்கூடுமென்றறி;
அது	அந்த திவ்ய சாஸ்த்ரமானது
எல்லார்க்கும் அண்டாதது அன்றோ	ஒருவர்க்கும் அறியவும் அனுஷ்டிக்கவும் எளியதொன்றன்றுகாண்.

■■■—ஸ்ரீ வசநபூஷண மென்பது பெரியதொரு மீமாம்ஸா சாஸ்த்ரம்; இது ஸூத்ரரூபமாக அமைந்திருத்தலால் பொருளறிவது அரிது; வியாக்கியானங்களைக் கொண்டு ஒருவாறு அறியப் பெற்ருலும் அதன்படி அனுட்டிப்பது மிகவு மரிது. இப்படி அறியவும் அனுட்டிக்கவும் முடியாதபடி அதிகாரிகளற்றதொரு சாஸ்த்ரத்தை ஆசிரியர் அருளிச் செய்யலாமோவென்ன. ஸர்வாத்மநா அதிகாரிகளேயில்லையென்னப் போகாது, ஓரொருவர் உண்டாகிலத்தனை காண்; "மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே. யததாமபி ஸித்தாநாம் கச்சித் மாம்வேத்தி தத்வத:" என்று கீதையிலருளிச் செய்தபடியே ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோரதிகாரி தேறக்கூடு மென்றதாயிற்று.

அநுஷ்டிக்க முடியாதபடி இதில் என்ன விஷயம் கூறப்பட்டிராநின்றதென்னில்; "குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்றும். "விஹித போகம் நிஷித்த போகம் போலே லோக விருத்தமுமன்று. நரகஹேதுவுமன்று; ஆயிருக்கச் செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் சிஷ்டகர்ஹிதமுமாய் ப்ராப்ய ப்ரதிபந்தகமு மாயிருக்கையாலே த்யாஜ்யம்' என்றும் இங்ஙனே அருளிச்செய்யப் பட்டுள்ள பலபல விஷயங்கள் அநுஷ்டிக்க அரியன என்னுமிடம் சொல்ல வேணுமோ? (55)

ஸ்ரீவசநபூஷணத்தின் பொருளையறிந்து அநுஷ்டிக்க விரும்புவதே உஜ்ஜீவநோபாய மெனல்

உய்யநினைவுடையீர் உங்களுக்குச் சொல்லுகின்றேன்■
வையகுருமுன்னம்வாய்மொழிந்த—செய்யகலை
யாம் வசனபூடணத்தினாழ்பொருளை■ கற்றதனுக்
காம்நிலையில் நில்லுமறிந்து. (56)

உய்ய நினைவு உடையீர்	உஜ்ஜீவிக்க விருப்பமுடையவர்களே !	வசனபூடணத்தின்	ஸ்ரீ வசநபூஷணத்தினுடைய
உங்களுக்கு சொல்லுகின்றேன்	உங்களுக்கொரு ஹிதம் சொலலுகிறேன் (கேண்மின் ;)	ஆழ் பொருளை கற்று அறிந்து	ஆழ்ந்த பொருள்களை ஆசார்யமுகமாக அதிகரித்து உணர்ந்து
முன்னம் வையகுரு வாய் மொழிந்த	முன்பு பிள்ளை யுலகாசிரியர் அருளிச் செய்ததான	அதனுக்கு ஆம் நிலையில் நில்லும்	அவ்வறிவுக்கு ஏற்ற அநுஷ்டானத்தில் ஊன்றியிருங்கள்.
செய்ய கலை ஆம்	திவ்ய சாஸ்த்ரமாகிய		

■■■—பாசுரம் தொடங்கும்போதே 'உய்ய நினைவுடையீர்' என்று தொடங்குகையாலே ஸ்ரீ வசநபூஷணார்த்தங்களை அறியாதார்க்கும் அதன்படி அநுஷ்டியாதார்க்கும் உஜ்ஜீவிக்க விரகில்லையென்று காட்டிற்ருயிற்று. (56)

ஸ்ரீவசநபூஷணத்தை அதிகரியாதவர்கள்பால் நிர்வேதம் காட்டுதல்

தேசிகர்பால்கேட்டசெழும்பொருளை■ சிந்தைதன்னில்
மாசறவேயூன்ற மனனஞ்செய்து—■ ஆசரிக்க
வல்லார்கள் தாம்வசனபூடணத்தின் வான்பொருளை■
கல்லாததென்னோ கவர்ந்து. (57

தேசிகர் பால் கேட்ட	ஆசாரியர்களிடத்தில் கேட்ட	ஆசரிக்க வல்லார்கள் தாம்	அப்படியே அநுஷ்டிக்க வல்லவர்களான அதிகாரிகள்
செழு பொருளை	சிறந்த அர்த்தங்களை	வசனபூடணத்தின்	ஸ்ரீ வசநபூஷணத்தினுடைய
சிந்தை தன்னில்	நெஞ்சிலே	வான் பொருளை	திவ்யார்த்தங்களை
மாசு அற	அழுக்கற	கவர்ந்து	அபிநிவேசத்துடனே
ஊன்ற	ஊற்றமாக	கல்லாதது என்னோ	அதிகரியாமலிருப்பது ஏனோ ?
மனனம் செய்து	சிந்தனை செய்து		

—உலகில் ஆசார்ய சிஷ்யக்ரமம் ஒன்று நடந்து வருகின்றதே; சிலர் ஆசாரியரிடம் பணிந்திருந்து சில அர்த்த விசேஷங்களைக் கேட்பதும் அவற்றைச் சிந்தனை செய்வதும் யதாசக்தி அனுட்டிப்பதுமாயிருக்கின்றார்களே; அப்படிப்பட்டவர்கள் மற்ற க்ரந்தங்களில் பரிச்ரமத்தை விட்டு ஸ்ரீவசநபூஷணத்தில் பரிச்ரமப் படலாமே; அந்தோ! இதில் அபிநிவேசம் கொள்ளாதது என்னோ! என்கிறார். உலகத்திலுள்ளாரெல்லாரும் இந்த திவ்யசாஸ்த்ரத்தை அதிகரிக்கவேணுமென்று மாமுனிகளுக்குண்டான அபிநிவேசம் இதனால் விளங்கிற்றென்க. ... (57)

ஸ்ரீவசநபூஷண வியாக்கியானங்களை யதிகரிப்பது பாங்கெனல்

சச்சமபிரதாயம் தாமுடையோர்கேட்டக்கால்
மெச்சும்வியாக்கியைகளுண்டாகில்— நச்சி
அதிகரியும்நீர் வசன பூடணத்துக்கற்ற
மதியுடையீர்மத்தியத்தராய். (58)

வசன பூடணத்துக்கு அற்ற மதி உடையீர்	ஸ்ரீ வசனபூஷணத்தில் நிலை நின்ற ஊக்கமுடையீர்காள்	மெச்சும்	கொண்டாடும்படியான
சச்சம்பிரதாயம் உடையோர் தாம்	ஸத்ஸம்ப்ரதாய ஸரணியில் படிந்த மஹான்கள்	வியாக்கியைகள்	வியாக்கியானங்கள்
கேட்டக்கால்	கேட்டவளவிலே	உண்டு ஆகில்	எத்தனை அவதரித்தாலும்
		நச்சி	அவற்றை விரும்பி
		நீர் மத்தியத்தர் ஆய்	நீங்கள் மத்யஸ்தர்களாய்க் கொண்டு
		அதிகரியும்	அப்யஸியுங்கள்.

—சிறந்த க்ரந்தமொன்று அவதரித்தால் அதற்குப் பலரும் வியாக்கியானங்கள் இயற்ற விரும்புவது இயல்பு. ஆகவே இந்த ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்திற்கும் பலபல வியாக்கியானங்கள் அமையக்கூடும்; அவற்றையெல்லாம் அதிகரிக்க வேண்டியது; ஆனால் அவை ஸத்ஸம்ப்ரதாய ஸாரவித்துக்களால் மெச்சப்படுமவையாக இருக்கவேண்டும்; அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் எத்தனை அவதரித்தாலும் அவற்றையெல்லாம் அஸூயையின்றி அதிகரிக்கவேணுமென்று அஸ்மதாதிகளை நோக்கி அருளிச்செய்தபடி. மத்யஸ்த: என்னும் வடசொல் 'மத்தியத்தர்' எனத்திரிந்தது. அஸூயை யற்றவர்களாய் என்று தாற்பரியம். (58)

ஸ்ரீவசநபூஷணத்தின் பரமபோக்யதையை வியந்து கூறுதல்

சீர்வசன பூடணத்தின் செம்பொருளை சிந்தைதன்னால்
தேறிலுமாம் வாய்கொண்டுசெப்பிலுமாம்— ஆரியர்காள்

என்றனக்கு நாளும் இனிதாக நின்றதையோ
உந்தமக் கெவ்வின்ப முளதாம். (59)

ஆரியர்காள்	ஓ மஹநீயர்களே!	என் தனக்கு	எனக்கு
சீர் வசனபூடணத்தின்	ஸ்ரீவசனபூஷணத்தினுடைய	நாளும் இனிது ஆக நின்றது	அப்பொழுதைக்கப்பொழுதென்னுராவமுதமென்னலாம் படியுள்ளது;
செம்பொருளை	செவ்விய பொருள்களை	ஐயோ	மிக ஆனந்தம்!
சிந்தைதன்னுல் தேறிலும் ஆம்	நெஞ்சினுல் ஆராய்ந்து பார்க்கிலுமாம்,	உம் தமக்கு எவ் இன்பம் உளது ஆம்	உங்களுக்கு எப்படிப்பட்ட ஆனந்தமாயிருக்கின்றதோ!
வாய் கொண்டு செபபிலும் ஆம்	வாயினுல் எடுத்துரைக்கிலுமாம்;		

—மாமுனிகள் தமது நைச்யாநுஸந்தான ஸ்வபாவத்தினுல் இஃது அருளிச்செய்கிருர்; அல்பஜ்ஞனை எனக்கே ஸ்ரீவசநபூஷணார்த்தங்களின இனிமை பரிச்சேதிக்கப் போகிறதில்லையே! மஹாபராஜ்ஞர்களாயுள்ளவர்கள் இதன் போக்யதையில் எங்ஙனேதான் ஈடுபட்டிருப்பர்களோ! என்ருராயிற்று. முதலடியில் 'செழும் பொருளை' என்ருேதுவது அசுத்தபாடம்; வெண்டளைபிறழும்; 'செம்பொருளை' என்றே ஓதுக. (59)

இது முதல் பதினெரு பாசுரங்கள் ஸ்ரீவசநபூஷணார்த்தங்களில் முக்கியமானவற்றை விளக்குவன

தன்குருவின் தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார்
அன்புதன்பால்செய்தாலு மம்புயைகோன்— இன்பமிகு
விண்ணுடு தானளிக்க வேண்டியிரான் ஆதலால்
நண்ணுரவர்கள் திருநாடு. (60)

அம்புயைகோன்	திருமகள் கொழுநன்,	தான்	ஆசார்யநிஷ்டர்களையே ஆதரிக்கு மியல்வினனுன தான்
தன் குருவின் தாள் இணைகள் தன்னில்	ஸ்வாசார்ய பாதாரவிந்தங்களில்	விண் நாடு அளிக்கவேண்டி இரான்	(அன்னவர்களுக்குப்) பரமபதம் கொடுக்கவிரும்பான்;
அன்பு ஒன்று இல்லாதார்	சிறிது பக்தியுமில்லாதவர்கள்	ஆதலால்	ஆகவே
தன்பால் அன்பு செய்தாலும்	தன் விஷயத்தில் எவ்வளவு பக்தி செலுத்திலுைம்	அவர்கள் திருநாடு நண்ணுர்	ஆசார்ய பக்தியற்றவர்கள் வைகுந்தம் புகமாட்டார்கள்.

—ஸ்ரீ வசநபூஷணார்த்தங்களின் பரமபோக்யதையைக் கீழ்ப்பாட்டில் ப்ரஸ்தாவித்த ப்ரஸங்கத்திலே, ஸ்ரீவசநபூஷணத்தின் உயிரான சில அர்த்த விசேஷங்களை வெளியிட்டருளத் திருவுள்ளம் பற்றி இப்பாசுரம் முதலாக உபக்ரமிக்கிருர். ஸ்ரீவசநபூஷணத்தின் "ஸ்வதந்த்ரனை உபாயமாகத்தான் பற்றினபோதிறே இப்ரஸங்கந்தானுள்ளது" என்கிற சூர்ணை முதலாக "ஈச்வரனைப் பற்றுகை கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி" என்கிற சூர்ணை நடுவாக "இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாக்கும்" என்பதீருக ஆசார்யநிஷ்டையே சரமோபாயமென்று மிக அற்புதமாக அருளிச்செய்யப்பட்டிருத்தலால் அவ்வர்த்தவிசேஷம் இங்கு நிருபிக்கப்படுகிறது. "தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யன்தானே நீரைப் பிரிந்தால் அத்தை

உலர்த்துமாபோலே ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணு மீச்வரன் தானே ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப்பண்ணும். இத்தையொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்.'' என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

அம்புயை—அம்புஜத்திலே [தாமரையிலே] பிறந்த பிராட்டி என்றபடி; பத்மா கமலா என்கிற திருநாமங்கள் போலுமிது. (60)

ஞானமனுட்டானமிவை நன்ருகவேயுடைய
னை குருவையடைந்தக்கால்— மாநிலத்தீர்
தேனர்கமலத் திருமாமகள்கொழுநன்
தானே வைகுந்தம் தரும். (61)

மா நிலத்தீர்	இந்நிலவுலகத்தவர்களே!	தேன் ஆர் கமலம் திருமாமகள் கொழுநன்	தேன் நிரம்பிய தாமரை மலரில் தோன்றிய ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு வல்லபனை ஸர்வேச்வரன்
ஞானம் அனுட்டானம் இவை	ஜ்ஞானமும் அனுஷ்டானமுமாகிற விரண்டும்		
நன்று ஆக ஏ உடையன் ஆன	குறையற நிரம்பப்பெற்ற		
குருவை	ஆசாரியரை	தானே	தானகவே
அடைந்தக்கால்	ஆச்ரயித்தால் (அப்படிப்பட்ட ஸதாசார்யஸமாச்ரயணமுள்ளவர்களுக்கு)		
		வைகுந்தம் தரும்	ஸ்ரீவைகுண்டத்தை உபகரித்தருள்வன்.

--ஆசார்யபக்தி அவசியமென்றது கீழ்ப்பாட்டில்; ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நனை ஆசார்யனைப் பணிந்தாலன்றிப் பேறு பெற முடியாதென்கிறது இப்பாட்டில். ஆழ்வார்கள் தமது திவ்வியப்பிரபந்தங்களில் "வண்டுகளோ வம்மின்" என்றும், "அஞ்சிறையமட நாராய்" என்றும் பலகாலும் பக்ஷிகளை விளிப்பர்கள்; ஆசார்யர்களையே பக்ஷிகளாகக் கூறுவர்கள். "உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணும் கதி:, ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:" என்று, பக்ஷிகளுக்கு இரண்டு சிறகுகளும் குறையற இருந்தாலன்றி உயர்கதி ஸம்பவிக்கமாட்டாதாப்போல, ஆசார்யர்களுக்கு ஞானமும் அனுட்டானமுமாகிற இரண்டு பக்ஷங்களுமிருந்தாலன்றி உயர்கதி நேராதென்று சாஸ்த்ரங்கள் கூறும். "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞானகர்மங்களைச் சிறகென்று'' என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் காண்க.

இங்கு "தேனர் கமலத் திருமாமகள் கொழுநன்'' என்றது ஸாபிப்ராயம்; பிராட்டியின் புருஷகாரத்தாலே மோக்ஷமளிக்கவல்லவனே எம்பெருமான்; ஆயினும் ஸதாசார்யர்களை ஆச்ரயியாதார்க்குப் பிராட்டியின் புருஷகாரமும் பலிக்கமாட்டாது என்று காட்டினபடி. ஆசார்ய ஆச்ரயணமிருந்தால் பிராட்டியின் புருஷகாரமுமின்றி ஸ்வயமாகவே வீடு த ந்தருள்வனென்று காட்டி ''தானே வைகுந்தம் தரும்'' என்றுர். (61)

உய்ய நினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே
வையும் அன்பு தன்னையிந்தமாநிலத்தீர்—மெய்யுரைக்கேன்
பையரவில்மாயன் பரமபதமுங்களுக்காம்
கையிலங்கு நெல்லிக் கனி. (62)

இந்த மாநிலத்தீர்	இந்நிலவுலகத்தவர்களே !	மெய் உரைக்கேன்	உள்ளபடி கூறுகின்றேன் (கேண்மின்;)
உய்ய நினைவு உண்டாகில்	உஜ்ஜீவிக்கவேணுமென்கிற விருப்பம் உங்களுக்கு உள்ளதாகில்	பை அரவில் மாயன் பரமபதம்	சேஷசயனனான ஸர்வேச்வரனுடையதான பரமபதமானது
அன்பு தன்னை	பக்தியை	உங்களுக்கு	உங்களுக்கு
உம் குருக்கள் தம் பதத்தே	உமது ஆசார்யர்களின் திருவடிகளிலேயே	கை இலங்கு நெல்லி கனி ஆம்	கரதலாமலகமென்னலாம்படி எளிதாகும்.
வையும்	செலுத்துங்கள் ; (அதனால் நேரும் பலனை)		

■■■—ஆசார்ய பக்தர்களுக்குப் பரமபதமானது கையிலங்கு நெல்லிக்கனியாமென்றது பரமபதபோகங்களை யெல்லாம் இந்நிலத்திலேயே ஸாக்ஷாத்கரிக்கப் பெறலாமென்றபடி. "பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ" என்னும்படி பிறர்க்கும் வழங்குவதற்கு உரிதாம்படி விதேயமாகும் என்ற கருத்தும் உய்த்துணரத்தக்கது. (62)

ஆசாரியன் செய்த உபகாரமானவது■
தூய்தாக நெஞ்சுதன்னில் தோன்றுமேல்—■தேசாந்
தரத்திலிருக்க மனந் தான்பொருந்தமாட்டாது■
இருத்தலினியேதறியோம்யாம். (63)

ஆசாரியன் செய்த	ஆசாரியன் பண்ணின	மனம்தான் பொருந்த மாட்டாது	நெஞ்சு இசையகில்லாது :
உபகாரம் ஆனஅது	மஹோபகாரமானது	இனி	இங்ஙனே தத்துவமிருந்தும்
தூய்து ஆக	சுத்தமாக	இருத்தல்	ஆசாரியனைப் பிரிந்திருத்தற்கு
நெஞ்சுதன்னில் தோன்றும் ஏல்	நெஞ்சில் படுமானல் (பிறகு)	ஏது	காரணத்தை
தேசாந்தரத்தில் இருக்க	(ஆசாரியனைப் பிரிந்து) வேறொரு தேசத்தில்வஸிக்க	யாம் அறியோம்	நாம் அறியமாட்டோம்.

■■■—இரும்பைப் பொன்னாக்குமாபோலே ஆசார்யன் செய்த மஹோபகாரம் சிஷ்யனுடைய நெஞ்சில் நன்றாகத் தோன்றுமாகில் வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியே' என்று அத்யவஸாயங் கொண்டு ஒரு நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாமலிருக்க வேண்டியதாகுமத்தனை; ஆயினும் பிரிந்திருப்பார் சிலருண்டாகில் அவ்விருப்புக்கு ஹேது இன்னதென்று நாம் அறியோம் என்கிறார். 'ப்ரபலபாபமே ஹேது' என்று வெட்டிதாகச் சொல்லக்கூசி 'ஏது யாம் அறியோம்' என்கிறார். ஹேது என்னும் வடசொல் ஏதுவெனத் திரிந்தது. 'இருத்தலினில்' என்றும் பாடம். (63)

தன்னாரியனுக்குத் தானடிமைசெய்வது■ அவன்
இந்நாடுதன்னிலிருக்கும்நாள்—■—அந்நே
ரறிந்துமதிலாசையின்றி ஆசாரியனைப்
பிரிந்திருப்பாரார், மனமேபேசு. (64)

தன் ஆரியனுக்கு	ஸ்வாசார்யனுக்கு	அதில் ஆசை இன்றி	அந்த ஆசார்ய கைங்கரியத்தில் ருசியில்லாமல்
தான் அடிமை செய்வது	சிஷ்யனாகிய தான் கைங்கரியம் பண்ணுவதானது		
அவன் இ நாடு தன்னில் இருக்கும் நாள்	அவ்வாசிரியன் இவ்விபூதியில் எழுந்தருளியிருக்குமளவு மாம்;	ஆசாரியனை பிரிந்து இருப்பார் ஆர்	ஆசாரியனைப் பிரிந்து பிறிதோரிடத்தில் வஸிப்பாருமுளரோ?
அ நேர் அறிந்தும்	அந்த நேர்த்தியை அறிந்துவைத்தும்	மனமே பேசு	நெஞ்சே! சொல்லு.

■ ■ ■—ஆசார்யன் பக்கலில் அர்த்தங்கள் கேட்குமளவே அவர்க்குக் கைங்கரியம் பண்ணவேணும்; அர்த்தம் கேட்டுத் தலைக்கட்டினவாறே வேறிடம் சென்று எங்கேனும் வாழலாம் என்று நினைப்பது தகுதியன்று; ஆசாரியன் இந்தவிபூதியில் எழுந்தருளியிருக்குமளவும் அநுதினமும் கைங்கரியம் செய்தே ஸத்தை பெறவேணுமென்கிற சாஸ்த்ரார்த்தம் இதனால் வெளியிடப்பட்டதாயிற்று, ... (64)

ஆசாரியன்சிச்ச னுருயிரைப் பேணுமவன்■
தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை—■ ஆசையுடன்
நோக்குமவனென்னும் நுண்ணறிவைக் கேட்டுவைத்தும்■
ஆர்க்குமந்நேர் நிற்கையரிதாம். (65)

ஆசாரியன்	ஆசார்யரானவர்	என்னும் நுண் அறிவை	என்கிற இந்த நுட்பமான விசேஷார்த்தத்தை
சிச்சன் ஆர் உயிரை பேணுமவன்	சிஷ்யனுடைய ஆத்ம ஸ்வரூபத்தை நோக்கியிருக்கக்கடவர்;	கேட்டு வைத்தும்	(ஸ்ரீவசநபூஷணாதிகளிலே) கேட்டிருந்தாலுங்கூட
தேசு ஆரும் சிச்சன்	ஸ்வரூபஜ்ஞானமாகிற தேஜஸ்ஸு பொருந்திய சிஷ்யனானவன்	அ நேர் நிற்கை	அவ்வழியில் நிஷ்டையோடிருத்தல்
அவன் சீர் வடிவை	அவ்வாசார்யருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை	ஆர்க்கும் அரிது ஆம்	எப்படிப்பட்டவர்களுக்கும் அருமைப்பட்டேயிருக்கும்; [எளிதன்று]
ஆசை உடன் நோக்குமவன்	பக்தியோடு பேணக்கடவன்		

■ ■ ■—ஸ்ரீவசநபூஷணத்தில் மூன்றும்பிரகரணத்தில்—ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக்கடவன்; சிஷ்யன் ஆசாரியனுடைய தேஹத்தைப் பேணக்கடவன். இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபமுமாய் பகவத் கைங்கர்யமுமாயிருக்கும். ஆசார்யனுக்கு தேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி; சிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூபஹாநி" இத்யாதியாக அருளிச்செய்யப்பட்டுள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கே அநுஸந்தேயம். இவ்வர்த்த விசேஷங்களைக் கேட்கவும் கேட்பிக்கவும் அதிகாரிகள் உளரேயன்றி அனுட்டிக்க வல்லாரொருவருமிலரே யென்று அருமை கூறினராயிற்று. (65)

பின்பழகராம்பெருமாள் சீயர்■ பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கவாசையினால்—■ நம்பிள்ளைக்
கானவடிமைகள்செய் யந்நிலையை நன்னெஞ்சே■
ஊனமறவெப்பொழுதுமோர். (66)

பின்பழகராம் பெருமாள் சீயர்	பின்பழகிய பெருமாள் சீயரென்பவர்	நம்பிள்ளைக்கு ஆன அடிமைகள் செய்	(ஸ்வாசார்யரான) நம்பிள்ளைக்கு அனுகூலமான கைங்கரியங்களைச் செய்யப்பெற்ற
பெரும் திவத்திலும்	பரமபத வாழ்க்கையிலும்	அந்நிலையை	அந்த நிஷ்டையை
		நல் நெஞ்சே	நல்ல மனமே !
அன்பு அது அற்று	விருப்பமின்றிக்கே	ஊனம் அற	குறையொன்றுமின்றி [பரிபூர்த்தியாக]
மிக்க ஆசையினால்	பரமபக்தியோடு	எப்பொழுதும் ஓர்	அநவரதமும் சிந்தை செய்வாயாக.

—நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்து வாழ்ந்தவர்கள் பலர் இருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர் என்னும் சிஷ்யர்க்கு இருந்த ஆசார்யப்ரேமம் ஒப்புயர்வற்றது; நம்பிள்ளை திருவடிகளிலே நித்யகைங்கர்யம் செய்யப்பெறவேணுமென்றே இவர் சில ஔஷதங்களை ஸ்வீகரித்துத் திருமேனியைப் போஷிக்க விருப்பங்கொண்டிருந்தவர் என்பது வைபவ நூலில் விசதம். இவரைப்போல் நம்மால் இருக்கமுடியாமற்போனாலும் இவருடைய நிஷ்டையைச் சிந்தனை செய்யவாவது பெற்றால் அதுவே நாம் உஜ்ஜீவிக்கப் போதுமானதென்று காட்டினாராயிற்று. (66)

ஆசாரியர்களனைவருமுன்னாசரித்த
ஆசாரந்தன்னை யறியாதார்—பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு மருளாதே பூருவர்கள்
சீர்த்தநிலைதன்னை நெஞ்சே சேர். (67)

முன் ஆசாரியர்கள் அனைவரும்	பூருவாசாரியர்களெல்லாரும்	வார்த்தைகளை கேட்டு	பேச்சுக்களைக் கேட்டு
		மருளாதே	மனம் திரியாமல்
ஆசரித்த	அனுட்டித்துப் போந்த	பூருவர்கள்	முன்னோருடைய
ஆசாரம் தன்னை	அனுட்டானத்தை	சீர்த்த நிலை தன்னை	சீரிய நிஷ்டையையே
அறியாதார்	அறியப்பெறாதவர்கள்		
பேசுகின்ற	கண்டபடி சொல்லுகின்ற	நெஞ்சே சேர்	மனசே! அனுவர்த்திக்கப்பார்.

—புதுவைஷ்ணவங் கொண்டாடுஞ் சிலர் புதிது புதிதாகச் சில நடத்தைகளைக் கைப்பற்றி இதைச் செய்யவேணும் இதை அனுட்டிக்க வேணும் என்றிப்படி பேசவும் திருத்தவும் புறப்படுவர்கள்; நம்முடைய பூருவாசாரியர்களின் அனுட்டான முறைகளைத் தெரிந்து கொள்ளாதாருடைய அந்தப் பேச்சுக்களினால் மனம்திரியாமல் *செய்யாதன செய்யோம்* என்றும் *மேலையார் செய்வனகள்* என்றும் ஆண்டாளருளிச் செய்தபடியே பூர்வாநுஷ்டாந ஸரணியிலேயே வர்த்தித்தல் வேண்டுமென்று நியமித்தாராயிற்று. (67)

நாத்திகரும்நற்கலையின் நன்னெறிசேராத்திகரும்
ஆத்திகநாத்திகருமாமிவரை—ஓர்த்துநெஞ்சே!
முன்னவரும்பின்னவரும் மூர்க்கரெனவிட்டு நடுச்
சொன்னவரை நாளுந்தொடர். (68)

நாத்திகரும்	நாஸ்திகர்களும்	முன்னவரும் பின்னவரும்	முதலில் சொல்லப்பட்ட நாஸ்திகர்களும், பிந்திச் சொல்லப்பட்ட ஆஸ்திக நாஸ்திகர்களும்
நல் கலையின் நல் நெறி சேர் ஆத்திகரும்	உயர்ந்த சாஸ்த்ரங்களின் ஸன்மார்க்கத்திலே படிந்த ஆஸ்திகர்களும்	மூர்க்கர் என விட்டு	திருத்தமுடியாத மூர்க்கர்கள் என்று அவர்களிடத்திலே நசையற்று
ஆத்திக நாத்திகரும்	ஆஸ்திக நாஸ்திகர்களும்	நடு சொன்ன வரை	இடையே சொல்லப்பட்ட ஆஸ்திகர்களை
ஆம் இவரை	ஆகிய இம்மூன்று வகுப்பினரையும்	நாளும் தொடர்	எப்போதும் அநுவர்த்திப்பாயாக.
ஓர்த்து	ஆராய்ந்து பார்த்து		
நெஞ்சே	மனமே!		

■ ■ ■—ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டாம் ப்ரகரணத்தில் "அஜ்ஞனை விஷயப்ரவணன் கேவலநாஸ்திகனைப்போலே; ஜ்ஞாநவானை விஷயப்ரவணன் ஆஸ்திகநாஸ்திகனைப் போலே" இத்யாதியாக அருளிச்செய்தது இங்கே அநுஸந்தேயம். சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய புத்தியில்லாமல் தான்தோன்றியாகச் செய்து திரிகின்றவன் வெறும் நாஸ்திகனெனப்படுவன். சாஸ்த்ரங்களை ப்ரமாணமாக இசைந்து ஆஸ்திகனென்று சொல்லத்தக்கவனுயும், அந்த சாஸ்த்ரவரம்பில் அடங்காமல் தோன்றினபடியே செய்து திரிவதுபற்றி நாஸ்திகஸமனுயுமிருப்பவன் ஆஸ்திக நாஸ்திக னெனப்படுவன். ஆஸ்திகர்களே நமக்கு அநுவர்த்தநீயர்களென்றதாயிற்று. (68)

ஸத்ஸங்க மஹிமை கூறுதல்

நல்லமணமுள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு■
நல்லமணமுண்டாம்நலமதுபோல்—■ நல்ல
குணமுடையோர்தங்களுடன் கூடியிருப்பார்க்கு■
குணமதுவேயாம் சேர்த்திகொண்டு. (69)

நல்ல மணம் உள்ளது ஒன்றை	நல்ல வாஸனையுடையதொரு வஸ்துவை	நல்ல குணம் உடையோர் தங்களுடன்	ஸத்குணசாலிகளோடு
நண்ணி இருப்பதற்கு	அணைந்திருக்கிற பொருளுக்கும்	கூடி இருப்பார்க்கு	ஸஹவாஸம் பண்ணியிருக்குமவர்களுக்கு
நல்ல மணம் உண்டாம் நலம் அதுபோல்	(ஸம்ஸர்க்கபலத்தாலே) நல்ல பரிமளமுண்டாகுமென்கிற நியாயப்படி	சேர்த்தி கொண்டு	அந்த ஸம்பந்த வைபவத்தினல்
		அதுவே குணம் ஆம்	அந்த நற்குணமே விளைந்திடும்.

■ ■ ■-ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டாம் பிரகரணத்தின் முடிவில் ப்ரபந்ந திநசர்யையை வெகு அழகாக அருளிச்செய்யுமிடத்து "அநுகூலஸஹவாஸமும் ப்ரதிகூலஸஹவாஸநிவ்ருத்தியும் ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்" என்றருளிச் செய்திருப்பதைத் திருவுள்ளம்பற்றி இப்பாட்டும் மேலிற்பாட்டும் அருளிச் செய்யப்படுகின்றன. ஜ்ஞாநாநுஷ்டானங்களை வளர்க்கவல்ல அநுகூலரான ஸத்துக்களை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப்பிரியாமலும் ஸ்வரூபத்தைக் கெடுக்கவல்ல பிரதிகூலரான அஸத்துக்களைக் கண்ணெடுத்

துப் பாராமலும் வர்த்திக்கவேணுமென்கிற ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ர நியமனத்தை வெளியிட்டருளுகிறபடி.

"நயமது போல்" "நலமது போல்" என்பன பாட பேதங்கள். (69)

அஸத்ஸஹவாஸத்தின் வர்ஜநீயதையைக் காட்டுதல்

தீயகந்தமுள்ள தொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றுக்கு■
தீயகந்தமேறும் திறமதுபோல்—■தீய
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப்பார்க்கு■
குணமதுவேயாம் செறிவுகொண்டு. (69)

தீய கந்தம் உள்ளது ஒன்றை	கெட்ட நாற்றமுடையதானவொரு வஸ்துவை	தீய குணம் உடையோர் தங்களுடன்	துஷ்டகுணமுடையவர்களுடன
சேர்ந்து இருப்பது ஒன்றுக்கு	அணைந்திருக்குமதான ஒரு பொருளுக்கு	கூடி இருப்பார்க்கு	
		செறிவுகொண்டு அந்தச் சேர்க்கையினால்	
தீய கந்தம் ஏறும திறம் • அதுபோல்	கெட்ட நாற்றம் பற்றுகிறதென்கிற நியாயப்படிக்கு	அதுவே குணம் ஆம்	அந்தத் தீயகுணமே வளைந்திடும.

■■■—ஆதலால் துஷ்டஸஹவாஸம் வர்ஜ்யம் என்று சேஷபூரமாகக் கடவது. இப்படியே கீழ்பாட்டிலும் ஸத்ஸஹவாஸமே கர்த்தவ்ய மென்பதாகப் பூரித்துக்கொள்வது. (70)

ஸ்ரீ வசநபூஷணவிருத்தார்த்தவாதிகளின் புன்மை கூறுதல்

முன்னோர்மொழிந்த முறைதப்பாமல்கேட்டு■
பின்னோர்ந்துதாமதனைப் பேசாதே—■தம்நெஞ்சில்
தோற்றினதேசொல்லி யிது சுத்தவுபதேசவர
வாற்றதென்பர்■ மூர்க்கராவார். (71)

முன்னோர் மொழிந்த	பூருவர்கள் அருளிச்செய்தவற்றை	தம் நெஞ்சில்	தமது உள்ளத்திலே
முறை தப்பாமல் கேட்டு	முறை வழுவாமே ஸதாசார்ய ஸன்னிதானத்தில் கேட்டுணர்ந்து	தோற்றினதே சொல்லி	தோற்றின தாந்தோன்றியர்த்தங்களையே சொல்லி
		இது	'இந்த அர்த்தமே
பின் ஓர்ந்து	பின்பு அதை அப்படியே மனனம் பண்ணி	சுத்த உபதேச வரவு ஆற்றது என்பர்	சுத்த ஸம்ப்ரதாய உபதேச பரம்பரையாய் வரலுற்றது' என்று பொய்யும் சொல்லிமவர்களே
தாம் அதனை பேசாதே	தாங்கள் அதை அப்படியே பேசவேண்டியது ப்ராப்தமாயிருக்க அங்ஙனம் பேசாமல்	மூர்க்கர் ஆவார்	மூர்க்கரெனத் தகுந்தவர்கள்

■■■—வாசாமகோசரமான மஹிமை வாய்ந்த ஸ்ரீ வசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தில் ப்ரதிபத்தி வஹிக்க ப்ராப்தமாயிருக்க; அது செய்யாததோடு இந்த சாஸ்த்ரார்த்தங்களை வெறுப்பாரும் உண்டாயிருந்தார்கள். அவர்கள் முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டவர்களல்லர்; முன்னோர் மொழிந்த முறைப்படியே பேசவேணுமென்கிற விரதம் கொண்டவர்களுமல்லர். எதையேனும் தாந்

தோன்றியாகச் சொல்லுவர்கள். அங்ஙனம் சொல்லுவதோடு நில்லாமல் தாம் ஸதாசார்ய பரம்பரையாகக் கேட்டுப பேசுவதாகவே பொய்சொல்லி உலகை வஞ்சிக்கவும் வல்லவர்கள்; அவர்கள் ஸதாசார்யர்களை மூர்க்கரென்று தூஷிக்கவும் வல்லர்; அப்படிப்பட்டவர்களை மூர்க்கர்களென்று விட்டுத் தொலைக்கவேண்டிய தொழிய அவர்களது பேச்சுக்களுக்கு மறுப்புரைத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை என்று இப்பாட்டினால் தெளியவருளிச் செய்தாராயிற்று.

முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டுச் சொல்லுகிறவர்களை "த்ருட பூர்வச்ருதோ மூர்க்க:" என்று தூஷித்தால் அது ஏற்குமோ? பூர்வேப்ய: ச்ருதம்;— பூர்வ ச்ருதம்; த்ருடம் பூர்வச்ருதம யஸ்ய ஸ:—த்ருடபூர்வச்ருத:—முன்னோரிடம் கேட்டதையே திடமாக வைத்துக் கொள்ளுகிறவன் மூர்க்கன் என்று அஸ்தாநே அயுக்தமாகச் சொல்லி தூஷித்தவர்கள் சிலர்; அந்தோ! பூருவர்களிடத்தில் ச்ருதமானதை த்ருடமாக வைத்துக்கொள்பவர் மூர்க்கரல்லர்; பூருவர்களிடத்தில் ஒன்றும் கேளாமல் தாந்தோன்றியாகச் சொல்லிவிட்டு உலகை வஞ்சிப்பவரே மூர்க்கர் என்று மிகவும் யுக்தமாகவும் ஸாரமாகவும் அருளிச் செய்தாராயிற்று. **(71)**

உபதேச நிகமனம்

பூருவாசாரியர்கள் போதமனுட்டானங்கள்
கூறுவார் வார்த்தைகளைக்கொண்டு நீர்—தேறி
இருள்தருமாஞாலத்தே யின்பமுற்றுவாழும்
தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து. **(72)**

பூருவாசாரியர்கள்	பூருவாசாரியர்களினுடைய	நீர் தேறி	நீங்கள் தெளிவு பெற்று
		தெருள் தரும்	நல்லறிவை உபகரித்தருளவல்ல
போதம் அனுட்டானங்கள்	ஜ்ஞாநாநுஷ்டானங்களை	மா தேசிகனை	சிறந்த ஆசாரியரை
		சேர்ந்து	அடிபணிந்து
கூறுவார்	எடுத்துச் சொல்லுகின்ற மஹான்களினுடைய	இருள் தரு மா ஞாலத்தே	இவ்விருள் தருமா ஞாலத்திலே
வார்த்தைகளை கொண்டு	ஸ்ரீ ஸூக்திகளினால்	இன்பம் உற்று வாழும்	ஆநந்தநிர்ப்பரர்களாய் வாழுங்கள்.

—கீழ்ப்பாட்டிலே சொன்ன மூர்க்கர்களையும் அப்படிப்பட்டவர்களெழுதும் சுவடிகளையும் ஒரு பொருளாக மதியாமல், நம்முடைய பூருவாசாரியர்களருளிச் செய்த அர்த்த விசேஷங்களையும் அவர்களது அனுட்டானங்களையும் எடுத்துரைக்கும் மஹநீயர்களின் திருவாக்குக்களையே நிதியாகக் கொண்டு ஒரு கலக்கமுமின்றிக்கே ஸதாசார்யரை ஆச்ரயித்து வாழப்பெறில் அவர்களுக்கு இந்நிலம் இருள் தருமாஞாலமாகத் தோற்றாது. நலமந்தமில்லதோர் நாடாகவே தோற்றும்; இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்* என்று பரமபதத்தையும் வெறுத்து இவ்வுலகத்திலேயே ஆனந்தமாக நெடுநாள் வாழப்பெறலாமென்றவாறு. திருவாய்மொழியில் *மாசறு சோதிப் பதிகத்திற்குப் பலச்ருதியான பாசுரத்தில் "இப் பத்தும் உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" என்றருளிச்செய்த கணக்கிலே இவ்விருள் தருமாஞாலமே தெருள்தருமாஞாலமாகிவிடும் என்று திருவுள்ளம்போலும். (72)

பயனுரைத்துத் தலைக்கட்டுதல்

இந்தவுபதேசரத்தின மாலைதன்னை
சிந்தைதனில் நாளும் சிந்திப்பார்—எந்தை
எதிராசரின்னருளுக் கென்று மிலக்காகி
சதிராக வாழ்ந்திடுவர் தாம். **(73)**

இந்த உபதேச ரத்தின மாலை தன்னை	உபதேச ரத்தின மாலை யென்னுமிந்தப் பிரபந்தத்தை	இன் அருளுக்கு	பரமகிருபைக்கு
நாளும்	அநுதினமும்	என்றும் இலக்கு ஆகி	எந்நாளும் பாத்திரமாகி
சிந்தைதனில்	உள்ளத்தினுள்ளே	சதிர் ஆக	ஒரு குறைவுமின்றிக்கே செல்வம் பொலிய
சிந்திப்பார் தாம்	சிந்தனை செய்யுமவர்கள்	வாழ்ந்திடுவர்	வாழப் பெறுவர்கள்.
எந்தை எதிராசர்	ஸ்வாமி எம்பெருமானாருடைய		

■■■—எம்பெருமானார் திருவுள்ளத்திற்கு உகப்பான விஷயங்களையே தொடுத்து இயற்றியுள்ள இந்தச் சொல்மாலையைச் சிந்தையிலே அணிந்து கொள்ளுமவர்க்கு எம்பெருமானாருடைய பரமகிருபையே பேருகுமென்று பலனருளிச்செய்து தலைக்கட்டினாராயிற்று.

எம்பெருமானார் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை நியமித்தருளின வராதலால் அந்தக்கணக்கிலே எழுபத்துநான்கு பாசுரமாக இத்திவ்யப்பிரபந்தத்தை இயற்றியருள வேணுமென்று மணவாள மாமுனிகள் திருவுள்ளம் பற்றியிருந்தாராம்; அப்போது மாமுனிகளையே தெய்வமாகக்கொண்டவொரு மஹாசார்யர் "மன்னுயிர்காளிங்கே மணவாள மாமுனிவன்" என்கிற பாசுரத்தைப் பணித்து இந்தப் பாசுரம் உபதேசரத்தினமாலையோடு சேர்ந்தே அநுஸந்திக்கப் படுமாறு அருள்புரியவேணுமென்று பெரியபெருமாள் திருவடிகளிலே வணங்கி வழிபட்டுப் பிரார்த்திக்க அப்படியே பகவந்நியமனமாயிற்றென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை. ஆனது பற்றியே எழுபத்துமூன்று பாட்டளவிலே தலைக்கட்டியுள்ளார் மாமுனிகள். பக்தர் பணித்த அந்தப்பாசுரம் அடுத்து வருவது. (73)

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன் ■
பொன்னடியாஞ் செங்கமலப்போதுகளை ■—உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மை ■
கரத்தாலே தீண்டல் கடன். (74)

மன் உயிர்காள்	முமுக்ஷு சேதநர்களே !	சிரத்தாலே	தலையினாலே
இங்கே	இந்நிலத்திலே	தீண்டில்	ஸ்பர்சிக்கப் பெற்றால்
மணவாள மா முனிவன்	மணவாள மாமுனிகளினுடைய	நம்மை	அப்படிப்பட்ட பாக்கியம் பெற்ற அஸ்மதாதிகளை
பொன் அடி ஆம்	திருவடிகளாகிற	அமானவனும்	அமானவனென்கிற திவ்ய புருஷனும்
செம் கமலம் போதுகளை	செந்தாமரை மலர்களை	கரத்தாலே	தனது கைகளால்
உன்னி	(இவையே நமக்குத் தஞ்சமென்று) பிரதிபத்தி பண்ணி	தீண்டல்	ஸ்பர்சிப்பதானது
		கடன்	கடமையாகும்.

"அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண்டல் கடன்" என்றதன் கருத்து இருவகைப்படும். மாமுனிகள் ஆர்த்திப் பிரபந்தத்தில் (24) "இந்த வுடல் விட்டிரவிமண்டலத்தூடேகி........விரசைதனிற்குளித்தங்கு அமானவனாலொளிக் கொண்ட சோதியும் பெற்று" என்றருளிச் செய்தபடி முக்தி ஸாம்ராஜ்யாநுபவத்திற்கு முன்னாக அமானவ கரஸ்பர்சம் இன்றியமையாததாம்; அது மாமுனிகளின் பக்தர்களுக்கு நேருவது கடமையாகும் என்றும்; அது நேருவது அவசியமற்றது என்றும் இருவகைப் பொருள்படும். (*)

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஜீயர் திருவடிகளே சரணம்.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை பொழிப்புரையுடன் கூடியது.

நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியானது நூறுபதிகங்கள் கொண்டது. ஒவ்வொரு பதிகத்தின் தாற்பரியத்தையும் ஸாரமாக வெடுத்துத் தொகுத்து மணவாளமாமுனிகளால் இத்திவ்யப்பிரபந்தம் நூறு பாசுரமாகவும் அந்தாதித் தொடையாகவும் அருளிச் செய்யப்பட்டதாதலால் இதற்குத் திருவாய்மொழி நூற்றந்தாதியென்று திருநாமமாயிற்று.

உலகில் எத்தனையோ பிரபந்தங்கள் அவதரித்திருந்தாலும் இப்பிரபந்தத்திற்கு நிகரானதொன்றில்லையென்பது மாச்சரியமற்ற அநுபவரஸிகர்களின் ஸித்தாந்தமாகும். *அல்லும் பகலுமனுபவிப்பார் தங்களுக்குச் சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் நல்ல மணவாள மாமுனிவன்* என்று இப்பிரபந்தத்திற்குத் தனியன் அமைந்தது சாலவும் பொருந்தும். சொல் நோக்கும் பொருள் நோக்கும் தொடை நோக்கும் மற்று எந்நோக்குங்காண இலக்கியமாகவும் இலக்கணமாகவும் அமைந்தது இத்திவ்வியப் பிரபந்தம்.

திருவாய்மொழியிலுள்ள ஒவ்வொரு பதிகத்தினுடையவும் முதற் சொல்லே இப்பிரபந்தத்தில் ஒவ்வொரு பாசுரத்திற்கும் முதற் சொல்லாக அமைக்கப்பட்டுள்ளது; அதுவுமல்லாமல் அந்தாதித் தொடையாகவும் இது பாடப்பட்டிருக்கின்றது. பாசுரந்தோறும் நம்மாழ்வாருடைய திருநாமம் துதியுடன் அமைய வேணுமென்பதும் இதில் ஒரு நியமமாகக் கொள்ளப்பட்டது.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழியும் அந்தாதித் தொடையாலமைந்ததேயாயினும் ஒவ்வொரு பாசுரத்தையும் முடிப்பது அவருடைய இஷ்டப்படியே இருந்தது. இன்ன சொல்லைத்தான் பாசுரத்தின் முடிவிலே அமைக்கவேணுமென்கிற நிர்ப்பந்தம் எந்த அந்தாதிப் பிரபந்தத்திற்கும் இல்லையன்றோ! முடித்த சொல்லையே மேற்பாட்டில் முதலாக அமைக்க வேணுமென்கிற நிர்ப்பந்தம் மாத்திரமேயன்றோ அந்தாதிப் பிரபந்தங்களுக்கு உள்ளது. இந்த நூற்றந்தாதி அவ்வளவேயன்றிக்கே ஒவ்வொருபாட்டின் முடிக்குஞ் சொல்லிலும் நிர்ப்பந்தமுடையதாயிற்று. ஆகவே இப்படி அதிசயம் மிகுந்த பிரபந்தமொன்று இதுவரை தோன்றியதுமில்லை. இனித் தோன்றவுங்காண முடியாது. திருவாய்மொழியின் பதிகங்களொவ்வொன்றுக்கும் உயிரான கருத்தையெடுத்து அமைத்திருக்குமழகு பார்த்தாலோ அது நெஞ்சால் நினைப்பரிதால்.

இத்திவ்வியப் பிரபந்தமானது எவ்வளவு விரிவான வியாக்கியானத்தையும் கொள்ளும். ஏனெனில், திருவாய்மொழியின் ஸாரமாக அமைந்த பிரபந்தமாதலால்

அதில் அடங்கியுள்ள பொருள்கள் பெரும்பாலும் இதில் விவரிக்கத் தகுமாதலால் ஆனாலும் நெஞ்சில் எளிதாகத் தேக்கிக்கொள்ளவுரியதாம்படி பதவுரையும் பொழிப்புரையும் எழுதப்படுகின்றன. *

(தனியன்கள்)

அல்லும்பகலு மனுபவிப்பார் தங்களுக்குச்
சொல்லும் பொருளுந் தொகுத்துரைத்தான்—நல்ல
மணவாள மாமுனிவன் மாறன்மறைக்குத்
தணவா நூற்றந்தாதி தான்.

அல்லும் பகலும்	இரவும் பகலுமாகிய எப்பொழுதும்	மாறன் மறைக்கு	நம்மாழ்வாரருளிச்செய்த தமிழ் வேதமான திருவாய்மொழிக்கு
அனுபவிப்பார் தங்களுக்கு	(நெஞ்சு குளிரும்படி) அநுபவிக்க விரும்புமவர்கட்காக	தணவா நூற்றந்தாதி	மிகவும் பொருந்தின நூற்றந்தாதியை
சொல்லும் பொருளும்	(இனிமையான) சொற்களையும் பொருள்களையும்	தொகுத்து உரைத்தான்	ஸங்கிரகமாக அருளிச் செய்தார்.
நல்ல மணவாள மாமுனிவன் தான்	நன்மை பொருந்திய மணவாள மாமுனிகள்		

(இதுவே நமக்குத் தஞ்சமென்க.)

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளா லுட்பொருள்கள் தன்னுடனே—சொன்ன
திருவாய் மொழிநூற்றந் தாதியாந் தேனை
ஒருவா தருந்துநெஞ்சே யுற்று.

நெஞ்சே	மனமே!	சொன்ன	அருளிச்செய்த
மன்னு புகழ்சேர்	நிலைபெற்ற கீர்த்தியையுடையவரான மணவாளமாமுனிவன்—;	திருவாய்மொழி நூற்றந்தாதி ஆம் தேனை	திருவாய்மொழி நூற்றந்தாதியாகிற தேனை
தன் அருளால்	தமது கிருபையினாலே	ஒருவாது	இடைவிடாமல்
உள் பொருள்கள் தன்னுடனே	ஆழ்ந்த கருத்துக்கள் அமையும்படி	உற்று	ஊன்றி
		அருந்து	பருகக்கடவை.

தனியன் உரை முற்றிற்று.

உயர்வே பரன்படியை உள்ள தெல்லாந்தான் கண்டு
உயர்வேத நேர்கொண் டுரைத்து*—மயர்வேதும்
வாராமல் மானிடரைவாழ்விக்குமாறன் சொல்*
வேராகவே விளையும் வீடு. (1)

உயர்வு ஏய்	உயர்த்தி பொருந்திய	மயர்வு ஏதும் வாராமல்	சிறிது அஜ்ஞானமும் தலைகாட்டாதபடியாக
பரன்	பரம புருஷனுடைய	மானிடரை	மனிதர்களை
படி உள்ளது எல்லாம்	ஸ்வரூப ஸ்வபாவங்களாயிருப்பவற்றை யடங்கலும்	வாழ்விக்கும்	உஜ்ஜீவிப்பித்தருளின
தான் கண்டு	தாம் ஸாக்ஷாத்கரித்து	மாறன்	நம்மாழ்வாருடைய
உயர் வேதம் நேர் கொண்டு	உயர்ந்த ப்ரமாணமாகிய சுருதியின் சாயையாலே	சொல் வேர் ஆக	ஸ்ரீஸூக்தியடியாக
உரைத்து	அருளிச் செய்து,	வீடு விளையும்	மோக்ஷமுண்டாகும்.

—முதல் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்துவம் பிரதிபாதிக்கப்பட்டது. 'ஆமவை யாயவையாய் நின்றவர்' என்றும் 'முழுதுண்ட பரபரன்' என்றும் 'அளிபொறையாய் நின்ற பரன்' என்றும் பரத்வமே யாயிற்று இதிற் சொன்னது.

மயர்வு ஏதும் வாராமல் = ஆழ்வாருடைய மயர்வை எம்பெருமான் போக்கினன், ஸம்ஸாரிகளுடைய மயர்வை ஆழ்வார் போக்கினர் என்க. அடியோடு ஞானமே யில்லாமையும், ஒன்றை வேறொன்ருக அறிகையும், அதுவோ இதுவோ வென்று ஸந்தேஹங் கொள்ளுதலும். தெரிந்ததை மறந்தொழிதலுமாகிற இவையெல்லாம் மயர்வு எனப்படும். அது மானிடர்க்கு வாராமல் ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளி ஆழ்வார் வாழ்வித்தாராயிற்று.

மாறன் சொல்வோராகவே விளையும்வீடு— வேர் இன்றி விருக்ஷம் கிளம்பாதவாறுபோல ஆழ்வாரருளிச்செயலின்றி மோக்ஷம் விளையாதென்று காட்டினபடி. (1)

வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ் நாரணன்தாள்
நாடு நலத்தாலடைய நன்குரைக்கும்— நீடுபுகழ்
வண்குருகூர் மாறன் இந்த மாநிலத்தோர் தாம்வாழ
பண்புடனே பாடியருள் பத்து. (2)

நீடு புகழ்	பெரும் புகழையுடையவரும்
வண் குருகூர்	வளப்பத்தையுடைய திருநகரியில் திருவவதரித்தவருமான
மாறன்	நம்மாழ்வார்
இந்த மா நிலத்தோர் தாம்	இப் பெரிய பூமியிலுள்ளவர்கள்
வாழ	உஜ்ஜீவிப்பதற்காக
பண்புடனே	கிருபையுடனே
பாடி அருள்	பாடியருளின
பத்து	(வீடுமின் முற்றவுமென்று தொடங்கியுள்ள) பத்துப் பாசுரங்களானவை
மற்ற எவையும்	(பகவத் விஷயந்தவிர) மற்றெல்லாவற்றையும்
வீடு செய்து	விட்டு
மிக்க புகழ்	மிகுந்த புகழுடைய
நாரணன்	நாராயணனது
தாள்	திருவடிகளை
நாடு	உலகத்தாரெல்லாரும்
நலத்தால் அடைய	பக்தியுடன் ஆச்ரயிக்குமாறு
நன்கு உரைக்கும்	நன்ருக உபதேசிக்கும்.

—எம்பெருமானைப் பஜிப்பதற்கு இடையூருயும் அஹங்கார ஹேதுவாயுமுள்ள எல்லாவற்றையும்விட்டு, கல்யாணகுணங்கள் நிறைந்த ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளை உலகம் முழுவதும் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு நம்மாழ்வார் பரம கிருபையுடன் உபதேசித்த பதிகம் வீடுமின் முற்றவுமென்பதாம். (2)

பத்துடையோர்க் கென்றும் பரனெளிய னும்பிறப்பால்
முத்திதரும் மாநிலத்தீர் மூண்டவன்பால்—பத்திசெயு
மென்றுரைத்த மாறன்றனின் சொல்லாற்போம் நெடுகச்
சென்ற பிறப்பாமஞ்சிறை. (3)

பரன்	ஸர்வேச்வரன்	மூண்ட அன் பால்	கிளர்ந்தெழுந்த ப்ரேமத்துடனே
பத்து உடையோர்க்கு	பக்திமான்களுக்கு	பத்தி செயும்	(அவன் பக்கலிலே) பக்தியைப் பண்ணுங்கோள்;
என்றும்	எந்நாளும்	என்று உரைத்த	என்று உபதேசித்தருளின
பிறப்பால்	அவதாரத்தினால்	மாறன் தன்	ஆழ்வாருடைய
எளியன் ஆம்	ஸுலபனாவன்;	இன் சொல்லால்	இனிமையான அருளிச் செயலான இத்திருவாய் மொழியினால்
முத்திதரும்	மோக்ஷத்தையும் தந்தருளுவன்; (ஆதலால், அவன் அவதரிப்பதற்கு உரிய)	நெடுக சென்ற பிறப்பு ஆம் அம் சிறை போம்	நீளமாகத் தொடர்ந்து வந்த பிறவியாகிய கடுஞ்சிறை நீங்கும்.
மா நிலத்தீர்	(இந்தப்) பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களே!		

■■■—எம்பெருமான் பக்திமான்களுக்கு அவதரித்து எளியனாய் முத்தியுமளிப்பானாகையாலே அவன் திறத்துப் பக்தி புரியுங்கோளென்று உபதேசித்த ■பத்துடையடியவர் திருவாய்மொழியை அநுஸந்திக்கப்பெற்றால் அநாதியான ஸம்ஸார பந்தத்தில் நின்றும் வீடுபெறலாகு மென்றாராயிற்று. முத்தி – முக்தி. 'மூண்டு அவன் பால்' என்றும் பிரிப்பாருளர். அவன் பால் அவகாஹித்து என்றபடி. (3)

அஞ்சிறையபுட்கள்தமை ஆழியானுக்கு■ நீர்
என்செயலைச் சொல்லு மெனவிரந்து■—விஞ்ச
நலங்கியதும்மாறனிங்கே நாயகனைத்தேடி■
மலங்கியதும் பத்திவளம். (4)

மாறன்	நம்மாழ்வார்.	என	என்று
அம் சிறைய புட்கள் தமை	அழகிய சிறகுகளையுடைய (நாரை முதலிய) பறவைகளை நோக்கி,	இரந்து	வேண்டிக் கொண்டு
நீர்	நீங்கள்	விஞ்ச	மிகவும்
ஆழியானுக்கு	க்ஷீராப்திநாதன் பக்கலிலே சென்று	நலங்கியதும்	நலங்குலைந்ததும்,
என் செயலை	என் படியை	இங்கே	இந் நிலத்திலே
சொல்லும்	தெரிவியுங்கள்'	நாயகனை தேடி	நாயகனான எம்பெருமானைத் தேடி
		மலங்கியதும்	நிலை கலங்கியதும்
		பத்தி வளம்	பக்தியின் பெருமையாகும்.

■■■—இப் பாசுரத்தினால், அஞ்சிறையமடநாராய் என்னுமித்திருவாய்மொழியின் ப்ரமேயத்தையும், இத் திருவாய்மொழியில் ஆழ்வார் பெண்ணிலைமையெய்தித் தூதுவிட்டமைக்கு உரிய உபபத்தியையும் சேர்த்து அருளிச் செய்தாராயிற்று. (4)

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் தன்மை■
உளமுற்றங் கூடுருவ வோர்ந்து■—தளர்வுற்று
நீங்கநினைமாறனை மால் நீடிலகுசீலத்தால்■
பாங்குடனே சேர்த்தான் பரிந்து (5)

வளம் மிக்க	செல்வத்தால் மிகுந்த	தளர்வுற்று	தளர்ந்து
மால்	எம்பெருமானுடைய	நீங்க நினை	(எம்பெருமானை விட்டு) நீங்க வேணுமென நினைத்த
பெருமை	(நித்திய ஸூரிநாதத்வம் முதலிய) பெருமையும்	மாறனை	ஆழ்வாரை
மன் உயிரின்	ஆத்மாவினுடைய	மால்	ஸர்வேச்வரன்
தண்மை	நைச்சியமும்	நீடு இலகு சீலத்தால்	நெடுகி விளங்குவதான (தனது) சீலகுணத்தினால்
உளம் உற்று	திருவுள்ளத்தில் பட,	பரிந்து	ஸ்நேஹித்து
அங்கு	அப்போது	பாங்குடனே	நன்றாக
ஊடுருவ ஓர்ந்து	உட்புகுந்து ஆராய்ச்சி செய்து	சேர்த்தான்	அணைத்துக் கொண்டான்.

* * *—'பெருமையில் தலை நின்ற அப்பெருமானைச் சிறுமையில் தலை நின்ற நாமோ அணுகுவது!' என்று தளர்ச்சியுண்டாகி எம்பெருமானைவிட்டு நீங்கப் பார்த்தார் ஆழ்வார்; அப்போது அவர்க்கு எம்பெருமான் தனது சிறந்த சீல குணத்தைக்காட்ட, அந்த குணத்திலீடுபட்டு ஆழ்வார் எம்பெருமானோடு பொருந்தினபடியைப் பேசின *வளவேழுலகு திருவாய்மொழியின் ப்ரமேயத்தை இப்பாட்டினால் வெளியிட்டாராயிற்று.

உளமுற்று—எச்சத்திரிபு; உளமுற என்றபடி. "சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை." (5)

பரிவதி லீசன்படியைப் பண்புடனே பேசி*
அரியனல னாராதனைக் கென்று*—உரிமையுடன்
ஓதியருள் மாறன் ஒழிவித்தா னிவ்வுலகில்
பேதையர்கள் தங்கள் பிறப்பு. (6)

பரிவது இல் ஈசன்	ஹேயகுணமற்றவனான எம்பெருமானுடைய	உரிமையுடன்	ஔசித்யத்தோடு
படியை	(ஆராதிப்பதற்கு எளியன் என்கிற) ப்ரகாரத்தை	ஓதி அருள்	அருளிச் செய்த
பண்புடனே பேசி	அழகாக அருளிச்செய்து	மாறன்	நம்மாழ்வார்
ஆராதனைக்கு அரியன் அலன் என்று	(அவன்) ஆராதிப்பதற்கு அருமையானவனல்லன் என்று (இவ்விஷயத்தை)	இ உலகில்	இவ்வுலகத்திலுள்ள
		பேதையர்கள் தங்கள்	பாமரர்களினுடைய
		பிறப்பு	பிறவியை
		ஒழிவித்தான்	தொலைத்திட்டார்.

* * *—ஸர்வேச்வரன் அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே நாம் இட்டது கொண்டு நிறைய வேண்டியவனல்லனாதலால் அன்போடு நாம் இடுவது அணுவளவே யாயினும் அதுதன்னையேகொண்டு பரம திருப்தியடைகிறானென்பதைத் தெரிவிக்கின்ற முகத்தால் எம்பெருமானுடைய ஆராதந ஸௌகர்யத்தை ஆழ்வார் *பரிவதிலீசனையென்னும் திருவாய்மொழியிலருளிச்செய்து இத்தகைய திருவாய்மொழியை உபகரித்ததனால் நம் போன்ற அறிவிலிகளின் பிறவித் துன்பத்தையும் போக்கியருளினாராயிற்று என்றதாம். (6)

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்ப முய்க்கும்*
திறமளிக்குஞ் சீலத் திருமால்*—அற[illegible]யன்
பற்றுமவர்க் கென்று பகர்மாறன் பாதமே*
உற்றதுணை யென்றுளமே யோடு. (7)

உளமே	நெஞ்சே!
பிறவி அற்று	ஜன்ம ஸம்பந்தமற்று
நீள் விசும்பில்	பரமாகாசமென்கிற பரம பதத்தில்
பேர் இன்பம் உய்க்கும் திறம்	ப்ரஹ்மாநந்த மநுபவிக்குந் திறத்தை
அளிக்கும் சீலம்	அநுக்ரஹிக்கவல்ல ஸ்வபாவமுடைய
திருமால்	எம்பெருமான்
பற்றுமவர்க்கு	தன்னைவந்து பணியுமவர்கட்கு
அற இனியன் என்று	மிகவும் போக்யனாயிருப்பனென்று
பகர்	அருளிச்செய்த
மாறன்	நம்மாழ்வாருடைய
பாதமே	திருவடிகளே
உற்ற துணை என்று	(நமக்கு) ப்ராப்தமான துணை யென்று கொண்டு
ஓடு	விரைந்துசென்று பணி.

* * *—ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துத் திருநாட்டில் நித்யாநந்த மநுபவிக்கப் பெறுவதான பேற்றையளிக்கவல்ல எம்பெருமானுடைய ஆச்ரயணமானது வருத்தமாக இராமல் மிகவும் இனிதாகவே யிருக்குமென்று ஆச்ரயணத்தின் போக்யதையை * பிறவித்துயரற திருவாய்மொழியிலே யருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சமென்றதாயிற்று. (7)

ஓடுமனஞ் செய்கையுரை ஒன்றிநில்லாதாருடனே*
கூடிநெடுமா லடிமைகொள்ளுநிலை*— நாடறிய
ஓர்ந்தவன்றன் செம்மை உரைசெய்த மாறனென*
ஏய்ந்துநிற்கும் வாழ்வா மிவை. (8)

ஓடும்	இதர விஷயங்களில் விரைந்து ஓடுகின்ற
மனம்	நெஞ்சும்
செய்கை	காயமும்
உரை	வாக்கும் (ஆகிய இவை)
ஒன்றி நில்லாதாருடனே	ஒருவழிப்பட்டு நிற்கப்பெறாத கோணல் பொருந்திய ஸம்ஸாரிகளோடு
கூடி	சேர்ந்து
நெடுமால்	ஸர்வேச்வரன்
அடிமை கொள்ளும் நிலை	அடிமை கொள்ளுங் குணத்தை
நாடு அறிய	நாட்டார் அறியுமாறு
ஓர்ந்து	ஆராய்ந்து
அவன் தன் செம்மை	அப்பெருமானுடைய ருஜுத்வ குணத்தை
உரை செய்த	அருளிச்செய்த
மாறன் என	ஆழ்வார் என்று அநுஸந்தித்த வளவிலே
வாழ்வு ஆம் இவை	ஸ்வரூபாநுரூபமான வாழ்ச்சிகள்
ஏய்ந்து நிற்கும்	பொருந்தி நிலைநிற்கும்.

* * *—எம்பெருமானை ஆச்ரயிக்குமவர்கள் மனமொழிமெய்களில் வேறுபாடுடையவர்களாகிச் செவ்வைக் கேடரான ஸம்ஸாரிகளாகையாலே அவர்களோடு பரிமாறுவது எம்பெருமானுக்கு இயலுமோ என்கிற சங்கை நீங்குமாறு, நீர் ஏறாத மேடுகளிலே எதையேனுஞ் செய்து நீரேற்றுமாபோலே இவர்களுடைய செவ்வைக்கேடு தானே தனக்குச் செவ்வையாம்படி அவர்களோடே கூடிப்பரிமாறும் ருஜுத்வகுணத்தை *ஓடும்புள் திருவாய்மொழி முகத்தாலே வெளியிட்டருளின நம்மாழ்வாரை அநுஸந்திக்கவே நமது வாழ்ச்சி நிலைநிற்குமென்கை. (8)

இவையறிந்தோர் தம்மளவில் ஈசனுவந்தாற்ற*
அவயவங்கள்தோறுமணையுஞ் — சுவையதனைப்
பெற்று* ஆர்வத்தால் மாறன் பேசினசொல்பேச* மால்
பொற்றாள் நஞ்சென்னி பொரும். (9)

இவை	கீழ்த்திருவாய் மொழிகளில் அநுபவிக்கப்பட்ட திருக்குணங்களை	பெற்று	அடைந்து
அறிந்தோர் தம் அளவில்	அறிந்தவர்களின் பக்கலில்	ஆர்வத்தால்	(அங்ஙனம் அடைந்த) இனிமையினால்
ஈசன்	எம்பெருமான்	மாறன்	ஆழ்வார்
உவந்து	திருவுள்ளமுவந்து	பேசின	அருளிச்செய்த
ஆற்ற	பொறுக்கப் பொறுக்க	சொல்	(இந்தத் திருவாய்மொழியாகிற) ஸ்ரீஸூக்தியை
அவயவங்கள் தோறும்	(ஒவ்வொரு அவயவமாக) எல்லா அவயவங்களிலும்	பேச	(நாம்) உச்சரிக்க
அணையும்	வந்துசேர்வதனாலுண்டான	மால்	ஸர்வேச்வரனுடைய
சுவை அதனை	ரஸத்தை	பொன் தாள்	அழகிய திருவடிகள்
		நம் சென்னி	நமது தலைமீது
		பொரும்	வந்து சேரும்.

■ ■ ■—இவை என்றது கீழ் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் அனுபவித்த குணங்களையாம் பரத்வம், பஜநீயத்வம், ஸௌலப்யம், அபராதஸஹத்வம் ஸௌசீல்யம், ஆராதனைக்கெளிமை, பரமபோக்யதை, ருஜுத்வம் என்கிற திருக்குணங்கள் கீழ்த்திருவாய்மொழிகளில் முறையே ஆழ்வாரால் அனுபவிக்கப்பட்டனவாதலால் அக்குணங்களை இவை என்று நிர்த்தேசிக்கிறபடி. அக்குணங்களை அறியுமவர்கள் திறத்திலே எம்பெருமான் ஸந்துஷ்டனாய் பொறுக்கப் பொறுக்க ஸகல அவயவங்களிலும் ஸம்ச்லேஷிப்பன் என்று ஒன்றுண்டே; அப்பேற்றை ஆழ்வார் பெற்று அதனாலுண்டான ஆனந்தம் புறவெள்ளமிட்ட சொல்லாகிய *இவையுமவையும் என்கிற திருவாய்மொழியை ஓதுவாரது சென்னித்திடரில் ஸர்வேச்வரனுடைய திருவடிகள் வந்து சேருமென்றாராயிற்று.

“இவையறிந்து ஓர்தம்மளவில்” எனப்பிரித்து இவற்றையறிந்து ஓர்கின்ற [ஆராய்ச்சி செய்கின்ற] தம்மளவிலே என்று முரைப்பாருளர். அதுவும் பொருந்தியதே. (9)

பொருமாழி சங்குடையோன் பூதலத்தேவந்து■
தருமாறோ ரேதுவறத் தன்னை—■திரமாகப்
பார்த்துரைசெய் மாறன் பதம்பணிக வென்சென்னி■
வாழ்த்திடுக வென்னுடைய வாய். (10)

பொரும்	(பகைவர்மீது) போர்புரியா நிற்கிற	திரம் ஆக	ஸ்திரமாக
ஆழி	திருவாழியையும்	பார்த்து	ஸாக்ஷாத்கரித்து
சங்கு	சங்கையும்	உரைசெய்	அருளிச்செய்த
உடையோன்	(திருக்கையில்) உடைய எமபெருமான்	மாறன்	ஆழ்வாருடைய
		பதம்	திருவடிகளை
பூதலத்தே வந்து	இப்பூமியில் வந்தவதரித்து	என் சென்னி	என் தலை
ஓர் ஏது அற	ஒரு ஹேதுவுமில்லாமல் [நிர்ஹேதுகமாக]	பணிக	வணங்குக;
		என்னுடையவாய்	எனது வாக்கானது
தன்னை தரும் ஆறு	(அடியார்க்குத்) தன்னை (அநுபவிக்கத்) தருகிறபடியை	வாழ்த்திடுக	(அத்திருவடிகளுக்கே) மங்களாசாஸனஞ் செய்க.

■ ■ ■—கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமான் வந்து ஸர்வாங்க ஸம்ச்லேஷம் செய்தருளினபடியை அநுஸந்தித்த ஆழ்வார் ‘இப்பேற்றுக்குத்தகுதி

யாக நம்மால் செய்யக்கூடிய உபாயாம்சம் உண்டோ ?' என்று ஆராய்ந்து பார்த்த அளவில் ஒரு ஸாதனமுமின்றியே நிர்ஹேதுகமாக விசேஷ கடாக்ஷஞ் செய்தருள்வதே எம்பெருமானுடைய இயல்வு என்பதைக் கண்டறிந்து அவ்விஷயத்தைப் *பொருமா நீள்படை யென்னுந் திருவாய்மொழியிலருளிச்செய்தா ரென்றதாயிற்று. (10)

வாயுந்திருமால் மறையநிற்க ஆற்றாமை
போய் விஞ்சி மிக்க புலம்புதலாய் - ஆய
அறியாதவற்றோ டணைந்தழுத மாறன்
செறிவாரை நோக்குந் திணிந்து. (11)

வாயும்	(அடியார் அநுபவிக்கலாம்படி) கிட்டுகையையே ஸ்வபாவமாகவுடைய	ஆய அறியாதவற்றோடு	(அசேதனங்களாகையாலே தம்முடைய துக்கத்தை) ஆராய அறியாதவற்றை
திருமால்	ச்ரியப்பதியான எம்பெருமான்	அணைந்து	கட்டிக்கொண்டு
மறைய நிற்க	(கண்ணுக்குப் புலப்படாமல் பிரிந்து) மறைந்திருக்க (அதனாலே)	அழுத	(அவற்றை ஸம துக்கிகளாகக்கொண்டு) அழுத
ஆற்றாமை போய் விஞ்சி	சோகம் அதிகரித்து	மாறன்	ஆழ்வார்
		செறிவாரை	தம்மைவந்து பணியுமவர்களை
மிக்க புலம்புதல் ஆய்	மிகவும் அழும்படியான நிலைமை நேர்ந்து	திணிந்து நோக்கும்	திடமாகக் கடாக்ஷித்தருள்வர்.

■■■—மேன்மை நீர்மை வடிவழகு ஆகிய மூன்றும் குறைவின்றியே உண்டாய் அவதாரத்தில் பிற்பட்டவர்களு மிழக்கவேண்டாதபடி முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற ஸ்தலமான அர்ச்சாவதார நிலங்களுட் சிறந்ததான திருக்குறுங்குடியிலே அநுபவிக்க ஆசைப்பட்டுக் கிடையாமையாலே கண்ணுஞ்சுழலையிட்டு நாரை அன்றில் கடல் வாடை வானம் மதி இருள் கழி விளக்கு முதலான உலகப் பொருள்களும் தம்மைப்போலே பகவத் விரஹத்தாலே நோவுபடுகிறனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டுச் செல்லுகிறபடியைப் பேசினது *வாயுந்திரையுகளு மென்கிற திருவாய்மொழி. இங்ஙனம் விலக்ஷணமான நிலைமையை யடைந்த நம்மாழ்வார் அடியார்களை பகவத் விச்லேஷம் நேராதபடி பரிபூர்ண கடாக்ஷஞ் செய்தருள்வ ரென்றதாயிற்று. (11)

திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை
நண்ணி யவதாரத்தே நன்குரைத்த—வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் அவரடிக்கே யாங்கவர்பால்
உற்றாரை மேலிடா தூன். (12)

மாறன்	நம்மாழ்வார்	வண்ணம்	ரீதியை
திருமால் பரத்துவத்தை	எம்பெருமானுடைய பரத்வத்தை	அறிந்து	தெரிந்துகொண்டு
		அவர் அடிக்கே	அவ்வாழ்வார் திருவடியிலே
அவதாரத்தே நண்ணி	அவதாரத்தில் அநுபவித்து	அற்றார்கள் யாவர்	ஈடுபட்டிருப்பர் யாவரோ
		அவர்பால் உற்றாரை	அவர்களிடத்தில் பணிந்திருப்பவர்களை
திண்ணிது ஆ	திடமாகவும்	ஊன்	தேஹஸம்பந்தம்
நன்கு	நன்றாகவும்	மேலிடாது	சேராது.
உரைத்த	அருளிச்செய்த		

■ ■ ■—*திண்ணன் வீட்டுப்பதிகத்தில் ஆழ்வாரருளிச்செய்த பகவத் பரத்வத்தை அறிந்து ஈடுபட்டிருப்பவர்களுடைய ஸம்பந்திகளும் வாழப்பெறுவர் என்கிறது. "திண்ணிதாம் மாறன்" என்று பிரித்து மாறனுக்கு விசேஷணமாக்கியுரைப்பாருமுளர். பரத்வே பரத்வவிஷயமான ■உயர்வற வுயர்நலத்திற் காட்டில் இத்திருவாய்மொழிக்குண்டான வாசி விளங்குவதற்கு 'அவதாரத்தே நண்ணி' என்கிருர். விபவாவதாரங்களிற் பொலிந்த பரத்வத்தைப் பேசியது■ ■திண்ணன் வீட்டுப்பதிகமென்க. ஆங்கு—அசை. "அவரடிக்கே அற்ருர்கள் யாவர்" என்று கொண்டு கூட்டுப்பொருள்கோள். (12)

ஊனமறவேவந்து உள்கலந்த மாலினிமை
யானது■அனுபவித்தற்காந்துணையா■—வானில்
அடியார் குழாங்கூட ஆசையுற்ற மாறன்■
அடியாருடன் நெஞ்சே யாடு. (13)

நெஞ்சே	மனமே!	அடியார்	அடியவர்களான நித்ய முக்தர்களினுடைய
ஊனம் அறவந்து	குறையற வந்து	குழாம்	கோஷ்டியிலே
உள் கலந்த	அந்தரங்கமாகக் கலந்த	கூட	அந்வயிக்க
மால்	ஸர்வேச்வரனுடைய	ஆசை உற்ற	குதூஹலங்கொண்ட
இனிமை ஆனது	கலவியின்பத்தை	மாறன்	நம்மாழ்வாருடைய
அனுபவித்தற்கு	அனுபவிப்பதற்கு	அடியாருடன்	பக்தர்களோடே
ஆம் துணை ஆ	அநுகூலமான ஸஹவாஸம் அபேக்ஷிதமாக	ஆடு	அநுபவிக்கப்பார்.
வானில்	பரமபதத்திலுள்ள		

■ ■ ■—இத்திருவாய்மொழியில், தம்மோடே ஏகதத்துவமென்னும்படி எம்பெருமான் ஸம்ச்லேஷிக்க, அதனால் பரமானந்தம் பொலியநின்ற ஆழ்வார் அந்த எம்பெருமானது பரம போக்யதையைத் தனியே அநுபவித்து த்ருப்திபெற மாட்டாமல் உசாத்துணை வேண்டிப் பரமபதத்தில் நித்ய முக்தர்களினுடைய திரளோடே அந்வயிக்கப்பெறவேணுமென்று ஆசை கொண்டார்; அன்னவரது பக்தர்களுடனே நெஞ்சே! நீ கூடிக் களிப்பாயாக—என்ருராயிற்று. ... (13)

ஆடிமகிழ் வானில் அடியார் குழாங்களுடன்■
கூடியின்பமெய்தாக் குறையதனல்■—வாடிமிக
அன்புற்ருர் தம்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்து■
துன்புற்ருன் மாறனந்தோ. (14)

மாறன்	ஆழ்வார்	அன்பு உற்ருர்	அன்பர்களான ஸ்ரீமதுரகவி போல்வார்
ஆடி மகிழ் வானில்	(நிரந்தர பகவதநுபவத்தாலே) கூத்தாடிக்களிக்குமிடமான பரமபதத்தில்	ஆய்ந்து உரைக்க	ஆராய்ந்து சொல்லும்படியாக [அதாவது; தம் வாயாற் சொல்லுகிற பாசுரமன்றியே வேற்று வாயாற் சொல்லுகிற பாசுரமாம் படியாக]
அடியார் குழாங்களுடன்	(நித்ய முக்தர்களாகிற) அடியார்களின் திரளோடே	மோகித்து	மோஹமடைந்து
கூடி	கலந்து	துன்புற்ருன்	துக்கித்தார்;
இன்பம் எய்தா குறை அதனல்	ஆனந்திக்கப்பெருத குறையினலே	அந்தோ	ஐயோ!
மிக வாடி	மிகவும் வாட்டமடைந்து		
தம் நிலைமை	(அப்படிப்பட்ட) தமது நிலைமையை		

■■■—கீழ்த்திருவாய்மொழியில் "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்று பாரித்த ஆழ்வார் அவ்வண்ணமாகவே பரமபதத்தில் நித்யமுக்தர் திரளிலே சென்று சேர்ந்து அநுபவிக்கப்பெறாத குறையினாலே மோஹமடைந்தார்; அந்த மோஹம் எப்படிப்பட்டதென்னில் தம் வாயாலே பாசுரம் பேசவொண்ணாமே தாய்ப் பாசுரமாக வேற்று வாயாலே பேசலாம்படியாயிற்று. அப்படிப்பட்ட வ்யஸநம் "ஆடியாடியென்கிற திருவாய்மொழியிலே நிகழ்ந்தது என்றதாயிற்று. (14)

அந்தாமத் தன்பால் அடியார்களோ டிறைவன்
வந்தாரத் தான்கலந்த வண்மையினால்—சந்தாபந்
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே
வாய்ந்தவன்பை நாடோறும் வை. (15)

நெஞ்சமே	மனமே!	ஆர கலந்த வண்மையினால்	பரிபூர்ண ஸம்ச்லேஷம்தந்த ஔதார்யத்தினால்
அம் தாமத்து அன்பால்	ஸ்ரீ வைகுண்டத்திற் பண்ணும் விருப்பத்தோடே	சந்தாபம் தீர்ந்த	தாபம் நீங்கப்பெற்ற
அடியார்களோடு வந்து	(அஸ்த்ர பூஷணாதிகளாயுள்ள) நித்ய ஸூரிகளோடு கூடி (பரமபதத்தினின்றும்) வந்து	சடகோபன்	ஆழ்வாருடைய
		திரு அடிக்கே	திருவடிகளிலே
		வாய்ந்த அன்பை	பொருத்தமான பக்தியை
		நாள் தோறும் வை	எப்போதும் செலுத்துவாயாக.
இறைவன் தான்	எம்பெருமான்		

■■■—திருநாட்டிலுள்ள நித்யஸூரிகளோடே கூடி அநுபவிக்கவேணுமென்று பாரித்த ஆழ்வாருடைய மனோரதத்தை ஒருவாறு தீர்க்கநினைத்த எம்பெருமான் பரமபதத்தில் தனக்குள்ள விருப்பத்தை ஆழ்வார் பக்கலிலே பண்ணி, திவ்யாபரண திவ்யாயுதங்களாகிற நித்ய ஸூரிகளோடே தானே இந்நிலத்தில் திருநகரியேற எழுந்தருளி ஸம்ச்லேஷரஸம் தந்தருளின படியை அந்தாமத்தன்பு பதிகத்தாலே பேசி வருத்தம் தீரப்பெற்ற ஆழ்வாருடைய திருவடிகளிலேயே பக்தி பண்ணுமாறு திருவுள்ளத்திற்கு உரைத்தாராயிற்று. (15)

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து—நைகின்ற
தன்மைதனைக் கண்டுன்னைத் தான்விடே னென்றுரைக்க
வன்மை யடைந்தான் கேசவன். (16)

வைகுந்தன்	பரமபத நாதனான எம்பெருமான்	நைகின்ற தன்மைதனை கண்டு	சிதிலமாகிறபடியைப் பார்த்து
வந்து கலந்ததற் பின்	வந்து (தம்முடன்) கலந்த பிறகு		
வாழ்	ஸத்தை பெற்ற	உன்னைவிடேன் என்று உரைக்க	உன்னை நான் விடமாட்டேன் (ஆதலால் கவலைப் படவேண்டா) என்று தெரிவிக்க
மாறன்	ஆழ்வார்		
செய்கின்ற	செய்கிற		
நைச்சியத்தை	நைச்யாநுஸந்தானத்தைக் குறித்து	கேசவன் தான்	எம்பெருமான்
சிந்தித்து	(எம்பெருமான்) விசாரமடைந்து	வன்மை அடைந்தான்	(கவலை நீங்கி) நிலைபெற்று நின்றான்.

■■■—ஆடியாடி யென்கிற திருவாய்மொழியிலே பட்ட வ்யஸநம்தீர ■அந்தாமத் தன்பில் எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷிக்க அதனால் துயர் தீர்ந்து வாழ்ந்த ஆழ்வார் "அல்லாவி" என்றும் "என் முடிவு காணாதே" என்றும் நைச்யாநுஸந்தாநப்ரஸக்தி பண்ண, அது கண்ட எம்பெருமான் இவர் நம்மைவிட்டு அகன்று போவர்போலிருக்கிறதே" என்று அதிசங்கைகொள்ள, அஃதறிந்த ஆழ்வார், பிரானே! உன்னை யொருநாளும் விடமாட்டேன் என்று உறுதியாகக் கூற அதுகேட்டு எம்பெருமான் கவலை தீர்ந்தானென் ■வைகுந்தாமணிவண்ணனில். (16)

கேசவனா லென்தமர்கள் கீழ்மே லெழுபிறப்பும்■
தேசடைந்தா ரென்று சிறந்துரைத்த■—வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லா முய்கைக்கு■
ஆறென்று நெஞ்சே யணை. (17)

நெஞ்சே	மனமே!	வீசு புகழ்	எங்கும் பரவிய புகழையுடையருமான
என் தமர்கள்	என்னைச் சேர்ந்தவர்களான	மாறன்	ஆழ்வாருடைய
கீழ்மேல எழு பிறப்பும்	கீழும் மேலுமுண்டான ஸம்பந்தி ஸம்பந்திகள் வரையிலும்	மலர் அடியே	திருவடித்தாமரைகளே
கேசவனால்	எம்பெருமானாலே	மன் உயிர்க்கு எல்லாம்	நிலை நின்ற ஆத்மாக்களுக்கெல்லாம்
தேசு அடைந்தார் என்று	வீறு பெற்றார்கள் என்று	உய்கைக்கு ஆறு என்று	உஜ்ஜீவநோபாயமென்று கொண்டு
சிறந்து உரைத்த	நன்றாக அருளிச் செய்தவரும்	அணை	(அத்திருவடிகளை) ஆச்ரயிப்பாயாக.

■ ■—இருபத்தொரு தலைமுறை யளவாகவுள்ள என்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் எம்பெருமானாலே விஷயீகரிக்கப் பெற்று வீறு பெற்றார்களாயினர் என்று *கேசவன்தமரில் நன்கு அருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே யாவர்க்கும் உய்வுபாயம் என்றதாயிற்று. (17)

அணைந்தவர்கள் தம்முடனே ஆயனருட்காளாம்■
குணந்தனையே கொண்டுலகைக்கூட்ட■—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன் மலரடியே■
வீசுபுகழெம்மா வீடு. (18)

தம்முடனே அணைந்தவர்கள்	தம்மோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களுங்கூட	மிக இணங்கி	மிகவும் பொருந்தி
ஆயன் அருட்கு	எம்பெருமானுடைய திருவருளுக்கு	மாசு இல் உபதேசம்செய்	குற்றமற்ற உபதேசத்தைச் செய்தருளின
ஆள் ஆம்	இலக்காகும்படியான	மாறன்	ஆழ்வாருடைய
குணம் தனையே கொண்டு	குணத்தையே பற்றாசாகக் கொண்டு	மலர் அடியே	பாதாரவிந்தமே
உலகை கூட்ட	ஸம்ஸாரி லோகத்தை எம்பெருமானோடு சேர்க்க	வீசு புகழ்	எங்கும் பரவிய புகழையுடையதாய்
		எம் மா வீடு	எல்லாப் படியாலும் மேன்மையுடையதான மோக்ஷம்.

■■■—ஆழ்வார், தம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காகி உஜ்ஜீவிக்கப் பெறுகிறபடியைக் கண்டு, எல்லா

ஸம்ஸாரிகளையும் நம்மோடே சேர்த்துக்கொள்வோமென்று ஆசைப்பட்டவராய் அந்த ஸம்ஸாரிகளுக்கு நல்ல உபதேசங்களைச் செய்தருளினர் ■அணைவதரவணைத் திருவாய்மொழியில். அவருடைய திருவடிகளின் கீழ் வாழ்வதே நமக்கு மோக்ஷ புருஷார்த்தம் அன்றி வேறுகிடையாது என்கிருராயிற்று. (18)

எம்மாவீடும் வேண்டா என்றனக்குன் தாளிணையே■
அம்மா அமையுமென வாய்ந்துரைத்த■—நம்முடைய
வாழ்முதலாம் மாறன் மலர்த்தாளிணைசூடி■
கீழ்மையற்று நெஞ்சே கிளர். (19)

அம்மா	'எம்பெருமானே !	நம்முடைய வாழ் முதல் ஆம் மாறன்	நம்முடைய வாழ்ச்சிக்குக் காரணபூதருமான ஆழ்வாருடைய
எம் மா வீடும் வேண்டா	எப்படிப்பட்ட சிறந்த மோக்ஷமும் வேண்டா;	மலர் தாள் இணை	உபயபாதாரவிந்தங்களை
என் தனக்கு	அடியேனுக்கு	சூடி	சிரஸாவகித்து
உன் தாள் இணையே	உன்னுடைய உபயபாதங்களே	கீழ்மை அற்று	அதம புருஷார்த்தங்களில் விருப்பமற்று
அமையும்	போதும்'	நெஞ்சே	மனமே !
என	என்று	கிளர்	மேன்மேலும் மகிழ்வாயாக.
ஆய்ந்து உரைத்த	ஆராய்ந்து அருளிச் செய்தவரும்		

■ ■—எம்பெருமானே! உன்னுடைய திருவடித் தாமரைகள் எப்போதும் என்னுடைய சென்னியை விட்டுப் பேராதபடி யிருக்கப்பெறுமாகில் அதுவே யெனக்குப் பரமபுருஷார்த்தம். வேறு எப்படிப்பட்ட மோக்ஷமும் எனக்கு வேண்டா என்று நிஷ்கர்ஷித்து ■எம்மாவீட்டுப் பதிகம் அருளிச் செய்தவரும் நம்முடைய உஜ்ஜீவனத்திற்காகவே திருவவதரித்தவருமான ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம்; அந்தத் திருவடிகளின் கீழ் நாம் வாழப்பெறுவோமாகில் நமக்கு யாதொரு குறையுமிராது என்ருராயிற்று. (19)

■கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க■
வளரொளிமால் சோலை மலைக்கே■—தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ் மாறன்தாள்■
முன் செலுததுவோமெம் முடி. (20)

கிளர் ஒளி சேர்	அதிசயமான மேன்மை பொருந்தியதும்	தளர்வு அறவே	தளர்ச்சியில்லாமல் திடமாக
கீழ் உரைத்த	கீழ்த் திருவாய்மொழியில் சொல்லப்பட்டதுமான	நெஞ்சை வைத்து	மனஸ்ஸை வைத்து
பேறு	புருஷார்த்தம்	சேரும் எனும்	போய்ச் சேருங்கள் என்று உபதேசித்த
கிடைக்க	கிடைப்பதற்காக	நீடு புகழ் மாறன்	மஹாயசஸ்வியான ஆழ்வாருடைய
வளர் ஒளி	மேன்மேலும் வளர்ந்து வருகின்ற ஒளியையுடையதான	தாள் முன்	திருவடிகளின் முன்பே
மால் சோலை மலைக்கே	திருமாலிருஞ்சோலை மலைக்கே	எம் முடி	எமது தலையை
		செலுத்துவோம்	ஸமர்ப்பிப்போமாக.

■ ■ ■—எம்மாவீடென்கிற கீழ்த்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட பாரார்த்த்யமாகிற பரம புருஷார்த்தம் கிடைக்கவேணு மென்கிற நசையுடையீர்!

அதற்காக வேறொரு தேச விசேஷம் தேடிப்போகவேண்டா ; இந்நிலத்திலேயே பரம விலக்ஷணமான திருமாலிருஞ்சோலை மலையிலே எல்லா அடிமைகளுங் கொள்வானாக அப்பெருமானெழுந்தருளி நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறனாகையாலே அத்திருமலையில்தானே சென்று சேர்ந்து அநுபவிக்கப் பாருங்கோள் — என்று *கிளரொளியிளமைப் பதிகத்தில் உபதேசித்தருளின ஆழ்வாருடைய திருவடிகளுக்கே நமது தலையை அந்த உபகாரத்திற்குக் கைம்மாருக அர்ப்பணம்செய்வோமென்றாராயிற்று. (20)

முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன்*
அடிவாரந் தன்னி லழகர்—வடிவழகைப்
பற்றி* முடியு மடியும் படிகலனும்*
முற்று மனுபவித்தான் முன். (21)

முடி ஆர்	கொடுமுடிகள் நிறைந்த	முடியும்	கிரீடமும்
திருமலையில்	திருமாலிருஞ்சோலைமலையில்	அடியும்	சிலம்பும்
மூண்டு நின்ற	மண்டியனுபவித்த	படிகலனும்	திருமேனியிலுள்ள மற்ற ஆபரணங்களுமாகிய
மாறன்	ஆழ்வார்	முற்றும்	முழுமையும்
அடிவாரம் தன்னில்	திருத்தாழ்வரையிலே	முன்	முற்காலத்தில்
அழகர்	அழகருடைய	அனுபவித்தான்	அனுபவித்துப் பேசினர்.
வடிவு அழகை பற்றி	திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தைப்பற்றி		

*** — கிளரொளியிளமையென்கிற கீழ்த்திருவாய்மொழியினுல் திருமாலிருஞ்சோலை மலையில் ஈடுபாடு கொண்டிருந்த ஆழ்வார், அத்திருமலையின் அடிவாரத்திலே எழுந்தருளியுள்ள அழகருடைய வடிவழகிலே ஊன்றி திவ்யாவயவ திவ்ய பூஷணங்களை நன்கு அனுபவித்து அருளிச்செய்த திருவாய்மொழி *முடிச்சோதியா யென்பது என்றதாயிற்று. (21)

முன்ன மழகரெழில் மூழ்குங் குருகையர்கோன்*
இன்னவள வென்ன வெனக்கரிதாய்த்து—என்ன*
கரணக் குறையின் கலக்கத்தை *கண்ணன்
ஒருமைப் படுத்தா னொழித்து. (22)

முன்னம்	முந்திய திருவாய்மொழியில்	கண்ணன்	எம்பெருமான்
அழகர்	திருமாலிருஞ்சோலையழகருடைய	கரணம் குறையின் கலக்கத்தை	(ஆழ்வார்க்குக்) கரண ஸங்கோச நிபந்தனமென்று உண்டான கலக்கத்தை
எழில்	வடிவழகிலே	ஒழித்து	போக்கி
மூழ்கும்	ஆழங்காற்பட்ட	ஒருமைப் படுத்தான்	ஆச்வஸிப்பித்தான்.
குருகையர்கோன்	ஆழ்வார்		
இன்ன அளவு என்ன எனக்கு அரிது ஆய்த்து என்ன	'இது இவ்வளவென்று பரிச்சேதிக்க என்றால் முடியவில்லையே' என்றுதளர்ச்சியடைய		

*** = *முடிச்சோதியாய் என்கிற கீழ்த்திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலை யழகருடைய வடிவழகில் ஆழங்காற்பட்ட ஆழ்வார் 'அந்தோ! இவ்வழகு

முதலியவற்றை நாம் பரிபூர்த்தியாக அநுபவிக்க முடியவில்லையே. இதற்கு என்ன காரணமிருக்கும்; நம்முடைய கரண க்ராமங்கள் ஸங்குசிதங்களாயிருக்கையாலே அது காரணமாகவன்றோ பூர்ணாநுபவம் செய்ய முடியவில்லை; அந்த கரண ஸங்கோசம் இல்லாதிருக்கிற நித்ய முக்தர்களிலே ஒருவனாக நானிருந்தால் பரிபூர்ணாநுபவம் பண்ணலாமே' என்று அலமந்திருக்க, அதுகண்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! நம்மைப் பரிபூர்ணாநுபவஞ் செய்ய முடியாமைக்குக் காரணம் கரணஸங்கோசமன்று காணும்; அஸங்குசிதமான கரணங்களை யுடையவர்கள் தாமும் நம்மைப் பரிபூர்ணாநுபவம் செய்வது அருமையே; விஷயம் மஹத்தாகையாலே பூர்ணாநுபவம் செய்யப்போகிறதில்லையே யொழிய வேறு காரணமன்று' என்று தெரிவித்து ஆழ்வாரைத் தேற்றுவித்தபடியை "முந்நீர்ஞாலத் திருவாய்மொழி சொல்லிற்றுகிறது என்று அருளிச் செய்தாராயிற்று. (22)

ஒழிவிலாக் கால முடனாகி மன்னி
வழுவிலா வாட்செய்ய மாலுக்கு—எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த மிக்கநலஞ் சேர்மாறன்
பூங்கழலை நெஞ்சே புகழ். (23)

ஒழிவு இலா காலம்	ஸதா காலமும்
உடன் ஆகி மன்னி	கூடவே பிரியாது பொருந்தியிருந்து
மாலுக்கு	ஸர்வேச்வரனுக்கு
வழு இலா	வழுவின்றிக்கே
ஆள் செய்ய	அடிமை செய்யுமாறு
எழு சிகரம் வேங்கடத்து பாரித்த	ஓங்கின சிகரங்களையுடைய திருமலையிலே மனோரதித்த
மிக்க நலம் சேர் மாறன்	மஹா குணசாலியான ஆழ்வாருடைய
பூ கழலை	பொலிவுற்ற திருவடிகளை
நெஞ்சே	மனமே!
புகழ்	போற்றுவாயாக.

—ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் திருமலையப்பனுக்கு அநவரதம் அத்தாணிச் சேவகம் செய்யவேணுமென்று மிக்க மனோரதம் கொண்ட சிறந்த நற்குணங்கள் நிரம்பிய ஆழ்வாரது திருவடித்தாமரைகளைத் துதிக்குமாறு நெஞ்சுக்கு உரைத்தாராயிற்று. மூன்றாமடியில் 'பாரித்து' என்ற பாடமும் பொருந்தும். அப்போது, 'மிக்க நலம் சேர்' என்பதற்கு 'மிகுந்த ஆனந்த மடைந்த' என்று பொருள். (23)

புகழொன்றுமால் எப்பொருள்களுந் தானாய்
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க—மகிழ்மாறன்
எங்கு மடிமைசெய இச்சித்து வாசிகமாய்
அங்கடிமை செய்தான் மொய்ம்பால். (24)

புகழ் ஒன்று மால்	கீர்த்தி பொருந்திய ஸர்வேச்வரன்
எப்பொருள்களும் தான் ஆய் நிகழ்கின்ற நேர் காட்டி நிற்க	ஸகல பதார்த்தங்களும் தானேயாய் இருக்கின்ற படியைக் காட்டி நின்ற வளவில்
மகிழ் மாறன்	(அதனால்) மகிழ்ச்சி கொண்ட ஆழ்வார்
எங்கும்	எவ்விடத்தும்
அடிமை செய இச்சித்து	தொண்டு செய்ய விரும்பி
மொய்ம்பால்	மயர்வற மதிநலமருளப் பெற்ற சீர்மையினாலே
வாசிகம் ஆய் அடிமை செய்தான்	வாய்மொழியினாலாகிய கைங்கரியத்தைச் செய்தார்.

■■■—கீழ் "ஒழிவில்காலமெல்லாமென்கிற திருவாய்மொழியில் கைங்கர்ய மநோரதங்கொண்ட ஆழ்வாருடைய பாரிப்புக்குத் தகுதியாக எம்பெருமான் தானே எங்கும் எல்லாப் பொருள்களுமாய் நிற்கின்றபடியை ஆழ்வார்க்கு ஸேவை ஸாதிப்பிக்க ஆழ்வாரும் எம்பெருமானுடைய விபூதியுள்ள விடங்களிலெல்லாம் காயிக கைங்கரியம் செய்ய விரும்பி, அது செய்ய இயலாமல் எம்பெருமானுடைய ஸர்வாத்மபாவத்தைப் பேசும் முகத்தால் வாசிக கைங்கரியத்தை "புகழுநல்லொருவன் என்கிற திருவாய்மொழியில் செய்தருளினார் என்றதாயிற்று. (24)

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்துவப்பால்■
அன்பாலாட் செய்பவரை யாதரித்தும்■—அன்பிலா
மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்■
தேடரியபத்தி நெஞ்சே செய். (25)

மொய்ம்பு ஆரும் மாலுக்கு	மிகுந்த ஆற்றலையுடைய ஸர்வேச்வரனுக்கு	அன்பு இலா மூடரை நிந்தித்தும்	பக்தியற்ற மூர்க்கர்களைத் தூஷித்தும்
முன் அடிமை செய்த உவப்பால்	முன் திருவாய்மொழியில் வாசிகமான கைங்கரியம் பண்ணப்பெற்ற ஸந்தோஷத்தினால்	மொழிந்து அருளும்	அருளிச் செய்த
		மாறன் பால் நெஞ்சே	ஆழ்வார் விஷயத்தில் மனமே!
அன்பால் ஆள் செய்பவரை ஆதரித்தும்	அன்புடனே அடிமை செய்பவர்களைக் கொண்டாடியும்.	தேட அரிய பத்தி	வேறு எங்கும் காணமுடியாததான [மிகச் சிறந்ததான] பக்தியை
		செய்	செய்யக்கடவை.

■■■—"புகழு நல்லொருவனென்கோ என்கிற திருவாய்மொழியில் எம்பெருமானுக்குத் தாம் வாசிகமான கைங்கரியம் செய்யப் பெற்றதனாலுண்டான களிப்பே இத்திருவாய்மொழியாக வடிவெடுத்தது என்னலாம். அந்தக்களிப்பினால் ஆழ்வார் செய்ததாவது—தம்மைப்போலவே எல்லாரும் பகவத்குணங்களில் ஈடுபடவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அப்படி ஈடுபடாதவர்களை நிந்தித்தார்; ஈடுபடுமவர்களைக் கொண்டாடினார். இப்படிப்பட்ட ஆழ்வார்பக்கலில் பக்திபண்ணவேணுமென்று தமது திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்தாராயிற்று.

செய்த+உவப்பால் செய்தவுவப்பால் என்று சந்தியாக வேண்டுவது செய்துவப்பால் என்றானது தொகுத்தல்; "தொகுத்தல் வருஞ்செய்யுள் வேண்டுழி" என்பது நன்னூல். (25)

செய்யபரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்■
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள்■—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதார மெளிதென்றான்■
பன்னுதமிழ் மாறன் பயின்று. (26)

செய்ய பரத்துவம் ஆய்	விலக்ஷணமான பரமபதத்தில் இருப்பாய்	விபவம் ஆய்	ராமகிருஷ்ணாதி அவதாரமாய்
சீர் ஆர்	மேன்மை பொருந்திய	தோன்று	(இங்ஙனே சாஸ்த்ரங்களினால்) காணப்படுகின்ற
வியூகம் ஆய்	க்ஷீராப்தியிலிருப்பாய்	இவற்றுள்	இந்நிலைமைகளுள்,
துய்ய	பரிசுத்தமான		

எய்துமவர்க்கு	ஆச்ரயிப்பவர்களுக்கு
இந்நிலத்தில்	இவ்விபூதியிலே
அர்ச்சாவதாரம்	அர்ச்சாவதாரமே
எளிது என்றான்	ஸுலபம் என்று அருளிச் செய்தார்;
பயின்று பன்னு தமிழ் மாறன்	(அவர் யார் என்னில்) ஆராய்ந்து அருளிச்செய்யப் பட்ட தமிழ் வேதத்தையே நிரூபகமாகவுடைய ஆழ்வார்.

■■■—பரமபதத்திலே எழுந்தருளியிருந்து நித்யமுக்தர்களுக்குக் காட்சி தரும் நிலைமையென்ன, திருப்பாற்கடலில் வ்யூஹரூபவித்திருக்கும் நிலைமையென்ன, ஸ்ரீராமக்ருஷ்ணதிருமேனி அவதரித்த விபவாவதார நிலைமையென்ன--ஆகிய இவற்றையெல்லாம்விட, அர்ச்சாவதாரமாகக் காட்சி தந்தருளும் நிலைமையே இவ்வுலகில் பக்தர்களுக்கு மிக்வும் எளியதென்னு மிடத்தை ஆழ்வார் இத்திருவாய் மொழியினால் அருளிச் செய்தாரென்றதாயிற்று.

எம்பெருமானுடைய நிலைமைகளுள் அந்தர்யாமித்வமும் சேர்ந்திருக்க அதனை இங்கு எடுத்துக்கூறாதது அதில் ஆச்ரயணப்ரஸக்தியில்லாமைபற்றி யென்று கொள்ளலாம். உபலக்ஷண விதத்தினால் அதுவும் இங்குக் கொள்ளத் தக்கதே யென்பாரு முளர். (26)

பயிலுந் திருமால் பதந்தன்னில் ■ நெஞ்சம்
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு ■—இயலுடனே
ஆளானார்க் காளாகும் மாற னடியதனில் ■
ஆளாகார் சன்மம்முடியா. (27)

பயிலும்	அடியவர்களோடு கலந்து பழகுந் தன்மையனான
திருமால்	எம்பெருமானுடைய
பதம் தன்னில்	திருவடிகளில்
நெஞ்சம் தயலுண்டு நிற்கும்	மனம் பதிந்து நிற்கிற
ததியர்க்கு	பாகவதர்களுக்கு
இயலுடனே ஆள் ஆனார்க்கு	முறையே அடிமையாயிருக்குமவர்களுக்கு
ஆள் ஆகும்	அடிமை செய்யப்பெற்ற
மாறன்	ஆழ்வாருடைய
அடி அதனில்	திருவடிகளில்
ஆள் ஆகார்	அடிமை செய்யப் பெறாதவர்களுடைய
சன்மம்	பிறவி
முடியா	ஒருகாலும் முடிவடைய மாட்டாது.

■■■—எம்பெருமானது திருவடிகளில் ஹ்ருதயம் அவகாஹித்திருக்கப்பெற்ற பாகவதர்களுக்கு தாஸாநுதாஸராகத் தம்மை அநுஸந்தித்து ■ பயிலுஞ்சுடரொளிப் பதிக மருளிய நம்மாழ்வாருடைய திருவடிகளில் அடிமை பூண்டிருக்கும் பாக்கிய மற்றவர்களுடைய பிறவித்துயர் ஒருநாளும் முடிவு பெறமாட்டாது; அவர்கள் நித்யஸம்ஸாரிகளாகவே நிகழ்வர்கள் என்றபடி. (27)

முடியாத வாசைமிக முற்று கரணங்கள் ■
அடியார் தம்மை விட்டவன்பால்—படியா ■
ஒன்றொன்றின் செயல்விரும்ப உள்ளதெல்லாம் தான்விரும்ப ■
துன்னியதே மாறன்றன் சொல். (28)

முடியாத ஆசைமிக	ஆராதகாதல் அதிசயிக்க	ஒன்று ஒன்றின் செயல் விரும்ப	ஒரு கரணம் மற்றொரு கரணத்தின் வ்ருத்தியை ஆசைப்பட
முற்று கரணங்கள்	எல்லா இந்திரியங்களும்	உள்ளது எல்லாம் தான் விரும்ப	கரணங்களின் விடாய் முழுவதையும் ஆழ்வார் தாமுடையராதலை விரும்ப
அடியார் தம்மை விட்டு	பாகவதர்களை விட்டு	மாறன் தன் சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி
அவன் பால்	அவ்வெம்பெருமான் பக்கலிலே	துன்னியது	(வருத்தத்தினால்) நெருக்க முற்றது
படியா	படிந்து		

■ ■ ■—*செய்யதாமரைக் கண்ணனென்கிற திருவாய்மொழியில் "என்று கொல்கண்கள் காண்பதுவே" என்று கிளர்ந்த ஆசை *பயிலுஞ்சுடரொளியில் தணியாதே அதிகரிக்க, பாஹ்யம் ஆப்யந்தரம் என்னும் வாசியின்றிக்கே ஸகல கரணங்களும் *எம்மையாளும் பரமர் *எம்மையாளுடைநாதர் *எம்மையாளுடையார்கள் *எம்பெருமக்கள் *எம்மையளிக்கும் பிராக்கள் *எம்மைச் சன்மசன்மாந்தரங் காப்பர் *எம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பர் *எம்தொழுகுலந்தாங்கள் *அடியா ரெம்மடிகள் *அடியார் தம்மடியாரடியோங்கள் *என்றிப்படி ஸகல ப்ரகாரத்தாலும் சேஷிகளாக அநுஸந்திக்கப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்களை விட்டு எம்பெருமான் பக்கலிலே யவகாஹித்து, [கரணங்களும் தாமும் தத்விஷயத்திலே ப்ரவணராய்] ஓர் இந்திரியத்தினுடைய வ்ருத்தியை மற்றையிந்திரியங்களுமாசைப்பட்டும் அவை யெல்லாவற்றினுடைய வ்ருத்தியையும் தாமாசைப்பட்டும் ஆழ்வார் அவஸாதத்தோடே அருளிச்செய்யும்படி யாயிற்று *முடியானே யென்கிற திருவாய்மொழி என்றபடி.

''முடியாதவாசைமிகு'' என்றும் பாடமுண்டு; அப்போது கரணங்களுக்கு அடைமொழியாக அந்வயிக்கும். படியா—செய்யா வென்னும் வாய்பாட்டிறந்த கால வினை யெச்சம்; படிந்து என்றபடி. 'துன்னியது' 'துன்றியது' என இருவகையான பாடமும் காண்கிறது. பொருள் ஒன்றே; நிர்வேதம் மிக்கது என்றபடி. (28)

சொன்னாவில் வாழ்புலவீர்! சோறு கூறைக்காக*
மன்னாத மானிடரை வாழ்த்துதலால்—என்னாகும்*
என்னுடனே மாதவனை ஏத்துமெனுங்குருகூர்*
மன்னருளால் மாறுஞ்சன்மம். (29)

நாவில்	''நாக்கிலே	என் ஆகும்	என்ன பயனுண்டாகும்? (ஒன்று மில்லையாம்;)
சொல்	இனிய கவி மொழிகள்	என்னுடனே	என்னுடன் கூடி
வாழ்	விளங்கப் பெற்ற	மாதவனை	திருமாலை
புலவீர்	பண்டிதர்களே!	ஏத்தும்	ஏத்துங்கள்''
சோறு கூறைக்கு ஆக	சோற்றுக்கும் துணிக்குமாக	எனும்	என்று உபதேசித்த
மன்னாத மானிடரை	நிலை நின்று ஜீவித்திருக்க மாட்டாத மனிசர்களை	குருகூர் மன்	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய
வாழ்த்துதலால்	கவிபாடிப் புகழ்வதனால்	அருளால்	கிருபையினாலே
		சன்மம் மாறும்	பிறவித்துயர் தொலையும்.

* * *—வாக்கிலே கவனசாதுரிய முடையவர்களாய், அந்தக் கவித்திறமையை பகவத்விஷயத்திலே செலுத்தாமல் அல்பாயுஸ்ஸுக்களான நீச

மனிசர்களிடத்திலே செலுத்தி *காசுங்கறையுடைக் கூறைக்குமங்கோர் கற்றைக்கு மாசையினுல் அவர்களைத் துதித்துக்கொண்டு திரியும் புலவர்களை விளித்து 'அந்தோ! நீங்கள் இங்ஙனம் பயனற்றசெயலைச் செய்து திரிவது தவிர்ந்து என்னைப்போல் எம்பெருமானைத் துதித்து வாழுங்கள்' என்று *சொன்னுல் விரோதப் பதிகத்தில் ஆழ்வார் உபதேசித்தபடியைக் கூறி அப்படிப்பட்ட ஆழ்வாருடைய திருவருளுக்கு நாம் இலக்காகப் பெற்ருேமாகில் நம்முடைய பிறவித்துயர் நீங்குமென்று அருளிச் செய்தாராயிற்று. (29)

சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும்*
நன்மையுடை மால்குணத்தை நாடோறும்*—இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றே னெனுமாறனை யுலகீர்!*
நாத்தழும்ப வேத்துமொரு நாள். (30)

தான் பல சன்மம் செய்து	தானகவே பல திருவவதாரங்களைப் பண்ணி	ஏத்தும் இன்பம்	புகழ்ந்து பேசும்படியான இன்பத்தை
இ உலகு	இந் நிலவுலகத்தை	பெற்றேன் எனும்	பெறறேனென்று அருளிச் செய்த
அளிக்கும்	காத்தருளுகையாகிற	மாறனை	ஆழ்வாரை
நன்மை உடை	நன்மையை யுடையவனை	உலகீர்	உலகர்களே!
மால்	எம்பெருமானுடைய	ஒரு நாள்	ஒரு நாளாகிலும்
குணத்தை	திருக்கல்யாண குணங்களை	நா தழும்ப	நாக்குத் தடிக்கும்படி
இம்மையிலே	இப்பிறப்பிலே	ஏத்தும்	நீங்கள் துதிப்பீர்களாக.
நாள் தோறும்	அநுக்ஷணமும்		

* * *—எம்பெருமான் பல திருவவதாரங்களைச் செய்து இவ்வுலகத்தைக் காத்தருள்கின்ருனென்பது முதலான அவனுடைய திருக்கல்யாணகுண ஸம்ருத்தியை இம்மையிலேயே வாயாரப் புகழ்ந்து பேசும் பாக்யத்தை யான் பெற்றேனென்று பேரானந்தம் பொலிய *சன்மம் பல பல வென்னுந் திருவாய்மொழியிலருளிச்செய்த நம் ஆழ்வாரை. ஸம்ஸாரிகளே! நீங்கள் ஒரு நாளாகிலும் நன்கு துதிப்பது நன்று என்றருளிச் செய்தாராயிற்று. (30)

ஒருநாயகமாய் உலகுக்கு வானோர்*
இருநாட்டி லேறியுய்க்கு மின்பம்—திரமாகா*
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையேயினிதாம்*
பன்னியிவை மாறனுரைப் பால். (31)

உலகுக்கு	இவ்வுலகுக்கெல்லாம்	உயிர் போகம்	ஆத்மாநுபவமாகிற கைவல்யமானது
ஒரு நாயகம் ஆய்	ஏகாதிபதிகளாய்க் கொண்டு	தீது	ஸ்வரூபத்திற்குச் சேராதது;
உய்க்கும்	அநுபவிக்கின்ற	இவை	என்கிற இவ்வர்த்தங்களை
இன்பம்	ஆனந்தமும்	மாறன்	ஆழ்வார்
வானோர் இரு நாட்டில் ஏறி உய்க்கும் இன்பம்	தேவர்களுடைய விசாலமான சுவர்க்க போகத்திற் சென்று அநுபவிக்கும் ஆநந்தமும்	பன்னி	விரிவாக
திரம் ஆகா	நிலை நிற்கமாட்டா;	உரைப்பால்	அருளிச் செய்ததனுல்
மன்	நித்யமான	மால் அடிமையே	எம்பெருமானுக்கு அடிமை செய்வதே
		இனிது ஆம்	போக்யமாயிருக்கும்.

* * *—இவ்வுலகம் முழுவதையும் ஏகச்சத்ராதிபதிகளாய் ஆண்டு அநுபவிக்கும் இன்பமும் ஸ்வர்க்கலோகம் புக்கு அநுபவிக்கும் இன்பமும் ஸ்திரமாக

நிற்கமாட்டாதவை; கைவல்ய மோக்ஷமாகிற ஆத்மாநுபவமானது ஸ்திரமாயிருக்கக்கூடியதாயினும் பரப்ரஹ்மாநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாயிருக்கும்; ஆதலால், பகவத் விஷயத்தில் செய்யும் அடிமையொன்றே இனியதாகும்—என்று ஆழ்வார் ஒருநாயகத்தில் விரிவாக அருளிச் செய்தாரென்றதாயிற்று.

திரம்—ஸ்திரம் என்ற வடசொல் விகாரம். (31)

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்*
காலத்தால் தேசத்தால் கைகழிந்து*— சால
அரிதானபோகத்தில் ஆசையுற்றுநைந்தான்*
குருகூரில் வந்துதித்தகோ. (32)

குருகூரில்	திருநகரியில்	காலத்தால் தேசத்தால் கை கழிந்து	கால தேசங்களினால் கை கழிந்து போனதால்
வந்து உதித்த கோ	வந்து அவதரித்த ஸ்வாமியான ஆழ்வார்	சால அரிது ஆன	மிகவும் துர்லபமான
பாலரை போல்	(விரும்பின பொருள் உடனே கைப்பட வேணுமென்று அழுகிற) சிறு பிள்ளைகளைப் போல	போகத்தில்	அநுபவத்தில்
சீழ்கி	சிணுங்கி	ஆசை உற்று	ஆசை அதிகரிக்கப் பெற்று
பரன் அளவில் வேட்கையால்	எம்பெருமான் பக்கலிலுள்ள ஆசையாலே,	நைந்தான்	வருந்தினார்.

■■■—ஆழ்வார் ''பாலனாய்'' என்கிற திருவாய்மொழியில் சிறுபிள்ளைகள் ஏதேனுமொரு வஸ்துவை ஆசைப்பட்டு அதுவே வேணுமென்று பிடிவாதம் பிடித்துக் கதறுமாபோலே, எம்பெருமானுடைய புராதனங்களான அபதானங்களில் ஆசைவைத்து, காலத்தாலும் தேசத்தாலும் அதீதங்களாயும் துர்லபங்களாயுமிருக்கிற போகங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்காக ஆற்றாமைப் பட்டாரென்றதாயிற்று. (32)

கோவானவீசன் குறையெல்லாந்தீரவே*
ஓவாதகாலத்துவாதிதனை—*மேவிக்
கழித்தடையக்காட்டிக் கலந்த குணமாறன்*
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண். (33)

கோ ஆன ஈசன்	ஸர்வசேஷியான எம்பெருமான்	அடைய	(கீழ் அபேக்ஷித்த அபதானங்களை) யெல்லாம்
குறை எல்லாம் தீர	எல்லாக் குறைகளும் தீரும்படி	காட்டி	ஸேவை ஸாதிப்பித்து
ஓவாத காலத்து உவாதி தனை	விச்சேதமின்றி நடந்து செல்லுகிற காலத்தின் உபாதியை	கலந்த குணம்	தம்மோடு கலந்தகுணத்தை
		மாறன்	நம்மாழ்வார்
		வழுத்துதலால்	துதித்ததனால்
		இந்த மண்	இவ்வுலகம்
மேவி கழித்து	தம்மோடு சேர்ந்து கழித்து	வாழ்ந்தது	ஸத்தை பெற்றது.

■■■—கீழ்த்திருவாய்மொழியில் தேசகால விப்ரக்ருஷ்டங்களான தன்படிகளை அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்ட ஆழ்வார்க்கு, காலசக்ரத்தானைகை

யாலே காலோபாதியைக் கழித்து நிகழ்காலம்போலே ஆக்கிக்கொடுத்து இவர் தம்முடைய ஸத்தையே தனக்கு எல்லாமாம்படியிருக்கிற தன் ப்ரணயித்வ குணத்தையும் அநுபவிப்பிக்கவே எல்லாம் பெற்றூராய் இந்தப்ரணயித்வ குணத்தை ■கோவைவாயாள் பதிகத்தில் பாராட்டிக் கூறினவிதனுல் இம்மண்ணுலகம் உய்வு பெற்றதாயிற்றென்றபடி.

காலோபாதியைக் கழிப்பதாவது--இறந்த காலத்தில் கழிந்துபோனவற்றையும் தத்காலத்திற்போலே ஸாக்ஷாத்கரிக்கும்படியாகச் செய்துவைக்கை.

[கலந்த குணமாறன்] குணம் என்பதை மாறனுக்கு விசேஷணமாக்கி, சிறந்த குணசாலியான நம்மாழ்வார் என்று பொருள் கொண்டு, கலந்தமாறனை வழுத்துதலால் இந்த மண் வாழ்ந்தது என்று உரைப்பாருமுளர். வாழ்ந்தது—வாழும் என்று எதிர்காலப்பொருள் கொள்ளவும் தகுதியுண்டு, விரைவு பற்றிய வழுவமைதி. (33)

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால்■ மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி■—எண்ணிடில்முன்
போலிமுதலான பொருளையவனுய்நினைந்து■
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு. (34)

மால்	எம்பெருமான்	முன் போலி முதலான பொருளை	கண்ணெதிரே தென்படுகிற பகவத் ஸத்ருச வஸ்துக்கள் முதலானவற்றைக் (கண்டு)
மண் உலகில்	இவ்விபூதியிலே	அவன் ஆய் நினைந்து	அந்த பகவானுகவே இவற்றை நினைத்து
முன் கலந்து பிரிகையால்	முன்னே கலந்து பிறகு பிரிந்ததனுல்	மையல் தனின் வீறு	வியாமோஹ மிகுதியினுல்
மாறன்	ஆழ்வார்	மேல் விழுந் தான்	அவற்றிலே அதிக ஆதரம் காட்டினுர்.
பெண் நிலைமை ஆய்	நாயகீ ஸமாதியை யுடையராய்		
காதல் பித்து ஏறி	பக்தியாலே பித்து அதிகரித்து		
எண்ணிடில்	எண்ணுமிடத்தில்		

■■■—"புணர்தொறுமென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப் புறப்பூச்சும் போலே ஆற்றநல்ல மாபோகச் சிரமமாக" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச் செய்தபடியே, ஸம்ச்லேஷத்தாலுண்டான ஆனந்தரஸம் ஸாத்மிப்பதற்காக எம்பெருமான் ஆழ்வாரைவிட்டுப் பிரிந்திருக்க அந்தப்பிரிவாற்றுமையினுல் ஆழ்வார் கண்ணுல்கண்ட பொருள்களை யெல்லாம் அந்த எம்பெருமானுகவே நினைத்து வருந்தினுர் ■மண்ணையிருந்து துழாவியில் என்று சொல்லிற்றுயிற்று.

மூன்றுமடியில் முதலான என்றதனுல் எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்ற பொருள்கள் கொள்ளத்தக்கன. (34)

வீற்றிருக்கு மால்விண்ணில் மிக்க மயல்தன்னை■
ஆற்றுதற்காத் தன்பெருமை யானதெல்லாம்■—தோற்றவந்து

நன்று கலக்கப் போற்றி நன்குகந்து வீறுரைத்தான்*
சென்றதுயர் மாறன் தீர்ந்து. (35)

விண்ணில்	பரமபதத்தில்	நன்று கலக்க	தம்மோடு நன்ருகக் கலக்க (அவனை)
வீற்றிருக்கும்	எழுந்தருளி யிருக்கின்ற	மாறன்	ஆழ்வார்
மால்	எம்பெருமான்	போற்றி	வாயார வாழ்த்தி
மிக்க மயல் தன்னை	(கீழ்த்திருவாய் மொழியில் ஆழ்வார்க்குண்டான) மிருந்த வியாமோஹத்தை	நன்கு உகந்து	மிகவும் களிப்படைந்து
ஆற்றுதற்கு ஆ	தணிவிக்கைக்காக	சென்ற துயர் தீர்ந்து	நிகழ்ந்த துக்கங்கள் ஒழியப் பெற்று
தன் பெருமை ஆனது எல்லாம் தோற்ற வந்து	தன் குண விக்ரஹாதி வைபவங்களெல்லாம் ப்ரகாசிக்குமாறு இங்கேவந்து	வீறு உரைத் தான்	உபய விபூதியிலும் தாம் வாசிபெற்றவரான பெருமையை அருளிச் செய்தார்

■■ *—கீழே *மண்ணையிருந்து துழாவியில் அளவுகடந்த வியாமோஹத்தையடைந்த ஆழ்வாருடைய அந்த வியாமோஹத்தைத் தணியச் செய்யும் பொருட்டுப் பரமபதநிலயனை எம்பெருமான் திருப்புளியாழ்வாரடியிலே யெழுந்தருளித் தன்னுடைய அஸாதாரணகாரத்தைக் காட்டிக்கொடுத்து ஸம்ச்லேஷிக்க, அதனுல் ஆழ்வார் உள்ளங்குளிர்ந்து வாயாரவாழ்த்தித் துயர் தீரப்பெற்று உபயவிபூதியிலும் தனக்கு நிகரில்லாமையாகிற தனது பெருமேன்மையை *வீற்றிருந்தேழுலகு திருவாய்மொழியில் அருளிச்செய்தா ரென்றதாயிற்று. ... (35)

தீர்ப்பா ரிலாத மயல் தீரக் கலந்தமால்*
ஓர்ப்பாது மின்றி யுடன்பிரிய*—நேர்க்க
அறிவழிந் துற்ருரு மறக்கலங்க*பேர்கேட்டு
அறிவு பெற்ருன் மாறன் சீலம். (36)

தீர்ப்பார்இலாத மயல் தீர	தீர்ப்பவர்கள் இல்லாத [ஒருவராலும் தீர்க்க முடியாத]	உற்ருரும்	தாய்மார் முதலிய உறவினரும்
மயல் தீர	பெரிய காதல் தீரும்படி	அற கலங்க	மிகவும் கலங்கி விபரீத ப்ரவ்ருத்திகள் பண்ண (அவ்வளவிலே)
கலந்த	(கீழ்த் திருவாய் மொழியில்) வந்து கூடின	மாறன்	ஆழ்வார்
மால்	எம்பெருமான்	பேர் கேட்டு	தோழிமார் சொன்ன திருநாமங்களை யாத்ருச்சிகமாகக் கேட்டு
ஓர்ப்பு ஆதும் இன்றி	(ஆழ்வாருடைய ப்சக்ருதியைச்) சிறிதும் ஆராயாமல்	அறிவு பெற்ருன்	மோஹம் தெளிந்து உணர்த்தி பெற்ருர்;
உடன் பிரிய	உடனே பிரிந்தவளவில்	சீலம்!	இது ஆழ்வாருடைய குணமாயிருந்தது!
நேர்க்க	முன்னிலுங்காட்டில் விசேஷமாக		
அறிவு அழிந்து	சைதந்யம் அழிந்ததனுல்		

■■■—*மண்ணையிருந்து துழாவியில் ஆழ்வார்க்கு உண்டான மயலானது எங்ஙனே தீரப்போகிறது! யாராலே தீரப்போகிறது? என்னும்படியாயிருந்தது; அப்படிப்பட்ட மயல் தீரும்படியாக *வீற்றிருந்தேழுலகில் வந்து கலந்த ஸர்வேச்வரன் மீண்டும் பிரிந்தவளவிலே முன்னிலுங்காட்டில் அதிகமாக வ்யாமோஹம் தலையெடுத்தது; அப்போது தாய்மார் முதலான உறவினரும் யுக்தாயுக்த நிருபணம் பண்ண மாட்டாதே கலங்கி ஏதோ தவருன வழிகளில் சில பரிஹார முறைமை

களைச் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வளவில், ஆழ்வாருடைய ப்ரக்ருதியை யறிந்த தோழியர்வந்து "அந்தோ ! குடிகெட்டதே! மறந்தும் புறந் தொழாதாரில் தலைவரான ஆழ்வார்க்கு இப்படியும் சில அதிப்ரவ்ருத்திகள் செய்வது தகுதியோ? பகவத் பாகவத பஜநமன்றோ செய்ய அடுப்பது" என்று சொல்லிவரும்போது மாயப் போர்த் தேர்ப்பாகனார் என்றும் மதுவார் துழாய்முடி மாயப்பிரான் என்றும் உலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவன் என்றும் கவளக்கடாக்களிறட்டபிரான் என்றும் மணியினணி நிறமாயன் என்றும் மாயப்பிரான் என்றும் விண்ணோர் பெருமான் என்றும் கண்ணபிரான் என்றும் வண்துவராபதிமன்னன் என்றும் சில திருநாமங்களைச் சொன்னபடியாலே அந்தத் திருநாமங்களைக் கேட்கப் பெற்றதனால் ஆழ்வார் மயக்கந்தெளிந்து அறிவுபெற்றார் என்றதாயிற்று.

இப்பாசுரத்தின் முடிவில் சீலம் என்றே பாடம் வழங்கிவருகின்றது. சீலன் என்றிருந்த பாடம் எப்போதோ இங்ஙனம் மாறிவிட்டதென்று அழகிய மணவாளச் சீயர் அருளிச் செய்யக் கேட்டிருக்கை. சீலன்–ஸதாசாரபரரான, மாறன்—ஆழ்வார் என்றபடி. "சீலன் மாறன்பேர்கேட்டு அறிவு பெற்றான்" என்று அந்வயம் காண்க. (36)

சீலமிகு கண்ணன் திருநாமத் தாலுணர்ந்து■
மேலவன்றன் மேனிகண்டு மேவுதற்கு■—சால
வருந்தி யிரவும் பகலும் மாறாமல் கூப்பிட்
டிருந்தனனே ■தென் குருகூரேறு. (37)

சீலம் மிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து	ஸ்ரீசீலனான கண்ணபிரானுடைய திருநாமத்தினால் மோஹந் தெளிந்து	சால வருந்தி	மிகவும் ஆயாஸப்பட்டு
		இரவும் பகலும்	அஹோராத்ரமும்
		மாறாமல்	இடைவிடாமல்
மேல்	இங்ஙனம்தெளிவுபெற்றபிறகு	கூப்பிட்டு இருந்தனன்	கூப்பிட்டுக் கொண்டிருந்தார்
அவன் தன் மேனி கண்டு மேவுதற்கு	அப்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தை நேரே கண்டுகிட்டியநுபவிப்பதற்கு		(யாரெனில்)
		தென் குருகூர் ஏறு–	நம்மாழ்வார்.

■ ■ ■—கீழ்த்திருவாய்மொழியில் மோஹித்து அறிவழிந்து கிடந்த ஆழ்வார், தோழியர்கள் தாய்மாரை நோக்கிச் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தையடைவில் எம்பெருமானுடைய திருநாமங்கள் பலவற்றையும் ப்ரஸ்தாவித்ததனால் ப்ராஸங்கிகமாக அந்தத் திருநாமங்கள் செவியிற்படவே மோஹம் நீங்கித் தெளிவு பெற்றார்; பிரிவாற்றாமை அதிகமாக வருத்தத் தொடங்கியது. அதனால் அப்பெருமானுடைய திருமேனியை மாநஸஸாக்ஷாத்காரமாக வன்றிக்கே ப்ரத்யக்ஷமாகவே ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்கிற தமது விருப்பத்தை வெளியிட்டு இடைவிடாது கூவிக்கொண்டிருந்தார் ■சீலமில்லாச் சிறியனில் என்கிறது. (37)

ஏறு திருவுடைய ஈசனுகப்புக்கு■
வேறுபடிலென்னுடைமை மிக்கவுயிர்■—தேறுங்கால்
என்றனக்கும்வேண்டா வெனுமாறன் தாளை நெஞ்சே■
நந்தமக்குப்பேருக நண்ணு. (38)

ஏறு திரு உடைய	தனது திருமார்பில் ஏறி வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாரையுடையனான	தேறுங்கால்	ஆராயுமிடத்து
ஈசன்	எம்பெருமானுடைய	என் தனக்கும் வேண்டா எனும்	எனக்கும் வேண்டியதில்லையென்று வெறுத்துரைத்த
உகப்புக்கு	வேண்டுதலுக்கு	மாறன்	ஆழ்வாருடைய
வேறுபடில்	விபரீதமானால்	தாளை	திருவடிகளை
என் உடைமை	மணிமாமை முதலிய ஆத்மீயங்களும்	நெஞ்சே	மனமே!
மிக்க	இவற்றினும் உயர்ந்த	நம் தமக்கு	நமக்கு
உயிர்	ஆத்மாவும்	பேறு ஆக	ப்ராப்யமாக
		நண்ணு	விரும்புவாயாக.

[illegible]—கீழ்த் திருவாய்மொழியில் கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோர நின்று எப்பொழுதும் கண்ணநீர்கொண்டு ஆவிதுவர்ந்து துவர்ந்து நள்ளிராவும் நன்பகலும் ஓலமிட்டழைத்துக் கதறினவிடத்திலும் எம்பெருமான் வந்து முகங் காட்டாமையாலே "ப்ராப்தனாய் சீலவானாய் விரோதிகளைக் கிழங்கெடுக்கவல்லனா யிருக்கின்ற அவன் இந்த நிலைமையிலும் வந்து முகங்காட்டாதது இத்தலையை வேண்டாமையாலன்றோ; அவனுக்கு வேண்டாத ஆத்மாத்மீயங்கள் எனக்குத் தான் ஏதுக்கு?" என்று வெறுத்து அவற்றில் நசையற்றபடியை *ஏறாளுமிறையோனில் பேசின பராங்குசனுடைய பதவிணையே நமக்குப் பரம புருஷார்த்தமென்றதாயிற்று. (38)

நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்*
எண்ணாராத் துன்பமுறு மிவ்வுயிர்கள்*—தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறனருள்*
உண்டுநமக் குற்றதுணை யொன்று. (39)

மால் அடியை	எம்பெருமானது திருவடியை	கண்டு	கடாட்சித்து
நண்ணாது	கிட்டாமல்	இருக்கமாட்டாமல்	ஆறியிருக்க முடியாமல்
நால் நிலத்தே	இப் பூமியிலே	கண் கலங்கும்	திருவுள்ளம் கலங்கப்பெற்ற
வல் வினையால்	கொடிய பாவங்களினால்	மாறன்	ஆழ்வாருடைய
எண் ஆரா துன்பம் உறும் இ உயிர்கள்	அளவற்ற துக்கங்களை அநுபவிக்கிற இவ்வாத்மாக்களுடைய	அருள்	கருணையானது
		நமக்கு	நம்போல்வார்க்கு
தண்ணிமையை	நிஹீனத்தன்மையை	உற்ற துணை ஒன்று உண்டு	அடுத்ததொரு துணையாக இரா நின்றது.

[illegible]—ஆழ்வார் இந்த லோகஸ்வபாவங்களிலே கண் செலுத்தி ஆராய்ந்து பார்த்தவாறே ஒவ்வொருவரும் எம்பெருமான் பக்கலிலே விமுகராய்ப் பாவமே செய்து பாவிகளாய் அளவு கடந்த துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற படியைக்கண்டு இவர்கள்நடுவே தாம் இருக்கமாட்டாமலும் அவர்கள் படும் பாட்டைக்கண்டு ஸஹித்திருக்கமாட்டாமலும் *நண்ணாதார் பதிகத்திலே கதறினார்; அப்படிப்பட்ட ஆழ்வாருடைய அருளே நமக்குத் தஞ்சம் என்றதாயிற்று. [எண்ணாரா] எண்ண+ஆரா என்றும் பிரிக்கலாம்; எண்ணமுடியாத வென்க. 39)

ஒன்றுமிலைத் தேவு இவ்வுலகம் படைத்தமால்
அன்றியென ஆரு மறியவே*—நன்குக

மூதலித்துப் பேசியருள் மொய்ம்மகிழோன் தாள்தொழவே
காதலிக்கு மென்னுடைய கை. (40)

இ உலகம் படைத்த	இந்த லோகங்களை யுண்டாக்கின	பேசி அருள்	அருளிச்செய்த
மால் அன்றி	ஸர்வேச்வரனைத்தவிர	மொய் மகிழோன்	பெருமை தங்கிய வகுளாபரணருடைய
தேவு	தெய்வம்	தாள் தொழ ஏ	திருவடிகளை நோக்கி அஞ்சலி செய்வதன் பொருட்டே
ஒன்றும் இலை என	வேறொன்றுமில்லை யென்று	என்னுடைய கை	எனது கைகள்
ஆரும் அறிய	யாவருமறியும் வண்ணம்	காதலிக்கும்	ஆசைப்படுகின்றன.
நன்றாக மூதலித்து	நன்கு நிரூபித்து		

■ ■ ■—வேதாந்தங்களில் ஜகத்காரண வஸ்துவே உபாசிக்கவுரியதென்று ஓதி, ஸ்ரீமந்நாராயணனே காரணவஸ்து வென்றும் நிஷ்கர்ஷித்திருக்கையாலே அதனை யடியொற்றி ■ஒன்றுந்தேவு திருவாய்மொழியிலே ஸகல ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனைத் தவிர்த்துப் பரதைவம் பிறிதொன்றில்லையென்று கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டியருளின ஆழ்வாரது திருவடிகளைத் தொழுவதே ஸ்வரூபமென்றதாயிற்று. (40)

கையாருஞ் சக்கரத்தோன் காதலின்றிக்கே யிருக்க
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றை யுபகரித்த பேரருளின் தன்மைதனை
போற்றினனே மாறன் பொலிந்து. (41)

காதல் இன்றிக்கே இருக்க	(பகவத் விஷயத்தில்) அன்பு இல்லாமலிருக்க	மெய் ஆன பேற்றை	உண்மையான புருஷார்த்தத்தை
பொய் ஆக பேசும்	கபடமாகப் பேசுகின்ற	உபகரித்த	உதவி செய்த
புறன் உரைக்கு	வஞ்சக வார்த்தைகளையே பற்றாசாகக் கொண்டு,	பேர் அருளின் தன்மைதனை	மஹா கருணையின் நிலைமையை
கை ஆரும் சக்கரத்தோன்	திருக்கையிலமர்ந்த திருவாழியை யுடையவனான எம்பெருமான்	மாறன்	ஆழ்வார்
		பொலிந்து	திருவுள்ளவுகப்புடன்
		போற்றினன்	சிறப்பித்துக் கூறினர்.

■ ■ ■—எம்பெருமான் தன் பக்கலில் உள்ளுருகி பக்தி செய்பவர் திறத்தில் கருணைபுரிவது போலவே உள்ளூறின பக்தியின்றிக்கே கபடமான பக்தியைச் செய்பவர் திறத்திலும் கருணைபுரிவதுண்டு; இதை ஆழ்வார் தம் பக்கலிலே அநுபவ ஸித்தமாகக் கண்டாராதலால், தாம் கண்டவதனை ■கையார் சக்கரத் திருவாய்மொழியில் எடுத்துரைத்தாராயிற்று.

"கையாருஞ் சக்கரத்தோன்" என்பது 'உபகரித்த' என்பதிலே அந்வயிக்கும்.

புறனுரை=வெற்றுரை என்றபடி. உள்ளே யில்லாமல் வெளியிலே மாத்திரஞ் சொல்லுகிற வார்த்தை. முதல் திருவந்தாதியில் (44) "புறனுரையே யாயினும்" என்றதுங் காண்க. 'புறனுரை' என்பதற்கு பழிச்சொல் என்கிற பொரு

ளும் உண்டு. பெரிய திருமொழியில் (6-4-7) "இவன் பொல்லான் திரைந்தானென்னும் புறனுரை கேட்பதன்முன்" என்றது காண்க (41)

பொலிக பொலிகவென்று பூமகள்கோன் தொண்டர்
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி—உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல்
மருந்தாகப் போகுமன மாசு. (42)

உலகில்	இவ்வுலகத்தில்	திருந்தாதார் தம்மை	திருந்தாமலிருப்பவர்களை
பூமகள் கோன் தொண்டர்	திருமாலுக்குத் தொண்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய	திருத்திய	(உபதேச முகத்தாலே) திருத்தியுமருளின
மலிவுதனை கண்டு	ஸம்ருத்தியைக் கண்டு	மாறன்	ஆழ்வாருடைய
உகந்து	உள்ளம் பூரித்து	சொல்	ஸ்ரீஸூக்திகளே
பொலிகபொலிக என்று வாழ்த்தி	வாழ்க வாழ்க வென்று மங்களாசாஸனம் பண்ணி (அவ்வளவோடும் நில்லாமல்)	மருந்து ஆக	மருந்தாகப்பெற்று
		மனம் மாசு போகும்	மனக்கலக்கம் தொலைந்திடும்.

—கீழே நண்ணாதார் முறுவலிப்பவிலே கொடுவுலகம் காட்டேலே என்ற ஆழ்வார்க்கு இந்நிலத்தில் இருப்பு ஒருவாறு போக்யமாகைக்காக எம்பெருமான் ஸ்ரீ வைஷ்ணவத்திரள் மலிந்திருக்கும்படியை இங்கே காட்டிக்கொடுக்க, அதுகண்டு பொலிகபொலிக வென்று போற்றியும், இன்னமும் திருந்தாத ஸம்ஸாரிகளை உபதேசங்களாலே திருத்தியும் அவர்பணித்த திவ்யஸூக்திகளே நம்முடைய மனனக மலங்கள் கழிய அருமருந்து என்றதாயிற்று. (42)

மாசறு சோதிக் கண்ணன் வந்து கலவாமையால்
ஆசைமிகுந்து பழிக்கஞ்சாமல்—ஏசறவே
மண்ணில் மடலூர மாற னொருமித்தான்
உண்ணடுங்கத் தான் பிறந்தவூர். (43)

மாசு அறு சோதி	நிர்மலமான சோதியை[யுடைய]	ஏசு அற	ஏசு மெல்லை கடந்து,
கண்ணன்	எம்பெருமான்		
வந்து	நெருங்கி வந்து	தான் பிறந்த ஊர் உள் நடுங்க	தாம் பிறந்த திருநகரியிலுள்ளாரெல்லாரும் நடுங்கும்படியாக
கலவாமையால்	ஸம்ச்லேஷம் தாராமையி[னாலே]		
மாறன்	ஆழ்வார்		
ஆசை மிகுந்து	ஆசை மீதூரப்பெற்று	மண்ணில்	இவ்வுலகத்திலே
பழிக்கு அஞ்சாமல்	(ஊரார் தாயார் முதலானோருடைய) பழிக்குப் பின் வாங்காமல்	மடல் ஊர ஒருமித்தான்	மடலூருகையிலே இறங்கினார்.

—கீழ் பொலிக பொலிகவிலே மலியுஞ் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை என்று வடிவழகையும் குணங்களையும் ஸௌலப்யத்தையும் அநுஸந்தித்து இப்படிப்பட்ட எம்பெருமானோடே ஸம்ச்லேஷிக்கப்பெறவேணுமென்று கோலிக் கையை நீட்ட அப்பெருமான் அகப்படாதே கைகழிந்து நிற்க அத்தாலே கலங்கி மடலெடுக்கையிலே கைவைத்தாராழ்வார் என்கிறது.

ஏசறவே என்றவிடத்து 'ஏசவே' என்றும் பாடமுண்டென்று வியாக்கியானத்திற் காண்கிறது. (43)

ஊர நினைந்தமடல் ஊரவு மொண்ணுதபடி■
கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று■—பேராமல்
தீதுசெய்ய, மாறன் திருவுள்ளத்துச் சென்றதுயர்■
ஓதுவதிங் கெங்ஙனேயோ ? (44)

ஊர நினைந்த	தாம் ஊர்வதாக நினைத்துத் தொடங்கின	பேராமல்	தொலையாமல்
மடல்	மடல்	தீது செய்ய	உபத்திரவம் செய்ய, (அதனால்)
ஊரவும் ஒண்ணுதபடி	ஊர முடியாதபடியாக	மாறன்	ஆழ்வாருடைய
கூர் இருள் சேர் கங்குல்	மிகுந்த இருள் செறிந்த இரவானது	திரு உள்ளத்து	திருவுள்ளத்தில்
உடன் கூடி நின்று	தன் பரிவாரத்தோடே சேர்ந்து நின்று	சென்ற	சேர்ந்த
		துயர்	துயரத்தை
		இங்கு ஓதுவது	இங்கு எடுத்துரைப்பதானது
		எங்ஙனே ஓ	எப்படி முடியும்?

■■■—கீழ்த் திருவாய்மொழியிலே மடலூருவதாக ஒருப்பட்ட ஆழ்வார் அது செய்ய முடியாதபடிக்கு இருள் செறிந்த இராப்பொழுது வந்து இடையூறாக நின்றது; அதுவுமல்லாமல் மிக்க துன்பத்தையு முண்டுபண்ணிற்று; அதனால் துன்பமுற்ற ஆழ்வாருடைய ■ஊரெல்லாந்துஞ்சியில் நிலைமை வாய்கொண்டுபேசவொண்ணுததாயிருந்த தென்கை. (44)

எங்ஙனே நீர்முனிவ தென்னையினி நம்பியழகு■
இங்ஙனே தோன்றுகின்ற தென்முன்னே■—அங்ஙன்
உருவெளிப்பாடா வுரைத்த தமிழ்மாறன்■
கருதுமவர்க் கின்பக் கடல். (45)

நீர்	தோழியரும் தாய்மாருமான நீங்கள்	இங்ஙனே தோன்றுகின்றது அங்ஙன்	இதோ ப்ரத்யக்ஷமாய்த் தோன்றாநின்றதே! என்று
இனி என்னை எங்ஙனே முனிவது	இனி என்னைச் சீறலாகுமோ ?	உரு வெளிப்பாடு ஆ	உரு வெளிப்பாடென்னும் பரிசிலே
		உரைத்த	அருளிச் செய்த
நம்பி அழகு	திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகானது	தமிழ் மாறன்	த்ராவிட வேதப்ரவர்த்தகரான நம்மாழ்வார்
என் முன்னே	என் கண்ணெதிரில்	கருதுமவர்க்கு	நம்மைச் சிந்திப்பவர்களுக்கு
		இன்பம் கடல்	ஆனந்த ஸாகரமாயிருப்பர்.

■■■—திருக்குறுங்குடி நம்பியின் திவ்யாவயவஸௌந்தர்யம், திவ்யாபரணஸௌந்தர்யம், திவ்யாயுதஸௌந்தர்யம் ஆகிய அழகுகளிலே நெஞ்சுபறியுண்ட ஆழ்வார் அநவரதமும் அவற்றையே வாய்வெருவாநிற்க, அதுகண்ட தாய்மார் சீறி சிக்ஷிக்கப்புக, 'நான் நீங்கள் சிக்ஷிக்குமளவிலே நிற்கின்றேனில்லையே! உருவெளிப்பாட்டாலே நம்பியின் அழகு என் முன்னே வந்து தோன்றாநின்றதே! இனி என்னை நீங்கள் பகவத் விஷயத்தில் நின்றும் மீட்கப்பார்ப்பது பயனற்றதேயாகும்' என்று தெரிவித்தமை ■ எங்ஙனேயோ திருவாய் மொழியின் ப்ரமேயம்.

இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்கு இன்பமும் துன்பமும் கலந்து உண்டா யிற்று. அப்படிப்பட்ட ஆழ்வாரைச் சிந்திப்பவர்களுக்கோ வென்னில், ஒரு நாளும் துன்பமுண்டாகப்ரஸக்தியில்லை, இன்பமேயாகும் என்றும் ஸூசிப்பித் தருளினாராயிற்று. (45)

கடன்ஞாலத் தீசனை முன்காணாமல் நொந்தே
உடனா வனுகரிக்க லுற்று—திடமாக
வாய்ந்தவனாய்த் தான்பேசும் மாற னுரையதனை
ஆய்ந்துரைப்பா ராட்செயநோற்றார். (46)

கடல் ஞாலத்து	கடல்சூழ்ந்த நிலவுலகத்தில்
ஈசனை	எம்பெருமானை
முன் காணாமல்	கண் முன்னே காணப் பெறாமல்
நொந்து	கிலேசப்பட்டு
உடன் ஆ அனுகரிக்கல் உற்று	அவனைத் தாம் அனுகரித்துத் தரிக்கப்பார்த்து
திடம் ஆக வாய்ந்து	திண்ணிய அத்யவஸாயம் கொண்டவராய்
அவன் ஆய் தான் பேசும்	அவனாகவே தாம் அனுகரித்துப் பேசின
மாறன்	ஆழ்வாருடைய
உரை அதனை	ஸ்ரீ ஸூக்திகளை
ஆய்ந்து உரைப்பார்	வைபவமறிந்து அநுஸந்திப்பவர்கள்
ஆள் செய	ஆழ்வார்க்கு அடிமை செய்ய
நோற்றார்	நோன்பு நோற்றவராவார்கள்.

கீழ் எங்ஙனேயோவென்னுந் திருவாய்மொழியில் உருவெளிப் பாடாய்ச் சென்றதித்தனை போக்கி ஸாக்ஷாத்தாகக் காணப்பெற்றதில்லையே; ஆதலால் ஆழ்வார்க்கு க்லேசம் மிக்கதாயிற்று. அந்த க்லேசத்தை எவ்வழியாலே போக்கிக்கொள்ளலாமென்று பார்த்த ஆழ்வார் 'அனுகரித்துத்தரித்தல் என்று ஒன்றுண்டு' என்று திருவுள்ளம்பற்றி அப்படியே தத்பாவ பாவநை கொண்டு பேசினாராயிற்று கடல் ஞாலத்தில். அப்படிப்பட்ட ஆழ்வாருடைய அருளிச் செயல்களைத் தாமறிந்து ஓதவல்லவர்கள் யாவரோ அவர்கள் ஆழ்வார்க்கு நித்ய கைங்கர்யம் பண்ணநோன்பு நோற்றவர்களெனக் கொள்ளத்தகுவர் என்றதாயிற்று.(46)

நோற்ற நோன்பாதியிலேன் உன்றனை விட்டாற்றகில்லேன்
பேற்றுக்குபாய முன்றன் பேரருளே—சாற்றுகின்றேன்
இங்கென் னிலையென்னும் எழில்மாறன் சொல்வல்லார்
அங்கமரர்க் காராவமுது. (47)

நோற்ற	ஸாதநாநுஷ்டானம் பண்ணிப் பெறப்பட்ட
நோன்பு ஆதி	கருமயோகம் முதலானவற்றை
இலேன்	உடையேனல்லேன்;
உன் தனை விட்டு	தாரகனாய் போக்யனாயிருக்கிற வுன்னை விட்டு
ஆற்றகில்லேன்	தரித்திருக்க சக்தனல்லேன்;
பேற்றுக்கு	புருஷார்த்த ப்ராப்திக்கு
உபாயம்	ஸாதநம்
உன் தன்	உன்னுடைய
பேர் அருளே	பரமகிருபையே (என்று)
சாற்றுகின்றேன்	துணிந்திருக்கின்றேன்;
இங்கு	இவ்விஷயத்தில்
என் நிலை என்னும்	என்னுடைய உறுதி இது வாயிருக்கும் என்றருளிச் செய்தவரான
எழில் மாறன்	அழகிய ஆழ்வாருடைய
சொல்	திருவாய்மொழியை
வல்லார்	ஓதவல்லவர்கள்
அங்கு	திருநாட்டுக்குச் சென்ற பின்பு
அமரர்க்கு	நித்ய ஸூரிகளுக்கு
ஆரா அமுது	ஆராத அமுதமாயிருக்கப் பெறுவர்.

■■■—எம்பெருமானே! உன்னுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு இடையூருக உபாயாந்தரங்களில் தலையீடு உடையேனல்லேன்; உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையே ஸாதனம்! என்கிற மஹாவிச்வாஸமுடையேன்; இதுவாயிற்று என்னுடைய நிஷ்டை— என்று தம் உறுதியை ■நோற்ற நோன்பிலேன் என்கிற திருவாய்மொழியில் விண்ணப்பஞ்செய்தவரான ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளை ஓதவல்லவர்கள் இவ்விபூதியில் ஸாம்ராஜ்யங்களை யநுபவித்த பின்பு பரமபதத்திலும் நித்யமுக்தர்களாலே மிகவும் கொண்டாடப் பெறுவர் என்கை. (47)

■ஆரா வமுதாழ்வா ராதரித்த பேறுகளைத்■
தாராமையாலே தளர்ந்து மிக■—தீராத
ஆசையுடையனுற்ருமை பேசி யலமந்தான்■
மாசறுசீர் மாறனெம்மான். (48)

எம்மான்	அஸ்மத் ஸ்வாமியும்
மாசு அறு சீர்	குற்றமற்ற திருக்குணங்களையுடையவருமான
மாறன்	ஆழ்வார்
ஆதரித்த பேறுகளை	(திருக்குடந்தையிலே) தாம் ஆசைப்பட்ட பேறுகளை
ஆராவமுதாழ்வார் தாராமையாலே	ஆராவமுதப் பெருமாள் அருள் செய்யாமையாலே
மிக தளர்ந்து	நெஞ்சு மிகவும் சிதிலப்பட்டு
தீராத ஆசையுடன்	அநுபவத்தாலல்லது தீரமாட்டாத அபிநிவேசத்தாலே
ஆற்ருமை பேசி	தம்முடைய ஆற்ருமையை வெளியிட்டு
அலமந்தான்	வருந்தினர்.

■■■—திருக்குடந்தை யெம்பெருமான் பக்கலிலே ஆழ்வார் விரும்பின பேறுகளாவன—குளிரநோக்குதல், குசலப்ரச்னம் பண்ணுதல், தழுவுதல் முதலியன. அவற்றை ஆராவமுதன் தந்தருளாமையாலே ஆழ்வார் மிகவும் தளர்ந்து தம்முடைய ஆற்ருமையைப் பேசிற்றாயிற்று ■ஆராவமுதே யென்னும் திருவாய்மொழியில். திருக்குடந்தை யெம்பெருமானுக்கு 'ஆராவமுதாழ்வார்' என்றே ஸம்பிரதாயத் திருநாமம். "ஆராவமுது, ஆழ்வாராதரித்த பேறுகளைத்தாராமையாலே" என்று சிலர் பிரித்துப்பொருள் கூறுவது சிறிதும் பொருந்தாது. (48)

மாநலத்தால் மாறன் திருவல்லவாழ் புகப்போய்■
தானிளைத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில்■—மேல்நலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன சொலவு கற்பார் தங்களுக்கு■
பின் பிறக்க வேண்டா பிற. (49)

மாறன் தான்	ஆழ்வார்
மா நலத்தால்	மிகுந்த ப்ரேமத்தோடே
திருவல்லவாழ் புக போய்	திருவல்லவாழிலே சென்று சேரப் புறப்பட்டு
அ ஊர் தன் அருகில்	அத்தலத்தின் ஸமீபத்தில்
இளைத்துவீழ்ந்து	தளர்ந்து விழுந்து
மேல்	அதற்கு மேலே
நலங்கி	(தோழிமாருடைய நிஷேத வசனங்களாலும்) நலிவுபட்டு
துன்பம் உற்று சொன்ன	வருந்தி யருளிச்செய்த
சொலவு	ஸ்ரீஸூக்திகளை
கற்பார் தங்களுக்கு	கற்குமவர்களுக்கு
பின்	இனிமேலும்
பிற	வேறு பிறப்புக்கள்
பிறக்க வேண்டா	பிறக்கவேண்டியிராது (முக்தி ஸாம்ராஜ்யமாகும்).

—ருக்குடந்தையிலே தம்முடைய மநோரத ஸித்திபெருத ஆழ்வார் திருவல்லவாழ்நகரிலாவது சென்று களிப்போமென்று அங்கேறச் செல்லப் புறப்பட்டு முட்ட முடியப் போகப் பெருமே புறச்சோலையளவிலேயே தளர்ந்து விழுந்து ஆற்ருமை கரைபுரண்டு அருளிச் செய்த மானேய் நோக்குத் திருவாய்மொழியைக் கற்பார்களுக்கு இனி யொருநாளும் பிறவித் துன்பம் நேராமே பேரின்பமெய்தலாகும் என்றதாயிற்று. (49)

பிறந்துலகங் காத்தளிக்கும் பேரருட் கண்ணு உன்
சிறந்தகுணத்தா லுருகுஞ் சீலத்—திறந்தவிர்ந்து
சேர்ந்தனுபவிக்கும் நிலே செய்யென்ற சீர்மாறன்
வாய்ந்தபதத்தே மனமே வைகு. (50)

பிறந்து	பல பிறப்பும் பிறந்து	சேர்ந்து அனுபவிக்கும் நிலே	பொருந்தி அநுபவிக்கும்படியான நிலேமையை
உலகம் காத்து அளிக்கும்	உலகங்களே ரக்ஷித்தருளாநின்ற	செய் என்ற	செய்தருள வேணுமென்று பிரார்த்தித்த
பேர் அருள் கண்ணு	பரமதயாளுவான கண்ணபிரானே !	சீர் மாறன்	ஆழ்வாருடைய
உன் சிறந்த குணத்தால்	உனது உயர்ந்த திருக்குணங்களால்	வாய்ந்த பதத்தே	ப்ராப்தமான திருவடிகளிலேயே
உருகும் சீலம் திறம் தவிர்ந்து	நெஞ்சு உருகும்படியான தன்மை நீங்கி	மனமே வைகு	நெஞ்சே நீ பொருந்தியிரு.

—விபவாவதாரகுண சேஷ்டிதங்களேச் சிந்தைசெய்யப்புகுந்த ஆழ்வார் அவற்றைச் சிந்தை செய்ய முடியாமல் நெஞ்சு உருகிப்போகவே, அந்த எம்பெருமானேயே நோக்கி, பிரானே! இப்படி உருகிப்போகாமல் தரித்து நின்று அநுபவிக்கும்படியாக நீயே க்ருபை பண்ணியருளவேணுமென்று பிறந்தவாறுமென்கிற திருவாய்மொழியில் பிரார்த்தித்தார்; அவருடைய திருவடிகளே சிந்திக்கத்தக்கன — என்ருராயிற்று. (50)

வைகல்திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கு என்
செய்கைதனேப் புள்ளினங்காள்! செப்புமென—கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரிமாறன் கழலே
மேதினியீர் நீர் வணங்குமின். (51)

புள் இனங்காள்	பறவைக் கூட்டங்களே !	கை கழிந்த காதலுடன்	மிகப்பெரிய ப்ரேமத்துடனே
திருவண் வண்டூர்	திருவண்வண்டூரிலே	தூது விடும்	அந்த பறவைகளேத் தூது விட்ட
வைகல் வைகும்	எப்போதும் எழுந்தருளியிருக்கின்ற	காரி மாறன் கழலே	ஆழ்வாருடைய திருவடிகளேயே
இராமனுக்கு	ஸ்ரீ ராமபிரானிடத்திலே	மேதினியீர்	பூமியிலுள்ளவர்களே !
என் செய்கை தனே செப்பும் என	எனது செய்தியைச் சொல்லுங்கோ ளென்று	நீர் வணங்குமின்	நீங்கள் வணங்குங்கோள்.

—பக்ஷிகளே விளித்து 'நீங்கள் திருவண்வண்டூரிலே சென்று அங்கு எழுந்தருளியிருக்கின்ற விபவத்திருக்கோலமான ஸ்ரீராமபிரானுக்கு என்னுடைய

விரஹவேதனையைத் தெரிவித்து அங்கிருந்து நல்ல ஸமாசாரம் கொண்டுவர வேணும்' என்று ❀வைகல்பூங்கழிவாயிலே சொல்லி அந்தப்பறவைகளைத் தூது போகவிட்ட ஆழ்வாருடைய திருவடிகளை வணங்குவதே மாநிலத்தவர்களுக்கு நலமென்றதாயிற்று. (51)

மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தெனவந்தானென்று❀
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த் தான்தள்ளி❀—உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர் கோன் தாள் தொழவே❀
நாள்தோறும் நெஞ்சமே! நல்கு. (52)

மின் இடையார் சேர் கண்ணன்	மின் போன்ற நுண்ணிடையையுடையரான ஆய்ச்சியரோடு சேர்ந்து போது போக்கின கண்ணபிரான்
மெத்தென வந்தான் என்று	(அதனால்) தாமதித்து வந்தானென்றெண்ணி (ஆழ்வார்)
தன் நிலை போய்	தாமான தன்மை தவிரப்பெற்று
பெண் நிலை ஆய்	ஸ்திரீ பாவனையையடைந்து
தான் தள்ளி	அப்பெருமானைத் தாம் திரஸ்கரித்து
உன்னுடனே கூடேன் என்று ஊடும்	உன்னோடு சேரமாட்டேனென்று ஊடின
குருகையர் கோன்	சடகோபருடைய
தாள் தொழவே	திருவடிகளையே தொழுமாறு
நெஞ்சமே!	மனமே!
நாள்தோறும் நல்கு	எப்போதுமருள் செய்வாயாக.

❀❀❀—கீழ்த் திருவாய்மொழியில் தூதுவிட்டவாறே எம்பெருமான் ஓடிவர, இப்படி நாம் தூதுவிட்டழைக்க வேண்டும்படி தாமதித்ததற்கு என்னகாரணமிருக்குமென்று ஆராய்ந்த ஆழ்வார், இவன் வேறு பெண்டிரோடே கலந்திருந்து போதுபோக்கி யிருந்தானத்தனை என்று கருதி ப்ரணய ரோஷத்தாலே நீ எங்கள் கோஷ்டியில் வரலாகாது உன்னோடு நான் கூடமாட்டேன் என்று கதவடைத்துத் தள்ளினபடியைக் கூறும் ❀மின்னிடைமடவார் திருவாய்மொழி. இங்ஙனே லீலாரஸங் கொண்டாடின ஆழ்வாருடைய திருவடிகளே சரண மென்றதாயிற்று. (52)

நல்லவலத்தால் நம்மைச் சேர்த்தோன் முன் நண்ணாரை❀
வெல்லும் விருத்தவிபூதியனென்று❀—எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன் சொல்வல்லார்
வானவர்க்கு வாய்த்தகுரவர். (53)

நல்ல வலத்தால்	(பந்து பறித்தல் முதலிய) நல்ல வன்மையால்
நம்மை சேர்த்தோன்	(ஊடலை நீக்கி) நம்மைச்சேர விட்டுக் கொண்டவன்
முன்	முன்னம்
நண்ணாரை வெல்லும்	பகைவர்களை வென்றவனாய்
விருத்த விபூதியன் என்று	ஒன்றோடொன்று சேராத விருத்தவிபூதிகளையுடையவனென்று பரக்கப்பேசி
எல்லை அற	முடிவில்லாமல்
தான் இருந்து வாழ்த்தும்	தாமிருந்து ஸ்தோத்ரம் பண்ணின
தமிழ் மாறன் சொல் வல்லார்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை அதிகரிக்க வல்லார்கள்
வானவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
வாய்த்த குரவர்	பொருத்தமான குருக்களாவர்.

■ ■ ■— வைகல்பூங்கழிவாயில் தூதுவிடவேண்டும்படி எம்பெருமான் தாமதித்திருந்ததனாலே ப்ரணயரோஷம் தலையெடுத்து உன்னோடே கூட மாட்டேன்' என்று உறுதிகொண்டிருந்த ஆழ்வாரைஎம்பெருமான் நல்லவலத்தால் சேர்த்துக் கொண்டான். நல்லவலமாவது—பந்து கழல் முதலிய லீலோபகரணங்களைப் பறித்துக்கொள்ளுதல், பலவகையாகவாக்குவாதங்கள்செய்தல் முதலியவையாம். அவை கீழ்த் திருவாய்மொழியில் விசதம். இங்ஙனே நல்லவலத்தால் கூடுவித்துக் கொண்ட பெருமான், முன்னே மஹாபலசாலிகளையும் வென்றவனாதலால் அபலைகளான நம்மை வெல்லுதல் அவனுக்குப் பணியோஎன்றிருந்த ஆழ்வார்க்கு எம்பெருமான் தன்னுடைய விருத்த விபூதியோகத்தைக் காட்டிக்கொடுத்து இதையும் பாரீர் என்ன, அங்ஙனமே பார்த்து வாழ்த்தின ■ நல்குரவு மென்ற திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் வானவராலும் கொண்டாடப்பெறுவர்கள் என்றதாயிற்று. (53)

குரவை முதலாம் கண்ணன் கோலச்செயல்கள்■
இரவுபக லென்னுமல் என்றும்■—பரவுமனம்
பெற்றேனென்றேகளித்துப் பேசும் பராங்குசன் தன்■
சொல்தேனில் நெஞ்சே! துவள். (54)

கண்ணன்	கண்ணபிரானுடைய	பரவு மனம் பெற்றேன் என்றேகளித்து பேசும்	அநுபவிக்கும்படியான நெஞ்சு படைத்தேனென்று களித்தருளிச் செய்த
குரவை முதல் ஆம் கோலம் செயல்கள்	ராஸக்ரீடை முதலான அழகிய சேஷ்டிதங்களை	பராங்குசன் தன் சொல் தேனில்	நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தியாகிற மதுவிலே
இரவுபகல் என்னுமல் என்றும்	இரவு பகல் என்கிற வாசியின்றிக்கே எக்காலத்திலும்	நெஞ்சே	ஓ மனமே!
		துவள்	நீ ஈடுபட்டிரு.

■ ■ ■—கண்ணபிரான் செய்தருளின ராஸக்ரீடை முதலான திவ்யசேஷ்டிதங்களிலே அஹோராத்ர விபாகமற எப்போதும் ஈடுபட்டு அவற்றையே அநுபவிக்கும்படியான நெஞ்சு பெற்றேனே! என்று மிக்க களிப்புடனே *குரவையாய்ச்சியர் பதிகம் பேசின ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி யமுதமே நமக்குப் பரமபோக்யம் என்றதாயிற்று. (54)

துவளறுசீர் மால்திறத்துத் தொன்னலத்தால்* நாளும்
துவளறுதன் சீலமெல்லாம் சொன்னான்—*துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கிநின்ற மாறன்* அதில்
மன்னுமுவப்பால் வந்தமால். (55)

முன்னம்	கீழ்த்திருவாய்மொழியில்	மூழ்கி நின்ற மாறன்	பரிபூர்ணமாக அவகாஹிக்கப்பெற்றிருந்த ஆழ்வார்
அநுபவத்தில்	எம்பெருமானை யனுபவிக்குந் திறத்தில்	அதில் மன்னும் உவப்பால் வந்த மால்	அவ்வனுபவத்தில்பொருந்தி நிற்கப்பெற்ற ஆனந்தத்தாலுண்டான வியாமோஹத்தினால்
துவள் அற	ஒரு குறைவு மின்றிக்கே		

துவள் அறு சீர் மால் திறத்து	குற்றமற்ற கல்யாண குணங்களையுடைய எம்பெருமான் விஷயத்தில்	நாளும் துவள் அறு	நித்ய நிர்துஷ்டமாயிருக்கின்ற
		தன் சீலம் எல்லாம்	தம் படிகளை யெல்லாம்
தொல் நலத்தால்- இயற்கையான பக்தியினால்		சொன்னான்	அருளிச் செய்தார்.

■■■—துவளில் மாமணிமாடத் திருவாய்மொழியானது ஆழ்வார் தம்முடைய படிகளைத் தாமே தெரிவிப்பது என்று ஈட்டிலருளிச்செய்தபடியே இங்கு மருளிச் செய்கிறார். "மாறன் தன் சீலமெல்லாம் சொன்னான்" என்கிறார். ஹேயகுணம் சிறிது மின்றிக்கே ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான எம்பெருமான் விஷயத்தில் பக்தியடியாகத் தமக்குண்டான படிகளையெல்லாம் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்தார்; அதற்குக் காரண மென்னவெனில், கீழ்த்திருவாய் மொழியில் விளைந்த அநுபவமே என்றதாயிற்று. (55)

மாலுடனே தான் கலந்து வாழப்பெருமையால்*
சாலநைந்து தன்னுடைமை தானடையக்—கோலியே*
தானிகழவேண்டாமல் தன்னைவிடல் சொல்மாறன்*
ஊனமறுசீர் நெஞ்சே யுண். (56)

மாலுடனே	பரம புருஷனோடு	தன்னை விடல் சொல் மாறன்	அவை தன்னடையே முற்கோலித் தம்மைக் கட்டடங்கவிட்டு அகன்றபடியை அருளிச்செய்த ஆழ்வாருடைய
தான் கலந்து வாழ பெருமையால்	தாம் கூடி வாழப் பெருமையாலே		
சால நைந்து	மிகவும் தளர்ந்து	ஊனம் அறு சீர்	குற்றமற்ற திருக்கல்யாண குணங்களை
தன் உடைமை தான் அடைய	தம்முடைய ஆத்மாத்மீயங்களை யெல்லாம்		
கோலி தான் இகழ வேண்டாமல்	ஸ்வப்ரயத்ந பூர்வகமாக விட வேண்டாமல்	நெஞ்சே உண்	மனமே நீ அனுபவிப்பாயாக!

■■■—ஆழ்வார் தாம் எம்பெருமானோடு கூடி வாழப் பெருமையால் மிகவும் தளர்ச்சி யடைந்து ஆத்மாத்மீயங்களெல்லாம் தம்மை விட்டு அகன்றபடியை *மாலுக்கு வையமளந்த திருவாய்மொழியில் அருளிச்செய்தார் என்றதாயிற்று. கீழே நாலாம் பத்தில்* ஏருளுமிறையோனும் என்கிற திருவாய்மொழியிற் காட்டிலும் இத்திருவாய்மொழிக்கு வாசியருளிச் செய்வதற்காக "கோலியே தானிகழ வேண்டாமல்" என்றருளிச் செய்தது. அத்திருவாய் மொழியில் ஆத்மாத்மீயங்களை ஸ்வப்ரயத்நபூர்வகமாக ஆழ்வார் கைவிட்டார்; இத்திருவாய்மொழியில் அங்ஙன மன்றிக்கே அவை தன்னடையே விட்டொழிந்தமை கூறல் வாசி யென்க. (56)

உண்ணுஞ்சோறுதி யொருமூன்று மெம்பெருமான்*
கண்ணனென்றே நீர்மல்கிக் கண்ணிணைகள்—*மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன் பால் போம்மாறன்*
பொன்னடியே நந்தமக்குப் பொன். (57)

உண்ணும் சோறு ஆதி ஒரு மூன்றும்	உண்ணும் சோறு முதலான தாரக போஷக போக்யங்கள் மூன்றும்	மண் உலகில் மன்னு	இந்நிலவுலகில நிலைபெற்றிருக்கிற
எம்பெருமான் கண்ணன் என்றே	எம்பெருமானாகிய ஸ்ரீ க்ருஷ்ணனே என்று அத்யவஸித்திருந்து	திருக்கோளூரில்	திருக்கோளூரிலுள்ள
கண் இணைகள் நீர் மல்கி	இரண்டு கண்களிலும் நீர் ததும்பப் பெற்று	மாயன் பால் போம்	வைத்தமாநிதிப்பெருமாளிடம் செல்லப் புறப்பட்ட
		மாறன்	ஆழ்வாருடைய
		பொன் அடியே	அழகிய திருவடிகளே
		தம் தமக்கு பொன்	நமக்குத் தனமாகும்.

■■■—"வாஸுதேவஸ் ஸர்வம்" என்றபடியே சோறு நீர் வெற்றிலைகளாகிய தாரக போஷக போக்யங்களெல்லாம் கண்ணனெம்பெருமானே யென்கிற அத்யவஸாயம் நிரம்பப் பெற்றிருந்து கண்ணீரைக் கொண்டே நிரூபணீயரான ஆழ்வார் ■உண்ணுஞ்சோறு திருவாய்மொழியில் திருக்கோளூர்க்குச் செல்லப் புறப்பட்டார். அவருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம். (57)

பொன்னுலகு பூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி■
என்னிடரை மாலுக்கியம்புமென—■மன்னுதிரு
நாடுமுதல் தூது நல்கிவிடும்மாறனையே■
நீடுலகீர் போய்வணங்கும் நீர். (58)

பொன் உலகு பூமி எல்லாம்	நித்ய விபூதி லீலாவிபூதியாகிய எல்லாவற்றையும்	மன்னு திரு நாடு முதல்	நித்யவைகுண்டம் முதலான இடங்களில்
புள் இனங் கட்கே வழங்கி	பறவைக் கணங்களுக்கே கொடுப்பதாகச்சொல்லி	தூது நல்கி விடும்	(பக்ஷிகளைத்) தூதாக விரும்பிப் போகவிட்டருளின
என் இடரை மாலுக்கு இயம்புமென	(நீங்கள்) எனது துயரை எம்பெருமானிடம் சென்று சொல்லுங்கோள் என்று	மாறனையே	ஆழ்வாரையே
		நீடு உலகீர்	பெரிய உலகத்தீர்களே!
		நீர் போய் வணங்கும்	நீங்கள் சென்று வணங்குங்கள்.

C ■—உபயவிபூதியையும் வழங்குவதாக வாக்களித்துப் புள்ளினங்களை விளித்து "திருநாட்டிலோ அந்தர்யாமித்வத்திலோ எங்கேயாவது எம்பெருமானைக் கண்டுபிடித்து நீங்கள் எனது பிரிவாற்றாமையை அவனுக்கு அறிவிக்க வேணும்" என்று சொல்லிப் ■பொன்னுலகாளீரோ■ பதிகத்தில் தூதுவிட்ட ஆழ்வாரையே அனைவரும் வணங்கவேணு மென்றாராயிற்று. (58)

நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய ■மாலுக்கும்
ஏரார்விசும்பி லிருப்பரிதா*—ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன் சொல்லை■
ஓதிடவேயுய்யு முலகு. (59)

கேட்டவர்கள்	(தம்முடைய ஆர்த்த நாதத்தைக்) கேட்டவர்கள்	ஆராத காதலுடன்	பரிபூர்ண ஆசையோடு
நீர் ஆகி நெஞ்சு அழிய	நீராய்க் கரைந்து நெஞ்சு சிதில மாகும்படியும்	கூப்பிட்ட	அவனைக் கூவியழைத்த
மாலுக்கும்	ஸர்வேச்வரனுக்கும்	காரி மாறன்	நம்மாழ்வாருடைய
ஏர் ஆர் விசும்பில்	செல்வம் மிகுந்த பரமபதத்திலே	சொல்லை	அருளிச் செயலை
இருப்பு அரிதா	எழுந்தருளியிருத்தல் அஸாத்யமாம்படியாகவும்	ஓதிடவே	ஓதின வளவிலே
		உலகு உய்யும்	உலகம் உஜ்ஜீவிக்கும்.

[illegible]—கேட்டவர்கள் நெஞ்சுருகிக் கரையும்படியாகவும் எம்பெருமானுங் கூடத் திருநாட்டில் தரித்திருக்க முடியாதபடியாகவும் பெருமிடறுசெய்து *நீராய் நிலனாய்ப் பதிகத்தில் கூப்பிட்டழைத்த ஆழ்வாருடைய திவ்யஸூக்தியை அதிகரிக்கவே உலகம் உஜ்ஜீவித்ததாகும். (59)

உலகுய்ய மால்நின்ற உயர்வேங்கடத்தே
அலர்மகளை முன்னிட்டு அவன்றன்—மலரடியே*
வன்சரணாய்ச் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே*
உன்சரணாய் நெஞ்சமே உள். (60)

மால்	ஸர்வேச்வரன்	வன் சரண் ஆய் சேர்ந்த	திண்ணிய உபாயமாகப் பற்றின
உலகு உய்ய நின்ற	ஸகல லோகங்களும் உஜ்ஜீவிக்கும்படியாக நின்ற	மகிழ் மாறன்	வகுளாபரணரான நம்மாழ்வாருடைய
உயர் வேங்கடத்தே	உயர்ந்த திருமலையிலே	தாள் இணையே	உபய பாதங்களையே
அலர் மகளை முன்னிட்டு	பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டு	நெஞ்சமே	ஓ மனமே!
அவன் தன் மலர் அடியே	அப்பெருமானுடைய திருவடித்தாமரைகளையே	உன் சரண் ஆய் உன்	உனக்குப் புகலாகப்ரதிபத்தி பண்ணு.

[illegible]—"கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியே இன்னாரினையாரென்கிற வாசியின்றிக்கே ஸகலப் பிராணிகளும் உஜ்ஜீவிக்கும்படியாகத் திருமலையிலே யெழுந்தருளியிருக்கின்ற திருவேங்கடமுடையானுடைய திருவடிகளைப் பிராட்டி புருஷகாரமாகப் பற்றினபடியை *உலகமுண்ட திருவாய்மொழியிலருளிச் செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சமென்றுராயிற்று. ஈற்றடியில் உள்ளு என்கிற பாடமும் பொருந்தும். (60)

உண்ணிலாவைவருடனிருத்தி இவ்வுலகில்*
எண்ணிலாமாயன் எனை நலிய—எண்ணுகின்றான்*
என்று நினைந்தோலமிட்ட இன்புகழ்சேர் மாறனென*
குன்றிவிடுமே பவக்கங்குல். (61)

எண் இலா மாயன்	எண்ணிறந்த ஆச்சரியகுண சேஷ்டிதங்களை யுடையனான எம்பெருமான்	எண்ணுகின்றான் என்று நினைந்து	திருவுள்ளம்பற்றி விட்டானென்றெண்ணி
இ உலகில்	இந்நிலவுலகத்திலே	ஓலம் இட்ட	முறையிட்ட
		இன் புகழ்சேர்	மஹாயசஸ்வியான
உள் நிலாவு ஐவருடன் இருத்தி	உள்ளே வர்த்திக்கிற பஞ்சேந்திரியங்களாகிற பகைவருடன் இருக்கச்செய்து	மாறன் என	ஆழ்வார் என்று அநுஸந்தித்த வாறே
எனை நலிய	என்னை ஹிம்ஸிக்க	பவம் கங்குல் குன்றி விடும்	ஸம்ஸாரமாகிற காளராத்திரி ஒழிந்துபோம்.

[illegible]—ஆழ்வாரை இந்நிலத்திலே வைத்தது அஸ்மதாதிகளுக்காக. இந்நிலத்திலிருக்குமளவும் இந்திரியங்களோடே யிருக்கவேண்டியது ஸஹஜம். ஆகவே எம்பெருமான் ஆழ்வாரையும் இந்திரியங்களோடே வைக்கவேண்டிய

தாயிற்று. அதுகண்ட வாழ்வார் "இந்திரியங்களானவை எப்படிப்பட்டவர்களையும் படாதபாடு படுத்துமவையல்லவோ. இப்படிப்பட்ட இந்திரியங்களோடே நம்மை வைத்திருப்பது நலிகைக்காகவே போலும்" என்றெண்ணி அப்பெருமானை நோக்கி ஓவென்று முறையிட்டார் ▪உண்ணிலாவிய வென்னுந் திருவாய்மொழியில். அப்படிப்பட்ட ஆழ்வார் திருநாமத்தை உச்சரித்தவளவிலேயே நம்முடைய ஸம்ஸார பந்தம் தொலையும். (61)

*கங்குல்பகலரதி கைவிஞ்சி மோகமுற▪
அங்கதனைக் கண்டோர ரங்கரைப் பார்த்து—*இங்கிவள்பால்
என்செய நீ ரெண்ணுகின்ற தென்னுநிலை சேர்மாறன்▪
அஞ்சொலுற நெஞ்சு வெள்ளையாம். (62)

கங்குல் பகல்	இரவிலும் பகலிலும்	இங்கு இவள்பால் என் செய நீர் எண்ணுகின்றது என்னும் நிலை சேர் மாறன்	'இத்தகைய நிலைமையில் இவள் திறத்து நீர் செய்ய நினைத்திருப்பது என்ன ?' என்று கேட்கவேண்டும்படியான அவஸ்தையை யடைந்த ஆழ்வாருடைய
அரதிகை விஞ்சி	ஆற்றாமை அதிகப்பட்டு	அம் சொல் உற	ஸ்ரீஸூக்தியை யநுஸந்திக்க
மோகம் உற	(ஆழ்வார்) மோஹமடைந்திட	நெஞ்சு வெள்ளை ஆம்	ஹ்ருதயம் பரிசுத்தமாகும்.
அங்கு அதனை கண்டோர்	அந்த நிலைமையைப் பார்த்த திருத்தாயார்		
அரங்கரை பார்த்து	ஸ்ரீரங்கநாதனை நோக்கி		

▪▪▪—கீழ்த்திருவாய் மொழியாகிய ▪உண்ணிலாவிய பதிகத்திலுண்டான தளர்ச்சியானது மிகவும் அதிகரித்து உணர்த்தியழிந்து மூர்ச்சிக்கும்படியான நிலைமை நேர்ந்தவளவிலே "கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கி" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்திப்படியே பராங்குச நாயகியைத் திருத்தாயார் கோயில் திருவாசலிலே இட்டுவைத்து, 'பெரியபெருமாளே! இப்பெண்பிள்ளை திறத்து நீர் செய்ய நினைத்திருப்பது யாது? இப்படி இவளைக் கைவிடுகை தருமமோ?' என்று கேட்கிறபடியாய்ச் சென்றது ▪கங்குலும் பகலும் பதிகம்.

அரதி—வட சொல் ஆற்றாமை. (62)

வெள்ளிய நாமங்கேட்டு விட்டகன்றபின்மோகம்▪
தெள்ளியமால் தென்திருப்பேர்சென்றுபுக▪—உள்ளமங்கே
பற்றிநின்றதன்மை பகரும் சடகோபற்கு▪
அற்றவர்கள் தாமாழியார். (63)

வெள்ளிய நாமம் கேட்டு	போக்யமான பகவந் நாமங்களைத் தாய் சொல்லக் கேட்டதனால்	உள்ளம் அங்கே பற்றி நின்ற தன்மை பகரும்	தமது திருவுள்ளம் அவ்விடத்திலேயே பிரவணமானபடியை அருளிச்செய்த
மோகம் விட்டு அகன்ற பின்	மூர்ச்சை தெளிந்த பின்பு	சடகோபற்கு	ஆழ்வார் பக்கலிலே
தெள்ளிய மால்	ஸர்வஜ்ஞனான ஸர்வேச்வரனுடைய (திருப்பதிகளுள் ஒன்றான)	அற்றவர்கள் தாம்	அற்றுத் தீர்ந்தவர்கள் (அநந்யார்ஹசேஷபூதர்கள்)
தென் திருப்பேர் சென்று புக	தென் திருப்பேரெயிற்பதியில் போய்ப் பிரவேசிக்க	ஆழியார்	கம்பீரஹ்ருதயர்களாவர்.

■ ■ ■—கீழ்த்திருவாய் மொழியாகிய கங்குலும் பகலில் திருத்தாயார் வாக்கிலே தோன்றிய சில திருநாமங்களைக் கேட்கப்பெற்ற வளவிலே மூர்ச்சை தீர்ந்தொழிய, உணர்ச்சி பெற்ற ஆழ்வார் தென்திருப்பேரெயில் என்னும் திருப்பதியிலே சென்று சேரவேணுமென்கிற ஆசையை வெளியிட்டருளினர் வெள்ளைச் சுரிசங்கு திருவாய்மொழியிலென்க.

இப்பாட்டின் இரண்டாமடியில் "தென்திருப்பேர்" என்றே உலகமெங்கும் பாடம் வழங்கி வருகின்றது. சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக்குடத்தான் ஸன்னிதிக்கே தென் திருப்பேரென்று வ்யவஹாரம். அந்தத் திருப்பதி இங்கு விஷயமன்று. பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான தென்திருப்பேரையே இங்கு விவக்ஷிதம். ஆகவே 'தென்பேரை' என்று பாடமிருந்திருக்கலாமென்பர் பெரியோர். பேரை என்பது திருநாமமன்றென்றும், 'பேரெயில்' என்பதே திருநாம மென்றும் வியாக்கியானங்களினால் தேறுகின்றபடியால் ஏகதேசக்ரஹணமாகத் தென் திருப்பேர் என்றிருக்கத் தகுதியுண்டு. (63)

ஆழிவண்ணன் தன் விசயமானவை முற்றுங்காட்டி
வாழிதனாலென்று மகிழ்ந்து நிற்க—ஊழிலவை
தன்னையின்று போல் கண்டு தானுரைத்த மாறன் சொல்
பன்னுவரே நல்லது கற்பார். (64)

ஆழி வண்ணன்	கடல் வண்ணனை எம்பெருமான்	இன்று போல் கண்டு	இன்று நடந்தவை போல் ஸாக்ஷாத்கரித்து
தன் விசயம் ஆனவை முற்றும் காட்டி	தன்னுடைய விஜய பரம்பரைகள் முழுவதும் காட்டி	தான் உரைத்த மாறன்	தாம் அநுபவித்தற்குப் போக்கு வீடாகப் பாசுரமருளிச்செய்த ஆழ்வாருடைய
இதனால் வாழ் என்று	இவற்றை யநுபவிப்பதனால் வாழ்ந்துபோமென்று (ஆழ்வாரை நோக்கிக்) கூறி	சொல்	ஸ்ரீஸூக்திகளை
மகிழ்ந்து நிற்க	உகந்திருக்க	பன்னுவரே	அநுஸந்திப்பவர்களே
ஊழிலவை தன்னை	பழையனவாய்க் கழிந்த அந்த விஜயாபதானங்களை	நல்லது கற்பார்	நல்ல நூல்களைக் கற்பவராவர்.

■ ■ ■—எம்பெருமான் ஆழ்வாரை ஒருவாறு தரிப்பிக்க வேண்டித் தன்னுடைய அபதானங்களாகிய மூவுலகளத்தல், கடல் கடைதல், நிலமிடத்தல், பிரளயம் காத்தல், பாரதம் கைசெய்தல் முதலிய சரித்திரங்களைக் காட்டிக் கொடுத்து 'ஆழ்வீர்! இவற்றைப் பேசியநுபவித்து வாழக்கடவீர்' என்றருளிச் செய்ய ஆழ்வாரும் அவற்றையெல்லாம் தற்காலத்திற்போலக் கண்டுகளித்துப் பேசியனுபவித்தார் ஆழியெழவென்னும் பதிகத்தில்.

'நல்லது கற்பார் மாறன்சொல் பன்னுவர்' என்று அந்வயித்து, நல்ல ஸ்ரீஸூக்திகளைக் கற்க விருப்பமுடையவர்கள் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைக் கற்பர்கள் என்று முரைக்கலாம். (64)

கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்
பற்றும் விபவகுணப் பண்புகளை—உற்றுணர்ந்து

மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன்சொல்■
பண்ணிலினிதான தமிழ்ப் பா. (65)

கற்ருேர் கருதும்	கற்றவர்களால் தியானிக்கப் படுகிற	மண்ணில் உள்ளோர் தம் இழவை	இம்மண்ணுலகத்தவர்கள் பகவதநுபவத்தையிழக்கும் படியை
விசயங்களுக்கு எல்லாம பற்று ஆம்	வெற்றிச் சரிதைகளுக்கெல்லாம் ஆலம்பனமாயிருக்கிற	வாய்ந்து உரைத்த	பொருத்தமாக எடுத்துரைத்த
விபவ குணம் பண்புகளை	விபவாவதார குண ஸ்வபாவங்களை	மாறன் சொல்	ஆழ்வாரது அருளிச்செயலானது
உற்று உணர்ந்து ஆராய்ந்தறிந்து,		பண்ணில் இனிது ஆன தமிழ் பா	பண்ணிசையில் பரமபோக்யமான த்ராவிட வேதம்.

■ ■ ■—கீழ்த்திருவாய்மொழியாகிய ■ஆழியெழவெனும் பதிகத்தில் அநுஸந்தித்த விஜய பரம்பரைக்கு அடியான விபவாவதார குண ஸ்வபாவங்களை அநுஸந்தித்து 'படுக்கைக் கீழே தனங் கிடக்கக் கால்வீங்கிச் சாவாரைப்போலே இப்படிப்பட்ட மஹாநிதியுண்டாயிருக்க இவ்வுலகத்தவர்கள் இத்தையிழந்து அனர்த்தப்படுவதே!' என்று ஸம்ஸாரிகளிழவுக்கு வெறுத்து உரைத்த பதிகம் ■கற்பாரிராமபிரானை யென்பது.

கீழ்த்திருவாய்மொழியின் நிகமனப் பாசுரத்தில் ■வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே■ என்றதில் நோக்காக "விசயங்களுக்கெல்லாம்" என்றருளிச்செய்தபடி. விசயங்களென்றது விஜயாபதாநங்களென்றபடி. ... (65)

பாமருவுவேதம் பகர்மால்குணங்களுடன்■
ஆமழகுவேண்டப்பாடாமவற்றை—■தூமனத்தால்
நண்ணியவனைக் காண நன்குருகிக் கூப்பிட்ட■
அண்ணலை நண்ணுரேழையர். (66)

பா மருவு வேதம் பகர்	சந்தங்கள் பொருந்திய வேதங்களால் பேசப்படுகிற	தூ மனத்தால் நண்ணி	மாநஸ ஸாக்ஷாத்காரமாக அநுபவித்து
மால்	ஸர்வேச்வரனுடைய	அவனை காண	அப்பெருமானைக் கண்ணுரக் காணவேண்டி
குணங்களுடன்	திருக்குணங்களென்ன	நன்கு உருகி கூப்பிட்ட	நன்ருக உள்ளம் உருகி ஓவென்று ஓலமிட்ட
ஆம் அழகு	நல்ல அழகென்ன	அண்ணலை	ஆழ்வாரை
வேண்டப் பாடு ஆம் அவற்றை	பெருமேன்மை யென்ன ஆகியவைகளை	நண்ணுர்	அடிபணியாதவர்கள்
		ஏழையர்	அவிவேகிகளாவர்.

■ ■ ■—கீழ்த்திருவாய்மொழியாகிய ■கற்பாரில் அநுஸந்திக்கப்பட்ட குணங்களோடு கூட அப்பெருமானது வடிவழகும் பெருமேன்மையும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற்கு விஷயமாக, அவற்ருேடு கூடின அப்பெருமானைக் கண்ணுலே காணவேணு மென்னுமாசை கிளர்ந்து கூப்பிட்ட திருவாய்மொழியாம் ■ பாமருமூவுலகுமென்பது. அங்ஙனம் கூப்பிட்ட ஆழ்வாரை ஆச்ரயியாதவர்கள் அறிவிலிகளான நீசரேயாவர் என்றதாயிற்று.

வேண்டப்பாடாவது ஸர்வாதிகத்வம். பாமருமூவுலகும் படைத்த பாமரு மூவுலகு மளந்த இத்தியாதிகளால் ஸர்வாதிகத்வமும் தாமரைக்கண்ணுவோ தாமரைக் கையாவோ இத்தியாதிகளால் அழகும் கூறினமை அறிக. (66)

ஏழையர்கள்நெஞ்சை யிளகுவிக்கும்மாலழகு
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க—ஆழுமனந்
தன்னுடனேயவ்வழகைத் தானுரைத்த மாறன்பால்
மன்னுமவர் தீவினைபோம்மாய்ந்து. (67)

ஏழையர்கள் நெஞ்சை	அபலைகளினுடைய மனத்தை	ஆழும் மனம் தன்னுடனே	ஈடுபட்ட மனத்துடனே
இளகுவிக்கும்	உருக்க வல்லதான	அவ்வழகை	அந்த வடிவழகை
மால் அழகு	எம்பெருமானது அழகானது	தான் உரைத்த மாறன்பால்	அருளிச்செய்த ஆழ்வார் விஷயத்திலே
சூழ வந்து தோன்றி	நாற்புறமும் வந்து காட்சி தந்து	மன்னுமவர்	பொருந்தியிருப்பவர்களினுடைய
துயர் விளைக்க	வருத்தத்தையுண்டாக்க;	தீ வினை	பாவங்களெல்லாம்
		மாய்ந்து போம்	உருவழிந்துபோம்.

—கீழ்த்திருவாய்மொழியாகிய பாமரு மூவுலகில் வந்தெய்துமாறறியேன் மல்குநீலச் சுடர்தழைப்ப என்னும் பாசுரத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட விலக்ஷணமான வடிவழகானது திருவுள்ளத்திலே ஊற்றிருந்து அத்தையே இடையறாமல் பாவித்த பாவநாப்ரகர்ஷத்தாலே அவ்வழகு ப்ரத்யக்ஷஸமமாய்த்தோற்றித் தனித்தனியும் திரளவும் ஒரு முகஞ் செய்து நலிய, தாம் நலிவு பட்டுச் சொல்லுகிற படியை உருவெளிப்பாட்டாலே நோவுபடுகிறவொரு பிராட்டி பாசுரமாக அருளிச் செய்ததாம் ஏழையராவிப் பதிகம். (67)

மாயாமல்தன்னை வைத்த வைசித்திரியாலே
தீயாவிசித்திரமாச் சேர்பொருளோ—டோயாமல்
வாய்ந்துநிற்கும்மாயன் வளமுரைத்த மாறனைநாம்
ஏய்ந்துரைத்து வாழுநாளென்று. (68)

தன்னை மாயாமல் வைத்த	ஆழ்வாராகிய தம்மை அழியாதபடி இத்திலத்திலே வைத்த	ஓயாமல்	அநவரதமும்
வைசித்திரியாலே	விசித்திரத் தன்மையினால்,	வாய்ந்து நிற்கும் மாயன்	பொருந்தி நிற்கிற எம்பெருமானுடைய
தீ ஆம் விசித்திரமா சேர் பொருளோடு	தீ முதலான பஞ்சபூதங்களும் (ஒன்றின் காரியம் ஒன்றுக்கில்லாதபடி வெவ்வேறுருவாய்) சேர்ந்திருக்கும் பதார்த்தங்களோடே	வளம்	விபூதி விஸ்தாரத்தை
		உரைத்த	அருளிச்செய்த
		மாறனை	ஆழ்வாரை
		நாம் ஏய்ந்து உரைத்து வாழும் நாள் என்று	நாம் அநுகித்துதித்து வாழ்வது என்றைக்கோ?

—கீழ்த்திருவாய்மொழியாகிய ஏழையராவியில் பட்ட நலிவுக்கு ஆழ்வார் முடிந்தேபோயிருக்கவேண்டும்; ஆயினும் முடிந்து போகாதபடி தம்மை வைத்து நோக்கிக்கொண்டு போருகிற ஆச்சரியத்தைக் கண்டு தாம் விசித்திரப் பட, ‘ஆழ்வீர்! இஃதொன்று கொண்டோ நீர் இப்படி விஸ்மயப்படுகிறது?

மற்றும் நம்முடைய விசித்திரமான படிகளையெல்லாம் காணீர்' என்று எம்பெருமான் தன்னுடைய ஆச்சர்ய ஜகதாகாரத்வத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தை யநுபவித்து விஸ்மிதராகிருராழ்வார் மாயாவாமனனே யென்னுந் திருவாய்மொழியில்.

இரண்டாமடியில் 'ஆயாமல்' என்றும் பாடமுண்டென்பர்; அது வழங்குமதன்று. (68)

என்றனை நீ யிங்குவைத்த தேதுக்கென மாலும்
என்றனக்கு மென்றமர்க்கு மின்பமதா—நன்றுகவி
பாடவெனக் கைம்மாறிலாமை பகர்மாறன்
பாடணைவார்க்குண்டாமின்பம். (69)

என்தனை நீ இங்குவைத்தது ஏதுக்கு என	(எம்பெருமானே) என்னை நீ இந்நிலத்தில் வைத்திருப்பது எதற்காக? என்று (ஆழ்வார்) கேட்க,	கைம்மாறு இலாமைபகர்	இவ்வுபகாரத்திற்கு ஏற்ற பிரதி யுபகாரம் தம்மிடத்தில் இல்லாமையை நிர்வேதத்துடன் அருளிச் செய்த
மாலும்	எம்பெருமானும்	மாறன் பாடு	ஆழ்வார் பக்கலிலே
என் தனக்கும் என் தமர்க்கும் இன்பம் அது ஆ நன்று கவி பாட என	"எனக்கும் என்னடியார்க்கும் போக்யமாக திவ்யப்பிரபந்தமருளிச் செய்வதற்காக (வைத்திருக்கிறேன்)" என்று விடையருள,	அணைவார்க்கு	சேருமவர்களுக்கு
		இன்பம் உண்டாம்	ஆனந்த முண்டாகும்.

—பிரானே! எனக்கு ருசி யில்லாமலிருக்க என்னை இந்த ஸம்ஸாரத்திலே நீ வைத்திருப்பது எதற்காக வென்று ஆழ்வார் கேட்க 'உம்மைக்கொண்டு நமக்கும் நம்முடையார்க்கு மனுபவிக்கலாம்படி விலக்ஷணமான திருவாய்மொழியைப் பாடுவித்துக் கொள்ளவே உம்மை இங்கு வைத்தோங்காணும்' என்று எம்பெருமானருளிச்செய்ய வியாஸபராசராதி மஹர்ஷிகளும் முதலாழ்வார்களுமுண்டாயிருக்க, நீசனேன் நிறையொன்றுமிலேனைக்கொண்டு இக்காரியம் கொள்ளத் திருவுள்ளம் பற்றின இம்மஹோபகாரத்திற்கு உபயவிபூதியிலும் கைம்மாறு ஒன்று மில்லையே யென்று தடுமாறிப் பேசினது என்றைக்கு மென்னை யென்கிற திருவாய்மொழி. (69)

இன்பக்கவி பாடுவித்தோனை இந்திரையோடு
அன்புற்று வாழ்திருவாறன் விளையில்—துன்பமறக்
கண்டடிமை செய்யக் கருதியமாறன் கழலே
திண்டிறலோர் யாவர்க்கும் தேவு. (70)

இன்பம் கவிபாடுவித்தோனை	போக்யமான திருவாய்மொழியைத் தம்மைக் கொண்டு பாடுவித்த எம்பெருமானை	துன்பம் அற கண்டு	தமது வருத்தம் தீரக் கண்டு
		அடிமை செய்ய கருதிய	கைங்கரியம் பண்ண ஆசைப்பட்ட
இந்திரையோடு	பிராட்டியோடு கூட	மாறன்	ஆழ்வாருடைய
அன்புற்றுவாழ்	மகிழ்ந்தே வாழுமிடமான	கழலே	திருவடிகளே
திருவாறன் விளையில்	திருவாறன்விளை யென்னும் மலைநாட்டுத் திருப்பதியில்	திண் திறலோர் யாவர்கரும்	திடமான அத்யவஸாயமுடையாரெல்லார்க்கும்
		தேவு	தெய்வமாகும்.

■■■—ஆழ்வார் தாம் பாடின திருவாய்மொழியைக் கேட்கைக்காகப் பெரிய பிராட்டியாருடனே பேரோலக்கமாகத் திருவாறன்விளையிலே எம்பெருமான் வந்தெழுந்தருளியிருக்கிறபடியை அநுஸந்தித்து நாம் அங்கே சென்று அச்சேர்த்தியிலே திருவாய்மொழியைக் கேட்பித்து அடிமை செய்யப்பெறுவது எப்போதோ வென்று மநோரதிக்கிறபடியைக் கூறும் ■இன்பம் பயக்கவென்கிற திருவாய்மொழி யென்றதாயிற்று. (70)

தேவனுறைபதியில் சேரப்பெருமையால்■
மேவுமடியார்வசனும் மெய்ந்நிலையும்—■யாவையும்தா
னும்நிலையும் சங்கித் தவைதெளிந்த மாறன் பால்■
மாநிலத்தீர் நங்கள்மனம். (71)

மா நிலத்தீர்	இப்பெரிய வுலகத்திலுள்ளவர்களே !	யாவையும் தான் ஆம் நிலையும்	ஸகல சேதநாசேதந ப்ரகாரத்வ ரூபமான நிலைமையிலும்
தேவன் உறை பதியில்	(கீழ்ச் சொன்ன) திவ்யதேசமாகிய திருவாறன் விளையில்	சங்கித்து	அதிசங்கை பண்ணி
சேர பெருமையால்	சேர்ந்துபாடி அடிமை செய்யப் பெருமையாலே	அவை தெளிந்த	இரண்டு வகையான அந்த அதிசங்கைகள் தீர்ந்து கீழ்ச்சொன்ன இரண்டு குணங்களிலும் தெளிவு பெற்ற
மேவும் அடியார் வசன் ஆம்மெய் நிலையும்	(அவனது) ஆச்ரித பாரதந்திரியமாகிற நிலைமையிலும்	மாறன் பால் நங்கள் மனம்	ஆழ்வார் பக்கலிலேயே எமது நெஞ்சு பொருந்தியிருக்கின்றது.

■■■—கீழ்த்திருவாய்மொழியான ■இன்பம் பயக்கவெனும் பதிகத்தில் மநோரதித்தபடியே திருவாறன் விளையிலே சென்று புக்குத் திருவாய் மொழி கேட்பித்து அடிமை செய்யப் பெருமையாலே மிகவும் தளர்ந்து "எம்பெருமான் ஆச்ரித பரதந்திரன், ஸர்வ நிர்வாஹகன்" என்றிருந்தோம்; இவையும் நம்மைத் தோற்றிப் பொய்யாகிறதோ?" என்று ஆழ்வார் அவன் குணத்திலும் ஸ்வரூபத்திலும் அதிசங்கை பண்ண, அந்த அதிசங்கையை எம்பெருமான் போக்கியருள ஸமாஹிதரான படியைக் கூறுவதாம் ■தேவிமாராவார் என்னுந் திருவாய்மொழி. இத்திருவாய்மொழியில் *உமருகந்துகந்தவுருவம்■ இறந்ததும் நீயே என்கிற இரண்டு பாட்டுக்களில் ■ அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்■ என்றருளிச் செய்திருப்பது கொண்டு ஆழ்வாருக்கு சங்கையுண்டாயிற்றென்னுமிடம் அறிக.

■மலரடிப்போதுகளென்னெஞ்சத் தெப்பொழுதுமிருத்தி வணங்கப் பலரடியார் முன்பருளிய■ என்று கீழ்த்திருவாய்மொழியில் அநுஸந்தித்த உபகாரத்தை ஸ்மிருதி விஷயமாம்படி பிரகாசிப்பிக்க, அத்தை ■தாள்களை யெனக்கே தலைத்தலைச் சிறப்பத்தந்த பேருதவி■ என்றநுஸந்தித்து ப்ரீதரானமையால் ஒருவாறு சங்கை தெளிந்தமையும் விளங்கிற்று. (71)

நங்கருத்தை நன்றாக நாடிநிற்கும் மாலறிய■
இங்கிவற்றிலாசை யெமக்குளதென்—சங்கையினால்■

தன்னுயிரில் மற்றில்நசை தாஞெழிந்த மாறன் தான்
அந்நிலையை யாய்ந்துரைத்தா னங்கு. (72)

தம் கருத்தை	தமது ஹ்ருதயத்தை	தன் உயிரில் மற்றில்	ஆத்மாவிலும் ஆத்மீயங்களிலும்
நன்ருக நாடி நிற்கும்	உள்ளபடி ஆராய்ந்து போருகிற	நசை தான் ஒழிந்த	விருப்பம் தொலைந்த
மால் அறிய	எம்பெருமானது திருவுள்ளத்தாலே	மாறன் தான்	ஆழ்வார்
இங்கு இவற்றில் ஆசை	ப்ராக்ருத வஸ்துக்களில் விருப்பம்	அந்நிலையை	அந்தத் தன்மையை
எமக்கு உளது என் சங்கையினுல்	எமக்கு இருக்குமோ என்னு மதிசங்கையாலே	அங்கு ஆய்ந்து உரைத்தான்	அவ்வண்ணம் ஆராய்ந்து அருளிச் செய்தார்.

—கீழ்த்திருவாய்மொழியான தேவிமாராவாரில் அதிசங்கையுண்டாகித் தீர்ந்தவளவேயல்லது தமக்கு அபேக்ஷிதமான பாஹ்யஸம்ச்லேஷம் நேரவில்லையே; அதனுல் ஆழ்வார்க்கு ஒரு சங்கையுண்டாயிற்று; "ஸம்ஸாரத்திலே நமக்கு நசையில்லையென்று நாம் எண்ணியிருக்கிருேம்; ஆனுலும் உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறியும் ஸர்வேச்வரனுடைய திருவுள்ள மறிந்ததாக நமக்கு ஸம்ஸாரருசி இருக்கிறதுபோலும்; இல்லையாகில் எம்பெருமான் உபேக்ஷிக்க ப்ரஸக்தியிராதே; உபேக்ஷிக்கக் காண்கையாலே நமக்கு ஸம்ஸாரருசி இன்னமும் 'அறவில்லை யென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருக்கக் கூடும்; அவன் அங்ஙனே திருவுள்ளம்பற்றினுல் அது பொய்யாக இருக்கமாட்டாதே; நம்மையுமறியாமல் நமக்கு ஸம்ஸார ருசி உள்ளத்தினுள்ளே உறைகின்றதோ என்னவோ" என்ருெரு சங்கையுண்டாயிற்று. அதனுல் ஆத்மாத்மீயங்களில் தாம் நசையற்றபடியை ஆழ்வார் அந்யாபதேசத்தாலே அருளிச்செய்த திருவாய்மொழியாம்* நங்கள் வரிவளை யென்பது. காலம்பல சென்றும் காண்பதாணை உங்களோ டெங்களிடையில்லையே பாதமடைவதன் பாசத்தாலே. மற்றவன் பாசங்கள் முற்றவிட்டு இத்யாதி பாசுரங்கள் காண்க.

என் சங்கையினுல்—என்கிற சங்கையினுலென்றபடி. ... (72)

அங்கமரர் பேண வவர்நடுவே வாழ்திருமாற்கு
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச—எங்கும்
பரிவருளரென்னப் பயந்தீர்ந்த மாறன்
வரிகழல்தாள்சேர்ந்தவர் வாழ்வார். (73)

அங்கு	அந்த நித்யவிபூதியிலே	இங்கு	இந்நிலத்திலே
அமரர்	நித்ய ஸூரிகளும் முக்தர்களும்	ஓர் பரிவர் இலை என்று	பரிந்து காப்பிடுவார் ஒருவருமில்லையே யென்று
பேண	மங்களாசாஸனம் பண்ணிக் கொண்டிருக்க	அஞ்ச	தாம் பயப்பட,
அவர் நடுவே வாழ் திருமாற்கு	அந்த நித்ய முக்தர்களோடே வாழ்கின்ற ஸர்வேச்வரனுக்கு	எங்கும் பரிவர் உளர் என்ன	எவ்விடத்திலும்பரிவுள்ளவர்கள் இருக்கின்ருர்களென்று எம்பெருமான் கூற (அதனுல்)

பயம் தீர்த்த மாறன்	அச்சம் தீரப்பெற்ற ஆழ்வாருடைய	சேர்ந்தவர்	அடைந்தவர்கள்
வரி கழல் தாள்	வரியையுடைய வீரக்கழலோடே கூடின திருவடிகளை	வாழ்வார்	உஜ்ஜீவிக்கப் பெறுவர்கள்.

■■■—கீழ்த் திருவாய்மொழியான *நங்கள் வரிவளையில் *ஓர் கோல நீல நன்னெடுங் குன்றம் வருவதொப்பான்* என்று அநுஸந்தித்த அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்திலே திருவுள்ளம்சென்று 'இப்படிப்பட்ட ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களுக்குக் கொள்கலமான இவ்வடிவுடனே ப்ரயோஜநாந்தர பரரான தேவர்களின் காரியம்செய்கைக்காக, பிரதிகூலர் வர்த்திக்கிற இந்த நிலத்திலே தனியே வந்தவதரித்து ஸஞ்சரிக்கிறனே! பரிவர் ஒருவருமில்லையே! என்ன தீங்கு நேரிடுமோ!' என்று ஆழ்வார் வயிறெரிந்து பயப்பட, அதற்கு எம்பெருமான் ''ஆழ்வீர்! நமக்குப் பரிகைக்கு முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யரும் உண்டு; ஒரு குறையுமில்லை'' என்றருளிச்செய்ய, ஆழ்வார் அச்சம் தீர்ந்தாராயிற்று *அங்குமிங்கும்பதிகத்தில். இத்திருவாய்மொழியிலே *கலக்கமில்லா நல்தவமுனிவர் கரை கண்டோர் துளக்கமில்லா வானவரெல்லாம் தொழுவார்கள்* என்ற பாசுரத்தில் ஆழ்வாருடைய அச்சம் தீர்ந்தமை அறியத்தக்கது. (73)

வாராமலச்சமினி மால்தன் வலியினையும்*
சீரார் பரிவருடன் சேர்த்தியையும்—*பாருமெனத்
தானுகந்த மாறன்தாள் சார்நெஞ்சே சாராயேல்*
மானிடவரைச் சார்ந்து மாய். (74)

இனி அச்சம் வாராமல்	இனி மேலும் (ஆழ்வார்க்கு) அச்சம் மறுவலிடாதபடியாக	பாரும் என	காட்டிக்கொடுக்க
மால்	ஸர்வேச்வரன்	தான உகந்த	(அது கண்டு) உகந்தருளின
தன் வலியினையும்	தன்னுடைய பராக்கிரமங்களையும்	மாறன் தாள்	ஆழ்வாரது திருவடிகளை
சீர் ஆர் பரிவருடன் சேர்த்தியையும்	மேன்மை பொருந்திய அன்பரோடு தான் சேர்ந்திருக்கிற படியையும்	நெஞ்சே சார்	நெஞ்சமே அடைந்திடு.
		சாராய் ஏல்	அங்ஙனம் அடைய மாட்டாயாகில்
		மானிடவரை சார்ந்து மாய்	ஸம்ஸாரிகளோடே கூடி ஸ்வரூபமழிந்துபோ.

■■■—கீழே *அங்குமிங்கும் பதிகத்தில் ஆழ்வார்க்குண்டான அச்சத்தை எம்பெருமான் ஒருவாறு தீர்த்திருக்கச் செய்தேயும், இன்னமும் இவர்க்கு நம் பக்கல் பரிவின் கனத்தாலே அச்சம் மறுவலிடக் கூடுமென்றெண்ணி, பிரதிகூலர்க்குக் கணிசிக்கவொண்ணாதபடி அரணுடைத்தான திருச்செங்குன்றூரிலே மஹாசக்திமான்களான மூவாயிரம் வேதியர்கள் பரிந்து நோக்க, அவர்களுடன் தான் சேர்ந்து வாழ்கிறபடியையும் தனக்கு அஸாதாரணமாகவுள்ள வீர்ய பராக்ரமாதி குணஸமிருத்தியையும் காட்டிக்கொடுக்க, அதனால் அச்சங்கெட்டு அவன் வடிவழகிலே நெஞ்சை வைத்து அநுபவித்து உகந்தாரென்பதைத் தெரிவிப்பதாம் *வார்கடா வருவித் திருவாய்மொழி.

இங்ஙனே யநுபவித்த ஆழ்வாருடைய திருவடிகளைச் சேர்ந்தால்தான் உஜ்ஜீவனம். இல்லையேல் ஸம்ஸாரிகளோடே சேர்ந்து பாழாய்போக வேண்டியதுதான் என்றாராயிற்று; (74)

மாயன்வடிவழகைக் காணாத வல்விடா
யாய் ■ அதறவிஞ்சியழுதலற்றும்—■ தூயபுகழ்
உற்றசடகோபனை நாமொன்றிநிற்கும் போதுபகல் ■
அற்றபொழுதான தெல்லியாம். (75)

மாயன்	ஸர்வேச்வரனுடைய	தூய புகழ் உற்ற	பரிசுத்த கீர்த்தி வாய்ந்த
வடிவு அழகை	திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தை	சடகோபனை	ஆழ்வாரை
காணாத	ஸேவிக்கப் பெருமையாலுண்டான	நாம் ஒன்றி நிற்கும் போது	நாம் கிட்டி நின்று அநுபவிக்கும் காலம் எதுவோ அது
வல் விடாயாயது	மிக்க வருத்தமானது	பகல்	—பகலாகும்;
அற விஞ்சி	மிகவும் அதிகரிக்க (அதனால்)	அற்ற பொழுதானது	அவ்வநுபவம் விச்சேதித்த காலமானது
அழுது அலற்றும்-அலற்றியழுதவரான		எல்லி ஆம்	காளராத்ரியாகும்.

■■■—கீழ்ப்ரஸ்துதமான அநுபவம் மாநஸாநுபவமாத்திரமாய் பாஹ்ய ஸம்ச்லேஷ யோக்ய மல்லாமையாலே மிகவும் நோவுபட்டு காட்டுத்தீகதுவினாற் போலே சாலவும் பரிதபித்து, அவனது வடிவழகைப் பலபடியாகப் வருணித்துக் கொண்டு பெருங்கூப்பீடாகக் கூப்பிடுகிற திருவாய்மொழி ■ மாயக்கூத்தாவாமனா வென்பது. (75)

எல்லி பகல்நடந்த விந்தவிடாய் தீருகைக்கு ■
மெல்லவந்து தான்கலக்க வேணுமென—■ நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்கமாறன் கண்டு ■
இந்நிலையைச் சொன்னனிருந்து. (76)

எல்லி பகல் நடந்த	இரவும் பகலும் ஓயாதே வளர்ந்த	கடித்தானத்தே	திருக்கடித்தானத்திலே
இந்த விடாய் தீருகைக்கு	கீழ்த்திருவாய் மொழியிலுண்டான வருத்தம் தீர்வதற்காக	மால் இருக்க	அந்த ஸர்வேச்வரன் எழுந்தருளி யிருக்க
மெல்ல வந்து தான் கலக்க வேணும் என	பையவந்து (எம்பெருமான்) தான் ஸம்ச்லேஷிக்க வேணுமென்றெண்ணி	மாறன் கண்டு	அவ்விருப்பை ஆழ்வார் ஸேவித்து
		இருந்து	நிலைபெற்றிருந்து
நல்லவர்கள் மன்னு	நற்புகழ் வேதியர்கள் நிலை பெற்று வாழ்கிற	இந்நிலையை சொன்னன்	இந்தச் செய்தியை அருளிச செய்தார்.

■■■—கீழே அநவரதமாக நிகழ்ந்த தம்முடைய பெருவிடாய் கெடும்படி தம்மோடே வந்து ஸம்ச்லேஷிக்க விரும்பி அடுத்தணித்தாகத் திருக்கடித்தான மென்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே வந்திருந்து தம்பக்கலிலே மிகவும் ஆவல் கொண்டிருக்கிறபடியை அவன் காட்டிக் கொடுக்க, அத்தை அநுஸந்தித்து ஆழ்வார் தாம் ஹ்ருஷ்டராகிற படியைத் தெரிவிப்பதாம் ■ எல்லியுங்காலையும் பதிகம். (76)

இருந்தவன் தான் வந்து இங்கிவரெண்ணமெல்லாம் ■
திருந்த விவர்தந்திறத்தே செய்து—■ பொருந்தக்
கலந்தினியனாயிருக்கக் கண்டசடகோபர் ■
கலந்தநெறி கட்டுரைத்தார் கண்டு. (77)

இருந்தவன் தான்	திருக்கடித்தானத்திலிருந்த ஸர்வேச்வரனே
இங்கு வந்து	இவ்விடத்தேற வந்து
இவர் எண்ணம் எல்லாம் திருந்த	இவ்வாழ்வாருடைய மனோரதம் முழுவதும் முற்றுப்பெற
இவர் தம் திறத்தேசெய்து	இவரிடத்தே அருள் செய்து
பொருந்த கலந்து	ஒரு நீராய்க் கலந்து
இனியன் ஆய் இருக்க கண்ட	இனிமையோடே யிருக்கும் படியை ஸேவித்த
சடகோபர்	ஆழ்வார்
கலந்த நெறி	அவனை தம்மோடு ஸம்ச்லேஷித்த படியை
கண்டு	திருவுள்ளத்தாலே கண்டு
கட்டுரைத்தார்	அருளிச் செய்தார்.

■, ■■ திருக்கடித்தானத்திலிருப்பைக் கீழ்த்திருவாய் மொழியான ■எல்லியுங் காலையில் காட்டிக் கொடுத்த எம்பெருமான் ஆழ்வாரிருப்பிடத்தளவும் மெள்ள வந்து தன்னை முற்றூட்டாக அநுபவிக்கும்படியாக்கி வைத்து ஒரு நீராகக் கலந்து அத்தாலே தான் இனிமை பெற்றவனாயிருக்கிறபடியைக் கண்ட ஆழ்வார் அவன் தம்முடனே வந்து கலந்தபடியைப் பேசினாராயிற்று ■இருத்தும் வியந்து பதிகத்தில்.

கண்ணிறைய வந்து கலந்த மாலிக்கலவி■
திண்ணிலையாவேணுமெனச் சிந்தித்து—■தண்ணிதெனும்
ஆருயிரினேற்றமது காட்ட ஆய்ந்துரைத்தான்■
காரிமாறன்தன் கருத்து. (78)

கண் நிறைய வந்து கலந்த மால்	கண்ணார வந்து கலந்த எம்பெருமான்
இக்கலவி திண்நிலை ஆவேணும் என சிந்தித்து	இந்தக் கலவியானது சாச்வதமா யிருக்கவேணுமென்றெண்ணி
தண்ணிது எனும்	கீழே சிறிய தென்பதாக ஆழ்வார்■பேசின
ஆர் உயிரின்	அருமையான ஆத்மாவினுடைய
ஏற்றம் அது காட்ட	ஏற்றத்தைக் காட்டிக் கொடுக்க
காரி மாறன்	ஆழ்வார்
ஆய்ந்து	ஆராய்ந்து
தன் கருத்து உரைத்தான்	தமது திருவுள்ளத்தை அருளிச் செய்தார்.

■■■—இருத்தும் வியந்தென்கிற கீழ்த்திருவாய்மொழியிலே பேருவகையோடே யநுபவிக்கிற வளவில் ஆழ்வார் ■சிறியேனுடைச் சிந்தையுள் ■என்று தம்முடைய சிறுமையை அநுஸந்தித்தார்; அதனால் இவர் நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலக் கூடுமென்றெண்ணின எம்பெருமான் இந்த ஸம்ச்லேஷம் இடையருது செல்ல வேணுமென்று கருதி. 'ஆழ்வீர்! மிகவுயர்ந்ததான ஆத்மவஸ்துவை நீர் தண்ணிதாக நினைப்பது தகுதியன்று; இதன் ஏற்றத்தைக் காணீர்' என்று ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டிக் கொடுக்க இனி நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலமாட்டாமையாகிற தமது திருவுள்ளத்தை வெளியிட்டாராழ்வார் ■கண்கள் சிவந்து பதிகத்தில். "தெருளும் மருளும் மாய்த்தோமே" என்ற பாசுரத்தில் நோக்காக "காரிமாறன் தன் கருத்து ஆய்ந்துரைத்தான்" என்றது. (78)

கருமால் திறத்திலொரு கன்னிகையாம் மாறன்■
ஒருமாகலவியுரைப்பால்—■திரமாக
அந்நியருக்காகா தவன்றனக்கேயாகு முயிர்■
அந்நிலையையோரு நெடிதா. (79)

திருமால் திறத்தில்	ஸ்ரீ கிருஷ்ண பகவான் விஷயத்தில்	திரம் ஆக	ஸ்திரமாக
ஒரு கன்னிகை ஆம் மாறன்	ஒரு கன்னிகையின் தன்மையை யடைந்தஆழ்வார்	உயிர் அன்னியருக்கு ஆகாது	ஆத்மா அந்யசேஷப் படாமல்
ஒரு மா கலவி உரைப்பால்	ஒரு விலக்ஷண ஸம்ச்லேஷ லக்ஷணங்களை (த்தோழி பேச்சாலே) அருளிச் செய்ததனால்	அவன் தனக்கே ஆகும் அந்நிலையை	அப்பெருமானுக்கே உரித்தாம் நிலைமையை
		நெடிது ஆ ஒரும்	தீர்க்கமாக ஆராய்மின்.

■ ■ ■—ஆழ்வார் தம்முடைய அநந்யார்ஹத்வத்தைத் தோழி பாசுரத்தாலே வெகு சமத்காரமாக அருளிச் செய்த பதிகம் *கருமாணிக்கமலை யென்பது. பராங்குச நாயகி விவாஹ யோக்யமான பருவம் வாய்த்தவளாக இருந்ததனால் அவளுக்கு விவாஹம் நடத்தவேணுமென்று மாதா பிதாக்கள் எண்ணி ஸ்வயம்வர ஸந்நாஹம் பண்ணின வளவிலே *அன்றிப்பின் மற்றொருவர்க்கு என்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால்* *மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்* என்னும்படியான தன்மை வாய்ந்திருக்கிற தலைவி அந்த விவாஹ ஸன்னாஹத்தைத் தவிர்க்க வேண்டி எற்கனவே தனக்கு எம்பெருமானோடே விவாஹமாய் விட்டதென்பதைத் தன் வாக்காலே சொல்லிக்கொள்ள இயலாதாகையாலே தோழி ஊஹமாகச் சொல்லுகிற பாசுரத்தாலே [ஏற்கெனவே கலவி நடந்துவிட்டாப் போலிருக்கிறதே! என்று தெரிவிக்கும் முகத்தாலே] அநந்யார்ஹத்வம் வெளியிட்டபடி.

இப்பாட்டினீற்றடியில் "இந்நிலையை" என்கிற பாடம் தவறு; 'அந்நிலையை' என்பதே நன்கு பொருந்தும். ஆ என்பது ஈற்றுச் சீராதலால். (79)

நெடுமாலழகுதனில் நீள் குணத்தில் * ஈடு
படுமாநிலையுடைய பத்தர்க்கு—*அடிமைதனில்
எல்லைநிலம்தானாக வெண்ணினன்மாறன் * அது
கொல்லை நிலமான நிலை கொண்டு. (80)

நெடுமால் அழகுதனில்	ஸர்வேச்வரனுடைய வடிவழகிலும்	எல்லை நிலம் தான் ஆக மாறன் எண்ணினன்	சரமாவதி தாஸ்யம் தமக்கேயுள்ளதென்று ஆழ்வார் அத்யவஸாயங் கொண்டார்;(எதனாலேயென்னில்)
நீள் குணத்தில் ஈடுபடும்	குண விசேஷத்திலும் ஈடு படும்படியான		
மா நிலை உடைய	சிறந்த தன்மையுடையரான	அது கொல்லை நிலம் ஆன நிலைகொண்டு	அந்த பாகவத சேஷத்வமே இதற்கு மேலில்லை யென்னலாம் படியான உத்தமபுருஷார்த்தமென்று கொண்டு
பத்தர்க்கு அடிமைதனில்	பாகவதர்களுக்கு அடிமைப் படும் திறத்தில்		

■ ■ ■—கீழ்த்திருவாய் மொழியாகிற *கருமாணிக்க மலையில் ஆத்மாவுக்குச் சொன்ன பகவதநந்யார்ஹத்வமானது நிலைநிற்பது பாகவத சேஷத்வபர்யந்தமானால் என்னுமிடத்தை யநுஸந்தித்து 'அவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளில் தோற்று அடிமைபுக்கிருக்கும் பாகவதர்களுக்கு சேஷமாயிருக்குமிருப்பே எனக்குப் புருஷார்த்தம்" என்றறுதியிட்டு அந்தப் பரமார்த்தத்தை *நெடுமாற்கடிமையெனும் பதிகத்திலே ஆழ்வாரருளிச் செய்தாரென்கை.

கொல்லை நிலம்—இதற்கு மேலாக வொரு நிலமில்லையென்னலாம்படி சரமாவதியான நிலமென்க. இரண்டாமடியில் "பத்தர்" என்றே பாடம் வழங்கி வருகின்றது. 'பத்தர்க்கு' என்று ஸ்ரீகோசங்களிற் பெரும்பாலுங் காண்கிற பாடம் மிக அழகியது. அதுவே கொள்ளத்தக்கது. (80)

கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்ருர் கன்மத்தால்*
அண்டினவரென்றே யவரைவிட்டு—■தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச் சேருமென்ருன் ■ஆர்க்குமிதம்
பார்க்கும் புகழ்மாறன் பண்டு. (81)

ஆர்க்கும் இதம் பார்க்கும்புகழ் மாறன்	அனைவர்க்கும் ஹிதமே சிந்திக்கிற யசஸ்வியான நம்மாழ்வார்	கன்மத்தால் அண்டினவர் என்றே	கர்மோபாதியாலே நெருங்குமவர்களத்தனை யென்று கொண்டு
பண்டு	முன்பு	அவரை விட்டு	அந்த ஆபாஸபந்துக்களை விட்டு
கொண்ட பெண்டிர் தாம் முதலா கூறும் உற்ருர்	மனைவி முதலாகச் சொல்லப்படுகிற பந்துவர்க்கமெல்லாம்	தொண்டருடன் சேர்க்கும் திருமாலை	நம்மை பாகவத கோஷ்டியிலேசேர்க்க வல்லவனை ஸர்வேச்வரனை
		சேரும் என்ருன்	சேருங்கோளென்று உபதேசித்தார்.

■■■—தன்னைப் பற்றினரை பாகவதர்கள் திருவடிகளிலே சேர்த்து ரக்ஷித்தருளவல்ல ஸர்வேச்வரனே ஸகலவிதபந்துவுமாவான்; அல்லாதாரடங்கலும் ஔபாதிகபந்துக்கள்; ஆன பின்பு ஔபாதிக பந்துக்களை விட்டு நிருபாதிக ஸகலவித பந்துவுமான ஸர்வேச்வரனுக்கு அடிமை செய்து உஜ்ஜீவியுங்கோளென்று அனைவர்க்கும் ஹிதைஷியான ஆழ்வார் உபதேசித் தருளின பதிகம் ■கொண்டபெண்டிரென்பதாம், ... (81)

பண்டையுறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு ■ எனக்கெல்லாவுறவின் காரியமும்—■தண்டறநீ
செய்தருளென்றே யிரந்த சீர்மாறன் தாளிணையே■
உய்துணையென் றுள்ளமேயோர். (82)

பண்டை உறவு ஆன பரனை	அநாதிஸித்தமான ஸம்பந்தத்தை யுடையனை பரமபுருஷனை	தண்டு அற நீ செய்தருள் என்று	தட்டில்லாமல் நீ செய்தருள வேணும்' என்று
புளிங்குடிக்கே கண்டு	திருப்புளிங்குடியிலே ஸேவித்து	இரந்த	பிரார்த்தித்த
		சீர் மாறன்	ஆழ்வாருடைய
		தாள் இணையே	உபய பாதங்களை
எனக்கு	'அடியேனுக்கு	உய் துணை என்று	நமக்கு உஜ்ஜீவநோபாயமென்று
எல்லா உறவின் காரியமும்	ஸகலவிதமான உறவினுடையவும் காரியங்களை	உள்ளமே ஓர்	நெஞ்சே! நினை.

■■■—நிருபாதிக பந்துவான ஸர்வேச்வரனைத் திருப்புளிங்குடியிலே ஸேவித்து எனக்கு ஸகலவித பந்துக்ருத்யமும் நீ செய்தருள வேணும் என்று ஆழ்வார் பிரார்த்தித்த படியைக் கூறுவதாம் ■ பண்டை நாளாலே பதிகம். ■சோதிவாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய் ■ நின்பாதபங்கயமே

தலைக்கணியாய் ■ என்றிப்படி பாசுரந்தோறும் ஒவ்வொரு வகையான பிரார்த்தனை யிருப்பது காண்க. தண்டு அற —தடையின்றிக்கே; அல்லது காலதாமதமின்றி. (82)

ஓரா நீர் வேண்டினவை யுள்ளதெல்லாம் செய்கின்றேன் ■
நாராயணனன்றோ நானென்று—■பேருறவைக்
காட்டவவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறனருள் ■
மாட்டிவிடும் நம்மனத்து மை. (83)

நீர் ஓரா வேண்டினவை உள்ளது எல்லாம்	'(ஆழ்வீர் !) நீர் ஆராய்ந்து அபேக்ஷித்தவை யெல்லாவற்றையும்	அவன் சீலத்தில்	அப்பெருமானது சீல குணத்திலே
செய்கின்றேன்	நான் தலைக்கட்டித் தருகின்றேன்	கால் தாழ்ந்த	ஆழங்காற்பட்ட
நான் நாராயணன் அன்றோ என்று	நான் ஸர்வ சக்தனான நாராயணனன்றோ' என்று (எம்பெருமான்)	மாறன் அருள்	ஆழ்வாருடைய திருவருளானது
		நம் மனத்து	நமது நெஞ்சிலுள்ள
பேர் உறவை காட்ட	தனது சிறந்த உறவையும் நினைப்பூட்டின வளவிலே	மை	அஞ்ஞான விருளை
		மாட்டிவிடும்	மாளச் செய்து விடும்.

■ ■ ■—கீழ்த்திருவாய்மொழியாகிய *பண்டை நாளில் எனக்கெல்லாவுறவின் காரியமும் செய்தருளவேணுமென்று இரந்த ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! நீர் பிரார்த்திக்க வேணுமோ? நானே பிரார்த்தித்துச் செய்ய வேண்டும்படியன்றோ எனக்குண்டான நாராயணத்வப்ரயுக்தமான உதிரத்தெறிப்பு இருப்பது. ஆன பின்பு நானே உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கின்றேன்' என்று எம்பெருமானருளிச் செய்ய, தன் பெருமை பாராதே என் சிறுமை பாராதே இப்படியருளிச் செய்வதே! இதொரு சீலகுணமிருக்கும்படியென்! என்று அவனுடைய சீல குணத்திலே யீடுபட்டுப் பேசினது■ ஓராயிரமாய் பதிகம்.

ஓரா—செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். ... (83)

மையார்கண் மாமார்பில் மன்னும் திருமாலை■
கையாழிசங்குடனே காணவெண்ணி—■ மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்■
ஓதவுய்யுமே யின்னுயிர். (84)

மை ஆர் கண் மா	மையணிந்த கண்களை யுடையளான பெரிய பிராட்டியானவள்	மெய் ஆன காதலுடன் கூப்பிட்டு	உண்மையான அபிநிவேசத்தோடே கூவி யழைத்து
மார்பில் மன்னும் திருமாலை	திருமார்பிலே நித்யவாஸம் பண்ணப் பெற்ற எம்பெருமானை	கண்டு உகந்த மாறன் பேர் ஓத	அவ்வாறே ஸேவித்து உள்ளம் பூரித்த ஆழ்வாருடைய திருநாமங்களை அநுஸந்திக்கவே
கை ஆழி சங்குடனே காண எண்ணி	திருக்கைநிறைந்த திருவாழி திருச் சங்குகளுடனே ஸேவிக்க விரும்பி	இன் உயிர் உய்யும்	விலக்ஷணமான ஆத்ம வஸ்து உஜ்ஜீவிக்கும்.

■ ■ ■—திருமார்பிலே பிராட்டி திகழ நின்ற திருமாலைத் திருவாழி திருச் சங்குகளுடனே ஸேவிக்க ஆசைப்பட்டு ஆழ்வார் கூப்பிட, தூணிலே தோன்றிச்

சிறுக்கனுக்கு உதவினுப்போலே எம்பெருமான் மாநஸமாகத் தோன்றித் தன் குணங்களை யநுபவிப்பிக்க, அத்தை யநுபவித்து உகந்தபடியைக் கூறுவதாம் *மையார் கருங்கண்ணிப் பதிகம்.

மா– ஸ்ரீ மஹா லக்ஷ்மி; வடசொல். (84)

இன்னுயிர்மால் தோன்றினதிங்கென்னெஞ்சிலென்று* கண்ணால்
அன்றவனைக் காணவெண்ணியாண்பெண்ணாய்—*பின்னையவன்
றன்னை நினைவிப்பவற்றால் தான்தளர்ந்த மாறனருள்*
உன்னுமவர்க்குள்ள முருகும். (85)

இன் உயிர் மால்	எனக்குத் தாரகனான எம்பெருமான்	ஆண் பெண் ஆய்	ஆண் தன்மை குலைந்து பெண் தன்மை யடைந்து
இங்கு தோன்றினது	இப்போது ஸேவை ஸாதித்ததானது	பின்னை அவன் தன்னை நினைவிப்பவற்றால்	மேலும் அப்பெருமானை நினைப்பூட்டுகின்ற மேகம் முதலியவற்றால்
என் நெஞ்சில் என்று	எனது நெஞ்சிலே யன்றி ப்ரத்யக்ஷமாக வில்லையே என்று (வருந்தி)	தான் தளர்ந்த	தளர்ச்சியடைந்த
அன்று அவனை கண்ணால் காண எண்ணி	அப்போது அப்பெருமானைக் கண்ணாரக் கண்டநுபவிக்க விரும்பி	மாறன் அருள்	ஆழ்வாருடைய க்ருபையை
		உன்னுமவர்க்கு	அநுஸந்திப்பவர்களுக்கு
		உள்ளம் உருகும்	நெஞ்சு குழையும்.

***—கீழ்த்திருவாய் மொழியாகிய *மையார் கருங்கண்ணியில் உண்டான அநுபவம் மாநஸாநுபவமாகையாலே அவனை பாஹ்ய கரணங்களாலே அநுபவிக்க விரும்பி அப்போதே அந்த விருப்பம் நிறைவேறப் பெறுமையாலே ஒரு பிராட்டி தசையை யெய்தி ஸ்மாரக பதார்த்தங்களாலே [பக்ஷிஸமூஹங்களாலும் மேக ஸமூஹங்களாலும்] ஆழ்வார் தளர்ந்த படியைக் கூறுவதாம் * இன்னுயிர்ச் சேவலும் பதிகம் (85)

உருகுமாலென்னெஞ்ச முன்செயல்களெண்ணி*
பெருகுமால் வேட்கையெனப்பேசி—*மருவுகின்ற
இன்னாப்புடனவன்சீ ரேய்ந்துரைத்தமாறன் சொல்*
என்னச்சொல்லாதிருப்ப தெங்கு. (86)

உன் செயல்கள் எண்ணி	'(எம்பெருமானே!) உனது சரிதைகளை நினைத்து	அவன் சீர் ஏய்ந்து உரைத்த	அப்பெருமானது ப்ரணயித்வ குணத்தைப் பொருந்தமாக எடுத்துரைத்த
என் நெஞ்சம் உருகும்	எனது உள்ளம் உருகாநின்றது;	மாறன் சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை
வேட்கை பெருகும் என பேசி	(அதற்கு மேலே) ஆசையும் அதிகரித்து வாரா நின்றது' என்று கூறி	என் நா	எனது நாவானது
மருவுகின்ற இன்னாப்புடன்	(கீழே ஸ்மாரக பதார்த்தங்களாலே நோவு பட்டு) அநுவர்த்திக்கின்ற அந்த அவஸாதத்துடனே	சொல்லாது இருப்பது எங்கு	அநுஸந்தியாம லிருப்பது எவ்விடத்தில் ?

***— கீழ்த்திருவாய்மொழியாகிய *இன்னுயிர்ச் சேவலில், ஸ்மாரக பதார்த் தங்களாலே நோவுபட்டுச் செல்லா நிற்கச் செய்தே *இருத்தும் வியந்தென்கிற

திருவாய்மொழியிலே தலை தடுமாருகக் கலந்த கலவி நினைவுக்கு வந்து தரிக்க, அதனை யருளிச் செய்த திருவாய்மொழியாம் *உருகுமால்நெஞ்சப்பதிகம்.

திருவாய்மொழியில் "உருகுமால் நெஞ்சம்" என்று பாசுரமிருந்தாலும், இங்கு, வெண்பாவாகையாலே வெண்டளைக்குச்சேர "உருகுமால் என்னெஞ்சம்" என்றே சுத்தபாடமாகும். (86)

எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று*
அங்காது பற்ருசா வாங்கவன்பால்—*எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடும் மாறன்ருள்*
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும். (87)

எம் காதலுக்கு அடி	எமது அன்புக்குக் காரணம்	எங்கும் உள்ள புள் இனத்தை	எவ்விடத்துமுள்ள பறவைக் கூட்டத்தை
மால் ஏய்ந்த வடிவு அழகு என்று	எம்பெருமானிடத்துள்ள விக்ரஹ ஸௌந்தரியமே என்று அறுதியிட்டு	தூது ஆகபோக விடும்	தூதனுப்பின
அங்கு ஆது பற்ருசு ஆ	அந்த வடிவழகே ஆலம்பனமாக	மாறன் தாள்	ஆழ்வாருடைய திருவடிகளானவை
ஆங்கு அவன் பால்	அப்பெருமானை நோக்கி அவனுறையுமொரு திருப்பதியிலே	உள்ளினர்க்கு தீங்கை அறுக்கும்	தம்மை அநுஸந்தித்தவர்களுடைய தீமைகளைப் போக்கிவிடும்.

* * *—கண்ணுற்கண்ட பக்ஷிகளை யெல்லாம் தூது விடுகிற பதிகமாம் *எங்கானலகங்கழிவாயென்பது. ஆசார்ய ஹ்ருதயத்தில் "தம்பிழையும் சிறந்த செல்வமும்" இத்யாதி சூர்ணையில் "........ ஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹ விபவ பரத்வத்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்" என்று ஸௌந்தர்யமே பற்ருசாக இத்திருவாய் மொழியில் தூது விட்டதாக அருளிச் செய்ததற்கேற்ப முன்னடிகள் அருளிச் செய்யப்பட்டன. (87)

அறுக்குமிடரென்றவன்பா லாங்குவிட்ட தூதர்*
மறித்துவரப் பற்ருமனத்தால்* அறப்பதறி
செய்யதிருநாவாயில் செல்லநினைந்தான் மாறன்*
மையலினுற் செய்வறியாமல். (88)

இடர் அறுக்கும் என்று	நமது துயரங்களைப் போக்கியருள்வனென்று கொண்டு	மையலினுல்	அறிவுகலக்கத்திஞல்
அவன் பால் ஆங்கு விட்ட தூதர்	அப்பெருமானைக் குறித்து அனுப்பப்பட்ட தூதர்	செய்வு அறியாமல்	செய்ய வேண்டியது இன்னதென்றறியாமல்
மறித்து வர பற்ரு மனத்தால்	மீண்டு வருமளவும் ஆறியிருக்கமாட்டாத திருவுள்ளத்தாலே	மாறன்	ஆழ்வார்
அற பதறி	மிகவும் விரைந்து	செய்ய திரு நாவாயில்	விலக்ஷணமான திருநாவாய்ப்பதியை நோக்கி
		செல்ல நினைந்தான்	எழுந்தருள முயன்ருர்.

* * *—கீழ்த்திருவாய்மொழியாகிய *எங்கானலில் விடப்பட்ட தூதர் அத்தலைப்பட்டு எம்பெருமானுக்கு ஸ்வதசையை யறிவித்து மீண்டு வருவதற்கு

முன்னே ஆழ்வார் மிகவும் பதறித் திருநாவாயிலே செல்ல நினைத்தபடியைக் கூறுவதாம் *அறுக்கும் வினையாயின பதிகம். ஈற்றடியில் 'செய்வதறியாமல்' என்கிற பாடம் மறுக்கத் தக்கது; தளை தட்டுதலால். செய்வு என்றாலும் செய்வதென்றே பொருள்படும்; "வியாக்கியைகள் செய்வால்" என்ற உபதேசரத்தினமாலைப் பிரயோகமும் காண்க. (88)

மல்லடிமை செய்யும் நாள் மால்தன்னைக் கேட்க* அவன்
சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால்—*செல்கின்ற
ஆற்றாமைபேசி அலமந்த மாறனருள்*
மாற்றாகப் போகுமென்றன் மால். (89)

மல் அடிமை செய்யும் நாள்	பரிபூரணமான கைங்கர்யம் செய்யப் பெறுங் காலம் எப்போதோவென்று	செல்கின்ற ஆற்றாமை பேசி அலமந்த மாறன்	தமக்கு நிகழ்கின்ற ஆற்றாமையை எடுத்துக் கூறி அலமாப்பையடைந்த ஆழ்வாருடைய
மால் தன்னை கேட்க	எம்பெருமானை நோக்கிக் கேட்க	அருள் மாற்று ஆக	கருணையே மருந்தாக
அவன் சொல்லும் அளவும் பற்றா	அப்பெருமான் அறுதியிட்டுச் சொல்லுமளவும் ஆறியிருக்க மாட்டாத	என்றன் மால் போகும்	எனது அஜ்ஞானம் தொலையும்.
தொல் நலத்தால்	இயற்கையான பக்தியினால்		

* * *—கீழ்த்திருவாய் மொழியான *அறுக்கும் வினையில்* அடியேனணுகப் பெறுநாள் எவை கொலோ *ஓர் நாளறியேனே * நாளே லறியேன் * கண்ணுரக் களிக்கின்ற திங்கென்று கொல்கண்டே* என்றிப்படி பலகால் பேசின ஆழ்வார் நித்ய கைங்கர்யம் செய்யப் பெறும் நாள் என்றைக்கென்று எம்பெருமானைக் கேட்க, அவன் அறுதியிட்டுச் சொல்லுமளவும் பொறுத்திருக்கமாட்டாமையினாலே தமக்கு நிகழ்கின்ற ஆற்றாமையைப் பேசின பதிகம்* மல்லிகை கமழ் என்பதாம்.(89)

மாலுமது வாஞ்சை முற்றும் மன்னுமுடம்பின் முடிவில்
சாலநண்ணிச் செய்வனெனத் தானுகந்து—*மேலவனைச்
சீரார் கணபுரத்தே சேருமெனும் சீர்மாறன்*
தாராரோ நந்தமக்குத் தாள். (90)

மால்	எம்பெருமான்	தான் உகந்து	தாம் மனமகிழ்ந்து
உமது வாஞ்சை முற்றும்	'(ஆழ்வீர்) உம்முடைய அபேக்ஷிதங்களெல்லாவற்றையும்	மேல் அவனை	'அப்பரம புருஷனை
மன்னும் உடம்பின் முடிவில்	இந்த சரீரத்தின் முடிவிலே	சீர் ஆர் கணபுரத்தே சேரும் எனும்	திருக்கண்ணபுரத்திற் சென்று ஆச்ரயியுங்கோள்' என்றருளிச் செய்த
சால நண்ணிச் செய்வன் என	மிகவும் பொருத்தமாகத் தலைக்கட்டித் தருகிறேன்' என்றருளிச் செய்ய	சீர்மாறன்	நம்மாழ்வார்
		நந்தமக்கு	நமக்கு
		தான் தாராரோ	தமது திருவடிகளை ப்ரஸாதித்தருளமாட்டாரோ?

* * *—'நாளே லறியேன்' என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! இந்த தேஹாவஸானத்தில் உம்மைப் பரமபதத்திலே கொண்டு போய் அடிமை கொள்ளக் கடவோம்' என்று நாளிட்டுக்கொடுக்க; அத்தாலே திருவுள்ள முவந்து அப்பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே சென்று சேருங்கோ

ளென்று பரோபதேசம் பண்ணின பதிகம் *மாலை நண்ணி யென்பதாம். *மரண மானால் வைகுந்தங் கொடுக்கும்பிரான்* என்றதில் நோக்கு. (90)

தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்*
காளமேகத்தைக் கதியாக்கி—*மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகிலேகவெண்ணும் மாறனென*
கேதமுள்ளதெல்லாம் கெடும். (91)

தாள் அடைந் தோர் தங்கட்கு	தன் திருவடிகளைப் பற்றினவர்களுக்கு	மீளுதல் ஆம் ஏதம் இலா விண் உலகில்	மீட்சியாகிற குற்றமில்லாத பரமபதத்தில்
தானே வழித் துணை ஆம் காளமேகத்தை	தானே மார்க்கபந்துவாகின்ற காளமேகப் பெருமானை	ஏக எண்ணும்	எழுந்தருள எண்ணின
		மாறன் என	ஆழ்வார் என்று சொன்ன மாத்திரத்திலே
கதி ஆக்கி	வழிக்கு ரக்ஷகனாகக் கொண்டு	கேதம் உள்ளது எல்லாம் கெடும்	துக்கமென்று பேர்பெற்றவையெல்லாம் ஒழிந்து போம்.

* * *—"மார்க்கபந்து சைத்யம் மோஹநத்தே மடுவிடும்" என்பது ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி. கீழே *மரணமானால் வைகுந்தங் கொடுக்கும்பிரான்* என்றபடியே 'தேஹாவஸாநத்திலே பேறு' என்று எம்பெருமான் நாளிட்டுக்கொடுக்கையாலே போக வொருப்பட்டார் ஆழ்வார்; அவர்க்குத் திருமோகூர்க் காளமேகப் பெருமாள் வழித்துணையாக அமைந்தார்; இவ்விஷயம் *தாளதாமரைத் திருவாய்மொழியிலே அருளிச் செய்யப்பட்டது. (91)

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாற்போலத்*
தடமுடையனந்தபுரந்தன்னில்—*படவரவில்
கண்டுயில் மாற்காட்செய்யக் காதலித்தான் மாறன்* உயர்
விண்டனிலுள்ளோர் வியப்பவே. (92)

மாறன்	நம்மாழ்வார்	தடம் உடை அனந்தபுரம் தன்னில்	தடாகங்களையுடைய திருவனந்தபுரத்திலே
உயர் விண் தனில் உள்ளோர் வியப்ப	உயர்ந்த பரமபதத்திலுள்ள நித்யஸூரிகள் ஆச்சரியப்படும்படி	படம் அரவில் கண் துயில் மாற்கு	படமுடைய சேஷன்மீது பள்ளி கொண்டருளும் திருமாலுக்கு
கெடும் இடர் வைகுந்தத்தை கிட்டினாற்போல	துக்கமற்றதான ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து அடிமை செய்யப் பெற்றாற்போலே	ஆள் செய்ய காதலித்தான்	அடிமை செய்ய விரும்பினார்.

* * *பரமபதத்தில் போனால் அங்குச் செய்யக்கூடிய கைங்கரியங்களைத் திருவனந்தபுரத்திலே சேஷசாயியான ஸ்ரீபத்மநாபப் பெருமாள் திருவடிகளிலே தாமும் தமருமாகச் சென்று செய்ய விரும்பினபடியைக்* கெடுமிடராய வெல்லாமென்கிற திருவாய் மொழியிலருளிச் செய்தாரென்க. (92)

வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை*
தான்மருவாத்தன்மையினால்* தன்னையின்னம்—பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால்தெளிவிக்கத்தெளிந்த*
தக்கபுகழ்மாறனெங்கள் சார்வு. (93)

வேய் மரு தோள் இந்திரை கோன்	மூங்கில் போன்ற தோள்களையுடையளான பிராட்டிக்கு வல்லபனான எம்பெருமான்	தன்னை இன்னம் பூமியிலே வைக்கும் என சங்கித்து	தம்மை இன்னமும் இந்த ஸம்ஸாரத்திலேயே இட்டு வைக்குமோ வென்று அதிசங்கித்து
மேவுகின்ற தேசத்தை	எழுந்தருளியிருக்குமிடத்தை	மால் தெளிவிக்க தெளிந்த	எம்பெருமான் தேற்றத் தேறின
தான் மருவா தன்மையினால்	தாம் புகப்பெருமையினாலே	தக்க புகழ் மாறன்	தகுதியான புகழையுடைய ஆழ்வார்
		எங்கள் சார்வு	எமக்குப் புகல்.

■■■—தாம் மநோரதித்தபடியே அப்போதே அத்தேசத்திலே போய் அடிமை செய்யப் பெருமையாலே கலங்கி 'பழையபடியே நமக்கு ஸம்ஸாரத்தி லிருப்பே சேஷித்து விடுகிறதோ என்று, ப்ரக்ருதி ஸம்பந்தத்தின் கொடுமையாலும் ஈச்வரஸ்வாதந்திரியத்தைப் பற்றவும் தமக்குண்டான அதிசங்கையை *வேய்மரு தோளிணைப் பதிகத்திலருளிச் செய்தாரென்க. மேலே சொன்ன அதிசங்கை முகபேதத்தாலே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அதாவது—ஒரு படுக்கையிலே கூடவிருக்கச் செய்தே பசு மேய்க்கப் போகிற விடியற்காலம் வந்து, அக்காலத்துக்கேற்ற குயில் மயில் முதலானவற்றினுடைய பாடலாடல் முதலான அடையாளங்களையும் காண்கையாலே அவற்றையே கொண்டு 'கண்ணபிரான் பசு மேய்க்கப் போனான்' என்று அதிசங்கை பண்ணி நோவுபடுகிற இடைப் பெண்கள் பேச்சாலே அருளிச்செய்ததான வேய்மரு தோளிணைப் பதிகத்திற்கு ஆழ்வார் தமக்குண்டான அதிசங்கையே உள்ளுறை பொருளாம்.

இதில் பத்தாவது பாட்டில் "செங்கனிவாயெங்களாயர் தேவே" என்றதின் சுவடறிந்து பூருவர்கள் நிர்வஹித்தபடியைத் தழுவி "மால் தெளிவிக்கத்தெளிந்த" என்றருளிச் செய்யப்பட்டது. (93)

சார்வாகவேயடியில் தானுரைத்த பத்திதான்
சீரார் பலத்துடனே சேர்ந்ததனை — சோராமல்
கண்டுரைத்த மாறன் கழலிணையே நாடோறும்
கண்டுகக்குமென்னுடையகண். (94)

அடியில்	ஆரம்பத்தில் விடுமின் முற்றத்திலே	சோராமல் உரைத்த	ஒன்றும் குறையாமல் அருளிச் செய்த
சார்வு ஆகவே	எல்லார்க்கும் உபாதேயமாகவே	மாறன்	ஆழ்வாருடைய
தான் உரைத்த பத்தி தான்	தாமருளிச் செய்த பக்தியானது	கழல் இணையே	உபய பாதங்களையே
சீர் ஆர் பலத்துடனே சேர்ந்ததனை கண்டு	சிறந்த பலனோடே சேர்ந்தபடியை யறிந்து	நாள்தோறும்	எப்போதும்
		என்னுடையகண்	எனது கண்கள்
		கண்டு உகக்கும்	ஸேவித்துக் களிக்கும்.

■■ —திருவாய்மொழி யென்பது ஒரு சிறந்த சாஸ்த்ரம். உபக்ரமித்த அர்த்தத்தை உபஸம்ஹாரம் பண்ணுவதென்பது சாஸ்த்ரார்த்தமாகையாலே முதலில் உபக்ரமித்த பக்தியோகத்தை சார்வே தவநெறிக் கென்கிற திருவாய்மொழியிலே உபஸம்ஹரித்தருளினாரென்கிறது. "பிணக்கறவைச் சார்வாக நிகமித்து" என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் காண்க. (94)

கண்ணனடியிணையில் காதலுறுவார்செயலை
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான் மாறன்
ஆனபுகழ்சேர் தன்னருள். (95)

கண்ணன் அடி இணையில்	எம்பெருமானது பதவிணையில்	ஆன புகழ் சேர் தன் அருள்	சிறந்த கீர்த்தியோடே சேர்ந்ததமதுக்ருபையினாலே
காதல் உறுவார் செயலை	பக்தியுடையவர்களின் செய்கையை	சுருங்க செப்பி	சுருக்கமாக அருளிச்செய்து
திண்ணம் உற	திடமாக	மண்ணவர்க்கு	இவ்வுலகத்தவர்களுக்கு
மாறன்	ஆழ்வார்	தான் உபதேசிக்கை தலைக்கட்டினான்	தாம் உபதேசிக்குந்தொழிலை முடித்துக்கொண்டார்.

—எம்பெருமான் தம்மைப் பரமபதத்திலே கொண்டு போகப் பதறுகிறபடியைக் கண்டு, சரம தசையிலே புதைத்துக் கிடக்கும் மஹாநிதிகளைப் புத்திரன் முதலானார்க்குக் காட்டுமாபோலே ஆழ்வாரும் ஒருவருமிழவாதபடி எல்லார்க்கும் ஹிதங்களைச் சுருக்கமாக உபதேசிக்க வேண்டி கண்ணன் கழலிணைப் பதிகத்திலே *தாள்வாய்மலரிட்டு நாள்வாய் நாடீரே *பாடீரவன் நாமம் சூனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே என்றிப்படி மநோவாக்காயங்களாகிற கரணத்ரயத்தாலும் ஆகும் வ்ருத்தியை யுபதேசித்துத் தலைக்கட்டினாராயிற்று.

"செயலைச் சுருங்கச் செப்பி" என்றது 'செய்யவேண்டிய காரியத்தை ஸம்க்ஷேபமாக அருளிச்செய்து' என்றபடி. (95)

அருளாலடியிலெடுத்த மாலன்பால்
இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து—இருவிசும்பில்
இத்துடன் கொண்டேக இசைவுபார்த்தேயிருந்த*
சுத்திசொல்லும் மாறன்செஞ்சொல். (96)

அருளால்	க்ருபையினாலே	இத்துடன் கொண்டு ஏக	(தம்மை) இந்த சரீரத்தோடே கொண்டுபோக
அடியில் எடுத்த மால்	(ஸம்ஸாரத்தில் நின்றும்) அடியிலே யெடுத்தருளின யெம்பெருமான்	இசைவு பார்த்தே இருந்த	(தமது) அனுமதியை எதிர்பார்த்திருந்த
அன்பால்	ப்ரேம விசேஷத்தாலே	சுத்தி	அவனது சுத்தியை
இருள் ஆர்ந்த தம் உடம்பை இச்சித்து	ஹேயமான தமது திருமேனியை ஆசைப்பட்டு	மாறன் செஞ்சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது
இருவிசும்பில்	பரமபதத்தில்	சொல்லும்	தெரிவிக்கும்.

***—திருவாய்மொழி தொடங்கும்போதே* மயர்வற மதிநலமருளினன்* என்னும்படியாக அடியிலே தம்மை விஷயீகரித்தருளின ஸர்வேச்வரன் தம்மைப் பரமபதத்தேறக் கொண்டு போகத் திருவுள்ளம்பற்றி, இந்த சரமதிருமேனியோடே கொண்டுபோகப் பாரித்து அதற்குத் தம்முடைய இசைவை யெதிர்பார்த்திருந்தமையை ஆழ்வார் *அருள்பெறுவாரடியார் பதிகத்திலே அருளிச் செய்தாரென்க. இப்பதிகத்திலே* இகழ்வின்றி யென்னெஞ்சத் தெப்பொழுதும் பிரியானே என்ற பாசுரத்தில் நோக்காகவும், மேல் பதிகத்தில்* மங்கவொட்டுன் மாமாயை என்றதை நோக்கியும் அருளிச் செய்தபடி.

இதில் மூன்ருமடியில் "இவரிசைவு பார்த்திருந்த" என்று சிலர் ஓதும் பாடம் மறுக்கவும் மறக்கவும் தக்கது. அதில் 'இவர்' என்பது அந்வயிக்க வுரியதன்று. இரண்டாமடியில் 'தம்முடம்பை யிச்சித்து' என்றது போல இங்கும் 'தம்மிசைவு' என்னப் பொருந்துமேயல்லது இவரிசைவு என்னப் பொருந்தாது. இவ்விஷயம் ஆழ்ந்த வ்யுத்பத்தியுடையார்க்கே அவகாஹிக்கும். (96)

செஞ்சொற்பரன்றனது சீராரும் மேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின்*—விஞ்சுதலைக்
கண்டவனைக் காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட*
திண்டிறல்மாறன்னந்திரு. (97)

செஞ்சொல் பரன்	செஞ்சொற்களாலே பிரதிபாதிக்கப்படுகின்றபரமபுருஷன்	அவனை கால் கட்டி	அவன் திருவடிகளைக் கட்டிக்கொண்டு
தனது சீர் ஆரும் மேனி தனில்	தம்முடைய சிறந்த திருமேனியிலே	கை விடுவித்துக் கொண்ட	(அவனது மாயவலையினுள் தாம் அகப்படாதபடி) தம்மை விடுவித்துக்கொண்ட
வஞ்சித்து செய்கின்ற வாஞ்சை தனின் விஞ்சு தலை கண்டு	வஞ்சனையாகச் செய்கிற விருப்பமிகுதியைக் கண்டு	திண் திறல் மாறன்	திடமான சக்தியை உடையரான ஆழ்வார்
		நம் திரு	நமக்குச் செல்வம்.

* * *—தம்மோடே வந்து கலந்து தமக்கு விதேயனாய்த் தம் திருமேனியிலே மிகுந்த அபிநிவேசமுடையனாய்த் திருமேனியோடே தம்மைத் திருநாட்டிலே கொண்டு போகவேணுமென்று எம்பெருமான் காட்டுகிற குதூஹலத்தைக் கண்ட ஆழ்வார் 'ஐயோ! இவ்வழுக்குடம்பின் தோஷ மிகுதியை யறியாமல் ராகாந்தனாயிருக்கிற விவனுக்கு இதின் தோஷத்தை யுணர்த்தினோமாகில் இத்தைத் தவிர்வன்' என்று நினைத்து இதின் தோஷங்களை அவனுக்கறிவிக்க அபிமத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைப்போல அதுதானே அவனுக்கு மேல்விழுகைக்கு உடலாக, 'பிரானே! இந்த வீணாசையை நீ கழித்துக் கொள்ளவே வேண்டும்' என்று அவனைக் கால்கட்டி அந்த வாஞ்சையை விடுவித்துக் கொண்டாராழ்வார் *செஞ்சொற்கவிகாளென்கிற திருவாய்மொழியிலே.

ஸர்வசக்தனான இவனுடைய பிடிவாதத்தையும் ஆழ்வார் ஸ்வசக்தியாலே மாற்றினாராதலால் 'திண் திறல் மாறன்' என்று மாமுனிகளிடம் விருது பெற்றாரென்க.

மங்கவொட்டுன் மாமாயை என்கிற பாசுரம் இத்திருவாய்மொழிக்கு உயிரானது. "வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்" என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியும் "வேர் சூடுவார் மண்பற்றுப்போலே" என்கிற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். (97)

திருமால் தன்பால் விருப்பம் செய்கின்ற நேர்கண்டு*
அருமாயத்தன் றகல்விப்பர்னென்*—பெருமால் நீ

இன்றென்பால்செய்வா னென்னென்ன இடருற்று நின்ருன்*
துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து. (98)

திருமால் தன் பால்	ஸர்வேச்வரன் தம்மிடத்து	நீ பெரு மால் செய்வான் என்	நீ மிக்க வியாமோஹத்தைச் செய்வானேன்?'
விருப்பம் செய்கின்ற நேர் கண்டு	அதிகமான ஆதரம் செய்யும் படியைக் கண்டு	என்ன	என்று (ஆழ்வார்) கேட்க.
அன்று அருமாயத்து அகல்விப்பான் என்	'(எம்பெருமானே!) இதற்கு முன்பெல்லாம் (என்னை) ப்ரக்ருதியிலே விட்டுவைத்து அகற்றிவிடுவானேன்?	தான்	(அப்போது) எம்பெருமான் தான்
இன்று	இப்பொழுது	துன்னு புகழ்	மிக்க புகழையுடையரான
என் பால்	என்னிடத்தில்	மாறனை	அவ்வாழ்வாரை
		சூழ்ந்து	வளைந்துகொண்டு
		இடர் உற்று நின்ருன்	(அவர் கேட்ட கேள்விக்கு விடை சொல்லமாட்டாமல்) தடுமாறி நின்ருன்.

***—எம்பெருமான் ஆழ்வார் பக்கலிலே அளவுகடந்த அபிநிவேசத்தைக் காட்டத் தொடங்கினன்; அது கண்ட ஆழ்வார் 'பிரானே! இன்றளவும் என்னைப் படுகுழியிலே தள்ளி வைத்து இன்று இங்ஙனே ஆதரிப்பதற்கு என்ன ஹேது!' என்று மடிபிடித்துக்கேட்க, அதற்கு ஒரு மறுமாற்றமும் சொல்லப் போகாமை யாலே எம்பெருமான் தடுமாறி நின்ருன் என்பது *திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்கிற திருவாய்மொழியிலருளிச் செய்யப்பட்டதாம். ஆசார்ய ஹ்ருதயத்தின் முடிவில் "இன்று அஹேதுகமாக ஆதரிக்கிற நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க" என்று தொடங்கி விரிவாக அருளிச்செய்துள்ள விஷயங்கள் இங்கு அநுஸந்தேயம். (98)

**சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழிகாட்ட*
ஆழ்ந்ததனை முற்றுமநுபவித்து—*வாழ்ந்தங்
கடியருடனே யிருந்தவாற்றை யுரைசெய்தான்*
முடிமகிழ்சேர் ஞானமுனி. (99)

முடி மகிழ் சேர் ஞானம் முனி	திருமுடியிலே வகுளமாலை யணிந்த ஞானமுனிவராகிய ஆழ்வார்	அதனை முற்றும் ஆழ்ந்து அனுபவித்து	அங்குள்ள அனுபவங்களை யெல்லாம் ஆழ்ந்து அநுபவித்து
சூழ்ந்து நின்ற மால்	தம்மைச் சூழ்ந்து நின்ற எம்பெருமான்	அங்கு வாழ்ந்து	அவ்விடத்தே வாஸம் பண்ணி
விசும்பில்	பரமபதத்தில்	அடியருடனே இருந்த ஆற்றை	நித்யமுக்தர்களுடனே கூடியிருந்த படியை
தொல்லை வழி காட்ட	அநாதி மார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தைக் காட்டிக் கொடுக்க	உரைசெய்தான்	அருளிச் செய்தார்.

***—எம்பெருமான் ஆழ்வாரைத் திருநாட்டிலே கொண்டுபோய் வைத்து இவரும் தானுமாக அநுபவிப்பதாய் மநோரதித்து இவர்க்கு அர்ச்சிராதி மார்க்கத்தையும் அங்குள்ளார் பண்ணும் ஸத்கார விசேஷங்களையும் பரமபத ப்ராப்தியையும் அங்கு நடைபெறும் விசேஷங்களையும் தன்னுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளையும் விசதமாக இவர் கண்டநுபவிக்கலாம்படி பரஜ்ஞாந தசையைப் பிறப்பித்துக் காட்டிக்கொடுக்க, இவரும் அவற்றை அழகிதாகத் திருப்புளியாழ்வாரடியிலிருந்து கொண்டே கண்டநுபவித்து *அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து தாம் பெற்ற அப்பேற்றை *சூழ்விசும்பு பதிகத்திலருளிச் செய்தாரென்றதாயிற்று. (99)

**முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கி*
தனியாகிநின்று தளர்ந்து—*நனியாம்
பரமபத்தியால் நைந்து பங்கயத்தாள் கோனை *
ஒருமையுற்றுச் சேர்ந்தா னுயர்ந்து. (100)


முனி மாறன்	சடகோப மாமுனிவர்	நனி ஆம் பரம பத்தியால் நைந்து	அதிகமாக விளைந்த பரம பக்தியினால் பரிபக்வராய்
முன்பு உரை செய்	கீழே அருளிச் செய்த	பங்கயத்தாள் கோனை	திருமாலை
முற்றின்பம் நீங்கி	இன்பம் முழுவதும் நீங்கினவராகி	ஒருமை உற்று உயர்ந்து சேர்ந்தான்	திருவுள்ளத்தாலே ஒருமைப்பட்டு அத்தாலே நித்ய ஸூரிகளின் உயர்வை யுடையராகி எம்பெருமானோடே சேர்ந்தாராயிற்று.
தனி ஆகி நின்று தளர்ந்து	தனிமையாய் நின்று வருந்தி		

* * *—சூழ்விசும்பணி முகிலென்கிற கீழ்த்திருவாய்மொழியிலே பரமபதத்திலேபுக்கு பரிபூர்ணாநந்த சாலியாய் நித்யஸூரிகள் திரளிலே யிருக்கிறபடியாகத் தம்மை யநுஸந்தித்தவிது ஜ்ஞாநாநுஸந்தான மாத்திரமாய் உள்ளபடியே யன்றிக்கே யொழிகையாலே மேருமலையுச்சியிலே இன்பம் தலைச்சிறப்பவிருந்தவன் பேராழமான பாதாளத்திலே தலைகீழாகத் தள்ளுண்டு விழுந்து நோவுபடுமாபோலே இப்பிறவிப் பெருங்குழியிலேயே தனியே தாமிருக்கிறபடியைக் கண்டு ஆற்றாமை தலையெடுத்துப் பெருமிடறு செய்து கூப்பிட்டுப் பெரிய ஆர்த்தியோடே திருவடிகளிலே சரணம்புக, பெரிய திருவடி திருத்தோளிலே பெரிய பிராட்டியாரோடே கூட இவரபேக்ஷித்தபடியே எம்பெருமான் வந்து தோற்றி, காற்கட்டான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையு மறுத்துத் திருநாட்டிலே கொண்டு போய் நித்ய ஸூரிகளோடே ஒரு கோவையாக்கி நித்ய கைங்கர்யம் கொண்டருள இங்ஙனம் தாம்* அவாவற்று வீடுபெற்றபடியை *முனியே நான்முகனே யென்கிற திருவாய்மொழியில் அருளிச் செய்து தலைக்கட்டினாராழ்வார்-என்றதாயிற்று (100)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்
எழுதிய
நித்யாநுஸந்தானவுரை
முற்றிற்று.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்த

ஞானஸாரம்

(ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய தெளிவுரையுடன்.)

(அவதாரிகை)

நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறைவாழ்ந்தது என்னும்படியாக எம்பெருமானார் தர்சந நிர்வாஹம் செய்து கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளி யிருக்குமளவிலே யஜ்ஞ மூர்த்தி என்றொரு மாயாவாதி ஸந்யாஸி ஸ்வாமியின் வைபவாதிசயங்களைக் கேட்டு ஸ்வாமியோடே தர்க்கித்து வெற்றிபெற வேணுமென்று விரும்பி ஸ்வாமிமடத்திலே வந்து ஸேவித்து 'நான் கேட்கிற கேள்விகளுக் கெல்லாம் தேவரீர் விடை கூறவேணும்; திருப்திகரமாக விடை பெற்றேனாகில் தேவரீருக்கு சிஷ்யனாகக் கடவேன்' என்று சொல்ல, ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள் வரையில் வெற்றி தோல்வியின்றியே வினாவிடை செல்லா நிற்க, முடிவில் உத்தர மருளிச் செய்ய வேண்டிய பொறுப்பு ஸ்வாமி பக்கலிலே நின்று விஷயம் தோன்றாமே யிருக்கையில் 'நாளையாகிறது' என்று சொல்லி ஸபாவிஸர்ஜநமாக; பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வியாகுலப் பட்டு, தம் திருவாராதனமான பேரருளாளரைத் திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணி 'ஆழ்வார் தொடங்கி ஆளவந்தாரளவாக இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கி வந்த இத்தரிசனம் இன்று அடியேனால் பங்கமடைவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றோ?' என்று விண்ணப்பஞ் செய்து அமுது செய்யாமலே திருக்கண் வளர்ந்தருள, அன்றிரவு பேரருளாளர் கனவிலே யெழுந்தருளி ஸேவை ஸாதித்து மாயாவாதியின் வாயடங்கும்படியான சில அர்த்த விசேஷங்களை ஸ்புரிக்கச் செய்து மறைய, ஸ்வாமியும் சிற்றஞ் சிறுகாலை யெழுந்து பரமஸந்துஷ்டராய் நித்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ப்ரஸந்ந கம்பீரராய் விசார கோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே திண்ணமென்று அறுதியிட்டு அப்போதே யெழுந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி நின்று 'அடியேனை யங்கீகரித்தருளவேணும்' என்று கைகூப்பி ப்ரார்த்திக்க, 'மேலே விஷய விசாரம் நடைபெற வேண்டியிருக்க, இதுவென்?' என்று ஸ்வாமி கேட்க, அதற்கு யஜ்ஞமூர்த்தி 'ஸ்வாமிந்! தேவரீருக்குப் பெரிய பெருமாள் ப்ரத்யக்ஷமான பின்பு தேவரீரென்றும் பெருமாளென்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்தியில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அநர்த்தப்பட்டது போதும், இனியும் அநர்த்தப்படாதபடி நோக்கி யருள வேணும்' என்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் திருவருளைப் பெற்று அப்போதே

ஸ்ரீ:

அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்

ஞானஸாரம்

ஊன வுடற்சிறைநீத்து ஒண்கமலை கேள்வனடித்
தேனுகரு மாசைமிகு சிந்தையராய்த்—தானே
பழுத்தால் வீழுங்கனிபோல் பற்றற்று வீழும்
விழுக்காடே தானருளும் வீடு. 1

ஊன உடல் சிறை நீத்து	மாம்ஸமயமான வுடலாகிற சிறையில் நின்றும் விடுபட்டு	பழுத்தால் தானே விழும் கனி போல்	பழுத்து (க்கிளையில் தங்கியிருக்க முடியாமல்) தானே விழுகிற பழம் போன்று
ஒண் கமலைகேள்வன் அடி தேன் நுகரும் ஆசை மிகு சிந்தையர் ஆய்	ஸ்ரீமஹாலக்ஷ்மீபதியின் திருவடித் தேனையநுபவிக்க வேணுமென்னுமாசை மிகுந்த மனமுடையவர்களாய்க் கொண்டு	பற்று அற்று வீழும் விழுக்காடே தான்	(உபாயாந்தரங்களிலும் உபேயாந்தரங்களிலும்) ஸங்கமற்று விழும் விழுகைதான்
		வீடு அருளும்	மோக்ஷப்ராபகமாகும்.

* * *—ஆர்த்தப்ரபத்தி யென்றும் த்ருப்தப்ரபத்தி யென்றும் ப்ரபத்தி இருவகையாகச் சொல்லப்படுகிறது. தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை இசைந்திருக்குமதிகாரி செய்யும் ப்ரபத்தி த்ருப்தப்ரபத்தியாம். அவ்வளவு விலம்பத்தைப் பொறுக்க கில்லாதே சடக்கென வீடுபெற விரும்பி நிற்கும் அதிகாரி செய்யும் ப்ரபத்தி ஆர்த்தப்ரபத்தியாம். இவ்விருள் தருமா ஞாலத்தில் ஒரு நொடிப்பொழுதும் இருப்பு ஸஹிக்க முடியாமையே ஆர்த்தப்ரபத்திக்கு அடியாகிறது. மரத்தில் காய் காய்த்து அது பழமாகப் பரிணமிக்கிறது; அந்தப் பழமானது மரத்தில் தங்கி நிற்குமளவு ஒன்றுண்டு; அந்த அளவு கடந்தால் தானாகவே மரத்தை விட்டு நழுவிக் கீழேவிழும்படியைக் காணாநின்றோம். இவ்வண்ணமாகவே இந்நிலத்தில் தங்கியிருக்குமளவு கழிந்த வோர் அதிகாரியானவன் ஒரு க்ஷணமும் தரித்திருக்க முடியாமல் தானாகவே விழுகிற விழுகைதான் ஆர்த்தப்ரபத்தி யென்பது; அது வீட்டையருளும்—என்றதாயிற்று.

ஸநத்குமாரஸம்ஹிதையில்—* यदा परानन्वयिभिः दुश्शकः स्मृतिभिर्विना। तेन तत्पुरतः पातः सा प्रपत्तिस्तदा भवेत्—யதா பராநந்வயிபி: துச்சக: ஸ்ம்ருதிபிர், விநா, தேந தத்புரத: பாதஸ் ஸா ப்ரபத்திஸ் ததா பவேத். *என்றுள்ள ச்லோகம் இப்பாசுரத்திற்கு மூலமாயிருக்கும். இதன் பொருளாவது—[பர அநந்வயிபி:] இப்பதம் (ஸ்ம்ருதிபி:) என்று மேலுள்ள விசேஷ்யத்தில் அந்வயிக்கும் விசேஷணமாகையாலே ஸ்த்ரீலிங்கமான வதற்குச் சேர (பராநந்வயிநீபி:) என்று இதுவும் ஸ்த்ரீலிங்கமாக இருக்கவேணும்: அப்படியில்லாமை "ஆர்ஷத்வாத் ந தோஷ:;" என்கிற கட்டளையிலே அதுஷ்டமாகவே கொள்ளத்தக்கது. பராநந்வயிபி: ஸ்ம்ருதிபிர் விநா துச்சக:—இதர விஷயங்களிலே அந்வயமற்ற சிந்தனைகளில்லாமல் இந்நிலத்தில் தரித்திருக்க முடியாதவனாய் என்றபடி. விஷயாந்தர ஸ்மரண லேசமுமின்றிக்கே எம்பெருமானொருவனையே சிந்தித்து நிற்க வேண்டும்படியான தசை பிறந்தவனாகி என்று கருத்து. இப்படிப்பட்டவனாக, யதா—எப்போது ஆகிறானோ; ததா—அப்போது, தேந— तादृशदशाविशेषेण என்றபடி. அப்படிப்பட்டநிலைமையோடு. தத்புரத: பாத:—எம்பெருமான் திருமுன்பே விழுகை யென்பது யாதொன்றுண்டோ, ஸா ப்ரபத்தி: பவேத்— அதுதான் ப்ரபத்தியாகும் என்றபடி. இந்த ச்லோகத்தின் பொருள் இப்பாசுரத்திலே காணத்தக்கது. "ஊனவுடற் சிறை நீத்து ஒண்கமலை கேள்வனடித் தேனுகரு மாசைமிகு சிந்தையினால்" என்கிற (இப்பாட்டின்) முன்னடியும் மேலெடுத்த ச்லோகத்தின் பூர்வார்த்தமும் பர்யாயமாயிருக்கும்.

ஏக தண்டத்தை முறித்தெறிந்து ப்ராயச்சித்த பூர்வகமாய் சிகா யஜ்ஞோபவீதங்களை யும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று முக்கோல்பிடித்த முனியாகி, சாஸ்த்ரப்படி ஆசார்யனுடைய நாமத்தையே வஹிக்க விரும்பி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் பேரருளாள னுடைய ப்ரஸாதமடியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற உபகாரஸ்ம்ருதி உலகப்ரஸித்த மாம்படி அருளாளப் பெருமாளெம் பெருமானுர் என்று திருநாமம் சாத்தியருளினர். உடனே அவரை யழைத்துக் கொண்டுபோய்ப் பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணிச் சிறப்பு களும்பெறுவித்து அன்று முதலாகவே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமு மோது வித்து மற்றும் தத்வ சிக்ஷைகளும் செய்தருளினர்.

அவரும் ஸ்வாமி திருவடிகளிலே நிழலுமடிதாறுமாக விருந்து ஸகல தத்வார்த்தங் களையும் கேட்டு தத்வ ஹித புருஷார்த்தங்களில் விசததம ஜ்ஞாநமுடையராய் அவ்வர்த்த விசேஷங்களைப் பின்புள்ளாரு மநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும் படியாக ஆசார்ய நியமநத் தாலே இரண்டு ப்ரபந்தங்களை யருளிச் செய்தார். அவற்றுக்கு ஞானஸார மென்றும் ப்ரமேய ஸார மென்றும் திருநாமம் வழங்கும். இத்திருநாமம் ஸ்வாமி யெம்பெருமானுர் தாமே இட்டருளின தென்று பெரியார் பகரக் கேட்டிருக்கை. பகவச் சாஸ்த்ராதிகளிலே பல பல வசனங்கள் முமுக்ஷுக்களுக்கு அவச்யஜ்ஞாதவ்யங்களான பரமார்த்தங்களைத் தெளிவாகத் தெரிவிப்பனவாயிருக்கும்; அந்த வசனங்களையே ஒவ்வொரு பாட்டாக அமைத்து ப்ரபந்தீகரித்ததாயிருக்கும் ப்ரதம ப்ரபந்தமான ஞானஸாரம். ஜ்ஞாதவ் யார்த்த ப்ரகாசகங்களான ப்ரமாணங்களின் ஸாரமாயிருக்கையாலே ஞானஸாரமென்று பேராயிற்று. அந்த ப்ரமாண வசனங்களை யெல்லாம் அவ்வோ பாசுரங்களுக்குச் சேர ஸங்க்ரஹித்தருளி ஸம்க்ஷிப்தமானதோர் உரையும் இட்டருளினர் மணவாளமாமுனி கள். இராமாநுச நூற்றந்தாதிக்கு அருளிச் செய்திருந்த உரையைத் தழுவி வியாக் கியானமிட்ட பிள்ளை லோகஞ்சீயர் இந்த ஞானஸார ப்ரமேயஸாரங்களுக்கும் வியாக்கி யானமிட்டிருக்கிறர். இதுதான் அச்சாகி வெளிவந்துளதென்றும் இது மணவாள மாமுனிகளின் உரையன்று என்றும் அஸ்மதாசார்யரான அழகிய மணவாளச் சீயர் அரு ளிச் செய்யக் கேட்டிருக்கை. இவ்விரண்டு திவ்விய நூல்களிலும் அர்த்தபுஷ்டி ஒரு புற மிருக்க, மன்னிய சீர்வெண்பாவில் வைத்துப் பாடுகையாலே சொல்லழகும் மிகச் சிறந் திருக்கும். ஸ்வாசார்யரான எம்பெருமானுர் தாமே இவ்விரண்டு நூல்களையும் அருளிச் செய்வதாக இந்நூலாசிரியருடைய கருத்தாகையாலே எம்பெருமானுர்க்குக் காப்புச் செய் யுள்கூட இயற்றுது விட்டனர்.

அவதாரிகை முற்றிற்று.

ஞானஸாரத் தனியன்

சுருளார் கருங்குழல் தோகையர் வேல்விழியில் துவளும்
மருளாம் வினைகெடும் மார்க்கம் பெற்றேன், மறை நான்குஞ் சொன்ன
பொருள் ஞானசாரத்தைப் புந்தியில் தந்தவன் பொங்கு புகழ்
அருளாளமாமுனி யம்பொற்கழல்க ளடைந்த பின்னே.

கருத்துரை:—நான்கு வேதங்களிலு மமைந்த பொருள்களைக் கொண்ட ஞானசார மென்னும பிரபந்தத்தை யருளிச் செய்த மஹாகீர்த்திவாய்ந்த அருளாளப்பெருமா ளெம்பெருமானுருடைய திருவடிகளை யடையப் பெற்றதனல் விஷயாந்தரப்ராவண்யம் தொலையும் படியான நல்வழியைத் தெரிந்து கொண்டேனென்பதாம். ... *

தானே பழுத்தால் விழுங்கனி போல்:—பழுத்தால் தானே விழுங்கனிபோல் என்று யோஜிப்பது. சில பழங்கள் கீழே விழாமல் மரக்கிளையிலேயே யிருக்கக் கண்டோமாகில் இன்னமும் முற்றப் பழுக்கவில்லை யென்றே நினைக்கநேரும். முற்றப் பழுத்தபின் ஒரு க்ஷணமும் கிளையில் தங்காதென்பது சொல்லவேண்டா. அதுபோலவே, ஆர்த்தியின் பரிபாகம் சரமாவஸ்தையளவாக முதிர்ந்த பின்பு ஒரு க்ஷணமும் இந்நிலத்தில் இருப்பு அரிதாகி ஆர்த்தப்ரபத்தி செய்யுமளவில் * आर्तानामाशुफला—ஆர்த்தேஷு ஆசுபலா* என்கிற ந்யாஸ திலகஸூக்திப்படியே கடுகப்பலன் கைபுகும் என்றதாயிற்று. ... 1

நரகும் சுவர்க்கமும் நாண்மலராள் கோனைப்
பிரிவும் பிரியாமையுமாய்த்—துரிசற்றுச்
சாதகம்போல் நாதன் தனதருளே பார்த்திருத்தல்
கோதி லடியார் குணம். 2

நாண் மலராள் கோனை பிரிவு நரகு ஆய்	திருமாலைப் பிரிந்திருத்தல் நரகமாகவும்	சாதகம் போல்	சாதக பக்ஷியானது மேகத்தையே எதிர்பார்த்திருப்பதுபோல
பிரியாமை சுவர்க்கம் ஆய்	பிரியாமல் கூடியிருத்தல் ஸ்வர்க்கமாகவும் பெற்று	நாதன் தனது அருளே பார்த்திருத்தல்	எம்பெருமானுடைய திருவருளொன்றையே நிரீக்ஷித்திருப்பதானது
துரிசு அற்று	இப்படிப்பட்ட ப்ரேமத்தை உபாயமாகக் கொள்ளுகையாகிற தோஷமின்றிக்கே	கோது இல் அடியார் குணம்	குற்றமற்ற சேஷபூதர்களின் இயல்வு.

* * * —*यस्त्वया सह स स्वर्गो निरयो यस्त्वया विना—யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா* என்கிற ஸ்ரீராமாயண (அயோ-30-23.) ச்லோகத்தை யுட்கொண்டு முன்னடிகளும், * प्रपन्नश्चातको यद्वत्प्रपत्तव्यः कपोतवत्। रक्ष्यरक्षकयोरेतल्लक्ष्यं लक्षणमेतयोः— ப்ரபந்நச் சாதகோ யத்வத் ப்ரபத்தவ்ய: கபோதவத், ரக்ஷ்ய ரக்ஷகயோரேதத் லக்ஷ்யம் லக்ஷணமேதயோ:* என்கிற பகவச் சாஸ்த்ரவசனத்தை யுட்கொண்டு பின்னடிகளும் பேசப்பட்டன. பெருமாள் காட்டுக்குப் புறப்படுகிறபோது பிராட்டியை நிறுத்திப் போவதாகநினைத்து வார்த்தையருளிச் செய்தவளவிலே பெருமாளை நோக்கிப் பிராட்டி சொன்னது [யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்க: நிரயோ யஸ் த்வயா விநா] உம்மோடு கூடியிருப்பது தான் ஸ்வர்க்கம்; உம்மைப் பிரிந்திருப்பது தான் நரகம் என்று. இப்படி உறுதி கொண்டிருப்பதுதான் பரம பக்தனுடைய படியாகும். நாண் மலராள் கோனைப் பிரிவு நரகு; (அவனைப்) பிரியாமை சுவர்க்கம் என்றது முன்னடிகளில். * प्रपन्ने चातकन्यायः—ப்ரபந்நே சாதகந்யாய:* என்கிறவர்த்தம் பின்னடிகளிலுறையும். * एकः कृती शकुन्तेषु योऽन्यं शक्रान्न याचते—ஏக: க்ருதீ சகுந்தேஷு யோந்யம் சக்ராத் ந யாசதே* என்கிறபடியே சாதகபக்ஷியானது மேகத்தையேஎதிர்பார்த்திருப்பதுபோல, ப்ரபந்நனும் *களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்* என்றும் *உனக்குப் பணி செய்திருக்குந்தவமுடையேன் இனிப்போயொருவன்றனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயையழிவு கண்டாய்* என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானருளையே யெதிர்பார்த்திருக்கவேணும். ஆக, எம்பெருமானைப் பிரிந்துகிடப்பதை நரக ப்ராயமாக நினைப்பதும் அவனதருளையே பார்த்திருப்பதும் பரமபக்தர்களின் லக்ஷணமென்றதாயிற்று. 2

ஆனை யிடர்கடிந்த ஆழியங்கை யம்புயத்தாள்
கோனைவிடில் நீரிற் குதித்தெழுந்த—மீனெனவே
ஆக்கை முடியும் படிபிறத்த லன்னவன்தாள்
நீக்கமிலா வன்பர் நிலை. 3

ஆனை இடர் கடிந்த ஆழி அம் கை	கஜேந்திராழ்வானுடைய துன்பத்தைப்போக்கின திருவாழியை அழகிய திருக்கையிலேயுடைய
அம்புயத்தாள் கோனை விடில்	திருமாலை விட்டுப்பிரிந்தால்
நீரின் குதித்து எழுந்த மீன் எனவே	நீரைவிட்டுக்கிளம்பியெழுந்த [நீரைப்பிரிந்த] மீன்போல
ஆக்கை முடியும் படி பிறத்தல்	உடல் முடியும்படியானநிலைமை விளைதல்
அன்னவன்தாள் நீக்கம் இலா அன்பர் நிலை	அப்பெருமானுடைய திருவடிகளைவிட்டு நீங்க இல்லாத பரமபக்தர்களின் இயல்வாம்.

* * *—ஸ்ரீராமாயணத்தில் இளையபெருமாளுடைய வார்த்தை [அயோ—53. 31.] *न च सीता त्वया हीना न चाहमपि राघव। मुहूर्तमपि जीवावो जलान्मत्स्याविवोद्धृतौ—ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ* என்பது. இதனால், எம்பெருமானைப் பிரிந்தவாறே நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல் துடிப்பது பரமபக்தனுடைய லக்ஷணமென்று சிக்ஷிதமாகிறது. இதனையுட்கொண்டது இப்பாசுரம். *மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த கானமர்வேழம் கையெடுத்தலறக் கராவதன்காலினைக் கதுவ ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்ட திருமால் பக்தர்களிடத்து அன்பே நிரூபகமானவன்—என்றறிந்து அத்திருக் குணத்திலே யீடுபட்டு அப்பெருமானைவிட்டுப் பிரிந்தால் நீரைவிட்டுப் பிரிந்த மீன்படும்பாடுபடுமதே மெய்யன்பர்களின் நிலை என்றதாயிற்று. 3

மற்றொன்றை யெண்ணாதே மாதவனுக் காட்செயலே
உற்றதிதுவென் றுளந்தெளிந்து—பெற்ற
பெரும்பேற்றின் மேலுளவோ பேறென் றிருப்பார்
அரும்பேறு வானத் தவர்க்கு. 4

மற்று ஒன்றை எண்ணாதே	(பகவத்கைங்கர்யமல்லது) வேறொன்றை நெஞ்சிலும் நினையாமல்
மாதவனுக்கு ஆட் செயல் இதுவே உற்றது என்று உளம் தெளிந்து	திருமாலுக்கு அடிமைத் தொழில் செய்வதொன்றே ஸ்வரூபாநுரூபமென்று மனந்தேறி
பெற்ற பெரு பேற்றின் மேல் பேறு உளதோ என்று இருப்பார்	(பகவத் கைங்கரியம் பெற்றால்) அப்படி பெற்ற மஹாபுருஷார்த்தத்திற்கு மேலே ஒரு புருஷார்த்தமுண்டோ என்று அத்யவஸாயங்கொண்டிருக்குமவர்கள்
வானத்தவர்க்கு அரு பேறு	நித்யஸூரிகளுக்கு அலப்யலாபமாயிருப்பர்கள்.

* * * —ஸ்ரீ சாஸ்த்ரத்தில் * ये ब्रह्मन् भगवद्दास्यभोगैकनिरतास्सदा। ते प्रियातिथयः प्रोक्ताः श्रीवैकुण्ठनिवासिनाम्—யே ப்ரஹ்மந்! பகவத் தாஸ்யபோகைகநிரதாஸ் ஸதா, தே ப்ரியாதிதய: ப்ரோக்தா: ஸ்ரீவைகுண்ட நிவாஸிநாம்* என்றுள்ள வசனத்தையுட்கொண்டு அருளிச்செய்ததாமிப்பாசுரம். இந்த ச்லோகத்தினிரண்டாம் பாதத்திலுள்ள ஏக சப்தத்தை விவரிக்கிறது பாசுரத்தினடியில் * மற்றொன்றையெண்ணாதே * என்பது. மாதவனுக்கு ஆட்செய்வதே ஸ்வயம் ப்ரயோஜநமென்றுகொண்டு ப்ரயோஜநாந்தரத்தை விரும்பாதே பகவத் கைங்கர்யத்தைப்பண்ணி ‘இதனில் மிக்கோர் புருஷார்த்தமுண்டோ?’ என்று உகந்திருக்குமவர்கள் வைகுண்டவாஸிகளான நித்யமுக்தர்களுக்கு அலப்யலாபமாவர்கள். அவர்களுக்குத் திருநாடு திண்ணமென்றபடி. ... 4

தீர்த்தமுயன் றாடுவதும் செய்தவங்கள் செய்வனவும்
பார்த்தனைமுன் காத்தபிரான் பார்ப்பதன்முன்—சீர்த்துவரை
மன்னனடி யோமென்னும் வாழ்வுநமக் கீந்ததற்பின்
என்னகுறை வேண்டு மினி. 5

முயன்று தீர்த்தம் ஆடுவதும்	பலக்ஷேத்திரங்களுக்குச்செல்லுகையாகிற முயற்சிகளைச் செய்து புண்ய தீர்த்தங்களில் நீராடுவதும்	சீர் துவரை மன்னன்	ஸ்ரீமத் த்வாரகாநாதனான அக் கண்ணபிரான்
செய் தவங்கள் செய்வனவும்	ஊன்வாட வுண்ணாதுயிர் காவலிட்டுச் செய்யும் தவங்கள் செய்வதும்	அடியோம் என்னும் வாழ்வு நமக்கு ஈந்ததற்பின்	அடிமைச் செல்வத்தை நமக்கு அருளின பின்பு
முன் பார்த்தனை காத்தபிரான் பார்ப்பதன் முன்	முன்பு அர்ஜுனனைக் காத்தருளினவனான கண்ணபிரானுடைய கடாக்ஷலாபத்திற்கு முன்னம் எற்குமத்தனை ;	இனி வேண்டும் குறை என்ன	இனி என்ன குறையுள்ளது. (தீர்த்தங்களாடவும் தவம் புரியவும் வேண்டாவென்கை.)

* * * तावद्गच्छेत्तु तीर्थानि सरितश्च सरांसि च। यावन्नाभूच्च भूपाल! विष्णुभक्तिपरं मनः—தாவத் கச்சேத் து தீர்த்தாநி ஸரிதச் ச ஸராம்ஸி ச, யாவந் நாபூச்ச பூபால! விஷ்ணு பக்திபரம் மந: * என்று ஸ்ரீ விஷ்ணு தர்மத்திலும், * किं तस्य दानैः किं तीर्थैः किं तपोभिः किमध्वरैः। यो नित्यं ध्यायते देवं नारायणमनन्यधीः—கிம் தஸ்ய தாநை: கிம் தீர்த்தை: கிம் தபோபி: கிமத்வரை:, யோ நித்யம் த்யாயதே தேவம் நாராயணமநந்யதீ:* என்று இதிஹாஸஸமுச்சயத்திலுமுள்ள வசனங்களையுட்கொண்டு அருளிச்செய்ததா மிப்பாசுரம். பார்த்தனை முன் காத்தபிரான் என்றது—கீதையையும் அதன் ஸாரமான சரமச்லோகத்தையும் உபதேசித்து அர்ஜுநனை * ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ * என்னப் பண்ணினவன் என்றபடி. அவன் பார்ப்பதன் முன்வரைக்குமே தீர்த்த முயன்றாடுவதும் செய்தவங்கள் செய்வனவும்—என்றது, சரமச்லோகார்த்த நிஷ்டை உண்டாகுமளவுமே அந்த ப்ரவ்ருத்திகளுக்கு அவகாச முள்ளது; அதன் பிறகு * यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः। तेन चेदविवादस्ते मा गङ्गां मा कुरून् गमः—யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித:, தேந சேத் அவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம:* என்கிறபடியே க்ஷேத்ர தீர்த்த பர்யடநத்தினாலாவதொன்றுமில்லை என்றபடி. [சீர்த்துவரை மன்னன் அடியோமென்னும் வாழ்வு நமக்கு ஈந்ததற்பின்] என்றது— *அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:* என்றருளிச்செய்து நம்மை வாழ்வித்தபின்பு என்றபடி. இது அர்ஜுனனை நோக்கி அருளிச் செய்ததாயினும் அவனை வியாஜமாகக் கொண்டு எல்லார்க்குமாக அருளிச் செய்ததாகவன்றோ பரமார்த்தமுள்ளது. * செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர் * என்கிறபடியே இவ்வாசிரியர் தாமும் அதற்கு அதிகாரியாகையாலே *வாழ்வு நமக்கீந்ததற்பின் என்ன குறைவேண்டு மினி * என்றருளிச்செய்யக் குறையில்லை. இப்பாசுரத்தை அநுஸந்திப்பவர்களும் அதிகாரிகளாய்க் குறையற்றவர்களாவர். 5

... ...

புண்டரிகை கேள்வ னடியாரப் பூமிசையோன்
அண்ட மொருபொருளா வாதரியார்—மண்டி
மலங்கவொரு மீன்புரண்ட மாத்திரத்தா லார்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க் கடல். 6

புண்டரிகை கேள்வன் அடியார்	திருமாமகள் கணவனுடைய அடியார்களான பாகவதோத்தமர்கள்	ஒருமீன் மண்டிமலங்க புரண்ட மாத்திரத்தால்	ஒரு மீனானது ஆழ விழிந்து கீழும் மேலுங் கலங்க வேணுமென்று புரண்டவளவால்
அப்பூமிசையோன் அண்டம்	அப்பிரமனுடைய அண்டத்தை	முந்நீர் கடல்	மூவகை நீரையுடைய கடலானது
ஒரு பொருளா ஆதரியார்	ஒரு சரக்காகவே மதிக்க மாட்டார்கள் ;	ஆர்த்து கலங்கிடுமோ	நிலைமாறி யொலித்துக் கலங்குமோ ?

* * *— * ब्रह्माण्डमण्डलीमात्रं किं लोभाय मनस्विनः । शफरीस्फुरितेनाब्धेः क्षुब्धता नैव जायते— ப்ரஹ்மாண்ட மண்லீமாத்ரம் கிம் லோபாய மநஸ்விநः, சபரீஸ்புரிதேநாப்தேः க்ஷுப்ததா நைவ ஜாயதே* என்கிற வசனத்தையுட்கொண்டு இப்பாசுரமருளிச் செய்தது. உண்மையான பகவத் பக்தர்கள் மஹத்தான ஐச்வரியத்தையும் ஒரு பொருளாக மதிக்க மாட்டார்கள். ப்ரஹ்மாண்டைச்வர்யமென்பது ப்ராக்ருதர்களுக்குப் பெரிதாகத் தோற்றினாலும் பகவத்பக்தர்கள் அதை ஒரு க்ஷுத்ரவஸ்துவாக நினைப்பர்களே யல்லது பெரிய வஸ்துவாக நினையார்கள். அந்த ப்ரஹ்மாண்டைச்வர்யத்தை இவர்கள்தாம் விரும்பாதொழிந்தாலும் அது இவர்களுடைய உள்ளத்தைக் கலக்கமாட்டாதோ வென்னில் ; மஹத்தான தத்வமாகிய ஸமுத்திரத்தை ஒரு க்ஷுத்ரமத்ஸ்யம் கலக்கவல்லதோ? அந்த க்ஷுத்ர ஜந்து எத்தனை கோலாஹலங்கள் செய்தாலும் கடல் சிறிதும் கலக்க முறுவதில்லையன்றே. அதுபோலவேயாம் இதுவும் என்றதாயிற்று. பக்தர்கள் கடலின் ஸ்தானத்திலும், ப்ரஹ்மாண்டைச்வர்யம் ஒரு சிறுமீன் ஸ்தானத்திலும் கொள்ளப்பட்டதென்க. புண்டரிகை கேள்வன்—லக்ஷ்மீபதி. தாமரைக்கு வாசகமான கமலமென்னும் சொல் கமலா என்றும், பத்மமென்னுஞ் சொல் பத்மா என்றும் பிராட்டியைக் குறிப்பது போல, தாமரைக்கு வாசகமான புண்டரீகமென்னுஞ் சொல்லும் 'புண்டரீகா' என்று பிராட்டியைக் குறிப்பதாகத் தமிழ் மரபு. இது ஸம்ஸ்க்ருத மர்யாதைக்குச் சேர்ந்ததன்று. கோகனகை, சரோருகை, அரவிந்தை என்னுஞ் சொற்களால் பிராட்டியைக் குறிப்பது தமிழ்நூற்களில் மாத்திரமே கண்டதாகும்.

முந்நீர்—ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்று மூவகை நீரையுமுடையது கடல் ; தந்நகரமாகக் கொள்ளாமல் றன்னகரமாக (அதாவது முன்னீர் என்று) கொள்வதுமுண்டு; அப்போது *अप एव ससर्जादौ—அப ஏவ ஸஸர்ஜாதௌ* என்கிற ப்ரமாணத்தின்படி ஸ்ருஷ்டியில் முற்பட்ட நீர் என்றதாகும் ; முன் நீர் - முன்னீர். இச்சொல்லே கடலைக் குறிப்பதாயிருக்க 'முந்நீர்க் கடல்' என்றது 'கரிகலபம்' என்னுமாபோலே. 6

தோளார் சுடர்த்திகிரி சங்குடைய சுந்தரனுக்கு*
ஆளானார் மற்றொன்றி லன்புசெயார்—மீளாப்
பொருவரிய விண்ணாட்டிற் போகம் நுகர்வார்க்கு*
நரகன்றே இந்திரன்தன் நாடு. 7

தோள் ஆர் சுடர் திகிரி சங்கு உடைய சுந்தரனுக்கு	திருத்தோள்களோடு சேர்ந்து விளங்குகின்ற திருவாழி திருச்சங்குகளையுடைய அழகியானுக்கு	மீளா பொருவு அரிய விண்நாட்டில் போகம் நுகர்வார்க்கு	மீட்சியற்றதாய் ஒப்பற்றதாய் அரிதான திருநாட்டிலே பேரின்பமநுபவிக்கக் குதூஹலமுடையவர்களுக்கு
ஆள் ஆனார்	அடிமைப்பட்டவர்கள்		
மற்று ஒன்றில் அன்பு செயார்	அவ்வடிமைக்கு மாறான எதிலும் ஆதரம் செய்யமாட்டார்கள் ;	இந்திரன் நாடு நரகு அன்றே	ஸ்வர்க்க லோகம் நரகப்ராயமன்றோ.

* * *—*तत्पदं प्राप्तुकामा ये विष्णोस्तेषां महात्मनाम् । भोगाः पुरन्दरादीनां ते सर्वे निरयोपमाः—தத் பதம் ப்ராப்துகாமா யே விஷ்ணோஸ் தேஷாம் மஹாத்மநாம், போகாः புரந்தராதீநாம் தே ஸர்வே நிரயோபமாः.* என்கிற ப்ரஹ்மாண்ட புராணவசனத்தை யுட்

கொண்டு அருளிச்செய்ததாம் இந்தப்பாசுரம். கீழ்ப்பாட்டின் முன்னடிகளின் கருத்தும் இப்பாட்டின் முன்னடிகளின் கருத்தும் ஒருவாறு ஒற்றுமைப்பட்டிருந்தாலும் பின்னடிகளின் பொருளில் வேற்றுமை காண்க. உட்கொண்ட ப்ரமாணவசனத்தை யடியொற்றின மொழிபெயர்ப்பு எம்பெருமான் திருவாழியும் திருச்சங்குமேந்தி நிற்கு மழகிலே யீடுபட்டவர்கள் அஃதொழிந்த மற்றெதிலும் அன்பு பாராட்டமாட்டார்கள்; அப்ராக்ருதமாய் அதிமநோஹரமாயிருக்கும் விஷயத்தின் வாசியறிந்து அதிலே தோற்றிருக்குமவர்கள் மிகவும் ஆபாஸமாய் அவிலக்ஷணமாயிருக்கின்ற ப்ராக்ருத விஷயங்களை விரும்புவார்களோ? *மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கைய துவே* என்னும்படி ஸித்தமாயிருக்கின்ற விண்ணாட்டி லநுபவத்திலே ருசியுள்ளவர்களுக்கு இஹலோக போகம் நரகப்ராயமன்றோ. 7

முற்றப் புவனமெலா முண்ட முகில்வண்ணன்
கற்றைத் துழாய்சேர் கழலன்றி—மற்றொன்றை
இச்சியா வன்பர்தனக் கெங்ஙனே செய்திடினும்
உச்சியா லேற்கு முகந்து. 8

புவனம் எலாம் முற்ற உண்ட	ஸகல லோகங்களையும் பூர்த்தியாகத் திரு வயிற்றிலே வைத்து நோக்கின	மற்று ஒன்றை இச்சியா அன்பர்	வேறு எதையும் விரும்பாத பக்தர்கள்
முகில்வண்ணன்	காளமேக நிறத்தனான பெருமானுடைய	தனக்கு எங்ஙனே செய்திடினும்	எம்பெருமானாகிய தனக்கு எதை எவ்விதமாகச் செய்தாலும்
கற்றை துழாய் சேர் கழல் அன்றி	திருத்துழாய்த் தார்கள் சேர்ந்த திருவடிகள் தவிர	உகந்து உச்சியால் ஏற்கும்	திருவுள்ள முகந்து சிரஸா வஹிப்பன் (அப்பெருமான்).

* * *— மஹாபாரதத்தில் மோக்ஷதருமத்தில் * याः क्रियास्संप्रयुक्तास्स्युरेकान्तगतबुद्धिभिः। तास्सर्वाः शिरसा देवः प्रतिगृह्णाति वै स्वयम् —யாः க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ் ஸ்யுः ஏகாந்த கத புத்திபிः, தாஸ் ஸர்வாச் சிரஸா தேவः ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் * என்றுள்ள ச்லோகத்தை யடியொற்றிப் பணித்ததாமிப்பாசுரம். உண்மையான பக்தர்கள் இடுமதையெல்லாம் எம்பெருமான் தன் திருமுடியாலே ஏற்றுக்கொள்ளுகிறானென்பதே மேற்குறித்த ச்லோகத்திற்கும் பாட்டுக்கும் கருத்து. ப்ரளயத்திலழியாமே ஸகலலோகங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கின நீலமேகச்யாமலனான எம்பெருமானுடைய திருவடிகளைத் தவிர மற்றொன்றை விரும்பாத பக்தர்கள் வகுத்த சேஷிக்கு அடிமை செய்யுமிடத்தில் ப்ரேமபரவசராய்க் கொண்டு அக்ரமமாகவாதல் ஸக்ரம மாகவாதல் எப்படி செய்தாலும் திருவுள்ளமுகந்து சிரஸா வஹித்தருள்வன் அப்பெருமான். இவன் காலாலே பொகட்டவற்றை அவன் தலையாலே ஏற்குமென்று விவக்ஷிதம். ... 8

ஆசி லருளா லனைத்துலகுங் காத்தளிக்கும்
வாசமலராள் மணவாளன் —தேசுபொலி
விண்ணாட்டிற் சால விரும்புமே, வேறொன்றை
யெண்ணாதார் நெஞ்சத் திருப்பு, 9

ஆசு இல் அருளால்	குற்றமற்ற கருணையினாலே	வேறு ஒன்றை எண்ணாதார் நெஞ்சத்து இருப்பு	தன்னைத்தவிர்த்து வேறொன்றை யெண்ணாதவர்களான பரமைகாந்திகளினுள்ளத்தில் வஸிப்பதை
அனைத்து உலகும் காத்து அளிக்கும்	எல்லாவுலகங்களையும் ரக்ஷித்தருளாநின்றவனும்	விண் நாட்டில் சால விரும்பும்	திருநாட்டில் வஸிப்பதைவிட மிகவுமுத்தேச்யமாகக் கொள்வன்.
வாசம் மலராள் மணவாளன்	நறுமணம் மிக்க தாமரை மலரில் தோன்றிய பிராட்டிக்குக் கொழுநனுமான எம்பெருமான்		

* * *— பகவச் சாஸ்த்ரத்தில் * येऽनन्यमनसः शुद्धा ये दास्यैकमनोरथाः। तेषां मे हृदयं विष्णोः वैकुण्ठात्परमं पदम् — யேऽநந்யமநஸச் சுத்தா யே தாஸ்யைகமநோரதா:, தேஷாம் மே ஹ்ருதயம் விஷ்ணோர் வைகுண்டாத் பரமம் பதம் * என்று எம்பெருமான் தானே சொல்லிவைத்தான் ; அநந்யமநஸ்கர்களும் பரமபவித்திரர்களும அடிமை செய்வ தொன்றிலேயே ஊக்கமுள்ளவர்களுமான பக்தர்களின் உள்ளமானது விஷ்ணுவான வெனக்கு ஸ்ரீவைகுண்டத்திற்காட்டிலும் சிறந்த ஸ்தானமாகு மென்பது ச்லோகத்தின் கருத்து ; இதுவே கருத்துத் தான் பாசுரத்திற்கும். நிர்ஹேதுக கருணையாலே ஸமஸ்த லோகங்களையும் காத்தருளாநின்ற திருமால் அநந்ய பக்தர்களின் உள்ளத்தி லிருப்பைத் திருநாட்டில் வஸிப்பதிலுங்காட்டில் பரமபோக்யமாகக் கொள்ளுவனென்கை. [ஆசு இல் அருளால்] ஆசு என்று குற்றத்திற்குப் பெயர் ; அருளுக்குக் குற்றமாவது ஸஹேதுக மாயிருத்தல் ; அஃதில்லையெனவே நிர்ஹேதுக க்ருபை யென்றதாயிற்று. ... 9

நாளுமுலகை நலிகின்ற வாளரக்கன்
தோளுமுடியும் துணித்தவன்றன் — தாளில்
பொருந்தாதா ருள்ளத்திற் பூமடந்தை கேள்வன்
இருந்தாலு முண்மே லிருப்பு. 10

பூமடந்தை கேள்வன்	லக்ஷ்மீபதியான எம்பெருமான்,	பொருந்தாதார் உள்ளத்தில் இருந்தாலும்	பொருத்தமற்ற பாபிகளின் நெஞ்சிலே இருந்தாலும்.
உலகை நாளும் நலிகின்ற வாள் அரக்கன்	உலகங்களையெல்லாம் இடைவிடாது நலிந்து கொண்டிருந்த இராவணனுடைய		
தோளும் முடியும் துணித்தவன் தன் தாளில்	தோள்களையும் தலைகளையும் துணித்தவனை தன்னுடைய திருவருடிகளில்.	முள் மேல் இருப்பு	(அவ்விருப்பானது) முள் மேலிருப்பது போலாகும்.

* * *—ப்ரஹ்மாண்டபுராணத்தில்— * भगवच्चरणद्वंद्वे भक्तिर्येषां न विद्यते। तेषां हृदि स्थितो देवः कण्टकाग्र इव स्थितः— பகவச்சரணத்வந்த்வே பக்திர் யேஷாம் ந வித்யதே, தேஷாம் ஹ்ருதி ஸ்திதோ தேவঃ கண்டகாக்ர இவ ஸ்திதঃ * என்று சொல்லிற்று. எமபெருமான் தனது திருவடியிணையில் பக்தியில்லாதாருடைய நெஞ்சில் எழுந்தருளியிருந்தாலும் அவ்விருப்பு முள்மேலிருப்புப் போன்றதேயென்பது ச்லோகத்தின கருத்து. இதுவேதான் இப்பாசுரத்தின் கருத்தும். சிவனையுபாஸித்து அவன் பக்கலிலே வாளைப்பெற்று அந்தச் செருக்கினால் அநவரதமும் உலகை நலிந்து கொண்டிருந்த லங்கேச்வர னுடைய தோள்களையும் தலைகளையும் துணித்தவனை திருமகள்கொழுநன் தனது திருவடிகளில் ஆதரமற்றவர்களின் நெஞ்சில் பொருந்தவேமாட்டான் ; ஸர்வ வ்யாப்திஸித்திக்காக அங்கும பொருந்தினாலும் முள்மேலிருப்பாகவே காணுமிருப்பது —என்றாராயிற்று. 10

தன்பொன் னடியன்றி மற்றொன்றில் தாழ்வுசெய்யா
அன்பருகந் திட்ட தணுவெனினும்—பொன்பிறழும்
மேருவாய்க் கொள்ளும் விரையார் துழாயலங்கல்
மாரிமாக் கொண்டனிகர் மால். 11

விரை ஆர் துழாய் அலங்கல்	பரிமளம் மிக்க திருத்துழாய் மாலையை யணிந்துள்ளவனும்	மாரி மா கொண்டல் நிகர் மால்	கார் காலத் தெழுகின்ற கான மேகத்தை யொத்தவனுமான எம்பெருமான்

தன் பெரான் அடி அன்றி மற்று ஒன்றில் தாழ்வு செய்யா அன்பர்	தனது திருவடிகளைத் தவிர்த்து வேறொன்றில் கால்தாழாத பக்தர்கள்	உகந்து இட்டது அணு எனினும்	அன்போடு ஸமர்ப்பிக்குமது அணுவானாலும்
		பொன் பிறழும் மேரு ஆய் கொள்ளும்	பொன்னாக விளங்குகின்ற மேரு மலையாகவே அதனைத் திருவுள்ளம் பற்றுவன்.

* * *— பௌஷ்கரஸம்ஹிதையில் — * भक्तैरण्वप्युपानीतं प्रेम्णा भूर्येव मे भवेत्। भूर्यप्यभक्तोपहृतं न मे तोषाय कल्पते — பக்தைரண்வப்யுபாநீதம் ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத், பூர்யப்யபக்தோபஹ்ருதம் ந மே தோஷாய கல்பதே * என்று பகவான் தன்னுடைய திருவாக்கு உள்ளது [இந்த வசனம் ஸ்ரீபாகவதத்திலும் காண்கிறது.] பக்தர்கள் பக்தியுடனே அணுவளவு இட்டாலும் அது எனக்கு மிகப் பெரிதாகவே தோற்றும்; பக்தியற்றவர்கள் மிகப்பெரிதாக இட்டாலும் அதனால் நான் உகக்கமாட்டேனென்கிறான் எம்பெருமான். இப்பாசுரத்தின் கருத்து மிதுவேயாகும். மேற்குறித்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தை மாத்திரமே பாசுரமாக்கியுள்ளார்; உத்தரார்த்தத்தின் கருத்து தன்னடையே பெறலாகுமென்று. அடுத்த மேற்பாசுரமும் குறிக்கொள்ளத் தக்கது.

"விரையார் துழாயலங்கல் மாரிமாக் கொண்டல் நிகர் மால்" என்றதில் விசேஷணமும் விசேஷ்யமும் கருத்தோடு கூடியது. ஒரு திருத்துழாய்த் தளத்தினால் த்ருப்தியடையக் கூடியவன் என்று காட்டுகிறது விசேஷணம். மேகம் எப்படி கொடுக்கப் பிறந்ததோ அப்படி எம்பெருமானும் கொடுக்க விருப்ப முடையவனேயன்றிக் கொள்ள விருப்ப முடையவனல்லன் என்னுங் கருத்தைத் தெரிவிக்கின்றது விசேஷ்யம். இப்படிப்பட்ட எம்பெருமான் தன் திருவடியல்லது மற்றொன்றில் கால் தாழாத அன்பர் உகப்புடனே இடுமது அணுவளவிற்றே யானாலும் அதனை மேருவாகக் கொள்வன் என்றதாயிற்று. குசேலமுனிவனிடத்துக் கண்ணபிரான் கூறியது காண்க. ... 11

மாறு யிணைந்த மருத மிறத்தவழ்ந்த
சேறு ரரவிந்தச் சேவடியைப்—பேறாக
உள்ளாதா ரொண்ணிதியை யீந்திடினும் தானுகந்து
கொள்ளான் மலர்மடந்தை கோன். 12

மலர் மடந்தை கோன்	தாமரையாள் கேள்வனான எம்பெருமான்,	பேறு ஆக உள்ளாதார்	சிறப்பாகச் சிந்திக்கமாட்டாதவர்கள்
மாறு ஆய் இணைந்த மருதம் இற தவழ்ந்த	தன்பால் பகைமை பூண்டு சேர்ந்து நின்ற இரட்டை மருத மரங்கள் இற்று விழும்படி தவழ்ந்த	ஒள் நிதியை ஈந்திடினும்	சீரிய நிதியை ஸமர்ப்பித்தாலும்
சேறு ஆர் அரவிந்தம் சேவடியை	(தன்னுடைய) பாத பங்கஜத்தை	தான் உகந்து கொள்ளான்	(அதனைத்) தான் விரும்பி ஏற்றுக் கொள்ளமாட்டான்.

* * *— * पृथिवीं रत्नसंपूर्णां यः कृष्णाय प्रयच्छति। तस्याप्यन्यमनस्कस्य सुलभो न जनार्दनः— ப்ருதிவீம் ரத்நஸம்பூர்ணாம் யஃ க்ருஷ்ணாய ப்ரயச்சதி, தஸ்யாப்யந்யமநஸ்கஸ்ய ஸுலபோ ந ஜநார்த்தநஃ * என்கிற ச்லோகமும், கீழ்ப்பாசுரத்தில் உதாஹரித்த ச்லோகத்தின் உத்தரார்த்தமும் இப்பாசுரமாகப் பரிணமித்தன வென்க. நெஞ்சுகனிந்திடாமல் நவநிதிகளை யிட்டாலும் அவற்றை எம்பெருமான் கண்ணெடுத்துப் பாரான் என்றதாயிற்று.

மாருயிணைந்த மருத மிறத் தவழ்ந்தது க்ருஷ்ணாவதாரத்தில் நடந்த யமளார்ஜுநபங்க சரித்திரத்தில், நாரத முனிவருடைய சாபத்தினால் நளகூபரன் மணிக்ரீவனென்கிற குபேர புத்திரர்களிருவரும் திருவாய்ப்பாடியில் இரட்டை மருத மரங்களாகத் தோன்றியிருந்தன ரென்றும், வெண்ணெய் களவுகண்ட குற்றத்திற்காக உரலிலே பிணைத்துக் கட்டப்பட்டிருந்த கண்ணபிரான் அவ்வுரலையு மிழுத்துக்கொண்டு தவழ்ந்து இவ்விரட்டை மரங்களினிடையே செல்லுகையில் உரலின் உறைதலால் அம்மரங்கள் முறிந்து விழுந்து சாபோபஹதர்களாயிருந்த யக்ஷகுமாரர்களிருவரும் சாபம் தீர்ந்து பகவானைத் துதித்து விடைபெற்றுச் சென்றன ரென்றும் புராணவரலாறு உள்ளது. இங்கு "மாருயிணைந்த மருதம்" என்று இவரருளிச் செய்வது *பொய்ம்மாய மருதான வசுரரைப் பொன்றுவித் தின்று நீ வந்தாய்* (பெரியாழ்வார் திருமொழி-3. 1: 8.) என்கிற அருளிச் செயலை யடியொற்றி யென்க. திருவாய்ப்பாடியில் எழும்பூண்டெல்லாம் அசுரப்பூண்டாகையாலே அஸுராவேசமில்லாத வஸ்து எதுவுமே யில்லையென்பது மங்களாசாஸனபரர்களான ஆழ்வார்களின் கொள்கை. இப்பாட்டின் இரண்டாமடியின் முடிவில் "பேருக, வேருக" என்பன பாடபேதங்கள். 12

பண்டே யுயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே*
தொண்டா மெனத்தெளிந்த தூமனத்தார்க்கு—உண்டோ
பல்கற்றும் தம்முடம்பைப் பார்த்தபிமா னிக்கும்
உலக த்தவரோ டுறவு. 13

உயிர் அனைத்தும்	ஆத்ம வர்க்கங்களெல்லாம்	தூ மனத்தார்க்கு	பரிசுத்தமான மனமுடைய பக்தர்களுக்கு
பண்டே	அநாதிகாலமாகவே	பல கற்றும் தம் உடம்பை பார்த்து அபிமானிக்கும் உலகத்தவரோடு	பல சாஸ்த்ரங்களை யதிகரித்துங்கூட நாம் ஜாதியிற் சிறந்திருக்கிறோமென்று செருக்குற்ற ப்ராக்ருதர்களோடு
பங்கயத்தாள் நாயகற்கே தொண்டு ஆம் என தெளிந்த	திருமாலுக்கே சேஷப் பட்டதென்று தெளிவு பெற்றிருக்கின்ற	உறவு உண்டோ	பொருத்தமுண்டோ?

* * *—திருவயிந்திரபுரத்திலே வில்லிபுத்தூர்ப் பகவரென்று ஓர் உத்தமர் வாழ்ந்து வந்தார். அவர் அவ்வூரில் ஸ்வாமிகளெல்லாரும் அநுஷ்டாநம் செய்கிற துறையில் இறங்காமல் தமக்கென்று தனியேயொரு துறை வைத்துக் கொண்டு அதிலே அநுஷ்டானம் பண்ணிப் போவது வழக்கம். இப்படியிருக்க ஒருநாள் மற்றவர்கள் இவரை நோக்கி 'வாரீர்!, தேவரீர் தனியேயொரு துறையிற் செல்லுவானேன்? எங்கள் துறையிலே கூடி அநுஷ்டிக்கலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அவர் விடைகூறினார்:—" विष्णुदासा वयं यूयं ब्राह्मणा वर्णधर्मिणः । अस्माकं दासवृत्तीनां युष्माभिर्नास्ति संगतिः । नास्ति संगतिरस्माकं युष्माकं च परस्परम् । वयं तु किङ्करा विष्णोर्यूयमिन्द्रियकिङ्कराः—விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிணஃ, அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாபிர் நாஸ்தி ஸங்கதிஃ. நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகஞ் ச பரஸ்பரம், வயம் து கிங்கரா விஷ்ணோர் யூயமிந்த்ரியகிங்கராஃ—" என்று. இதனால் அவர்களோடு தாம் உறவறுத்துக்கொண்டு பேசினாரென்பது விளங்கும். * आविद्यः प्राकृतः प्रोक्तो वैद्यो वैष्णव उच्यते । आविद्येन न केनापि वैद्यः किञ्चित्समाचरेत् — ஆவித்யஃ ப்ராக்ருதஃ ப்ரோக்தோ வைத்யோ வைஷ்ணவ உச்யதே, ஆவித்யேந ந கேநாபி வைத்யஃ கிஞ்சித் ஸமாசரேத்.* என்று பகவச் சாஸ்த்ரங்களிலும் சொல்லிற்று. இவற்றின் பொருளே இப்பாட்டாக வடிவெடுத்திருக்கிறது. ஆசார்யஹ்ருதயத்தில் "ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ண தர்மிகள் தாஸவ்ருத்திகளென்று துறை வேறிடுவித்தது" என்கிற சூர்ணையும் அவ்

விடத்து வியாக்கியானமும் இங்கே அநுஸந்தேயம். திருமந்திரப்பொருளை நன்கு தெளியப்பெற்ற பரமைகாந்திகளுக்கு தேஹாத்மாபிமாநிகளோடே சேர்ந்து வாழ்வது பொருந்தாது என்றபடி. 13

பூதங்க ளைந்தும் பொருந்துடலி னூற்பிறந்த
சாதங்கள் நான்கினொடும் சங்கதமாம்—பேதங்கொண்
டென்ன பயன்பெறுவீ ரெவ்வுயிர்க்கு மிந்திரைகோன்
தன்னடியே காணுஞ் சரண். 14

பூதங்கள் ஐந்தும் பொருந்து உடலினால் பிறந்த	பஞ்சபூதங்களின் சேர்க்கையான தேஹமடியாக வுண்டான	என்ன பயன் பெறுவீர்	என்ன பலனடையப் போகிறீர்கள்?
சாதங்கள் நான்கினொடும்	நான்கு ஜாதிகளோடும்	எவ் உயிர்க்கும்	எல்லாவாத்மாக்களுக்கும்.
சங்கதம் ஆம் பேதம் கொண்டு	சேர்கின்ற பேதத்தைக் கொண்டு [ஜாதிப்ரயுக்தமான பேதத்தை புத்திபண்ணி]	இந்திரைகோன் தன் அடியே சரண் காணும்	திருமாலின் திருவடிகளே புகல் காண்மின்.

* * *—देहात्मज्ञानकार्येण वर्णभेदेन किं फलम् । गतिस्सर्वात्मनां श्रीमन्नारायणपदद्वयम्— தேஹாத்மஜ்ஞாநகார்யேண வர்ணபேதேந கிம் பலம், கதிஸ் ஸர்வாத்மநாம் ஸ்ரீமந் நாராயண பதத்வயம்* என்று பரமைகாந்தி தருமத்தில் சொல்லப்பட்டவர்த்தம் பேசுகிறதாயிற்று இப்பாட்டு. நிஷ்க்ருஷ்டாத்ம ஸ்வரூபத்தில் ஜாதிபேதம் எதுவுமில்லை. சேஷத்வத்தையிட்டே நிரூபிக்கப்படுபவனான ஆத்மா ப்ராஹ்மண க்ஷத்ரியாதி ஜாதிகளிலே ஒன்றையுமுடையனல்லன். பஞ்ச பூதாத்மகமான சரீரத்தின் அமைப்பில்தான் ஜாதிபேதங்கள் காணப்படுவன. ஆகவே, நச்வரமான சரீரத்தைப்பற்றி நிற்கும் ஜாதிபேதங்களிற் கண்ணைச் செலுத்தி இகழ்வதனால் என்னாகும்? ஸகலாத்ம வர்க்கங்களுக்கும் பொதுவான பகவச்சேஷத்வம் எந்த ஆத்மாவில் பொலிகின்றதோ, அந்த ஆத்மாவில் உகந்திருப்பதே உற்றதாம் என்றதாயிற்று. 14

குடியுங் குலமுமெல்லாம் கோகனகை கேள்வன்
அடியார்க் கவனடியே யாகும்—படியின்மேல்
நீர்கெழுவு மாறுகளின் பேரும் நிறமுமெல்லாம்
ஆர்கலியைச் சேர்ந்திடமாய்ந் தற்று. 15

கோகனகை கேள்வன் அடியார்க்கு	லக்ஷ்மீநாதனை எம்பெருமானுடைய பக்தர்களுக்கு	நீர் கெழுவும் ஆறுகளின்	நீர்நிரம்பிய மஹா நதிகளினுடைய
குடியும் குலமும் எல்லாம் அவன் அடியே ஆகும்	க்ராம குலாதிகளெல்லாம் அப்பெருமானுடைய திருவடி ஸம்பந்தத்தை யிட்டேயாம்;	பேரும் நிறமும் எல்லாம்	பேர்களும் நிறங்களுமாகிய எல்லாமும்
படியின் மேல்	(எதுபோலவெனில்;) பூமியின் மீது (காணப்படுகின்ற)	ஆர்கலியை சேர்ந்திட	கடலைச் சென்று சேர்ந்த பிறகு
		மாய்ந்தற்று	மாய்ந்து போவது போல.

* * *—एकान्ती व्यपदेष्टव्यो नैव ग्रामकुलादिभिः । विष्णुना व्यपदेष्टव्यस्तस्य सर्वं स एव हि ॥ नद्या नश्यति नामादि प्रविष्टाया यथाऽर्णवम् । सर्वात्मना प्रपन्नस्य विष्णुमेकान्तिनस्तथा—ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி. நத்யா நச்யதி நாமாதி ப்ரவிஷ்டாயா யதார்ணவம், ஸர்வாத்மநா ப்ரபந்நஸ்ய விஷ்ணுமேகாந்திநஸ் ததா* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றியது இப்பாசுரம். ஸ்ரீவசநபூஷணத்தில் (77) "அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் அடியானென்றிறே. க்ராமகுலாதிகளால் வரும் பேர் அநர்த்த ஹேது. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:* என்கிற சூர்ணைகளை இங்கே யநுஸந்திப்பது. பாகவத

ரல்லாதார்க்கே குலகோத்ராதிகள் நிரூபகமாகிறது ; பாகவதரானார்க்கு எல்லாம் அவன் திருவடியேயாகும். ஆறுகள் கடலில் சேர்வதற்கு முன்பு கங்கை, யமுனை, கோதாவரி இத்யாதி நாமபேதங்களையும், வெண்மை கருமை முதலான நிறவேற்றுமைகளையும் தாங்கி நிற்கின்றன. கடலிற்புகுந்த பின்பு முன்பிருந்த நாமபேதங்களையும் வர்ண பேதங்களையும் அறவே விட்டிட்டு, கடலின் நிறமேகொண்டு கடலின் பெயரினாலேயே வழங்கப்படுவதை இங்கு உவமையாக எடுத்துக் காட்டினது மிகப்பொருந்தும். ஆர்கலி யென்று கடலுக்குப் பெயர். 15

தேவர் மனிசர் திரியக்குத் தாவரமாம்
யாவையு மல்ல னிலகுமுயிர்—பூவின்மிசை
ஆரணங்கின் கேள்வ னமல னறிவேவடிவாம்
நாரணன் தாட் கேயடிமை நான். 16

இலகும் உயிர்	ஒளிவடிவனான ஜீவன்	கேள்வன்	கணவனாய்
தேவர் மனிசர் திரியக்கு தாவரம் ஆம் யாவையும் அல்லன்	தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களொன்று மல்லன் ;	அமலன்	அகில ஹேயப்ரத்யநீகனாய்
		அறிவே வடிவு ஆம்	ஜ்ஞான ஸ்வரூபியான
பூவின் மிசை ஆர்	தாமரைமலரில் பொருந்தி வாழ்கின்ற	நாரணன்	நாராயணனுடைய
		தாட்கே	திருவடிகளுக்கே
அணங்கின்	தெய்வப் பெண்ணாகிய பெரிய பிராட்டியார்க்கு	அடிமை நான்	அடிமைப்பட்டவன் அஹமர்த்த பூதனான ஆத்மா.

* * * — नाहं देवो न मर्त्यो वा न तिर्यक् स्थावरोऽपि वा । ज्ञानानन्दमयस्त्वात्मा शेषो हि परमात्मनः ॥ * (நாஹம் தேவோ ந மர்த்யோ வா ந திர்யக் ஸ்தாவரோபி வா, ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மநஃ.) என்றும், * नाहं विप्रो न च नरपतिर्नापि वैश्यो न शूद्रो नो वा वर्णी न च गृहपति र्नो वनस्थो यतिर्वा । किन्तु श्रीमद्भुवनभवनस्थित्यपायैकहेतोर्लक्ष्मी-भर्तुर्नरहरितनोः दासदासस्य दासः * (நாஹம் விப்ரோ ந ச நரபதிர் நாபி வைச்யோ ந சூத்ரோ நோ வா வர்ணீ ந ச க்ருஹபதிர் நோ வநஸ்தோ யதிர் வா, கிந்து ஸ்ரீமத்புவநபவந ஸ்தித்யபாயைகஹேதோர் லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர் தாஸதாஸஸ்ய தாஸஃ.) என்றுமுள்ள ப்ரமாணவசனங்களையடியொற்றி அவதரித்தது இப்பாசுரம். இவ்வாத்மாவானவன் தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களில் ஒருவனுமல்லன் ; ப்ராஹ்மண க்ஷத்ரியாதிகளிலும் ஒருவனுமல்லன் ; ப்ரஹ்மசாரி க்ருஹஸ்தாதிகளிலும் ஒருவனுமல்லன். பின்னையோவென்னில், உலகங்களைப் படைத்தளித்தழிக்கும் பெருமானுடைய தாஸாநுதாஸசரமாவதிதாஸத்வமே வடிவெடுத்தவன்—என்றதாயிற்று ... 16

ஒன்றிடுக விண்ணவர்கோன் செல்வ மொழிந்திடுக
என்று மிறவா திருந்திடுக — இன்றே
இறக்க களிப்புங் கவர்வு மிவற்றால்
பிறக்குமோ தற்றெளிந்த பின். 17

விண்ணவர் கோன் செல்வம்	தேவேந்திரனுடைய ஐச்வர்யமானது	இன்றே இறக்க	(அல்லது) இப்போதே மரணமாயினுமாகுக ;
ஒன்றிடுக	வந்து சேர்ந்தாலும் சேரட்டும் ;	தன் தெளிந்த பின்	ஸ்வஸ்வரூபத் தெளிவு உண்டான பின்பு
ஒழிந்திடுக	(அல்லது) உள்ள செல்வமும் ஒழிந்தாலும் ஒழியட்டும் ;	இவற்றால்	மேற்சொன்ன நன்மை தீமைகளினால்
என்றும் இறவாது இருந்திடுக	ஒருநாளும் மரணமில்லாத வாழ்வு வாய்த்தாலும் வாய்க்கட்டும் ;	களிப்பும் கவர்வும் பிறக்குமோ	கொந்தளிப்பும் இலேசமுமுண்டாகுமோ ?

* * *—आगच्छतु सुरेन्द्रत्वं नित्यत्वं वाऽद्य वा मृतिः । तोषं वाऽत्र विषादं वा नैव गच्छन्ति पण्डिताः ;—ஆகச்சது ஸுரேந்த்ரத்வம் நித்யத்வம் வா அத்ய வா ம்ருதிః, தோஷம் வாத்ர விஷாதம் வா நைவ கச்சந்தி பண்டிதாஃ* என்கிற பிரமாணவசனத்தின் மொழிபெயர்ப்பாகத் தோன்றியதிப்பாசுரம். தேவேந்த்ரபதவி வரினும் வருக; உள்ள செல்வமு மொழிந்தாலுமொழிக. பிறப்புமிறப்புமில்லாத பேரின்பம்வரினும் வருக. இன்பம் பெற்றேமென்று இன்புறுவதும், துன்பம் வந்ததேயென்று தளர்வதும் ஸ்வஸ்வரூபஜ்ஞானிகளுக்கு இல்லை. 17

ஈன மிலாவன்ப ரென்றாலு மெய்திலா
மானிடரை யெல்லா வணத்தாலும்—தானறிய
விட்டார்க் கெளியன் விடாதார்க் கறவரியன்
மட்டார் துழாயலங்கல் மால். 18

மட்டு ஆர் துழாய் அலங்கல் மால்	தேன்னிறைந்த திருத்துழாய் மாலையை யணிந்த திருமால்	எல்லா வணத்தாலும்	எல்லாப்படிகளாலும்
ஈனம் இலா அன்பர் என்றாலும்	(தன் திருவடிகளில்) குறைதவில்லாத அன்புடையவர்களென்றாலும்	தான் அறிய விட்டார்க்கு எளியன்	அந்தர்யாமியான தானறிய விட்டவர்களாயிருந்தால் தான் அவர்கட்கு எளியனாவன்;
எய்திலா மானிடரை	பகவத்பக்தரல்லாத மனிதர்களை	விடாதார்க்கு அற அரியன்	அப்படி விடாதவர்களுக்கு மிகவும் அருமைப்படுவன்.

* * *— भक्तोऽपि वासुदेवस्य शार्ङ्गिणः परमात्मनः । लोकेषणादिनिर्मुक्तो मुक्तो भवति नान्यथा ॥ —பக்தோபி வாஸுதேவஸ்ய சார்ங்கிணஃ பரமாத்மநஃ, லோகேஷணாதிநிர்முக்தோ முக்தோ பவதி நாந்யதா.* என்கிற ப்ரமாணவசனத்தின் அநுவாதமாயிருக்கிறதிப்பாட்டு. ஸர்வேச்வரனானவன், தனனளவில் எத்தனை பக்திமான்களாக இருந்தாலும் ப்ராக்ருதர்களோடு ஸம்ஸர்க்கத்தை விலக்கிக்கொள்ளாதவர்களுக்கு எளியனாகமாட்டான், மிகவும் அரியனேயாவன் என்கிறது. மதுவொழுகும் திருத்துழாய் மாலையை யணிந்துள்ள எம்பெருமான் தன் திருவடிகளில் பழுதிலாவன்புடையரேயாயினும் *ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார் மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே* என்றும் *செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன்* என்றும் சொல்லுகிறபடியே, மநுஷ்யஜாதியிற் பிறந்து வைத்தே பசுப்ராயராய் வர்த்திக்கும் ப்ராக்ருதர்களோடு உறவை யொழித்துக் கொண்டால்தான் அவர்களுக்கு எளியனாவன் என்றதாயிற்று. மூன்றாமடியில் ‘அறிவரியன்’ என்கிற பாடம் பிழை; ‘அறவரியன்’ என்பதே பாடம். அற—மிகவும். 18

நல்ல புதல்வர் மனையாள் நவையில்கிளை
இல்ல நிலமா டிவையனைத்தும்—அல்லலெனத்
தோற்றியெரி தீயிற் சுடுமே லவர்க்கெளிதாம்
ஏற்றரும்வை குந்தத் திருப்பு. 19

நல்ல புதல்வர்	நற்குணசாலிகளான புத்திரர்கள்	அல்லல் என தோற்றி	துன்பத்திற்கு அடியானவை யென்று தோன்றி
மனையாள்	மனைவி	எரி தீயின் சுடும் எல்	எரிகிற அக்கியிற் காட்டிலும் தாபகரமாகில்
நவை இல் கிளை	குற்றமற்ற உறவினர்	அவர்க்கு	அன்னவர்களுக்கே
இல்லம்	மனை	ஏற்றரும் வைகுந்தத்து இருப்பு எளிது ஆம்	பெறுதற்கரிய பரமபதத்திலே சென்று சேருகை எளிதாகும்.
நிலம்	பூமி		
மாடு இவை அனைத்தும்	பசுக்கள் ஆகிய இவையெல்லாம்		

* * * —क्षेत्राणि मित्राणि धनानि नाथ पुत्राश्च दाराः पशवो गृहाणि । त्वत्पादपद्मप्रवणात्मवृत्तेः भवन्ति सर्वे प्रतिकूलरूपाः :—க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத! புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத்பாதபத்மப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:* என்கிற ச்லோகம் காஞ்சீஹஸ்திகிரி மாஹாத்மியத்தில் பேரருளாளப்பெருமாளை நோக்கி நான்முகன் விஜ்ஞாபித்தது. எம்பெருமானுடைய திருவடிகளில் உண்மையாக ஊன்றின சித்தவ்ருத்தியையுடைய உத்தமாதிகாரிக்குப் புத்ர தார க்ருஹ க்ஷேத்ரங்களெல்லாம் நெருப்பாகத் தோற்றுமென்றது இந்த ச்லோகத்தில். இவ்வர்த்தத்தையே இப்பாசுரமும் பேசுகிறது. ஸ்ரீவசநபூஷணத்தில் "விஹிதபோகம் நிஷித்தபோகம் போலே லோகவிருத்தமுமன்று, நரகஹேதுவுமன்று; ஆயிருக்கச்செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் சிஷ்டகர்ஹிதமுமாய் ப்ராப்யப்ரதிபந்தகமுமாயிருக்கையாலே த்யாஜ்யம். போக்யதாபுத்தி குலைந்து தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும ஸ்வரூபம் குலையும்" என்றருளிச் செய்தவுடனே "*க்ஷேத்ராணி மித்ராணி யென்கிற ச்லோகத்திலவஸ்தை பிறக்கவேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு" என்றருளிச்செய்தார் பிள்ளைலோகாசார்யர். அவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "பேரருளாளரான பெருமாளைக் குறித்து ப்ரஹ்மா விஜ்ஞாபித்த (*க்ஷேத்ராணி மித்ராணி யென்கிற) ச்லோகத்தில் சொல்லுகிற க்ஷேத்ரமித்ரதநாதிகளான ஸமஸ்தவஸ்துக்களும் அக்நிகல்பமாய்த் தோற்றும்படியான அவஸ்தை பிறக்கவேணும் ஸ்வரூபப்ரச்யுதி பிறவாமைக்கென்கை. இந்த ச்லோகார்த்தத்தை *நல்லபுதலைவர்* இத்யாதியாலே அருளாளப்பெருமாளெம்பெருமானருமருளிச் செய்தாரிறே" என்றருளிச் செய்தது இங்கே யநுஸந்தேயம். இப்படி புத்ரகளத்ராதிகள் அக்நிகல்பமாய்த் தோற்ற வேணுமாகில் *நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே* என்றும், *வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே* என்றும் ஆழ்வாருமாண்டாளும் இவற்றோடு கூடி வாழ்வதைப் பலனாகச் சொல்லாநின்றார்களேயென்னில்; அவ்வோ அதிகாரிகளுக்குத் தக்கபடியிறே பலச்ருதிதானிருப்பது. எல்லாவற்றுக்கும் எல்லாருமதிகாரிகளன்றே. 19

விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமித மல்லால்
திருப்பொலிந்த மார்பனருள் செய்யான்—நெருப்பை
விடாதே குழவி விழவருந்தி னாலும்
தடாதே யொழியுமோ தாய். 20

விருப்பு உறினும்	ஆசைப்பட்டாலும் கூட	அருள்செய்யான்	கொடுக்கமாட்டான்;
தொண்டர்க்கு	தன்னிடத்தில் பக்தி செய்யுமவர்களுக்கு	குழவி	குழந்தையானது
வேண்டும் இதம் அல்லால்	வேண்டியதான ஹிதமொழிய மற்றொன்றை	நெருப்பை விடாதே	நெருப்பின் ஒளியைக் கண்டு அதை விடமாட்டாமல்
திரு பொலிந்த மார்வன	பிராட்டிவிளங்கும் திருமார்வையுடைய எம்பெருமான்	விழ வருந்தினாலும்	அதிலே விழ முயன்றாலும்
		தாய் தடாது ஒழியுமோ	தாயானவள் அதைத் தகையாமல் அனுமதி செய்வளோ?

* * * —याचितोऽपि सदा भक्तैर्नाहितं कारयेद्धरिः । बालमग्नौ पतन्तं तु माता किं न निवारयेत् ॥ —யாசிதோபி ஸதா பக்தைர் நாஹிதம் காரயேத் ஹரி:, பாலமக்நௌ பதந்தம் து மாதா கிம் ந நிவாரயேத்* என்கிற ப்ரமாண வசநத்திற்கு ப்ரதிச்சந்தமாயிருக்கிறதிப்பாட்டு. எம்பெருமான பக்கலிலே பக்தர்கள் தங்களுக்கு ஹிதமல்லாததைத் தரும்படி வேண்டினாலும் ஹிதபரனான அவன் ஹிதமானவற்றைத் தருவனேயொழிய அஹிதமானதை யொருபோதும் தாரான்; இதுதான் எதுபோலவென்னில்; விளைவதறியாத சிறுகுழவி அக்நி தஹிக்கவல்லதென்னுமிடமறியாதே அதிலே விழ முயன்றாலும் அது ப்ரஜைக்கு நாசகமென்று அறியும் மாதாவானவள் அதில் விழாதபடி தகையுமத்தனையொழிய விழுகைக்கு இசையுமோ? இசையமாட்டாளே; அதுபோலவென்க. 20

ஆரப் பெருந்துயரே செய்திடினு மன்பர்கள்பால்
வேரிச் சரோருகைகோன் மெய்ந்நலமாம்—தேரில்
பொறுத்தற் கரிதேனினும் மைந்தனுடற் புண்ணை
அறுத்தற் கிசைதாதை யற்று. 21

வேரி சரோருகை கோன்	நறுமணம் மிக்க தாமரையிற் பிறந்த பிராட்டியின் வல்லபனான ஸர்வேச்வரன்	பொறுத்தற்கு அரிது எனினும்	ஸஹிக்கமுடியாததே யாயினும்
அன்பர்கள் பால்	பக்தர்கள் விஷயத்தில்	மைந்தன் உடல் புண்ணை	தன்மகனுடம்பிலுண்டான விரணத்தை
ஆரபெருதுயரே செய்திடினும்	மிகப்பெரிய துக்கங்களையே விளைத்தாலும்		
தேரின்	ஆராயுமளவில்	அறுத்தற்கு இசை தாதை யற்று	அறுப்பதற்கு இசைகின்ற தந்தையின் செயல் போன்றதாமிது.
மெய் நலம் ஆம்	(அது) உண்மையான அன்பின் காரியமேயாகும் ;		

* * *—கீழ்ப்பாட்டில், பக்தர்கள் அஹிதத்தை வேண்டினாலும் தாரான் எம்பெருமான்—என்று சொல்லிற்று. பக்தர்களும் துன்பங்களை யநுபவிக்கக் காணுகின்றோமே ; அது எம்பெருமான் தருமதுதானே ; எங்ஙனே தருகின்றான் ? என்று சங்கையுண்டாக, அதற்குப் பரிஹாரமாகவருளிச் செய்வது இப்பாசுரம். * हरिर्दुःखानि भक्तेभ्यो हितबुद्ध्या करोति वै । शस्त्रक्षाराग्निकर्माणि स्वपुत्राय यथा पिता ॥—ஹரிர் துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி வை, சஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா.* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றியது இப்பாசுரம். மிகப்பெரிய துக்கங்களை எம்பெருமான் பக்தர்களுக்கு உண்டு பண்ணுவதாகக் கண்டாலும், அது ஹிதபுத்தியாலே செய்கிறவித்தனை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் வைராக்யத்தைப் பிறப்பிக்கைக்காகச் செய்கிறதாகையாலே ஹிதபுத்தியால் செய்கிறதென்னத் தட்டில்லை. ஸ்ரீவசநபூஷணத்தில் (243.) "தனக்கொரு க்லேசமுண்டானால் கர்மபலமென்றுதல் க்ருபாபலமென்றுதல் பிறக்கும் ப்ரீதியும்" என்றவிடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் ;—"முமுக்ஷுவாய் ப்ரபந்நனானாலும் ப்ராரப்த சரீரமிருக்குமளவும் தாபத்ரயங்களில் ஏதேனுமொரு க்லேசமுண்டானால் 'இது அநுபவவிநாச்யமான ப்ராரப்த கர்மபலமன்றோ, ஏவம்பூதகர்மங்களுள்ளவை கழியுமளவன்றோ இச்சரீரத்தோடே எம்பெருமான் நம்மை வைக்கிறது ; ப்ராப்திப்ரதிபந்தகங்களிலே ஒன்றாகிலும் கழியப்பெற்றோமே' என்கிற அநுஸந்தானத்தாலேயாதல், துர்வாஸனையாலே இவ்வுடம்பை விட இசையாமல் ப்ராக்ருதபதார்த்தங்களை யுபஜீவித்துக்கொண்டு ஸம்ஸாரத்துக்குள்ளே பொருந்தியிருக்கிற நம்மை துக்க தர்சநத்தைப்பண்ணுவித்து இதில் பற்றறுத்துக்கொண்டு போக நினைக்கிற ஸர்வேச்வரனுடைய க்ருபையின் பலமன்றோ இது என்கிற அநுஸந்தானத்தாலேயாதல் உண்டாகக்கடவ ப்ரீதியும். பூர்வாகம் உத்தராகம் ப்ராரப்தகண்டம் எல்லாம் கழிக்கிறவனுக்கு வர்த்தமாந சரீரத்தில் அநுபாவ்ய கர்மமித்தனையும் கழிக்கை அரிதன்றிறே கர்மபலமான துக்க பரம்பரைகளை அநுபவியாநின்றாலும் இத்தேஹத்தை விடவென்றால் இசையாதவிவனை நிர்துஃக்கனாக்கி வைப்போமாகில் இச்சரீரத்தோடே நெடுங்காலமிருக்க இச்சித்தல் இன்னுமொரு சரீரந்தன்னை இச்சித்தல் செய்யுமாகையாலே இச்சரீரத்துக்குள்ள கர்மம் அநுபவித்தே இறுக்கக்கடவன் என்றிறே வைக்கிறது ; ஆனபின்பு மற்றுண்டான கர்மங்களெல்லாம் கழித்தது ஸம்ஸாரத்தில் நின்றும் இவனைக் கடுகத் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளுகையிலுண்டான க்ருபையாலே யானாப்போலே இத்தனையும் கழியாமல் வைத்ததும் க்ருபையாலேயிறே. அநாதிகாலம் பரிக்ரஹித்த சரீரந்தோறும் அநுபவித்த துக்கம் பகவந்நிக்ரஹபலம், இது அநுக்ரஹபலம்." என்பதாம்.

துஃக்கப்ரதாநம் ஹிதபுத்தி ப்ரயுக்தமாகுமோவென்கிற சங்கையை உதாஹரண முகேந பரிஹரிக்கிறது [பொறுத்தற்கு அரிதெனினும் மைந்தனுடற்புண்ணை அறுத்தற் கிசைதாதையற்று] என்கிற பின்னடி. இவனுக்கிது பொறுக்கப்போகாதென்று தோற்றியிருந்தாலும் புத்ரனுடைய சரீரத்தில் க்ரந்தியை ஹிதபுத்தியாலே அறுக்கைக்கு அநுமதிபண்ணும் பிதாவைப்போலே யென்கை. *வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாதகாதல் நோயாளன்போல்* என்கிற பெருமாள் திருமொழிப் பாசுரமும் இங்கே அநுஸந்தேயம். 21

உடைமைநா னென்று முடையா னுயிரை
வட மதுரை வந்துதித்தா னென்றும்—திடமாக
அறிந்தவன்றன் தாளி லடைந்தவர்க்கு முண்டோ
பிறந்துபடு நீடுயரம் பின். 22

நான் உடைமை என்றும்	ஜீவாத்மவர்க்கம் ஸர்வேச்வரனுடைய ஸொத்தென்றும்	திடம் ஆக அறிந்தவன் தன் தாளில் அடைந்தவர்க்கும்	திண்ணமாகத் தெரிந்துகொண்ட ஆசார்யனுடைய திருவடிகளை யாச்ரயித்தவர்களுக்கும்
உயிரை உடையான் வடமதுரை வந்து உதித்தான் என்றும்	அவ்வாத்ம வர்க்கங்களுக்கு ஸ்வாமி வடமதுரையில் வந்து பிறந்த ஸர்வேச்வரனென்றும்	பின் பிறந்து படும் நீள் துயரம் உண்டோ	பிறகு ஸம்ஸரித்து அநுபவிக்கக்கூடிய அனந்தக்லேசங்கள் உண்டோ? (இல்லை.)

* * *—ப்ராரப்த கருமங்களை அநுபவித்தே தீரவேண்டுமாகில் இந்த ஜன்மத்தளவன்றிக்கே ஜன்மாந்தரத்திலும்போய் அநுபவிக்கவேண்டி வருமோவென்று தளரவேண்டா; ஸம்பந்தஜ்ஞான பூர்வகமாக அவன் திருவடிகளிலே சரணம் புகுந்தவர்களுக்குப் பின்பொரு ஜன்மமெடுத்து அநுபவிக்க வேண்டியதில்லை யென்கிறது இப்பாட்டில். * आर्तानामाशुफलदा सकृदेव कृता ह्यसौ । दृप्तानामपि जन्तूनां देहान्तरनिवारणी ॥—ஆர்த்தாநாம் ஆசுபலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ, த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தரநிவாரணீ.* என்று ப்ரபத்திஸ்வபாவஞ் சொல்லுகிற ப்ரமாணவசனத்திலிருந்து இவ்வர்த்தம் கொள்ளப்பட்டதாயிற்று. * स्वत्वमात्मनि संजातं स्वामित्वं ब्रह्मणि स्थितम् । उभयोरेष संबन्धो न परोऽभिमतो मम ॥—ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம், உபயோரேஷ ஸம்பந்தோ ந பரோபிமதோ மம* என்கிறபடியே மிகச்சிறந்ததான ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தத்தை யுணருகைதான் ப்ரபத்தி—என்னுமிடத்தை இரண்டரையடிகளால் தெரிவித்தபடி. 22

ஊழி வினைக்குறும்ப ரோட்டருவ ரென்றஞ்சி
ஏழை மனமே யினித்தளரேல்—ஆழிவண்ணன்
தன்னடிக்கீழ் வீழ்ந்து சரணென் றிரந்தொருகால்
சொன்னதற்பி னுண்டோ துயர். 23

ஏழைமனமே	அறிவிலியானநெஞ்சே !,		
ஊழி வினை குறும்பர்	தொல்லைவினைகளாகிய குறும்பர்கள்	சரண் என்று இரந்து	நீயே சரணமாகக்கடவை என்று ப்ரார்த்தித்து
ஓட்டருவர் என்று அஞ்சி	ஓடிவந்து கலிவர்களென்று பயப்பட்டு		
இனி தளரேல்	இனி நீ சோகிக்கவேண்டா ;	ஒருகால் சொன்னதன் பின்	ஒருகால் த்வயோச்சாரணம் செய்த பிறகும்
ஆழி வண்ணன் தன் அடிகீழ் வீழ்ந்து	கடல் வண்ணனான ஸர்வேச்வரனுடைய திருவடிகளிலே விழுந்து	துயர் உண்டோ	கிலேசிக்க வேண்டுவதுண்டோ ?

* * *—சரணாகதியின் பிரபாவத்தைப் பேசுகிறது இப்பாட்டு. ஜன்மபரம்பரைகள் தோறும் நாம் செய்திருக்கிற தீவினைகளை நினைக்குங்கால் நமக்கு உய்ய விரகேதென்று தளரவேண்டியிருக்கும். அந்தத் தளர்ச்சி வேண்டா; த்வயத்தை யநுஸந்தித்து எம்பெருமான் திருவடிகளிலே விழுந்தார்க்கு இந்த விசாரத்திற்கு ப்ரஸக்தியில்லையன்றோ. * मा भीर्मन्दमनो विचिन्त्य बहुधा यामीश्चिरं यातना नामी नः प्रभवन्ति पापरिपवः स्वामी ननु श्रीधरः। आलस्यं व्यपनीय भक्तिसुलभं ध्यायस्व नारायणं लोकस्य व्यसनापनोदनकरो दासस्य किं न क्षमः॥ —மா பீர் மந்தமனோ! விசிந்த்ய பஹுதா யாமீச் சிரம் யாதநாஃ நாமீ நஃ ப்ரபவந்தி பாபரிபவஃ ஸ்வாமீ நநு ஸ்ரீதரஃ; ஆலஸ்யம் வ்யபநீய பக்திஸுலபம் த்யாயஸ்வ நாராயணம் லோகஸ்ய வ்யஸநாபநோதநகரோ தாஸஸ்ய கிம் ந க்ஷமஃ.* என்கிற முகுந்தமாலாச்லோகத்தை இந்தப் பாசுரத்திற்கு ஸம்வாத ப்ரமாணமாக அநுஸந்திப்பது. 23

வண்டுபடி துளப மார்பனிடைச் செய்தபிழை
உண்டு பலவென் றுளந்தளரேல்—தொண்டர்செயும்
பல்லா யிரம்பிழைகள் பார்த்திருந்துங் காணுங்கண்
இல்லா தவன் காணிறை. 24

உளம்	ஓ மனமே!,	இறை	ஸர்வேச்வரன்
வண்டு படி துளபம் மார்பன் இடை	வண்டுகள் மொய்த்த திருத்துழாய் மாலையைத் திருமார்பிலணிந்துள்ள திருமாலிடத்து	தொண்டர் செயும்	பக்தர்கள் செய்த
செய்த பிழை	நாம் இயற்றிய அபராதங்கள்	பல் ஆயிரம் பிழைகள் பார்த்து இருக்கும்	பலவாயிரம் பிழைகளை (ஸர்வஜ்ஞனானமையாலே) பார்த்துக் கொண்டிருந்தாலும்
பல உண்டு என்று தளரேல்	பலபலவுளவே; (அவற்றின் பலன் என்னாகுமோ!) என்று கவலை கொள்ளாதே; (ஏனெனில்;)	காணும் கண் இல்லாதவன் காண்	அவற்றைக் காண்கின்ற கண் இல்லாதவனன்றோ.

* * *—பூர்வாகமென்றும் உத்தராகமென்றும் பாபங்கள் இருவகைப்படும். ஸம்பந்தஜ்ஞானம் பிறப்பதற்கு முன்னே செய்த பாவங்கள் பூர்வாகமெனப்படும்; பிற்பட்டவை உத்தராகமெனப்படும். பூர்வாகங்களைப்பற்றிக் கவலைவேண்டாவென்றது கீழ்ப்பாட்டில்; உத்தராகங்களைப்பற்றிக் கவலை வேண்டாவென்கிறது இப்பாட்டில். ஸஹஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்றொரு திருநாமமுள்ளது எம்பெருமானுக்கு. அறியாதவனென்று அதற்குப் பொருள். ஸர்வஜ்ஞனை அறியாதவனென்று சொல்லத் தகுதியில்லை. ஸர்வஜ்ஞனானாலும் அடியார்களின் குற்றங்களைக் காணாதவனானமையாலே அவிஜ்ஞாதா என்கிறது. * अविज्ञाता हि भक्तानामागस्सु कमलेक्षणः। सदा जगत्समस्तं च पश्यन्नपि न पश्यति॥—அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷணஃ, ஸதா ஜகத் ஸமஸ்தஞ்ச பச்யந் நபி ந பச்யதி.* என்று சொல்லிற்று. இதனை ஆழ்வான் வரதராஜஸ்தவத்திலே * उपालम्भोऽयं भोः श्रयति बत सार्वज्ञ्यमपि ते यतो दोषं भक्तेष्विह वरद! नैवाकलयसि * என்றருளிச் செய்தார். இப்பாசுரமும் இவ்வர்த்தமே கொண்டது. எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களைக் காண்பதில்லை யென்றால் பக்தாபராதங்களை போக்யமாகக் கொள்ளுகிறானென்று சொல்லுகை பொருந்தாதே யென்று சங்கிக்கவேண்டா; தோஷங்களைக் காணாமையென்பது ஒருகுணம்; கண்டாலும் போக்யமாகக் கொள்ளுகையென்பது மற்றொரு குணம். அக்குணம் அடுத்த பாசுரத்தில் பேசப்படுகிறது. ச்ருதப்ரகாசிகையில் “संबन्धविशेषान्वितेषु प्रीतिः—स्नेहः; यस्य विपाका अस्थानभयशङ्कित्वम् दोषानवभासः दोषेऽपि गुणत्वबुद्धिरित्यादयः” என்றருளிச் செய்திருப்பதை நோக்கவேணும். ப்ரேமத்தின்

பரிபாகதசை பலவகைப்பட்டிருக்கும். தோஷாதர்சித்வமென்பது ஒருதசை; தோஷங்களையும் குணமாகக் கொள்ளுகையென்பது அதனில் மேற்பட்ட மற்றொருதசை. க்ஷமிப்பதென்பதும் ஒருதசை. இவை பரஸ்பரவ்யாஹதங்களல்ல. தோஷாதர்சித்வத்திற்கு மேற்பட்டதசை கிடையாதென்று சிலர் மயங்கி நிற்பதுண்டு. அவர்களைத் தெளிவிக்கவே ச்ருதப்ரகாசிகாஸூக்தி அவதரித்ததென்க. 24

அற்ற முரைக்கி லடைந்தவர்பா லம்புயைகோன்
குற்ற முணர்ந்திகழுங் கொள்கையனோ?—எற்றேதன்
கன்றி னுடம்பின் வழுவன்றோ காதலிப்பது
அன்றதனை யீன்றுகந்த வா. 25

அற்றம் உரைக்கில்	சாஸ்திரங்களில் அறுதியிடப்பட்ட பரமார்த்தத்தைச் சொல்லப்புகுமளவில்; (இவ்வளவே காணீர்.)	இகழும் கொள்கையனோ எற்றே	(குற்றங்களுக்காக) இகழ்ந்துவிடுமியல்வினனோ? (அல்லன்;) அஹஹ;
அம்புயைகோன்	லக்ஷ்மீபதியான எம்பெருமான்	அன்று (கன்று) அதனை ஈன்று உகந்த ஆ	அப்போதுதான் கன்றை ப்ரஸவித்து உகப்போடிருக்கின்ற பசுவானது
அடைந்தவர் பால்	பக்தர்கள் விஷயத்தில்	தன் கன்றின் உடம்பின் வழு அன்றோ காதலிப்பது	(அந்தத்) தனது கன்றினுடலிலுள்ள அழுக்கையன்றோ விரும்பியிருப்பது.
குற்றம் உணர்ந்து	குற்றங்களைக் கண்டாலும்		

* * *—எம்பெருமான் அடியார்களின் குற்றங்களைக் காணகில்லானென்றது கீழ்ப்பாட்டில்; காணநேர்ந்தால் அவற்றை நற்றமாகக் கொள்ளுவனென்கிறது இப்பாட்டில். இவை பரஸ்பர விருத்தமல்ல. அன்பிலே பர்வபேதங்களுண்டாகையாலே. இதைப்பற்றிச் சொல்ல வேண்டுவதெல்லாம் வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகையிலே விரியச் சொன்னோம், அங்கே கண்டு கொள்வது. * प्रपन्नान् माधवस्सर्वान् दोषेण परिगृह्यते । अद्य जातं यथा वत्सं दोषेण सह वत्सला ॥—ப்ரபந்நாந் மாதவஸ் ஸர்வாந் தோஷேண பரிக்ருஹ்யதே, அத்ய ஜாதம் யதா வத்ஸம் தோஷேண ஸஹ வத்ஸலா.* என்ற ப்ரமாணவசனத்தை யடியொற்றி யருளிச் செய்த திப்பாட்டு. இந்த வசனத்தில் 'பரிக்ருஹ்யதே' என்றது பரிக்ருஹ்ணாதி யென்றதாகக் கொள்ளக்கடவது ஆர்ஷப்ரயோகமிருந்தபடி.

அற்றமுரைக்கிலென்றது—அறுதியிட்டுச் சொல்லுமளவிலென்றபடி. சாஸ்த்ரார்த்தத்தை நிஷ்கர்ஷிக்குமளவில் என்கை. [அம்புயைகோன் குற்றமுணர்ந்து இகழுங் கொள்கையனோ?] திருமால் அடியார்களின் குற்றங்களை யுணரமாட்டானென்னுமளவேயன்று; உணர்ந்தால்தான் இகழுங்கொள்கையனோ? பின்னையோவென்னில், நற்றமாகக் கொள்ளுங்கொள்கையன்காண் என்றபடி. இது ஸம்பாவிதமோவென்ன, ஸம்பாவிதமே யென்னுமிடத்தைப் பின்னடிகளாலே மூதலிக்கிறது. தத்வத்ரயத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (151.) "இப்படி யீச்வரன் கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே" இத்யாதி சூர்ணையில் "பார்யாபுத்ரர்கள் குற்றங்களைக் காணக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால் நினையாதே, குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமினியுடைய அழுக்குகக்கும் காமுகனைப்போலே அவர்கள் தோஷங்களை போக்யமாகக்கொண்டு........அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக்கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலுமேற்குமாபோலே பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும்." என்று பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்துள்ள திவ்யஸூக்திகளை நிச்சலும் மனனம் செய்யப்பெறில் ஆவிலஹ்ருதயர்களுக்கு மனம் தெளியப்பெறும். 25

தப்பில் குருவருளால் தாமரையாள் நாயகன்றன்
ஒப்பி லடிகள்நமக் குள்ளத்து—வைப்பென்று
தேறி யிருப்பார்கள் தேசுபொலி வைகுந்தத்
தேறியிருப் பார்பணிகட் கேய்ந்து. 26

தப்பு இல் குரு அருளால்	ஞானமனுட்டான மிவற்றில் குறையற்ற ஆசாரியனுடைய திருவருளால்	தேறி இருப்பார்கள்	தெளிந்திருக்குமவர்கள்
தாமரையாள் நாயகன் தன்	திருமாலினுடைய	தேசு பொலி வைகுந்தத்து ஏறி	தேஜஸ்ஸு மிக்கிருக்கிற பரமபதத்திலே சென்று
ஒப்பு இல் அடிகள்	ஒப்பற்ற திருவடிகள்		
நமக்கு உள்ளத்து வைப்பு என்று	நமக்கு நெஞ்சிலுறையும் நிதியென்று	பணிகட்கு ஏய்ந்திருப்பார்	கைங்கர்யங்களுக்கு அதிகாரிகளாயிருப்பார்.

* * *—ஆசாரியன் திருவருளாலே நமக்கு எம்பெருமான் திருவடிகள் மஹாநிதியாகக் கிடைத்தனவென்று தேறியிருக்குமவர்கள் ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்யும் பாக்யசாலிகளாகத் தட்டில்லையென்கிற திப்பாட்டில். *आचार्यस्य प्रसादेन मम सर्वमभीप्सितम् । प्राप्नुयामिति विश्वासो यस्यास्ति स सुखी भवेत्॥ —ஆசார்யஸ்ய ப்ரஸாதேந மம ஸர்வமபீப்ஸிதம், ப்ராப்நுயாமிதி விச்வாஸோ யஸ்யாஸ்தி ஸ ஸுகீ பவேத்.* என்கிற ப்ரமாணவசனத்தையடியொற்றியது இப்பாட்டு. ... 26

நெறியறியா தாரு மறிந்தவர்பால் சென்று
செறிதல் செயாத் தீமனத்தர் தாமும்—இறையுரையைத்
தேறா தவரும் திருமடந்தை கோனுலகத்
தேறா ரிடரழுந்து வார். 27

நெறி அறியாதாரும்	(பிறவிக் கடல் கடத்தற்கு) உபாய மறியாதவர்களும்	இறை உரையை தேறாதவரும்	ஸர்வேச்வரன் பணித்த சரமச்லோகத்தில் தெளிவில்லாதவர்களும்
அறிந்தவர் பால் சென்று செறிதல்செயா தீமனத்தர் தாமும்	அவ்வுபாய மறிந்தவர்களிடத்துச் சென்று சேர்தலில்லாத தீயமனத்தவர்களும்	திருமடந்தை கோன் உலகத்து ஏறார்	திருமாலின் உலகமாகிய திருநாட்டில் சென்று சேரப் பெறாதவர்களாய்
		இடர் அழுந்துவார்	ஸம்ஸார துக்கங்களிலேயே ஆழ்ந்து கிடப்பர்கள்.

* * *—ஒருநாளும் உஜ்ஜீவிக்கப் பெறாதவர்கள் மூவர்; அவர்களாகிறார்—த்வயத்தின் உபதேசம் பெறாதவர்கள், அதையுபதேசிக்கவல்ல ஆசாரியனை அடிபணியாதவர்கள், சரமச்லோகத்திலே விச்வாஸ மற்றவர்கள்—ஆக மூவர் என்கிற திப்பாட்டில். நெறியென்று ஸம்ஸாரத்தைத் தப்புவிக்குமுபாயத்தைச் சொல்லுகிறது. இச்சொல்லால் த்வயமென்னும் மந்த்ரரத்னத்தை இங்கு விவக்ஷிக்கலாம். 'அறிந்தவர்பால்சென்று செறிதல் செயாத் தீமனத்தர்' என்று ஆசார்ய விமுகர்களைச் சொல்லுகிறது. ஆக இவர்கள் திருமடந்தை கோனுலகத்து ஏறார், இடரழுந்துவார். * अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति । नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥—அஜ்ஞச்ச அச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி, நாயம் லோகோஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மந:* என்கிற பகவத்கீதாவசனம் இப்பாட்டுக்கு ஸம்வாதமாகும். 27

சரணு கதிமற்ருேர் சாதனத்தைப் பற்றில்
அரணுகா தஞ்சனைதன் சேயை—முரணழியக்
கட்டியது வேருேர் கயிறு கொண் டார்ப்பதன்முன்
விட்ட படைபோல் விடும். 28

சரணுகதி	(மஹாவிச்வாசரூபமான) ப்ரபத்தியானது,	முரண் அழிய கட்டியது படை	அவருடைய வலிமை குன்றும்படி கட்டினதான ப்ரஹ்மாஸ்த்ரமானது
மற்று ஓர் சாதனத்தை பற்றில்	உபாயாந்தரங்களிலொன்றைப் பற்றுமளவில்	வேறு ஓர் கயிறு கொண்டு	வேருேர் சணற்கயிற்றைக் கொண்டுவந்து
அரண் ஆகாது	தான் ரக்ஷகமாகாது; (நழுவிப் போம்;)	ஆர்ப்பதன் முன்	கட்டமுயலும்போது
அஞ்சனை தன் சேயை	ஆஞ்சநேயரை	விட்ட போல் விடும்	நழுவினது போல் நழுவும்.

* * *—சரணுகதிக்கு மற்ருேருபாயத்தின் ஸங்கத்தை ஸஹியாமையாகிற ஒரு பெருமையுண்டு; அதுதன்னைச் சொல்லுகிற திப்பாட்டில். "சணல்கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே நழுவும்" என்று சொல்லிப் போருவதுண்டிறே. அது சொல்லுகிறது. * प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते । साहि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा । सकृदुच्चारिता येन तस्य संसारनाशिनी । राक्षसानामविस्रम्भादाञ्जनेयस्य बन्धने । यथा विगलिता सद्यस्त्वमोघाऽप्यस्त्रबन्धना । तथा पुंसामविस्रम्भात् प्रपत्तिः प्रच्युता भवेत् । तस्माद्विस्रम्भयुक्तानां मुक्तिं दास्यति साऽचिरात् ॥—ப்ரபத்தேः க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே. ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம ஸர்வகாம பலப்ரதா. ஸக்ருதுச்சாரிதா யேந தஸ்ய ஸம்ஸாரநாசிநீ. ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநே. யதா விகலிதா ஸத்யஸ் த்வமோகாபி அஸ்த்ரபந்தநா. ததா புமஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்திः ப்ரச்யுதா பவேத். தஸ்மாத் விஸ்ரம்பயுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸா அசிராத்.* என்கிற பகவச்சாஸ்த்ரவசன ப்ரதிச்சந்தமாக அவதரித்ததாயிற்று இப்பாட்டு. 28

மந்திரமு மீந்த குருவுமம் மந்திரத்தால்
சிந்தனைசெய் கின்ற திருமாலும்—நந்தலிலா
தென்று மருள் புரிவர் யாவ ரவரிடரை
வென்று கடிதடைவர் வீடு. 29

மந்திரமும்	திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரமும்	நந்தல் இலாது என்றும் அருள் புரிவார் யாவர் அவர்	இடைவீடின்றி எப்போதும் அருள்புரியும்படி யிருப்பார் யாவரோ, அன்னவர்கள்
ஈந்த குருவும்	அம்மந்திரத்தையுபதேசித்த ஆசாரியனும்	இடரை வென்று	ஸாம்ஸாரிக துக்கங்களைத் தொலைத்து
அ மந்திரத்தால் சிந்தனை செய்கின்ற திருமாலும்	அத்திருமந்திரத்தினுல் சிந்திக்கப்படுகின்ற திருமாலும்	கடிது வீடு அடைவர்	விரைவில் மோக்ஷமடைவார்கள்.

* * *—मन्त्रे तद्देवतायां च तथा मन्त्रप्रदे गुरौ । त्रिषु भक्तिस्सदा कार्या सा हि प्रथमसाधनम् ॥—மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதமஸாதநம்.* என்கிற ப்ரமாணவசனத்தில்—மந்த்ரத்தினிடத்திலும் மந்த்ரப்ரதிபாத்யமான தேவதையினிடத்திலும் மந்த்ரத்தை உபகரித்தருளின ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமமுண்டாகப் பெற்றவர்களுக்கே பரமபுருஷார்த்த ஸித்தியுண்டென்று சொல்லிற்று. அவ்வர்த்தமேயாயிற்று இப்பாசுரத்திலும் பொலிகின்றது.

முமுக்ஷுப்படியில் "மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ர ப்ரதனான ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கனக்கவுண்டானால் கார்யகரமாவது" என்றருளிச்செய்த சூர்ணையும் இங்கே அநுஸந்தேயம். இப்பாட்டின் மூன்ருமடியில் "அருள்புரிவர்" என்றது அருள்புரியப் பெற்றவர் என்றபடி; 'மழை பெய்த இடம்' என்ருற்போலுமிது. 29

மாடு மனையுங் கிளையு மறைமுனிவர்
தேடு முயர்வீடும் செந்நெறியும்—பீடுடைய
எட்டெழுத்தும் தந்தவனே யென்றிரா தாருறவை.
விட்டிடுகை கண்டீர் விதி. 30

மாடும் மனையும் கிளையும்	பசுக்களும் க்ருஹமும் பந்துக்களும்	பீடு உடைய எட்டெழுத்தும் தந்தவனே	பெருமைமிக்க திருமந்திரத்தை யுபதேசித்த ஆசார்யனே யாவன்
மறை முனிவர் தேடும் உயர் வீடும்	வைதிகர்களான முனிவர்கள் விரும்பித்தேடுகின்ற உயர்ந்த மோக்ஷமும்	என்று இராதார்	என்று உறுதிகொள்ளாதாருடைய
செம் நெறியும்	அந்த மோக்ஷத்தையடைவிக்கும் செவ்விய மார்க்கமும் ஆகிய இவையெல்லாம்	உறவை விட்டிடுகைவிதிகண்டீர்	உறவை விட்டொழிப்பதுதான் நூற்கொள்கையாகும்.

* * *—ऐहिकामुष्मिकं सर्वं गुरुरष्टाक्षरप्रदः। इत्येवं ये न मन्यन्ते त्यक्तव्यास्ते मनीषिभिः॥
—ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் குருரஷ்டாக்ஷரப்ரதஃ, இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ் தே மநீஷிபிஃ.* என்கிற ப்ரமாணவசனத்திற்கு மொழிபெயர்ப்பாகுமிப் பாசுரம். தமக்கு அபேக்ஷிதங்களான ஐஹிகாமுஷ்மிக ஸகலவஸ்துக்களும் திருமந்த்ரத்தை உபதேசித்தருளின ஆசார்யனேயென்று அத்யவஸாயங் கொள்ளாதவர்களோடு உறவை விட்டிடவேண்டியதேயென்கிறது. மாடும் என்றது—செல்வமும் என்றபடி; "மாடு பொன் பக்கம் செல்வம்" என்பது நிகண்டு. க்ஷீரம் முதலியவற்றைத் தருகின்ற பசுக்களுமென்னவுமாம். செந்நெறியும் என்றது—மோக்ஷஸாதநங்களாமவையும் என்றபடி. அர்ச்சிராதிமார்க்கமென்னவுமாம். எட்டெழுத்துக்குப் பீடுடைமையாவது—"இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்" (முமுக்ஷுப்படி) இத்யாதி சூர்ணைகளினால் தெரிவிக்கப்பட்ட பெருமையுடைமை. "உறவை விட்டிடுகை கண்டீர்விதி" என்றது—அன்னவர்கள் ஹேயர்கள் என்பதைக் காட்டி நிற்கும். 30

வேத மொருநான்கி னுட்பொதிந்த மெய்ப்பொருளும்
கோதில் மனுமுதல்நூல் கூறுவதும்—தீதில்
சரணு கதிதந்த தன்னிறைவன் தானே ஸ்ரீ
அரணாகு மென்னு மது. 31

ஒரு நான்கு வேதம் உள் பொதிந்த மெய் பொருள்	நான்கு வேதங்களினுள்ளும் பொதிந்த பரமார்த்தமாயும்	தீது இல் சரணுகதி தந்த தன் இறைவன் தானே அரண் ஆகும் என்னும் அது	தீதற்ற சரணுகதி ப்ரதிபாதகமான த்வயமந்த்ரத்தைத் தனக்கு உபகரித்த ஆசார்யன் திருவடிகளே தஞ்சமென்னும் விஷயமாம்.
கோது இல் மனு முதல் நூல் கூறுவதும்	கோதற்ற மநுஸ்ம்ருதி முதலான நூல்கள் தெரிவிக்கும் பொருளாயும் (இருப்பது எதுவென்றால்;)		

* * *—வேதங்களெல்லாவற்றினுள்ளும், அவற்றுக்கு உபப்ரும்ஹணங்களான ஸகல சாஸ்த்ரங்களினுள்ளும் பொலியும் பொருள் ஒன்றே; அதாவது ஆசாரியனே

பரதைவமென்பது, என்கிற திப்பாட்டு. * गुरुरेव परं ब्रह्म गुरुरेव परा गतिः । गुरुरेव परा विद्या गुरुरेव परं धनम् ॥ गुरुरेव परः कामो गुरुरेव परायणम् । यस्मात्तदुपदेष्टाऽसौ तस्माद्गुरुतरो गुरुः । अर्चनीयश्च वन्द्यश्च कीर्तनीयश्च सर्वदा । ध्यायेज्जपेन्नमेद्भक्त्या भजेदभ्यर्चयेन्मुदा । उपायोपेयभावेन तमेव शरणं व्रजेत् । इति सर्वेषु वेदेषु सर्वशास्त्रेषु सम्मतम् । एवं द्वयोपदेष्टारं भावयेद्बुद्धिमान् धिया ॥—குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதிஃ, குருரேவ பரா வித்யா குருரேவ பரம் தநம். குருரேவ பரஃ காமோ குருரேவ பராயணம். யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குருஃ. அர்ச்சநீயச் ச வந்த்யச் ச கீர்த்தநீயச் ச ஸர்வதா, த்யாயேஜ் ஜபேத் நமேத் பக்த்யா பஜேதப்யர்ச்சயேந்முதா. உபாயோபேயபாவேந தமேவ சரணம் வ்ரஜேத். இதி ஸர்வேஷு வேதேஷு ஸர்வசாஸ்த்ரேஷு ஸம்மதம். ஏவம் த்வயோபதேஷ்டாரம் பாவயேத் புத்திமாந் தியா.* என்று பகவச்சாஸ்த்ரத்திலே விரிவாகச் சொல்லிற்று

சரணாகதிதந்த தன்னிறைவன் என்றது த்வயத்தை உபதேசம் செய்தருளின ஆசார்யன் என்றபடி. த்வயமென்கிற மந்த்ரரத்நம் சரணாகதியைச் சொல்லுமதாகையாலே அதற்கு சரணாகதியென்றே பெயராயிற்று. சரணாகதிக்குத் தீதின்மையாவது—ஸ்வரூபாநுரூபமாயிருக்கை. 31

மானிடவ ரென்றுங் குருவை மலர்மகள்கோன்
தானுகந்த கோல முலோக மென்றும்—ஈனமதா
வெண்ணுகின்ற நீச ரிருவருமே யெக்காலும்
நண்ணிடுவர் கீழா நரகு. 32

குருவை மானிடவன் என்றும்	ஆசார்யனை மநுஷ்யனென்றும்	ஈனம் அது ஆ எண்ணுகின்ற	ஹீனமாக நினைக்கின்ற
மலர் மகள் கோன் தான் உகந்த கோலம் உலோகம் என்றும்	திருமால்தான் உகந்து பரிக்ரஹித்த திவ்யமங்கள விக்ரஹத்தை லோஹமென்றும்	நீசர் இருவருமே	இவ்விருவகைப்பட்ட நீசர்களே
		எக்காலும் கீழ் ஆம் நரகு நண்ணிடுவர்	எக்காலும் அதோ கதியிற் சேர்ந்திடுவர்கள்.

* * *— साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम् । मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना ॥—ஸாக்ஷாந் நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா * என்றும், * பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து* என்றும் சொல்லுகிறபடியே நம்மைப் பிறவிக்கடலில் நின்று எடுக்கைக்காக எம்பெருமான்தானே மநுஷ்யரூபங்கொண்டு வந்திருக்கிறானென்று ப்ரதிபத்தி பண்ணாதே மேலெழுந்த ஆகாரத்தையே பார்த்து ஆசார்யனை மநுஷ்யனென்றே நினைப்பவனும், *உமருகந்துகந்த வுருவம் நின்னுருவமாகி* என்றும், *தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவந்தானே* என்றும் சொல்லுகிறபடியே அடியார்களுகந்த கோலத்தை எம்பெருமான் தானுமுகந்து பரிக்ரஹிக்கிற அர்ச்சாரூபத்தை அப்ராக்ருத விக்ரஹமாக ப்ரதிபத்தி பண்ணாதே லோஹங்களிலே இதுவுமொரு லோஹமன்றோவென்று நினைப்பவனுமான இவ்விருவருமே நரகத்தில் நீடூழிகாலம் விழுந்து துவளுமவர்களென்கிற திப்பாட்டு. * विष्णोरर्चावतारेषु लोहभावं करोति यः । यो गुरौ मानुषं भावमुभौ नरकपातिनौ ॥—விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி யஃ, யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகபாதிநௌ* என்கிற ப்ரமாணவசனத்திலுள்ள பொருளாயிற்று இது. *अर्चावतारोपादानवैष्णवोत्पत्तिचिन्तनम् । मातृयोनिपरीक्षायास्तुल्यमाहुर्मनीषिणः ॥—அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ருயோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிணஃ* என்றதுங் காண்க. 32

எட்ட விருந்த குருவை யிறை யன்றென்று
விட்டோர் பரனை விருப் புறுதல்—பொட்டெனத்தன்
கண் செம் பளித்திருந்து கைத்துருத்தி நீர் தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பா னற்று 33

எட்ட இருந்த குருவை	ஸமீபத்திலுள்ள ஆசாரியனை	தன் கண் செம் பளித்திருந்து	தன் கண்களை மூடிக் கொண்டிருந்து
இறை அன்று என்று விட்டு	ஸ்வாமியல்லனென்று தவிர்த்து	கை துருத்தி நீர் தூவி	கைப்பட்ட துருத்தியிலுள்ள தண்ணீரைக் கீழே கொட்டிவிட்டு
ஓர் பரனை விருப்புறுதல்	வேறு பரமபுருஷனை ப்ராபிக்க விரும்புவதானது	அம்புதத்தை பார்த்திருப்பானற்று	ஆகாயத்தில் மேகத்தை எதிர்பார்த்திருப்பவன் செயல் போன்றதாகும்.
பொட்டென	சடக்கென		

* * *—ஸ்ரீவசநபூஷணத்தில் (447.) "ஆசார்யாபிமாநமே உத்தாரகம்" என்றதற்குமேல்—"கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவனல்லன். விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தையுபேக்ஷித்து ஜீமூத ஜலத்தையும் ஸாகரஸலிலத்தையும் வாபீகூபபயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக்கடவனல்லன்" என்றருளிச் செய்த சூர்ணைகள் இங்கே அநுஸந்தேயம். அவ்விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிவை:—"பிபாஸை விஞ்சினபோது சடக்கெனப் பானம் பண்ணலாம்படி பாத்ரகதமாய்க்கொண்டு தன்கையிலிருக்கிற ஜலத்தை ஸுலபதையே ஹேதுவாக அநாதரித்துத் தரையிலே உகுத்து, ஆகாசஸ்தமாய்க்கொண்டு எட்டாதபடியாயும், பூமிஸ்தமாயிருக்க தூரஸ்தமாயும, ஆஸந்நமாயிருக்கச்செய்தே பெருகுங்காலமொழிய வற்றின காலமின்றிக்கேயும், எப்போதுமுண்டானாலும் அவ்வளவுஞ் சென்று உபஜீவிக்க வேண்டியும், இருந்தவிடந்தன்னிலேயுண்டாயும் கநித்ராதிகள் (खनित्रादि) கொண்டு கல்லிப் பெற வேண்டியுமிருக்கும் ஜீமூதாதிகளின் ஜலத்தை யாசைப்படுமவனைப்போலே ரக்ஷகாபேக்ஷை பிறந்த தசையில் அப்போதே தனக்கு உதவும்படி கைபுகுந்திருக்கிற ஆசார்யவிஷயத்தை ஸௌலப்யமேபற்றாசாக வுபேக்ஷித்து, பரமாகாசவர்த்தியாய் துஷ்ப்ராபமாயிருக்கிற பரத்வத்தையும், பூமியிலேயாயும் க்ஷீராப்தியளவுஞ் செல்லவல்லவர்களுக்கன்றி யுதவாத வ்யூஹத்தையும், ஆஸந்நமாக வந்தும் தாத்காலிகர்க்கொழிய பாச்சாத்யர்க்கு உதவாத விபவத்தையும் நித்யஸந்நிதியுண்டாயும் ஸம்பாஷணாதிகளால் இவனோடு கைகலந்திராத அர்ச்சாவதாரத்தையும், இருந்த விடந்தன்னிலே உண்டாயிருந்ததாகிலும் யமநியமாதிக்ரமேண யத்நித்து தர்சிக்கவேண்டும் அந்தர்யாமித்வத்தையும் ஆசைப்படக்கடவனல்லனென்கை. * चक्षुर्गम्यं गुरुं त्यक्त्वा शास्त्रगम्यं तु यः स्मरेत् । हस्तस्थमुदकं त्यक्त्वा घनस्थं सोऽभिवाञ्छति ॥—சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வா சாஸ்த்ரகம்யம் து யஃ ஸ்மரேத், ஹஸ்தஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்தம் ஸோபிவாஞ்சதி.* என்றும், *எட்டவிருந்த குருவை யிறையன்றென்று விட்டு* என்று தொடங்கி *அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று* என்றும் சொல்லக்கடவதிறே." என்று.

இவற்றால் இப்பாட்டும் வியாக்கியானிக்கப்பட்டதாயிற்று. 33

பற்று குருவைப் பரனன் றேன விகழ்ந்து
மற்றோர் பரனை வழிபடுதல்—எற்றேதன்
கைப்பொருள்விட் டாரேனும் காசினியில் தாம்புதைத்த
அப்பொருள்தே டித்திரிவா னற்று. 34

பற்று குருவை — தன்னைப்பற்றின (அல்லது, தன்னாலே பற்றப்பட்ட) ஆசாரியனை
பரன் அன்று என இகழ்ந்து — ரக்ஷகனல்லனென்று திரஸ்கரித்து
மற்று ஓர் பரனை வழிபடுதல் — வேறொரு பரமபுருஷனை அநுவர்த்திப்பதானது,
தன் கை பொருள் விட்டு — தன் கைப்பட்ட பொருளை விட்டு

ஆரேனும் தாம் காகினியில் புதைத்த அப் பொருள் — வேறு யாரேனும் பூமிக்குள் புதைத்து வைத்த நிதியை
தேடி திரிவானற்று — தேடித்திரியுமவனுடைய செயல் போன்றது;
எற்றே — என்னே அவிவேகம்!

* * *—கீழ்ப்பாட்டிலருளிச்செய்த அர்த்தத்தையே ப்ரகாராந்தரத்தாலுமருளிச் செய்கிற திப்பாட்டு. * सुलभं स्वगुरुं त्यक्त्वा दुर्लभं य उपासते । लब्धं त्यक्त्वा धनं मूढो गुप्तमन्वेषते क्षितौ॥—ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்தமந்வேஷதே க்ஷிதௌ* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றி யவதரித்ததாயிற்று இப்பாட்டு. அதிஸுலபனாய்த் தனக்குக் கைபுகுந்திருக்குமாசார்யனை அவரத்வபுத்தியாலே உபேக்ஷித்து, அதிதுர்லபனாய்ப் பெருமுயற்சிகள் செய்து காண வேண்டும்படி யிருக்குமீச்வரனை அநுவர்த்திப்பதானது—வேண்டினபோது விநியோகங் கொள்ளலாம்படி கைப்பட்டிருக்கும் கிழிச்சீரையை விட்டு, பூமிக்குள்ளே புதைத்து வைத்திருக்கும் பொருளைத் தேடித்திரிவதொக்கும். 34

என்று மனைத்துயிர்க்கு மீரஞ்செய் நாரணனும்
அன்றும் தன்னாரியன்பா லன்பொழியில்—நின்ற
புனல்பிரிந்த பங்கயத்தைப் பொங்குசுடர் வெய்யோன்
அனலுமிழ்ந்து தானுலர்த்தி யற்று. 35

அனைத்து உயிர்க்கும் — ஸகலாத்மாக்களுக்கும்
என்றும் ஈரம் செய் நாரணனும் — எந்நாளும் அருள் புரிகின்ற நாராயணனுங்கூட,
தன் ஆரியன் பால் அன்பு ஒழியில் அன்றும் — (சிஷ்யன்) ஸ்வாசார்யனளவிலே அன்பு தவிர்ந்தவாறே நிக்ரஹம் செய்திடுவன்;

(இஃது எங்ஙனே யென்னில்;)
நின்ற புனல் பிரிந்த பங்கயத்தை — தனக்குத் தாரகமாய் நிற்கின்ற தண்ணீரை விட்டுப் பிரிந்த தாமரையை
பொங்கு சுடர் வெய்யோன் தான் — தேஜஸ்வியான ஸூர்யன் தானே
அனல் உமிழ்ந்து உலர்த்தியற்று — வெய்யிலைப்பரப்பி உலர்த்தி விடுமா போலேயாம்.

* * *—नारायणोऽपि विकृतिं याति गुरोः प्रच्युतस्य दुर्बुद्धेः । कमलं जलादपेतं शोषयति रविर्न तोषयति ॥—நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்ப்புத்தே:, கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர் ந தோஷயதி.* என்கிற பிரமாணவசனத்தை யடியொற்றிப்பிறந்த திப்பாட்டு. ஆசார்யஸம்பந்தம கிடந்தாலும் ஈச்வரனேயன்றோ ஸ்வரூபவிகாஸகன்; ஆசார்யஸம்பந்தம் குலைந்தாலும் ஆத்மகுணங்களையுடையவனுக்கு ஈச்வரன் ஸ்வரூபவிகாஸத்தைப் பண்ணானோவென்னில்; பண்ணானென்பது மாத்திரமன்று; ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் ஸ்வரூபத்தை வாடவும் பண்ணுவன். ஜலத்திலே பிறந்து ஜலத்தையே தாரகமாகவுடைய தாமரையை ஸூர்யன் விகாஸப்படுத்துகிறவன்தான். எப்போது? அது ஜலத்தை விட்டுப் பிரியாதிருக்குமளவும். அது தானே ஜலத்தை விட்டுப் பிரிந்ததாகில் ஸூர்யன் அதை விகாஸப்படுத்துவதில்லை யென்பது மாத்திரமன்றே; சோஷிக்கச் செய்வதையும் காணாநின்றோமே. அது போலவாயிற்று இதுவும். ஸ்ரீவசநபூஷணத்தில்—(439) "தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன்தானே நீரைப்பிரிந்தால் அத்தையுலர்த்துமாபோலே, ஸ்வரூபவிகா

ஸத்தைப் பண்ணுமீச்வரன்தானே ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும்" என்ற சூர்ணை இங்கே அநுஸந்தேயம். 35

வில்லார் மணிகோழிக்கும் வேங்கடப்போற் குன்றுமுதல்
செல்லார் பொழில்சூழ் திருப்பதிகள்—எல்லாம்
மருளா மிருளோட மத்தகத்துத் தன்தாள்
அருளாலே வைத்த வவர். 36

வில் ஆர் மணி கொழிக்கும்	ஒளி மிகுந்த ரத்னங்கள் திரளுமிடமான	மருள் ஆம் இருள் ஓட	அஜ்ஞாநாந்தகாரம் கெடும்படியாக
வேங்கடம் பொன் குன்று முதல்	திருவேங்கட மலை முதலாகவுள்ள,	மத்தகத்து	தலையின்மீது
செல் ஆர் பொழில் சூழ் திருப்பதிகள் எல்லாம்	கார் மேகம் படிந்த சோலைகள் சூழ்ந்த திவ்ய தேசங்களெல்லாம்,	தன் தாள் அருளாலே வைத்த அவர்	தன் திருவடிகளை வைத்தருளின ஆசார்யரேயாவர்.

* * *—येनैव गुरुणा यस्य न्यासविद्या प्रदीयते। तस्य वैकुण्ठदुग्धाब्धिद्वारकास्सर्व एव सः॥—யேநைவ குருணா யஸ்ய ந்யாஸவித்யா ப்ரதீயதே, தஸ்ய வைகுண்ட துக்தாப்தித்வாரகாஸ் ஸர்வ ஏவ ஸ:* என்கிற ப்ரமாணவசநத்தை மொழிபெயர்த்ததாமிப்பாட்டு. ஸச்சிஷ்யனுய் ஸதாசார்யப்ரேம முடையனுயிருக்குமவனுக்கு ஸகல திவ்யதேசங்களும் தன்னுசார்யனேயாவன் என்கிறது. மேலெடுத்த ச்லோகத்தில் வைகுண்டத்தையும் க்ஷீராப்தியையும் த்வாரகையையும் சொல்லிற்று; பாட்டில் திருமலை முதலான திவ்ய தேசங்களைச் சொல்லிற்று. இவ்வளவே வாசி. செல்—மேகம். மேகங்கள் வந்து படியும்படி ஓங்கியிருக்கும் சோலைகள் சூழ்ந்த திருப்பதிகளெல்லா மென்றபடி. ... 36

பொருளு முயிரு முடம்பும் புகலும்
தெருளுங் குணமுஞ் செயலும்—அருள் புரிந்த
தன்னு ரியன்பொருட்டாச் சங்கற்பஞ் செய்பவர்நெஞ்
சென்நாளு மாலுக் கிடம். 37

பொருளும் உயிரும் உடம்பும் புகலும்	செல்வமும் பிராணனும் உடலும் வீடும்	அருள் புரிந்த தன் ஆரியன் பொருட்டு ஆ	தன்பால் கிருபை பண்ணின ஆசாரியனுக்காக வென்று
		சங்கற்பம் செய்பவர் நெஞ்சு	ஸங்கல்பிக்குமவர்களான ஸச்சிஷ்யர்களின் நெஞ்சானது
தெருளும் குணமும் செயலும்	ஞானமும் சமதமாதி குணங்களும் செய்கைகளும் ஆகிய இவையெல்லாமும்	மாலுக்கு எந்நாளும் இடம்	திருமாலுக்கு நித்யவாஸஸ்தானமாகும்.

* * *—शरीरं वसु विज्ञानं वासः कर्म गुणानसून्। गुर्वर्थं धारयेद्यस्तु स शिष्यो नेतरः स्मृतः॥ गुर्वर्थं स्वात्मनः पुंसः कृतज्ञस्य महात्मनः। सुप्रसन्नस्सदा विष्णुः हृदि तस्य विराजते॥—சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந், குர்வர்த்தம் தாரயேத் யஸ் து ஸ சிஷ்யோ நேதரஸ் ஸ்ம்ருத:. குர்வர்த்தம் ஸ்வாத்மந: பும்ஸ: க்ருதஜ்ஞஸ்ய மஹாத்மந:, ஸுப்ரஸந்நஸ் ஸதா விஷ்ணுர் ஹ்ருதி தஸ்ய விராஜதே.* என்னும் ப்ரமாணவசனங்களைப் பின்பற்றி யருளிச்செய்த தாமிப்பாட்டு. அர்த்தம் பிராணன் சரீரம் முதலான எல்லாவற்றையும் ஆசார்யசேஷமாக அநுஸந்தித்திருக்குமவர்கள் நெஞ்சானது ஸர்வேச்வரனுக்கு ஸர்வகாலமும் வாஸஸ்தானமாயிருக்கு மென்றதாயிற்று. ஆசார்யபக்தர்களே எம்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காவரென்பது கருத்து. ... 37

தேனர் கமலத் திருமா மகள்கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால்—மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாளிணையை
உன்னுவதே சால வுறும். 38

தேன் ஆர் கமலம் திரு மா மகள் கொழுநன் தானே	தேன்மிக்க தாமரைப்பூவில் தோன்றிய பிராட்டிக்கு வல்லபனான எம்பெருமான் தானே	இ நிலத்தே தோன்றுதலால்	இந்நிலவுலகத்தில் அவதரிப்பதனாலே
தன் அருளால்	தனது க்ருபையினாலே	யார்க்கும்	எல்லா வுயிர்க்கும்
குரு ஆகி	(மநுஷ்யரூபியான) ஆசார்யனாய்	அவன் தாள் இணையை	அவ்வாசார்யனுடைய உபய பாதங்களை
மானிடர்க்கு ஆய்	அஸ்மதாதிகளுக்காக	உன்னுவதே சால உறும்	அநுஸந்திப்பதே மிகவும் உற்றதாகும்.

* * *—ஜயாக்க்யஸம்ஹிதையிலே சாண்டில்யன் சொன்னவசனம் *साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम्। मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना ॥ तस्माद्भक्तिर्गुरौ कार्या संसारभयभीरुणा ॥—ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா. தஸ்மாத் பக்திர் குரௌ கார்யா ஸம்ஸார பயபீருணா.* என்பது. அதுவே இப்பாசுரத்திற்கு ஸம்வாதப்ரமாணமாம். கீழே பல பாசுரங்களினால் விரிவாக அருளிச்செய்யப்பட்ட ஆசார்யப்ரபாவம் தகுமென்கைக்காக ஆசார்யன் ஸாக்ஷாத் நாராயணனுடைய அவதாரவிசேஷமேயென்று சாஸ்த்ரம் முறையிட்டிருப்பதை எடுத்துரைத்தாராயிற்று. *பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து* என்று பெரியாழ்வாருமருளிச் செய்தார். 38

அலகை முலைசுவைத்தாற் கன்பரடிக் கன்பர்
திலத மெனத்திரிவார் தம்மை—உலகர்பழி
தூற்றில் துதியாகும் தூற்று தவரிவரைப்
போற்றிலது புன்மையே யாம். 39

அலகை முலை சுவைத்தாற்கு	பேய்ச்சி முலையுண்ட பெருமானுக்கு	துதி ஆகும்	(அதுவே அவர்கட்குத்) தோத்திரமாய்த் தலைக்கட்டும்;
அன்பர் அடிக்கு அன்பர்	அன்பு பூண்டிருப்பாருடைய திருவடிகளிலே அன்பு பூண்டிருக்குமவர்களாய்க்கொண்டு	அவர் தூற்றாது	அந்த லௌகிகர்கள் அப்படி தூஷிக்காமல்
திலதம் என திரிவார் தம்மை	உலகுக்குத் திலகபூதர்களென்னும்படியாக இந்நிலத்திலுலாவும் மஹாத்மாக்களை	இவரை போற்றில்	இந்த மஹாத்மாக்களைப் பூஷித்தால்
உலகர் பழி தூற்றில்	லௌகிகர்களான பாமரர்கள் தூஷித்தால்	அது புன்மையே ஆம்	அந்த பூஷணம் தூஷணமேயாம்.

* * *—न्यासविद्यैकनिष्ठानां वैष्णवानां महात्मनाम् । प्राकृताभिष्टुतिर्निन्दा निन्दा स्तुतिरिति स्मृता ॥—ந்யாஸவித்யைக நிஷ்டாநாம் வைஷ்ணவாநாம் மஹாத்மநாம், ப்ராக்ருதாபிஷ்டுதிர் நிந்தா நிந்தா ஸ்துதிரிதி ஸ்ம்ருதா.* என்கிற ப்ரமாணவசனமே இப்பாட்டாக வடிவெடுத்ததாயிற்று. பகவத்பக்த பக்தர்களான பாகவதோத்தமர்களின் ஏற்றமறிந்து அவர்களைக் கொண்டாடக் கடமைப்பட்டவர்கள் *அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே* என்னும்படியிருக்கும் மஹாஜ்ஞாநநிதிகளான மஹநீயர்களேயன்றி மற்றையார்களல்லர். அவிவேகிகளான லௌகிகர்கள் பாகவதோத்தமர்களைப் பழிப்பதோடு புகழ்வதோடு ஒரு வாசியில்லை. *மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ்* என்கிற கணக்கிலே அவர்களது பழிப்பு புகழ்ச்சியாகவே தலைக்கட்டும். பழிக்காமல் புகழ்வதற்கும் அவர்கள் அதிகாரிகளல்லர்; அவர்கள் செய்யும் புகழ்ச்சி உத்தமர்களுக்குப் பழிப்பாகவே தலைக்கட்டும என்றதாயிற்று. அலகை—பேய்மகள்; பூதனையைச் சொல்லுகிறது. *பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை வற்ற வாங்கியுண்ட வரலாறு காண்க, ... 39

அல்லி மலர்ப்பாவைக் கன்ப ரடிக்கன்பர்
சொல்லு மவிடு சுருதியாம்—நல்ல
படியாம் மனுநூற் கவர்சரிதை பார்வை
செடியார் வினைத் தொகைக்குத் தீ. 40

அல்லி மலர் பாவைக்கு அன்பர்	லக்ஷ்மீபதியான ஸர்வேச்வரனுடைய	மனு நூற்கு	(தருமசாஸ்த்ரங்களிற் சிறந்த) மநுஸ்மிருதிக்கு
அடிக்கு அன்பர்	திருவடிகளிலே அன்பு பூண்ட பக்தர்கள்	நல்ல படி ஆம்	சிறந்த உபமானமாகும்;
சொல்லும் அவிடு	விநோதமாகச் சொல்லும் சிறு வார்த்தையும்	பார்வை	(அவர்களது) கடைக்கண்ணோக்கமானது
சுருதி ஆம்	வேதத்தோடொக்கும்;	செடி ஆர் வினை தொகைக்கு தீ	தூறு மண்டின தீவினைத்திரளுக்குக் காட்டுத் தீயாம்.
அவர் சரிதை	அன்னவர்களது அனுட்டானமானது		

* * *—பரமபாகவதோத்தமர்களின் வாய்ச்சொல்லுக்கு மேற்பட்ட வேதமில்லையென்றும், அவர்களுடைய நடத்தைகளுக்கு மேற்பட்ட தர்மசாஸ்த்ரமில்லையென்றும், அவர்களது கடாக்ஷவீக்ஷணத்திற்கு மேற்பட்ட பாவனம் வேறொன்றில்லையென்றும் அருளிச்செய்து இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டியருளுகிறார்.

* वेदशास्त्ररथारूढाः ज्ञानखड्गधरा द्विजाः । क्रीडार्थमपि यद् ब्रूयुस्स धर्मः परमो मतः ॥—வேதசாஸ்த்ரரதாரூடாः ஜ்ஞாநகட்கதரா த்விஜாः, க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸ தர்மः பரமோ மதः *என்கிற வசனத்தை யுட்கொண்டு *சொல்லும் அவிடு சுருதியாம்* என்றார். அவிடு—விநோத வார்த்தை. * वासुदेवं प्रपन्नानां यान्येव चरितानि वै । तान्येव धर्मशास्त्राणीत्येवं वेदविदो विदुः ॥—வாஸுதேவம் ப்ரபந்நாநாம் யாந்யேவ சரிதாநி வை, தாந்யேவ தர்மசாஸ்த்ராணீத்யேவம் வேதவிதோ விதுः* என்கிற வசனத்தைத் திருவுள்ளம்பற்றி *நல்லபடியாம் மனுநூற்கு அவர் சரிதை* என்றார். * न शुध्यति तथा जन्तुस्तीर्थवारिशतैरपि । लीलयैव यथा भूप ! वैष्णवानां हि वीक्षणैः ॥—ந சுத்த்யதி ததா ஜந்துஸ் தீர்த்தவாரிசதைரபி, லீலயைவ யதா பூப! வைஷ்ணவாநாம் ஹி வீக்ஷணைः* என்னும் ப்ரமாணத்தை யடியொற்றி "அவர் பார்வை செடியார் வினைத் தொகைக்குத் தீ" என்றார்.

ஆகவிப்படி பகவச்சாஸ்த்ரங்களிலும் இதிஹாஸபுராணாதிகளிலும் ஸாரமாக விளங்கும் ப்ரமாண வசனங்களையே பாசுரமாக்கிப் பணித்த ஞானஸாரமென்னு மிப்பிரபந்தத்தை இவ்வளவோடு தலைக்கட்டியருளினாராயிற்று. 40

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

ஞானஸாரவுரை

முற்றுப்பெற்றது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்த

இரண்டாம் பிரபந்தமான

பிரமேயஸாரம்

(ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது.)

அவதாரிகை :—மஹாஜ்ஞாநநிதியாய் ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதரான அருளாளப்பெருமாளெம்பெருமானார், தம்மைத் திருத்திப் பணிகொண்ட எம்பெருமானார் திருவடி வாரத்திலே நெடுங்காலம் பரிசர்யை பண்ணிக்கேட்ட மஹார்த்த விசேஷங்களை ஸகலஸம்ஸாரி சேதநோஜ் ஜீவநார்த்தமாக ப்ரபந்தீகரிக்கத் திருவுள்ளம்பற்றி அநேக ப்ரமாணவசந ஸாரார்த்த ஸங்க்ரஹ ரூபமான ஞானஸாரமென்னும் ப்ரபந்தத்தையருளிச் செய்தார் கீழ்; இன்னமும் கரைபுரண்ட கருணையினாலே, ஸகலசாஸ்த்ர ஸாரமான திருமந்திரத்தில் பிரதிபாதிக்கப்படுகிற ப்ரமேயங்களையெல்லாம் [—அர்த்த விசேஷங்களையெல்லாம்] தொகுத்து மற்றொரு ப்ரபந்தமிட்டருள வேணுமென்று திருவுள்ளம்பற்றி ப்ரமேயஸாரமாகிற இப்பிரபந்தத்தை யருளிச்செய்கிறார். இதில் முதற்பாட்டில், திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்திற்கு ஸங்க்ரஹமான ப்ரணவத்தின் ஸாரமான பொருளைப் பேசுகிறார்.

அவ்வா னவருக்கு மவ்வா னவரேல்லாம்*
உவ்வா னவரடிமை யென்றுரைத்தார்—இவ்வாறு
கேட்டிருப்பார்க் காளேன்று கண்டிருப்பார் மீட்சியிலா
நாட்டிருப்பா ரென்றிருப்பன் நான். 1

அ ஆனவருக்கு	அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்கு	இவ்வாறு கேட்டு இருப்பார்க்கு	இவ்வண்ணமாக உபதேசமுகத்தாலே கேட்டு இவ்வர்த்தத்திலேஊன்றியிருக்குமவர்களுக்கு
ம ஆனவர் எல்லாம்	மகாரத்தின் பொருளான ஜீவாத்மவர்க்கமெல்லாம்	ஆள் என்று கண்டிருப்பார்	அடிமைப்பட்டவர்களாகத் தம்மை அத்யவஸித்திருக்குமவர்கள்
அடிமை என்று	சேஷபூதர்களென்று	மீட்சி இலா நாடு இருப்பார் என்று	மீளுதலில்லாத திருநாட்டிலே வீற்றிருப்பர்களென்று
உ ஆனவர் உரைத்தார்	உகாரார்த்தமான பெரியபிராட்டியாரோடொத்த புருஷகாரபூதர்களான ஆசாரியர்கள் பணிப்பர்கள் ;	நான் இருப்பன்	நான் உறுதியுடையேன்.

* * *—ப்ரணவத்தில் அகாரமானது ஸகல ஜகத்காரணபூதனாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறதாகையாலே [அவ்வானவருக்கு] என்றது அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்கு என்றபடி. இனி ப்ரணவத்தில் மகாரமானது இருபத்தஞ்சாமக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுகிறதாயிற்று. ஆகவே [மவ்வான வரெல்லாம்] என்றது மகாரார்த்தமான ஆத்மஸமஷ்டியெல்லாம் என்றபடி. பத்தமுக்த நித்யபேதேந மூவகைப்பட்ட ஆத்மாக்களையும் சொல்

லுகிறது. இவ்வாத்மாக்களெல்லாம் ஸர்வேச்வரனுக்கு அடிமையென்பது அகாரத்தின்மேல் ஏறிக்கழிந்த சதுர்த்தியினால் [லுப்த சதுர்த்தியினால்] தெரிவிக்கப்படுகிறது. ஆக ஆத்மவர்க்கமெல்லாம் எம்பெருமானுக்கு சேஷபூதமென்னுமர்த்தத்தை [உவ்வானவர் உரைத்தார்] ஆசாரியர்கள் அருளிச்செய்தார்களென்றபடி. முமுக்ஷுப்படியில் உகாரத்திற்கு லக்ஷ்மீபரமான ஒரு பொருளும சொல்லப்படுகிறது. அதுவும் ஒருவாறு பூர்வாசார்ய ஸம்மதமானதே. ஆசார்யர்கள் புருஷகாரக்ருத்யத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மியையொத்திருக்குமவர்களாகையாலே உவ்வானவரென்பதனால் ஆசாரியர்கள் விவக்ஷிதர்களாகிறார்கள்.

[இவ்வாறு கேட்டிருப்பார்க்கு ஆளென்று கண்டிருப்பார்] இதனால் பாகவத சேஷத்வம் தெரிவிக்கப்படுகிறது. ஆக பகவச் சேஷத்வத்தோடுகூட பாகவத சேஷத்வத்தையும் தெரிந்து கொள்வார் யாவரோ அவர்கள்தாம் பேறுபெறுவர் என்றதாயிற்று. ... 1

குலமொன் றுயிர்பல தங் குற்றத்தா லிட்ட
கலமொன்று காரியமும் வேறும்—பலமொன்று
காணாமை காணும் கருத்தார் திருத்தாள்கள்
பேணாமை காணும் பிழை. 2

உயிர் பல	ஆத்மாக்கள் பலவகைப்பட்டிருந்தாலும்	காரியமும் வேறு ஆம்	அநுபவிக்கும் பலன்கள் வெவ்வேறு பட்டனவாம்;
குலம் ஒன்று	அவ்வாத்மாக்களுக்குள்ளது தொண்டக்குலமொன்றேயாம்;	பலம் ஒன்று காணாமை	ஒருவகையான பலனையும் எதிர்பாராமல்
		காணும் கருத்தார்	கடாக்ஷிக்கத்திருவுள்ளமுடைய ஆசாரியர்களது
தம் குற்றத்தால் இட்ட கலம் ஒன்று	இவர்கள் தங்களுக்குக் கருமவசமாக எம்பெருமான் தந்த தேஹமும் ப்ராக்ருதமான தொன்றேயாம்;	திரு தாள்கள்	திருவடிகளை
		பேணாமை காணும் பிழை	விரும்பிப்பணியாத தொன்றே (துர்க்கதிகளுக்கு மூலகாரணமான) பிழை.

* * *—ஜீவவர்க்கத்தில் பத்தாத்மாக்கள் என்று ஸம்ஸாரிகள் சொல்லப்படுகிறார்கள். இவர்கள் எம்பெருமான் திருவடியையடையப்பெறாமல் ஸம்ஸரித்தே நிற்பதற்கு அடி ஸதாசார்ய ஸமாச்ரயணமில்லாமை யென்கிறது இப்பாட்டில். [உயிர்பல, குலம் ஒன்று] ஆத்மாக்கள் பலபலவாயினும் அகிலாத்மாக்களுக்குமுள்ளது தொண்டக்குலமெனபதொன்றே. தேஹத்தோடு சேர்க்கை காரணமாக வெவ்வேறு குலங்கள் உள்ளனவாக வழங்க நேர்ந்தாலும் நிஷ்க்ருஷ்டாத்ம ஸ்வரூபத்தில் குலபேதமில்லை; தொண்டக்குலமொன்றேயாம். [தம் குற்றத்தாலிட்ட கலமொன்று] அவரவர்கள் தாம் தாம் பண்ணின பாபங்களுக்குச்சேர ஒரு சரீரத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்களென்றபடி. ஒரே ஆத்மா ஜந்மபேதேந பலபல தேஹங்களைப் பூண்டாலும் ஒரு ஜன்மத்தில் ஒரு தேஹமேயுள்ளதென்க. [காரியமும் வேறும்] புண்ய பாபரூபங்களான கருமங்களின் பலன்களையநுபவிக்கையாகிற காரியமும வெவ்வேறாயிருக்குமென்றபடி. இங்ஙனேயாவதற்குக் காரணமென்னென்னில்; திருத்தாள்கள் பேணாமை காணும் பிழை; யாருடைய திருத்தாள்களென்னில்; பலமொன்று காணாமை காணுங் கருத்தார் திருத்தாள்கள். க்யாதிலாபபூஜைகளில் ஒன்றையும கருதாமல் கடாக்ஷிப்பதொன்றையே கருத்தில் கொண்டவர்கள் ஆசாரியர்கள்; அவர்களுடைய திருத்தாள்களைப் பேணாமையாகிற பிழைதான் இதற்குக் காரணமென்றதாயிற்று. 2

பலங்கொண்டு மீளாத பாவ முளதாகில்
குலங்கொண்டு காரியமென் கூறீர்—தலங்கொண்ட
தாளிணையா னன்றே தனையொழிந்த யாவரையும்
ஆளுடையா னன்றே யவன். 3

பலம் கொண்டு மீளாத பாவம் உளது ஆகில்	(நியமேந) பலத்தோடே சந்திப்பித்தே விடும் பாவம் உண்டாயிருக்குமாகில்	தாள் இணை யான் அவன்	உபய பாதங்களையுடையவனான எம்பெருமான்
குலம் கொண்டு காரியம் என் கூறீர்	குலத்தினால் என்ன பலனாகும்? சொல்லுங்கள்;	அன்றே	உலகளந்தவக்காலத்திலேயே
		தனை ஒழிந்த யாவரையும்	ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த சேதநர்களையும்
தலம் கொண்ட	எல்லா ஸ்தலங்களையும் ஆக்ரமித்துக் கொண்ட	ஆள் உடையான் அன்றே	அடிமை கொண்டவனன்றோ?

* * *—தொண்டக்குலம் நம்பக்கலில் ஒழிக்க வொழியாததாக இருக்கச் செய்தேயும் ப்ரயோஜநாந்தர பரத்வமொன்று கிட்டப்பதனாலேயே அது பயனற்றதாகிறது; *தாவியன் றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட வெந்தாய்* என்கிறபடியே நிர்ஹேதுகமாக எல்லாரையும் தன்னடிக்கீழ்க் கொண்ட பெருமான் ஸம்ஸாரிகளைத் தன் திருவடிகளுக்கு ஆளாக்கிக் கொள்ளாமைக்கு அடி இவர்களுக்குண்டான ப்ரயோஜநாந்தர ப்ராவண்யமே யென்றதாயிற்று. 3

கருமத்தால் ஞானத்தால் காணும் வகையுண்டே
தருமத்தா லன்றியிறை தாள்கள்—ஒருமத்தால்
முந்நீர் கடைந்தா னடைத்தான் முதல்படைத்தான்
அந்நீ ரமர்ந்தா னடி. 4

ஒரு மத்தால்	மந்தரமலையாகிற ஒரு மத்தாலே	இறை தாள்கள் தரும் அத்தால் அன்றி	அந்த எம்பெருமான் தானே தன் திருவடிகளைத் தருகையாகிற பரகத ஸ்வீகாரத்தாலன்றி
முந்நீர் கடைந்தான்	கடலைக் கடைந்தவனாய்		
அடைத்தான்	(அதிலே) ஸேதுபந்தம் செய்தவனாய்		
முதல் படைத்தான்	முதலிலே (அந்த ஜலதத்துவத்தை) ஸ்ருஷ்டித்தவனாய்	கருமத்தால் ஞானத்தால் காணும் வகை உண்டே	(ஸ்வயத்நரூபமான) கர்மயோக ஜ்ஞானயோகாதிகளாலே காணலாகுமோ?
அந்நீர் அமர்ந்தான் அடி	அந்த நீரிலே கண்வளர்ந்தருளினவனான எம்பெருமானுடைய திருவடிகளை,		

* * *—எம்பெருமானடியைக் காண வேணுமானால் கர்மயோக ஜ்ஞாநயோகாதிகளால் காணமுடியாதென்றும் அத்திருவடிகள்தாமே தம்மைக் காட்டிக் கொடுத்தால் காண இயலுமென்றும் சொல்லுகிறதாயிற்று இப்பாட்டு. முமுக்ஷுப்படியில் த்வய ப்ரகரணத்தில் "இத்தால் ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது" என்ற சூர்ணையை இங்கே அநுஸந்திப்பது. உலகில் உபாயம் வேறாய் உபேயம் அதனில் வேறாயிருக்கும். "நதீநிஸ்தரணாநந்தரம் ப்லவபரித்யாகம் போலே" என்ற கணக்கிலே உபேயம் கைப்பட்டவாறே உபாயம் விடத்தக்கதாயுமிருக்கும். இங்கு அப்படியல்ல. எம்பெருமான்

திருவடிகளே உபேயம்; அதற்கு உபாயமும் அத்திருவடிகளே. பல கற்றார்க்கும் இதில் தெளிவு பிறப்பது அரிது. பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தி உபாயம் என்றாலும் ப்ரபத்தவ்யனை எம்பெருமானை ப்ரபத்தி சப்தார்த்தமாக முடிந்து நிற்கும். * न्यास इति ब्रह्म । न्यास इत्याहुर्मनीषिणो ब्रह्माणम् * என்று உபநிஷத்து மோதிவைத்தது. இறையடியை இறைதாள்கள் தரும் அத்தால் காணும்வகையுண்டேயன்றி, கருமத்தாலும் ஞானத்தாலும் காணும் வகையில்லை என்றதாயிற்று. 4

வழியாவ தொன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாவ தொன்றென்றா லோமென்று—இழியாதே
இத்தலையா லேது மிலையென் றிருந்ததுதான்
அத்தலையால் வந்த வருள். 5

வழி ஆவது ஒன்று என்றால்	ப்ராப்திஸாதனமாகக் கூடியது ஸித்தோபாயமானவொன்று தான் என்று சொன்னால்	ஓம் என்று	அதற்கும் இசைந்தும்
ஓம் என்று	அதற்கு இசைந்தும்,	இழியாதே	ஸ்வப்ரவ்ருத்தியில் கைவைக்காமல்
மற்றவையும் முற்றும் ஒழியா	மற்றுபாயாந்தரங்களையெல்லாம் அறவே யொழித்து	இத் தலையால் ஏதும் இலை என்று இருந்தது தான்	சேதநப்ரவ்ருத்தியாலாவது ஒன்றுமில்லையென்று உறுதிகொண்டிருப்பது தான்
அது ஒன்று என்றால்	அந்த ஸித்தோபாயத்திலேயே பொருந்து என்று சொன்னால்	அத் தலையால் வந்த அருள்	ஸர்வேச்வரனடியாக வாய்த்த க்ருபையாகும்.

* * *—உலகில் ஒருரையடைவதற்குப் பல வழிகளுண்டாயிருக்கும்; இங்கு அப்படியன்று. பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தியாகிற வொன்றுதான் வழி—என்றால் அதற்கிசைந்து உபாயாந்தரங்களை ஸவாஸநமாக விட்டொழிக்க வேணும். அந்த ப்ரபத்திதானும் தன்பால் உபாயபுத்தியை ஸஹியாதே அத்விதீயமாயிருக்குமென்றால் அதில குதர்க்கங்கள் செய்து போராதே ஓமென்று இசையவேணும். அப்படியிசைந்தவாறே ஸ்வப்ரவ்ருத்தியில் இழியாத நிலைமையுண்டாகும். ஆக இத்தலையால் விளைவித்துக் கொள்வதொரு நன்மையில்லையென்றும் எந்த நன்மையும் அத்தலையாலுண்டாகுமத்தனையென்றும் துணிந்திருப்பதுதான் பகவத் க்ருபாபலம் என்றதாயிற்று. 5

உள்ள படியுணரில் ஒன்றுநமக் குண்டென்று
விள்ள விரகிலதாய் விட்டதே—கொள்ளக்
குறையேது மில்லாற்குக் கூறுவதேன் சொல்லீர்
இறையேது மில்லாத யாம். 6

ஒன்று நமக்கு உண்டு என்று	பேற்றுக்குடலான பாரதஸ்வீகாரமொன்று நமக்குளதென்று	கொள்ள குறை ஏதும்இல்லாற்கு	நம்மிடத்திலொன்று கொள்ள வேண்டும்படி ஒரு குறையுமில்லாதவனான ஸர்வேச்வரனுக்கு
உள்ளபடி உணரில்	யதார்த்தமாக உணர்ந்து பார்க்குமளவில்	ஏதும் இறையும் இல்லாத யாம்	எவ்வுபாயமும் சிறிதுமில்லாத [அகிஞ்சநரான] நாம்
விள்ள விரகு இலது ஆய் விட்டதே	அவனை விட்டு நீங்கும்வழி இல்லையன்றோ?	கூறுவது என்	ப்ரார்த்தநாரூபமாகச் சொல்ல வேண்டியது என்னவிருக்கிறது ?
		சொல்லீர்	விவேகிகளே! சொல்லுங்கள்.

* * *—ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை யதார்த்தமாக விவேகித்துப் பார்க்கில், பேற்றுக்கு உறுப்பாக நம்பக்கல் ஒன்றுண்டென்று வாய்திறக்க வழியில்லையாயிற்று; என்று முன்னிரண்டடிகளாற் சொல்லி, பின் சங்காபரிஹாரம் பண்ணுகிறது பின்னடிகளால். நம்பக்கல் ஒன்றுமில்லை யென்னலாமோ? 'அரங்காவடியேற்கிரங்காயே' என்கிற ஓர் உக்திமாத்திரமாவது நம்பக்கல் இல்லையோ? என்று சங்கை. அதற்குப் பரிஹாரம் கொள்ளக் குறையொன்று மில்லார்க்கு இத்யாதி. தான் ரக்ஷிக்குமிடத்தில் நம்பக்கலில் ஒன்று கூட்டிக்கொள்ள வேண்டாத நிரபேக்ஷனை அப்பெருமானுக்கு நாம் கூறவேண்டுவது மொன்றுண்டோ? நம் ஆற்றாமையின் கனத்தாலே சொல்லுகிறோ மித்தனை போக்கி அத்தலைக்கு அவச்யாபேக்ஷிதமென்னும் நினைவாலே சொல்லுகிறிலோம் என்றதாயிற்று. 6

இல்லை யிருவர்க்கு மென்றிறையை வென்றிருப்பார்
இல்லை யஃதொருவர்க் கெட்டுமதோ—இல்லை
குறையுடைமை தானென்று கூறினா ரில்லா
மறையுடைய மார்க்கத்தே காண். 7

இருவர்க்கும் இல்லை என்று	ஜீவாத்ம பரமாத்மாக்களான இருவர்க்கும் [மேலேபின்னடிகளில் சொல்லுகிறபடி] இல்லாமை உண்டென்றுகொண்டு
இறையை வென்று இருப்பார் இல்லை	ஸ்வாமியான அவனை ஜயித்திருப்பாரொருவருமிலர்;
அஃது ஒருவர்க்கு எட்டுமதோ	அப்படிபட்ட வெற்றி (ஸாமான்யமாக) ஒருவர்க்குக் கிட்டக்கடவதோ?

(இருவர்க்கும் இல்லாமையொன்று உண்டென்றது எவையென்னில்;)

குறை தான் இல்லை	(அப்பெருமானுக்கு) நம்பக்கலில் ஒன்றுகொள்ள வேண்டும்படியான குறையில்லை;
உடைமை தான் இல்லை	(சேதநனுக்கு) ஸமர்ப்பிக்கத்தக்கதான பொருள் எதுவுமில்லை;
என்று	என்னுமிவ்விஷயத்தை
கூறினார் இல்லா மறையுடைய மார்க்கத்தே காண்	அபௌருஷேயமாகையாலே வக்தாக்களை யுடையதல்லாத வேதமார்க்கத்தில் கண்டுகொள்.

* * *—[இல்லை இருவர்க்கும்] எம்பெருமானுக்குமில்லை, நமக்குமில்லை. எது இல்லையென்னில்; நம்பக்கலில் ஒன்று எதிர்பார்த்திருக்குங்குறை அவனுக்கில்லை; அவனுக்கு இடலாவதோருடைமை நம்பக்கலில்லை. இப்படியிருப்பதோர் அத்யவஸாயமுண்டாகில் அவனைவென்று விடலாம்; அதாவது அவன் பக்கலில் ஸர்வஸ்வமும் பெற்று விடலாமென்கை. இவ்வத்யவஸாயம் ஒருவர்க்கு மெளிதன்று.

முதலடியில் "இல்லையிருவர்க்கும்" என்றதைத் தாமே விவரித்தருளுகிறார் *இல்லை குறையுடைமையித்யாதியால். அவன் பக்கலில குறையில்லை, நம் பக்கலில் உடைமையில்லை. என்று முறையே அந்வயிக்கும். மூன்றாமடியில் "கூறினாரெல்லாம்" என்பது பாடப்பிழை; 'கூறினாரில்லா' என்பதே திருத்தமான பாடம். இது மறைக்கு விசேஷணம். வேதத்தைக் கூறினவர்கள் ஒருவருமில்லாமையாலே கூறினாரில்லாமறை யென்கிறது. அபௌருஷேயமான வேதமென்றபடி. அதனுடைய மார்க்கத்தே காண்—இவ்வர்த்தம் வேத விழுப்பொருளென்றதாயிற்று. 7

வித்த மிழவின்பம் துன்பம்நோய் வீகாலம்
தத்த மவையே தலையளிக்கும்—அத்தைவிடீர்
இச்சியா னிச்சியா தேத்த வெழில்வானத்து
உச்சியா னுச்சியா னாம். 8

வித்தம் இழவு இன்பம் துன்பம் நோய் வீகாலம்	தனலாபம் தனத்தினிழவு சுக துக்கங்கள்வியாதி சரீரவிநாசம் ஆகிற இவையெல்லாம்	இச்சியான்	அநந்ய ப்ரயோஜனனென்று பேர்பெற்றவன்
தத்தம் அவையே தலை அளிக்கும்	தம் தம் கர்மாநுகுணமாக வந்து சேரும் ;	இச்சியாது ஏத்த	நிஷ்காமனாய்க்கொண்டு துதி செய்யுமளவில்
		எழில் வானத்து உச்சியான்	பரமபதத்துச்சியிலுள்ளானான ஸர்வேச்வரன்
அத்தை விடீர்	அவற்றில் கரைதலை விட்டிடுங்கள் ;	உச்சியான் ஆம்	(இவன்றனது) தலையில்வந்து சேர்ந்தவனாவன்.

* * *—[வித்தம் இழவு இன்பம் துன்பம்] வித்தம் என்று தனலாபத்தைச் சொல்லுகிறது ; இழவென்று அதன் நஷ்டத்தைச் சொல்லுகிறது. தனலாபமுண்டானால் இன்பமடைவதும் இழவுண்டானால் துன்பமடைவதும் உலகவியல்பாதலால் உடனே அவையும் சொல்லிற்று. இவைதவிர நோய்களும் வந்து மிடைதரும். இங்ஙனே யிருக்கசெய்தே விநாசகாலமும் ப்ராப்தமாகும். இவை அவரவர்களது கர்மாதீனமாக வந்தே நிற்கும். எவ்வகையினாலும் தடைபட்டு நில்லா. [அத்தை விடீர்] அவற்றில் மனஞ்செலுத்திக் கவலையுறுவது வேண்டாவென்றபடி. கவலையுறாதிருத்தற்கு விரகு சொல்லுவன பின்னடிகள். இச்சியான் என்று அநந்யப்ரயோஜநாதிகாரியைச் சொல்லுகிறது. ஒரு பலனையும் இச்சியாதவன்—விரும்பாதவன் என்றபடி. அவன், இச்சியாது ஏத்த—ஒன்றையும் விரும்பாமல் வாய்படைத்த ப்ரயோஜநம் பெறுவோமென்று துதிக்க ; அவ்வளவிலே, [எழில் வானத்துச்சியான் உச்சியானும்] சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான் *தனியேனாருயிரே! என் தலைமிசையாய் வந்திட்டு* என்னும் படியே அவன் தலைமிசை வந்து நின்று கூத்தாடுவன் 8

தத்த மிறையின் வடிவென்று தாளிணையை
வைத்த வவரை வணங்கியிராப்—பித்தராய்
நிந்திப்பார்க் குண்டேறு நீணிரயம் நீதியால்
வந்திருப்பார்க் குண்டிழியா வான். 9

தாள் இணையை வைத்த அவரை	தம் திருவடிகளைத் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்த ஆசாரியரை	ஏறு நீள் நிரயம் உண்டு	ஒருநாளும் கரையேறமுடியாத ஸம்ஸாரப்படுகுழியில் வீழ்ச்சியே யாம் ;
தம் தம் இறையின் வடிவு என்று	தம்தம் ஸ்வாமியின் திவ்ய மங்கள விக்ரஹமென்று கொண்டு	நீதியால் வந்திப்பார்க்கு	முறைதவறாது வணங்கி வழிபடும் ஸச்சிஷ்யர்களுக்கு
வணங்கி இரா பித்தர் ஆய் நிந்திப்பார்க்கு	வணங்கி வழிபாடுசெய்யாத பித்தர்களாகி நிந்திக்குமவர்களுக்கு	இழியா வான் உண்டு	மீட்சியில்லாத திருநாடேயாம்.

* ' *—கீழ் எட்டுப்பாட்டுக்களிலு மருளிச்செய்த பொருள்களெல்லாம் திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தின் மஹார்த்தங்களாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்களைப் பரமக்ருபையினால் உபதேசித்தருளத் தாமாகவே அபிமானிக்குமாசாரியனை நிந்திப்பார்க்கும் வந்திப்பார்க்கு முண்டாகக்கடவ பலனையருளிச் செய்கிறாரிதில். "தாளிணையை வைத்தவர்" என்றே ஆசார்யரை நிர்தேசிக்கிறார். கீழே ஞானஸாரத்தில் (36.) *மருளாமிருளோட மத்தகத்துத் தன்தாள் அருளாலே வைத்தவவர்* என்றருளிச்செய்ததை யடியொற்றிப் பொருள் பணித்தால் 'தம் திருவடியைத் தலைமேல் வைத்தவர்' என்னலாம்; இராமாநுச நூற்றந்தாதியில் *ஊழிமுதல்வனையே பன்னப் பணித்த விராமாநுசன் பரன்பாதமுமென் சென்னித்தரிக்க வைத்தான்* என்றும் அரங்கன்செய்ய தாளிணையோடார்த்தான் * என்றுமுள்ள பாசுரங்களை யடியொற்றிப் பொருள் பணித்தால், 'எம்பெருமான் திருவடிகளைத் தலைமேல் வைத்தவர்' என்னலாம். இரண்டும் பொருந்தியதே. இப்படிப்பட்ட ஆசாரியரை ஸர்வேச்வரன் வடிவென்று கொள்ளாதே நிந்திப்பார் நகரத்தழுந்துவர்; நீதியால் வந்திப்பார் வானேறி வாழ்வர் என்றதாயிற்று. 9

இறையு முயிரு மிருவர்க்கு முள்ள
முறையும் முறையே மொழியும்—மறையைம்
உணர்த்துவா ரில்லாநா ளொன்றல்ல ஆன
உணர்த்துவா ருண்டான போது. 10

இறையும் உயிரும்	ஸர்வேச்வரனையும் சேதநனையும்	உணர்த்துவார் இல்லா நாள்	உபதேசிக்குமாசாரியன் இல்லாத காலம்
இருவர்க்கும் உள்ள முறையும்	இவ்விருவர்க்கு முண்டான சேஷசேஷி பாவ ரூபமான ஸம்பந்தத்தையும்	ஒன்று அல்ல	அஸத்கல்பமே ;
முறையேமொழியும் மறையை	உள்ளபடி தெரிவிக்கின்ற வேதரூபமான திருமந்திரத்தை	உணர்த்துவார் உண்டான போது	உபதேசிக்குமாசாரியர் உள்ள காலந்தான்
		ஆன	ஸத்தான காலம்.

* * *—கீழ்ப்பாட்டிலருளிச்செய்த ஆசார்யவைபவத்திற்கு சேஷபூதமாக ஆசார்யோபகாரவைபவத்தை இப்பாட்டிலருளிச்செய்து இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டியருளுகிறார். பரமாத்மஸ்வரூபத்தையும் ஜீவாத்மஸ்வரூபத்தையும் இவ்விருவர்க்கு முண்டான ஸம்பந்தத்தையும் இவற்றை உள்ளபடி யுணர்த்துகிற ஸகலவேதஸாரமான திருமந்த்ரத்தையும் உணர்த்துகையே ஆசார்யக்ருத்யம்; இதுவே ஆசார்யன் செய்தருளும் மஹோபகாரம். இம்மஹோபகாரம் நிகழாதநாள் அஸத்கல்பம். இது நிகழும் நாளே ஸத்தான நாளென்று ப்ரமேயங்களில் ஸாரமான அர்த்தத்தை யருளிச்செய்து இப்பிரபந்தத்தையும் தலைக்கட்டினாராயிற்று.

முடிவில் ஒரு விண்ணப்பம். இவ்விரண்டு பிரபந்தங்களுக்கும் பல்லாண்டுகட்கு முந்தியே வியாக்கியானமெழுத ஆவல் கொண்டிருந்தும் இடையூறுமிடைதந்தது. இவ்விஜயவாண்டு கார்த்திகைத்திங்களில் அருளாளப்பெருமானெம்பெருமானார் மஹோத்ஸவஸமய விசேஷத்தில் மிக வெளிதாக இக்கைங்கரியம் நிறைவேறிற்று.

இப்பாசுரங்களை யநுபவித்தபோது "தேனும்பாலுங் கன்னலுமமுதுமாய் அடியேனுக்குத் தித்தித்த விதத்தைத் தெரிவிக்கப் பாசுரமறிகின்றிலேன். நமது எம்பெருமானார் தரிசனத்திற்கு இவ்விரண்டு பிரபந்தங்களும் இரண்டு திவ்ய சக்ஷுஸ்ஸுக்களென்றே உறுதி கொண்டேன். உபதேசரத்தினமாலையும் திருவாய்மொழி நூற்றந்தாதியும் போலே இவையிரண்டும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நித்யாநுஸந்தேயமாகக்கடவன. 10

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

பிரமேயஸாரவுரை

முற்றுப்பெற்றது.

ஜீயர் திருவடிகளே சரணம்.



அன்னபுகழ் முடும்பை அண்ணல் உலகாசிரியன்
இன் அருளால் செய்த கலை யாவையிலும் – உன்னில்
திகழ் வசனபூடணத்தின் சீர்மை ஒன்றுக்கு இல்லை
புகழ் அல்ல இவ் வார்த்தை மெய் இப்போது

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசாரியார் திருவடிபணிந்துய்ந்த

விளாஞ்சோலைப்பிள்ளை பணித்த ஸப்தகாதை - உரையுடன்

(உரையாசிரியர் - ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியார்)

அவதாரிகை

✦எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா✦ என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே எம்பெருமான் பலப்பல யோனிகளிலும் திருவவதாரங்கள் செய்யுமாபோலே அவனடியார்களும் அப்படியே திருவவதாரங்கள் செய்வது உலகப் பிரசித்தம். किमप्यत्राभिजयान्ते योगिन: सर्वयोनिषु । प्रत्यक्षितात्मनाथानां नैषां चिन्त्यं कुलादिकम् – கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்✦ என்பது முதலிய பல பிரமாணங்களினால் தொண்டக் குலத்தின் சிறப்பு அறியக் கிடக்கின்றது. யோகிகளான மஹான்கள் ஸகல யோனிகளிலும் பிறப்பர்களென்றும், எம்பெரு மானை ஸாக்ஷாத்கரித்தவர்களான அவர்களுடைய ஜாதி முதலியவற்றிலே கண்வைக்கலாகா தென்றும் மேலே எடுத்துக்காட்டிய பிரமாணம் கூறுகின்றது. அப்படி அவதரித்த மஹான்களில், பிள்ளையுறங்காவில்லிதாஸர், ஏறுதிருவுடையதாஸர், பிள்ளைவானமாமலைதாஸர் முதலான மஹாபாகவதோத்தமர்கள் மிகச்சிறந்து விளங்குபவர்கள். பிள்ளையுறங்காவில்லிதாஸர் எம்பெருமானார்க்கு அந்தரங்கராயிருந்தவர்; ஏறுதிருவுடையதாஸர் நம்பிள்ளைக்கு அணுக்கரா யிருந்தவர்; பிள்ளை வானமாமலைதாஸர் நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர்க்கு அன்பரா யிருந்தவர். இவர்களைப் போன்றவரும், இவர்களில் விஞ்சிய பெருமை வாய்த்தவருமான விளாஞ்சோலைப் பிள்ளையென்பவர், பிள்ளை லோகாசாரியருடைய திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகல ரஹஸ்யார்த்தங்களும் கேட்டு உஜ்ஜீவிக்கப்பெற்றவர்.

இவர் பிள்ளையுலகாசிரியர் திருவாய்மலர்ந்தருளிய அஷ்டாதசரஹஸ்யங்களிள்ளும் ✦உன்னில் திகழ்வசன பூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை✦ என்று நிஸ்ஸமாப்யதிகமாகப் போற்றப்படுகின்ற ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்திரத்திலே மிகவும் ஊன்றினவராய் அதிலுள்ள அர்த்த விசேஷங்களை நிரந்தரம் அநுபவிப்பது தவிர வேறொன்றும் அறியாதவராயிருந்தா ரென்று ப்ரஸித்தம். பகவத்கீதைக்குள் சரம ச்லோகம் சிறப்பெய்தியதுபோல, ஸ்ரீ வசநபூஷணத் திற்குள் சரமபர்வ நிஷ்டாப்ரகரணம் சிறப்புற்றதாகையாலே அந்த ப்ரகரணத்திலுள்ள முக்கிய மான அர்த்த விசேஷங்களையும் மற்றும் இதர ப்ரகரணங்களிலுள்ள சில அர்த்தவிசேஷங் களையும் திரட்டி லகுவானதொரு ப்ரபந்தம் பணிக்கவேணுமென்று கருதித் திருவாசிரியம் போலே ஏழுபாட்டாயமைந்த ஸப்தகாதையென்னுமிந்த ப்ரபந்தத்தைப் பணித்தருளினார். நம்மாழ்வாருடைய ஸப்தகாதையான திருவாசிரியம் ப்ரதம பர்வதத்திற்கு அமைந்தது; இவருடைய ஸப்தகாதை சரமபர்வத்திற்கு அமைந்தது. இதுவாயிற்று இதனுக்கு ஏற்றம். ஆசிரியப்பாவான அதிலுங்காட்டில் வெண்பாவான இது தனக்கு இன்னமும் ஏற்றமுண்டு. ஸ்ரீமதுரகவிகளும் வடுக நம்பியும் தங்கள் சரமபர்வநிஷ்டையை உக்தியனுஷ்டானங்களாலே காட்டினதுபோலே இப்பிள்ளையும் காட்டியருளினாராயிற்று.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸப்தகாதை

அம்பொன் னரங்கர்க்கு மாவிக்கு மந்தரங்க
சம்பந்தங் காட்டித் தடைகாட்டி - உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறி காட்டு
மவனன்றோ ஆசாரியன். 1

அம் பொன் அரங்கர்க்கும் - அழகிய பொன்னரங்கத்தில் வாழும் பெரிய பெருமாளுக்கும்

ஆவிக்கும் - ஜீவாத்ம வர்க்கத்திற்கும் (உண்டான)

அந்தரங்க சம்பந்தம் காட்டி - மிகவுள்ளீட்டான ஸம்பந்தத்தை எடுத்துரைத்து

தடைகாட்டி - ஸ்வரூப விரோதி முதலான விரோதி ஸ்வரூபங்களையும் காட்டிக் கொடுத்து.

உம்பர் திவம்மன்னும் வாழ்வுக்கு - நித்ய முக்தர்களின் ஸ்தானமான பரமபதத்திலே மன்னியிருந்து நித்ய கைங்கர்யம் பண்ணுகையாகிறவாழ்வுக்கு

சேர்ந்த நெறி - அநுரூபமான மார்க்கமாகிய ப்ரபத்தியை

காட்டுமவன் அன்றோ ஆசாரியன் - உபதேச முகத்தாலே காட்டுகிறவனே ஆசாரியன்.

✱✱ - இப்பாட்டால் ஆசாரியன் படியைப் பேசுகிறார். ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடே ஒருவிதமான ஸம்பந்தமன்று. நவவிதமான ஸம்பந்தங்களுள்ளன. 1. பிதாபுத்ர பாவம், 2. ரக்ஷ்யரக்ஷக பாவம், 3. சேஷசேஷி பாவம், 4. பர்த்ருபார்யா பாவம், 5. ஜ்ஞாத்ருஜ்ஞேய பாவம், 6. ஸ்வஸ்வாமி பாவம், 7. ஆதாராதேய பாவம், 8. சரீராத்ம பாவம், 9. போக்த்ருபோக்ய பாவம் - என்றிப்படி ஒன்பது வகைப்பட்ட ஸம்பந்தங்கள் திருமந்திரத்தில் தேறுகின்றன. இந்த ஸம்பந்தத்தை உணர்த்துவான் ஆசார்யன். இவ்வளவோடும் நில்லாமல் (தடைகாட்டி) ஸ்வரூப விரோதி, உபாய விரோதி, ப்ராப்யவிரோதி என்று மூவகைப்பட்ட விரோதிகளையும் நம: பதத்திலே நிரூபித்துக் காட்டுவன் ஆசார்யன். இவ்வளவேயுமன்றிக்கே (உம்பர் திவமன்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்) இதை இரண்டு வாக்கியார்த்தமாகப் பிரித்து அநுஸந்தித்துக் கொள்ளலாம். உம்பர் திவமென்னும் வாழ்வைக் காட்டும், அந்த வாழ்வுக்குச் சேர்ந்த நெறி காட்டும் - என்று. ப்ராப்யமான புருஷார்த்தத்தையும் அதற்கு ப்ராபகமான உபாயத்தையும் காட்டுவனென்றபடி, ஆக இவற்றையெல்லாம் காட்டுமவனன்றோ ஆசாரியன் என்றது - இவற்றை நிஷ்கல்மஷமாகக் காட்டிக் கொடுப்பதுதான் ஆசார்யக்ருத்யம் என்றபடி.

''அம்பொன்னரங்கர்க்கும்'' என்று ஸ்ரீரங்கநாதனைக் குறித்தது அந்த விசேஷ வ்யக்தியில் நோக்காகவன்று; பொதுப்பட நாராயணனைச் சொன்னபடி அந்த நாராயணன் அம்பொன்னரங்கனாக ஸேவை ஸாதிக்கையாலே விசேஷ சப்தத்தையிட்டுச் சொல்லிற்றென்று கொள்க. **''அந்தரங்க சம்பந்தம்''** என்கையாலே நம்முடைய தர்சனத்திற்கு அந்தரங்கமாகக் கொள்ளப்படுகிற சரீராத்மபாவ ஸம்பந்தத்தைச் சொல்லிற்றாகவுமாம். ''உம்பர் திவமென்னும்'' என்பது சிலருடைய பாடம்.

அஞ்சு பொருளு மளித்தவன்பா லன்பிலார்
நஞ்சில் மிகக்கொடியர் நாம்சொன்னோம்-நஞ்சுதான்
ஊனைமுடிக்கு மதுயிர் முடிக்குமென்
றீனமிலார் சொன்னாரிவை. 2

அஞ்சுபொருளும் உபதேசித் தருளின அளித்தவன் பால்	- அர்த்த பஞ்சகத்தை ஆசார்யன் பக்கலில்
அன்பு இலார்	- பக்தியில்லாதவர்கள்
நஞ்சின் மிக கொடியர்	- விஷத்திற் காட்டிலும் மிகவும் கொடியராயிருப்பர்;
நாம் சொன்னோம்	- இதனை உறுதியாகச் சொல்லுகின்றோம். (நஞ்சின் மிகக் கொடுமை எங்ஙனே யென்னில்;)
நஞ்சு தான் ஊனை முடிக்கும்	- விஷமானது சரீரத்தை மாத்திரமே முடித்திடவல்லது;
அது உயிர் முடிக்கும்	- ஆசார்ய ப்ரேமமில்லாதிருத்தலானது ஆத்ம நாசத்தையே பண்ணிவிடும்;
என்று இவை	- என்னுமிவ்வர்த்ததை
ஈனம் இலார் சொன்னார்	- ஒன்றிலும் குறைவற்றவர்களான பூருவர்கள் அருளிச்செய்து வைத்தார்கள்.

✱✱✱ - இப்பாட்டாலே, ஆசார்ய ப்ரேமமில்லாதவர்கள் ஆத்மநாசத்தைத் தாங்களே விளைத்துக் கொள்ளுமவர்களென்கிறார். ''அஞ்சு பொருளுமளித்தவன்'' என்கிற சொல்லால் ஆசார்யனைக் கூறுகின்றார். கீழ்ப்பாட்டில், ஜீவபரஸம்பந்தங்காட்டுதல் விரோதிகளைக் காட்டுதல் உபாயோபேயங்களைக் காட்டுதல் இவை ஆசார்ய க்ருத்யமாகச் சொல்லிற்று. அர்த்த பஞ்சகமுபதேசித்தல் ஆசார்ய க்ருத்யமாக இதில் சொல்லுகிறது. ✱மிக்கவிறை நிலையும் மெய்யாமுயிர்நிலையும் தக்கநெறியும் தடையாகித் தொக்கியலு மூழ்வினையும் வாழ்வினையு மோதும்✱ என்கிற திருவாய்மொழித் தனியனில் அஞ்சு பொருள்கள் (அர்த்த பஞ்சகம்) இன்னவையென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றமையுணர்க. இந்தப் பிரபந்தந்தன்னிலும் மேலே (4) ✱தன்னையிறையைத் தடையைச் சரணெறியை மன்னு பெருவாழ்வை✱ என்னும் பாசுரத்தில் வ்யக்தமாகச் சொல்லியிருப்பதுங்காண்க. ஆக இப்படிப்பட்ட அஞ்சு பொருள் களையுமளித்தவனான ஆசாரியன் பக்கலிலே அன்பில்லாதவர்கள் **நஞ்சில் மிகக் கொடியர் - நஞ்சு** கொடிது; இவர்கள் மிகக்கொடியராயிருப்பரென்கை. மிகக்கொடியரென்னுமிடத்தைப் பின்னடிகளாலே மூதலிக்கிறார். ✱ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார், மானிடவரல்லரென்று என்மனத்தே வைத்தேனே✱ என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தது போல இவரும் **'நாம் சொன்னோம்'** என்கிறார்.

நஞ்சுதான் ஊனைமுடிக்கும் - விஷமுண்டவர்களுக்கு தேஹநாசம் விளையுமேயல்லது ஆத்மநாசம் விளையாது; **அது உயிர் முடிக்கும்** - அஞ்சு பொருளுமளித்தவன்பால் அன்பில்லாமையானது ஆத்மநாசத்தையே விளைக்குமாயிற்று. ஸ்ரீவசநபூஷணத்தில் (349) ''இவனுக்கு சரீரா வஸானத்தளவும் ஆசார்ய விஷயத்தில் ✱என்னைத் தீமனங் கெடுத்தாய்✱ மருவித்தொழும் மனமே தந்தாய்✱ என்று உபகாரஸ்ம்ருதி நடக்கவேணும்'' என்ற சூர்ணையை இங்கு அநுஸந்திப்பது.

பார்த்த குருவி னளவிற் பரிவின்றிச்
சீர்த்தமிகு ஞானமெலாஞ் சேர்ந்தாலும் - கார்த்தகடல்
மண்ணின்மேல் துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழா நரகு. 3

பார்த்த குருவின் அளவில் பரிவு இன்றி	- ப்ரத்யக்ஷதைவமான ஆசார்யன் திறத்தில் பக்தியில்லாமல்
சீர்த்த மிகு ஞானம் எலாம் சேர்ந்தாலும்	- கனத்த மஹாஜ் ஞானங்களெல்லாம் சேரப் பெற்றாலும்
கார்த்த கடல் மண்ணின் மேல் துன்புற்று மங்கும்	- கருங்கடல் சூழ்ந்த இப்பூமண்டலத்தில் பலவகைத் துன்பங்களையுமனுபவித்து (அந்த நீசன்) நசித்தொழிவன்;
கீழ் ஆம் நரகு தேங்காமல்	- நண்ணும் அதோகதியான நரகத்தை நிரந்தரமாக அடைந்திடுவன்.

✱✱✱ - சிஷ்யன் ஈடேற வேண்டுவது சாஸ்த்ரதாத்பர்யஜ்ஞான விசேஷத்தாலன்றோ; அது குறையற்றிருக்குமாகில் உஜ்ஜீவிக்கத்தட்டில்லையே. ஆசார்யப்ரேமம் இருந்தாலென்ன? இல்லையாகிலென்ன? என்று சிலர் சொல்லக்கூடுமாகையாலே அதற்கு மறுப்புரைக்கிறது இப் பாட்டு. எத்தனை ஞானவிகாஸமுடையனாயிருந்தாலும் ஆசார்யனளவில் பரிவில்லையாகில் அதோகதியே கதி என்கிறாராயிற்று இதில். **பார்த்த குரு** என்பதற்குப் பலவகையாகப் பொருள் கொள்ளலாம். நம் கண்ணாலே பார்க்கப்படுகிற குரு என்னுதல்; நம்மளவிலே விசேஷகடாக்ஷம் செய்தருளின குருவென்னுதல்; எம்பெருமான் தேடிப்பார்த்து வைத்த குருவென்னுதல். இப்படிப்பட்ட குருவின் பக்கலிலே பரிவின்றிக்கேயிருந்து; **(சீர்த்தமிகு ஞானமெல்லாம் சேர்ந்தாலும்)** ஞானம், மிகுஞானம், சீர்த்தமிகுஞானம் என்று மூன்றாகக் கொள்வது. ஸம்ஸ்க்ருத வேதாந்த ஜ்ஞானம் த்ராவிட வேதாந்தஜ்ஞானம் ரஹஸ்யார்த்தஜ்ஞானம் என்கிற மூன்று ஞானங்களையுங் கொள்க. இதற்கும் மேற்பட **எல்லாம்** என்கையாலே மற்றுமுள்ள ஸகலார்த்தஜ்ஞானங்களையுங் கொள்வது. இவை சேர்ந்தாலும்; பார்த்த குருவினளவில் பரிவில்லையாகில்;

கார்த்தகடல் மண்ணின்மேல் துன்புற்று மங்குமே - இதற்கு எழுவாய் வருவித்துக் கொள்ள வேணும்; குருவினளவில் பரிவின்றியிருப்பவன் கருங்கடல் சூழ்ந்த மண்ணுலகில் அநுபவிக்கக்கூடிய க்லேசங்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டுழல்வன். ✱இங்கே காண இப்பிறப்பே மகிழ்வரெல்லியுங் காலையே✱ என்றதற்கு எதிராக अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते - - அத்யுத்கடை; புண்யபாபைரிஹைவ பலமச்நுதே✱ என்கிற சாஸ்த்ரம் இவற்கே பலிக்குமென்றபடி இஹலோகத்தில் துன்புறுவதோடும் நில்லாமல் நரகயாதனைகளையும் அநுபவிக்க நேருமென்கிறார் **தேங்காமல் நண்ணுமே கீழாநரகு** என்பதானால், நித்ய ஸம்ஸாரியாய்க் கிடந்துழல்வனென்றதாகவுமாம்.

தன்னை யிறையைத் தடையைச் சரணெறியை
மன்னுபெரு வாழ்வையொரு மந்திரத்தின் - இன்னருளால்
அஞ்சிலுங் கேடோட வளித்தவன்பா லன்பிலார்
நஞ்சிலுங்கே டென்றிருப்பன் நான். 4

தன்னை இறையை தடையை சரண் நெறியை மன்னு பெருவாழ்வை - ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, விரோதிஸ்வரூப, உபாய ஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூபங்களாகிற இவற்றை

ஒரு மந்திரத்தின் - பெரிய திருமந்திரத்தின் மூலமாக

இன் அருளால் - பரமகிருபையினாலே

அஞ்சிலும் கேடு ஓட - மேற்சொன்ன ஐந்து பொருளிலும் ஒருவகையான கெடுதலுமின்றியே

அளித்தவன் பால் - உபதேசித்தருளின ஆசார்யன் பக்கலிலே

அன்பு இலார் - பிரேமமில்லாதவர்கள்

நஞ்சிலும் கேடு என்று நான் இருப்பன் - விஷத்திற் காட்டிலும் கொடியவர்களென்று நான் உறுதி கொண்டிருப்பேன்.

✱✱✱- கீழிரண்டாம் பாட்டை வியாக்கியானிக்கிறதாயிருக்கிறது இப்பாட்டு. அதில் அஞ்சுபொருளென்றதை ஒன்றரையடிகளால் விவரிக்கின்றார். ✱ प्राप्यस्य ब्रह्मणो रूपं प्राप्तश्च प्रत्यगात्मन: प्राप्त्युपायं फलं प्राप्तेस्तथा प्राप्तिविरोधि च - ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யு பாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச✱ என்கிற ச்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகம் க்ரம விவக்ஷையின்றிக்கே விவரிக்கப்பட்டதிங்கு. இவ்வர்த்த பஞ்சகமும் திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்திலிருந்து உபதேசிக்கப்படும் ஆசார்யனாலே. எங்ஙனேயென்னில் ப்ரணவத்தில் மகாரத்தாலும் லுப்தசதுர்த்தியாலும் உகாரத்தாலும் ஸ்வஸ்வ ரூபம்; அகாரத்தாலே பரஸ்வரூபம் நமஸ்ஸில் (ம:) என்பதனாலே விரோதிஸ்வரூபம்; நமஸ்ஸாலே உபாய ஸ்வரூபம்; **நாராயணாய** என்பதனாலே உபேயஸ்வரூபம். **'அஞ்சிலும் கேடோடவளித்தவன்'** என்றது - அர்த்த பஞ்சகத்திலும் அஜ்ஞாநஸம்சய விபர்யயங்கள் அறும்படி உபதேசித்தவனென்கை, அவன் பக்கலிலே அன்பிலாதார் நஞ்சிலும் கேடு.

என்பக்க லோதினா ரின்னா ரெனுமியல்வும்
என்பக்கல் நன்மை யெனுமியல்வும் - மன்பக்கல்
சேவிப்பார்க் கன்புடையோர் சன்ம நிரூபணமும்
ஆவிக்கு நேரே யழுக்கு. 5

இன்னார் என் பக்கல் ஓதினார் எனும் இயல்வும் - இவர்கள் என்னிடத்தில் ஓதி என்னை ஆசார்யனாகக் கொண்டவர்களென்றிருப்பதும்

என் பக்கல் நன்மை எனும் இயல்பும் - என் பக்கலிலே ஆசார்யத்வ பூர்த்தியுள்ளது என்றிருப்பதும்

மன் பக்கல் சேவிப்பார்க்கு அன்பு உடையோர் சன்ம நிரூபணமும் - பகவத்பக்த பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலே ஜாதி நிரூபணம் பண்ணுகையுமாகிறவிவை

ஆவிக்கு நேரே அழுக்கு - ஆத்மாவுக்கு நிச்சயமாக நாசகம்.

✱✱✱ - கீழ்ப்பாட்டுக்களிலே சிஷ்யனுக்காகும் குறைகளைப் பேசினார்; இப்பாட்டில் ஆசார்யனுக்கு நேரக்கூடிய அவத்யத்தைப் பேசுகிறார். ஸ்ரீவசநபூஷணத்தில் (308) "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம் தன்னை மாறாடி நினைக்கையாவது தன்னை ஆசார்யனென்று நினைக்கை;

சிஷ்யனை மாறாடி நினைக்கையாவது தனக்கு சிஷ்யனென்று நினைக்கை.'' என்கிற ஸ்ரீஸூக்தியையும்; (194) ''பாகவதாபசாரத்தான் அநேகவிதம்; அதிலேயொன்று அவர்கள் பக்கல் ஜன்ம நிரூபணம்; இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதா நஸ்ம்ருதியிலுங்காட்டில் க்ரூரம்'' என்கிற ஸ்ரீஸூக்தியையுங் கொண்டு இப்பாட்டு அவதரிக்கிறது. உபதேசிக்குமவன் உபதேச ஸமயத்திலே தன்னுடைய ஆசார்யனையே இவனுக்கு உபதேசகர்த்தாவாகவும் தான் அவ்வாசாரியர்க்குக் கரண பூதனாகவும் ப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு உபதேசிக்க வேண்டி யிருக்க, அப்படி செய்யாதே ஸ்வாசார்ய பரதந்த்ரனாயிருக்கிற தன்னை இவனுக்கு ஆசார்ய னென்று நினைக்கை தவறாகையாலே அது இப்பாட்டின் முதலடியில் தெரிவிக்கப்படுகிறது. அதற்கு மேல், உபதேசபாத்ர பூதனானவனையும் தன்னைப்போலே தன்னுடைய ஆசார்யனுக்கு சிஷ்யனாக ப்ரதிபத்திபண்ணி உபதேசிக்கவேண்டியிருக்க. அது செய்யாதே இவனைத் தனக்கு சிஷ்யனென்று நினைத்துத் தன்னிடத்தில் ஆசார்யத்வமுள்ளதாக நினைக்கையும் தவறாகையாலே அஃது இரண்டாமடியில் தெரிவிக்கப்படுகிறது.

இனி, சதுர்த்தவர்ணம் முதலானவற்றிலே அவதரித்த பாகவதர்களிடத்தில் பகவத்ஸம்பந்த ப்ரயுக்தமான சிறப்பைப் பாராதே நிகர்ஷபுத்தியினால் அவரவர்களுடைய ஜன்மங்களை நிரூபிக்கையும் மஹாபசாரமாகையாலே அது மூன்றாமடியில் தெரிவிக்கப்பட்டது. ஆக இவையெல்லாம் ஆவிக்கு நேரேயழுக்கு என்று சொல்லித் தலைக்கட்டப்பட்டது.

அழுக்கென்றிவையறிந்தே னம்பொ னரங்கா
ஒழித்தருளா யுள்ளில் வினையைப் பழிப்பிலா
என்னா ரியர்க்காக எம்பெருமா னார்க்காக
உன்னா ரருட்காக வுற்று.

அம் பொன் அரங்கா	- ஸ்ரீரங்கநாதனே!
இவை அழுக்கு என்று அறிந்தேன்	- கீழ்ச்சொன்னவையெல்லாம் (ஆத்மாவுக்கு) அவத்யாவஹமென்று தெரிந்து கொண்டேன்;
பழிப்பு இலா என் ஆரியர்க்கு ஆக	- ஸகல கல்யாணகுண பரிபூர்ணமாய் அஸ்தமதா சார்யரான பிள்ளை லோகாசார்யருக்காகவும்
எம்பெருமானார்க்கு ஆக	- (ஜகதாசார்யரான) எம்பெருமானாருக்காகவும்
உன் ஆர் அருட்கு ஆக	- உன்னுடைய பரமக்ருபைக்காகவும்
உற்று	- திருவுள்ளம்பற்றி
உள்ளில் வினையை ஒழித்தருளாய்	- என்னுள்ளுறையும் பாபஸமூஹத்தைப் போக்கியருள வேணும்.

கீழ்ப்பாட்டுக்களில் ஆவிக்கு அழுக்காகத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களைப் பலர் அழுக்கென்று அறிந்திருக்கச் செய்தேயும் ப்ரக்ருதி வாஸநை தப்பவொண்ணாதாகையாலே அவரவர்கள் இவ்வழுக்குகளிலே அகப்பட்டு நசிக்கிறார்களென்னுமிடத்தை யநுஸந்தித்து, இப்படிப்பட்ட அவத்யம் தமக்கு நேராதிருக்கவேணுமென்று எம்பெருமான் திருவடிகளிலே பிரார்த்திக்கிறார் இப்பாட்டால், **''அழுக்கென்றி வையறிந்தேன்''** என்றதற்குப்பின் (ஆகிலும்) என்று கூட்டிக்கொள்வது நன்று. ''இவை அவத்யம்' என்கிற ப்ரதிபத்தி அடியேனுக்கிருந்தாலும் என்றேனும் கெடுதல் நேராதபடி உள்ளில் வினையை ஒழித்தருளாய் என்று அம்பொன்னரங் கனை ப்ரார்த்தித்தாராயிற்று. இவ்வேண்டுகோளை எம்பெருமான் அவசியம் நிறைவேற்றி யருளவேணுமென்கைக்கு அவர்ஜநீயஹேதுக்களைப் பின்னடிகளிற் பேசுகிறார். அஸ்மதா

Shrimal Pillai Loka chariar Sishyan ,Toronto , Canada

சார்யரான பிள்ளைலோகாசாரியர்க்காகவும், உலகுக்கோருயிரான எம்பெருமானார்க்காகவும் தேவரீருடைய திருவருள் பழுதுபடாமைக்காகவும் இவ்வருள் செய்தேயாக வேணுமென்றாராயிற்று. - 6

தீங்கேது மில்லாத தேசிகன்தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர் - ஓங்காரத்
தேரின்மே லேறிச் செழுங்கதிரினூடுபோய்ச்
சாருவரே யந்தாமந் தான்.

தீங்கு ஏதும் இல்லாத - ஒருவகைப் பொல்லாங்குமின்றிக்கேயிருக்கிற
தேசிகன் தன் சிந்தைக்கு பாங்காக - ஆசாரியனுடைய திருவுள்ளத்திற்கு அனுகூலமாக
நேரே பரிவு உடையோர் - உண்மையான அன்பையுடையவர்கள்
ஓங்காரம் தேரின் மேல் ஏறி - பிரணவமாகிற தேரின் மீதேறிக் கொண்டு
செழும் கதிரின்ஊடுபோய் - ஸூர்யமண்டல மார்க்கமாகச் சென்று
அம் தாமம் சாருவர் - சார்வதஸ்தானமாகிய திருநாட்டைக் கிட்டப் பெறுவர்கள்.

ஆசாரியன்பக்கலில் அன்பில்லாதார்க்கு அதோகதியே யென்னுமிடத்தைப் பல்வகையாலும் சொல்லி நின்றார் கீழ்; அதற்கு ப்ரதிகோடியாக ஆசார்யப்ரேமம் கனத்திருக்குமவனுக்கு உஜ்ஜீவனமுண்டென்னுமிடம் சொல்லவேண்டுகையாலே அதனை இப்பாசுரத்திலே சொல்லித் தலைக்கட்டுகிறாராயிற்று. **"தீங்கேதுமில்லாத தேசிகன் தன் சிந்தைக்குப் பாங்காக நேரே பரிவுடையோர்"** என்றது ஆசார்ய ப்ரேமம் கனத்திருப்பவர்கள் என்றபடி. **தேசிகன்** - ஆசார்யன்; அவனுக்குத் தீங்கேதுமில்லாமையாவது ஸ்வாசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்கை முதலான அவத்தியங்களில்லாமை. இவை உண்டாகிக்கழிகையன்றிக்கே முதலிலேயே இவற்றின் ஸ்பர்சமின்றியே யிருக்கையைச் சொன்னபடி இப்படிபட்டவர்களாய் மஹோபகாரகர்களான ஸ்வாசார்யர்கள் திருவுள்ளத்துக்கு அநுகூலமாம்படி, தமக்கு அநுபாவ்யமான அவரது திருமேனியைப் பேணிக்கொண்டு அவர்பக்கலிலே நிரவதிகமான ப்ரேமத்தையுடையவர்கள்; இப்படிப்பட்ட ஸச்சிஷ்யர்கள் பெறும்பேற்றைப் பின்னடிகளிற் பேசுகிறார். வைகுந்தமாநகர் இவர்களுடைய கையது என்கிறார். ✱வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே ✱என்கிறபடியே இங்கிருக்கும்நாள் தங்கள் வ்யாவ்ருத்தி தோற்றவும் ஸ்வரூபாநுருபமாகவும் பரமபதங்கூடத் தங்கள் சிறுமுறிக்குச் செல்லும்படியாகவும் உபய வேதாந்த காலக்ஷேப ஸ்ரீயோடும் ததீயாராதந ஸ்ரீயோடும் உகந்தருளின நிலங்களில் மங்களாசாஸந ஸ்ரீயோடும் தத்கைங்கர்ய ஸ்ரீயோடும் எம்பெருமானாரைப் போலே நெடுங்காலம் வாழ்ந்திருந்து சரீராவஸாநத்தில் பரமபக்திதலையெடுத்து அந்தமில் பேரின்பத்தடியரோடு ஒரு கோவையாயிருக்க வேணுமென்கிற ப்ராப்யத்வரை விஞ்சி ✱हार्दानुग्रहल–ध्वमध्यधमनिद्वा बहिर्निर्गतர்களாய் ✱ **ஓங்கார ரதமாருஹ்ய** ✱ என்றிற படியே மநஸ்ஸு ஸாரத்யம் பண்ண ப்ரணவமாகிற தேரின் மேலேறி, தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக்கீண்டு புக்கு ஆராவமுதமங்கெய்தி வாழ்ந்திருக்கப்பெறுவர் என்று கூறி இப்பிரபந்தத்தையும் தலைக் கட்டினராயிற்று.

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

இயற்றிய ஸப்தகாதையுரை முற்றுப்பெற்றது.

Released by Maran's Dog Toronto , Canada